தமிழ்ச்சுவடி விளக்க அட்டவணை

தொகுதி ஏழு

பதிப்பாசிரியர்
மோ.கோ.கோவைமணி



CPL 755743

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்

தமிழ்ச்சுவடிகள் விளக்க அட்டவணை

தொகுதி ஏழு

முனைவர் மோ.கோ. கோவைமணி
உதவிப் பேராசிரியர்
ஓலைச்சுவடித்துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 010

ISBN : 978-81-7090-401-4

755743

016.091
KOV

R

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு எண் : 358

நூல் : தமிழ்ச்சுவடிகள் விளக்க அட்டவணை
தொகுதி - 7

பதிப்பாசிரியர் : முனைவர் மோ.கோ. கோவைமணி

பதிப்பு : திருவள்ளுவராண்டு 2041, ஆனி
முதற்பதிப்பு - சூன் 2010

பக்கம் : 615 + 27

அளவு : டெம்மி 1/8

தாள் : 70 ஜிஎஸ்எம் (மேப்லித்தோ)

படிகள் : 1200

விலை : உரூ. 200.00

அச்சு : நித்தியாஸ் பிரிண்டர்
936, திருவொற்றியூர் நெடுஞ்சாலை
திருவொற்றியூர், சென்னை - 19

வெளியிடுகிறது. இவ்வேளையில் தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீட்டு வரிசையில் ஒன்றாக இந்நூலும் வெளிவருகிறது. இதன் ஆக்கப்பணியில் முனைந்து பணியாற்றிய பதிப்பாசிரியர் முனைவர் மோ.கோ. கோவைமணி, பதிவாளர் முனைவர் சா.பி. சரவணன், பதிப்புத்துறை இயக்குநர் திரு. வை.கண்ணபுரக் கண்ணன், அலுவலர்கள், பணியாளர்கள், கணினியச்சு செய்தளித்தோர், அட்டை வடிவாக்குநர், அச்சகத்தார் முதலிய அனைவருக்கும் என் வாழ்த்தும் நன்றியும் உரியதாகும்.

முனைவர் ம. இராசேந்திரன்
துணைவேந்தர்

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர் - 613 010
நாள் 03-06-2010

அணிந்துரை

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைக்கும் மேலான வழிகாட்டுதலுக்குமிணங்க 2010 சூன் 23-27ஆம் நாட்களில் கோவையில் நடைபெறும் வரலாற்றுச் சிறப்புமிக்க உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினைத் தமிழுலகம் மகிழ்ச்சியோடு வரவேற்றுப் போற்றுகிறது. உலகமெலாம் தமிழோசை பரவிடவும் தமிழர்தம் தொன்மையும் சிறப்பும் வெளிப்படவும் இம்மாநாடு வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை. இம்மாநாட்டு ஆய்வரங்குகளில் உள்நாட்டு, வெளிநாட்டு அறிஞர்கள் ஓராயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு ஐம்பத்தைந்து வகைப்பாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளைப் படிக்கவுள்ளனர்.

இம்மாபெரும் ஆய்வரங்க நிகழ்ச்சிகளை அமைத்து, ஒருங்கிணைத்து நடத்தும் பெரும் பொறுப்பினை **மாண்புமிகு தமிழக முதல்வர்** அவர்கள் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு அளித்துள்ளார்கள். தமிழ்ப் பல்கலைக்கழகம் இப்பொறுப்பினை மனமுவந்து ஏற்று அல்லும் பகலும் அயராது பணியாற்றி வருகிறது. மாநாட்டிற்குப் பெருமை சேர்க்கும் ஆய்வரங்கங்களின் பணிப் பொறுப்பினைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு அளித்த **மாண்புமிகு தமிழக முதல்வர்** அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மாநாட்டினையொட்டித் தமிழ்மொழி, இலக்கியம், இலக்கணம், வரலாறு, நாகரிகம், பண்பாடு, கலை, அறிவியல், மொழிபெயர்ப்பு எனப் பல்வேறு துறைகள் சார்ந்த நூல்களைச் சிறப்பு வெளியீடுகளாகத் தமிழ்ப் பல்கலைக்கழகம்

பதிப்பாசிரியர் உரை

இந்நூல் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் ஓலைச்சுவடித் துறையிலுள்ள தமிழ்ச்சுவடி விளக்க அட்டவணையின் ஏழாம் தொகுதியாகும். இதன்கண் 3001 முதல் 3500 வரையிலுள்ள நூல்களின் விரிவான விளக்கங்கள் இடம்பெற்றுள்ளன. 500 நூல்களின் விளக்கங்கள் கொண்டது ஒரு தொகுதி என்னும் முறையில், ஏற்கெனவே வெளிவந்துள்ள ஆறு (3000 நூல்கள்) தொகுதிகளுக்குப் பின் தொடரும் 500 நூல்களின் விளக்க அட்டவணையை இத்தொகுதி பெற்றுள்ளது.

ஏழாம் தொகுதியாம் இதில் சுவடிவிளக்கமுறை முதலியன எல்லாம் முதல் ஆறு தொகுதிகளில் அமைந்து உள்ளமை போலவே அமைக்கப்பெற்றுள்ளன. இத் தொகுதியில் இடம்பெற்றுள்ள சுவடிகள் அனைத்தும் அன்பளிப்பாகப் பெறப்பட்டு இச்சுவடி நூலகத்தை வந்தடைந்தன. சுவடிகளை வழங்கிய அன்பர்களின் பட்டியல் இப்பதிப்புரையின் நன்றியுரைப் பகுதியில் காணத்தகும்.

இத்தொகுதியின் பின்னிணைப்பாக நூலாசிரியர் அகரவரிசை, நூற்பெயர் அகரவரிசை, பொருட்பகுப்பு வரிசை ஆகியன முறைப்படி அமைக்கப்பெற்றுள்ளன. அவை நூல் ஆய்வார்க்குப் பெரிதும் பயன்தரத் தக்கனவாம். சுவடி விளக்க அட்டவணைப்பணி தொடரும் பணியாகும். சுவடிகளும் நூல்களும் வந்து சேரச் சேர இவ்வட்டவணைத் தொகுதி களைப் போன்றே தொடர்ந்து தொகுதிகள் வெளியிடப் பெறும்.

ஏழாம் தொகுதியின் சுவடிகள்

முன் தொகுதிகளில் அமைந்த அமைப்பு முறை போன்றே, இத் தொகுதியிலுள்ள சுவடிகளும் ஆசிரியர் வகையிலோ, நூல் வகையிலோ, நூற்பொருள் அடிப்படையிலோ, ஏடுகளின் அளவு எண்ணிக்கை வகையிலோ அடைவு செய்யப் பெறாமல் சுவடிகள் வந்து சேர்ந்த தொடர்ச்சியின் வண்ணமே தொடர் எண் கொடுக்கப்பெற்று இங்கு அட்டவணை செய்யப்பெற்றுள்ளன. இத்தொகுதியில் இலக்கணம், இலக்கியம், மருத்துவம், சோதிடம், நாட்டுப்புறவியல், தத்துவம் போன்ற பல பொருள்களைப் பற்றிய நூல்கள் இடம்பெற்றுள்ளன. சுவடிகள் முழுமை பெற்ற நிலையிலும், குறை நிலையிலும், நல்ல நிலையிலும், பூச்சியரிப்புக்குள்ளாகிச் சிதைந்த நிலையிலும், ஒரு சில படித்தறிய முடியாத நிலையிலும் எனப் பலதரத்தில் அமைந்துள்ளன.

அளவு பற்றிய நிலையிலும் சுவடிகள் வேறுபட்டு உள்ளன. ஓரேட்டைக் கொண்ட சுவடிகள் முழுமையாய்க் காணப்படுவதும் உண்டு. பல ஏடுகளைக் கொண்ட சுவடிகள் குறையாக இருப்பதும் உண்டு. ஓரேடு கொண்டதாக நாடித் தொகை (3060), விஷ பாகத்தின் குணம் (3061), வால்மீகர் உறுப்புச் சூத்திரம் (3125) போன்றனவும்; ஈரேடு கொண்டதாக சாக்கிர அவத்தை (3039), கிரந்த நிதானம் (3057), சன்னி நிதானம் (3063), வேர்வையின் குணம் (3093), வால்மீகர் நாடி சூத்திரம் (3100), நெய்சீலைச் சூத்திரம் (3101), பலவிரல் சூத்திரம் (3103) போன்றனவும் எனச் சுவடிகள் அளவில் சிறிய சுவடிகளாகக் காட்சி தருகின்றன.

மருத்துவ நூல் திரட்டு - 233 ஏடுகள் (3025), சட்டைமுனி நிகண்டு - 222 ஏடுகள் (3026), நோய்க்கு மருந்து - 200 ஏடுகள் (3226), அகத்தியர் வைத்திய காவியம் 1500 - 247 ஏடுகள் (3364) போன்ற சுவடிகள் அளவில் பெரிய சுவடிகளாகக் காட்சி தருகின்றன. ஆசிரியர் பெயர் கூட அறிய இயலாத சுவடிகள் பலவாகும். 300க்கும் மேற்பட்ட சுவடிகள் அத்தகைய நிலையின.

அச்சுவிவரம்

இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள சுவடிகள் - நூல் களுக்கு அச்சான விவரம் தரக்கூடவில்லை. அச்சு நூல்களின் விவர அட்டவணை கிடைக்காததும் ஒரு காரணம். அத்துடன் மாற்றுச் சுவடிகள் காணும் இடங்கள் பற்றிய குறிப்பும் தரக் கூடவில்லை.

இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள பல நூல்கள் ஏற்கெனவே அச்சான நூல்களாகக் காணப்படுகின்றன. ஒரு சில சுவடிகள் அச்சு நூல்களைப் பார்த்து எழுதியும் இருக்கலாம். இலக்கிய இலக்கண நூல்களில் அச்சாகாத நூல்கள் இத்தொகுதியில் ஏதுமில்லை என்று கூற முடிந்த அளவுக்கு மருத்துவம், சோதிடம், நாட்டுப்புறப் பாடல்கள் போன்றவற்றின் நிலையைத் துணிந்து கூற முடியவில்லை. அவை பல திறத்தனவாகக் காணப்படுகின்றன. எனினும் மேம்போக்காக காணும்போது சில சுவடிகள் இன்னும் வெளியாகவில்லை என்பதை நாம் உணர முடிகிறது. இவ்வகை நூல்களுக்கெல்லாம் முறையான நூல் விவர அட்டவணை கிடைக்கப்பெறும் நாளில் தான் ஒரு நூல் அச்சானதா இல்லையா என்பதை உறுதி செய்யமுடியும்.

சிறப்புச் சுவடிகள்

இத்தொகுதியில் பல்வகைப் பொருள்களைச் சேர்ந்த சுவடிகள் பலவாக இருப்பினும் மருத்துவம் தொடர்பான சுவடிகளே மிகுதியாக இடம்பெற்றுள்ளன. சிறப்பு நிலையில் சில சுவடிகளைக் கூறமுடியும். இலக்கிய இலக்கண வகையில் சில பதிகங்கள், சிற்றிலக்கிய வகையினைச் சேர்ந்த சில நூல்கள் குறிக்கத்தக்கன.

உரிச்சொல் நிகண்டு - 6 முதல் 10 தொகுதி (3150), நன்னூல் மயிலைநாதர் உரை (3499) ஆகிய இலக்கண நூல்களும்; பிரபுலிங்க லீலை (3496), வில்லிபாரதம் மூலமும் உரையும் -கிருஷ்ணன் தூது (3497) ஆகிய காப்பிய நூல்களும்; திருமுருகாற்றுப்படை (3354) என்ற சங்க இலக்கியத் தொகை நூலும்; பகவதி மாலை (3081,3194), வராகி மாலை (3082),

கந்தரநுபூதி (3084, 3187), கந்தரலங்காரம் (3085), சொர்ண வயிரவமாலை (3168), கொடுமூர் முருகன் திருப்பள்ளியெழுச்சி (3183), இராமவர்மேந்திரன் என்னும் தலைவன் வேள்வி மலையை ஆண்ட சிற்றரசன் அல்லது இப்புலவனை ஆதரித்த வள்ளல் பற்றியதாக அமைந்த வேள்ளிமலை வேலவர் மாலை (3184), மீனாட்சியம்மை கலிவெண்பா (3191), சௌந்தரியலகரி மூலமும் உரையும் (3204, 3294), சரஸ்வதி ஒருபா ஒருபத்தந்தாதி (3286), சத்துரு சங்கார அகவல் (3468), திருவேங்கடமாலை (3498) ஆகிய சிற்றிலக்கிய நூல்களும்; அதிவீரராம பாண்டியனின் காசி காண்டத்தில் காலம் அறியும் அத்தியாயம் (3126) எனும் தலபுராணமும் இடம்பெற்றிருக்கின்றன.

திருமந்திரத் திரட்டு (3049), சுந்தரானந்தர் அதிசயம் 36 (3052), உடலறி விளக்கம் (3076, 3160, 3291, 3297), ஞானக்கும்மி (3083), அகத்தியர் ஞானம் 16 (3080, 3185), அகத்தியர் ஞானம் 100 (3205, 3289), மச்சமுனி தீட்சை விதி (3251), கொங்கணர் பிண்ட உற்பத்தி (3252), ஆனந்தக் களிப்பு மூலமும் உரையும் (3296), மச்சமுனி நிகண்டு 105 (3311), கொங்கணர் அதீதம் (3313), அறிவானந்த சித்தியார் (3396), தத்துவக் கட்டளை (3397), திருமந்திரக் கட்டளை (3405), நாதாந்தச் சக்கரம் (3406), அண்ட தரிசனம் (3407), பரமஞான விளக்கம் (3408), சுந்தரானந்தர் ஞானம் 51 (3422), சிவானந்தத் திரட்டு (3500) ஆகிய தத்துவ நூல்கள் இடம்பெற்றிருக்கின்றன.

ஔவையாரின் வீட்டுநெறிப்பால் (3484, 3485) இரண்டு சுவடிகள் இடம்பெற்றிருக்கின்றன. குறள் வெண்பாவாலான 316 பாடல்கள் கொண்ட இந்நூல் ஒரு அருமையான தத்துவ நூலாகத் திகழ்கின்றது.

ஆதியாய் நின்ற அறிவே முதலெழுத்
தோதிய நூலின் பயன். (1)

உண்டில்லை யென்று முணர்வை யறிந்தக்காற்
கண்டில்லை யெண்ணாஞ் சிவம். (121)

ஒருவர்க் கொருவனே யாகு முயிர்க்கெல்லா
மொருவனே பல்குணமு மாம். (122)

முன்னமி ரேசி முயலுபின் பூரகம்
பின்னது கும்பம் பிடி. (256)

ஈரைந் தெழுபத்தீ ராயிர நாடியும்
சேருமின் வாயுச் செயல். (257)

ஆதேச மொன்று முடம்புயிர் கண்டார்க்கு
மாதேசி யாகு மறிவு. (315)

முயல முடியாத தொன்றுண்டோ சொல்வீர்
கயவரே கற்றறியாக் கரை. (316)

இதுபோன்ற தெள்ளத்தெளிவான தத்துவச் சிந்தனைகளை எடுத்தியம்புவதாக இந்நூல் அமைந்துள்ளது.

சைவ பன்னிரு திருமுறைகளில் பத்தாம் திருமுறையான திருமந்திரத்தினின்றும் வேறான திருமந்திரம் ஒன்று இதனுள் (3398) இடம்பெற்றுள்ளது.

சோதிடச் சுவடிகள்

இத்தொகுதியில் சில சோதிடச் சுவடிகள் காணப்படுகின்றமை குறிக்கத்தக்கதாம். வால்மீகர் தீப சூத்திரம் (3046), சோதிடச் செய்திகள் (3148, 3309, 3395), சந்தனக்கயறு (3172) ஆருட நூல் (3198, 3322), பஞ்சபட்சி சாத்திரம் (3207, 3269, 3489), கவுளி காதல் (3285), சகாதேவர் நூல் (3320), நட்சத்திர ஆருடம் (3323), பல்லி சாத்திரம் (3337), சோதிட நூல் (3355), அட்ட வர்க்கப் பலன் (3356), சாதக சந்திரிகை (3357), கனவுகளின் பயன் (3456) போன்ற சோதிடச் சுவடிகள் இடம் பெற்றுள்ளன. மேலும், ஒருவர் காணும் கனவுகளில் எவை எவை சாவை முன்னறிப்பதாகும் என்பதை மரணக்குறிப்பு (3455) எனும் நூல் உணர்த்துகின்றது.

ஆருட நூலை எப்படி, எந்த நாளில் பயன்படுத்த வேண்டும் என்பதை ஒரு சுவடி தெளிவாக எடுத்துரைக்கிறது.

அதாவது, "இந்தச் சகாதேவர் நன்னூல் நூற்றெட்டும் சனிவாரந் தோறும் பூசித்துத் தீபங் கொடுத்து, கந்த புஷ்பஞ் சாத்தி, மறுநாள் காலமே மெழுகி, பிள்ளையார் வைத்துத் திருவிளக்கு வைத்துப் பாக்கு, வெற்றிலை, தேங்காய், பழம், சர்க்கரை, பொரி, தட்சணை, நிறைநாழி முதலானதெல்லாம் வைத்து விநாயகனைத் தோத்திரஞ் செய்து ஒரு காரியம் நினைத்துச் சகாதேவர் நன்னூலுக்குத் தீபங் கொடுத்து, புஷ்பஞ் சாத்தி, நூற்றெட்டுக்குள்ளே மூன்று பேரிடத்தில் லெக்கங் கேட்டு, எட்டுக்கு யீந்து, கழித்து நின்ற லெக்கமானது, ஏடும் வரியும் தள்ளிப் பரல் வந்த வரியிலே பலனைக் கண்டு கொள்ளவும். இந்த ஏடு ஞாயிறு செவ்வாய் வெள்ளி மூன்று கிழமையும் இப்படிப் பார்க்கவும்" *(3198).* என்கிறது.

மருத்துவச் சுவடிகள்

இத்தொகுதியில் இடம்பெற்றிருக்கும் 500 நூல்களில் மருத்துவச் சுவடிகள் மட்டும் 354 இடம்பெற்றிருக்கின்றன. அகத்தியர் குழம்பு *(3158)* எனும் சுவடி இத்துறைப் பேராசிரியர் முனைவர் வே.இரா. மாதவன் அவர்களால் விரிவாக ஆய்வு செய்யப்பெற்று பதிப்பிக்கப்பெற்றுள்ளது.

அகத்தியர் வாகடப் பிள்ளைத்தமிழ் *(3197)* எனும் பிள்ளைத்தமிழ் வடிவத்தில் அமைந்த ஒரு மருத்துவச் சுவடியும் இதனுள் உண்டு.

மருத்துவரிடம் நோயாளியைப் பற்றிய செய்தியை முதன் முதலில் கூற வருபவனின் நிலை, நேரம் முதலியவற்றைக் கொண்டு நோயாளியின் நோய் விரைவில் குணமாகுமா எனக் கூறும் தூத லட்சணம் *(3079)* எனும் நூலும் இதனுள் இடம்பெற்றுள்ளது.

21 வகையான மேக நோய்களுக்குரிய மருந்தாக ஓர் எண்ணெயின் செய்முறையையும், பத்தியம் முதலிய பிற செய்திகளையும் கப்பற்பாட்டு வடிவில் மேக நோய்க்கு எண்ணெய் *(3457)* எனும் நூல் அமைந்துள்ளது. இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள சுவடிகளில் நோய்களுக்குக்

கூறிய மருந்துகளில் சிலவற்றை மக்கள் பயன்படுத்தும் நோக்கில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

முகவாத சன்னிக்கு:- தேங்காய் நெய் உழக்கு, வேப்பெண்ணெய் உழக்கு, வெள்ளை வெங்காயத் தயிலம் உழக்கு, குப்பைமேனிச் சாறு உழக்கு, தைவேளைச் சாறு உழக்கு, விட்டு நீர்வற்றக் காய்ச்சிச் செவியிலும் அடைத்து, அலகிலுந் தடவி நாசியிலும் அடைத்து, உள்ளுக்கும் காசளவு கொடுக்க முகவாதந் தீரும் (3071).

குதிரையின் அண்டவாதத்துக்கு:- தலைப்புண்ணாக்கு பலம் 6, பழைய கருப்பு வெல்லம் பலம் 3. தலைப் புண்ணாக்கை இடித்துத் தூளாக்கிக் கொண்டு சர்க்கரையுங் கூடப்போட்டு இடித்துக் குப்பைமேனிச் சாறும் தும்பைச் சாறுஞ் சமன் கொண்டு இடித்த மருந்திலே விட்டுப் பிசைந்து ஏழுண்டை பிடித்து அதிலொரு யுண்டையை யெறிந்து போட்டு ஆறுண்டையும் மூன்று நாளைக்குக் கொடுக்கவும். அந்தி சந்தி இரண்டு நேரமுங் கொடுக்கவும். காண மாகாது. கொடுக்க வேண்டாம். தண்ணீர் காய்ச்சி ஆறவைத்து ஒவ்வொரு நேரங் கொடுக்கவும் புல்லும் வெய்யிலிலே வாடப் போட்டுப் போடவும் (3110).

மூலத்துக்கு:- பசுவின் உப்புக் கண்டந் தட்டிப் பொடிசெய்து, புளியஞ்சிராய் கொண்டு வந்து, குழி கிள்ளித் தீப்போட்டு, சட்டி கவிழ்த்தித் தூரிலே பொருத்து. அந்தப் பொடி போட்டுப் புகைக்கவும். அப்படிப் பன்னிரண்டு புகை பிடிக்கவும். சட்டி வாயிலே புகைபேறாமல் கவு...ப் போட்டுப் பிடிக்கவும். இப்படி ஆறு நாள் பிடிக்கவும். உள்மூலம். இரத்தக் கடுப்பு, பிற மூலந் தீரும் (3119).

இருமலுக்கு:- ஒருபடி வெள்ளெருக்கம் பூவைக் கொண்டு வந்து சட்டியில் போட்டு ஒருபடி தண்ணீர்விட்டு வடிகட்டிக் கால்படி குறுவை நெல்லரிசி இடித்து மாவாக்கிக் குழைத்து... மேலே வைத்து மேல் சட்டி மூடி புட்டை ... நன்றாய் அவித்த அந்தப் புட்டை யெடுத்து... இப்படி மூன்று நாள் சாப்பிடவும் (3238).

பெரும்பாட்டுக்கும் தண்டோடே இரத்தம் விழுகிறதுக்கு:- பருத்தியிலைச் சாறு 3/4படி அதிலே கல்லுக் காய்ச்சிப் போட்டு அதிலே மூன்று காசிடை நல்லநீர் விட்டுக் கலக்கிக் கொடுக்கவும். பெரும்பாடு நிற்கும். தண்டோடே இரத்தம் விழுகிறதுக்கும் கொடுத்தால் நிற்கும் (3137).

சூலை வாதம், பித்தப்புண், மேகம், வெட்டை, சுரம், சன்னிக்கு:- கந்தகம் பலம் 5 வாங்கிக் கொண்டு, கரண்டியில் வைத்து, 3 பலம் நெய் ஒரு கரண்டி கூடவிட்டு, உருக்கி, பசுவின்பால் சாய்த்து, திரும்பயெடுத்து, கரண்டியில் வைத்து உருக்கி நிற்கிறபோது, இரண்டு கழஞ்சு ரசத்தை விட்டுக் கிண்டி, குழியம்மியில்ப் போட்டு நன்றாயரைத்து வருகிறபோது பயர்க்கள் கருப்புக்கட்டி கூடப்போட்டு நன்றாயரைத்து, சுண்டைக்காயளவும் குன்றியளவும் பயறளவும் உருட்டிக் கொள்ளவும். இதுக்குத் தீரும் வியாதி:- சூலை வாதம், பித்தப்புண், மேகம், வெட்டை, சுரம், சன்னி. இதுகளுக் கனுபானம்:- மேகத்துக்குப் பசுவின் பால்; சூலைக்கு வெல்லம்; சன்னிக்கு இஞ்சி இந்தப்படிக் கொடுக்கவும் 3167).

மூலம் ஆறு வகைக்கு:- நாழி பசுவின் நெய்யில் 20 பலம் கருணைக்கிழங்கு சிறுக நறுக்கிப் போட்டு வேக வைத்து, சிவக்க வெந்தபோது இறக்கிப் போட்டு, அந்தக் கருணைக் கிழங்கைத் தினம் மூன்று காசிடை தின்று வரவும். அந்த நெய்யிலேயும் சற்றுக் கொடுக்க மூலம் ஆறு வகையும் போம் (3177).

உள்மூலம், புறமூலம், கிராணிக்கு:- காட்டுக்கருணை, கரிக்கருணை, வெருகு, பிரண்டை, பிளியறணை, மருள் ஆகக் கிழங்கு வகைக்குப் பலம் 3 கூட்டி நறுக்கிக் காயப்போட்டுப் பிறகு பசுவின் மோரில் போட்டு வேக வைத்து, அந்தச் சுண்டினால் எடுத்துக் காயப்போட்டு, பரங்கிப்பட்டை பலம் 3, ஏலம், மிளகு தூள் பண்ணி கருங்கோழிக்காலும் தலையும் இறகும் குடலுந் தள்ளி அதின் வயிற்றிலிட்டுத் தைச்சு, பின்பு ஆறுபடி பிரண்டை சாறு விட்டு வேக வைத்து, தண்ணீர்

வற்றின பிறகு இறக்கி எலும்பெல்லாம் போக்கி அதையும் மருந்து வெயிலிலே காய வைத்துப் பிறகு எடுத்துக் கொண்டு, கொடிவேலிப்பட்டை பலம் 2 கூடப் போட்டு கடைச்சரக்கு, சுக்கு பலம் 1, திப்பிலி பலம் 1, நற்சீரகம் பலம் 10, வாய்விளங்கம் பலம் 5, குரோசாணி ஓமம் பலம் ரு ஆக ஐந்து மருந்தும் இளவறையாய் வறுத்துக்கொண்டு மருந்தெல்லாங் கூடப்போட்டு யிடித்து வஸ்த்திரகாயம் பண்ணி வைத்துக்கொண்டு வெருகடிப் பிரமாணம்... கொள்ளவும். இளைத்த உடம்பானால் பசு நெய்யில் கொள்ளவும். முப்பது நாள் சாப்பிடவும். கழிப்பு:- புளி, தயிர், முள்ளங்கிக் கிழங்கு, கருணைக் கிழங்கு, துவரம் பருப்பு, இளங்கீரைத்தண்டு,பசுவின் நெய் கூட்டவும்; கைகண்டது *(3467)*.

பித்தக் குன்மத்துக்குப் புளிக்குழம்பு: புண்ணம்புளி வீசை 1, வெல்லம் வீசை 4 குறுக்கிப் பாதியாக்கிப் பிழிஞ்சு அரிச்சே இதினுகரக்கம். சுக்கு, மிளகு, திப்பிலி, காயம், கறாபசு வெள்ளைவுள்ள.... காழாயம் வீத்தி அரிச்சு கலக்கி நாலு பலம் சர்க்கரையும் கூட இட்டு வெந்து குழம்புப் பருவத்தில் எடுத்து, புதுக்கல்வத்தில் வழிச்சு வச்சு, அதில் ஒரு நாரங்காய்ப் பிரமானம் குடுக்க உப்புப்புளி, கஞ்சி வெல்லம் காத்தும் வெயிலும் வர்த்திக்கக் குடுத்த நாளளவு நல்லு இருப்புப் பித்தக் குன்மம் தீரும் 3152).

பித்த வாய்வுக்கு இஞ்சிச் சூரணம்:- இஞ்சி பலம் 8 தோல் களைந்து வட்டம் வெட்டி இரு நாழிப் பசுவின் தயிரில் போட்டு உலர்த்திக் கொள்ளவும். சீரகம் பலம் 1 இரு நாழி எலுமிச்சம் பழச்சாற்றில் போட்டு உலர்த்திக் கொள்ளவும். அதிமதுரம் பலம் 8, திப்பிலி பலம் 8, ஏலம் பலம் 3, கிராம்பு பலம் 3, வால்மிளகு பலம் 3, நாகப்பூ பலம் 3 இடிச்சு வடிகட்டி வெருகடிப் பிரமாணம் சர்க்கரையில் சேவிக்கவும். பித்தவாய்வு தீரும். ருசி பசி யுண்டாம் *(3119)*.

வாய்வுச் சூலை, மூலம், மூலவாயுக்குக் குக்குட லேகியம்:- கொடிவேலி வேல், பிரண்டை சமூலம், மாள்கிழங்கு, காட்டுக் கருணைக் கிழங்கு, சாரனைக் கிழங்கு, மூக்குரெட்டை வேர், சிவதைவேர், வெள்ளைக் காக்கணம் வேர், வேலிப்பருத்தி வேர், ஓரொன்று துவைத்துப் பதக்கு நீர் வார்த்து நானாழியாகக் காய்ச்சிப் பிசைந்து வடித்து, இந்தக் கிஷாயத்தில் கருங்கோழிச் சதை, நத்தைச் சதை, கிளிஞ்சிச்சதை, சமுத்திரமட்டிச் சதை இவை சமன் கூட்டி வேகவைத்து இதில் கரகம், இந்துப்பு, வளையலுப்பு, பொட்டிலுப்பு, கல்லுப்பு சத்தி சாரம், யவச்சாரம், வெண்காரம், திரிகடுகு, திப்பிலி மூலம், பெருங்காயம், வெந்தயம், ஓமம், கொடிவேலி வேர், சிவதைவேர் ஓரொன்று இரண்டு கழஞ்சு வேகிற மருந்துடனே கூடப்போட்டு நல்லெண்ணெய் நாழிலிட்டுக் கூட்டிக் காய்ச்சிப் பதத்தில் இறக்கி எடுத்துக் கொள்ளவும். இதுக்குத் தீரும் வியாதி:- வாய்வுச் சூலை, மூலம், மூலவாயு இவை தீரும் (3372).

சுரங்களுக்குச் சூரணராசன்:- சித்திரமூலம், முக்காவேளை வேர், சாரனை வேர், கறிமுள்ளி வேர், கண்டங்கத்திரி வேர், பெருமருந்து வேர், வட்டத்திருப்பிலி வேர், நன்னாரி வேர், மூக்குறட்டை வேர், காட்டுமல்லிகை வேர், நொச்சில் வேர், புங்கம்பட்டை, கறிப்பாலை வேர், கையாந்தகரை, கோரைக்கிழங்கு ஆக மொத்தம் 15. திரிகடுகு, திரிபாலை, திப்பிலி மூலம், செவ்வியம், பெருங்காயம், கோஷ்டம், வெண்வசம்பு, ஓமம், பெருந்திப்பிலி, கடுகு ரோகணி, ஆயில்பட்டை, வாய்விளங்கம், மஞ்சள், கஸ்தூரி மஞ்சள், சிறுதேக்கு, வெட்பாலை அரிசி, அக்கிறாகாரம், சீனக்காரம், வெண்காரம், எவட்சாரம், சத்திச் சாரம், வளையலுப்பு, பொட்டிலுப்பு, இந்துப்பு, கல்லுப்பு, மிதிஉப்பு, ஒட்டடை, சுத்தி பண்ணின சேபாலம் பருப்பு ஆக மருந்து 52ம் கொண்டு வந்து ஒக்கப் போட்டுச் சூரணம் பண்ணின இந்தச் சூரணத்துக்கு மூணத்தனை சுத்தி பண்ணின அவிபத்திரிவேர் சூரணங் கூட்டிக் கலந்து வெருகடிப்

பிரமாணம் வெந்நீரில் கொள்ள சுரம், நடுக்கல், குளிர் காய்ச்சல், பழங்கய்ச்சல், அத்திசுரம், வாத சுரம், பித்த சுரம், சேத்துமசுரம், உள்மாந்தம், வாதம் எண்பது, உதரரோகம், உதிரவாயு, குன்மம், அகிலிகை, பீலிகை, பெருவயிறு, நீராமை, விஷப் பாகம், பாண்டுரோகம், சோகை, தலை சுற்றல், அசீரணம் நாலுவகை, அக்கினி மந்தம், பக்கச்சூலை, கிருமிசத்தி, விக்கல், நெரிகுரல், காச்சுவாசம், கிரந்தி எல்லாம் தீரும் *(3394)*.

இதுபோன்ற நோய்களுக்கான மருந்துகளும், அவற்றைச் செய்யும் முறைகளும் பலவாறாக இந்நூலில் இடம்பெற்றிருக்கின்றன.

குழந்தைகளுக்கு எவ்வாறெல்லாம் நோய் உண்டாகிறது என்பதை ஒரு சுவடி தெளிவாக எடுத்துரைக்கிறது. அதாவது,, கிரந்தி, செங்கிரந்தி, கருங்கிரந்தி, பட்சிதோஷம், மாந்தம், கணம், பிரளி கரப்பான், செவ்வாப்பு, தொண்டைக் கட்டு, அக்கரம், வகூரி முதலான அனேக ரோகங்கள் சம்பவிக்கிறது. மாந்தம் தாய்முலைப் பாலாலும், கணம் கர்ப்பச் சூட்டினாலும், மற்ற பிணிகள் தாய் தந்தையின் புணர்ச்சியினா லெழுந்த சூட்டினாலும் உண்டாகிறது *(3385)* என்கிறது.

சரீர வினாவிடை என்ற நூல் ஆங்கில மருத்துவம் தொடர்பான வினாக்களும் அதற்கான விடைகளுமாக அமைந்த நூல் ஒன்று இதனுள் அமைந்துள்ளது. அதாவது,

வினா : இங்கிலீஷ் அநாடமி என்பதென்ன?

விடை : சரீரத்திலுள்ள எலும்பு, மாமிசம் , சருமம், இருதம், நுரையீரல், கல்லீரல், யகுர்திகண்டம், மண்ணீரல், பீனிசம், இரைப்பை, அன்னாசயம், மூத்திரப் பிண்டம், குண்டி, மூத்திரப்பை, கோசம், பீசம், கருப்பாசயம், கண், வாய், மூக்கு, செவி இவை முதலிய உறுப்புகளைக் குறித்து விபரிக்கிற நூலுக்கு.... *(3290)* என்பதாக அமைந்திருப்பதைக் காணமுடிகிறது.

உதிரிப் பாடல்கள்

இத்தொகுதியில் குறிப்பிடப்பட்ட நூல் அன்றி மிகையான சில பாடல்கள் அந்நூலுக்கு முன்னோ அல்லது பின்னோ இடம்பெற்றிருக்கின்றன. அவற்றைத் தொகுத்துக் காணின் சில நூல்களில் விடுபட்ட பாடங்களும், அதிகப் பாடல்களும் கிடைக்க வாய்ப்புண்டு. இந்நிலையில் இந்நூலில் இடம் பெற்றுள்ளவை பின்வருமாறு அமைந்திருப்பதைக் காணலாம்.

திருமந்திரத் திரட்டு (3049) எனும் நூலினையடுத்து இரண்டு ஏடுகளில் வேறு சில திருமந்திரப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இந்நூலுக்கு முன் 'ஐந்து கரத்தனை' என்னும் கடவுள் வணக்கப் பாடல் இடம்பெற்றுள்ளது.

சுந்தரானந்தர் அதிசயம் 36 (3052) எனும் நூலினையடுத்து மூன்று ஏடுகளில் திருமந்திரப் பாடல்கள் சில எழுதப் பட்டுள்ளன.

சிலேற்பன குணம் (3067) எனும் நூலினையடுத்துச் சன்னி, சூலை வாகடம், சன்னி வாத குணம், அரையாப்புக் குணம், அரையாப்பு மந்திரம் முதலியன மூன்று ஏடுகளில் உள்ளன.

கந்தரலங்காரம் (3085) எனும் நூலின் நூற்பயனையடுத்துச் 'சில பிரதிகளில் அதிகமாகக் காணப்பட்ட பாட்டுகள்' என்னும் குறிப்புடன், "திருவடியுந் தண்டையும்", "இராப்பகலற்ற", "செங்கேழெடுத்த", "ஆவிக்குமோசம்", "கொள்ளித் தலையில்", "சூலம் பிடித்து" ஆகிய ஆறு திருப்பாடல்களும் எழுதப்பட்டுள்ளன.

உடலறி விளக்கம் (3160) எனும் நூலின் முதலேட்டில், 'அத்தனா ரருளாலே ஆதி யாலே' எனத் தொடங்கும் பாடல் உள்ளது. இந்நூலினையடுத்து மூன்று ஏடுகளில் 'ஞானவெட்டியான்' என்னும் நூலின் ஏழு பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

கந்தரனுபூதி (3187) எனும் நூலுக்கு முன்,

“நற்பதம் அருள்செயும் ஞான பண்டிதன்
அற்புதன் அருளிய அங்கை வாரணன்
மற்பொரு திரள்புயன் மயிலோன் முன்வரு
கற்பகம் எனஒரு கவலை இல்லையே”

“கந்தரனு பூதிதன்னைக் கற்றோர்கள் உற்றுணர்வோர்
சிந்தை யுறநாளுஞ் சேவிப்போர் - அந்தமுற
மண்ணுலகை யாண்டுபின்னும் வானவர்தங் கொஞ்சி
விண்ணுலகை யாள்வார் விரைந்து”

என்னும் இரண்டு பாடல்கள் உள்ளன.

சௌந்தரியலகரி மூலமும் உரையும் (3204) எனும் நூலின் இறுதி இரண்டு ஏடுகளில், ‘நித்தரொரு பக்கம்’, ‘முக்கணிறைவற்கும்’, ‘சிந்தையுறும் ஞானம்’ என்னும் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. சுவடியின் இறுதியில் இடம்பெற்றுள்ள 18 ஏடுகளில் சௌந்தரியலகரியிலுள்ள பாடல்களுக்குரிய வழிபாட்டுச் சக்கரங்கள் வரையப்பட்டு உள்ளன.

குருநாடி (3471) எனும் நூலினையடுத்து இரண்டு ஏடுகளில் மச்சமுனியின் ஆறு பாடல்கள் எழுதப்பெற்றுள்ளன.

மருந்து செய்முறை (3476) எனும் நூலின் இறுதியில் ‘தூதுலெட்சணம்’ ஒரு பாடல் இடம்பெற்றுள்ளது.

சிவானந்தத் திரட்டு (3500) எனும் நூலினையடுத்துத் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளின் இஷ்டலிங்கமாலை முழுவதும் மூன்று ஏடுகளில் எழுதப்பட்டுள்ளது.

முற்குறிப்பு மற்றும் பிற்குறிப்பு தரும் சிறப்புச் செய்திகள்

சுவடியின் இறுதியில் நூலுக்குப் புறம்பாகச் சில குறிப்புகள் காணப்படுவதுண்டு. சில சுவடிகளில் நூல் தொடங்கு முன்பே சுவடியின் முதல் பக்கத்தில் முகப்பு ஏட்டிலே கூட சில குறிப்புகள் காணப்படும். இக்குறிப்புகள்

பெரும்பாலும் சுவடி உரிமையாளர் பெயர், நூற்பெயர், நூலாசிரியர் பெயர், சுவடி எழுதப்பட்ட காலம், எழுதத் தொடங்கிய காலம், நிறைவு செய்த காலம், எழுதியவர் பெயர் போன்ற விவரங்களைத் தரும். சில சுவடிகள் மிகச் சுருக்கமான விபரத்தைத் தரும். சில விரிவான விளக்கத்துடன் அமையும். இவை சுவடி வரலாறு, பயன் போன்ற செய்திகளைத் தருவதால் ஊன்றிப் பயில வேண்டிய தகுதியைப் பெறுகின்றன.

சுவடி எழுதியவர் பெயர் மட்டும் சுட்டப்பெற்ற நிலையில்,

> "ரோமரிஷி சுவாமியின் வாக்கியம் பதினாறும் எழுதினேன் அலையானந்த சுவாமியின் குழந்தை அய்யம்பெருமாள். பரமகுரு துணை" (ரோமரிஷி வாக்கியம் 16 - 3346)

எனும் குறிப்பு அமைந்துள்ளது.

3054. அகத்தியர் சரக்கு வைப்பு (3054) எனும் நூல்,

> "1005ஆம் (கொல்லம்) ஆண்டு ஐப்பசி மாதம் எழுதினது ஆறுமுகம்"

என்பது ஆண்டு, மாதம், எழுதியவர் பெயரையும்;

> "1010ஆம் (கொல்லம்) வருடம் மார்கழி மாதம் 22 சுக்கிர வாரமும் அவிட்ட நட்சத்திரமும் கூடின சுப தினத்தில் எழுதி வருகிறது. விநாயகமூர்த்தி பாதாரவிந்தமே கதி" (உடலறி விளக்கம் - 3160)

> "962ஆம் (கொல்லம்) வருடம் மார்கழி மாதம் 7 தேதி செவ்வாய்க்கிழமை பூர்வ பட்சத்து பதினான்குமாக எழுதி முகிந்தது முற்றும்" (அகத்தியர் முப்பு 50 - 3022)

> "பிலவங்க வருடம் தை மாதம் 11ஆம் தேதி மந்த வார நாள் எழுதி முகிந்தது முற்றும்" (அகத்தியர் சாலத்திரட்டு - 3431)

போன்றவை ஆண்டு, மாதம், தேதி, கிழமையுடன் எழுதப் பெற்றுள்ளதையும் காணலாம்.

அகத்தியர் வைத்திய காவியம் 1500 (3016) எனும் நூல்,

> "1011ஆம் கொல்லம் ஆவணி மாசம் 3ந் தேதி திங்களாட்சையும் ரோகிணியும் தசமியும் அறுபத்து நாழிகை புலறுப்போள் எழுதி முகிஞ்சது. முற்றும்"

என்று ஆண்டு, மாதம், தேதி, கிழமை, நட்சத்திரம், திதி ஆகியவற்றோடு காணப்படுகிறது.

யார் எழுதினார்கள் என்ற குறிப்புடன் காணப்படும் சுவடிகளும் உண்டு.

> "962ஆம் வருடம் கார்த்திகை மாதம் 26ஆம் தேதி வெள்ளியாட்சையும் புனர் நட்சத்திரமும், அகத்திய நாயனார் சூத்திரம் நூற்றைம்பத்தொன்றும் முற்றும். இந்த ஏடு பண்டாரம் கைப்பட்ட எழுத்து" (அகத்தியர் லோக மாரணம் 150 - 3017)

> "நள வருஷம் சித்திரை மாதம் 18ந் தேதி சோம வார நாளும் நவமியும் திருவோண நட்சத்திரமுங் கூடின சுப தினத்தில் குருபாத வயித்தியர் வயித்திய சாத்திரம் எழுதி, நிறைவேறினது" (அகத்தியர் வல்லாதி 600 - 3365)

> "பிரபவ வருடம் தை மாதம் 25ந் தேதி வெள்ளிக் கிழமை அசுபதி சுப நட்சத்திரத்தில் சுப வாரத்தில் எழுதி முகித்தேன். அஞ்சல் வெங்கிடாசலம் பிள்ளையவர்கள் பிரதம குமாரன் அறிவானந்த சித்தியாரெழுதி நிறைந்தது. முற்றும்" (அறிவானந்த சித்தியார் - 3396)

> "விகாரி வருஷம் பங்குனி மாதம் 25ந் தேதி புதன் கிழமை துவாதசியும் சதைய நட்சத்திரமும் இந்தச் சுப தினத்தில் எழுதி முடிந்தது. அம்பலவாணர் கையெழுத்து" (பிரபுலிங்கலீலை - 3496)

போன்றவை ஆண்டு, மாதம், தேதி, நட்சத்திரம், நூல்பெயர், எழுதியவர் பெயர் ஆகியவற்றைப் பெற்றுள்ளன.

சுவடியை யாருக்கு யார் எழுதினார் என்பதை,

"(கொல்லம்) 962ஆம் வருடம் கார்த்திகை மாதம் 15ந் தேதி திங்களாட்செயும் தசமியும் அவிட்ட நட்சத்திரமும் ஆக திரு... கைப்பட எழுதி தானுமால்ளுள மருமகன் உசாவிளை பண்டுவுக்கு எழுதி முகிந்தது.... நாயனார் வாக்கியம் ஒற்றை மூலியல் பற்பமும் சூரணமும் தைலமும் கிருதங்களும். தேவி சகாயம்..." (அகத்தியர் 205 - 3012)

" 962ஆம் (கொல்லம்) வருடம் தை மாதம் 29ஆம் தேதி வியாழக்கிழமையும் தசமியும் ... மாகச் சுசீந்தாத்துப் பண்டாரத்துக்குத் திருவிதாங்கோட்டுத் திருநீலகண்டன் அய்யன் தான் கைப்பட எழுதி முகித்துக் கொடுத்த அகத்தியர் பாடல் கர்ம சூத்திரம்." (அகத்தியர் கர்ம சூத்திரம் 300 - 3024)

"இந்த இராமதேவர் சூத்திரம் ஐந்நூறும் எழுதினேன் இலட்சுமண நாராயண பிள்ளை மகன் சங்கரமூர்த்தி எழுதின சுவடி. 986ஆம் (கொல்லம்) வருடம் பங்குனி மாதம் 9ந் தேதி பூர்வபட்ச நட்சத்திரத்தில் எழுதி முகிந்த சுவடி" (இராமதேவர் கருக்கடைச் சூத்திரம் 500 - 3139)

"ஆனந்த வருடம் ஐப்பசி மாதம் 8ந் தேதி மங்கள வாரமும் சதுர்த்தசியும் உத்திர நட்சத்திரமும் கூடிய சுப தினத்தில் தத்தமங்கலத்திலிருக்கும் கிஷ்ட்டிணய்யன் அவர்களுக்குச் சித்தராரூடம் நொண்டி நாடகச் சிந்து குழந்தைவேல் வாத்தியார் எழுதி நிறைந்து. சம்பூரணம்" (சித்தராரூட நொண்டி - 3404)

என்று குறிப்பிடுகின்றதைக் காணலாம்.

இச்சுவடியில் இல்லாத சில ஏடுகள் யாருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது என்ற செய்தியையும் குறிப்பிட்டு உள்ளனர்.

"இந்த ஏட்டில் முதல் ஏடு 9ம் மாத்தாலை மலையப்பனுக்கு (கொல்லம்) 1045ஆம் வருடம் வைகாசி மாதம் 14ந் தேதி கொடுத்து இருக்கிறது" (சென்ம நிதானம் - 3255)

ஒரு சுவடிக் கட்டில் ஒன்றுக்கும் மேற்பட்ட நூல்கள் இருக்கும் போது இறுதியாக உள்ள ஏட்டிலோ தொடக்க ஏட்டிலோ அவ்வெல்லா நூல்களுக்குமான காலக் குறிப்பு ஒன்று முற்குறிப்பாகவோ பிற்குறிப்பாகவோ அமையும். இந்நிலையில் அகத்தியர் சாத்திரம் 16 (3089) எனும் நூலின் பிற்குறிப்பில்,

"1058ஆம் (கொல்லம்) வருடம் வைகாசி மாதம் 22ந் தேதி வெள்ளிக்கிழமை யன்று 15 நாழிகை சமையத்தில் பகவதிப் பெருமாள் ஆயானோடு துடங்கிய சாத்திரம் அகத்தியர் சூத்திரம் 16, சாத்திரம் 12, சன்னி நிதானம், வலியஞ்சுக்குப் பேர், வேர்வை நிதானம், விக்கல் அஞ்சும், பூரண சூத்திரம், மணிக்கிடை சாத்திரம், வால்மீகர் உறுப்பு சூத்தரம் 8ம்"

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நூல் கொண்ட சுவடியில் 3088-3105 வரையிலான 18 நூல்கள் இடம்பெற்றிருக்கின்றன. இப்பதினெட்டு சுவடிகளுக்கும் இக்காலக் குறிப்பை உரித்தாகும் விதமாக இக்குறிப்பு அமைந்திருக்கின்றது.

இரு பெயரில் ஒரு நூல்

ஒரே நூல் இருவேறு பெயர்களில் வழங்கப்படுதல் உண்டு. அவ்வகையில், மச்சமுனி 800 (3055) எனும் இந்நூல் மச்சமுனி பெருநூல் எனவும் வழங்குகிறது. அதேபோல், அகத்தியர் குணபாடத்தை குணவாகடம் என்றும் அழைப்பதுண்டு. எடுத்துக்காட்டாக,

"(கொல்லம்) 1070ஆம் வருடம் சித்திரை மாதம் 6ந் தேதி சனிக்கிழமையும் பூருவ பட்சத்துப் பௌர்ணமியும் சித்திரை நட்சத்திரமும் வச்சிரநாம யோகமும் சிங்க கரணமும் ராட்சத வேளையும் கூடிய சுபயோக

சுபதினத்திலன்று பகல் விடிந்து 9 நாழிகை சமயத்தில் சித்திரபுத்திரன் வயித்திய சாத்திர குணவாகடம் எழுதி முகிந்தது. முற்றும். இந்நூல் 'குணவாகடம்' எனவும் வழங்கப்பெறுகிறது'' (அகத்தியர் குணபாடம் - 3256)

என்பதால் உணரலாம்.

ஒரே பெயரில் வேறுவேறு நூல்கள்

பெயர் ஒன்றாக இருந்தாலும் நுதல் பொருள் வேறு வேறாக அமைதலும் உண்டு. அவ்வகையில், சுரநூல் -3104 மற்றும் 3292 ஆகிய இவ்விரு நூல்களும் பெயரளவில் ஒன்றாக இருந்தாலும் நுதல் பொருளால் வேறு வேறானது.

அட்டவணை படுத்துதல்

ஒரு சுவடிக்குள் பல நூல்களையோ ஒரு நூலுக்குள் உள்ள பல செய்திகளையோ முற்குறிப்பு மற்றும் பிற்குறிப்பில் பட்டியலிட்டுக் காட்டுவது மரபு. இவ்வகையில் இத் தொகுதியில் இடம்பெற்றுள்ள சில நூல்களுக்கு அந்நூல் களுக்குள் இடம்பெற்றிருக்கும் வேறு நூல்களைப் பற்றிப் பின்வரும் குறிப்புகள் உணர்த்தக் காணலாம்.

> ''செனன நிதானம், நாடி சாத்திரம், அவத்தைக் குணம், கபால சன்னியின் குணம், சலக்கழிச்சல் சாத்திரம், பவுந்திர விதி, காமாலையின் குணம், மண்டைச்சூலைக் குணம், சத்திர விதி (37 பாடல் முழுமை), உதிர கிரிகை, பாலகிரிகை, 64 சுர குணம், குப்பி சாத்திரம் முதலியனவும், பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூலின் 502-1064 பாடல்களும், பல மருந்துகளின் செய்முறைகளும் இச்சுவடியில் இடம்பெற்றுள்ளன'' (மருத்துவ நூல் திரட்டு - 3025)

> ''சினேந்திரமாலை முதலேடு முதல் 42 ஏடு வரைக்கும் உரை தவிர பாடல் 101; 43 ஏடு முதல் 47 ஏடு வரைக்கும் கொங்கணர் வாத சூத்திரம் 53; 58 ஏடு முதல 67 ஏடு

வரைக்கும் போகர் சூத்திரம் 51; 68 ஏடு முதல் 84 ஏடு வரைக்கும் கொங்கணர் கடைக்காண்டம் 61; 85 ஏடு முதல் 95 ஏடு வரைக்கும் கொங்கண நயினார் பாடல் 41; 96 ஏடு முதல் 107 ஏடு வரைக்கும் மச்சமுனி பாடல் 100க்கு அறுவானது 91 ஆகத் தொகைப்பாடல் 398.

108 ஏடு முதல் 150 ஏடு வரைக்கும் சட்டைமுனி நயினார் வேதாந்த வாத காவியம் பாடல் 165; 151 ஏடு முதல் 160 ஏடு வரைக்கும் புவனை கலைக்கியானம் பாடல் 50; 161 ஏடு முதல் 173 ஏடு வரைக்கும் சொரூபானந்தர் அருளிச் செய்த ஆனந்தக் களிப்பு பாடல் 49; 174 ஏடு முதல் 182 ஏடு வரைக்கும் திருமூல நயினார் அருளிச் செய்த நாற்பது முக்கோண மந்திரம் பாடல் 80; 183 ஏடு முதல் 186 ஏடு வரைக்கும்.... ஆகப் பாடல் 692" (சட்டைமுனி வாதம் 1000 - 3423)

"வழலை விருத்தம் 17, சரக்கு வகை விருத்தம் 224, நவலோக விருத்தம் 82, செம்புக்கட்டு முதல் செந்தூரம் வரைக்கும் விருத்தம் 489, மூலிகை நிகண்டு விருத்தம் 113, சலசரிமயணம் 3, மெழுகுவகை விருத்தம் 276, மகாசவ்வீர வைப்பு விருத்தம் 91 ஆக நிகண்டு விருத்தம் 1295. இந்தப் படியறிய பக்கிவாவா றாவுத்தர் குமாரன் மீறாகனி கையட்சரம்" (சட்டைமுனி நிகண்டு - 3435)

வாழ்த்தும் பயனும்

பிற்குறிப்பில் காணப்படும் சில குறிப்புகள் நூலின் வாழ்த்தைச் சுவட்டுவதாகவும் நூற்பயனைச் சுட்டுவதாகவும் அமைந்திருக்கக் காணலாம். எடுத்துக்காட்டாக,

"பவ வருடம் ஐப்பசி மாதம் 19ந் தேதி சுக்கிர வாரமும் பூர்வ பட்சமுஞ் சதுர்த்தெசியும் மூல நட்செத்திரமுங் கூடின சுபயோக சுப தினத்தில் எழுதினது. குருசாமி முன்னிற்க. மச்சமுனியார் பாடல் யெண்ணூறும் நீடூழி காலம் வாழ்கத்தானே" (மச்சமுனி 800 - 3351)

"அகத்திய மாமுனி யருளிச் செய்த வைத்திய பூரணம் 400. பரிதாவி வருடம் தை மாதம் 27ந் தேதி துவக்கி மாசி மாதம் 11ந் தேதி எழுதி முகித்தேன். படமாத்தூர் பெரிய பக்கிரிவாவா றாவுத்தர் குமாரர் மீறாகனி தனதுக்காக எழுதி முகித்தேன். மேற்படி மீறாகனி கைபட்சரம்.

அல்லா உதவி செய்ய வேண்டியது. இந்தச் சாஸ்திரப் பிரகாரம் மருந்து செய்பாகங் குறையாமல் செய்து கொடுத்தால் வியாதிகள் சவுக்கியமாகும். ஆண்டவனும் உதவியாயிருந்து தீர்ப்பார்களறிந்து செய்து கொள்ளவும்" (அகத்தியர் வைத்திய பூரணம் 400 - 3436)

தனக்காக சுவடி எழுதிக் கொண்டதையும் பிற்குறிப்புச் செய்தி உணர்த்துகின்றது.

"பரிதாவி வருடம் தை மாதம் 23ஆம் தேதி வியாழக் கிழமை தினம் எழுதி முகித்தேன். படமாத்தூர் பெரிய பக்கிரிவாவா றாவுத்தர் கமாரன் மீறாகனி தனக்காகக் கல்லேந்திரியில் இருக்கும் சொக்கலிங்கம் இடத்தில் வாங்கிச் சட்டைமுனி நாயனாரவர்கள் நிகண்டு எழுதி முகிந்தது. முற்றும்" (சட்டைமுனி நிகண்டு - 3435)

"பிரமதீச வருடம் கார்த்திகை மாதம் 5ந் தேதி சுக்கிர வாரத் தினம் படமாத்தூரிலிருக்கும் பெரிய பக்கிரிவாவா றாவுத்தர் மகன் மீறாகனி தனதுக்காக கல்லந்திரியிலிருக்கும் சொக்கலிங்க வாத்தியாரிடம் வாங்கி மேலையூர் முத்துமாடப் பணிக்கர் எழுதின பிரதி; வாங்கி யெழுதி முகித்தேன். மேற்படி மீறாகனி கையெழுத்து. அல்லா உதவி செய்ய வேண்டியது" (அகத்தியர் வைத்திய பூரணம் 600 - 3437)

"சுபகிருது வருஷம் ஆனி மாதம் 17ஆம் தேதி பஞ்சமி புதவார தினத்தில் சிந்தாத்திரிப்பேட்டை சின்னைய முதலியார் குமாரன் சிந்தாத்திரிப்பேட்டை முத்துச்சாமி படிக்கின்ற கிருஷ்ணன் தூது எழுதிப் படித்து முடிந்தது. முற்றும்" (வில்லிபாரதம் மூலமும் உரையும் - 3497)

இவ்வாறு பல்வேறு செய்திகளைத் தாங்கிய வண்ணம் சுவடிகளில் காணப்படும் குறிப்புகள் காணப்படுகின்றன. இவை மொழியாய்வார்க்கு, நூலாய்வார்க்கு, வரலாறு ஆய்வார்க்கு, நூல் பதிப்பிப்பார்க்குப் பெரிதும் பயன்தரத் தக்கனவாகும்.

நன்றியுரை

ஓலைச்சுவடித்துறையின் நூலக வளர்ச்சிக்கும் சுவடி விளக்க அட்டவணைத் தொகுதிகளுக்கும் மூல காரணமாக விளங்குவது தமிழார்வலர்களின் நல்லெண்ணமே ஆகும். பலரின் ஒத்துழைப்பும் ஊக்கமும் சுவடி நலகத்தை விரிவு செய்து இத்துறையை வளர்ப்பதில் முன்னிற்பதை நன்றியுடன் உணர முடிகிறது. சுவடி வழங்கி ஊக்கம் தரும் அவர்களுக் கெல்லாம் முதற்கண் நன்றி பாராட்டுவதே சாலப் பொருத்த முடையதாகும். தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித் துறைக்குத் தமிழ்ச் சுவடிகளையும் பிற மொழிச் சுவடிகளையும் வழங்கியோர் பலராவர். திருக்கோயில்கள், திருமடங்கள் போன்ற சமய நிறுவனங்கள் முதலாகத் தனிப்பட்ட புலவர் குடும்பத்தினர், மருத்துவப் பரம்பரையினர், சோதிடர், கல்லூரி, பள்ளி ஆசிரியர் எனப் பலரும் இவ் அறக்கொடையில் இடம்பெற்றுள்ளனர். தங்களிடமிருந்த சுவடிகளின் பாதுகாப்பு, பராமரிப்பு ஆகியவற்றுடன் அவை வெளிவர வேண்டும் என்ற அக்கறையையும் உளங்கொண்டு அவற்றையெல்லாம் வழங்கியுள்ளனர். இது ஓலைச்சுவடிகளுக்காகத் தனிப்பட்ட ஒரு துறையை உருவாக்கிச் சிறப்பித்திருக்கும் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் பால் அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கையைப் புலப்படுத்துவதாம். அவர்களின் நம்பிக்கையை உறுதி செய்யும் வண்ணம் இத்துறை அவர்களிடமிருந்து பெற்ற சுவடிகளை அறிவியல் முறைப்படி தூய்மை செய்து, பூச்சி நீக்கம் செய்து காப்பு எண்ணெய் பூசிப், மின்னனுப்படி எடுத்துப் பாதுகாத்து வருகிறது. இன்று அவற்றிள் விளக்க அட்டவணையும் தொகுதிகளாக வெளியிட்டு மகிழ்கின்றது.

ஓலைச்சுவடிகளை எவ்வாறேனும் தேடித் தொகுத்துப் பாதுகாக்க வேண்டும் என்னும் உயரிய எண்ணத்தில் சுவடி உரிமையாளர்க்கு ஊக்கத்தொகை வழங்கி, சுவடிகளைப் பெற்றுப் பாதுகாக்கும் முறை அண்மைக்காலமாகப் பின்பற்றப்படுகிறது.

ஊக்கத் தொகை வழங்குவதற்கென்றே சுவடி மதிப்பீட்டுக் குழு ஒன்றை நிறுவி, சுவடிகளை உரிய வகையில் மதிப்பிட்டு உரிய தொகையை வழங்கிப் பெற்ற சுவடிகளும் பலவாகும். இத்தொகுதியில் அத்தகு சுவடிகள் ஏதும் இல்லை. அனைத்துச் சுவடிகளும் அன்பளிப்பாகப் பெறப்பெற்றனவே. அவ்வன்பர்களின் பட்டியலை இங்கே வெளியிடுவதில் தமிழ்ப் பல்கலைக்கழகம் பெருமையும் பூரிப்பும் கொள்கின்றது. அவர்கள் அனைவருக்கும் தமிழ்ப் பல்கலைக்கழகம் பெரிதும் நன்றி பாராட்டுகின்றது.

சுவடி நன்கொடையாளர் பட்டியல்

(எண்கள் : சுவடிகளின் தொடர் எண்களைக் குறிக்கின்றன)

1.	சிதம்பரக் குற்றாலம், நாகர்கோயில்	2261-2387
2.	M.A. நாராயணராஜா, இராஜபாளையம்	2388-2393
3.	ஆர். பத்மநாபன், திருவிடைமருதூர்	2394-2455
4.	அ. இராசாமணி, குறுப்பலூர் - திருச்சி	2456-2460

இத்தொகுதி வெளிவருவதில் முழு ஈடுபாடு காட்டி நல்வழிப்படுத்திய தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் **முனைவர் ம. இராசேந்திரன்** அவர்களுக்கு என்றென்றும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

இத்தொகுதி தொகுக்குங் காலத்து ஓலைச்சுவடித்துறைத் தலைவராக இருந்து என்னை வழிநடத்திய பேராசிரியர் முனைவர் த.கோ. பரமசிவம் அவர்களுக்கும், இத்தொகுதி வெளிவருங் காலத்து ஓலைச்சுவடித்துறைத் தலைவராக இருந்து என்னை வழிநடத்தும் பேராசிரியர் முனைவர் வே.இரா. மாதவன் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றிகள் பலப்பல.

இத்தொகுதி தொகுக்குங் காலத்தில் எனக்கு ஏற்பட்ட இடர்ப்பாடுகளைக் களைந்து, சில சுவடிக் குறிப்புகளைத் திருத்தி நல்லதொரு தொகுதியாக அமைவதற்குப் பல்லாற்றானும் உதவியவர் முன்னாள் ஓலைச்சுவடித்துறைத் தொழில்நுட்ப உதவியாளர் புலவர் ப.வெ. நாகராசன் ஆவார். அவர்களின் உதவி என்றென்றும் நினைவில் கொள்ளத் தக்கதாகும்.

இத்தொகுதி அச்சாவதற்கு முழு ஒத்துழைப்பும் ஈடுபாடும் காட்டிய தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்புத்துறை இயக்குநர் திரு.வை. கண்ணபுரக் கண்ணன் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றிகள் பலப்பல.

27.5.2010

தஞ்சாவூர் **முனைவர் மோ.கோ. கோவைமணி**

3001. சட்டைமுனி நிகண்டு

1. நூலகக் குறிப்பு

அ. தொடர் எண்: 2261-1

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. நூலாசிரியர்:சட்டைமுனி

ஆ. நூற்பெயர்:சட்டைமுனி நிகண்டு:சொச்ச சூத்திரம் 50

இ. பொருள்: மருத்துவம்

ஈ. செய்யுள்: 53

3. தோற்றக் கூறுகள்

அ. 11 ஏடு; 22 பக்கம்

ஆ. நீளம் 23 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்

உ. எழுத்து நிலை: சுமாரான கையெழுத்து

ஊ. சுவடியின் நிலைமை: நல்லநிலை

எ. முழுமை/குறை: முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சோதியெனுந் துரியவெளிக் குருவே அய்யா
  சொற்பெரிய கைலாச (பர)மெஞ் ஞானத்
தாதியே ஞானத்துக் கேது மார்க்கம்
  நாதத்தை யென்றுசொன்னா லார்தான் காண்பார்
வாதியென்று பேர்கொ(ண்)ட சுந்தரமே அய்யா
  வரிசையுட னுபசாரம் வழலை மார்க்கம்
நீதியாய்ச் சொல்லுகிறேன் நினைவாய்க் காணு
  நிகண்டுபண்ணி ரெண்டுநூல் நிலைத்திட் டோர்க்கே.

(1)

ஆ. முடிவு

ஆமப்பா சுந்தரமே அய்யா கேளு
அண்டத்தின் சுண்ணமொடு வாசி மூலம்
நாமப்பா நிகண்டுபன்னி ரெண்டு நூறு
நாட்டினேன் சூத்திரம்போற் சொச்சம் பாடி
வாமப்பா ரெண்டுகாண்டம் வாதத் துக்கும்
மகத்தான சூத்திரமிரு நூறு சொன்னேன்
தாமப்பா சூத்திரமும் சொச்சசாத் திரமும்
.... பார்த்தவர்க்கே முத்தி யாமே.

(53)

சட்டைமுனி சொச்ச சூத்திரம் முகிந்தது, முற்றும்.

3002. போகர் சூத்திரம்

1. நூலகக் குறிப்பு

அ. 2261-2

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. போகர்
ஆ. போகர் சூத்திரம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 68

3. தோற்றக் கூறுகள்

அ. 14 ஏடு; 28 பக்கம்
ஆ. நீளம் 23 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து
ஊ. நல்லநிலை
ஏட்டெண் 12ல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீர்சிறந்த பேரனெங்கள் நந்தீச ரப்பா
வாரமுட னெனைவளர்த்த மூலரென் தந்தை

பாரில்வளர் கருவூரார் கொங்கணனே பிள்ளை
காரமொடு சாரவித்தை கையறிவார் மெய்யே.

(1)

ஆ. முடிவு

உரைத்தேன் கருக்கள் குருக்கள் ஒளியாமல்
நிறைத்தேன் சிவனுமையாள் நீதி முறையாளை
வரைத்தேன் பரைக்கேநீ பூசைஅன்பாய்ச் செய்துகொண்டால்
குருக்காணும் அப்பா குறையாது பூரணமே.

(68)

3003. கொங்கணர் நிகண்டு

1. நூலகக் குறிப்பு

அ. 2261-3

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. கொங்கணர்

ஆ. கொங்கணர் நிகண்டு:சொச்ச சூத்திரம் 50

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 52

3. தோற்றக் கூறுகள்

அ. 19 ஏடு; 38 பக்கம்

ஆ. நீளம் 23 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்

உ. சுமாரான கையெழுத்து

ஊ. நல்லநிலை
ஏட்டெண் 26ல் நூல் தொடங்குகிறது

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பாவான மூன்றுக(ா)ண்டம் நானூற்று மூன்றும்
பார்மக்கள் சிவசமய சூத்திரத்திற் சொல்வேன்

மாவாக யெவ்வுயிர்க்கும் பிறப்புள் ளாக
மன்னிநின்ற பூரணமே ..... காப்பு
காவான மனமுரைத்து ஆரியனைப் போற்றிக்
காத்திருக்கில் சூத்திரத்தைக் கையில் ஈவார்
பூவான யோகமுதல் ஞான சித்தி
மூலசிவ யோகசித்தி பலிக்குந் தானே.

(1)

ஆ. முடிவு

பத்தியிந்தச் சூத்திரத்தைப் பார்த்துக் கொண்டு
பலபலவாஞ் சாத்திரத்தைப் பாரு பாரு
அத்தியிந்தச் சூத்திரம்போல் சட்டைமுனி நூலாம்
அல்லாதே நூலில்லை யலைந்து பாரு
முத்தியென்ற தெதுவாலே? லவணத் தாலே;
முன்பின்னாய்ப் பாடிவரும் தீட்சை மார்க்கம்
சத்தியிந்த வழலையப்பா யிதனை விட்டால்
தலைகெட்ட வாதமிது சார்வு முற்றே.

(52)

கொங்கணர் நிகண்டு முற்றும்.

3004. அகத்தியர் நிகண்டு 116

1. **நூலகக் குறிப்பு**

   அ. 2261-4

2. **உள்ளீடு : நூல் விவரம்**

   அ. அகத்தியர்
   ஆ. அகத்தியர் நிகண்டு 116
   இ. மருத்துவம்
   ஈ. செய்யுள் 88

3. **தோற்றக் கூறுகள்**

   அ. 30 ஏடு; 60 பக்கம்
   ஆ. நீளம் 23 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து
ஊ. நல்லநிலை
ஏட்டெண் 45ல் நூல் தொடங்குகிறது
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியாம் பராபரமே குருவே அய்யா
அகண்டசரா சரமான நிர்க்குணமே அய்யா
பேதியா நின்மலமே சூட்சா சூட்சம்
பெரிதான வல்லபையுங் .... காப்பு
நீதியாய் நிகண்டொருநூற் பத்தாறுக் குள்ளே
நிகழ்த்தினேன் கருக்கிடையும் நன்றாய் ...
வாதிதா னிந்நூலைக் கண்ணிற் காட்டார்
வகுத்திட்டேன் நிகண்டுநூல் நன்றாய்ப் பாரே.

(1)

ஆ. முடிவு

போடப்பா மஞ்சாடிக் கேற்றம் வேண்டாம்
பொல்லாத நோய்களெல்லாம் பிரண்டு போகும்;
மாடப்பா அண்டங்கள் துறந்த நோய்க்கும்
நவமூலம் வெளிமூல மான நோய்க்கும்
கூட்டப்பா குறைநோய்கள் வயிற்று ளைச்சல்
குறுக்குவலிக் கடுப்புரத்தம் ....
தேடப்பா அனுபானங் கண்டு போடு
திறமான வைத்தியனே சொல்லக் கேளே.

(88)

3005. கொங்கணர் அதிசய சூத்திரம் 27

1. நூலகக் குறிப்பு

அ. 2261-5

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. கொங்கணர்

ஆ. கொங்கணர் அதிசய சூத்திரம் 27
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 27

3 **தோற்றக் கூறுகள்**

அ. 11 ஏடு; 22 பக்கம்
ஆ. நீளம் 23 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து
ஊ. நல்லநிலை
ஏட்டெண் 75ல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. **தொடக்கம்**

ஓமென்றும் பூரணமா யகண்ட வீதி
உத்தபரஞ் சோதியெனும் பாதம் போற்றி
வாமென்று திரிகோண விந்து வட்டம்
மாமென்ற மோகனத்தாய் வாலை பாதம்
நாமென்றும் பூசைசெய்தோம் போகர் சொல்ல
நந்திசொல்ல மூலர்சொல்ல காலாங்கி சொல்ல
ஆமென்னும் முனிவர்மெச்ச சித்தர் போற்ற
அதிசயசூத் திரமாக அறைந்திட் டேனே.

(1)

ஆ. **முடிவு**

வாயான புண்பொடிகள் கரைப்பன் குட்டம்
மகத்தான கிரந்தியொடு பறங்கி தீரும்
தாயாரின் வயற்றிருந்து பிறந்த ரூபம்
தப்பாது வசிகரமாம் சொன்னேன் சூட்சம்
காயான ஐங்கோலம் தீர வித்தை
கருவான மாந்திரீகம் எல்லாஞ் சித்தி
வாயான கூடுவிட்டுக் கூடு பாயும்
பாங்கான அதிசெயசூத் திரந்தான் முற்றே.

(27)

3006. அகத்தியர் சூத்திரம் 8

1. நூலகக் குறிப்பு

அ. 2261-6

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. *அகத்தியர்*

ஆ. *அகத்தியர் சூத்திரம் 8*

இ. *பல்வகை நூல்கள்*

ஈ. *செய்யுள் 8*

3. தோற்றக் கூறுகள்

அ. *4 ஏடு; 8 பக்கம்*

ஆ. *நீளம் 23 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.*

இ. *இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது*

ஈ. *ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்*

உ. *சுமாரான கையெழுத்து*

ஊ. *நல்லநிலை*

ஏட்டெண் 86ல் நூல் தொடங்குகிறது

எ. *முழுமை*

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சிவ்யவ் சிங்அங் உங்கென் (றோது)
திரும்பவே அரிகிலியு மங்கென் றோது
சரிகையொடு கிரிகையது ஞான மப்பா
தப்பாது உங்கிலியும் சவ்வென் றோது
பரிசமொடு பூரணத்தி லியங்கும் வாழ்வும்
பார்க்கையிலே ஓம்சிவ வசியென் றோது
துரியமடா துரியத்தில் அப்பும் உப்புஞ்
சூட்டுகிறேன் பாறையுப்பைச் சொல்லு றேனே.

(1)

ஆ. முடிவு

குறியான அகாரமே உகார மாச்சு
குற்றமில்லா முதலெழுத்து மிதனுள் ளாச்சு

அழியாத பொருளாவி யிதனுள் ளாச்சு
அனைத்துயிர்க்குப் பிறப்பிறப்பும் இதனுள் ளாச்சு
வளியாக யிதுமூன்றும் தேர்ந்தோன் சித்தன்
வழியறியான் மூடனென்ற கழுதை மாடு
ஒளியாகும் சோதிமணி யிதுவே யாகும்
உயிர்வைத்த மகாமணிக் கிரீடந் தானே.

(8)

அகத்தியர் மகாமுனி சூத்திரம் எட்டு முற்றும்.

3007. தட்சிணாமூர்த்தி 10

1. **நூலகக் குறிப்பு**

அ. 2261-7

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. தட்சிணாமூர்த்தி
ஆ. தட்சிணாமூர்த்தி 10
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள் 10

3. **தோற்றக் கூறுகள்**

அ. 5 ஏடு; 10 பக்கம்
ஆ. நீளம் 23 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து
ஊ. நல்லநிலை
ஏட்டெண் 90ல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

பாரப்பா வாதியென்றால் பூசை வேணும்
பரிவான சிவம்வேணுந் தியானம் வேணும்
நேரப்பா வாசியென்ற யோகம் வேணும்
நேராக வேதியத்தை நிறுத்த வேணும்

காரப்பா குருபதத்தைக் காக்க வேணும்
கைகாட்டித் தொழிலுமுறை யறிய வேணும்
சாரப்பா சாத்திரமும் சூத்திரமும் நிகண்டும்
சார்வாகப் பார்த்திருந்து வாதம் பாரே.

(1)

ஆ. முடிவு

போமடா கரிஒட்டி ளூதும் போது
போக்காகக் கண்விட்டு ஆடு மாடும்
ஆமடா நல்லுப்பைக் கூட்டி யூத
நல்லதொரு வயிரமணி போலே யாடும்
நாமடா ஆணவத்தால் வெளியில் போட்டேன்
நாட்டாதே கள்ளரென்ற மானி டர்க்கு
தாமடா யிதுவெல்லா மறிந்து கொண்டு
தரணிதனில் விள்ளாதே அடக்கு முற்றே.

(10)

3008. அகத்தியர் 16

1. **நூலகக் குறிப்பு**
   அ. 2261-8

2. **உள்ளீடு : நூல் விவரம்**
   அ. அகத்தியர்
   ஆ. அகத்தியர் 16
   இ. மருத்துவம்
   ஈ. செய்யுள் 15

3. **தோற்றக் கூறுகள்**
   அ. 7 ஏடு; 14 பக்கம்
   ஆ. நீளம் 23 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
   உ. சுமாரான கையெழுத்து
   ஊ. நல்லநிலை
   ஏட்டெண் 96ல் நூல் தொடங்குகிறது
   எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

பூரணமாய் நின்றதொரு அய்யர் பாதம்
போற்றியெந் நாளும் புவியின் மீதே
சீரணமாய் நின்றதொரு ஆத்தாள் தன்னைக்
கண்மூக்கு மத்தியிலே கருதி யப்பா
ஆரணமாம் ஆகாசம் பூமி லோகம்
அடுக்காக நின்றதொரு இறைவற் கன்பாய்
வாரணத்தின் முகத்தோன்தன் பாதந் தன்னை
எந்நாளும் மனதில்வைத்து மகிழ்ந்திட் டேனே.

(1)

ஆ. முடிவு

பூசிப்பாய் தூபமொடு தீபங் காட்டிப்
போக்குடனே எட்டெழுத்தால் அரச்சனையே
செய்து
நேசிப்பாய் உபசாரம் அனேகம் செய்து
நெட்டியுள்ள தாய்பதத்தை நினைவு வைத்து
யோசிப்பாய் தோத்திரங்கள் கோடா கோடி
மனோன்மணியே மாதாவே மலையிற் கண்ணே
ஆசிப்பாய் அதின்பிறகு ஆத்தா ளைத்தான்
ஆனந்தப் பூரணத்தின் அருள தாமே.

(15)

3009. அகத்தியர் திராவக சூத்திரம் 16

1. **நூலகக் குறிப்பு**

அ. *2261-9*

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் திராவக சூத்திரம் 16
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 14

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம்

ஆ. நீளம் 23 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. சுமாரான கையெழுத்து

ஊ. நல்லநிலை

ஏட்டெண் 104ல் நூல் தொடங்குகிறது

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பொன்னான திராவகமாம் குருமு றைக்குப்
புகலவில்லை பதினெட்டுச் சித்த ரய்யா
பன்னான சூடனொடு எவச்சாரஞ் சீனம்
பாரன்ன பேதிவகை பலந்தா னொன்று
தன்னான காரமது பலந்தா னாலு
சாதகமா யினங்களுமோ பலந்தா னெட்டு
மின்னான மாந்திரமே படிநா லுக்குள்
விளங்கவே மருந்தெல்லாம் பொடித்துப் போடே.

(1)

ஆ. முடிவு

கட்டியதோர் வில்லைதன்னை ரவியில் போட்டுக்
காய்ந்தபின்பு சுண்ணத்துள் ளெரித்து வாங்கு
அட்டினால் புரியட்டம் பூரணத்தி னோடு
ஆனந்த சாயுச்சிய சுழிமுனை நந்திமூலம்
மட்டதினால் பலனேது சூத்ர மதனால்
பலிக்குமடா வாதமொடு வாசி யோகம்
விட்டகுறை பூரணத்தை ஆர்பாடப் போறார்?
வேதாந்தச் சாத்திரத்தை வெளிவிட் டேனே.

(14)

3010. போகர் 40

1. நூலகக் குறிப்பு

அ. 2261-10

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. போகர்

ஆ. போகர் 40

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 40

3. தோற்றக் கூறுகள்

அ. 15 ஏடு; 30 பக்கம்

ஆ. நீளம் 23 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. சுமாரான கையெழுத்து

ஊ. நல்லநிலை

ஏட்டெண் 110ல் நூல் தொடங்குகிறது

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீர்பெருகு வேதாந்தச் சூத்தி ரத்தைத்
தெட்சிணா மூர்த்திபதம் பணிந்து போற்றிக்
கார்பெருகுங் குழலாயி பதமும் போற்றிக்
கயிலாசத் திருமூலர் பதமும் போற்றிப்
பேர்பெருகுஞ் சட்டைமுனி போக நாயன்
பேரின்பக் கோரக்கர் பதஞ்சலியுங் காப்பு
ஏர்பெருகு மருளோடு பொருளுங் காப்பு
என்மக்கா ளுந்தமக்கா மிந்த நூலே.

(1)

ஆ. முடிவு

ஓடுமப்பா பச்சோந்திப் பித்து வாங்கி
உத்தமனே ரோசனைதேன் கூட்டி யாட்டி

வாடாதே ஆயிபதம் பூசை செய்து
　　மதுவையுண்டு கையிலிட்டுப் பாரு பாரு;
நாடாத கடலாறுங் குளமுங் கிணறும்
　　நலமாக வைத்தபொருள் எல்லாங் காணும்;
தேடாத வாதமென்ன இத்தை விட்டுத்
　　திசைதோறுந் திரிந்தலைந்து நடந்திட் டாயே.
(40)

போகர் நாற்பது முற்றும்.

3011. அகத்தியர் வைத்திய காவியம் 1500

1. நூலகக் குறிப்பு

அ. *2262-1*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் வைத்திய காவியம் 1500

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 1465

3. தோற்றக் கூறுகள்

அ. 200 ஏடு; 400 பக்கம்

ஆ. நீளம் 30 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்

உ. சுமாரான கையெழுத்து

ஊ. பல ஏடுகள் சிதைந்த மோசமான நிலை
1, 23, 24, 26-29, 31, 32, 45, 93, 146, 147 ஆகிய ஏடுகள் இல்லை; 129, 183 ஆகிய ஏடுகளில் ஒரு பக்கம் மட்டும் எழுதப்பட்டுள்ளது.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அறிவது வாதந் தானும்
　　மாத்திரை அரைதான் ஓடிச்

செறிவது பித்த மப்பா
சேர்சமன் ஒன்றாய்ப் பின்னும்
பிரிவது வய்யந் தானும்
பிரண்டது கால்தான் ஓடில்
மறிவது சமாதம் ஆகும்
மயக்கமும் இல்லை காணே.

ஆ. முடிவு

ஆமப்பா வாகடத்தில் சூத்திரத்தை எல்லாம்
அறைந்திட்டேன்; அணுவொன்றும் அடக்கம் இல்லை;
வேமப்பா நோய்எல்லாம் படுதீப் பற்றி
வேறுள்ள நூற்கெல்லாம் விவரம் இல்லை;
சோமப்பா இந்தநூல் வகையே தென்றால்
சொல்லுகிறேன் ஆயிரத்தை நூறு சொல்லும்
நாமப்பா உள்ளபடி சொல்லி வைத்தோம்;
நாதாக்கள் கடாட்சத்தால் சூத்திரந்தான் முற்றே.
(1465)

3012. அகத்தியர் 205

1. **நூலகக் குறிப்பு**
   அ. 2262-2

2. **உள்ளீடு : நூல் விவரம்**
   அ. அகத்தியர்
   ஆ. அகத்தியர் 205
   இ. மருத்துவம்
   ஈ. செய்யுள் 200

3. **தோற்றக் கூறுகள்**
   அ. 28 ஏடு; 56 பக்கம்
   ஆ. நீளம் 30 செ.மீ., அகலம் 3 செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
   உ. சுமாரான கையெழுத்து

ஊ. மோசமான நிலை

ஏட்டெண் 236ல் நூல் தொடங்குகிறது

260, 261 ஆகிய ஏடுகள் இல்லை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பூரணமாம் உள்மூலப் பொறியிற் சூடாம்
புகையெழும்பி மேகமதாம் சிரசிற் சூடாம்
காரணமாம் நீர்கலந்து கண்ணில் ரோகம்
கனல்எழுந்த வாயுவினால் சூலை ரோகம்
மாரணமாம் வாதத்தில் எழுந்த மேகம்
மதியதொரு பித்தத்தால் கிராணி ஆச்சு;
தாரணமாம் வாயுவினால் குன்மம் ஆச்சு;
சார்ந்தசிலேற் பனம்கூடில் சயம தாமே.

(1)

ஆ. முடிவு

ஓமென்ற ஓமமுடன் வசம்பு கார்கோல்
உறவாகத் தயிலமிதை இறக்கி யேதான்
நாமென்ற திதுமூன்றுஞ் சூர ணித்து
நலமாக அதில்குழைத்துக் கொள்வா யானால்
வாமென்ற சன்னியொடு வாதம் தீரும்;
வளர்கின்ற குட்டமொடு சிரங்கு தீரும்;
தாமென்ற இன்னும்ஒரு தைலம் சொல்வேன்;
சாரணையின் வேர்இடித்துத் தைலம் வாங்கே.

(200)

3013. அகத்தியர் கர்ம சூத்திரம்

1. நூலகக் குறிப்பு

அ. *2262-3*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் கர்ம சூத்திரம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 142

3. **தோற்றக் கூறுகள்**

அ. 23 ஏடு; 46 பக்கம்

ஆ. நீளம் 30 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்

உ. சுமாரான கையெழுத்து

ஊ. மோசமான நிலை

ஏட்டெண் 267ல் நூல் தொடங்குகிறது

272, 277-283, 297 ஆகிய ஏடுகளும் 299க்கு மேல் இருக்க வேண்டியனவும் இல்லை

எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

பூதலத்தில் தென்பொதிகை தன்னில் வாழும்
பூரணமே என்குருவே சிவமே அய்யா
மாதவத்தால் அட்டசித்தி எட்டு மப்பா
மார்க்கத்தால் வைத்தியநூல் வகையாய்ச்
சொல்வேன்
போதகத்தின் முகத்தானைக் கடைக்கோட் டானைப்
புழுக்குழியில் வீழ்ந்தானைப் புதல்வன் தன்னைச்
சாதகமாய் மனதடங்கி அறிவில் கூடித்
தற்பரமாய் நின்றகண பதியே காப்பு.

(1)

ஆ. முடிவு

போம்என்றேன் பாண்டுவகை மூலம் எல்லாம்;
போகுமடா கிராணிஎல்லாம் சயங்கள் எல்லாம்;
வேம்என்ற பித்தத்தால் எழுந்த தோஷம்;
விஷவாதம், நீர்த்தோஷம், கண்ணோய், காசம்,
ஆம்என்றேன் காதுமந்தம், செவிடு, குத்தல்,
அத்திசுரம், வரள்சோகை, கைகால் காந்தல்,

நாம்என்ற முகங்காந்தல் இந்திரியம் எல்லாம்
நாடாது மண்டலத்தில் நயந்து காணே.

(142)

3014. அகத்தியர் முப்பு 50

1. நூலகக் குறிப்பு

அ. 2262-4

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் முப்பு 50
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 42

3. தோற்றக் கூறுகள்

அ. 7 ஏடு; 14 பக்கம்
ஆ. நீளம் 30 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து
ஊ. மோசமான நிலை
ஏட்டெண் 336ல் நூல் தொடங்குகிறது
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மயமான முப்பூவின் மார்க்கந் தன்னை
வைத்தியத்துக் காதியாய் விரித்துச் சொல்லச்
செயமான கணபதியும் கந்தன் தானுஞ்
சிவனோடும் உமையாள்பார் வதிநிர் வாணி
நயமான எப்போதும் முன்னே நின்று
நாடறிய முப்பூவை நயந்து காக்க
வயமாகச் சொல்லுகிறோம் ஐம்ப துக்குள்
வயித்தியரே எப்போதும் வணங்கிக் கேளீர்.

(1)

ஆ. முடிவு

பெருமையென்ற மாணிக்கம் சர்க்கரையிற் கொள்ளப்
  பெரும்பாடு எலும்புருக்கி பேர்ந்து போகும்;
அருமையென்ற பச்சைதனைக் கற்கண்டிற் கொள்ள
  அத்திசுரம் வெட்டைமுதல் அகன்று போகும்;
தருமைஎன்ற வயிரத்தைச் சீனிதனிற் கொள்ளச்
  சலக்கழச்சல் நீரிழிவு சாரா தோடும்;
உருமைவயி டூரியத்தைப் பாலிற் கொள்ள
  வரட்சையுடன் கணைரோகம் மாறிப் போமே.

(47)

3015. மருந்து செய்முறை

1. **நூலகக் குறிப்பு**

   அ. 2263

2. **உள்ளீடு : நூல் விவரம்**

   அ. ....
   ஆ. மருந்து செய்முறை
   இ. மருத்துவம்
   ஈ. செய்யுள்
   அச்சில் ஏறத்தாழ 300 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

   அ. 188 ஏடு; 376 பக்கம்
   ஆ. நீளம் 30 செ.மீ., அகலம் 3 செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
   உ. சுமாரான கையெழுத்து
   ஊ. முதலேடு முறிந்துள்ளது
   உள்ளவை நல்லநிலை
   நூலுக்கு ஏட்டெண் கொடுக்கப்படவில்லை
   எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

போமென்ற ....
புகலுகிறேன் பாலைச்சார் பாளைச் சாற்றிற்
காமென்ற கரப்பனொடு வகைகள் எல்லாம்
கரந்தைச்சாறு குமரிச்சாறு கரிசாலைச் சாறாம்;
வேமென்ற எலிக்கடிக்கு முருங்கைச் சாறு
வேளையிலை வெள்ளுள்ளிச் சாற்றில் ஊட்டு;
ஆமென்ற விரியனுக்கே அழிஞ்சில் வாகை
ஆவத்துக் காடுதொடா மூலி வேரே.

(11)

ஆ. முடிவு

போமேபுளி உப்போடு கையப்புறவே
புகழ்தூதளை சுறவொடு நெய்த்தோலியும்
ஆமேமுருங் கைக்கிலை காயுடன்ஆம்
அல்லாதினிக் காயும்ஓ ழிந்திடவே
தாமேசொலச் சிந்தாதி லேகியமாய்த்
தவறாமல்உண் பார்விளை தான்ஒழிவார்;
மாமேவுபொ ருப்புறும் மாமுனிவன்
வகையாகஉ ரைத்திடும் வண்மையதே.

(3)

5. **பிற செய்திகள்**

பல மருத்துவ நூல்களிலிருந்து மருந்துகளின் செய்முறைகளைத் தொகுத்து எழுதப்பெற்ற சுவடியாகத் தோன்றுகிறது.

3016. அகத்தியர் வைத்திய காவியம் 1500

1. **நூலகக் குறிப்பு**

அ. 2264-1

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் வைத்திய காவியம் 1500
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 1465

3. தோற்றக் கூறுகள்

அ. 202 ஏடு; 404 பக்கம்
ஆ. நீளம் 39 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரிகள்
உ. தெளிவான பலவகைக் கையெழுத்து
ஊ. முதல் 90 ஏடுகளுக்கு மட்டும் ஏட்டெண் கொடுக்கப்பட்டுள்ளது
சில ஏடுகள் சிதிலமடைந்து உள்ளன
மற்றவை நல்லநிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பாகுடன் கணேசன் பாதம்
 பணிந்துமுக் குணங்க ளாய்ந்து
வாகடச் சுவடி யெல்லாம்
 வகைவகை தொகுத்துப் பார்த்தே
ஆகம விதியின் நூலால்
 அடர்ந்திடும் நோய்கட் கெல்லாம்
போகநல் மருந்து சொல்வோம்;
 புலத்தியா! பொருந்திக் கேளே.

(1)

ஆ. முடிவு

காண்க:- தொடர் எண்.2261-1.

இ. பிற்குறிப்பு

1011ஆம் கொல்லம் ஆவணி மாசம் 3ந் தேதி திங்களாட்சையும் ரோகிணியும் தசமியும் அறுபத்து நாழிகை புலறும்போள் எழுதி முகிஞ்சது. முற்றும் (மலையாள மொழி; தமிழ் எழுத்து).

3017. அகத்தியர் லோகமாரணம் 150

1. **நூலகக் குறிப்பு**
   அ. 2264-2

2. **உள்ளீடு : நூல் விவரம்**
   அ. அகத்தியர்
   ஆ. அகத்தியர் லோகமாரணம் 150
   இ. மருத்துவம்
   ஈ. செய்யுள் 151

3. **தோற்றக் கூறுகள்**
   அ. 12 ஏடு; 24 பக்கம்
   ஆ. நீளம் 39 செ.மீ., அகலம் 3 செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
   உ. தெளிவான சிறிய கையெழுத்து
   ஊ. மூன்றேடுகள் மட்டும் சிதிலமடைந்துள்ளன
   மற்றவை நல்லநிலை
   நூலில் ஏட்டெண் இல்லை
   எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**
   அ. தொடக்கம்

சீரணி கொன்றை சூடும்
   சிவன்இரு பாதம் போற்றி
வாரண முகத்தோன் பாதம்
   வணங்கிநூற் றைம்ப துஞ்சொல்:
பூரண வாலை ஞானச்
   சரஸ்வதி போற்றி போற்றி
காரண மான செஞ்சொற்
   கர்மசூத் திரங்காப் பாமே.

ஆ. முடிவு

சொன்னதோர் தொகைதான் நூற்றி
  யைம்பதும் சூட்சம் ஆகும்;
முன்னமே சொன்ன நூலில்
  முக்கியம் இந்நூல், சூட்சம்;
வன்னமே பாரில் லோக
  மாரணம் அதிக சூட்சம்;
அன்னமே சொன்ன நூற்றி
  யைம்பதும் அறிவீர்; முற்றே.

(151)

இ. பிற்குறிப்பு

962ஆம் வருடம் கார்த்திகை மாதம் 26ஆம் தேதி வெள்ளியாட்சையும் புனர் நட்சத்திரமும், அகத்திய நாயனார் சூத்திரம் நூற்றைம்பத்தொன்றும் முற்றும். இந்த ஏடு பண்டாரம் கைப்பட்ட எழுத்து.

3018. அகத்தியர் கர்ம சூத்திரம்

1 **நூலகக் குறிப்பு**

அ. 2264-3

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் கர்ம சூத்திரம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 205

3. **தோற்றக் கூறுகள்**

அ. 24 ஏடு; 48 பக்கம்
ஆ. நீளம் 39 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. தெளிவான சிறிய கையெழுத்து
மூன்றேடுகள் வேறொருவரால் எழுதிச்
சேர்க்கப்பட்டுள்ளன

ஊ. சுமாரான நிலை

ஏட்டெண் 169ல் நூல் தொடங்குகிறது

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காண்க:- தொடர் எண்.2262-3.

ஆ. முடிவு

கொண்டுவரில் சயந்திரத் தயிலஞ் சொல்வேன்
கூறாதே யொருவருடன் அழகு மெத்த
கண்டுவர பால்குறுணி துளசி பச்சை
கருவேலு வெள்வேலு வெவ்வேறே சாறுபடிஒன்று
பண்டுனதாய் யெள்ளெண்ணெய் படிதா னொன்று
பாராய்நீ நெய்படி யொன்றுக் கேழு
யுண்டுகொள்ளு மொண்டத்தெண் ணெய்படி ரெண்டு
யூரவிட்டுச் சாறெண்ணெய் பாலோ டெண்ணே.
(205)

(இரண்டாமடியில் யாப்பமைதி இல்லை.
இதற்குமேல் எழுதப்படவில்லை)

3019. நயனவிதி

1. நூலகக் குறிப்பு

அ. 2265-1

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. நயனவிதி

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 209

3. தோற்றக் கூறுகள்

அ. 18 ஏடு; 36 பக்கம்

ஆ. நீளம் 28 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து
ஊ. 1-10, 16, 21, 26 ஆகிய ஏடுகள் இல்லை
உள்ளவை மிகவும் மோசமான நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

விழிஎழுங் குழுறத் தாலும்
வேறுள்ள வியாதி யாலும்
தெளிகரு விழியி னுள்ளே
செறிந்திடும் நீரி னாலும்
முழியது மயக்க முண்டாம்
முந்திய மூன்று ரோகம்
எழிலுறு விழியாய்! கேளாய்;
சாத்தியம் மூன்றும் ஆமே.

(66)

ஆ. முடிவு

மருந்துதான் எழுதும் போது
வாய்த்தஆ சனத்தி ருத்திக்
கருங்குழல் மானே கேளாய்
கவின்பெறக் கிழக்கு நோக்கி
இருந்தபின் அப்பால் நீயும்
இயல்பெற இடத்தில் இட்டு
வருந்துற வாரத் திட்டால்
மாசறத் தீருங் காணே.

(201)

நயனவிதி முற்றும்.

இ. பிற்குறிப்பு

961ஆம் வருடம் பாங்குனி மாதம் 23ஆம் தேதி.

3020. மருத்துவ நூல்

1. நூலகக் குறிப்பு

அ. 2265-2

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 413

3. தோற்றக் கூறுகள்

அ. 13 ஏடு; 26 பக்கம்

ஆ. நீளம் 28 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்

உ. சுமாரான கையெழுத்து

ஊ. மிகவும் மோசமான நிலை
ஏட்டெண் 91ல் நூல் தொடங்குகிறது
91க்கு முன்னிருக்க வேண்டிய ஏடுகளும் 99, 101-105, 107, 108, 110 ஆகிய ஏடுகளும் இல்லை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தின்னிட மேனி சிறுகதிர் போலோடும்
மன்னிய காயந்தான் பாங்குங் கவனமே
உன்னிடில் மேலே ஒளிந்த மனோன்மணி
பன்னி உலாவையில் பார்க்கலாம் பாருமே.

(139)

ஆ. முடிவு

சேரை இடுநீ திரண்ட பிரண்டையைப்
பூரை அரசு பொலிவாம் அபாமார்க்கம்
நேரைநல் சாம்பல் நிறையொன்றுந் கோர்சேறை
தாரையே ஆறில் தனிவார் முரியே.

(413)

3021. அகத்தியர் 205

1. நூலகக் குறிப்பு

அ. 2265-3

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் 205

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 204

3. தோற்றக் கூறுகள்

அ. 26 ஏடு; 52 பக்கம்

ஆ. நீளம் 28 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 11 வரிகள்

உ. சுமாரான கையெழுத்து

ஊ. மிகவும் மோசமான நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காண்க:- தொடர் எண்.2262-2.

ஆ. முடிவு

ஈவதிந்த நூல்தொகைதான் இருநூற் றைந்து
இகத்திலுள்ளோர் பிழைக்கவென்று இரங்கிச் சொன்னேன்
தாயிருந்த பிள்ளைக்குத் தவக்க மில்லா
தனம்பெற விந்நூலைச் சாற்றி னேன்நான்
நோய்மிகுத்து வருவதில்லை ஒருநா ளுந்தான்
நுண்மயாய்ச் சரக்கையெல்லாம் நீற்றுக் கொண்டு
பாயமொடு எண்ணெயொடு கிருதஞ் செய்து
வைத்திடுவாய் அனுபான வைத்தியம் முற்றே.

(204)

இ. பிற்குறிப்பு

(கொல்லம்) 962ஆம் வருடம் கார்த்திகை மாதம் 15ந் தேதி திங்களாட்செயும் தசமியும் அவிட்ட நட்சத்திரமும் ஆக திரு... கைப்பட எழுதி தானுமால்ளுள மருமகன் உசாவிளை பண்டுவுக்கு எழுதி முகிந்தது.... நாயனார் வாக்கியம் ஒற்றை மூலியல் பற்பமும் சூரணமும் தைலமும் கிருதங்களும். தேவி சகாயம்...

3022. அகத்தியர் முப்பு 50

1. **நூலகக் குறிப்பு**
   - அ. *2265-4*
2. **உள்ளீடு : நூல் விவரம்**
   - அ. *அகத்தியர்*
   - ஆ. *அகத்தியர் முப்பு 50*
   - இ. *மருத்துவம்*
   - ஈ. *செய்யுள் 50*
3. **தோற்றக் கூறுகள்**
   - அ. *4 ஏடு; 8 பக்கம்*
   - ஆ. *நீளம் 28 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.*
   - இ. *இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது*
   - ஈ. *ஒரு பக்கத்திற்கு 11 வரிகள்*
   - உ. *சுமாரான கையெழுத்து*
   - ஊ. *சுமாரான நிலை*
     ஏட்டெண் 151ல் நூல் தொடங்குகிறது
     இதற்குமுன் இருக்கவேண்டிய மூன்று ஏடுகள் காணப்படவில்லை
   - எ. *குறை*
4. **சிறப்புச் செய்திகள்**
   - **அ. தொடக்கம்**

....

...வெளி யாக்கியன்று தொகையுஞ் சொன்னாள்

நல்வினையும் தீவினையு மறியச் சொன்னாள்
நார்செ(ய்)மத னுக்கிரங்கி நட்க்கச் சொன்னாள்
புல்லறிவப் பாலகற்றிப் புத்தி சொன்னாள்
பொன்னடியும் முடியுமனம் பொருந்தச் சொன்னாள்
வல்லதுகை வயித்தியமும் போதீத் தேதான்
வரிசையா யுபதேசித் துவகைசெய் வாமே.

(24)

ஆ. முடிவு

காலான வைத்தியத்தை யுறுதி யாகக்
கைமுறைகள் தப்பாமற் கருவாய்ச் செய்தால்
பாலான நிறம்படைத்த பரம னாவான்
பாரிலே வாழ்வதற்குக் குருவு மாவான்
சேலான திருவுடைய செல்வ னாவான்
சிந்தையிலே களங்கமற்றால் சித்த னாவான்
நாலான மணிபோற்றும் பரமன் சொன்ன
நலமுடைய முனிவன்மொழி நாடி முற்றே.

(50)

இ. பிற்குறிப்பு

962ஆம் (கொல்லம்) வருடம் மார்கழி மாதம் 7 தேதி செவ்வாய்க்கிழமை பூர்வ பட்சத்து பதினான்குமாக எழுதி முகிந்தது முற்றும்.

3023. அகத்தியர் 35

1. நூலகக் குறிப்பு

அ. 2265-5

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் 35
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 32

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு; 8 பக்கம்

ஆ. நீளம் 28 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 11 வரிகள்
உ.. சுமாரான கையெழுத்து. விடுபாடுகள் மிகுதி
ஊ. சுமாரான நிலை
ஏட்டெண் 155ல் நூல் தொடங்குகிறது
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பூரணமாய் நின்றகுரு நாத னானோன்
பொதிகையில்வந் தெமக்கருளிச் செய்த நூலின்
வாரணமாய் ரிசியருள்சேர் --முந் நூறு
வயித்தியத்தின் றுறையாய்ந்து வகுத்துப் பார்த்து
ஆரணநூ லுரைசாத்ரம் முப்பத் தஞ்சில்
ஆதிமுதல் மூவுலகெல் லாம்வி ளங்கக்
காரணமாய் நின்றதிருக் கயிலை நாதர்
கமலமல ரிருசரணங் காப்ப தாமே.
(1)

ஆ. முடிவு

ஒன்றிடுவாய் மனோசிலையும் வெள்ளை யொன்று
உறவான துருசொன்று துத்த மொன்று
நன்றெனவே சாரமொன்று ....
நலமான வீரமொன்றும் அரைத்த பின்பு
துன்றிடவே அமுரிவிட்டுச் சாம மொன்று
சுருக்காகச் சம்பழச்சார் சாம மொன்றே.
(32)

3024. அகத்தியர் கர்ம சூத்திரம் 300

1. நூலகக் குறிப்பு

அ. 2265-6

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் கர்ம சூத்திரம் 300

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 301

3. **தோற்றக் கூறுகள்**

அ. 34 ஏடு; 68 பக்கம்

ஆ. நீளம் 28 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 11,12 வரிகள்

உ. சுமாரான கையெழுத்து

ஊ. 177, 181ஆகிய ஏடுகள் இல்லை
உள்ளவை சுமாரான நிலை
ஏட்டெண் 160ல் நூல் தொடங்குகிறது

எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

பூரணமா மூலமுதல் ஆறா தாரம்
புரியட்டம் திசைவாத (நாடி) மூன்று
காரணமாய் இடைபின்னாய்ச் சுழினை யாகிக்
கலந்துநின்ற வாதபித்தம் சிலேற்(ப) மாகி
மாரணமாய்ச் சடத்துள்ளே (தத்து) வங்கள்
மனம்புத்தி யாங்காரம் சித்தத் தாலே
(வாரணமாய் நடத்துவித்து கர்மத் தாலே)
வந்ததடா நோய்களெல்லாம் மனுடர்க் காமே.
(1)

ஆ. முடிவு

வரிசையாய்ச் சொல்லுகிறேன் கணைக வேது
மந்தமொடு சுழிதிறப்பு வலிக ளேது
பரிசமாம் கரப்பனொடு பறங்கி யேது
பட்சியொடு பறவையதன் தோஷ மேது
தெரிசனமாய் கணங்களிலே வருவ தேது
தீர்க்கமடா சிறுவருக்குத் தேவ ரமுதம்

கரிசனமாய் இந்நூலின் கர்ம தர்மங்
கட்டான மருந்துவகைக் கணக்கு முற்றே.
(301)

அகத்திய நாயனார் கர்ம சூத்திரம் முற்றும்.

இ. பிற்குறிப்பு

962ஆம் (கொல்லம்) வருடம் தை மாதம் 29ஆம் தேதி வியாழக்கிழமையும் தசமியும் ... மாகச் சுசீந்தாத்துப் பண்டாரத்துக்குத் திருவிதாங்கோட்டுத் திருநீலகண்டன் அய்யன் தான் கைப்பட எழுதி முகித்துக் கொடுத்த அகத்தியர் பாடல் கர்ம சூத்திரம்.

3025. மருத்துவ நூல் திரட்டு

1. **நூலகக் குறிப்பு**
   அ. 2266

2. **உள்ளீடு : நூல் விவரம்**
   அ. ....
   ஆ. மருத்துவ நூல் திரட்டு
   இ. மருத்துவம்
   ஈ. செய்யுள்
   அச்சில் ஏறத்தாழ 500 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**
   அ. 233 ஏடு; 466 பக்கம்
   ஆ. நீளம் 40 செ.மீ., அகலம் 3 செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து
   ஊ. 1-17, 22, 23, 26, 80-152, 169, 170, 172, 187, 205, 234-273, 277, 289, 310 ஆகிய ஏடுகள் இல்லை
   62-66, 73-79 ஆகிய ஏடுகள் எழுதப்படாமல் வெள்ளேடுகளாக உள்ளன
   பல ஏடுகள் முறிந்து செல்லரித்த நிலை
   ஏட்டெண் 18ல் நூல் தொடங்குகிறது
   எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

....
....
....
....
சேர்க்கைநாற் பதுமார் பத்து
சேரும்நூற் றறுப தாகும்
வார்க்குழல் முலையி லெண்பான்
வளர்முலைக் கெண்ணை யைந்தாம்.

ஆ. முடிவு

கிராணியது எட்டு மகிழா
குன்மந்தா னெட்டு ....
சுரோணிதமுங் கடுப்பு ரத்தம்
சொல்களியு மதார னியல்பு
....
....ணிசு ளெல்லாம்
ஏகுமே ரோகம் விட்டு
செப்புமுனி யருனசிய லாமே.

(இதற்குமேற் எழுதப்படவில்லை)

5. பிற செய்திகள்

செனன நிதானம், நாடி சாத்திரம், அவத்தைக் குணம், கபால சன்னியின் குணம், சலக்கழிச்சல் சாத்திரம், பவுந்திர விதி, காமாலையின் குணம், மண்டைச்சூலைக் குணம், சத்திர விதி (37 பாடல் முழுமை), உதிர கிரிகை, பாலகிரிகை, 64 சுர குணம், குப்பி சாத்திரம் முதலியனவும், பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூலின் 502-1064 பாடல்களும், பல மருந்துகளின் செய்முறைகளும் இச்சுவடியில் இடம்பெற்றுள்ளன.

3026. சட்டைமுனி நிகண்டு

1. நூலகக் குறிப்பு

அ. 2267

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. சட்டைமுனி
ஆ. சட்டைமுனி நிகண்டு
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 715

3. தோற்றக் கூறுகள்

அ. 222 ஏடு; 444 பக்கம்
ஆ. நீளம் 26 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரிகள்
உ. தெளிவான பெரிய கையெழுத்து
ஊ. மேற்வலப்புறம் சற்றே சிதிலமடைந்த நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியந்த மாகிநின்ற பூரணத்தை நோக்கி
அடுத்துஉன் மனத்தாய் பதத்தைப் போற்றிப்
பாதியந்த மாகிநின்ற உமையாள் சொல்லப்
பாங்கான சின்மயத்தின் கருணை யாலே
ஓதியந்த வாதமென்ற நூலுக் கெல்லாம்
உசரவைத்த நாகமணிக் கிரீடம் போலச்
சாதியந்தக் குணத்தோடு நிகண்டு சொல்லச்
சச்சிதா னந்தவெளிக் காப்புத் தானே.

(1)

ஆ. முடிவு

பாருமே பிரமா(ன)ந் தான்பல மொன்று
நாருமே துத்தத்தின் சத்தே.. மொன்று
நேருமே தங்கம் நீட்டு பணமரை
ஊருமே மூன்று முருக்கி யெடுத்திடே .

(715)

3027. மருந்து செய்முறை

1. நூலகக் குறிப்பு

அ. 2268

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. மருந்து செய்முறை

இ. மருத்துவம்

ஈ. செய்யுளும் உரைநடையும்

அச்சில் ஏறத்தாழ 200 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 123 ஏடு; 246 பக்கம்

ஆ. நீளம் 26 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்

உ. கிறுக்கலான கையெழுத்து

ஊ. சுமாரான நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

குக்கில் லேகியம் : குக்கில் சுத்தி பண்ணும்படி வேப்பம்பட்டை, சிவனார் வேம்பு, வெள்ளருகு, துளப்பாலை, இசங்குசமூலம், தூதுவளை, கண்டங்கத்திரி, ஆடாதோடை, சங்கங்குப்பி வகையொன்றுக்குப் பலம் 10, குக்கில் பலம் 15, சீலையில் கிழியாய்க் கட்டி இந்த .... மருந்தெல்லாம் இடித்துப் புதுப்பானையில் போட்டுத் தண்ணீர் பத்து மரக்கால் விட்டுச் சீலைமண் செய்து பதக்குத் தண்ணீராய் வற்றவிட்டு இறக்கிக் கொண்டு இந்தக் குக்கிலை எடுத்துக் கொண்டு இந்தக் கிஷாயத்தை வடிகட்டிக் கொண்டு திரும்பி ரெண்டு படியாகக் குறுக்கி இதுக்கு மேல் மருந்து கெந்தகம் பாலில் சுத்தி பண்ணிக் கொள்ளவும்....

ஆ. முடிவு

..... கிராணியும் எட்டும் கனத்த அதிசாரம் பன்னிரண்டும் யிவையெல்லாம் நீர்க்கடுப்புடன் உள் காச்சல் உள்ளுருலை ரோகம எலும்புருக்கி ... மெய்தளரும், பித்தம் தொண்ணூறு யிருபத்தெட்டு பித்தம் உட்ண ரோகம்

முந்நூற்று இருபத்தாறும் சீதமுறும் சுரம் எட்டோடு எட்டும் வன்மைசேர் காலெரிப்பு கையெரிப்பு கனத்த முகமெரிப்பு யிவையல்லால் தம்பனையும் நிற்கும்; தாது தளராது; வனம் பிலமுண்டாம்; வளமையுண்டாம்; அன்பில் மாய அர்ப்பபோகம் முழுபோகமாம்; ஆவிதனை உரங்கொடுக்கும், உள்மூலம் பிறமூலமுடன் ....

5. பிற செய்திகள்

இதனுள் சில சோதிடக் குறிப்புக்களும் சில காம சாத்திரச் செய்திகளும் இடம்பெற்றுள்ளன.

3028. அகத்தியர் நிகண்டு 116

1. நூலகக் குறிப்பு

அ. 2269-1

2 உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் நிகண்டு 116

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 115

3. தோற்றக் கூறுகள்

அ. 42 ஏடு; 84 பக்கம்

ஆ. நீளம் 14.5 செ.மீ., அகலம் 4.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 11-13 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காண்க :- தொடர் எண்.2261-4.

ஆ. முடிவு

குணமான குறிகுணங்க ளறியச் சொன்னேன்
கூர்பதிந்த முக்கோண முனையுஞ் சொன்னேன்

கணையான விற்புருவ நடுவுஞ் சொன்னேன்
கலையான அக்கினியின் வடிவுஞ் சொன்னேன்
பிழையான மாதத்துக்கு ஆனி சொன்னேன்
பிங்கலையு மிடகலையும் பலக்கச் சொன்னேன்
அணியான லாடத்தி னாட்டஞ் சொன்னேன்
அங்கென்ற நடுவணையின் முறைசொன் னேனே.
(115)

3029. மருந்து செய்முறை

1. நூலகக் குறிப்பு

அ. *2269-2*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. *மருந்து செய்முறை*

இ. *மருத்துவம்*

ஈ. *உரைநடை*

அச்சில் ஏறத்தாழ 200 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. *171 ஏடு; 342 பக்கம்*

ஆ. *நீளம் 14.5 செ.மீ., அகலம் 4.5 செ.மீ.*

இ. *இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது*

ஈ. *ஒரு பக்கத்திற்கு 9-11 வரிகள்*

உ. *தெளிவான கையெழுத்து*

ஊ. *81-213, 216-219, 223, 224, 226, 230, 242, 254, 275, 301 ஆகிய ஏடுகள் இல்லை*
உள்ளவை நல்லநிலை

எ. *குறை*

4 சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீரகம் பலம் 3 வெள்ளாட்டுக் கோமயத்திலிடித்துப் போட்டுக் காய்ச்சி நாழியாக்கி அந்தக் கிஷாயத்தில் வெடியுப்பு, இந்துப்பு, கல்லுப்பு, ... நவச்சாரம் ¼க்கு, சவுக்காரம் ¼க்கு,

பெரிகாரம் ¼க்கு, வெங்காரம் ¼க்கு, வாளம் ¼க்கு முளைபோக்கி எருமைச் சாணியில் ஒரு நாளூறப் போட்டு மறுநாள் அலம்பி யுலர்த்தி வறுத்து மேல்ப்படி கிஷாயத்திலரைத்துக் கலக்கி மெழுகு பருவத்திலிறக்கி வைத்துக்கொண்டு சுண்டைக் காயளவு சீரகக் கிஷாயத்தில் குடுக்க .... யிப்படி மூன்று நாள் குடுக்கவும். இதில் தீரும் வியாதி பாண்டு, சோகை, பீலிகை, கவுசிகை, குன்மம், நீராம்பல், திரைப்புழுக்கடி தீரும். வியாதி கண்டு கொடுக்கவும். சுபம்.

ஆ. முடிவு

...... தேவதாரம், அர்த்த சந்தனம், அதிவிடையம், சிறுமூலம், சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு வகைக்குப் பலம் 3 பொடியாக்கி மேல்ப்படி மருந்திலிட்டு விரவிப் பருவத்திலிறக்கிப் பாக்களவு ரெண்டு நேரமும் 40 நாள் கொள்ளவும். பித்தம், ரத்த பித்தம், திரமாதி, செங்கமாரி, பிரமேகம், மூத்திரக் கிரிச்சனம், உள்ளுருக்கி, வெள்ளுடைப்பு, காந்தல், எரிவு, வரட்சை இது முதலாகிய வியாதியெல்லாந் தீரும்.

3030. தோசம் ஏழின் குணம்

1. **நூலகக் குறிப்பு**

   அ. 2270-1

2. **உள்ளீடு : நூல் விவரம்**

   அ. ....

   ஆ. தோசம் ஏழின் குணம்

   இ. மருத்துவம்

   ஈ. செய்யுள் 9

3. **தோற்றக் கூறுகள்**

   அ. 1 ஏடு; 2 பக்கம்

   ஆ. நீளம் 31 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. கிறுக்கலான கையெழுத்து
ஊ. நல்லநிலை
ஏட்டெண் 7ல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நிரபயித் தியமாந் தோசம்
நிரம்பிய தருண தோசம்
சரசமா சங்க தோசஞ்
சாத்திய விஷம தோசஞ்
சிரவிஷ சீத தோசஞ்
சிவ்வுக பித்த தோசம்
பரவிய கிட்டிண் சிவ்வுத்
தோசமும் பகராங் காணே.

(1)

ஆ. முடிவு

புதுமையாய் எழுந்த தோசம்
புகன்றதில் பைத்ய தோசம்
இதமுறு தருண தோசம்
இவைதீரும்; சங்கை தோசம்
கதுவுநீ சீத தோசம்
கட்டசாத் தியம்ஓர் மூன்றும்
பதியகல் விக்கும் என்று
பகர்ந்தனர் ஆயுள் நூலே.

(9)

3031. மணிக்கிடைக் கயறு சூத்திரம்

1. நூலகக் குறிப்பு

அ. 2270-2

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....
ஆ. மணிக்கிடைக் கயறு சூத்திரம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 17

3. **தோற்றக் கூறுகள்**

அ. 3 ஏடு; 6 பக்கம்
ஆ. நீளம் 31 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. கிறுக்கலான கையெழுத்து
ஊ. மிகவும் செல்லரித்த நிலை
ஏட்டெண் 9ல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

கமலக்கை மணியிடைக் கயற்றுச் சூத்திரம்
விமலனை நோக்கியே வேத மாமுனி
திமிலமாம் பிணியது சேரச் செப்பிடில்
விமலமாங் குறுமுனி கிளர்ந்து ரைத்ததே. (1)

ஆ. முடிவு

நண்ணிய பதினொன்று மொன்றுங் கண்டக்கால்
எண்ணிய மருந்து மியலு மில்லையே;
அண்ணுதன் விதித்த விதியு மாகையால்
தண்ணன்று சாவது தடுப்ப தல்லையே (17)

குருபாத முன்நிற்க.

5. **பிற செய்திகள்**

தொடர் எண்.1651-2ல் வால்மீகர் சூத்திரம் என்னும் மணிக்கடை முப்பது சூத்திரம் உள்ளது. அதன் தொடக்கப் பாடலும் இதுவே.

3032. குட்ட நிதானம்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2270-3

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. குட்ட நிதானம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 27

3. **தோற்றக் கூறுகள்**

அ. 4 ஏடு; 8 பக்கம்

ஆ. நீளம் 31 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. கிறுக்கலான கையெழுத்து

ஊ. மிகவும் செல்லரித்த நிலை
ஏட்டெண் 12ல் நூல் தொடங்குகிறது

எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

சீரகச்சர் வத்தை யும்ரட்
சிக்கப்பட் சிக்க வல்ல
காரண யேக னான
கடவுளைப் போற்றி செய்து
பார்தனில் நரர்க்கு வந்த
பதினெட்டுக் குட்டத் துக்கும்
பேர்குணம் வடநூல் கண்டு
பிரித்துநா னறிவித் தேனே.

(1)

ஆ. முடிவு

.... பத்த
ஒருபொருள் தன்னைப் போற்றி
ஈராறோ டாறு ரோகம்
எய்திய குணங்கள் சொன்ன

பாரோடு குருப ரன்தான்
சுற்றமும் பக்கத் தோரும்
சீராக வாழ்க வென்று
செகந்தனில் புகல்வர் முன்னோர்.

(27)

3033. வலி ஐந்தின் குணம்

1. **நூலகக் குறிப்பு**

அ. *2270-4*

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. வலி ஐந்தின் குணம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 15

3. **தோற்றக் கூறுகள்**

அ. 3 ஏடு; 6 பக்கம்

ஆ. நீளம் 31 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8,9 வரிகள்

உ. கிறுக்கலான கையெழுத்து

ஊ. மிகவும் செல்லரித்த நிலை
ஏட்டெண் 15ல் நூல் தொடங்குகிறது

எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

அண்ணறுமை யீன்றெடுத்த அன்ப ரான
அஞ்சுகரத் துடையானி னருள்தாள் போற்றி
மண்ணுலகில் பரமுனிவர் மறையா லஞ்சு
வலிதனக்கு வருங்குணங்கள் சாத்தி யங்கள்
நண்ணுதலாய் ஆராய்ந்து தேர்ந்து நன்றாய்
நானிலத்தில் மானிடர்தாம் நயந்து நல்க

விண்ணுலகில் வலியதனால் மேவா வண்ணம்
விளம்பினா ரருந்தமிழின் விளங்கு நூலே.

(1)

ஆ. முடிவு

கண்டாய் சிலேற்பன மோரய்ந்தும்
கருது வாத முடன்கலந்து
குன்றா தக்கினி மந்தமுடன்
கூடிக் கலந்து முசல்வலியாம்
விண்டார் கடிகை மூவேழில்
மீளு மீளுந் தப்பாது
நின்றே சிலேற்பன மதிகமுற்றால்
நிற்குங் கடிகை யறுபதிலே.

(15)

3034. வாத நிதானம்

1. நூலகக் குறிப்பு

அ. 2270-5

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. வாத நிதானம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 92

3. தோற்றக் கூறுகள்

அ. 13 ஏடு; 26 பக்கம்
ஆ. நீளம் 31 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. கிறுக்கலான கையெழுத்து
ஊ. மிகவும் செல்லரித்த நிலை
ஏட்டெண் 17ல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

ஓதிய துவரக் காளான்
　　உறுபண்டம் பொசிக்கை யாலுங்
கோதறு சூட்ச மான
　　பதார்த்தங்கள் கொள்கை யாலும்
தாதுக்கள் கெட்டு நாடி
　　தளர்ந்ததில் வாயு சேர்ந்து
போதிறு பத்தி ரங்கள்
　　பொருந்தியே வாத மாமே.

(1)

ஆ. முடிவு

கோரை வாத குணம்
கோரை வாதக் குணங்கேளீர்
　　...... நொந்து நடுவெழும்பில்
தூரை விட்டு நீங்காது
　　துன்பத் துடனே நெளித்திருக்கும்
ஆரு வந்தா றுமிவாகி
　　இருக்க நடக்க வொட்டாது
கோரை யாயிது ராமருந்து
　　குடித்திடவே தீரு மிளங்கொடியே.

(92)

வாத நிதானம் முற்றும்.

5. **பிற செய்திகள்**

இந்நூலின் முதலேட்டில் எண்பது வகை வாதங்களின் பெயர்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. பாடலெண்கள் தவறாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

3035. உதர கிரிகை

1. **நூலகக் குறிப்பு**

அ. 2270-6

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. உதர கிரிகை

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 166

3. தோற்றக் கூறுகள்

அ. 21 ஏடு; 42 பக்கம்

ஆ. நீளம் 31 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8-10 வரிகள்

உ. கிறுக்கலான கையெழுத்து

ஊ. நல்லநிலை

ஏட்டெண் 31ல் நூல் தொடங்குகிறது

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியாங் கடவு ளானை
அடியினைத் தொழுது போற்றித்
தீதுறு வியாதி தன்னைத்
தெளிவுட னறிய வேண்டிக்
கோதிலா முனிவன் கூறுங்
குணமிகு பாடல் தன்னை
நீதிசேர் படியின் மீதே
நிகழ்த்தினார் முன்னோர் தாமே.

(1)

ஆ. முடிவு

தாகிக்கும் சிறுகக் காயும்
சடக்கென வீங்கும் வற்றும்
தேகத்தின் உறுப்ப தெல்லாம்
சேரவே உளைந்து குத்தும்
வாகுற்ற உதரம் விம்மும்

மலமிடும் அடைத்துக் கொள்ளும்
பாகொத்த மொழிநல் லாளே
பகர்விஷ மாந்தம் ஆமே.

(166)

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

3036. மருந்து செய்முறை

1. நூலகக் குறிப்பு

அ. 2270-7

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. மருந்து செய்முறை

இ. மருத்துவம்

ஈ. செய்யுள். அச்சில் ஏறத்தாழ 50 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 18 ஏடு; 36 பக்கம்

ஆ. நீளம் 31 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்

உ. கிறுக்கலான கையெழுத்து

ஊ. நல்லநிலை
ஏட்டெண் 54ல் நூல் தொடங்குகிறது

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பின்னுமொரு சட்டிகொண்டு பேணியே தான்மூடி
மன்னுபுகழ் சீலைமண் ணேழுசெய்து - பின்னும்நாள்
ஆறு பொழுது அடவாகத் தீயெரித்து
நீராக வெந்ததற்பின் நீகேளாய் - பேறுடனே

ஆ. முடிவு

தீரும் கிராணிதன்னில் சேர்கழிச்ச லும்கடுப்பும்
மாறும் வயிற்றுளைவும் மாறிப்போம் - பேறுடனே
செய்தக்கால் இந்நோய்கள் (சீக்கிரமாய்) மாறுமென்று
வையகத்தோ ருக்குரைத்த வாறு.

(74)

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

3037. வாகட தத்துவம்

1. நூலகக் குறிப்பு

அ. 2270-8

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. வாகட தத்துவம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 241

3. தோற்றக் கூறுகள்

அ. 26 ஏடு; 52 பக்கம்
ஆ. நீளம் 31 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. கிறுக்கலான கையெழுத்து
ஊ. மிகவும் மோசமான நிலை
79, 83, 91 ஆகிய ஏடுகள் இல்லை
ஏட்டெண் 72ல் நூல் தொடங்குகிறது
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காணுறு கண்மூன் றாறுங்
காண்பவர் காணு மாகப்

பூணுறு கிளறி மேனி
புகலுதற்கே பாதந் தாமோ
நாணுறுந் தசைக ளாதி
நரம்பொடு நிறுத்துக் கட்டுந்
தோணுறு மெய்யும் பொய்யுந்
துலங்கவே வெளுத்து ராமால்.

(2)

ஆ. முடிவு

சொன்னதோர் தயில வர்க்கம்
தூதுவர் வர்க்கம் அல்லால்
அன்னபூ வட்டை கொம்பு
அரியசத் திரம்தன் னோடு
இன்னமும் கேளாய் ரெட்டை
இதுமுதல் நயன ரோகம்
முன்னமே பறக்கும் என்று
மொழிந்தனர் முனிவர் தாமே.

(241)

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

3038. பிள்ளை தோஷம்

1. நூலகக் குறிப்பு

அ. 2270-9

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. பிள்ளை தோஷம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 81

3. தோற்றக் கூறுகள்

அ. 13 ஏடு; 26 பக்கம்
ஆ. நீளம் 31 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. கிறுக்கலான கையெழுத்து

ஊ. மிகவும் மோசமான நிலை

ஏட்டெண் 101ல் நூல் தொடங்குகிறது

எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

கரைமிடற் கமலக் கண்ணன்
கழலினைப் போற்றி செய்யும்
பிரைநுதல் இந்தப் பேதை
பெண்கொடி உமையாள் பெற்ற
குறையிலாக் குமரன் சீஷன்
குறுமுனி குழந்தை தோஷம்
பறவைகள் பட்சி புள்ளு
பலப்பல குணங்கள் சொல்வார்.

(1)

ஆ. முடிவு

வாரணக் கன்று தன்னை
வண்மையாய்ப் பூசை பண்ணி
ஏரணி தெய்வத் தானம்
இலங்கவே சிறப்புச் செய்து
காரண ....
அன்னமே பொசிக்கப் பண்ணி
பார்தனில் பாலன் தோஷம்
பறந்திடு மென்பார் முன்னோர்.

(81)

3039. சாக்கிர அவத்தை

1. **நூலகக் குறிப்பு**

அ. 2270-10

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. சாக்கிர அவத்தை

இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 10

3. **தோற்றக் கூறுகள்**

அ. 2 ஏடு; 4 பக்கம்
ஆ. நீளம் 31 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
ஏட்டெண் 114ல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

சாக்கரந் தன்னில் சுவாசம்
சரியொக்கில் பிறந்தி ருக்கும்
வாக்கினால் பெரியோர் சொன்னார்
வந்திடு மொன்றாஞ் சுவாசம்
மார்க்கமாய்ப் பிறந்தி ருக்கும்
வலிமையொன் றில்லா தாகும்
தூக்கமுஞ் சௌக்ய மாகச்
சுழன்றிடில் துரியா தீதம்.

(1)

ஆ. முடிவு

பொன்முகங் கோணிக் காட்டும்
பொசிந்திடும் நாருகி மேனி
கன்னிய பண்டம் போலே
நேர்ந்திடும் தலைகால் நோவாம்
மன்னுசி லேற்பன நாடி
வாங்கிடில் மரண மென்றே
சொன்னவை யுண்மை பாரு
மென்னவே முனிவர் சொன்னார்.

(10)

சாக்கரக்கவி முற்றும்.

3040. மரணக்குறி

1. **நூலகக் குறிப்பு**

அ. 2270-11

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. மரணக்குறி

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 12

3. **தோற்றக் கூறுகள்**

அ. 3 ஏடு; 6 பக்கம்

ஆ. நீளம் 31 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

ஏட்டெண் 115ல் நூல் தொடங்குகிறது

எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

நாடிக்கு நாடி மிகப்பதறும்
நாவும் பல்லும் வரண்டிருக்கும்
வாடிடும் விழிகள் ரெண்டும்
வானோக்கி விழியே பார்க்கும்
தேடியே சிலேற்ப ணங்கள்
தொண்டையில் நின்று லாவும்
வாடிடு மிதுகண் டாக்கால்
மரணமென் றுரைக்க லாமே.

(1)

ஆ. முடிவு

தேனெனத் தெரித்துச் சற்றே
தெரிகுணஞ் செய்யு மாகில்

மாளவே வருண வாய்வு
வந்திடுஞ் சன்னி யுண்டாம்
மீளவே தெய்வ முன்னாள்
விதிப்படி வந்த தென்றும்
மாளுவார் திண்ண மென்றும்
மதியினால் அறிந்து கொள்ளே.

755743

(12)

3041. கருவிச் சாத்திரம்

1. நூலகக் குறிப்பு

அ. 2270-12

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. கருவிச் சாத்திரம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 39

3. தோற்றக் கூறுகள்

அ. 7 ஏடு; 14 பக்கம்
ஆ. நீளம் 31 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
ஏட்டெண் 118ல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

எண்ணுங் கருவி யிருபத்து றன்றுலகில்
நண்ணிய வாகடத்தை நாடினார் - கண்ணித்
தமிழதனால் யான்வகுக்க முக்கட் சடிலக்
கனியுதவு கற்பகமே காப்பு.

ஆ. முடிவு

வட்டினுருக்கு முக்கழஞ்சில்
வகுத்த வாறு விரல்கொண்டு
தட்டுந் தகடாய்க் காம்பினது
சதுரத் தலையில் துளையுண்டாய்க்
கொட்டி யிலையின் வடிவுகொண்டு
கொண்டை தாரை முனைமழுங்கித்
தொட்ட மருந்து வழித்தெடுக்குந்
துடுப்பைக் கசமு மெனச்சொல்வாம்.

(39)

5. **பிற செய்திகள்**

தொடர் எண்.2266ல் சத்திரவிதி என்னும் நூல் (37 பாடல்கள்) முழுமையாக உள்ளது.

3042. நோய்க்கு மருந்து

1. **நூலகக் குறிப்பு**

அ. 2270-13

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. நோய்க்கு மருந்து

இ. மருத்துவம்

ஈ. செய்யுளும் உரைநடையும்
அச்சில் ஏறத்தாழ 60 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

அ. 27 ஏடு; 54 பக்கம்

ஆ. நீளம் 31 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7,8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை
ஏட்டெண் 125ல் நூல் தொடங்குகிறது

எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

செரியா மந்தந் தீரையினால்
சிரசில் பித்தம் வாய்வதனால்
அரிய குடரின் ஆமத்தா
லடரும் பீலிகை பிரளியினால்
உரிய மாந்தஞ் சில்பகையா
றுறுமே சத்தில் சுரோணிதத்தில்
அரிய மேனி முனிவோர்கள்
கண்ட சத்தி லஞ்சாமே.

(1)

ஆ. முடிவு

எண்ணெயின் தலையி னோடும்
ஈரமாய் நிற்கும் போதும்
உண்ணுநல் லுணவி னோடும்
மூணின்றிப் பசியி னோடும்
பண்ணுறு நாடி பார்க்கில்
பலித்திடா தென்று சொல்லே.

(4)

(இப்பாடலில் மூன்றடிகளே உள்ளன.
இதற்குமேல் எழுதப்படவில்லை)

3043. சூலை நிதானம்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2271-1

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. *சூலை நிதானம்*

இ. *மருத்துவம்*

ஈ. *செய்யுள் 142*

3. **தோற்றக் கூறுகள்**

அ. 20 ஏடு; 40 பக்கம்

ஆ. நீளம் 48 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
நரம்பு பிரிக்கப்படாத ஏடு
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து
ஊ. முதலேடு மட்டும் முறிந்துள்ளது
மற்றவை நல்லநிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியான் வகுத்து நால்வர்க்
  கருளிச்செய் யாயுள் வேதத்
தோதிய சூலையீ ரொன்பான்
  உறுபெயர் குணங்கள் தன்னை
தீதுறு (சாத்தி யங்கள்)
  அசாத்தி யஞ்செய் மருந்துங்
கோதையே யிவைக ளெல்லாங்
  குறித்துநீ ஆய்ந்து கொள்ளே.

(1)

ஆ. முடிவு

கொடுநீ கரண்டி மண்டலமும்
  கூறும் மண்டைச் சூலையுடன்
இடராம் குன்மம் குடல்வாய்வு
  இரைக்கும் மாந்த வாய்வினுடன்
கொடிதாம் சலம்ப்ர மேகமதால்
  கூறும் தொந்தச் சூலைஎலாம்
பொடியாம் பக்கச் சூலையிவை
  போகும் என்று புகன்றனரே.

(142)

3044. சூலை நிதானம்

நூலகக் குறிப்பு

அ. 2271-2

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. சூலை நிதானம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 27

3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு; 10 பக்கம்

ஆ. நீளம் 48 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 5,6 வரிகள்

உ. சுமாரான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காண்க :- தொடர் எண்.2271-1.

ஆ. முடிவு

இவையிலிந் திரியம் வீழில்
சூலையும் சாத்ய மென்னச்
சவையுறச் சொல்வை நீயும்
சாத்தியச் சூலைக் கெல்லாம்
கவையுறக் குணத்தைக் கண்டு
கட்டசாத் தியத்தை நீக்கி
அவையுற மருந்து தன்னை
யறியநீ கேட்டி டாயே.

(27)

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

3045. வாத நிதானம்

1. நூலகக் குறிப்பு

அ. 2271-3

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. வாத நிதானம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 105

3. தோற்றக் கூறுகள்

அ. 17 ஏடு; 34 பக்கம்

ஆ. நீளம் 48 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
நரம்பு பிரிக்கப்படாத ஏடு

ஈ. ஒரு பக்கத்திற்கு 5,6 வரிகள்

உ. சுமாரான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காண்க :- தொடர் எண்.2270-5.

ஆ. முடிவு

மன்றிடு உய்தி மந்தம்
எய்திடுஞ் சிரசில் பித்தம்
கழித்திடு மன்னங் கொள்ளார்
கனத்துறத் தலைவ லிக்குஞ்
சுற்றிடுங் குழல்நல் மாதே
தோன்றிய குணங்க ளெல்லாம்
முற்றிய வாதஞ் செய்யும்
இதுகுணம் அறிந்தி டீரே.

(105)

வாத நிதானம் முற்றும்.

3046. வால்மீகர் தீப சூத்திரம்

1 நூலகக் குறிப்பு

அ. 2271-4

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. வால்மீகர்

ஆ. வால்மீகர் தீப சூத்திரம்

இ. சோதிடம்

ஈ. செய்யுள் 11

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 6 பக்கம்

ஆ. நீளம் 48 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
நரம்பு பிரிக்கப்படாத ஏடு

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. சற்றே செல்லரித்த நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஏத்திய தீபந் தன்னை
  ஏத்தியே முகத்தில் காணச்
சூத்திரந் தன்னைச் சொல்வார்
  சோதியை நாவில் வைத்து
நாத்திசை அறிய நோவும்
  நன்மையாய் பிழைக்கு மாறும்
மாத்திரை யின்ன தென்றும்
  வகுத்தவான் மீகர் தாமே.

(1)

ஆ. முடிவு

ஏத்திய தீபந் தன்னில்
  எரிசுடர் முனையே போலத்
தோற்றிடும் விளக்கை நோக்கிச்
  சொல்பவர் பயண மாவார்;
மாத்திரை யுயிர்க லங்கி
  வந்திடுந் திங்க ளொன்றில்

நாத்திக உலகுள் ளோர்க்கும்
நலம்பெற உரைத்தார் ஈசன்.

(11)

தீப சூத்திரம் முற்றும்.

3047. சுர நிதானம்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2271-5

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. சுர நிதானம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள்

அச்சில் ஏறத்தாழ 20 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

அ. 9 ஏடு; 18 பக்கம்

ஆ. நீளம் 48 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
நரம்பு பிரிக்கப்படாத ஏடு

ஈ. ஒரு பக்கத்திற்கு 4,5 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. சற்றே முறிந்த நிலை

எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

சுருதி நான்முகத் தோனருள் தோன்றலால்
பொருவி லாத பொதிகைப் பொருப்பினான்
உரிய ஆயுள் மறைதெரிந் தோதிய
சுரநி தானம் புவிமிசைச் சொல்லுவாம்.

ஆ. முடிவு

ஏத்த கொன்றைப் பழத்துடனே
ஏக ரோணி முந்திரிகை
பேத்தக் காசு பர்ப்படகம்
பெருகும் முன்னை கலங்கொம்பு
சேத்த மரத்திரை யிருகழஞ்சு
சேரக் கங்கை யெட்டொன்றாய்க்
காத்த குடிநிர் கண்டிட்டு
....

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

3048. நயன விதி

1. **நூலகக் குறிப்பு**
   அ. 2271-6

2. **உள்ளீடு : நூல் விவரம்**
   அ. ....
   ஆ. நயன விதி
   இ. மருத்துவம்
   ஈ. செய்யுள் 103

3. **தோற்றக் கூறுகள்**
   அ. 16 ஏடு; 32 பக்கம்
   ஆ. நீளம் 48 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   நரம்பு பிரிக்கப்படாத ஏடு
   ஈ. ஒரு பக்கத்திற்கு 5,6 வரிகள்
   உ. சுமாரான கையெழுத்து
   ஊ. மிகச் சிதைந்த நிலை
   எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**
   அ. தொடக்கம்; ஆ. முடிவு

ஏடுகளின் சிதைவால் எடுத்தெழுத இயலா நிலையில் உள்ளது.

3049. திருமந்திரத் திரட்டு

1. **நூலகக் குறிப்பு**

அ. 2272-1

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. திருமூலர்?

ஆ. திருமந்திரத் திரட்டு

இ. தத்துவம்

ஈ. செய்யுள் 425

3. **தோற்றக் கூறுகள்**

அ. 46 ஏடு; 92 பக்கம்

ஆ. நீளம் 28 செ.மீ., அகலம் 4 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 11,12 வரிகள்

உ. தெளிவான சிறிய கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

உன்னிய கற்பக் குழியாம் வெளியிலே
பன்னிய நாதம் பகர்ந்த பிருதிவி
வன்னியும் வாயுவு மாயுறு சுக்கிலம்
மன்னிச் சமனாய் வழங்கு முதகமே.

(1)

ஆ. முடிவு

வெண்ணெய் கடைந்தேன் விரைந்தெழு லைட்சத்தில்
எண்ணெயைப் போலே யிதைய முருக்கினேன்
கண்ணைத் திறந்த கடுஞான வேதாந்தி
எண்ணைக்கும் பார்க்கலாம் இந்தநூல் முற்றுமே.

(425)

அஞ்சுநூற்றுத் திரட்டு முற்றும்.

5. **பிற செய்திகள்**

இதனையடுத்து இரண்டு ஏடுகளில் வேறு சில திருமந்திரப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இந்நூலுக்கு முன் 'ஐந்து கரத்தனை' என்னும் கடவுள் வணக்கப் பாடல் இடம்பெற்றுள்ளது.

3050. தட்சிணாமூர்த்தி வகார சூத்திரம்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2272-2

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. தட்சிணாமூர்த்தி
ஆ. தட்சிணாமூர்த்தி வகார சூத்திரம் 100
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 100

3. **தோற்றக் கூறுகள்**

அ. 14 ஏடு; 28 பக்கம்
ஆ. நீளம் 28 செ.மீ., அகலம் 4 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 11 வரிகள்
உ. தெளிவான சிறிய கையெழுத்து
ஊ. நல்லநிலை
ஏட்டெண் 48ல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

பூரணமா நடுக்கமல மீதே .....
புகழ்பெரிய மூலகண பதியே காப்பு
காரணமா யெனையாண்ட யானை போற்றிக்
கட்டாக வாதத்தில் லட்சங் காப்பு
தாரணமாய்ப் படுபாதி குறுக்கிச் சொன்னேன்
சார்வான ஆயிரத்திரு நூறு சூத்திரம்

வாரணமாய்க் குறுக்கிவைத்த சூத்திரம் நூறு
வகைதோன்றக் கருக்குருவும் வகுத்தேன் பாரே.
(1)

ஆ. முடிவு

மனம்வேறு பூரணமே யென்று பூண்டு
வாழ்வதெல்லா மற்றொன்றுஞ் செய்யா தய்யா
மனம்வேறு தட்டுண்டா லெல்லாம் போச்சு
மாய்கையுற்றுத் திரிந்தலைவார் மாள்வா ரய்யா
மனம்வேறு சாதகமாய்ச் சாத்திரமும் பார்த்து
மனம்பெலக்கக் குருவினுடன் வணங்கி நின்றால்
மனம்வேறு வாராது சித்தி முத்தி
வாய்க்குமே கருமசூத் திரம்நூறு முற்றே.
(100)

தட்சிணாமூர்த்தி யருளிய வகார சூத்திரம் முற்றும்.

3051. சுந்தரானந்தர் கேசரி 56

1. நூலகக் குறிப்பு

அ. 2272-3

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. சுந்தரானந்தர்
ஆ. சுந்தரானந்தர் கேசரி 56
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 56

3. தோற்றக் கூறுகள்

அ. 10 ஏடு; 20 பக்கம்
ஆ. நீளம் 28 செ.மீ., அகலம் 4 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 11 வரிகள்
உ. தெளிவான சிறிய கையெழுத்து
ஊ. நல்லநிலை
ஏட்டெண் 95ல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

ஆதிபரா பரையான மூல நாயன்
ஆறுமுக வன்பதத்தை அன்பாய்ப் போற்றி
வீதிதனில் வீடதுவே நின்ற சோதி
விண்ணுக்குள் சரசுபதியாள் பாதம் போற்றிப்
பாதிபிறை வீடதிலே அமர்ந்த மால்தன்
பாரிலெட்சு மிப்பெண்தாய் பாதம் போற்றிச்
சோதியாய் மாய்கையென்ற கேசரியே நாவிற்
சொல்லுவேன் கணபதியின் பாதங் காப்பே.

(1)

ஆ. முடிவு

வீசிறேன் பத்தியந்தான் புளியா காது
விதமான உப்பாகா மோரு மாகா
வாசியே பூசணிக்காய் உளுந்து மாகா
அரைக்கீரை வாழைக்காய் கடுகுவாடை யாகா
மாசிறேன் மைதுனங்கள் கிட்ட வாகா
மக்களே மாங்கிஷங்கள் மார்க்க மாகா
ஏசினேன் செம்பிலியின் வருகி யாகா
இவைதள்ளிப் பத்தியங்க ளிதமாக் கொள்ளே.

(56)

சுந்தரானந்தமூர்த்தி கேசரி ஐம்பத்தாறு முற்றும்.

3052. சுந்தரானந்தர் அதிசயம் 36

1. **நூலகக் குறிப்பு**

அ. 2272-4

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. சுந்தரானந்தர்
ஆ. சுந்தரானந்தர் அதிசய நூல் 36
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 41

3. **தோற்றக் கூறுகள்**

அ. 10 ஏடு; 20 பக்கம்

ஆ. நீளம் 28 செ.மீ., அகலம் 4 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 11 வரிகள்

உ. தெளிவான சிறிய கையெழுத்து

ஊ. நல்லநிலை

ஏட்டெண் 105ல் நூல் தொடங்குகிறது

எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

சீரான உமைதேவி பாதம் போற்றிச்
செகமகிழுஞ் சுந்தரனார் புவியோர் மெச்சப்
பேரான அதிசயநூல் முப்பத் தாறே
பிரியமுடன் பாடுதற்குக் குருவை போற்றித்
தாரான பச்சியுட கூட்டில் வேர்கள்
தனையறிந்து தொழில்வகைகள் தானே சொல்லக்
காரான முகனாணை உமையா ளாணை
கருமுறைக ளிதுபோலு மில்லை பாரே.

(1)

ஆ. முடிவு

முத்தி பிறந்தது முப்பால் வெளியிலே
சத்தி பிறந்தது சற்குரு பாதத்தில்
பத்தி பிறந்தது பராபர மானது
சித்தி பிறந்தது சிறுவாலை முற்றியே.

(41)

5. **பிற செய்திகள்**

இதனையடுத்து மூன்று ஏடுகளில் திருமந்திரப் பாடல்கள் சில எழுதப்பட்டுள்ளன.

3053. போகர் வாலை பூசாவிதி

நூலகக் குறிப்பு

அ. 2272-5

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. போகர்
ஆ. போகர் வாலை பூசாவிதி
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள் 13

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 6 பக்கம்
ஆ. நீளம் 28 செ.மீ., அகலம் 4 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 10,11 வரிகள்
உ. தெளிவான சிறிய கையெழுத்து
ஊ. நல்லநிலை
ஏட்டெண் 118ல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பாரப்பா வாலைதன்னைத் தியானஞ் செய்யப்
பாங்கான நவகோண மிட்டுச் சூழச்
சேரப்பா இருவளையம் வாசல் நாலும்
சிறப்பாக ரீங்கார மிட்டு நன்றாய்க்
காரப்பா கீழ்வாசல் கணபதியுங் கந்தன்
கருணையுள்ள செயவீர வாகு தேவர்
ஆரப்பா அறைகளிலே கிழக்கே வைத்து
அகாரமுடன் உகாரஞ்சவ் வகாரம் போடே

(1)

ஆ. முடிவு

கூடியங்கே யவரவர்க் கண்டு பேசிக்
கூசாம லனவரதங் குமுறி யாடித்
தேடிலெங்கு மிந்தமுறை கிட்டா தப்பா
தேவிமுதல் சீவனங்கே திருநடனஞ் செய்வார்
நாடிநின்று வாடாதே யென்தாய் பூசை
நல்லவர்க்கு எய்துமல்லாற் கர்மிக் கில்லை

பாடியிந்தப் பதின்மூன்று பாட்டுக் குள்ளே
பரைபூசை சிவபூசை பணிந்தி டாயே.

(13)

பூசாவிதி முற்றும்.

3054. அகத்தியர் சரக்கு வைப்பு

1. **நூலகக் குறிப்பு**

அ. 2272-6

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் சரக்கு வைப்பு

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 50

3. **தோற்றக் கூறுகள்**

அ. 10 ஏடு; 20 பக்கம்

ஆ. நீளம் 28 செ.மீ., அகலம் 4 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 11 வரிகள்

உ. தெளிவான சிறிய கையெழுத்து

ஊ. நல்லநிலை

ஏட்டெண் 121ல் நூல் தொடங்குகிறது

எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

பூரணமாய் வந்தசர சோதி பாதம்
புகழான வாக்குடைய நிருவாணி பாதங்
காரணமாய் வந்ததொரு ரிஷிகள் பாதங்
கயிலாசத் திருந்தருளுங் கடவுள் பாதம்
ஆரணமாய்ப் பாங்கில்வைத்த சரக்கின் போக்கு
அய்யாறி ரண்டையுந்தான் குறுக்கிச் சொல்வேன்

வாரணமா முகத்தோனை இறைஞ்சி நித்தம்
வணங்கியே ஐம்பதுக்குள் வகுக்கின் றேனே.

(1)

ஆ. முடிவு

அஞ்சான இருநூற்று எழுபத்தோர் மூலி
அரிதான பூரணமும் அகண்ட வீதி
நெஞ்சான ஞானமொரு நூறுஞ் சொன்னேன்
நேரப்பா இத்தனையும் அறிந்து பாரு
செஞ்சான மலர்த்தாளின் சிவனைப் போற்றிச்
சிவகாமித் தாய்ப்பதத்தைச் சிறந்து போற்றி
மஞ்சாருங் குழல்வள்ளி மணாளன் பாதம்
வணங்கியே ஐம்பதுஞ்சொல் வரிசை முற்றே.

(50)

அகத்தியர் ஐம்பது சூத்திரம் முற்றும்.

இ. பிற்குறிப்பு

1005ஆம் (கொல்லம்) ஆண்டு ஐப்பசி மாதம் எழுதினது ஆறுமுகம்.

3055. மச்சமுனி 800

1. **நூலகக் குறிப்பு**
   அ. 2272-7

2. **உள்ளீடு : நூல் விவரம்**
   அ. மச்சமுனி
   ஆ. மச்சமுனி 800
   இ. மருத்துவம்
   ஈ. செய்யுள் 470

3. **தோற்றக் கூறுகள்**
   அ. 78 ஏடு; 156 பக்கம்
   ஆ. நீளம் 28 செ.மீ., அகலம் 4 செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 11 வரிகள்

உ. தெளிவான சிறிய கையெழுத்து

ஊ. நல்லநிலை

ஏட்டெண் 130ல் நூல் தொடங்குகிறது

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியந்த வேதவித்தா ரத்தை யெந்தன்
ஆதிகுரு வென்றபொருள் படிநாக் கீசர்
சோதிபர வெளியான சொரூபா னந்தர்
சூட்சசட தாரபீசந் துரியா தீதம்
ஓதுபிர ணவசிரீங் கார பீடம்
உன்மனைக்கு வெகுதுலர யாகா ரத்தே
பாதிசரா சரரூப விந்து நாதம்
பரப்பிரம மூலகணே சன்காப் பாமே.

(1)

ஆ. முடிவு

செலுத்திய வீரபத்திர காலா புரீ
நிதக்கன்ம கரவேள்வி யளித்த வீரர்
வலுத்திய பரப்பிரம மகாதே வர்க்கு
வரபுத்தி ராதுஷ்ட்ட தேவதைய ளொக்கச்
சொலுத்தியாங் காரத்தாண் டவரா யாச
மற்றமே லானவீர பத்திரா பரந்து
கொலுத்தகுதி பாடிக்குப் பண்டெ டுத்த
கோலம்போல் பால மிட்டு ராரா.

(470)

5. பிற செய்திகள்

இந்நூல் மச்சமுனி பெருநூல் எனவும் வழங்குகிறது. சுவடியில் ஆங்காங்குத் தெலுங்குச் சொற்கள் விரவி வருகின்றன.

3056. தன்வந்திரி நாடி சாத்திரம்

1. நூலகக் குறிப்பு

அ. *2273-1*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. தன்வந்திரி

ஆ. தன்வந்திரி நாடி சாத்திரம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 57

3. தோற்றக் கூறுகள்

அ. 10 ஏடு; 20 பக்கம்

ஆ. நீளம் 36 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

செய்ய மாதுக் கிறைவன்முன் செப்பிய
துய்ய வாயுள் மறையைத் துலக்கிய
மெய்யாய் மாந்தர்க் கோதிய விற்பொருள்
அய்யன்தன் வந்திரர் கருணை ஓதுவாம். *(1)*

ஆ. முடிவு

எண்ணெயாய்த் தலையி னோடும்
ஈரமாய் நிற்கும் போதும்
உண்ணுநல் லுணவி னோடும்
உற்றவெண் பசியி னோடுந்
திண்ணமாய் நடக்கும் போதுஞ்
சிற்றின்பஞ் செய்த போதும்

பண்ணுற நாடி பார்க்கிற்
பலித்திடா தென்று செப்பே.

(57)

(இது 58ம் பாடலாக இருக்கவேண்டும். பாடலெண்
தவறாகக் குறிக்கப்பட்டுள்ளது)
தன்வந்திரி நாடி சாத்திரம் முற்றும்.

5. பிற செய்திகள்

நூல் தலைப்பில் தன்மந்திரி நிதானம் எனக் குறிக்கப்பட்டுள்ளது. இந்நூலுக்கு முன் இரண்டு ஏடுகளில் ஒரு குளிகை பற்றிய செய்தி இடம்பெற்றுள்ளது. பின்னொரு ஏட்டில் இளைப்புக்கு மருந்து சொல்லப்பட்டு உள்ளது.

3057. கிரந்த நிதானம்

1. நூலகக் குறிப்பு

அ. 2273-2

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. கிரந்தி நிதானம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 18

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்
ஆ. நீளம் 36 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

உதடொடு வாய்உள் மூக்கு
உப்பியே வெடித்துப் புண்ணாம்

மதமொடு தண்டு பீசம்
  வருந்திடப் புண்போல் தோன்றும்
பதமொடு பரப ரக்கும்
  பத்தியே தின்னுங் கண்டாய்
கிதமுட னறிந்து சொன்னேன்
  கிரந்தியாம் பரங்கி தானே.

(1)

ஆ. முடிவு

மண்டைக் கரப்பன் தலைதனிலே
  வருந்தித் தினவுஞ் சொறிவுண்டாம்
மண்டிச் சொறியும் பொழுதீடு
  மதுவும் வெள்ளை நிறம்போலாம்
கண்டஞ் சிரங்கு பொடிபோலே
  காலில்ச் சொல்வா ரெல்லோரும்
மண்டைக் குள்ளே தான்கழியில்
  மண்டைக் கரப்ப னெனலாமே.

(18)

3058. நயனவிதி 200

1. **நூலகக் குறிப்பு**

அ. 2273-3

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. நாக முனிவர்
ஆ. நயனவிதி 200
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 208

3. **தோற்றக் கூறுகள்**

அ. 29 ஏடு; 58 பக்கம்
ஆ. நீளம் 36 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. கிறுக்கலான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

மாதுமை பாகன் சொன்ன
வடமொழி நூலை யாய்ந்து
போதில்நான் முகத்தோ னாயுள்
வேதமாய்ப் புகன்ற பின்னால்
மூதுரை யுணர்ந்து நாக
முனிவருந் தமிழால் செய்தார்
தீதிலா விழியி னுள்ளே
தோஷத்தைத் தெளிந்து தானே.

(1)

ஆ. முடிவு

செய்யசிவன் வேம்போடு திப்பிலிய ரத்தை
துய்யவது கொடுகடுகு சுக்கோடு மஞ்சள்
பய்யவரும் பொடிபதிந்து நாறும்நெய் தேனே
அய்யமற உண்டிடவ றுஞ்சிரக்க ணப்பே.

(208)

3059. மகோதரத்தின் குணம்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2273-4

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. மகோதரத்தின் குணம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள். அச்சில் ஏறத்தாழ 20 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

அ. 9 ஏடு; 18 பக்கம்

ஆ. நீளம் 36 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
விடுபாடுகள் மிகுதி
ஊ. நல்லநிலை
எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

காலினில் புறங்கால் மண்ணைக்
கதுப்புடன் வயிறு கைகண்
சாலநெஞ் செடுத்து முந்தித்
தலத்திறும் வீங்கும் பின்னை
சீலமா மலங்கள் சிக்கும்
மூத்திரஞ் செறுக்கு மாகில்
மாலிரு பதத்தி னானே
மகோதர மென்ன லாமே.

ஆ. முடிவு

சயத்தால் சுரத்தால் தாகத்தால்
.... மந்தத்தால்
நயத்தால் மேகத் தால்நல்லெண்
ணெய்.... ..... நெய்பாலால்
வியத்தால் மோகத் தால்புளிப்பால்
வியன்சோறு செரியா ண்ணுகையால்
மயத்தால் பசியால் சிரத்தால்
மாவால் வருத்துங் கழிச்சலிதே.

3060. நாடித்தொகை

1. **நூலகக் குறிப்பு**

அ. *2273-5*

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. நாடித்தொகை

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 7

3. **தோற்றக் கூறுகள்**

அ. 1 ஏடு; 2 பக்கம்

ஆ. நீளம் 36 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

ஓதும் நாடித் தொகையு மதிலுறும்
வாத பித்த சிலேற்பன வண்மையும்
பேத மான வியாதியும் பேர்களும்
ஆதி யான அருந்தவ னோதினான்.

(1)

ஆ. முடிவு

குறுக்கில்மேல் பிடறிக் கீழே
கூறெண்ணா யிரம தாகும்;
அறுத்திரு விலாவில் நாடி
வளர்மூவா யிரம தாகும்;
உறுப்பிட லிங்கம் யோனி
அடிவயி றுள்ள நாடி
திறத்தவேல் விழியே! ஏழா
யிரம்நரம் பென்று செப்பே.

(7)

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

3061. விஷ பாகத்தின் குணம்

1. நூலகக் குறிப்பு

அ. 2273-6

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. விஷ பாகத்தின் குணம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 8

3. தோற்றக் கூறுகள்

அ. 1 ஏடு; 2 பக்கம்

ஆ. நீளம் 36 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அடிக்கடி வீங்கும் ஆறும்
அனலதும் மந்திப் பாகும்
துடிக்குமா மேனி யெல்லாம்
துண்டமாய் முறித்து வீங்குந்
தடிப்படுந் தேழை முட்டித்
தயங்கவே யிழைக்கு மீளை
மிடித்திட யிரும லாகும்
இதுவிஷ பாக மாமே.

(1)

ஆ. முடிவு

வீங்கும் வற்றும் ஒருபக்கம்
மேனி வறண்டு வெளுப்பிடும்கண்
தூங்கும் தலையும் கனத்திருக்கும்
துயரம் மிகுந்து தாகிக்கும்

வாங்கிப் பொசிக்க வொட்டாது
வாயு உடலில் விஷம்போல
ஏங்கிக் கொல்லும் விஷபாகம்
இதுவே செய்யும் குணமாமே. (8)

விஷபாகக் குணம் முற்றும்.

3062. சுர நிதானம்

1. **நூலகக் குறிப்பு**
   அ. 2273-7

2. **உள்ளீடு : நூல் விவரம்**
   அ. ....
   ஆ. சுர நிதானம்
   இ. மருத்துவம்
   ஈ. செய்யுள் 95

3. **தோற்றக் கூறுகள்**
   அ. 13 ஏடு; 26 பக்கம்
   ஆ. நீளம் 36 செ.மீ., அகலம் 3 செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
   ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து
   ஊ. நல்லநிலை
   எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**
   அ. தொடக்கம்
   காண்க:- தொடர் எண்.2271-5.
   ஆ. முடிவு
   வேகிய சுரத்தி னாதி
   விரேசனம் விலக்க வேண்டும்
   ஆகிய வியாதி தோறும்
   வேறுவே றமைக்க வேண்டுந்

தேகமுங் காலக் கூறுந்
　　தேசமு மறிய வேண்டும்
வாகுசேர் விரேச னத்தின்
　　வகையிவை யறிகு வீரே.

(95)

3063. சன்னி நிதானம்

1. நூலகக் குறிப்பு

அ. 2273-8

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. சன்னி நிதானம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 13

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்

ஆ. நீளம் 36 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து
　　பிழைகள் மிகுதி

ஊ. நல்லநிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீர்த்தமுள்ள தாந்திரிகம் சிம்ம கஞ்சித்
　　தவிர்பிரம பிரலாபங் கரணி யாசஞ்
சாத்தியதோர் சந்திகனுஞ் சாத்திய மாமஞ்
　　சரசமுடன் வனியாசஞ் சீத ரங்கம்
மூர்த்திராங்கம் ஏற்றமுள்ள கண்ட குச்சம்
　　இயல்புக்க நேத்திரமி ரத்தோ டடிவி

சாத்திரத்தி லெழுவகையும் சாத்திய மாகும்
சகலகுண வயித்தியர்முன் சாற்றிக் காணே.

(1)

ஆ. முடிவு

(பாட நிர்ணயம் செய்ய இயலாத அளவு பிழை மலிய எழுதப்பட்டுள்ளது.)

3064. வாத நிதானம்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2273-9

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. வாத நிதானம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 107

3. **தோற்றக் கூறுகள்**

அ. 25 ஏடு; 50 பக்கம்

ஆ. நீளம் 36 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு பலவித வரிகள்

உ. தெளிவான இருவகைக் கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

ஆதி யரனுமைக் கோதுமை யுள்மறை
வாத ரோக வகையுங் குணங்களுந்
தீதில் சாத்யம சாத்தியச் செய்கையும்
பேத மான சிகிச்சையும் பேசுவாம்.

(1)

ஆ. முடிவு

நாக்கது முள்ளுப் போலும்
நாவது வுலர்ந்து காட்டித்
தாக்கிடு முரையா டாது
தழைசெவி கேளா தாகும்
ஏக்கமே பற்றி நிற்கும்
மிடறுர வயந்து காட்டுந்
தூக்கமே யுறுஞ்சி யங்கே
வாதமே யென்று சொல்லே.

(107)

3065. பித்தத்தின் குணம்

1. நூலகக் குறிப்பு

அ. 2273-10

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. பித்தத்தின் குணம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 39

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம்
ஆ. நீளம் 36 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான கைபெழுத்து
பிழைகள் மிகுதி
ஊ. நல்லநிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பயில்மொழி மாதே கேளீர்
பத்துநான் கான பித்தம்

மயில்நிறம் மஞ்சள் பித்தம்
வானிறச் சுழத்தி பித்தம்
எயிலெழும் ரத்த பித்தம்
ஈரல்நின் றெரிக்கும் பித்தங்
குயில்கோல பித்தங் குவலை
குண்டல பித்தங் கேளே.

ஆ. முடிவு

மூல பித்தம்
அன்னங் குறைந்து இடுப்புளைந்து
அபானஞ் சுருங்கி மலம்வரண்டு
உன்னுந் தாதும் அக்கினியும்
உ்ரமும் குறைந்தூ தையுண்டாம்
மன்னும் கண்ணும் முகமலநீர்
மஞ்சள் நிறம்பெற் றுடல்வெளுக்கில்
முன்னோர் உரைத்த மூலபித்தம்
இதுவாம் என்று மொழிந்தனரே.

(39)

3066. பித்த நிதானம்

1. நூலகக் குறிப்பு

அ. *2273-11*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. *பித்த நிதானம்*
இ. *மருத்துவம்*
ஈ. *செய்யுள் 21*

3. தோற்றக் கூறுகள்

அ. *4 ஏடு; 8 பக்கம்*
ஆ. *நீளம் 36 செ.மீ., அகலம் 3 செ.மீ.*
இ. *இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது*

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வீழ்ந்திடும் பித்த தோஷம்
வெதும்பிநா வரண்டு கொள்ளுந்
தாழ்ந்துகண் சுழன்றி ருண்டு
தலையது கிறுகி றென்னுஞ்
சூழ்ந்திடுஞ் சிறுநீர் தானுஞ்
சுறுக்கெனச் சிவந்து வீழும்
வாழ்ந்திடு முடல்ந டுக்கி
மஞ்சளித் திருக்கு மன்றே.

(1)

ஆ. முடிவு

தலையும் வலித்து உடம்புலர்ந்து
தாகம் கெட்டுத் துயரமுண்டாய்ப்
பலதுந் தோன்றும் கண்போல
மனமு மடித்து மந்தமுமாய்
நிலையுங் கெட்டு மறப்புண்டாய்
நினைவும் கனவும் தோன்றுதெனில்
அலையும் வரட்சைப் பித்தம்என
அறிந்தோர் உரைப்பார் ஆதரித்தே.

(21)

பித்த நிதானம் முற்றும்.

3067. சிலேற்பன குணம்

1. நூலகக் குறிப்பு

அ. 2273-12

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. சிலேற்பன குணம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 31

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு; 8 பக்கம்
ஆ. நீளம் 36 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு பலவித வரிகள்
உ. தெளிவான இருவகைக் கையெழுத்து
ஊ. நல்லநிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

செந்திரு வுமையே கேளாய்
சிலேற்பனப் பேர்க்கு ணங்கள்
அந்தமு மதின்பேர் சாத்யம்
அசாத்திய மதனில் வேகம்
வந்துறு குறிகள் செய்யு
மருந்துறு செய்கை மற்றுஞ்
சிந்தினை யிவையோ பாணுங்
கேட்டுநீ தெளிந்தி டாயே.

(1)

ஆ. முடிவு

கண்டமு முகமுங் காதுங்
காயமும் பொருமு மாகில்
கொண்டமந் தார காசக்
குறிகளின் குணங்கள் கண்டால்
முண்டக முகமுங் காது
மொசுமொசுத் தூர்வ தேபோல்
மணடியே யிருமித் தானும்
வந்திடிற் காச மாமே.

(31)

5. பிற செய்திகள்

இதனையடுத்துச் சன்னி, சூலை வாகடம், சன்னி வாத குணம், அரையாப்புக் குணம், அரையாப்பு மந்திரம் முதலியன மூன்று ஏடுகளில் உள்ளன.

3068. சூலை நிதானம்

1. நூலகக் குறிப்பு

அ. *2273-13*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. சூலை நிதானம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 54

3. தோற்றக் கூறுகள்

அ. 7 ஏடு; 14 பக்கம்

ஆ. நீளம் 36 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அத்திசுரச் சூலையின் குணம்

அக்கியே யுரைந்த சூலை
யுரவுலந் தென்பு காச்சல்
மிக்ககா திரைச்சல் மந்த
மிகுந்திடு மூக்கில் நீர்கள்
தக்கதோர் பித்தச் சோகை
பாண்டுரு கபால குன்மங்
கைக்குமாம் வாத பித்தங்
கதித்திடுங் கண்டு கொள்ளே. (8)

ஆ. முடிவு

விஷ பித்த சூலைக்குக் கடுகு எண்ணெய்
காலத் துடனே அரைத்துவெந்து
கரண்டி யரைமண் டலமருந்தில்
சீலத் துடனே புளியுப்புத்
திருந்த நீக்கி யுண்டாரால்
மேலைக் குத்தி விரைத்தவலி
வெடித்த சலநீர் சரோணிதமும்
ஞாலத் துள்ளோர்க் குறும்பித்த
சூலை நாச மாகுமிதே.

(54)

(இதற்குமேல் எழுதப்படவில்லை. பாடலெண்கள் தவறாகக் கொடுக்கப்பட்டுள்ளன.)

3069. மருந்து செய்முறை

1. **நூலகக் குறிப்பு**
   அ. 2273-14

2. **உள்ளீடு : நூல் விவரம்**
   அ. ....
   ஆ. மருந்து செய்முறை
   இ. மருத்துவம்
   ஈ. செய்யுளும் உரைநடையும்
   அச்சில் ஏறத்தாழ 100 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**
   அ. 44 ஏடு; 88 பக்கம்
   ஆ. நீளம் 36 செ.மீ., அகலம் 3 செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து
   ஊ. நல்லநிலை
   எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

முத்திரி முட்டைத் தோடும்
முதிர்ந்தகற் கடக சிங்கி
சித்திர நாகப் பூவும்
சிறுதேக்குத் தேத்தான் கொட்டை
கத்தூரி மஞ்சள் சூடன்
கற்கண்டு கட்டி யிலவம்
பத்திரி சாதிக் காயும்
பார்திரி கடுகு பச்சை.

(1)

ஆ. முடிவு

திரிப்பிடிக்க:- வெள்வெங்காயம் அரைத்துச் சீலையில் ஊட்டி, உலர்த்தித் திரியாய் உருட்டி இந்த எண்ணெயிலே தோய்த்துக் கொளுத்தி அவித்துப் போட்டுப் புகையை நாசியிலேற்றி வரவும். தீரும்.

3070. மாந்திரீகம்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2273-15

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....
ஆ. மாந்திரீகம்
இ. மாந்திரீகம்
ஈ. உரைநடை
அச்சில் ஏறத்தாழ 20 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

அ. 12 ஏடு; 24 பக்கம்
ஆ. நீளம் 36 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை
எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

கண் கொதிக்கு மந்திரம்: இந்திரன் தங்கை மந்திர கன்னியிருப்புச் செருப்புத் தொட்டு நெருப்பறையில் புகுந்தாள். நெருப்பாலும் நீர்ச்சிது அலரி வேலிக்காலற்று விழுந்தாப் போலே அரக்கு மாளிகையில் நெருப்பு விழுந்தாப் போலே ஆனை வயிற்றிலாங்காரங் கேட்டாப் போலே குதிரை வயிற்றில் கொழுப்பற்றாப் போலே:...

ஆ. முடிவு

முறிமுறி சக்கரம் துண்டந்துண்டம். கீழ் நாகமே பெரி, அண்டமெரி, யனலெரி, திரிபுரமெரி. அத்திர சூலங் கொண்டோடி வா மாகாளி கட்டமிட்டான். கெருடன் அடைய வளைந்தான். ஆதித்தன் சுற்றெங்குங், கெருடக் கொடி சூழவெங்கும், வாசல் கூடவல்லாரிடை விரிசடையோன் தன்னாணை சொல்லாமல் சோர்ந்துகிட, வல்லுவந்தேன் வவ்விதக வந்தனெத்தை புக்காள் சங்கிலி வந்தே வாருட்டு வாருட்டு அக்கினி கெருடாழ்வான விஷமாக்கு மாழிகை கை நெருப்புக் கையிறுக மண்ணை வளக்ச விஷ முறுகப் பிடித்தேன்.

3071. மருந்து செய்முறை

1. **நூலகக் குறிப்பு**

அ. 2274-1

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....
ஆ. மருந்து செய்முறை
இ. மருத்துவம்

ஈ. உரைநடை

அச்சில் ஏறத்தாழ 50 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 29 ஏடு; 58 பக்கம்

ஆ. நீளம் 16 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்

உ. சுமாரான கையெழுத்து

ஊ. 1,30 ஆகிய ஏடுகள் இல்லை

உள்ளவை நல்லநிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

..... பொன்னாங்(காணி)யிலைச் சாறும் சிவந்த பொன்னாங்காணிச் சாறும் வார்த்தரைத்து அஞ்சு காசிடையாகத் தட்டி ஒரு சட்டியில் வைத்து ஒரு சட்டி கொண்டு பூட்டிச் சீலைமண் செய்து அடுப்பில் வைத்துப் பருத்திச் சுப்பியினாலே விளக்குப் போலே முப்பது நாழிகை தீயெரிக்கவும். ஆறவைத்து எடுத்து எள் பிரமாணம் எடுத்துப் பார்க்கிறபோது சிவந்திருக்கும். சிமிழிலே வைத்துக் கொண்டு ஒரு பணவிடை யனுபானங்களிற் கொடுக்கத் தீரும். வியாதி - ஒரு காலும் போகாத சலக்கிராணியும், சீக்கிராணியும், மந்தக் கிராணியும், பவுந்திரம், சுரம், பாரிசவாயு, பரங்கிப்புண், பல் நோவுந் தீரும்.

ஆ. முடிவு

முகவாத சன்னிக்கு:- தேங்காய் நெய் உழக்கு, வேப்பெண்ணெய் உழக்கு, வெள்ளை வெங்காயத் தயிலம் உழக்கு, குப்பைமேனிச் சாறு உழக்கு, தைவேளைச் சாறு உழக்கு, விட்டு நீர்வற்றக் காய்ச்சிச் செவியிலும் அடைத்து, அலகிலுந் தடவி நாசியிலும் அடைத்து, உள்ளுக்கும் காசளவு கொடுக்க முகவாதந் தீரும்.

3072. மருத்துவ நூல்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2274-2

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 42

3. **தோற்றக் கூறுகள்**

அ. 9 ஏடு; 18 பக்கம்

ஆ. நீளம் 16 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 11,12 வரிகள்

உ. சுமாரான கையெழுத்து, பிழைகள் மிகுதி

ஊ. நல்லநிலை

ஏட்டெண் 39ல் நூல் தொடங்குகிறது

எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

வல்லூறுப் பறவை தோஷம்
  உதிரத்தில் வயறு போகும்
நிறையுடல்வெ தும்பும் தாகம்
  நெருங்கும்கொட் டாவி யுண்டாம்
இதுக்குகளில் பூபொரி மிளகு
  சுமுகம்பூ பேர்தாம் பூலம்
நறுமலர்க் குழலி னாளே
  நற்சன்னியில் வைக்கத் தீரும்.

(1)

ஆ. முடிவு

இதுமுறை யாகச் செய்யில்
  எழும்பிடும் பிணிகள் தீரும்

திதிருக் கோவில் வாழும்
சிவனுக்குச் சிறப்பு வைத்து
விதிமுறை வையத் தோர்க்கு
விளங்குபோ சனமே யீந்தங்
கதுமுறை யாகச் செய்யி
லகன்றிடுந் தோஷந் தானே.

(42)

3073. ஆண்டு தோஷத்தின் குணம்

1. நூலகக் குறிப்பு

அ. *2274-3*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. ஆண்டு தோஷத்தின் குணம்
இ. மருத்துவம்
ஈ. உரைநடை
அச்சில் ஏறத்தாழ 15 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம்
ஆ. நீளம் 16 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து
ஊ. நல்லநிலை
ஏட்டெண் 47ல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சர்மோஷை என்னும் பேயின் குணம்:- பாலெதிரே தட்டும், சரீரமும் வெதும்பும்; வயிறு போகும்; கொட்டாவியுண்டாம். இதுக்குக் கழிப்பு - பெளிக்காறி

சந்தனம் பூவும் துகை பணியறு மஞ்சள் விளக்கு தாம்பூலம் தாய் பிள்ளை தலையைச் சுற்றி சந்திதனில் வைக்கத் தீரும். தரைதனில் நீர் தெளித்துப் பேயின் பேர் சொல்லி வைக்கவும்.

ஆ. முடிவு

வாரணக் கன்று தன்னை
வளமையால் பூசை பண்ணி
ஏரண தெய்வந் தானும்
இலங்கவே சிறப்புச் செய்து
காரண லெத்த தோறுங்
சனனமே பொசிக்கப் பண்ணில்
வாரணி யாளே தோஷம்
பறந்திடு மென்றார் முன்னோர்.

ஆண்டு தோஷம் முற்றும்.

3074. நோய்க்கு மருந்து

1. நூலகக் குறிப்பு

அ. 2274-4

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. நோய்க்கு மருந்து
இ. மருத்துவம்
ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 20 ஏடு; 40 பக்கம்
ஆ. நீளம் 16 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9,10 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து
ஊ. நல்லநிலை
ஏட்டெண் 52ல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. **தொடக்கம்**

மாந்தஞ் செய்யுள் குணங்கேளாய்
வயிறே பொருமி யுரையுண்டாம்
ஆந்தை போலே விழித்திருக்கும்
மானே பாலே கீழுதட்டும்
வேந்தர் வேப்பம் பூப்போலே
விதமாய்க் கழியுந் தாகிக்கும்
ஏந்து தனத்தாள் தீரையாஞ்சே
யிழையீர் கேளீர் மருண்டுழலும்.

ஆ. **முடிவு**

ஏலத் தோடு பச்செள்ளும்
வேல வேரும் சந்தனமும்
பாலு .... முலைப்பாலும்
பசுவின் பாலும் பசலியுடன்
தால தாழைச் சாறதனால்
சாரித் துப்புண் ணிற்போட...

(23)

(இப்பாடலில் மூன்றடிகளே உள்ளன)

3075. மோட்ச வித்தை

1. **நூலகக் குறிப்பு**

அ. 2275-1

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....
ஆ. மோட்ச வித்தை
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 11

3. **தோற்றக் கூறுகள்**

அ. 14 ஏடு; 18 பக்கம்
ஆ. நீளம் 31.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது'
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து
ஊ. சுமாராண நிலை
எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. **தொடக்கம்**

மோட்சத்துக் கெய்தும்வழி மனத்தைக் கண்டால்
முன்னுரைத்த நூல்களிலே வாசி பார்க்கப்
பாய்ச்சுற்ற மனத்தையொன்றில்ப் பாயா மல்தான்
பக்குவமே செய்துநன்றாய்ப் பாரு மூக்கில்
மூச்சற்றா லொருகாலுங் குறியைக் கேளு
குருசொல்லால்க் காணுமல்லால் மற்றோர் காணார்
நீச்சொற்ற யறுநூற்றில் நின்று பார்க்க
நேர்மையுள்ள குருமுகமா மிந்த நூலே.

(1)

ஆ. **முடிவு**

தானென்று மலைந்ததனால் வருவ தேது
சமுசார ஞானிக்கு வருமோ மோட்சம்
கூனென்றுங் குருடனென்று முடவ னென்றுங்
குணயீனன் செவிடூமை யாகா தென்றும்
கோனென்ற தத்துவங்கள் குறையில் லாமல்
குடிகெடுத்த வியாதியினால் கிடந்தி டாமல்
பானென்ற சந்திரன்போல் தேக முண்டாய்ப்
பரமோட்ச வித்தையிது பாரு முற்றே.

(11)

3076. உடலறி விளக்கம்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2275-2

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. சங்கராசாரியார்
ஆ. உடலறி விளக்கம்

இ. தத்துவம்
ஈ. செய்யுள் 100

3. தோற்றக் கூறுகள்

அ. 30 ஏடு; 60 பக்கம்
ஆ. நீளம் 31.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
ஏட்டெண் 26ல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

விடமருந்தி யமுதமுண்ட விமல நாதன்
விரிசடையோன் மதிசூடி மழுமா னேந்தி
விடமருவு பரைபுதல்வன் ஆனை முகவன்
இளவலரி மருகனீ ராறு தோளன்
குடவயிறன் தனக்கிளைய குமரன் கந்தன்
குகனைமற வாமல்நெஞ் சகமே பூண்டு
உடலறியும் விளக்கமென உரைத்தேன் அன்பால்
உதவியருள் புரியுமயன் தேவி காப்பாம். (1)

ஆ. முடிவு

பொன்னுலகில் இந்நூல்கற் றுரைத்த வர்க்குப்
பொறுமைதய வறிவுகுண முண்டா மேலுந்
தன்னுடம்பு தானறிந்து கொள்வக் கற்றோர்
தயவுபெற வாழ்வர்மறு பிறவி தன்னிற்
பின்னும்நலம் பெறுவர்பொரு ளாய்ந்திட் டோர்கள்
பிறப்பறுத்து மெஞ்ஞானத் தலைவ ராகிப்
பன்னுமறை காணாத பரத்தைப் போற்றும்
பதம்பெறுவ ரெனக்குருவும் பகர்ந்திட் டாரே. (100)

உடலறி விளக்கம் முற்றும்.

3077. சதுஷ்கோண மாலை

1. நூலகக் குறிப்பு

அ. 2275-3

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. சதுஷ்கோண மாலை

இ. தோத்திரம்

ஈ. செய்யுள் 10

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு; 8 பக்கம்

ஆ. நீளம் 31.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரிகள்

உ. கிறுக்கலான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

உற்றதலம் பெருந்துறைந்த டென்றுந் தேகம்
உட்புகுந்து சங்கநதித் தீர்த்த மாடி
நித்தமவன் மாடணுகி வைகுண்ட மேவி
நெடியோனை யடிவணங்கி நினைவி னாலே
கர்த்தனையு மந்திசந்தி உச்சி மூன்று
காலமும்நீ பூசைசெய்து கவலை தீரப்
பெற்றனையே நெஞ்சகமே இந்தப் பேறு
பெற்றவர்க்குப் பிறவியுமுண் டென்ன லாமே.

(1)

ஆ. முடிவு

தேடரிய திருமேனி அயனு மாலுந்
தேடியறி யாதபரம் பொருளைத் தேடித்
தேடியறிந் தாடியகால் சிவந்த பாதம்
தரிசித்துச் சதுர்க்கோண மாலை பத்தும்

பாடியவர் பேறுபெற்றால் நன்னூல் ....
பயனறிந்து மெஞ்ஞானத் தலைவ ராவார்
நாடறிய நெஞ்சகமே இந்தப் பேறு
நாட்டமாய்ப் பிறவியுமுண் டென்ன லாமே.

(சதுர்க்கோண மாலை முற்றும்.)

3078. கொங்கணர் தேவி தோத்திரம் 30

1. நூலகக் குறிப்பு

அ. 2275-4

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. கொங்கணர்
ஆ. கொங்கணர் கடைக்காண்டத்தில் தேவி தோத்திரம் 30
இ. தோத்திரம்
ஈ. செய்யுள் 28

3. தோற்றக் கூறுகள்

அ. 7 ஏடு; 14 பக்கம்
ஆ. நீளம் 31.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 5,6 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தோன்றிடுவாய் மவுனத்தில் மானதமாம் பூசை
சுகமான அபிசேக மெல்லாஞ் செய்தே
ஊன்றியே வத்திரமோ டாபரணஞ் சாத்தி
உத்தமனே சுகந்தபரி மளங்கள் சாத்தி
ஏன்றதெலாம் நைவேத்தியஞ் செய்த பின்பில்
இன்பமாய்த் தூபமொடு தீபங் காட்டிக்

காள்றதந்தக் கரணவேர் விடுத்தே ஞானக்
காட்சியரு ளம்பரையே யம்மா வென்னே.

(1)

ஆ. முடிவு

உன்னுடைய பேரென்றா லேதுங் காணேன்
உலகத்தோர் ரிஷிகள்சித்தர் மவுன மென்பார்
என்னுடைய பிறப்பிறப்போ யேதுங் காணேன்
என்றுயான் யெடுத்துரைப்பேன் மகார மென்றால்
தன்னுடைய நாமமென்பார் அகார மென்பார்
சகாரமென்ற சத்தியென்பார் விதுர னென்பார்
மின்னுடைய காந்தியென்பார் எதுவு மென்பார்
வேதாந்தப் பிரணவ(மே) என்று போற்றே.

(28)

3079. தூத லட்சணம்

1. நூலகக் குறிப்பு
   அ. 2275-5

2. உள்ளீடு : நூல் விவரம்
   அ. ....
   ஆ. தூத லட்சணம்
   இ. மருத்துவம்
   ஈ. செய்யுள் 15

3. தோற்றக் கூறுகள்
   அ. 3 ஏடு; 6 பக்கம்
   ஆ. நீளம் 31.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
   உ. சுமாரான கையெழுத்து
   ஊ. நல்லநிலை
   எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. **தொடக்கம்**

வந்ததோர் தூதன் நேர்முகம் பார்க்கில்
வளர்ந்துநின் றிடிலும்நோய் குணமாம்
இந்தவா றெதிர்த்து நிற்கிலுங் ......
....தீரும் ....யாகி
யுந்தமே நோக்கி யிடதுபால் நிற்கில்
உறுமரண மாம்முது கிடத்தில்
தொந்தமாய் நிற்கில் தொடர்ந்து.. வருகில்
சொல்வது பின்னுமே கிலேசம்.

(1)

ஆ. **முடிவு**

இப்படி (ராசி) தன்னை
இயல்பெறத் தெளிந்து பார்த்துச்
செப்புவீர் தூதன் வந்தால்
செயல்தனை யவற்குச் சொல்லி
மெய்ப்புடன் நன்மை தின்மை
மேவிய குணங்க ளெல்லாம்
ஒப்புவீர் புவியின் மீதே
உண்மையென் றுரைக்க லாமே.

(15)

தூதலட்சண முற்றும்.

5. **பிற செய்திகள்**

மருத்துவரிடம் நோயாளியைப் பற்றிய செய்தியை தூதன் முதலில் கூற வருபவனின் நிலை, நேரம் முதலியவற்றைக் கொண்டு நோயாளியின் நோய் விரைவில் குணமாகுமா எனக் கூறும் சகுன நூல் இது.

3080. அகத்தியர் ஞானம் 16

1. **நூலகக் குறிப்பு**

அ. 2275-6

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் ஞானம் 16
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 16

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம்
ஆ. நீளம் 31.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 5,6 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து
ஊ. நல்லநிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதிமறை சாத்திரங்கள் பிறந்த வாறும்
அடிமுடியின் நடுவாகிப் பொருள்மூன் றாகி
வேதியெனும் மால்சிவனும் நின்ற வாறும்
வேதமுட னாகமங்கள் பிறந்த வாறும்
சாதிபல தொழில்முறைக ளான வாறுந்
தன்னுள்ளே அட்டாங்கஞ் செய்யும் வாறும்
ஓதியநூல் அவரவர்கள் செய்த வாறும்
ஓங்கார கணபதி(யே) காப்ப தாமே.

(1)

ஆ. முடிவு

காணப்பா காவியத்துக் காக யிந்தக்
கருப்பொருளைப் பதினாறில் கருதிச் சொன்னேன்
வீணப்பா யென்றுசொல்லி யிந்த நூலை
வெளிவிட்டால் உங்களுக்கே என்மே லாணை
ஆணப்பா முக்காலு மாலைய யாணை
அறிந்துணர்ந்த ஞானியரை யடுத்துச் சேரு

பாணப்பா வுண்டிருந்தார் பதத்தைப் போற்றிப்
பதினாறு சிவனருட்பே றருள்தான் முற்றே.

(16)

3081. பகவதி மாலை

1. **நூலகக் குறிப்பு**

அ. 2275-7

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. பகவதி மாலை

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள் 30

3. **தோற்றக் கூறுகள்**

அ. 6 ஏடு; 12 பக்கம்

ஆ. நீளம் 31.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்

உ. சுமாரான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

புகர்முக வேழமும் யுதமுஞ்செம் போதகமும்
அகமது வாழுந் திருமாது வாணியும் அஞ்சலென்பாய்
செகமது போற்றுந் திருவேங் கடமுதல் தென்குமரிப்
பகவதி மாலைக் கலித்துறை முப்பதும் பாடுதற்கே.

(1,

ஆ. முடிவு

மாட்டுக் கடுக்கன் விரைந்தே எழுதி வரவிடுத்த
சீட்டுக்குப் பின்சென் றலுத்துவிட் டேன்செய்ய தாளருள்வாய்
தோட்டுக் கமலப் புகழ்கவி ராசன் சொலு(லகரிப்)
பாட்டுக் குறுகுங் குயிலே குமரிப் பகவதியே.

(30)

பகவதிமாலை முற்றும்.

3082. வராகி மாலை

1. நூலகக் குறிப்பு

அ. 2275-8

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. வராகி மாலை

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள் 33

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம்

ஆ. நீளம் 31.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்

உ. சுமாரான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பெருக்குங் கருணை வராகிதன் மாலையைப் பேசுதற்கு
நெருக்குங் குவிமுலை யம்பிகை பாதம் நிறைந்துமகிழ்ந்
திருக்கும் அன்பர்தன் அங்குச பாச மெனது...
கருக்குந் தகைமை விநாயகன் சேவடி காப்பெனக்கே.

(1)

ஆ. முடிவு

தீக்கு(ம்) வலியது வுண்டோ வுனது திருவுளத்தை
நோக்கும் படிக்கென்னை மாறுசொன் னோரை ஒருநொடிக்குள்
நாய்க்கும் நரிக்குங் கழுகிற்கும் பேய்க்கும் நகவெறிந்து
தேய்க்குந் திரிபுரை யாளவள் பார்வைசெங் காடொக்குமே.

(33)

வராகிமாலை முற்றும்.

3083. ஞானக்கும்மி

1. நூலகக் குறிப்பு

அ. *2275-9*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. *வாலை சுவாமிகள்*

ஆ. *ஞானக்கும்மி*

இ. *தத்துவம்*

ஈ. *செய்யுள் 185*

3. தோற்றக் கூறுகள்

அ. *23 ஏடு; 46 பக்கம்*

ஆ. *நீளம் 31.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.*

இ. *இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது*

ஈ. *ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்*

உ. *சுமாரான கையெழுத்து*

ஊ. *ஏடுகள் இடதுபுறத்தே முறிந்துள்ளன*

எ. *முழுமை*

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீர்மேவு ஞான வடிவான
தேசிகன் சற்குரு தன்னருளால்
பார்(மேவும்) ஞானக் கும்மிபாடச் - சிவ
பாலன் கணபதி காப்பாமே.

(1)

ஆ. முடிவு

சற்குரு பாத மிகவாழி - வாலை
சுவாமி தமிழ்நிதந் தான்வாழி
நற்குண ஞானக் கும்மித்தமிழ் - கற்றவர்
ஞான நெறியே மிகவாழி.

(185)

3084. கந்தரநுபூதி

1. **நூலகக் குறிப்பு**
   அ. 2275-10

2. **உள்ளீடு : நூல் விவரம்**
   அ. அருணகிரிநாதர்
   ஆ. கந்தரநுபூதி
   இ. சிற்றிலக்கியம்
   ஈ. செய்யுள் 56

3. **தோற்றக் கூறுகள்**
   அ. 10 ஏடு; 20 பக்கம்
   ஆ. நீளம் 31.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு இரண்டு பத்திகள்
   உ. தெளிவான அழகிய கையெழுத்து
   ஊ. நல்லநிலை
   எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

நெஞ்சக் கனகல் லுநெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமா லைசிறந் திடவே
பஞ்சக் கரவா னைபதம் பணிவாம்.

ஆ. முடிவு

உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

(51

கந்தரநுபூதி முற்றும்.

3085. கந்தரலங்காரம்

1. நூலகக் குறிப்பு

அ. 2275-11

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அருணகிரிநாதர்

ஆ. கந்தரலங்காரம்

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள் 102+6=108

3. தோற்றக் கூறுகள்

அ. 17 ஏடு; 34 பக்கம்

ஆ. நீளம் 31.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு இரண்டு பத்திகள்

உ. தெளிவான அழகிய கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அடலரு ணைத்திருக் கோபுரத் தேஅந்த வாயிலுக்கு
வடவரு கிற்சென்று கண்டுகொண் டேன்வரு வார்தலையிற்
றடபடெ னப்படு குட்டுடன் சர்க்கரை மொக்கியகைக்
கடதட கும்பக் களிற்றுக் கிளைய களிற்றினையே.

ஆ. முடிவு

சூலம் பிடித்தெம பாசஞ் சுழற்றித் தொடர்ந்துவரும்
காலன் றனக்கொரு காலுமஞ் சேன்கடன் மீதெழுந்த
ஆலங் குடித்த பெருமான் குமாரன் ஆறுமுகவன்
வேலுந் திருக்கையு முண்டே நமக்கொரு மெய்த்துணையே.

5. பிற செய்திகள்

நாற்பயனை யடுத்துச் 'சில பிரதிகளில் அதிகமாகக் காணப்பட்ட பாட்டுகள்' என்னும் குறிப்புடன், "திருவடியுந்

தண்டையும்", "இராப்பகலற்ற", "செங்கேழெடுத்த", "ஆவிக்குமோசம்", "கொள்ளித் தலையில்", "சூலம் பிடித்து" ஆகிய ஆறு திருப்பாடல்களும் எழுதப்பட்டுள்ளன.

3086. நோய்க்கு மருந்து

1. **நூலகக் குறிப்பு**
   அ. 2276

2. **உள்வீடு : நூல் விவரம்**
   அ. ....
   ஆ. நோய்க்கு மருந்து
   இ. மருத்துவம்
   ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 130 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**
   அ. 128 ஏடு; 256 பக்கம்
   ஆ. நீளம் 26.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு பலவித வரிகள்
   உ. பலவித கையெழுத்து
   ஊ. சுமாரான நிலை
   எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

   அ. தொடக்கம்

   விட்டுணுக்கிராந்தியும் கல்மதமும் ஒக்கக் கொண்டு பாலிலரைத்துக் குடிக்க இளமையுண்டாம்.

   ஆ. முடிவு

   காமாலைக்கு மருந்து:- அரப்பொடி ஆழாக்கு, மிளகு ஆழாக்கு, ஊசிக்காந்தம் இருகழஞ்சு, கையாந்தகரை ஒருபிடி, வெள்ளாட்டுப்பால் உழக்கு, வெள்ளாட்டு மூத்திரம் கால் உழக்கு, எலுமிச்சம்பழம் 10. இதுவெல்லாம் பொடி செய்து அந்தப் பழத்திலே

உள்ளேயிடு. அந்தப் பாலும் மூத்திரமும் விடு. அவித்து வைத்துக்கொண்டு ஒரு .... மறிந்து ..... கொடுக்கவும்.

(இதற்குமேல் ஏடுகள் இல்லை.)

3087. அகத்தியர் குணபாடம்

1. நூலகக் குறிப்பு

அ. 2277

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் குணபாடம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 416

3. தோற்றக் கூறுகள்

அ. 119 ஏடு; 238 பக்கம்

ஆ. நீளம் 26.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 5,6 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியாங் கடவு ளாணை
அடியிணை போற்றி போற்றித்
தீதுறு வியாதி தன்னைத்
தெளிவுட னறிய வேண்டிச்
சோதிசேர் நல்லோர் பேசுங்
குணமிகு பாடம் தன்னை
நீதிசேர் படியின் மீதே
நெறியுட னுரைத்தார் மேலோர். (1)

ஆ. முடிவு

கூட்டியொரு மண்டலமும் கொள்ளுவர்க ளாகில்
சேட்டுமமும் வாதமொடு பித்தமிவை தீரும்;
நாட்டிலுள உட்டணமும் சூலைகளும் ......
ஓட்டிவிடும் உண்மையிது உண்மை(யென லாமே.)
(416)

அகத்தியர் வாகடம் முகிந்தது.. முற்றும்.

இ. பிற்குறிப்பு

இந்தப் பொத்தகம் வெளிகண்டநாத பிள்ளை ஏடு.

3088. அவதி சுரநூல்

1. நூலகக் குறிப்பு

அ. 2278-1

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. அவதி சுரநூல்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 30

3. தோற்றக் கூறுகள்

அ. 15 ஏடு; 30 பக்கம்

ஆ. நீளம் 26 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதி மாமுனி யுகந்த நூல்வழி
ஓதி டில்திரி நாடிகள்

சோதி மாநீதி யாஞ்சு ரத்துடன்
சூச்ச மாநிலை யானது
பாதி மாமதி சூடி டும்பர
மேசு ரனருள் போற்றியே
வேத மாம்பர மேசு வரிதுணை
யாகிக் கணபதி காக்கவே.

(1)

ஆ. முடிவு

வாய்த்திடும் விச்சுர மானது வந்துவ
ளைந்திடும் அதுசெய்யும்
வருசெவி யன்றிய மேனிகள் வீங்கிடும்
தேரையின் வடிவாகும்
காய்ந்திடு நீர்களெ ழுந்துவ ரும்பொல
தொண்டைத னில்காணும்
கருதிய வாயொடு குருதிகள் பாயும்
குத்திடும் உள்ளங்கால்
சாத்திடும் வேர்வை விட்டது காயும்
சாடிவிரைத் திடும்மதலை
சந்துகள் நொந்துவ லித்திடும் முதுகினில்
குத்தும் சரியாகத்
தேய்த்திடும் இச்சுர மானது விட்டிடை
விட்டுவி டக்காயும்
தெரங்கிடும் நாட்கள் எழுபத் தொன்றினில்
தீரும் பிணிதானே.

(30)

3089. அகத்தியர் சாத்திரம் 16

1. நூலகக் குறிப்பு

அ. 2278-2

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் சாத்திரம் 16

இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 16

3. **தோற்றக் கூறுகள்**

அ. 5 ஏடு; 10 பக்கம்
ஆ. நீளம் 26 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

விந்தெனு முலகில் வாழும்
மேவிய சனங்கட் கெல்லா
முந்தவே சொன்ன நூல்கள்
முதுமொழி யாய்ந்து தேர்ந்து
எந்தனுக் கிரங்கி நாளும்
எவ்வுயிர்க் குரைக்கு முன்னாள்
கந்தனே ஐங்க ரன்பூ
ரணம்சோதி காப்ப தாமே.

(1)

ஆ. முடிவு

அடைத்தமருந் தெடுக்கையிலே தீபங் காட்டி
அந்தந்த வியாதிக்குஅனு பானங் கண்டு
படைத்தகுரு பரனைநீ தியானஞ் செய்து
பார்மகனே கொடுப்பதிஞ்சிச் சாற்றி லீவாய்
விடைத்தமறு வாராது வியாதி யேது
வெகுபேதி யாகாது வேக மெத்த
சடைத்துமன திளையாதே சணத்தில் செய்நீ
சாத்திரந்தான் பதினாறு சூத்திர முற்றே.

(16)

இ. பிற்குறிப்பு

1058ஆம் (கொல்லம்) வருடம் வைகாசி மாதம் 22ந் தேதி வெள்ளிக்கிழமை யன்று 15 நாழிகை சமையத்தில் பகவதிப் பெருமாள் ஆயானோடு துடங்கிய சாத்திரம் அகத்தியர் சூத்திரம் 16, சாத்திரம் 12, சன்னி நிதானம், வலியஞ்சுக்குப் பேர், வேர்வை நிதானம், விக்கல் அஞ்சும், பூரண சூத்திரம், மணிக்கிடை சாத்திரம், வால்மீகர் உறுப்பு சூத்தரம் 8ம்.

3090. நாடி சூத்திரம் 12

1. **நூலகக் குறிப்பு**

   அ. *2278-3*

2. **உள்ளீடு : நூல் விவரம்**

   அ. ....
   ஆ. *நாடி சூத்திரம் 12ல் வாதநடை*
   இ. *மருத்துவம்*
   ஈ. *செய்யுள் 12*

3. **தோற்றக் கூறுகள்**

   அ. *2 ஏடு; 4 பக்கம்*
   ஆ. *நீளம் 26 செ.மீ., அகலம் 3 செ.மீ.*
   இ. *இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது*
   ஈ. *ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்*
   உ. *தெளிவான கையெழுத்து*
   ஊ. *நல்லநிலை*
   ஏட்டெண் 5ல் நூல் தொடங்குகிறது
   எ. *முழுமை*

4. **சிறப்புச் செய்திகள்**

   அ. தொடக்கம்

உன்னிய பொதிகைக் கும்பன்
உலகினி லுள்ளோர்க் கெல்லாம்
பன்னிய நாடி பார்க்கும்
பாங்கினைப் பிரித்துச் சொல்லச்

சென்னியி லீசன் பாதம்
சிந்தையில்த் துணையாக் கொண்டு
பண்ணிய நாடி நேர்மை
பரிசித்தே யறிந்து கொள்வாம். (1)

ஆ. முடிவு

அறிவது மனதி னாலே
அசைக்கின்ற நாடி பார்த்துப்
பொறியது போலே சூச்சம்
பிடிகொண்டால் பொருளே தோன்றும்
நெறியுடை னீசன் பாதம்
நித்தமும் நினைவுள் ளோர்க்குக்
குறியது பன்னி ரண்டும்
கூறிடும் நாடி முற்றே. (12)

3091. சன்னி நிதானம்

1. நூலகக் குறிப்பு

அ. 2278-4

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. சன்னி நிதானம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 26

3. தோற்றக் கூறுகள்

அ. 7 ஏடு; 14 பக்கம்
ஆ. நீளம் 26 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
ஏட்டெண் 7ல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீதமென்ற சன்னிவந்த முறைதான் கேளு
தீனறிந்து தின்னாமல் மந்த மீறி
நாதமென்ற பித்தமது மூல மிட்டு
நளுகியே யுடம்பெல்லாம் நிறைந்து நிற்கும்
வாதமென்ற வாய்வுவது சனமேக் கொண்டு
வயிறுகுடல் கொழுப்புற்று மலமே சிக்கிச்
சாதமென்றும் இறைச்சியென்று மாக்க ளென்றும்
சமன்மீறும் புளிப்புமனு போக மாமே.

(1)

ஆ. முடிவு

உடலைக் குலுங்க வளைத்துவலி
உண்டாம் வாயில் குவளைவரும்
நடலை விழியில்ப் புண்சொரியும்
நாடு வேர்வை சீதமுறும்
சடலை மதுவும் மயக்கிமந்தம்
தலைவ லித்துத் தான்மீறில்
கடலில் திரைபோல் வந்தடக்கும்
கட்டிய முசலின் வலிதானே.

(15)

இது வலி ஐந்தின் குணத்தைச் சேர்ந்த பாடல்.

5. பிற செய்திகள்

சன்னி நிதானத்தை அடுத்து வலி ஐந்தின் குணம் 15 பாடல்களில் எழுதப்பெற்றுள்ளன. சன்னி நிதானம் என்ற பெயரில் வேறொரு நூலும் உண்டு.

3092. விக்கல் ஐந்தின் குணம்

1. நூலகக் குறிப்பு

அ. 2278-5

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. விக்கலஞ்சின் குணம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 7

3. **தோற்றக் கூறுகள்**
அ. 2 ஏடு; 4 பக்கம்
ஆ. நீளம் 26 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
ஏட்டெண் 12ல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**
அ. தொடக்கம்

மாறிலாத் தாகத் தாலும்
வலம்விடா மந்தத் தாலும்
சோறுணிஸ்ப் புரைசேர்ந் தாலும்
தொலைவிலா நடையி னாலும்
கூறுமுட் டிணத்தி னாலும்
குளிர்ந்தநீர் கொள்கை யாலும்
மீறிய வகையா லஞ்சு
விக்கல்வந் தேயு மன்றே.

(1)

ஆ. முடிவு

மார்புங் குலையும் வலித்து வயிறொழுகி
ஆரமுடன் மேயு மடிநடுங்கிச் - சேரும்
வீறா தனையமுலை மின்னனையிற் செய்குணங்கள்
ஆறாதம் சத்திவிக்கல் தான்.

3093. வேர்வையின் குணம்

1. **நூலகக் குறிப்பு**
அ. 2278-6

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. வேர்வையின் குணம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 6

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்

ஆ. நீளம் 26 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை
ஏட்டெண் 13ல் நூல் தொடங்குகிறது

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சினமுறு கோபத் தாலும்
  சிரசிடி முடியி னாலும்
மனமுற வெயில்கள் தன்னில்
  மதமுற நடக்கை யாலும்
இனமிதில் காம சித்தி
  இன்பமே மிகுதி யாலும்
வினையுறு ரெத்தத் தாலும்
  மிகுத்திடும் வேர்வை தானே.

(1)

ஆ. முடிவு

விரணமுறு நோவதினால் வேர்வை யாகும்
  வீங்கும்விஷ பாகமதால் வேர்வை யாகும்
தருணமனச் சஞ்சலத்தால் வேர்வை யாகும்
  தாடாண்மை குன்றுகையால் வேர்வை யாகும்
அருணனொழ சுரமதினால் வேர்வை யாகும்
  ஆகமதில் புணர்ச்சினால் வேர்வை யாகும்

கருணாதி கருவிகளால் வேர்வை யாகும்
காணுமஞ்சு வேர்வையது கருது வீரே.

(6)

3094. நோய்ச்சாரம்

1. நூலகக் குறிப்பு

அ. *2278-7*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. தேரையர்
ஆ. நோய்ச்சாரம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 33

3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு; 10 பக்கம்
ஆ. நீளம் 26 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
ஏட்டெண் 14ல் நூல் தொடங்குகிறது
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆரியமாம் வாகடத்தி னுட்பொருளை யாராய்ந்து
சீரியதாஞ் செந்தமிழைச் செப்பவே - மாரியென
வெள்ளை மதம்பொழியும் வேழ முகமுடைய
வள்ளலே என்மனத்து வா.

(1)

ஆ. முடிவு

தூதளைப் பழரசமும் சுத்தாவின் நெய்பாலும்
தீதிலிரு சீரகமும் திரிகடுகும் - மாதே

கரகர வென்றெழும்புங் காசசுவா சம்ஈளை
பரபர வென்றேகும் பார். (33

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

3095. வால்மீகர் உறுப்புச் சூத்திரம்

1. நூலகக் குறிப்பு

அ. 2278-8

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. வால்மீகர்
ஆ. வால்மீகர் உறுப்புச் சூத்திரம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 8

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்
ஆ. நீளம் 26 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
ஏட்டெண் 19ல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

உள்ளங்கால் முழங்காற் பள்ளம்
உகந்திடு முள்ளங் கையும்
மெள்ளவே முழங்கைப் பள்ளம்
உகுத்ததோர் மூக்கி ரண்டும்
துள்ளிய பிடரி தொண்டை
சுற்றியே நெற்றி மூக்கு
தெள்ளிய உறுப்புச் சூத்திரம்
செப்புவால் மீகர் தாமே. (1)

ஆ. முடிவு

நெத்தியுங் குளிர்ந்து கண்ணும்
  நீலம்போல் குழைந்து காணில்
பத்திய மணிகள் ரெண்டும்
  பார்வையில் நட்டு நின்றால்
சுத்தியே செவிகள் ரெண்டும்
  தொத்தமே யில்லா தாகில்
மத்திப குணமே சாவான்
  மாமுனி உரைத்த வாறே.

(8)

உறுப்புச் சூத்திரம் முற்றும்.

3096. நாடி நூல்

1. நூலகக் குறிப்பு

அ. 2278-9

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. நாடி நூல்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 9 ஏடு; 18 பக்கம்

ஆ. நீளம் 26 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

ஏட்டெண் 20ல் நூல் தொடங்குகிறது

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

என்னவே வாதந்தான் எண்ப தாகும்
இகத்திலே மனிதர்களுக் கெய்யும் வாறு
பின்னவே பொருள்தனையே சோரஞ் செய்தும்
பெரியோர்கள் பிராமணரைத் தூஷ ணித்தும்
வன்னதே வர்ச்சொத்தில் சோரஞ் செய்தும்
மாதாபி தாகுருவை மறந்த பேர்க்கும்
கன்னவே வேதத்தை நிந்தை செய்தால்க்
காயத்தில் கலந்திடுமே வாதந் தானே.

(1)

ஆ. முடிவு

பேச்சது குளறி நின்று
பெருகவுள் மூச்சு முண்டாம்
ஆச்சுபன் னிரண்டு நாள்தான்
அப்படிக் கிடக்கில்ப் பின்பு
கூச்சமாய் மயிலி னெணையிற்
குலாவிய வசம்பு கூட்டித்
தோய்ச்சுமே லூற்றிக் கொள்ளத்
தோஷமும் சிதைந்து போமே.

(15)

3097. மணிக்கிடைக் கயறு சாத்திரம்

1. நூலகக் குறிப்பு

அ. 2278-10

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. மணிக்கிடைக் கயறு சாத்திரம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 15

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 6 பக்கம்

ஆ. நீளம் 26 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

ஏட்டெண் 29ல் நூல் தொடங்குகிறது

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காண்க:- தொடர் எண்.2270-2.

ஆ. முடிவு

திட்டமா யேழு கண்டாற்
சிரசிலே யேறும் பித்தம்
குட்டமாய் வாயால் ரத்தம்
....விழச் சயமே யாகும்
விட்டவிழ் காலுங் கையும்
வலித்திடும் சிலந்தி தோன்றும்
உட்டிண மிகுதி யுண்டா
முலர்ந்துவீழ் மலம தாமே.

மணிக்கிடைச் சாத்திரம் முற்றிற்று.

3098. அகத்தியர் 205

1. நூலகக் குறிப்பு

அ. 2278-11

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் 205

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 196

3. **தோற்றக் கூறுகள்**

அ. 39 ஏடு; 78 பக்கம்
ஆ. நீளம் 26 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
ஏட்டெண் 1 முதல் தொடங்குகிறது
எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்
காண்க:- தொடர் எண்.2262-2.

ஆ. முடிவு
காண்க:- தொடர் எண்.2265-3.

3099. பூதநாடி சூத்திரம்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2278-12

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....
ஆ. பூதநாடி சூத்திரம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 16

3. **தோற்றக் கூறுகள்**

அ. 4 ஏடு; 8 பக்கம்
ஆ. நீளம் 26 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

ஐவிரல் ஐந்து நாடி
அதுசெயும் வகையைக் கேளீர்
மெய்விரல் ஒன்று வாதம்
முன்விரல் ஒன்று பித்தம்
செய்விரல் நடுவே சிலேற்பம்
சேர்விரல் பூத நாடி
மைசிறு விரலே யாகும்
வகுத்தவால் மீகர் தாமே.

(1)

ஆ. முடிவு

நிறைந்திடும் பூத நாடி
நெருப்பது போலே சுட்டால்
சிறந்திடு பீளி யாகும்
செய்திடும் பரிசைக் கேளீர்
குறைந்திடக் குரங்கும் நாயும்
கூட்டமும் பயமுங் காட்டும்
மறந்திடா மயக்கஞ் செய்யும்
வால்மீக ருரைத்த வாறே.

(16)

5. **பிற செய்திகள்**

பூத நாடி சாத்திரத்தினின்றும் இந்நூல் வேறானது.

3100. வால்மீகர் நாடி சூத்திரம்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2278-13

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. வால்மீகர்

ஆ. வால்மீகர் நாடி சூத்திரம்

இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 6

3. **தோற்றக் கூறுகள்**

அ. 2 ஏடு; 4 பக்கம்
ஆ. நீளம் 26 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
ஏட்டெண் 4ல் நூல் தொடங்குகிறது
எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

சீலையை நனைத்து வெற்றித்
திறமணிக் கடையிற் சுற்றிக்
காலமே மூன்றே முக்கால்
நாழிகை கண்ட பின்பு
சாலவே சீலை வாங்கில்
தனிவிரல் வாத நாடி
கோலமாய்க் குதித்து வாங்கில்
குறைந்திடு மரண மென்றே. (1)

ஆ. முடிவு

முந்திய நனைத்த சீலை
முதமணிக் கடையிற் சுற்றி
உந்தியே மூன்றே முக்கால்
உள்ளதே சென்ற போது
தந்திபோல் வாத நாடி
தனியது தாண்டி வாங்கில்
செந்திரு வாளே சொன்னோம்
சீக்கிர மன்று சாவே. (6)

3101. நெய்ச்சீலைச் சூத்திரம்

1. நூலகக் குறிப்பு

அ. 2278-14

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. நெய்ச்சீலைச் சூத்திரம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 5

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்

ஆ. நீளம் 26 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை
ஏட்டெண் 5ல் நூல் தொடங்குகிறது

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பனிப்படு சீலை தன்னைப்
பயனுட நெய்யில் துவைத்து
மணிக்கிடை சுத்தி வைத்து
மறுத்துநா ழிகையொன் றானால்
துணிப்புடன் உற்றுப் பார்க்கில்
சுகமுடன் வாத நாடி
தணிப்புடன் சூடு கொண்டால்
சாவில்லை பிழைப்பார் தாமே. (1)

ஆ. முடிவு

ஆடையே நனைத்துச் சுற்றி
அணிக்கிடைக் குறிப்பு நெய்யில்

ஊடவே சுற்றிப் பார்க்கில்
உள்ளதோர் நன்மை தின்மை
தேடியா ராய்ந்து பார்த்துச்
செகதலம் விளங்க நாளும்
நாடிவால் மீகர் சொன்னா(ர்)
நானொன்று மறிந்தி லேனே.

(5)

3102. அடித்தலை அளவு சூத்திரம்

1. நூலகக் குறிப்பு

அ. *2278-15*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. அடித்தலை அளவு சூத்திரம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 10

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 6 பக்கம்
ஆ. நீளம் 26 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
ஏட்டெண் 6ல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வெள்ளை வாரணம் பாதம் வணங்கியே
உள்ளங் கால்கய றுச்சி வரைக்குமே
மெள்ள அளந்துள குறிப்(பை) எல்லாமும்
வள்ளல் வால்மீக முனிவர் சொல்வாரே.

(1)

ஆ. முடிவு

சாத்திரக் கயற்றை மேனி
    தன்னடி சிரசில் மட்டும்
சூத்திர மளந்து பார்க்கில்
    சொல்க்குறி விளம்பக் கேளீர்
பாத்திர முழமும் நாளும்
    பணிவிர லிருபத் தெட்டு
காத்திரஞ் சாணும் எட்டு
    கண்டதால் சாவான் மெய்யே.

(10)

3103. பலவிரல் சூத்திரம்

1. **நூலகக் குறிப்பு**

   அ. 2278-16

2. **உள்ளீடு : நூல் விவரம்**

   அ. ....
   ஆ. பலவிரல் சூத்திரம்
   இ. மருத்துவம்
   ஈ. செய்யுள் 5

3. **தோற்றக் கூறுகள்**

   அ. 2 ஏடு; 4 பக்கம்
   ஆ. நீளம் 26 செ.மீ., அகலம் 3 செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து
   ஊ. நல்லநிலை
   ஏட்டெண் 8ல் நூல் தொடங்குகிறது
   எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

   அ. தொடக்கம்

   பரிந்திடும் பாகம் பாதி
       பற்றிய விரலும் பத்து

தரிந்திடு மிகுதி தோன்றும்
　　தகைவிரல் உள்ளம் பத்து
அரிந்திடுந் தலையில்ச் சூழ
　　அளந்திடுங் கயற்றை நோக்கி
விரிந்திட அறியச் சொன்னார்
　　விரும்புவால் மீசுர் தாமே.

(1)

ஆ. முடிவு

பத்திய பாகந் தள்ளிப்
　　பணிமுழ மொன்று தள்ளிச்
சுத்திய விரலு மத்துச்
　　சூட்சமாய்த் தளர்ந்து கண்டால்
வெத்திய விதிதா னென்று
　　மேதினி யறியச் சொன்னோம்
சித்தியா மருந்து செல்லுஞ்
　　சீக்கிரம் பிழைப்பான் தானே.

(5)

பலவிரற்குறி முற்றிற்று.

3104. சுர நூல்

1. நூலகக் குறிப்பு

அ. 2278-17

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. புலிப்பாணி

ஆ. சுர நூல்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 16

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம்

ஆ. நீளம் 26 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்

உ. சுமாரான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தானென்ற அசுபதியில் முதற்கா லப்பா
தயவான ஒன்பதுநாள் சுரமே தீரும்
தேனென்ற ரெண்டாங்கால் கொல்லு மப்பா
திரமாகப் பத்தாம்நாள் மரண மாகும்
கோனென்ற மூன்றாங்கால் பதினைந் தாகும்
குணமாகா நாலாங்கால் மரண மாகும்
வானென்ற பரணிதனில் முதற்கால் மூன்று
வளமான ரெண்டாங்கால் ஏழா மென்னே.

(1)

ஆ. முடிவு

தீதான சனிநாள்ரே பதியும் ஆகத்
தீங்குவரும் இந்நாளில் நோய்கண் டக்கால்
வாதான நமனுக்கே அறுதி யாகும்
வந்தநோய் தீராது கொல்லும் கொல்லும்
தானான வயித்தியரே நூலைப் பார்த்துத்
தயவாக வயித்தியங்கள் செய்ய வேணும்
கோனான பேருக்குக் கடாட்சத் தாலே
கொற்றவனே புலிப்பாணி சொன்னேன் பாரே.

(16)

5. பிற செய்திகள்

தொடர் எண் 2350இல் இதே பெயரில் அமைந்துள்ள நூல் வேறு; ஆனால் நுதல் பொருள் ஏறக்குறைய ஒன்றே.

3105. அகத்தியர் 205க்குச் சூத்திரம்

1 நூலகக் குறிப்பு

அ. 2278-18

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் 205க்குச் சூத்திரம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 14

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 6 பக்கம்
ஆ. நீளம் 20.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கேளப்பா நவலோக மார ணந்தான்
　　கெடியான வயித்தியந்தா னிருநூற் றஞ்சாம்
தேளப்பா கொட்டுதல்போ லிந்தச் சூத்ரம்
　　சொல்லுவேன் இரும்புறா தாளங் கெந்தி
வாளப்பா வெள்ளியிரு வங்கத் துக்கு
　　மால்தேவி வெடியுப்பு வெள்ளை சீனம்
சூளப்பா செம்புக்குக் கெந்தி வங்கம்
　　சூதமொடு துருசுவெள்ளைச் சார மூன்றே.

(1)

ஆ. முடிவு

காச்சவே யிருவேலித் தயிலத் துக்கு
சார்வான பழச்சாறுகை யாஞ்சாறும் தீண்டவே
தாளிச்சார் வகைக்குக் காற்படி வீதம்
சார்வாக சேர்த்தெண்ணெய் காய்ச்சே.

(14)

3106. மருந்து செய்முறை

1. **நூலகக் குறிப்பு**
   அ. 2279

2. **உள்ளீடு : நூல் விவரம்**
   அ. ....
   ஆ. மருந்து செய்முறை
   இ. மருத்துவம்
   ஈ. உரைநடை
   அச்சில் ஏறத்தாழ 175 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**
   அ. 164 ஏடு; 328 பக்கம்
   ஆ. நீளம் 17 செ.மீ., அகலம் 3 செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 6,7 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து
   ஊ. முதலேடு எழுதும் நிலையில் இல்லை
   உள்ளவை நல்லநிலை
   எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

..... காந்தம், அரிதாரம், துருசு, துத்தம், ஆனகிராம்பு, ஓமம், அரத்தை, குக்கில், கானக் கொளுவிந்தம், மரமஞ்சள், வீளாவரிசி, வெப்பாலை, இந்திரசம், சாதிலிங்கம், மேலரிசி, வெந்தயம், சதகுப்பை, காயம், திரிகடுகு ....

ஆ. முடிவு

குழையடிக்கவும்:- ஓம் கிலியும் இகாகச்ச ... சிரியும் அங்கொறோம் அங்கிஷ சவ்வும் எவ்வும் சுவாகா.
நமோ காளி, பத்திர காளி, நிருவாணீ மோகே மோகே விந்துகா மோகே; சருவேந்திராணீ சருவ மோகினி நம. ஓம் கெம்கெம் வரவும் அய்யும் கிரியும் சுவாகா.

5. பிற செய்திகள்

இடையிடையே மாந்திரீகச் செய்திகளும் உள்ளன.

3107. சட்டைமுனி நிகண்டு

1. நூலகக் குறிப்பு

அ. 2280-1

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. சட்டைமுனி
ஆ. சட்டைமுனி நிகண்டு
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 292

3. தோற்றக் கூறுகள்

அ. 58 ஏடு; 116 பக்கம்
ஆ. நீளம் 29.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. சுமாரான நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காண்க:- தொடர் எண்.2267.

ஆ. முடிவு

பலப்பலவாந் துறைகளெல்லாம் விரித்துச் சொன்னேன்
பாங்கான அங்கமெல்லாம் நிகண்டி னாலே
பலப்பலவாந் துறைபேதம் நாம பேதம்
பண்பான சொற்பேதம் பாத பேதம்
பலப்பலவாய் வஸ்த்துவொடு குருவின் பேதம்
பார்க்கிற்சந் தானக்கிரா வணத்தின் பேதம்
பலப்பலவாய்க் கிடவாமல் நிகண்டில் சொன்னேன்
பாங்கான சின்மயத்தின் பதந்தான் முற்றே.

(41)

ஆகப் பாடல் 292.

3108. மருத்துவ நூல்

1. நூலகக் குறிப்பு

அ. 2280-2

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 296

3. தோற்றக் கூறுகள்

அ. 23 ஏடு; 46 பக்கம்

ஆ. நீளம் 29.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8-10 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

ஏட்டெண் 58ல் நூல் தொடங்குகிறது

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஞான தத்துவத் தெரிசனஞ் சரதங்கண்டு
உற்றே யுணர்ந்து உடலை யறிந்துநீ
மத்தே கணத்தில் பார்வை நிறுத்தி
ஒத்தே பசிக்கு ஓங்கிட நன்றே.

(1)

ஆ. முடிவு

அரைத்து உருட்டி யடவாகக் காய்ந்தபின்
இரைத்தே யிருசிலை நேராகச் செய்திட்டுத்
தரைத்தே மணலுக்குள் தாக்கு புடமஞ்சு
விரைத்தே வெளியில் விளங்கப் புடமிடே.

(296)

3109. குதிரை வாகடம் மூலமும் உரையும்

1. நூலகக் குறிப்பு

அ. *2280-3*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. கொற்கை குணராச சூரியன்

ஆ. குதிரை வாகடம் மூலமும் உரையும்

இ. மருத்துவம்

ஈ. செய்யுளும் உரைநடையும்

அச்சில் ஏறத்தாழ 40 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 15 ஏடு; 30 பக்கம்

ஆ. நீளம் 29.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

ஏட்டெண் 52ல் நூல் தொடங்குகிறது

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

எழுவகைக் குதிரைப் பிறப்புக்கும் வகையறிதல்:-

வடநூலின் வழிகண்டே யமரைக் காத்து
வருதுரகப் பிறப்பின்வகை வளருங் கெந்தம்
இடமான சுழிநரம்பு வன்னஞ் சத்தம்
எழுத்தவளம் வயதுதின்மை ஏறு தோஷம்
விடமான நோயின்வகை மருந்து தந்தம்
மேவும்வகை யால்வயசு விளங்கு நாமங்
குடமேவு முனிபகர்ந்த தமிழாற் சொன்னேன்
குணராச சூரியன்பூங் கொற்கை யானே.

(1)

ஆ. முடிவு

கீள்வா யலகு மயிரின்றி
  வாயுஞ் சிவக்கிற் கேடில்லை
தாளே குறிதாய்க் கால்குரம்போற்
  காளம் போலக் குரல்நன்றாய்
வாள்வாய் நெற்றி யுரம்பெருத்து
  மதுவின் நிறம்போல் விழிநன்றாய்
ஏழுஞ் சுமந்த பாம்பதுபோல்
  ஏத்தி சிலையே மிகநன்றாய்.

(51)

இந்தச் சுருபம்பட்ட குதிரை மிகவும் நன்றென்பது. குதிரை பிறப்பும் சுழி முதலான குணங்களும் முற்றும்.

3110. குதிரை மருத்துவம்

1. **நூலகக் குறிப்பு**

   அ. 2280-4

2. **உள்ளீடு : நூல் விவரம்**

   அ. ....

   ஆ. குதிரை மருத்துவம்

   இ. மருத்துவம்

   ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 50 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

   அ. 17 ஏடு; 34 பக்கம்

   ஆ. நீளம் 29.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.

   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

   ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

   உ. தெளிவான கையெழுத்து

   ஊ. நல்லநிலை

   ஏட்டெண் 67ல் நூல் தொடங்குகிறது

   எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

குதிரை நோயறிதல்:-

ஓடி ஒதுங்கித் திரியும். முதுகைத் தரையிலே யூன்றிக் கொள்ளும். இது ஒரு குணம்.

மருந்து:- முடநாறியிலையும், வெள்ளுள்ளியும் அரைத்து ஒரு எலுமிச்சங் காயளவு உள்ளே கொடுக்கவும்.

ஆ. முடிவு

(குதிரையின்) அண்டவாதத்துக்கு:- தலைப்புண்ணாக்கு பலம் 6, பழைய கருப்பு வெல்லம் பலம் 3. தலைப் புண்ணாக்கை இடித்துத் தூளாக்கிக் கொண்டு சர்க்கரையுங் கூடப்போட்டு இடித்துக் குப்பைமேனிச் சாறும் தும்பைச் சாறுஞ் சமன் கொண்டு இடித்த மருந்திலே விட்டுப் பிசைந்து ஏழுண்டை பிடித்து அதிலொரு யுண்டையை யெறிந்து போட்டு ஆறுண்டையும் மூன்று நாளைக்குக் கொடுக்கவும். அந்தி சந்தி இரண்டு நேரமுங் கொடுக்கவும். காண மாகாது. கொடுக்க வேண்டாம். தண்ணீர் காய்ச்சி ஆறவைத்து ஒவ்வொரு நேரங் கொடுக்கவும் புல்லும் வெய்யிலிலே வாடப்போட்டுப் போடவும்.

3111. சித்தராரூடம்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2280-5

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. சித்தராரூடம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 347

3. **தோற்றக் கூறுகள்**

அ. 45 ஏடு; 90 பக்கம்

ஆ. நீளம் 29.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்

உ. சுமாரான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

குருவிரு கமல பாதம்
கொண்டதென் தலையின் மீதே
குருவிரு சரணத் தேசு
கொண்டதென் விழியி ரண்டும்
குருவிரு சரணத் தூள்கள்
கொண்டதென் நாவின் மீதே
குருவிரு சரண மளவால்
சாரசங் குறிக்கொண் ணாதே.

ஆ. முடிவு

புனலைக் கள்ளி தனைவாட்டிப்
பொருந்தப் பிழிநீ கடிவாயில்
அலருங் கருடக் கொடியரைத்தே
அழுந்தத் துவாலை யிடத்திரும்
மலரும் வீழிச் சமூலமுடன்
வளிநீர் குடுநீ விஷந்திரும்.

(347)

3112. விட மருத்துவம்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2280-6

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. விட மருத்துவம்

இ. மருத்துவம்
ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 25 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

அ. 17 ஏடு; 34 பக்கம்
ஆ. நீளம் 29.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. சுவடியின் பிற்பாதியில் ஏடுகள் இடப்பக்கம் முறிந்துள்ளன
எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

அனங்கனெனும் எலி கடித்தால் உடம்பெரிக்கும். இதுக்கு மருந்து: ஒரு பிடி பீர்க்கம் வேரும் ஊமத்தப் வேரும் அரைத்துப் பசுவின் நெய்யில் நக்கத் தீரும்.

ஆ. முடிவு

நஞ்சு தின்ற பேர்க்கு மருந்து:-
அரளிக்குக் கடுக்காய் கொடுக்கப் போகும்.
பல்லி தின்றால் மாம்பட்டை கொடுக்கப் போம்.
கள்ளிப் பாலுக்கு ஆவரை இலையரைத்துக் கொடுக்கப் போம்.
...... பாலுக்குச் சர்க்கரையும் எள்ளுங் கொடுக்கவும்.

3113. மருத்துவ சதகம்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2281-1

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....
ஆ. மருத்துவ சதகம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 100

3. **தோற்றக் கூறுகள்**

அ. 17 ஏடு; 34 பக்கம்

ஆ. நீளம் 29.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8-10 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. முதலேடு இல்லை. உள்ளவை சுமாரான நிலை

எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

கண்ணான யுபத்தபெண் பதுவே லிங்கம்
கருதுமிவை அய்ந்தாகும் ஞானவிந் திரியம்
தண்ணாகு மய்ந்தாகும் வசனங் கவுனம்
தானமொடு விசர்க்கமா னந்த மய்ந்தே
ஒண்ணான வசனமது வார்த்தை வாய்க்கு
உயிர்க்கூறு கவுனநடை காலினுயிர்க் கூறு
திண்ணாருந் தானமது கொடுக்க வாங்கச்
செய்யுமிரு கைக்குயிரின் கூற தாமே.

(8)

ஆ. முடிவு

பொருந்தியதோர் சதகமென நூறுஞ் சொல்லப்
புகழ்பெரிய நிகண்டுதொல்காப் பியம்பு ராணம்
அருந்தவஞ்சேர் காரிகையே நன்னூல் சின்னூல்
ஆனவுரிச் சொல்நேமி நாதத் தோடு
வருந்திறமாம் பாட்டி யல்எ ழுத்துச் சேர்வு
வருமடிசீர் பொருத்தவிதி யலங்கா ரச்சொல்
திருந்தவறி யேனுரைத்தே னறிவுள் ளோர்கள்
சிறப்பாகக் கொள்வதுங்கள் சிறப்புத் தானே.

(100)

சதகம் முற்றும்.

3114. நோயறி கருவிச் சாத்திரம்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2281-2

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. நோயறி கருவிச் சாத்திரம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 31

3. **தோற்றக் கூறுகள்**

அ. 4 ஏடு; 8 பக்கம்

ஆ. நீளம் 29.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. இரண்டேடுகள் முறிவு
ஏட்டெண் 19ல் நூல் தொடங்குகிறது

எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

வன்னியுங் காலுங் கூடி
மருட்டிலே அபானந் தன்னில்
உன்னியே கூர்(மன் வாய்வு
ஊ)ர்த்திடும் வலப்பக் கத்தில்
பின்னியே யிழுத்து வாங்கும்
பிடரிகண் சுழித்த லாகும்
மன்னியே மயக்க முண்டாம்
வளரெட்டு நாளில்த் தாழ்வாம். (1)

ஆ. முடிவு

இடுப்புடன் விலாவும் சந்தும்
ஏறும்நல் வாயு வாகும்

கடுத்துடன் அயருங் கைகால்
காயமும் மேனி வற்றும்
முடக்கிடுங் கறண்டை முட்டு
முடக்கிடும் நடுக்க லாகி
அடுக்கநல் இடிக்க வாங்கும்
அனல்வாத சீத மாமே.

(31)

3115. சதச்சுலோப சாத்திரம்

1. நூலகக் குறிப்பு

அ. 2281-3

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. சதச்சுலோப சாத்திரம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 104

3. தோற்றக் கூறுகள்

அ. 19 ஏடு; 38 பக்கம்
ஆ. நீளம் 29.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8,9 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
ஏட்டெண் 23ல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சதச்சு லோப ரிசிமொழி சாத்திரம்
பதச்சு லோபநற் பைந்தமிழ் பாடவே
இதச்சொல் வாகடம் இவ்வுல கோர்க்கருள்
முதற்சொல் ஐங்கரன் முன்வந்து காப்பதாம்.

ஆ. முடிவு

முகப்பியங்க சிகிச்சை:-

தேவாலம் பட்டைமொட்டு கோட்டம் மஞ்சள்
சீரகமொ டேழுக்குள் அஞ்சோமஞ் செட்டி
கானமுசல் இரத்தமுடன் ஞாழல் ஏலங்
கனபரியின் குளம்பிலந்தைக் கொட்டை நாகல்
தானமர மஞ்சள்வெள் ளாட்டுப் பாலும்
தனுவாத முடக்கியுறு மருது தங்கம்
ஊனமறு திப்பிலியு முண்மை யாக
முகப்பியங்க சிகிச்சைமுனி மொழிந்த வாறே.

(101)

3116. கர்ணிக சாத்திரம்

1. நூலகக் குறிப்பு

அ. 2281-4

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. கர்ணிக சாத்திரம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 95

3. தோற்றக் கூறுகள்

அ. 19 ஏடு; 38 பக்கம்

ஆ. நீளம் 29.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

ஏட்டெண் 42ல் நூல் தொடங்குகிறது

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

திருமா மறைவா கடநூல் தெளியச்
சிவனா ருமைமா துதெளிந் திடவே
வருமா மறைமா மகனுக் கருள
மகிழ்வால் அருள்வா சகமா மதனைப்
பொருநான் முகன்மா முனிவற் கருளப்
பொருளா னதையே பெரியோர் புகழும்
இருகா திடையே வருநோய்க் குணமும்
இதனால் உயர்வு மியம்பிடு வோமே.

ஆ. முடிவு

விரண விப்புருதிக்கு ரெட்சை:-

கரணிகச் சுவடிலே வெடிபடப் பொருமியே
கனலெனப் புதையவே யெழுமாகில்
அறம்உரைத் தவர்சொனா ருள்மறைப் பொருளினால்
அறிவுவைத் திடுகவே பதின்வேறு
சிறியபுக் கதலினோ டரியபொட் டொ..தினோர்
செவியடிக் கீழுமே செறிவாக
விரணவிப் புருதியார் பொடிபடத் துகளதாய்
விழுமயக் கடலிலே விரைவாக.

(நூல் முற்றுப்பெற்றதாகத் தெரியவில்லை.)

5. பிற செய்திகள்

இந்நூலில் பலவகையான யாப்புகளும் விரவி வந்துள்ளன.

3117. கசாயச் செய்முறை

1. நூலகக் குறிப்பு

அ. 2281-5

2. உள்ளீடு - நூல் விவரம்

அ. ....

ஆ. கசாயங்களின் செய்முறை

இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 40

3. **தோற்றக் கூறுகள்**

அ. 9 ஏடு; 18 பக்கம்
ஆ. நீளம் 29.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து. பிழைகள் மிகுதி
ஊ. நல்லநிலை
ஏட்டெண் 75ல் நூல் தொடங்குகிறது
எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

அத்தி முகவன் அடிதொழுதே அம்புவியில்
மிக்கதோ ரழகான கணபதி கியாழம்
சொல்லுவேண் ஐங்கரன் மூலமொடு கோபிதண்
மூலியும் அதிவீர விர்மமரி அழல்கொண்ட
....

ஆ. முடிவு

விருச்சாதி கசாயம்:-
வெத்தியுடன் நல்ல விருச்சாதிக் யாழம்
புத்தியுடன் தமிழுரையாய்ப் புகலக்கேள் - சித்தியுடன்
ஆடாதோ டையழகு கண்டங் கத்திரியும்
கோடாச் சிறுவழுத லைகொடியசுக்கு - வாடாத
கடுக்காய் ....

(41)

3118. சூரணங்கள் செய்முறை

1. **நூலகக் குறிப்பு**

அ. 2281-6

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. சூரணங்கள் செய்முறை

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 56

3. **தோற்றக் கூறுகள்**

அ. 6 ஏடு; 12 பக்கம்

ஆ. நீளம் 29.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. முதலேடு காணப்படவில்லை

உள்ளவை நல்லநிலை

எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

தாளிசப்பத்திரிச் சூரணம்:-

கொள்ளே பித்த சுரசோகை
   கோல வயிற்றிற் சத்திகுன்மம்
வள்ளே கிரீச்ரம் சயரோகம்
   மயங்கு மக்கினி வாய்வுமந்தம்
தள்ளே மூல வாயுவெல்லாந்
   தானாத் தீருந் தப்பாது
நள்ளே முனிவன் தானுரைத்த
   நயஞ்சேர் பத்ரிச் சூரணமே.

(8)

ஆ. முடிவு

நேர்பெறவே தகரம்வெப் பாலரிசி மாஞ்சி
   நிறைந்ததொரு கூவிளைவேர் அமுக்கு ராவேர்
கூர்மைதரு மலைதாங்கி வேரி னோடே
   கொத்தமல்லி யுட னேசித் திரமூலி கூட்டி

வீரமுடன் பதங்கன்செய்து தூளாய்க் கூட்டி
வெல்லஞ்சர்க் கரைதேனில் வெருகடிய துண்ணச்
சேரவருஞ் சத்திகுன்மம் வாயு வெல்லாந்
தீருமர னாணையிது திண்ணந் தானே.

(56)

3119. நோய்க்கு மருந்து

1. நூலகக் குறிப்பு

அ. *2281-7*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. நோய்க்கு மருந்து

இ. மருத்துவம்

ஈ. உரைநடை

அச்சில் ஏறத்தாழ 150 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. *95 ஏடு; 190 பக்கம்*

ஆ. *நீளம் 29.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.*

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மூலத்துக்கு:- பசுவின் உப்புக் கண்டந் தட்டிப் பொடிசெய்து, புளியஞ்சிராய் கொண்டு வந்து, குழி கிள்ளித் தீப்போட்டு, சட்டி கவிழ்த்தித் தூரிலே பொருத்து. அந்தப் பொடி போட்டுப் புகைக்கவும். அப்படிப் பன்னிரண்டு புகை பிடிக்கவும். சட்டி

வாயிலே புகையேறாமல் கவு...ப் போட்டுப் பிடிக்கவும். இப்படி ஆறு நாள் பிடிக்கவும். உள்மூலம். இரத்தக் கடுப்பு, பிற மூலந் தீரும்.

ஆ. முடிவு

இஞ்சிச் சூரணம்:- இஞ்சி பலம் 8 தோல் களைந்து வட்டம் வெட்டி இரு நாழிப் பசுவின் தயிரில் போட்டு உலர்த்திக் கொள்ளவும். சீரகம் பலம் 1 இரு நாழி எலுமிச்சம் பழச்சாற்றில் போட்டு உலர்த்திக் கொள்ளவும். அதிமதுரம் பலம் 8, திப்பிலி பலம் 8, ஏலம் பலம் 3, கிராம்பு பலம் 3, வால்மிளகு பலம் 3, நாகப்பூ பலம் 3 இடிச்சு வடிகட்டி வெருகடிப் பிரமாணம் சர்க்கரையில் சேவிக்கவும். பித்தவாய்வு தீரும். ருசி பசி யுண்டாம்.

3120. மருந்து செய்முறை

1. **நூலகக் குறிப்பு**

அ. 2282

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. மருந்து செய்முறை

இ. மருத்துவம்

ஈ. செய்யுளும் உரைநடையும்

அச்சில் ஏறத்தாழ 250 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

அ. 152 ஏடு; 304 பக்கம்

ஆ. நீளம் 34.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6,7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து. பிழைகள் மிகுதி

ஊ. 1-97, 219ஆகிய ஏடுகள் இல்லை

பல ஏடுகள் முறிந்துள்ளன
சில ஏடுகள் ஏட்டெண் மட்டும் குறிக்கப்பெற்று
வெற்றேடுகளாக உள்ளன

எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

பாலாவிப் பாகு:-
ஆறுமுகவர் தமையனடி அனுதினமும் போற்றியே
ஆவின்நற் பாற்பாகு மேவிஉரை பகருவேன்
அடவின் பட்டைபலம் ஓர்நாலு அக்கினி
அதிகுக்கில் கருஞ்சூரை யானகரி சீரகம்....

ஆ. முடிவு

....
ஆகுமே மேனிதெளி வானபலந் தாதுக்கள்
அதிகமது மேவுமே அன்புற்ற பொதிகையில்
முன்புற்ற மாமுனிவர் அருள்மறைகள் ஆராய்ந்து
அவனிதனில் உரைசெய்த அருந்தமிழ்ப் பயனாமே.

இவை முற்றும்.

3121. நோய்க்கு மருந்து

1. **நூலகக் குறிப்பு**

அ. 2283

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....
ஆ. நோய்க்கு மருந்து
இ. மருத்துவம்
ஈ. உரைநடை
அச்சில் ஏறத்தாழ 70 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

அ. 66 ஏடு; 132 பக்கம்

ஆ. நீளம் 16.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு பல்வேறு பத்திகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

மேகத்துக்கு மருந்து:- துத்திவேர் பிடுங்கி மேல்தோல் இளக்கித் தாணிக்காயளவு அரைத்துத் தேங்காய்ப் பால் பிழிந்து கால் (¼) படி பாலில் கரைத்துக் குடிக்கவும். மூன்று நாள் உதயத்தில் குடிக்கவும். மேகம் தீரும். இதுக்குப் பத்தியம்:- உப்பு, புளி, புகையிலை ஒன்றும் கூட்டப்படாது. கஞ்சியும் சோறும் சாப்பிடவும். நெத்தலிக் கருவாடு, முருங்கையிலை கூட்டவும். நான்கு நாள் வெந்நீர் வைத்துத் தாரை விடவும். ஏழாம் நாள் நல்லெண்ணெய் முழுகவும்.

ஆ. முடிவு

கெற்பப்புழு விட மருந்து:- கழச்சிக் கொழுந்து ஒரு பிடி, வெள்ளுள்ளி அரிசி ஒரு சிரங்கை, கண்ணாம்பைக் கரைத்துத் தெளிய வைத்த தெளிவுத் தண்ணீரில் அரைத்துக் கலக்கிக் கொடுக்கவும். பேதியோடே மலட்டுப் பூச்சி விழுந்துபோம். பேதி அதிகம் கண்டால் உப்புக் கூட்டி அன்னப்பால் சாப்பிடவும்.

3122. சிரரோக விதி

1. **நூலகக் குறிப்பு**

அ. 2284-1

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. சிரரோக விதி

இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 141

3. **தோற்றக் கூறுகள்**
அ. 16 ஏடு; 32 பக்கம்
ஆ. நீளம் 34 செ.மீ., அகலம் 4 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
பிழைகளும் விடுபாடுகளும் மிகுதி
ஊ. நல்லநிலை
எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**
அ. தொடக்கம்

வேதநான் முகத்தோன் னாயுள்
வேதத்தில் விரித்துக் கூறுங்
கோதிலா வியலா னாவே
குறுமுனி யருளிச் செய்தார்
ஆதலால் தமிழி னாலே
ஆய்ந்துணர்ந் துரைத்த .....
மூதுரை வாக டத்தின்
முறைமையை மொழியும் வாறே.

(1)

ஆ. முடிவு

கரப்பன் பலதுக்கும் பொடி:-
வெள்ளெருக்கு இசங்கம்வேர் சிவனார் வேம்பு
மிக்கபுங்கம் பட்டைநில வாகை வேரும்
வெள்ளியுரி வேர்கானாங் கள்ளி வேரும்
வேளைவேர் திருமேனி வேரும் பின்னை
வெள்ளைக்காக் கலம்வேர் ... கரிச் சைவேர்
வேம்பின்வேர் பழங்காய் ....கொழுந்து பட்டை
வெள்ளைத்தூ தளைவேருஞ் சோதி வேரும்
மிக்கவொன்று பலம்பத்து விரைந்து லர்த்தே.

(141)

3123. அகத்தியர் முப்பு 50

1. நூலகக் குறிப்பு
   அ. 2284-2

2. உள்ளீடு : நூல் விவரம்
   அ. அகத்தியர்
   ஆ. அகத்தியர் முப்பு 50
   இ. மருத்துவம்
   ஈ. செய்யுள் 50

3. தோற்றக் கூறுகள்
   அ. 8 ஏடு; 16 பக்கம்
   ஆ. நீளம் 34 செ.மீ., அகலம் 4 செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 8,9 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து
   ஊ. நல்லநிலை
   ஏட்டெண் 17ல் நூல் தொடங்குகிறது
   எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்
   அ. தொடக்கம்
   காண்க:- தொடர் எண்.2262-4.

   ஆ. முடிவு
   காண்க:- தொடர் எண்.2265-4.

3124. வாதம் - குணமும் மருந்தும்

1. நூலகக் குறிப்பு
   அ. 2284-3

2. உள்ளீடு : நூல் விவரம்
   அ. ....
   ஆ. வாதம் - குணமும் மருந்தும்

இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 191

3. **தோற்றக் கூறுகள்**
அ. 23 ஏடு; 46 பக்கம்
ஆ. நீளம் 34 செ.மீ., அகலம் 4 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
ஏட்டெண் 25ல் நூல் தொடங்குகிறது
எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**
அ. தொடக்கம்
சோதியருள் நாயகன் பாதமே துதிசெய்து
ஆதிமுதல் எண்பது அரசென்ற வாதமும்
நீதியுரை மந்திரி நிறைந்தபெரு வாதமும்
ஓதுவேன் வாதத்தி லுண்மை பலதெல்லாம். (1)

ஆ. முடிவு
இடம்வலம் பிரியொட் டாது
இளகிடில் நிமிரொட் டாது
குடலினில்க் குமுறும் மந்தம்
கொண்டிடும் மலத்தைச் சிக்கும்
உடலினி லுறுப்ப தெல்லாம்
உளைந்துடன் தாதுக் கேடாம்
நடமுறு குறுக்கில் வாதம்
நாட்குநாள் கூனு மென்றே. (191)

3125. வாலமீகர் உறுப்புச் சூத்திரம்

1. **நூலகக் குறிப்பு**
அ. 2284-4

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. வால்மீகர்

ஆ. வால்மீகர் உறுப்புச் சூத்திரம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 10

3. தோற்றக் கூறுகள்

அ. 1 ஏடு; 2 பக்கம்

ஆ. நீளம் 34 செ.மீ., அகலம் 4 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 11 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

ஏட்டெண் 48ல் நூல் தொடங்குகிறது

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காண்க:- தொடர் எண்.2278-9.

ஆ. முடிவு

சூரிய தேக மெல்லாஞ்
 சுடரது போலே தோன்றிஸ்ப்
பாரியுங் கையுங் காலும்
 பஞ்சதால் வெதும்பி நின்றால்ச்
சீரிய முழங்கால் நெத்தி
 திறமுடன் காய்ச்ச லுண்டாய்
ஆரிய மாலி னானே
 அவர்பிழைத் திருப்பார் தாமே.

(10)

3126. காசி காண்டம்

1. நூலகக் குறிப்பு

அ. 2284-5

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அதிவீரராம பாண்டியன்

ஆ. காசி காண்டம் - காலம் அறியும் அத்தியாயம்

இ. தலபுராணம்

ஈ. செய்யுள் 21

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 6 பக்கம்

ஆ. நீளம் 34 செ.மீ., அகலம் 4 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

ஏட்டெண் 49ல் நூல் தொடங்குகிறது

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கறங்குதிரைப் புனற்கங்கை சூழ்கிடந்த காசிதனில்
இறந்துபடு நாள்அணித்தாய் எய்துழியா யினும்செல்கென்று
அறைந்தனைமற் றவைதெளியு மாறினிதிங் கறைகென்னச்
சிறந்தமுனி வரன்கேட்பச் சூர்தடிந்தோன் செப்புமால்.

ஆ. முடிவு

என்று மலயத் தமிழ்முனிவன்
இனிது கேட்பக் குருகுபெயர்க்
குன்ற மெறிந்த சுடரிலைவேற்
குமரன் உரைத்தான் எனத்தெரிந்து
மன்ற மறைகள் ஒருநான்காய்
வகுத்த முனிவர் பணிந்துபுலன்
வென்ற சூத முனிவர்உளம்
தெருளு மாறு விளம்பினனால்.

(21)

3127. அகத்தியர் திருநடன சூத்திரம்

1. நூலகக் குறிப்பு

அ. 2284-6

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் திருநடன சூத்திரம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 48

3. தோற்றக் கூறுகள்

அ. 8 ஏடு; 16 பக்கம்

ஆ. நீளம் 34 செ.மீ., அகலம் 4 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 11,12 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

ஏட்டெண் 52ல் நூல் தொடங்குகிறது

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நாடியதோர் பூரணமாம் வேதாந் தத்தில்
நடனதிருச் சூத்திரத்தைப் பாடு தற்கு
ஆடியதோர் கணபதியுங் கந்தன் காப்பு
அருள்பெருகுஞ் சித்தர்முதல் ரிசிகள் காப்பு
கூடியதோர் ஞானபரை வாலை யாலே
கூறுகிறேன் அகாரமுதல் ரீங்கா ரத்தாற்
பாடியதோர் பலநூல்கள் பொய்யாய்ப் போகப்
பாலர்க்கு மெந்தனுட நூல்கள் தானே.

(1)

ஆ. முடிவு

தானென்ற லிங்கசெந் தூரஞ் சொல்வேன்
தாமிரப்பொடி வெண்கருவா லரைத்துப் பூசி

மானென்ற வளையில்... முலைப்பா லாலே
மடைத்துத்த மெருக்கின்பா லதற்கு மேலே
கானென்ற சூடன்ரண் டுங்கட் டாகச்
...... சீலைமண்தான் நாலுஞ் செய்து
வேனென்ற காடைபுடம் மூன்றுஞ் செய்து
வெகுநோய்க்காஞ் சாதிலிங்கம் விளம்பி னேன்நான்
நன்றாகச் சொல்லிவிட்டேன் ஐம்ப தாக
நாற்பத்தெண் சூத்திரந்தான் நன்றாய் முற்றே.

(48)

3128. அகத்தியர் சூத்திரம் 110

1. நூலகக் குறிப்பு

அ. *2284-7*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. *அகத்தியர்*

ஆ. *அகத்தியர் சூத்திரம் 110*

இ. *மருத்துவம்*

ஈ. *செய்யுள் 103*

3. தோற்றக் கூறுகள்

அ. *16 ஏடு; 32 பக்கம்*

ஆ. *நீளம் 34 செ.மீ., அகலம் 4 செ.மீ.*

இ. *இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது*

ஈ. *ஒரு பக்கத்திற்கு 11 வரிகள்*

உ. *தெளிவான கையெழுத்து*

ஊ. *நல்லநிலை*

ஏட்டெண் 60ல் நூல் தொடங்குகிறது

எ. *முழுமை*

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சொல்லுகிறேன் பொன்வெள்ளி யிரும்பு செம்பு
தோராத காரீயம் வெள்யீ யந்தான்

கொல்லுகிற மித்திரத்தின் வகையைக் கேளு
கோமியமோர் காடியெண்ணெய் எருக்கம் பாலில்
நல்லதொரு பழச்சாறு சாணச் சாற்றில்
நலமான பொன்முதலா இரண்டுதரம் தோய்க்க
வெல்லரிய வங்கமொடு மூன்றுந் தீயில்
வேகமுட னுருக்கியதில் சாய்க்க நன்றே.

(1)

ஆ. முடிவு

எடுத்தொரு பணந்தான் தூக்கி
இடுதிரி கடுகுத் தூளில்
அடுத்திரு பதுநாள் உண்ண
அட்டகா சங்கள் போகும்
தொடுக்குமந் தார காசம்
சுவாசகா சங்கள் பாண்டு
விடுத்தொரு காதம் போகும்
எனமுனி விளம்பி னாரே.

(103)

3129. கிரந்தி - குணமும் மருந்தும்

1. **நூலகக் குறிப்பு**
   அ. 2284-8

2. **உள்ளீடு : நூல் விவரம்**
   அ. ....
   ஆ. கிரந்தி - குணமும் மருந்தும்
   இ. மருத்துவம்
   ஈ. செய்யுள் 57

3. **தோற்றக் கூறுகள்**
   அ. 7 ஏடு; 14 பக்கம்
   ஆ. நீளம் 34 செ.மீ., அகலம் 4 செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
ஏட்டெண் 76ல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

திருமறை முனிவர் சொன்ன
செந்தமிழ் நூலை யாய்ந்து
குருமொழி யாகச் சொன்னேன்
கிரந்தியீ ரொன்பான் தன்னை
வருமதின் குணமும் பேரும்
மருந்துடன் வகைய தாக
அருமையாய்த் தீருந் தீரா
துண்மையை யுரைக்க லுற்றேன்.

(1)

ஆ. முடிவு

சூலை கிரந்தியுடன் தோன்றும் அரையாப்பும்
வாலப் பவுந்திரமும் மாறிவிடும் - சீலமுள்ள
தென்பொதிகை மாமுனிவன் செப்பினார் உண்மையை
அன்புடனே சொன்னார் அறிந்து.

(57)

3130. பூதநாடி சாத்திரம்

1. **நூலகக் குறிப்பு**

அ. *2284-9*

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....
ஆ. பூதநாடி சாத்திரம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 21

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்

ஆ. நீளம் 34 செ.மீ., அகலம் 4 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 11 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

ஏட்டெண் 83ல் நூல் தொடங்குகிறது

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சாற்றினார் கோவிற் குள்ளே
தான்செயுஞ் சூனி யந்தான்
ஏற்றிடுங் குணமே சொல்வேன்
ஏனமம் வரத்தி னாலே
மாற்றமாஞ் சுரமுண் டாகும்
மயங்கும்நாய் நரிபோல் காணும்
ஏற்றமா யிடுப்பு மேலும்
இயலியே குத்தி நோமே.

(1)

ஆ. முடிவு

பார்த்திடும் பொதிகை மேவும்
பரமனா ரருளிச் செய்த
ஏத்திடும் மருந்தி தெல்லாம்
இகழ்ந்திடா தறிந்து பாரு
தோத்திரஞ் சூனி யம்போய்
தூரவே யோடிப் போகும்
மாற்றமொன் றில்லை யென்றே
மாமுனி யருளிச் செய்தார்.

(21)

5. பிற செய்திகள்

வால்மீகரின் பெயரால் விளங்கும் பூதநாடி சூத்திரம் என்னும் நூல் இதனினும் வேறானது.

3131. கர்ப்ப நோய்கள்

1. நூலகக் குறிப்பு

அ. *2284-10*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. கர்ப்ப நோய்கள்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 18

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்
ஆ. நீளம் 34 செ.மீ., அகலம் 4 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
ஏட்டெண் 85ல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பொதிகையில் வாழும் முனிவன்
புகல்வது வேத நூலின்
துதிதரு மடவார்க் கெல்லாஞ்
சொல்லிடுங் கர்ப்ப ரோகம்
அதிகதோர் புவியில் பத்தும்
அறிவிதம் விபரந் தன்னில்
மதிபடு நுதலாள் கர்ப்பம்
மலடிகள் குணங்கள் சொல்வாம். (1)

ஆ. முடிவு

ஆதிநாள் ஏழ தாகும்
அருஞ்செவ்வாய் ஆற தாகும்

வேதியன் அஞ்ச தாகும்
விதிபுதன் நால தாகுஞ்
சாதியாம் வெள்ளி மூன்று
சனிரெண்டு திங்கள் ஒன்று
நீதியா மார்க்குங் காலம்
நிச்சயம் அறிந்து கொள்ளே.

(18)

3132. ஞான சரநூல்

1. நூலகக் குறிப்பு

அ. 2284-11

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. ஞான சரநூல்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 10

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்
ஆ. நீளம் 34 செ.மீ., அகலம் 4 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
ஏட்டெண் 86ல் நூல் தொடங்குகிறது
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

திருந்திய கண்ணின் குவளையைக் கையாற்
சிக்கெனச் சேர்த்துறப் பார்க்கில்
எரிந்தெழு சோதி தெரிந்திடா தாகில்
ஒரைந்து நாளையி லுய்யும்

பொருந்தவே கையால்ச் செவியினைப் புதைக்கிற்
  புணரிபோல் முழங்கிடா தாகில்
இருந்துள வாணாள் ஏழுநா ளையினில்
  இறந்திடும் என்றறிந் திடுமே.

(1)

ஆ. முடிவு

தாயர்கள் செய்த பாவம்
  சார்ந்துநா லாண்டில் சாவு
தூயதா மெட்டில் சாவு
  தோன்றிடல் தகப்பன் பாவம்
ஆயபன் னீராண் டிற்சாவு
  அன்னவன் அந்நாள் முன்னாள்
தீமையிற் செய்த பாவம்
  தீர்வது சடத்தில் வந்தே.

(10)

3133. கபிலர் அகவல்

1. நூலகக் குறிப்பு

அ. *2284-12*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. கபிலர்
ஆ. கபிலர் அகவல்
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள். அச்சில் ஏறத்தாழ 8 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 6 பக்கம்
ஆ. நீளம் 34 செ.மீ., அகலம் 4 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 11 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

ஏட்டெண் 87ல் நூல் தொடங்குகிறது

எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

நான்முகத்தோன் கூறரிய நானா வகை(யுலகில்)
ஆன்ற சிறப்பின் அரும்பொருள்தான் கூறுங்கால்
ஆண்முதிதோ பெண்முதிதோ ஆண்ட உயிர்முதிதோ
நாண்முதிதோ தோள்முதிதோ நல்வினை மூத்ததோ
....

ஆ. முடிவு

....
ஈயாப் புலையுங் களவும் சீற்றமும்
நிலையறக் களைந்து நிற்பதே யன்றி
ஆணும் பெண்ணும் அதுவுமல் லாமலப்
பேணி வகுப்பது பிழையெனப் படுமே.

3134. வைத்தியன் வாதம்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2284-13

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. வைத்தியன் வாதம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 9

3. **தோற்றக் கூறுகள்**

அ. 2 ஏடு; 4 பக்கம்

ஆ. நீளம் 34 செ.மீ., அகலம் 4 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

வாதுரைக்கும் வைத்தியரே சொல்லக் கேளீர்
வைத்தியர்க்குத் தலைமூன்று கண்ணும் மூன்று
நீதமுள்ள உடலெட்டு கரங்கள் ஆறு
நிலவரமாய்ப் பாதமது நாலுண் டேபார்
ஈதுணர்ந்து சொன்னவனே வைத்ய னாகும்
இவையறியாப் பண்டிதனும் மடையன் அப்பா
சேதமில்லா மனிதரையும் இவனே கொல்வன்
செத்தவன்போல் இருப்பான்செய் மருந்தும் பொய்யே.

ஆ. முடிவு

அகாரமொடும் உகாரமதும் மகாரம் மூன்றும்
அப்பனே இதுமூன்றும் சொல்வார் சொல்வார்
சிகாரமொடு வகாரம்ரெண்டும் அஞ்சும் சேரில்
செப்புவேன் இதுபஞ்சாட் சரம தாகும்
உகாரமொடும் பிரணவந்தான் கூடிற் றானால்
உத்தமனே சடாட்சரத்தின் உயிர தாகும்
மரணமில்லை இம்மூன்றும் பார்த்தா யானால்
வாகான சிதம்பரத்தின் நடுவணையீ தாமே.

3135. மருத்துவக் குறியீடுகள்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2284-14

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. மருத்துவக் குறியீடுகள்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள்

அச்சில் ஏறத்தாழ 7 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

அ. 3 ஏடு; 6 பக்கம்

ஆ. நீளம் 34 செ.மீ., அகலம் 4 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 11 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

கார்குழல்மின் னேதிரி யாம்கடு கைப்புகல்வேன்
சீர்மிளகு சுக்குடனே திப்பிலியாம் - நேரே
திரிபலைஎன் றோதுவது சேர்கடுக்காய் தான்றி
அருநெல்லிக் காய்மூன் றதுவாம் - குறியுடனே
....

ஆ. முடிவு

....
அஞ்சனக்கல் லேயமளை ஆனதுவும் வாசிகையும்
விஞ்சைபெறு வேள்மருந்து மின்னரசே - பஞ்சதொகை
வேதையுறு கின்றசுண்ணம் மேவுகல் லேகிளிஞ்சல்
ஊதுசங்கு நத்தைநண்டென் றோர்.

5. **பிற செய்திகள்**

இறுதி இரண்டேடுகளில் 4448 நோய்களின் விவரம் எழுதப்பட்டுள்ளது.

3136. மணவை மகாதேவர் கப்பல்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2284-15

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. மணவை மகாதேவர் கப்பல்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள் 12

3. **தோற்றக் கூறுகள்**

அ. 2 ஏடு; 4 பக்கம்

ஆ. நீளம் 34 செ.மீ., அகலம் 4 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 16 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

சித்தர்மெஞ் ஞானம் போற்றுந்
தேசிக லிங்க சங்க
முத்தனாம் மணவை மேவும்
முதல்மகா தேவர் மீதில்
தத்துவக் கப்பல் சிந்து
தனையிசை யாகப் பாடப்
பெற்றிடு மூலா தாரப்
பிள்ளையார் காப்ப தாமே.

(1)

ஆ. முடிவு

இருந்திடுமே வரைதனிலே ஏந்திழையா ளிசைந்திடவே
பரிந்துவளர் குதிரையுடன் பன்னிரண்டு ஆனைகளும்
அருந்துவளர் கப்பலினில் ராவுத்த ராபவர்
அங்கங்கு முண்டுகுரு வருள்கொண்டு பார்த்திடு
பெருந்துறை யறிந்தபின் அசைவற்ற கடலிலே
பிசகாம லோடுவாய் மகாதேவ ரருள்பெற.

(12

3137. நோய்க்கு மருந்து

1. நூலகக் குறிப்பு

அ. 2285

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. நோய்க்கு மருந்து

இ. மருத்துவம்

ஈ. உரைநடை

அச்சில் ஏறத்தாழ 150 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 166 ஏடு; 332 பக்கம்

ஆ. நீளம் 29 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 3 பத்திகள்

உ. சுமாரான கையெழுத்து

ஊ. 1-38, 46, 87, 97, 100-108, 118, 136, 138, 190, 202 ஆகிய ஏடுகள் இல்லை

உள்ளவை மோசமான நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மேலே இருந்த திருநீற்றை எடுத்துச் சுக்கு, மிளகு, திப்பிலி, நெல்லிக்காய், தாணிக்காய், கடுக்காய் 3/4 பலம் பொடி செய்து இந்தப் பொடியும் இந்தத் திருநீறும் ஒரு பணவிடைச் செந்தூரமும் தேனில் கொடுக்கச் சூலை, இளைப்பு, காணி, சுவாசம் தீரும்.

ஆ. முடிவு

பெரும்பாட்டுக்கும் தண்டோடே இரத்தம் விழுகிறதுக்கும் மருந்து:- பருத்தியிலைச் சாறு 3/4படி அதிலே கல்லுக் காய்ச்சிப் போட்டு அதிலே மூன்று

காசிடை நல்லநீர் விட்டுக் கலக்கிக் கொடுக்கவும்.
பெரும்பாடு நிற்கும். தண்டோடே இரத்தப்
விழுகிறதுக்கும் கொடுத்தால் நிற்கும்.

3138. இராமதேவர் சூத்திரம் - பலதிரட்டு

1. நூலகக் குறிப்பு

அ. 2286-1

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. இராமதேவர்

ஆ. இராமதேவர் சூத்திரம் - பலதிரட்டு

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 76

3. தோற்றக் கூறுகள்

அ. 10 ஏடு; 20 பக்கம்

ஆ. நீளம் 36 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. இடப்பக்கம் முறிந்துள்ளது

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியந்த மாய்நிறைந்த சோதி பாதம்
அகண்டபரி பூரணத்தின் அறிவைக் கூடிப்
பாதியாய் முப்பொருளு மூன்று மொன்றாய்ப்
பரவெளியாய் நின்றபரா பரையின் பாதம்
நீதியாய் விரரணத்தின் முகவன் பாதம்
நிறைந்தமலர் வாணிகுரு கந்தன் பாதம்
சோதியாம் நாதாக்கள் பாதம் போற்றிச்
சொல்லுவேன் சூத்திரத்தைச் சொல்லு வேனே.
(1)

ஆ. முடிவு

நிசமான கருவெல்லாம் சுத்தி .....
நீலகண்ட ருத்திரனும் பட்ச முந்தன்
வசமாகும் நாதாக்கள் வார்த்தை சொல்வார்
அந்நேரம் குருவந்து உபதே சிப்பார்
சதமான பூரகமும் ரேசகமு மப்பா
தருவான கும்பகமும் பூர்ண மொன்றாய்
அசவையிலே மேல்நோக்கும் அமுத சிந்து
அறுவீதி கடந்துநீ யப்பால் செல்லே.

(76)

3139. இராமதேவர் கருக்கடைச் சூத்திரம் 500

1. நூலகக் குறிப்பு

அ. 2286-2

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. இராமதேவர்
ஆ. இராமதேவர் கருக்கடைச் சூத்திரம் 500
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 519

3. தோற்றக் கூறுகள்

அ. 79 ஏடு; 158 பக்கம்
ஆ. நீளம் 36 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6-8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. முதல் ஐந்து ஏடுகள் இடப்பக்கம் முறிந்துள்ளன
மற்றவை நல்லநிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காண்க:- தொடர் எண்.2286-1.

ஆ. முடிவு

வையப்பா சகலகலைச் செய்தி யெல்லாம்
வளமாக அடக்கியே தெளிவாய்ச் சொன்னேன்
அய்யமென்று நினையாதே பிழைபே சாதே
ஆத்தாளை அனுதினமு மறவா தேநீ
செய்யாதே தீவினைதான் கொடிது பாவஞ்
சேர்ந்தவெல்லாம் ஈசனென்று தெளிந்து காணு
மெய்யான குருபதத்தைப் பணிந்து போற்றி
விளம்பினேன் கருக்கடைச்சூத் திரந்தான் முற்றே.
(519

இ. பிற்குறிப்பு

இந்த இராமதேவர் சூத்திரம் ஐந்நூறும் எழுதினே இலட்சுமண நாராயண பிள்ளை மகன் சங்கரமூர்த்தி எழுதி சுவடி. 986ஆம் (கொல்லம்) வருடம் பங்குனி மாதம் 9 தேதி பூர்வபட்ச நட்சத்திரத்தில் எழுதி முகிந்த சுவடி.

3140. மருத்துவ நூல்

1. நூலகக் குறிப்பு

அ. 2287-1

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 88

3. தோற்றக் கூறுகள்

அ. 7 ஏடு; 14 பக்கம்
ஆ. நீளம் 19 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து

ஊ. 1-10 ஏடுகள் இல்லை
உள்ளவை நல்லநிலை

எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

மசறி நோயின் குணம்:-

மான்விழி மாதே கேளாய்
　மசறிநோய்க் குணங்கள் தன்னை
ஊன்வயி றுளைந்து சீத
　முடன்மலங் குருதி நின்று
சூன்குத வாயில் குத்திக்
　குமுறியே குருதி வீழ்ந்து
தீமலத் துடனே சீதஞ்
　சிதறியே யுதப்பீ தள்ளும்.

(57)

ஆ. முடிவு

கொன்றை பிரமி தைவேளை
　கூடி முள்ளி வசம்புசுக்கு
கண்டூர் ஏலம் சிவதையொடு
　கடிய இந்து கடுக்காயுங்
கொண்டே யரைத்துத் தான்கலக்கிக்
　குணமாய் ரெண்டுந் தானுழக்கு
கண்டே வெந்து தான்வடித்துக்
　கரண்டி யெண்ணெய் கொண்டிடுகில்
பண்டே கெந்த தாளியும்போம்
　பாரீர் புண்ணும் போய்விடுமே.

(88)

3141. கணையின் குணம்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2287-2

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. கணையின் குணம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள்

அச்சில் ஏறத்தாழ 30 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 19 ஏடு; 38 பக்கம்

ஆ. நீளம் 19 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

ஏட்டெண் 18ல் நூல் தொடங்குகிறது

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கரிமுக னடியை வாழ்த்திக்
கமலவா கனனைப் போற்றி
அரியமுத் தமிழி னாலே
அகத்தியமா முனிவன் சொன்ன
பெருகும்மா வியாதி யான
பேசுமக் கணையின் தோசந்
தெரியவே புவியின் மீதே
செப்பினேன் சிந்தை வைத்தே.

ஆ. முடிவு

நல்லதோர் முசுட்டைத் தண்டும்
நலம்பெறு முருங்கைப் பூவும்
சொல்லிய கண்ணாய் வெள்ளஞ்
சுகம்பெறக் குறுக்கிக் காயம்
வெல்லவுங் கலக்கிக் கொண்டால்
விரைந்திடுந் தீரை தானும்

அல்லிப்பூங் குழலி வாளே
அறிந்திடு திண்ணந் தானே.

3142. பிள்ளைப்பிணி நிதானம்

1. **நூலகக் குறிப்பு**
அ. 2287-3

2. **உள்ளீடு : நூல் விவரம்**
அ. ....
ஆ. பிள்ளைப்பிணி நிதானம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுளும் உரைநடையும்
அச்சில் ஏறத்தாழ 80 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**
அ. 44 ஏடு; 88 பக்கம்
ஆ. நீளம் 19 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6,7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**
அ. தொடக்கம்
அன்னமும் பாலும் நெய்யும்
அருந்திய பழத்தின் வித்தும்
பன்னிய பயறு தேங்காய்
பரியதோர் கதலிக் காயுந்
தின்றபின் கால்கு ளிர்ந்து
தீயென வெதும்பிக் காய்ந்து
உன்னியே கனத்து நாவும்
உலர்ந்துதான் குளிர்ச்சி தோன்றும்.

ஆ. முடிவு

போமேடா சுறியோட்டில் ஊதும் போது
போக்காகக் கனன்விட்டு ஆடும் ஆடும்
ஆமேடா கல்லுப்பைக் கூட்டி யூது
நல்லதொரு பயறுமணி போலே யாகும்
நாமேடா ஆணவத்தால் வெளியில் போட்டேன்
நாட்டாதே கள்ளரென்ற மாணி டர்க்கு
தாமேடா இதுவெல்லாம் அறிந்து கொண்டு
தாரணியில் விள்ளாதே யடக்க முற்றும்.

தட்சிணாமூர்த்தி சூத்திரம் பத்தும் முற்றும்.

5. **பிற செய்திகள்**

அகத்தியர் சூத்திரம் 16, தட்சிணாமூர்த்தி சூத்திரம் 10 போன்றவைகளின் ஒரிரு பாடல்கள் தொகுக்கப்பெற்று உள்ளன.

3143. அகத்தியர் சூத்திரம் 6

1. **நூலகக் குறிப்பு**

அ. 2287-4

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் சூத்திரம் 6
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள் 6

3. **தோற்றக் கூறுகள்**

அ. 3 ஏடு; 6 பக்கம்
ஆ. நீளம் 19 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

பாடுகிறேன் சூட்சமது வாதி னுள்ளே
பண்பான பிள்ளைகளுக் கடக்கித் தானே
ஊடுகிறேன் இரண்டெழுத்துஞ் சரந்தா னாச்சு
உத்தமனே மனோன்மணிதா னிருந்த வீடு
நாடுநீ அகாரத்தில் மேலே தாக்கு
அண்டமெல்லாம் படைத்ததொரு ஆத்தா ளைத்தான்
தேடியே ஒன்றாக்கிச் சித்தெல்லாம் பாரு
திறந்துவிட்டேன் ஞானத்தின் திறவு தானே.

(1)

ஆ. முடிவு

பாரப்பா வைங்கோண வெழுத்தி னாலே
பராபரத்தின் ஒளிகாட்டும் பாரு பாரு
ஆரப்பா விந்துவிட எழுத்தே யாகும்
ஆச்சரியம் மற்றொன்றா லாடா தப்பா
காரப்பா பெரியோரைப் பணிரெண் டாண்டு
கருத்தறிந்து திறங்கண்டு கையி லீவார்
வேரப்பா வேதைக்கு இதுதா னாறு
வேதாந்தி யானாக்கால் செய்ய நன்றே.

(6)

பாட்டு ஆறும் முற்றும்.

3144. மருத்துவ நூல்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2288-1

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....
ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 92

3. தோற்றக் கூறுகள்

அ. *11 ஏடு; 22 பக்கம்*
ஆ. நீளம் 23.5 செ.மீ., அகலம் 4 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. முதலேடு இல்லை
உள்ளவை சுமாரானநிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

துஞ்சியெழு வாதபித்த முயிர்தா னப்பா
சூட்சமாய்த் துன்றியது சுழன்று தேய்ந்து
மஞ்சியே யத்திபத்திக் குருதித் தம்மில்
மேவியே மார்புள்ளே வாங்கு மாகில்
அஞ்சியே பட்சமொன்றி லடங்குஞ் சீவன்
அரகரா அவத்தையிதை யறிந்து யிந்த
பஞ்சியே சூத்திரம் வாத பித்தம்
பக்குவத்தை நன்றாகப் பார்த்திருப் பாயே.

(8)

ஆ. முடிவு

வளர்ந்திடும் நாடி யெல்லாம்
வகைவகை யாய்ந்து பார்த்து
வளர்ந்திடும் நோய்கட் கெல்லாம்
வளர்ந்திடுஞ் சூத்தி ரங்கேள்
வளர்ந்திடும் மணிகட் கெல்லாம்
மருந்தினில் ஒழியும் காணே.

(92)

3145. அகத்தியர் வைத்திய சூத்திரம் 300

1. நூலகக் குறிப்பு

அ. 2288-2

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் வைத்திய சூத்திரம் 300

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 301

3. **தோற்றக் கூறுகள்**

அ. 73 ஏடு; 146 பக்கம்

ஆ. நீளம் 23.5 செ.மீ., அகலம் 4 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

காலுந் தலையும் கடந்துநடு வாகிநின்ற
மேலுந் துரிய விளக்கமே - பாலம்
வயித்தியமுந் நூறுமே சூத்திரம தாய்வழங்கப்
பயித்தியரு ளுங்கணேசா பார்.

ஆ. முடிவு

மூலத்தி னெழுந்தாலே மவுனங் கொண்டு
    மூட்டினால் வடுகனங்கே நிர்த்தஞ் செய்வான்
ஆலத்தின் குண்டலிக்குள் அடுக்கப் பாரு
    ஆசையவன் வைப்பதற்கு வடைமாலை சாத்து
சீலத்தின் நந்தியுட பூசை பண்ணு
    சேகண்டி நாதவொலி மணியி னோசை
காலத்திற் கருவறிந்து பூசை தீர்ந்தால்
    கைக்குளவாம் வைத்தியமுந் நூறும் முற்றே.

(301)

3146. குருநாடி சாத்திரம் 255

1. நூலகக் குறிப்பு

அ. 2288-3

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. குருநாடி சாத்திரம் 255

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 255

3. தோற்றக் கூறுகள்

அ. 60 ஏடு; 120 பக்கம்

ஆ. நீளம் 23.5 செ.மீ., அகலம் 4 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. தெளிவான பெரிய கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஓங்காரங் கொண்டெழுந்த செய்கை யாலே
உற்றுணர்ந்து சூத்திரமாய் உரைத்த வாறும்
பாங்கான நாடிநரம் பான வாறும்
....
....
...... யாராய்ந்து பாடி வைத்தேன்
நீங்காத கணபதியும் கந்த னுந்தான்
நிசமாக வந்துதவும் காப்புத் தானே.

ஆ. முடிவு

ஒருநூலா யடக்கிவைத்து .... யாக
உரைதெரிந்து சொன்னேனான் உலகோர் மெய்க்கக்
குருநாடி போலவொரு நூலுஞ் சொல்லார்
குறிப்பறிந்தே யிந்நூலைக் கூர்ந்து பார்த்தோர்

பெருநூலைத் தேடியிங்கே அலைய வேண்டாம்
பின்னுமொரு சாத்திரத்தி லிதுபோ லில்லை
ஒருமொழியா யிருநூற்றுஅன் பத்தஞ் சுந்தான்
ஏணிவைத்துக் கொடுத்ததுபோ லிருக்குந் தாமே.
(255)

குருநாடி சாத்திரம் இருநூற்று அன்பத்தஞ்சு முகிந்தது

3147. அகத்தியர் வைத்திய நிகண்டு

1. நூலகக் குறிப்பு

அ. 2289

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் வைத்திய நிகண்டு - மூலமும் உரையும்

இ. மருத்துவம்

ஈ. செய்யுளும் உரைநடையும்
அச்சில் ஏறத்தாழ 50 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 21 ஏடு; 42 பக்கம்

ஆ. நீளம் 34.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள், 5 பத்திகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியைப் போற்றி செய்தே
அறிவுள்ள வயித்தி யோர்கள்
(ஓதிய) வாக டத்தில்
ஒழிந்திடும் மருந்தை யெல்லாம்

ஆதினம் பண்டி தோருக்கு
அஞ்சன நிகண்ட தாக
மாதவ மருந்தை யெல்லாம்
வகைவகை பிரித்துச் சொல்வார். (1)

ஆ. முடிவு

மத்துகம்	- கருமத்து
மயிலியரு	- செங்கத்தாரி
மத்தாடி	- கருமத்து
மணமலி	- மருக்கொழுந்து
மத்தம்	- கருமத்து
மருகுக	- மந்தாரம்
மடலி	- மயிரோசனை
மகாபலா	- வில்வப்பத்திரி

ஆக வயித்திய நிகண்டு அகராதி உரை முற்றும்.

3148. சோதிடச் செய்திகள்

1. **நூலகக் குறிப்பு**
   அ. 2290-1

2. **உள்ளீடு : நூல் விவரம்**
   அ. ....
   ஆ. சோதிடச் செய்திகள்
   இ. சோதிடம்
   ஈ. உரைநடை

3. **தோற்றக் கூறுகள்**
   அ. 26 ஏடு; 52 பக்கம்
   ஆ. நீளம் 16.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 3,4 பத்திகள்
   உ. தெளிவான கையெழுத்து
   ஊ. நல்லநிலை
   எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

வாரம் ஆறிய:- ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி ஆக வாரம் 7.

ஆ. முடிவு

நிலம் அஞ்சுக்கும் பேர்:- குறிஞ்சி நிலம், பாலை நிலம், முல்லை நிலம், நெய்தல் நிலம், மருத நிலம் ஆக நிலம் 5.

3149. அகத்தியர் வாகடப் பிள்ளைத்தமிழ்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2290-2

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் வாகடப் பிள்ளைத்தமிழ்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 33

3. **தோற்றக் கூறுகள்**

அ. 16 ஏடு; 32 பக்கம்

ஆ. நீளம் 16.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

சீர்மலிந்து வளர்ந்தோங்கத் திருமலியும்
பொதிகைவளர் தேவ தேவன்
பாரிலங்கு புவனசரா சரப்பிரம்ம
நோயகலப் படிக்குஞ் செஞ்சொற்

பேரிலங்கு வாகடப்பிள் ளைக்கவிதைக்
கருள்சொரிந்து பெருமை கூறக்
காரிலங்கும் விகடதந்திக் கணபதிதன்
னிருசரணங் காப்ப தாமே.

(1)

ஆ. முடிவு

சுகமாக அரிதாரம் அறுகளஞ் சதுகட்டித்
துண்டுதுண் டாகுமாங்கற்
சுண்ணத்தை நீற்றிக்க லக்கிப்ப னீரிலே
தோளாந்திர மாயெரித்துப்
புகையூரல் முக்கழஞ் சதனோடு கற்சுண்ணப்
பொடியதும் முக்கழஞ்சு
பூண்டரைத் திடுமுலைப் பாலதிற் சாமமரை
பொற்குன்றி போலுருட்டிச்
செகதலத் தோர்களிடம் வருசுர மனைத்துமே
தீர்ந்துவிட வெல்லமதிலே
சேர்த்திரண் டுண்டையிடு சுரதோஷ முழுதுமே
சேரப்ப றக்குமெனவே
சகலரிசி முனிவர்புகழ் பொதிகைமலை யாதிபன்
சப்பாணி கொட்டியருளே
சங்கரர்க் கினிதான தவமுறும கத்தீசர்
சப்பாணி கொட்டியருளே.

(33)

3150. உரிச்சொல் நிகண்டு

1. நூலகக் குறிப்பு

அ. 2290-3

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. காங்கேயன்

ஆ. உரிச்சொல் நிகண்டு: 6-10 தொகுதி வரை

இ. இலக்கணம்

ஈ. செய்யுள் 37

3. **தோற்றக் கூறுகள்**

அ. *16 ஏடு; 32 பக்கம்*

ஆ. *நீளம் 16.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.*

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

வலம்புரி கோடு வளைகம்பு நத்து
சலஞ்சலம் சங்கு பணிலம் - இலங்கிய
நித்திலம்முத் தாரம் தரளம் துகிர்துப்பு
வித்துருமம் விற்பவளமாம்.

(1)

ஆ முடிவு

ஞானம பதவு பனுவலு மாமென்பர்
ஊனமாங் குன்றலும் நிச்சயமும் - ஆனா
மறைமந் திரம்வேதம் மாவாம் புரி....
சிறைவண்டு சூதந் திரு.

(36)

பத்தாவது ஒருசொற் பலபொருட் பெயர்த்தொகுதி முற்றும்.

5. **பிற செய்திகள்**

நூலை அடுத்து உரிச்சொல் நிகண்டின் பதிப்புகளில் காணப்பெறாத ஒரு கட்டளைக் கலித்துறை இடம்பெற்று உள்ளது. இதன் இரண்டாமடி தெளிவாக இல்லை. பா வருமாறு:-

உத்தம சீலத்துக் காங்கேயன் சொன்ன உரிச்சொல்தனை
வைத்து மனத்தி லிருக்கா னைவர்க்கும் வணிகனகற்றோர்
சித்தம் மகிழப் பராச்ரம பாண்டிய தேவன்கண்டீர்
பத்துத் தொகுதியுஞ் சொற்றான் எவரும் படித்திடவே.

3151. மாந்திரீகம்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2290-4

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. மாந்திரீகம்

இ. மாந்திரீகம்

ஈ. செய்யுளும் உரைநடையும்
அச்சில் ஏறத்தாழ 30 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

அ. 17 ஏடு; 34 பக்கம்

ஆ. நீளம் 16.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்குப் பல வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

ஒன்றாய் இருந்தது உலகம்
இரண்டாய் இருந்தது சிவம்
மூன்றாய் இருந்தது சிஞ்ஞாசனம்
நாலாய் இருந்தது வெள்ளிக்கொடி.

ஆ. முடிவு

மருந்து கூடச் சேர்த்து அரைத்துப் பின் பசுவெண்ணெய் கூட்டிச் சாலித்து வழித்து வச்சுக்கொண்டு சிரங்கு, கரப்பன் புண்களில் துவரத்துவர மருந்து பூசி வரவும். சாயரச்சை குளித்துத் தேய்ச்சுக் கழுவவும். இப்படி இரண்டு மூன்று நாள் செய்து அப்பியங்கனஞ் செய்யவும். சகல சிரங்கும் நிவர்த்தி. இது உபதேசம்.

5. பிற செய்திகள்

இதனுள் மருத்துவம் மற்றும் சோதிடச் செய்திகள் சிறுபான்மை இடம்பெற்றுள்ளன.

3152. மருந்து செய்முறை

1. நூலகக் குறிப்பு

அ. 2291

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. மருந்து செய்முறை

இ. மருத்துவம்

ஈ. உரைநடை

அச்சில் ஏறத்தாழ 150 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 72 ஏடு; 144 பக்கம்

ஆ. நீளம் 28 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து, பிழைகள் மிகுதி

ஊ. சுமாரானநிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

புளிக்குழம்பு: புண்ணம்புளி வீசை 1, வெல்லம் வீசை 4 குறுக்கிப் பாதியாக்கிப் பிழிஞ்சு அரிச்சே இதினுகரக்கம். சுக்கு, மிளகு, திப்பிலி, காயம், கறாபசு வெள்ளைவுள்ள.... காழாயம் வீத்தி அரிச்சு கலக்கி நாலு பலம் சர்க்கரையும் கூட இட்டு வெந்து குழம்புப் பருவத்தில் எடுத்து, புதுக்கல்வத்தில் வழிச்சு வச்சு, அதில் ஒரு நாரங்காய்ப் பிரமானம் குடுக்க உப்புப்புளி.

சுஞ்சி வெல்லம் காத்தும் வெயிலும் வர்த்திக்கக் குடுத்த நாளளவு நல்லு இருப்புப் பித்தக் குன்மம் தீரும்.

ஆ. முடிவு

மூலங்கிராணிக்கு மருந்து:- கருங்கோழியைக் கொண்டு வந்து காலுங் குடலுந் தூவல் தள்ளி வருங்குயிலெப் பொடிப்பொடியாய் வனமாயரிந்து குன்றியின் சாறு நெருங்கவிட்டு வெந்துவரும் தேய்காய்ப் பூவும் இட்டு மருங்க வறுத்துப் பொடியாக்கி வளஞ்சொட்ட சூரணமும்....

3153. மாந்திரீகம்

1. நூலகக் குறிப்பு

அ. 2292

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. மாந்திரீகம்

இ. மாந்திரீகம்

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 120 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 61 ஏடு; 122 பக்கம்

ஆ. நீளம் 24 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8,9 வரிகள்

உ. சுமாரான கையெழுத்து

ஊ. சுமாரானநிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அரிஓர். கராநிருதராய நம. உகார சூரியாய நம. இறியும் ஸ்ரீயும் சகல சர்ப்பங்களும் நசிய நசிய சிவய

சிவய சூரியாய நம. இந்த மந்திரம் கை, கால் சுத்தி செய்து, செம்பில் சலம் வைத்து அந்தச் சலத்தில் சக்கரம் எழுதி 108 முறை எழுதி அந்தச் சலத்தைக் கண்ணும் மூக்கும் கழுவி உள்ளும் கொஞ்சம் சேவித்துக் கொள்ளவும்...

ஆ. முடிவு

பொரிகாரம், வாளம், சிவதை, சீரகம், கடுகுரோகணி, இந்துப்பு, மஞ்சள், காயம், வெடியுப்பு, கறியுப்பு, சித்திரமூலம், சுக்கு, மிளகு, திப்பிலி வகைக்குப் பலம் 3. இரசம் பலம் 1, லிங்கம் பலம் 1, குமட்டிக்காய்ச் சாறு, எலுமிச்சம் பழச்சாறு, சாணம் அவிச்ச சாறு படி, இஞ்சிச் சாறு, நொச்சிச் சாறு, வெள்ளுள்ளிச் சாறு, பசுவின் பால், ... சாறு படி 2, கள்ளிப்பால் படி ¼.....

5. பிற செய்திகள்

இச்சுவடியினுள், சில மருத்துவச் செய்திகளும் இடம்பெற்றுள்ளன.

3154. நயனவிதி

1. நூலகக் குறிப்பு

அ. 2293-1

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. நயனவிதி

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 289

3. தோற்றக் கூறுகள்

அ. 88 ஏடு; 176 பக்கம்

ஆ. நீளம் 19 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வெள்ளையில் சிவப்ப தன்றி
விளங்குநற் படிகம் போன்றுந்
தெள்ளிய சோதி தன்னில்
திகழ்தர வண்ண மாகும்
உள்(ளிய) பேதத் தங்கே
உன்முகம் விளங்கு மாகில்
ஒள்ளிய நயன மாகும்
ஒப்பிது குறிகண் டாயே.

ஆ. முடிவு

ஒற்றல் பொட்டணம்:-
உள்ளியுங் கொள்ளுஞ் சுக்கும்
ஒன்றிய மிளகு மஞ்சள்
ஒள்ளிய பொட்டணங் கட்டி
ஒத்திடும் ஒத்தி னக்கால்
வள்ளிய வாத காசம்
வந்தன வலிக ளெல்லாம்
தள்ளியும் மெள்ளப் போகுந்
தாழ்விலை தோஷ மில்லை.

(289)

3155. மருந்து செய்முறை

1. நூலகக் குறிப்பு

அ. 2293-2

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. மருந்து செய்முறை
இ. மருத்துவம்

ஈ. உரைநடை

அச்சில் ஏறத்தாழ 10 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

அ. 20 ஏடு; 40 பக்கம்

ஆ. நீளம் 19 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

ஏட்டெண் 89ல் நூல் தொடங்குகிறது

எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

சந்தனாதி குளிகை: பீதரோகணி, துத்தம், வெள்ளி லோத்திரம், கற்பூரம், அஞ்சனக்கல், தேற்றாம் விரை, படிகம், அதிமதுரம், சங்கு, நாவி, கடல்நுரை, காவிமண், சந்தனம் ஆக இந்த மருந்தெல்லாஞ் சமன் கொண்டு, எலுமிச்சம் பழச்சாற்றிலரைத்து, உண்டை செய்து, கண்ணில் முலைப்பாலிலுரைத்திடத் தொண்ணூற்றாறு (கண்) வியாதியுந் தீரும்.

ஆ. முடிவு

நேத்திர சூலைக்கு:- பேய்க்கொம்மட்டி வேர், ஒருபடி நல்லெண்ணெயிலே வெந்து தலையிலே வார்த்து ஆமணக்கிலை கொண்டு கட்டி வைக்கவும்.

கலங்கம்:- சுக்கு, மிளகு, திப்பிலி, குப்பைமேனிச் சாற்றிலரைத்து குப்பைமேனிச் சாற்றிலுரைத்திடவும்.

3156. வாகட நூல்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2293-3

2. உள்வீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. வாகட நூல்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 151

3. தோற்றக் கூறுகள்

அ. 41 ஏடு; 82 பக்கம்

ஆ. நீளம் 19 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை
ஏட்டெண் 109ல் நூல் தொடங்குகிறது

எ. குறை

4 சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பாதிமா துமையொரு பாகனா ரருளிய
தீதிலா வாகட நலைச் செந்தமிழ்
நீதியா யெனக்கிது நிறைய வோதுவாய்
ஆதியே பரமனே அகரகரா சிவசிவா.

(1)

ஆ. முடிவு

தானே பூர்வ விதியதனால்
சாரும் பிணிகள் அல்லாமல்
மானேர் விழியார் வேட்கையினால்
வரும்தீப் பிணியும் பசியாலே
தானே பொறுத்தும் உன்கையினால்
தாகந் தன்னால் மிகச்சார்ந்து
தேனே காயம் புண்ணாகிச்
செய்யும் ப்ரமேகச் செயல்தானே.

(151

3157. அகத்தியர் 205

1. **நூலகக் குறிப்பு**
   அ. 2294-1

2. **உள்ளீடு : நூல் விவரம்**
   அ. அகத்தியர்
   ஆ. அகத்தியர் 205
   இ. மருத்துவம்
   ஈ. செய்யுள் 203

3. **தோற்றக் கூறுகள்**
   அ. 29 ஏடு; 58 பக்கம்
   ஆ. நீளம் 25 செ.மீ., அகலம் 3 செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து
   ஊ. 9ஆம் ஏடு இல்லை
   உள்ளவை நல்லநிலை
   எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**
   அ. தொடக்கம்
   காண்க:- தொடர் எண்.2278-18.
   ஆ. முடிவு
   காண்க:- தொடர் எண்.2265-3.

3158. அகத்தியர் குழம்பு

1. **நூலகக் குறிப்பு**
   அ. 2294-2

2. **உள்ளீடு : நூல் விவரம்**
   அ. அகத்தியர்
   ஆ. அகத்தியர் குழம்பு

இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 25

3. **தோற்றக் கூறுகள்**

அ. 4 ஏடு; 8 பக்கம்
ஆ. நீளம் 25 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. தெளிவான சிறிய கையெழுத்து
ஊ. நல்லநிலை
ஏட்டெண் 32ல் நூல் தொடங்குகிறது
எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

பருவதந் தன்னில் வாழும்
பரமனார் அருளி னாலே
பொருமையா யுலகி லுள்ள
புண்ணிய சனங்க ளுக்கு
உருபல வியாதி வந்தால்
உண்மையாய்த் தீரு மென்று
பெருபல முனிவன் றானும்
பேசிய மருந்து கேளே.

(1)

ஆ. முடிவு

கொடுக்க வசம்பு தான்முருங்கைக்
கொழுந்தும் சேர்த்துக் கிசாயமதாய்த்
தடுக்க ஏத்திக் கொடுப்பீரேல்
தானே ஏகும் மலக்கழிச்சல்
அடுக்க வாந்தி மிகக்கண்டால்
அச்சீ ரகக்கி ஷாயத்தில்
நடுக்கச் சரக்கைக் கூட்டியுண்ண
நலமாம் வாந்தி கண்டீரே. (25)

5. பிற செய்திகள்

தமிழ்ப் பல்கலைக்கழகம் இந்நூலைச் சிறந்த பதிப்பாக வெளியிட்டுள்ளது.

3159. மூலிகை வண்ணம்

1. நூலகக் குறிப்பு

அ. 2294-3

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. மூலிகை வண்ணம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 1

அச்சில் ஏறத்தாழ 4 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு; 8 பக்கம்

ஆ. நீளம் 25 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்

உ. தெளிவான சிறிய கையெழுத்து

ஊ. நல்லநிலை. ஏட்டெண் 35ல் நூல் தொடங்குகிறது

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சம்புதனில் வேர்விரையை உண்பவர் கிராணிமூலம்
தென்புடனே தீரு மென்று கும்பமுனி
தானு ரைத்தார் சித்திர பெலத்து
மூலம் நிமற்ற ராவலாய்க் கொணர்ந்து
சத்தாகிலுங் கிசாயம் வைத்தாகிலுங் குடிக்கில்
பித்தமொரு சீதம் பேதுத்ததொரு மேல்வயறு
....

ஆ. முடிவு

....

புங்கதனின் மூலிகையில் மங்குசேர் தேமல்களும்
பொங்குஆண்ட வாதசன்னி யிங்கிதமா யோடும்புரை
மாங்கொழுந்தி னால்நசியம் மூக்கதனிலே விடவே
தாக்குடனே கூடுமவள் போக்கிவிடுமே தலையில்
ஆரறிவார் மூலிகைப் பிரயோகமே.

(1)

வண்ணம் முற்றும்.

3160. உடலறி விளக்கம்

1. **நூலகக் குறிப்பு**
   அ. 2294-4
2. **உள்ளீடு : நூல் விவரம்**
   அ. சங்கராசாரியார்
   ஆ. உடலறி விளக்கம்
   இ. தத்துவம்
   ஈ. செய்யுள் 30
3. **தோற்றக் கூறுகள்**
   அ. 8 ஏடு; 16 பக்கம்
   ஆ. நீளம் 25 செ.மீ., அகலம் 3 செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து
   ஊ. நல்லநிலை
   எ. குறை
4. **சிறப்புச் செய்திகள்**

   அ. தொடக்கம்

   காண்க:- தொடர் எண்.2275-2.

   ஆ. முடிவு

   தத்துவங்க ளஞ்செழுத்தில் பிறந்த வாறுந்
   தனித்தனியே பிரித்தெனக்குத் தெரிய நன்றாய்

உரைத்தபடி தெளிந்து... விபரத் தோடு
ஓரெழுத்துக் கிவ்வளவென் றறிந்து கொண்டேன்
சித்தமகிழ்ந் தெட்டெழுத்துத் தெய்வப் பேரைச்
சிறக்கவுரைத் திடத்தயவு செய்வா யென்று
மெத்தவனும் வருந்தியிரு கரங்கு வித்து
மெல்லடியில் வீழ்ந்துவாய் புதைத்து நின்றான்.
(30)

இ. முற்குறிப்பு

1010ஆம் (கொல்லம்) வருடம் மார்கழி மாதம் 22 சுக்கிர வாரமும் அவிட்ட நட்சத்திரமும் கூடின சுப தினத்தில் எழுதி வருகிறது. விநாயகமூர்த்தி பாதாரவிந்தமே கதி.

5. பிற செய்திகள்

முதலேட்டில், 'அத்தனா ரருளாலே ஆதி யாலே' எனத் தொடங்கும் பாடல் உள்ளது. இந்நூலினையடுத்து மூன்று ஏடுகளில் 'ஞானவெட்டியான்' என்னும் நூலின் ஏழு பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

3161. மருந்து செய்முறை

1. நூலகக் குறிப்பு

அ. 2295

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. மருந்து செய்முறை
இ. மருத்துவம்
ஈ. உரைநடை
அச்சில் ஏறத்தாழ 5 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு; 10 பக்கம்
ஆ. நீளம் 36 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. சுமாரான நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கருங்காலி லேகியம்:- கர்ப்ப ரோகம், சுரோணிதக் கட்டு, குன்மம், பாண்டு, சோகை, காமாலை, விதை வீக்கம் இவைக்கு பொரிகாரம், வாளம் விதை, சீரகம், கடுகு, கடுகுரோகணி, இந்துப்பு, மஞ்சள், காயம், வெடியுப்பு, சுரியுப்பு, சித்திரமூலம், சுக்கு, மிளகு, திப்பிலி ஆகப் பலம் 13. ரசம் பலம் 15, லிங்கம் பலம் 15, கும்மட்டிக்காய்ச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு, சாணம் அவிச்ச தண்ணீர், நிலவாகைச் சாறு, இஞ்சிச் சாறு, நொச்சிச் சாறு, வெள்ளுள்ளிச் சாறு, பசுவின் பால் ஆகப் படி...

ஆ. முடிவு

சர்ப்ப விஷமானுதுக்கெல்லாம் மிளகளவு சிறுநீரில்க் கொள்ளவும். அரையாப்பு, முலைக்குத்து, பிளவை, பருச்சிலந்தி, மண்டையிடி இதுகட்கும் பூசவும். வாதஞ் சூலைக்கு வேப்பெண்ணெயில் மஞ்சாடியிட்டுக் காய்ச்சிப் பூசவும். தினம் சிறுபயறளவு சாப்பிட்டால் சர்ப்பங்கள் தீண்டினால் விடம் இல்லை. சர்ப்ப வியாதிக்கெல்லாம் அனுபான விசேசங்களினாலே கொடுக்கவும்.

5. பிற செய்திகள்

இறுதியில்,

அறுக்கத் தழைக்கும் அரைக்கீரை
    அளையச் சுரக்கும் யிந்திரியம்
கறக்கச் சுரக்கும் ஆவின்பால்
    கற்றால் நூலின் பயன்தெரியும்
இறைக்க ஊறும் பாழ்ங்கிணறும்
    ஈயச் செல்வம் மிகஉண்டாம்

திறக்கத் தெரியும் மெஞ்ஞானம்
தெளியத் தெரியும் சிவபதமே.

என்ற பாடல் இடம்பெற்றுள்ளது.

3162. நோய்க்கு மருந்து

1. **நூலகக் குறிப்பு**
   அ. 2296

2. **உள்ளீடு : நூல் விவரம்**
   அ. ....
   ஆ. நோய்க்கு மருந்து
   இ. மருத்துவம்
   ஈ. உரைநடை
   அச்சில் ஏறத்தாழ 80 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**
   அ. 90 ஏடு; 180 பக்கம்
   ஆ. நீளம் 22.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 5,6 வரிகள்
   உ. பலவகையான கையெழுத்து
   ஊ. நல்லநிலை
   எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**
   அ. தொடக்கம்

   மந்தார காசத்துக்கு மருந்து:- பேய்க்கொம்மட்டி இலைப்பழுப்பு உதிர்ந்தால் பறித்துக் கொண்டு வந்து பொடி வண்ணி, சீலைவடி கொண்டு வைத்து மந்தாரகாச மெடுத்தால் ஒரு துட்டுக் காசிடைப் பொடி உரிய வெந்நீரில் கொடுக்கவும். ஒரு நாழிகைக்குள்ளே வாயாலே கோழையாயெடுக்கும். வயிறு பருத்துத் தான்கழியும். வாயாலே யெடுத்த 'கோழையைப் பார்த்தால் புழு விழும். இல்லையானால் வயத்தாலே புழுவிழும். இல்லை என்று வராது.

ஆ. முடிவு

சீக்குக்கு மருந்து:- சமுத்திர .... வடக்கே போற வேரைப் பிடுங்கி பேரும் நாளும் சொல்லி வலிக்கிற இடத்திலே தடவி, அடுப்பில் உமி காரந் தணலில் கருகத் தீ யெரிக்கவும். குணம்.

3163. ரோமரிஷி சூத்திரம் 100

1. நூலகக் குறிப்பு

அ. *2297-1*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. *ரோமரிஷி*

ஆ. *ரோமரிஷி சூத்திரம் 100*

இ. *மருத்துவம்*

ஈ. *செய்யுள் 100*

3. தோற்றக் கூறுகள்

அ. *49 ஏடு; 98 பக்கம்*

ஆ. *நீளம் 18.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.*

இ. *இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது*

ஈ. *ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்*

உ. *தெளிவான கையெழுத்து*

ஊ. *நல்லநிலை*

ஏட்டெண் 131ல் நூல் தொடங்குகிறது

எ. *முழுமை*

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மூலவட்ட மானகுரு பாதங் காப்பு
முத்திக்கு வித்தான முதலே காப்பு
மேலவட்ட மானபரப் பிரமங் காப்பு
வேதாந்தங் கடந்துமென்றன் மெய்யே காப்பு
காலவட்டத் தங்கிமதி யமுதப் பாலைப்
கண்டுபசி யாறிமனக் கவடு நீக்கி

ஞாலவட்டச் சித்தாடும் பெரியோர் பாதம்
நம்பினதால் ரோமனென்பேர் நாயேன் நானே.
(1)

ஆ. முடிவு

உப்பல்லோ பிண்டத்தில் சேர்ந்த போது
உடல்உயிறு மொன்றாகித் தண்ணீ ராச்சு
அப்பவல்லோ முப்பூவுக் காணி யாணி
அதைவிட்டால் கட்டாது வழலை மார்க்கஞ்
செப்பவல்லோ பந்துக்கு மூட லாச்சு
தீட்சணமா யிந்தநூல் தெளிவோ ரொம்ப
முப்பொருளு மொன்றாகி நின்ற சோதி
மூலவட்டக் குருவாலென் மொழிதான் முத்தே.
(100)

ரோமரிஷி சூத்திரம் முற்றும்.

3164. மலைவாகடம்

1. **நூலகக் குறிப்பு**
   அ. 2297-2

2. **உள்ளீடு : நூல் விவரம்**
   அ. ....
   ஆ. மலைவாகடம்
   இ. மருத்துவம்
   ஈ. செய்யுள் 420

3. **தோற்றக் கூறுகள்**
   அ. 103 ஏடு; 206 பக்கம்
   ஆ. நீளம் 18.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 6-8 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து. பிழைகள் ஏராளம்
   ஊ. நல்லநிலை
   இடையில் இரண்டு ஏடுகள் முறிந்துள்ளன

ஏட்டெண் 180ல் நூல் தொடங்குகிறது

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மலைவா கடமா கியமா மருந்தின்
இதமா கியவேர் கொழுந்தஞ் சதுக்குங்
கலையோ தியமுன் னோர்முறை நூலின்
கனமா கவேஆய்ந்து நீயவ ணிதனில்
நிலையா கியவெண் பணிபூண் டவளை
நினைவா கியநெஞ் சில்நினைந் துதிகழ்
தலையா கியசெந் தமிழுரை பகரத்
தயவா கியசங் கரர்தாள் துணையே.

ஆ. முடிவு

செண்பருத்திப் பூவின் குணம்
செண்பருத்திப் பூக்கள்தே விக்குகந்த பட்சம்
வண்பொருந்தும் பல்கணங்கள் மாய்ப்பியமாந் - தண்பொருந்தும்
அரத்தைவே லிக்காகும் அதிமேகம் உட்டிணம்போஞ்
சுரத்திலுறுங் கப்பனறுஞ் சுரோணிதம் போம்.

(420)

3165. மருத்துவ நூல்

1. நூலகக் குறிப்பு

அ. 2297-3

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 137

3. தோற்றக் கூறுகள்

அ. 28 ஏடு; 56 பக்கம்

ஆ. நீளம் 18.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

பிழைகள் மிக அதிகம்

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ராமாஞ்சியின் குணம்:-

ராமாஞ்சி யென்றுரைக்கில தின்மூலம் ஆனைவிளா
காரேஞ்சும் காரவினை காதம்போம் - வாரேஞ்சும்
வன்கடிக்குப் பூச(வே) வாராது சில்விடங்கள்
தன்சுடிக்கவ் விலையால்தா பம்போம்.

(1)

ஆ. முடிவு

பலாக்கொழுந்தின் குணம்:-

அக்கொளுந்து மந்திக்கும் அனேகம் வியாதியது
மிக்குளசுர் யெல்லூறு மேதினியிற் - சொற்குள்சுரம்
சொல்லும் பருச்சிலந்தி தொடராது வன்கரப்பன்
யெல்லில் பிலச்சையங்கே ளேகுமாம்.

(137,

5. பிற செய்திகள்

இச்சுவடியும் மலைவாகடத்தின் ஒரு பகுதியோ என எண்ணத் தோன்றுகிறது.

3166. மாந்திரீகம்

1. நூலகக் குறிப்பு

அ. 2298

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. மாந்திரீகம்

இ. மாந்திரீகம்

ஈ. உரைநடை

அச்சில் ஏறத்தாழ 75 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

அ. 68 ஏடு; 136 பக்கம்

ஆ. நீளம் 17 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7,8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. சுமாரான நிலை

இறுதிப் பத்தேடுகள் இடப்புறம் முறிந்துள்ளன

பிழைகள் மிகுதி

எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

பெண் கட்டு:- மூத்திரம் பேஞ்ச மண்ணை வறுத்துக் கணுவில்லாத முடியும் தாயுமாகத் தைத்து அந்த மண்ணை யதுக்குள்ளே வைத்து மூடி அதைச் சதிர்க்கள்ளியைத் துளைத்து அதுக்குள்ளே வைக்கவும். சுருங்கும். அதை எடுத்து நீரில்ப் போடத் தீரும்.

ஆ. முடிவு

தாழை விழுது விளைகின் .... பொன்னாங்காணி ஆறு மாத்தைக் காடி வாங்கா .... செவ்விளநீர் விளைந்த பூவொன்று .... லாம் மூன்று நாள் துவாலையிடவும்.

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

5. **பிற செய்திகள்**

இடையிடையே மருத்துவச் செய்திகளும் இடம்பெற்று உள்ளன.

3167. மருந்து செய்முறை

1. **நூலகக் குறிப்பு**

அ. 2299-1

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. மருந்து செய்முறை

இ. மருத்துவம்

ஈ. உரைநடை

அச்சில் ஏறத்தாழ 30 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

அ. 55 ஏடு; 110 பக்கம்

ஆ. நீளம் 13 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரிகள்

உ. சுமாரான கையெழுத்து. பிழைகள் மிகுதி

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

கந்தகம் பலம் 5 வாங்கிக் கொண்டு, கரண்டியில் வைத்து, 3 பலம் நெய் ஒரு கரண்டி கூடவிட்டு, உருக்கி, பசுவின்பால் சாய்த்து, திரும்பயெடுத்து, கரண்டியில் வைத்து உருக்கி நிற்கிறபோது, இரண்டு கழஞ்சு ரசத்தை விட்டுக் கிண்டி, குழியம்மியில் போட்டு நன்றாயரைத்து வருகிறபோது பயர்க்கள் கருப்புக்கட்டி கூடப்போட்டு நன்றாயரைத்து, சுண்டைக்காயளவும் குன்றியளவும் பயறளவும் உருட்டிக் கொள்ளவும்.

இதுக்குத் தீரும் வியாதி:- சூலை வாதம், பித்தப்புண், மேகம், வெட்டை, சுரம், சன்னி.

இதுகளுக்கனுபானம்:- மேகத்துக்குப் பசுவின் பால்; சூலைக்கு வெல்லம்; சன்னிக்கு இஞ்சி இந்தப்படிக் கொடுக்கவும்.

ஆ. முடிவு

துவாலைக்கு மருந்து:- மொடடகொறுவ நெல் மாவு எடுத்து மூன்று நோத்து 5¼ படி நனையப் போட்டு இடித்துப் பூவரசன் பிசின், கொளுந்து மூன்று படி போட்டு இடித்து மூன்று உருண்டையாக உருட்டிக் கொடுக்கவும்.

பத்தியம்:- சோத்தை வறுத்துத் திங்க வேணும். காற்று, வெயிலில் போகக் கூடாது. பன்னிரண்டு நாள் காக்க வேணும்.

3168. சொர்ண வயிரவமாலை

1. **நூலகக் குறிப்பு**
   அ. 2299-2

2. **உள்ளீடு : நூல் விவரம்**
   அ. ....
   ஆ. சொர்ண வயிரவமாலை
   இ. சிற்றிலக்கியம்
   ஈ. செய்யுள் 31

3. **தோற்றக் கூறுகள்**
   அ. 20 ஏடு; 40 பக்கம்
   ஆ. நீளம் 13 செ.மீ., அகலம் 3 செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 4-6 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து. பிழைகள் மிகுதி
   ஊ. நல்லநிலை
   எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

   அ. தொடக்கம்

   மெய்யில்வெண் நீறும் காதினில் குண்டலம் வளிமுகமும்
   கையினில் சூலம்பா சக்கய றுங்கரு நாய்பிடித்து

செய்யுமெஞ் ஞானிகள் வந்து வணங்கும் திருவளமை
வையந் துதிக்க வருவாய்நற் சொர்ண வயிரவனே.

(1)

ஆ. முடிவு

கள்ளர் எனைவந்து காட்டில் எதிர்த்துக் கடுத்துவந்தால்
மெள்ளவே நெஞ்சில் உனைத்துதிப் பேன்அந்த வேளைவந்து
உள்ளம் உருக அடித்துத் துரத்திநீ ஓட்டிவிட்டு
வள்ளல் அருகா வருவாய்நற் சொர்ண வயிரவனே.

(2)

5. **பிற செய்திகள்**

இப்பாடல்கள் மாந்திரீகமுமாம்; சில பாடல்களுக்கு உரிய யந்திரமும் பிரயோக முறையும் கொடுக்கப்பட்டு உள்ளன.

3169. நயனவிதி 200

1. **நூலகக் குறிப்பு**
   - அ. 2300-1

2. **உள்ளீடு : நூல் விவரம்**
   - அ. நாக முனிவர்
   - ஆ. நயனவிதி 200
   - இ. மருத்துவம்
   - ஈ. செய்யுள் 105

3. **தோற்றக் கூறுகள்**
   - அ. 11 ஏடு; 22 பக்கம்
   - ஆ. நீளம் 40 செ.மீ., அகலம் 3 செ.மீ.
   - இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   - ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
   - உ. தெளிவான கையெழுத்து
   - ஊ. முதல் மூன்றேட்டின் ஓரம் முறிந்துள்ளது
     மற்றவை நல்லநிலை
     ஏட்டெண் 236ல் நூல் தொடங்குகிறது
   - எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

வாய்தனில் நிரம்ப நீரைக்
கொண்டு விழித்து நோக்கி
நீயிரு கையி னாலே
நீர்முகந் தன்னில் வீத்தி
வெங்கண மிந்து பழு...
விகர ... .ங் கூட்டி
மேவிடு மஞ்ச னந்தான்
வினையற நயன மீதே.

(22)

ஆ. முடிவு

நன்றுதான் மருந்தை நீயும்
நலநலஞ் சுற்றி .....
சென்றுதான் மருந்த ரைக்கில்
நல்ப்பாகு பதங்கள் கொண்டு
நன்றுதான் மருந்தெ ளுதில்
நயனநோய் தொண்ணூற் றாறும்
நன்றுதான் திருஞ் சொன்னோம்
நற்பரி காரி கேளீர்.

(105)

இவை முற்றும். நயனவிதி முற்றும்.

3170. நயனவிதி 200

1. **நூலகக் குறிப்பு**

அ. 2300-2

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. நாக முனிவர்
ஆ. நயனவிதி 200
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 215

3. **தோற்றக் கூறுகள்**

அ. 28 ஏடு; 56 பக்கம்

ஆ. நீளம் 40 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6,7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. இறுதி ஏடு முறிந்துள்ளது
உள்ளவை நல்லநிலை
ஏட்டெண் 247ல் நூல் தொடங்குகிறது

எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. **தொடக்கம்**

காண்க:- தொடர் எண்.2273-3.

ஆ. **முடிவு**

மருந்து. எழுதுகிற லட்சணம்
மருந்துதா னெழுதும் போது
வாய்த்தவா சனத்தி ருந்து
கருங்குழல் ம(ா)னே கேளாய்
கவின்பெறக் கிழக்கு நோக்கி
இருந்... ....
(இடநய ன)த்தி லிட்டு
வருந்திப்பின் வலத்தி லிட்டால்
மாசறத் தீருங் காணே.

(205)

நயனவிதி முற்றும்.

3171. நயனவிதி 200

1. **நூலகக் குறிப்பு**

அ. 2301

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. நாக முனிவர்

ஆ. *நயனவிதி 200*

இ. *மருத்துவம்*

ஈ. *செய்யுள் 210*

3. **தோற்றக் கூறுகள்**

அ. *39 ஏடு; 78 பக்கம்*

ஆ. *நீளம் 31 செ.மீ., அகலம் 3 செ.மீ.*

இ. *இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது*

ஈ. *ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்*

உ. *தெளிவான கையெழுத்து*

ஊ. *நல்லநிலை*

எ. *குறை*

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

காண்க:- தொடர் எண்.2273-3.

ஆ. முடிவு

பிடித்திருந்த கலறுத்தே வதைதான் மாயன்
பிறமுமுள்ளுந் தேவதைபே ரிந்திரனோ யீசன்
அடுத்திருந்த முலைப்பாலே யமுர்த மாகும்
அணிவிரலுஞ் சிறுவிரலுஞ் சிவசத்தி....

3172. சந்தனக் கயறு

1. **நூலகக் குறிப்பு**

அ. *2302*

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. *சகாதேவர்?*

ஆ. *சந்தனக் கயறு*

இ. *சோதிடம்*

ஈ. *செய்யுள். அச்சில் ஏறத்தாழ 40 பக்கம் வரும்*

3. **தோற்றக் கூறுகள்**

அ. *65 ஏடு; 130 பக்கம்*

ஆ. நீளம் 15 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

சந்தனக் கட்டையில் நாலு பட்டமாக ஒரு கயறுண்டாக்கி ஒரு பட்டத்தில் லெக்கம் 1ம், ஒரு பட்டத்தில் 2ம், ஒருபட்டத்தில் 10ம், ஒரு பட்டத்தில் 100ம் ஆக இந்தப் படிக் கயறுண்டாக்கி சுத்தமான தரையில் நாலு மூல சதுரமாகப் பசுவின் சுளுகம் கொண்டு மெழுகி விநாயகனை எழுந்தருள வைத்து நிறைநாழி, விளக்கு, பாக்கு, வெற்றிலை, நெய்வேதனம், சாம்பிராணி, தூபம் செய்து பாசியை மூன்று தரம் உருட்டி வந்த இலக்கத்தின் படி ஏடு பார்க்கவும்.

ஆ. முடிவு

தெள்ளிய நூறும் பத்தும்
மாண்டும்வந்து தீரு மாகில்
ஒள்ளிய மணமுண் டாகும்
உறுபொருள் வந்து சேரும்
மெல்லிய வழக்கும் வெல்லும்
வேந்தரால் துன்பம் நீங்கும்
அல்லிசேர் மொழியி னாருக்
கானதோர் புடவை சாத்தே.

தேவதைக்குப் பால், பழம், புடவை வைக்கவும்.
தேவி சகாயம்.

இ. முற்குறிப்பு

இது எழுதியது மாணிக்கவாசகம்.

5. **பிறசெய்திகள்**

காண்க:- தொடர் எண்.2367.

3173. குறுமுனி 100

1. நூலகக் குறிப்பு

அ. 2303-1

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. குறுமுனி 100

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 86

3. தோற்றக் கூறுகள்

அ. 33 ஏடு; 66 பக்கம்

ஆ. நீளம் 25.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. முதலேட்டின் இடது ஓரம் சற்றே முறிந்துள்ளது மற்றவை நல்லநிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மனோ(ன்)மணியாள் பாத(த்)தை மனதில் வைத்து
மார்க்கமுள்ள குருமுகமாய் வந்த ....
வனம்பெருத்த மலைச்சார்பில் தவசு பண்ணும்
மகாயோகி தன்பத(த்)தை வணங்கிப் போற்றி
இனம்பிரிந்த சாறுவகை செந்தூ ரத்தை
ஏகமூலி கையதனால் எடுத்துச் சொல்வேன்
தனம்பெருத் திரவியங்கள் செந்தூ ரங்கள்
சண்முகனார் கிருபையினால் சாற்று றேனே.
(1)

ஆ. முடிவு

ஒன்றான பொருளப்பா ஆதி யந்தம்
ஒருத்தருக்கும் தெரியாதே உண்டு தேறு

பன்றான யோகத்தோர் பாகத் தோடே
பாராமல் பதறியல்லோ பாவி யானார்
மண்ணும்விண்ணும் அறியார்கள் மார்க்கம் காணார்
வாதமென்றால் வெளியாச்சே வாய்ப்பேச் சாலே
கண்ணிமைக்குள் காணலாம் விதியுண் டானால்
கங்கையுட உபதேசம் காண லாமே.

(86)

3174. மருத்துவ நூல்

1. நூலகக் குறிப்பு

அ. *2303-2*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 143

3. தோற்றக் கூறுகள்

அ. 26 ஏடு; 52 பக்கம்

ஆ. நீளம் 25.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சுரிதன மொன்று சூப்புந்
தொடர்பட்சிக் குணத்தைக் கேளாய்
வருமுலை விருப்பம் இல்லை
வளருச்சி கண்ணும் தாழ்ந்து
துரசமாய் உடல்வெ தும்பும்

சோறுநா வரைக்கும் கீழும்
பெருகிய களிம்பு தன்னை
....

(25)

ஆ. முடிவு

மேதி நெய்யில் வெள்ளையுள்ளி
வேலிப் பருத்தி சூழ்விந்தம்
பாதிச் சுக்கு சீரகமும்
பசிய கிராம்பும் இவைவெந்து
ஓதி யிரண்டு காசள(வாய்)
உள்ளே யிருந்த குடல்ப்பிரளி
ஆதி தொடுத்த மசீகரணம்
அதிக மாந்தம் அறுத்திடுமே.

(143).

5. **பிற செய்திகள்**

சுவடி முதல் ஏட்டிலிருந்து தொடங்குகிறது. ஆனால் எழுதப்பட்டுள்ள முதல் பாட்டிற்கு 26 என எண் கொடுக்கப் பட்டுள்ளது.

3175. நோய்க்கு மருந்து

1. **நூலகக் குறிப்பு**

அ. 2304-1

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....
ஆ. நோய்க்கு மருந்து
இ. மருத்துவம்
ஈ. உரைநடை
அச்சில் ஏறத்தாழ 50 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

அ. 41 ஏடு; 82 பக்கம்
ஆ. நீளம் 29.5 செ.மீ., அகலம் 2 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

எரிகுன்மத்துக்கு மருந்து:- நல்ல உப்பு பலம் 1, வெடியுப்பு பலம் 1, இந்துப்பு பலம் 1, எருக்கம் இலை 40 இதுவெல்லாம் ஒரு கலசத்திலிட்டு இலையும் பிச்சுப் பிச்சுக் கூடப்போட்டு, சீலைமண் செய்து, முழங்கால் மட்டும் குழிவெட்டி, பாதி எருவடுக்கி, கலசம் வைத்து, மேலும் எருவடுக்கி, அந்திக்கு வைத்து, காலமே யெடுத்து, ஒன்றாய்ப் பொடித்துக் கொள்ளவும். இஞ்சிச் சாறில் ஒரு பணவெடை கொள்ளவும். அந்திக்கு எலுமிச்சம் பழச்சாற்றில் கொடுக்கவும். குன்மம் தீரும்.

ஆ. முடிவு

வில்லைவேர் பலம் 1, சர்க்கரை பலம் 10, இஞ்சிச் சாறு உழக்கு 1, தேன் ஆழாக்கு 1, ஏலம், இலவங்கம், திரிகடுகு, திப்பிலி மூலம், சிறுதேக்கு, சீரகம், கருஞ்சீரகம், தாளிசபத்திரி, ஓமம், வாய்விளங்கம் வகைக்கு ஒரு கழஞ்சு. கடுக்காய், நெல்லிப்பருப்பு, தாணிக்காய் வகையொன்றுக்குப் பலம் 4. கோட்டம், கொத்தமல்லி, நாகப்பூ, செண்பகப்பூ, ... பலம் 2 சேர்த்து லேகியம் தின்னவும். வீக்கமும், பைத்தியமும், மண்டை ரோகமும் தீரும்.

3176. மருத்துவ நூல்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2304-2

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 13

3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு; 10 பக்கம்

ஆ. நீளம் 29.5 செ.மீ., அகலம் 2 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

ஏட்டெண் 42ல் நூல் தொடங்குகிறது

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பெரியோர்கள் பாதத்தைப் போற்ற வேணும்
பேசரிய மெஞ்ஞானங் கற்க வேணும்
அரியான மூன்றெழுத்தை யறிய வேணும்
அப்பனே முப்பூவை முடிக்க வேணும்
விரிவான சாத்திரத்தைப் பார்க்க வேணும்
வேதாந்த வடுகனுட பூசை வேணுங்
கரிமுகவன் தனைப்பணிந்து ஆத்தாள் தீட்சை
கற்றவர்க்கு வாதமுறை கைக்குள் ளாமே.

(1)

ஆ. முடிவு

கருவாகும் ஆரல்மச்சம் கொண்டு வந்து
கட்டாகக் கீறியே சிலர்கை வைத்து
மருவாகுஞ் சீலைகொண்டு கிழியாய்க் கட்டி
மைந்தனே சட்டிக்குள் வேப்பெண்ணெய் விட்டுப்
பருவமாய்த் தீயெரித்து மச்சம் வெந்து
பருவந்தான் வந்தபின்பு இறக்கி வைத்து

அருமையாய்ப் பவனத்தை யெடுத்துக் கொண்டு
அப்பனே ரவியிலொரு நாள்தான் வையே.

(13)

3177. நோய்க்கு மருந்து

1. **நூலகக் குறிப்பு**

அ. 2304-3

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. நோய்க்கு மருந்து

இ. மருத்துவம்

ஈ. உரைநடை

அச்சில் ஏறத்தாழ 50 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

அ. 46 ஏடு; 92 பக்கம்

ஆ. நீளம் 27.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரிகள்

உ. சுமாரான கையெழுத்து

ஊ. சுமாரான நிலை

ஏட்டெண் 47ல் நூல் தொடங்குகிறது

இடையிடையே பல ஏடுகள் இல்லை

எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

வச்சிர வல்லிச் சூரணம்:- பிரண்டை அரிந்து இடிச்சது ஒரு தேங்காயளவு; அதில் ஒரு சிரங்கை கறியுப்புக் கூட இட்டுப் பிடித்து, வெயிலில் வைத்து உலர்த்தி, சிவக்க வறுத்துப் பொடி செய்து வடிகட்டிக் கொள்ளவும். மேற்படி கடைமருந்து, சுக்கு, மிளகு, திப்பிலி, நற்சீரகம், கருஞ்சீரகம், ஓமம், ஏலம், இந்துப்பு

வகைக்குப் பலம் ¼; காயம் பலம் 2, வெடியுப்பு பலம் 1½ , கல்லுப்பு பலம் 1½, வளையலுப்பு பலம் 1½ இதுவெல்லாம் கூட்டி, இடித்து, வெதுப்பி, பொடி செய்து, முன்பொடி பாதியும் இந்த மருந்து பாதியும் இட்டு விரவி வெருகடி தின்று வெந்நீர் குடிக்கவும்.

ஆ. முடிவு

மூலம் ஆறு வகைக்கும் மருந்து:- நாழி பசுவின் நெய்யில் 20 பலம் கருணைக்கிழங்கு சிறுக நறுக்கிப் போட்டு வேக வைத்து, சிவக்க வெந்தபோது இறக்கிப் போட்டு, அந்தக் கருணைக் கிழங்கைத் தினம் மூன்று காசிடை தின்று வரவும். அந்த நெய்யிலேயும் சற்றுக் கொடுக்க மூலம் ஆறு வகையும் போம்.

3178. மருத்துவ சதகம்

1. **நூலகக் குறிப்பு**
   அ. 2304-4

2. **உள்ளீடு : நூல் விவரம்**
   அ. ....
   ஆ. மருத்துவ சதகம்
   இ. மருத்துவம்
   ஈ. செய்யுள் 100

3. **தோற்றக் கூறுகள்**
   அ. 15 ஏடு; 30 பக்கம்
   ஆ. நீளம் 30.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
   உ. சுமாரான கையெழுத்து
   ஊ. சுமாரான நிலை
   பாட்டெண் 51ல் நூல் தொடங்குகிறது
   எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

உறுதியுள்ள பித்தமது தோன்றில் வெப்பு
உட்டிணவாய் வதிதாகம் அதிசா ரங்கள்
மறதியுட ...கிறக்கம் பயித்திய ரோகம்
வளர்சோகை யனவெரிவு காந்தல் கைப்பு
இறுதயத்தி லேகலக்கம் மறப்பு தாகம்
எழுங்கனவு பேயணையும் மயக்கம் மூர்ச்சை
இறுதிபெரும் பாடுரத்தம் பிரமே கங்கள்
சேர்ந்துவெகு பிணிவந்து பிறக்குந் தானே. (51)

ஆ. முடிவு

காண்க:- தொடர் எண்.2281-1.

3179. நோய்க்கு மருந்து

1. **நூலகக் குறிப்பு**

அ. *2305*

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. நோய்க்கு மருந்து

இ. மருத்துவம்

ஈ. உரைநடை

அச்சில் ஏறத்தாழ 150 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

அ. 155 ஏடு; 310 பக்கம்

ஆ. நீளம் 15 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. 1,69,70 ஆகிய மூன்றேடுகள் இல்லை
உள்ளவை நல்லநிலை

எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

புங்கம் பட்டை சங்கத்தின் சாற்றில் அரைத்து, கோரோசினை கோட்டம் கொண்டெழுத யோசனை தோன்றும்.

ஆ. முடிவு

திருகுகள்கிக் கொழுந்து படி ¾ சிறுக நறுக்கி, சட்டியிலிட்டு வறுத்து, பொடித்து, சீல் வடிகொண்டு, இதனுடன் கடுகு பலம் 2, ஓமம் பலம் 1, சுக்கு பலம் 1, திப்பிலி பலம் ¾, காயம் பலம் ½, உப்பு பலம் ¾ இது இளவறுப்பாய் வறுத்து, பொடித்து, கலந்து, நித்தம் வெருகடி சர்க்கரையிலாவது பசுவின் நெய்யிலாவது கொடுக்க புளி தவிர்க்கவும். குன்மம், ... நீர் சுனற்றுதல் பலவும் தீரும். கைக்ண்டது.

இ. முற்குறிப்பு

பத்தயில் திருவேங்கட நம்பியார் அவர்கள் புண்ணியம். நன்றாக, முன்நிற்கும்.

3180. மருந்து செய்முறை

1. **நூலகக் குறிப்பு**

அ. 2306

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. மருந்து செய்முறை

இ. மருத்துவம்

ஈ. உரைநடை

அச்சில் ஏறத்தாழ 200 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

அ. 171 ஏடு; 342 பக்கம்

ஆ. நீளம் 12 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான பலப்பல கையெழுத்து
ஊ. நல்லநிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நாகம் பலம் 1 சல்லியாக்கி, இந்தச் சல்லியில் அரைக்கழஞ்சு நாகமும் அரைக்கழஞ்சு வெடியுப்பும் சிவந்த அவரைச்சாறுவிட்டு, மூன்று நாழி அரைத்துருட்டித் தட்டி, புது ஓட்டில் வைத்து, மறு ஓடு மூடி, சீலைமண் செய்து, காடைப்புடம் போடச் செந்தூரமாம்.

ஆ. முடிவு

ஆவரைக் கற்பம்:- முற்றின ஆவரைவேர் புறந்தோல் நறுக்கி உலர்த்தி, அதிலேயொரு புளியங்கொட்டைப் பிரமாணம் வாயிலே போட்டு நனைய வைத்துச் சாரத்தை இறக்க, இப்படி ஒரு மண்டலம் சாரத்தை இறக்கக் கால்ச் சிறும்புமாறும்; கண்ணில்ப் படலமுமாறும்; இந்தத் தோல் பொடி செய்து, ஒரு மண்டலங் கருப்புக்கட்டியுடன் விழுங்கப் பிள்ளையுண்டாம். இப்பொடி வெந்நீருடன் குடிக்க வயிற்றுநோவு தீரும்.

3181. உதர கிரிகை

1. நூலகக் குறிப்பு

அ. 2307

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. உதர கிரிகை
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 158

3. தோற்றக் கூறுகள்

அ. *39 ஏடு; 78 பக்கம்*

ஆ. *நீளம் 17.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.*

இ. *இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது*

ஈ. *ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்*

உ. *தெளிவான கையெழுத்து*

ஊ. *37, 40ஆகிய இரு ஏடுகள் இல்லை*
உள்ளவை நல்லநிலை

எ. *குறை*

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

உற்றிடும் உதரம் தன்னில்
உற்றநூற் றெட்டு ரோகம்
பற்றிய குணங்கள் தன்னைப்
பரமனா ரருளிச் செய்தார்
சொற்றதமிழ் நூல தாகச்
சுருதிநூற் கெல்லை கண்டாய்
மற்றுமா மலையி லுள்ள
மாமுனி அருளிச் செய்தார்.

(1)

ஆ. முடிவு

அகுவை வாயுவின் குணம்:-
கல்லென யீர லோடே
கனத்தொடு மடைத்துக் காட்டும்
பல்லிய வசனம் தானும்
குறைத்திடும் பொரும லாகும்
பல்பல வலியே யாகும்
பசியின்றி மந்தம் பற்றும்
வல்லிய வலமும் தீயும்
அகுவையாம் வாய்வு தானே.

(158)

3182. கொங்கணர் தேவி தோத்திரம்

1. **நூலகக் குறிப்பு**

   அ. *2308-1*

2. **உள்ளீடு : நூல் விவரம்**

   அ. *கொங்கணர்*

   ஆ. *கொங்கணர் கடைக்காண்டத்தில் தேவி தோத்திரம்*

   இ. *பிற தோத்திரம்*

   ஈ. *செய்யுள் 27*

3. **தோற்றக் கூறுகள்**

   அ. *10 ஏடு; 20 பக்கம்*

   ஆ. *நீளம் 17.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.*

   இ. *இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது*

   ஈ. *ஒரு பக்கத்திற்கு 6,7 வரிகள்*

   உ. *தெளிவான கையெழுத்து*

   ஊ. *நல்லநிலை*

   எ. *குறை*

4. **சிறப்புச் செய்திகள்**

   அ. தொடக்கம்; ஆ. முடிவு

   காண்க:- தொடர் எண்.2275-4.

3183. கொடுமூர் முருகன் திருப்பள்ளியெழுச்சி

1. **நூலகக் குறிப்பு**

   அ. *2308-2*

2. **உள்ளீடு : நூல் விவரம்**

   அ. ....

   ஆ. *கொடுமூர் முருகன் திருப்பள்ளியெழுச்சி*

   இ. *சிற்றிலக்கியம்*

   ஈ. *செய்யுள் 1. அச்சில் ஏறத்தாழ 2 பக்கம் வரும்*

3. **தோற்றக் கூறுகள்**

அ. 3 ஏடு; 6 பக்கம்

ஆ. நீளம் 17 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை
ஏட்டெண் 13ல் நூல் தொடங்குகிறது

எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

துயிலல் அதிகமே சுவாமி நீர்இனம்
சூரியன உதயம தாகுதே
மயிலின் வருகுக னேதென் கொடுப்பதி
வாசனே எழிற்கும ரேசனே
முத்தர் பணிபர போத னேசர
மோனச டாட்சர ரூபனே
அத்தர் அருள்முரு கைய னேஇனம்
அந்தலோ திருவ னந்தலோ.

ஆ. முடிவு

வாழி யுலகெலாம் வாழி முத்தமிழ்
வாழி யாகமம் வாழியே
வாழி சதுர்மறை வாழி பலகலை
வாழி மயில்களும் வாழியே
வாழி கொடுங்கசூர் மேவு மூவரும்
வாழி யாகமம் வாழியே
வாழி குஞ்சரி வள்ளி நாயகி
மயிலுஞ் சேவலும் வாழியே.

3184. வேள்விமலை வேலவர் மாலை

1. **நூலகக் குறிப்பு**

அ. 2308-3

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. வேள்விமலை வேலவர் மாலை

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள் 26

3. தோற்றக் கூறுகள்

அ. 21 ஏடு; 42 பக்கம்

ஆ. நீளம் 17 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்

உ. கிறுக்கலான கையெழுத்து; பிழைகள் மிகுதி

ஊ. நல்லநிலை

ஏட்டெண் 17ல் நூல் தொடங்குகிறது

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அரிவிந்து நாதமொரு கலைதங்கி நின்றதில்
ஆறெழுத் தாய்விரிந்து
அதிவாடி நிற்கின்ற நடுநாடி தன்னிலே
அகவாதி ருந்தசுழியில்
பரியிந்து போதகமெ ழுந்தமதி பூரணம்
பதினாறு தீபமெரிய
பாரகம் வந்திலே சரவணப வத்துடன்
பஞ்சபூ தங்களுடனே
தெரிசிந்தை வாசியிடை கலைகொண் டிருந்தவா
நின்பாத சேவைதருவாய்
தேவாதி தேவனே சிவசுப்ர மணியனே
திருமால் தனக்குமருகா!
சொரிவிந்தை யாகவளர் வேள்விமலை வேலவா!
எற்காத்து ரெட்சிசமையம்;
சோதிமய மானசிவ மானதில் வந்தவா!
பரமகுரு குமரேசனே. (1)

ஆ. முடிவு

சீர்கொண்ட தாணுவும் வாணியும் வாழ்ந்திடக்
கரிமுகத் தோணும்வாழச்
சிரிபத்ம னாபனுஞ் சித்தாதி மார்களும்
மெய்க்கவே நாளும்வாழ்க
வார்கொண்ட ராமவர் மேந்திரன் வாழ்ந்திடப்
பாவாணர் தாமும்வாழ்க
பத்தியுட னிப்படிப் படித்தபேர் வாழ்ந்திடப்
பாரிலுள் ளோரும்வாழ்க
நேர்கொண்டு நின்னடிதொ ழுங்கருணை வாழ்ந்திட
நிறைவேறு செல்வம்வாழ்க
நின்றவான் செல்வமுங் குறையாமல் வாழ்ந்திட
நீகருணை செய்யவேணும்
தேர்கொண்டு விளையாடும் வேள்விமலை வேலவா!
எற்காத்து நாளும்வாழ்க
தெய்வானை யோடுகுற வள்ளியும் வாழ்ந்திடுக!
பரமகுரு குமரேசனே.

(26)

5. பிற செய்திகள்

இப்பிரபந்தத்தில் இடம்பெற்றுள்ள இராமவர்மேந்திரன் என்னும் தலைவன் வேள்விமலையை ஆண்ட சிற்றரசனாகவோ அல்லது இப்புலவனை ஆதரித்த வள்ளலாகவோ இருக்கலாம்.

3185. அகத்தியர் ஞானம் 16

1. நூலகக் குறிப்பு

அ. 2308-4

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் ஞானம் 16
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 16

3. **தோற்றக் கூறுகள்**

அ. 8 ஏடு; 16 பக்கம்
ஆ. நீளம் 17 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
ஏட்டெண் 39ல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்; ஆ. முடிவு

காண்க:- தொடர் எண்.2275-6.

3186. அகத்தியர் சூத்திரம் 11

1. **நூலகக் குறிப்பு**

அ. 2308-5

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் சூத்திரம் 11
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 11

3. **தோற்றக் கூறுகள்**

அ. 5 ஏடு; 10 பக்கம்
ஆ. நீளம் 17 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
ஏட்டெண் 47ல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

மோச்சத்துக் கெய்துவழி மனத்தைக் கண்டால்
முன்னுரைத்த நூல்களிலே வாசி பார்க்க
பாச்சொற்ற மனத்தையொன்றில் பாயா மல்தான்
பக்குவமே செய்துநன்றாய்ப் பாரு மூக்கில்
மூச்சற்றா லொளிகாணுங் குறியைக் கேளு
குருசொல்லால்க் காணுமல்லால் மற்றோர் காணார்
நீச்சொற்ற அறுநூற்றில் நின்று பார்க்க
நேர்மையுள்ள குருமுகமா மிந்த நூலே.

(1)

ஆ. முடிவு

தானென்றும் அலைந்ததினால் வருவ தேது
சமுசார ஞானிக்கு வருமோ மோச்சங்
கூனென்றுங் குருடென்றும் முடவ னென்றுங்
குணயீனன் செவிடூமை யாகா தென்றுங்
கோனென்ற தத்துவங்கள் குறையில் லாமல்
குடிகெடுத்த வியாதியினால் கிடந்தி டாமல்
பானென்ற சந்திரன்போல் தேக முண்டாய்ப்
பரமோச்ச வித்தையிது பாரு முற்றே.

(11)

3187. கந்தரனுபூதி

1. **நூலகக் குறிப்பு**

அ. 2308-6

2. **உள்வீடு : நூல் விவரம்**

அ. அருணகிரிநாதர்

ஆ. கந்தரனுபூதி

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள் 44

3. தோற்றக் கூறுகள்

அ. 10 ஏடு; 20 பக்கம்
ஆ. நீளம் 17 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. கிறுக்கலான கையெழுத்து; பிழைகள் மிகுதி
ஊ. நல்லநிலை
ஏட்டெண் 52ல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
காண்க:- தொடர் எண்.2275-10.

ஆ. முடிவு
கடுத்தே யனுபூ தியடங் கலையும்
முடித்தே கவிநாற் பதின்மூன் றிலொன்றே
படித்தோர் கேட்டோர் பயன்சொன் னாருங்
கடத்தார் முருகன் கழல்பெற் றிடுவார்.

(44)

(மூன்றாமடியில் வெண்டளை பிறழ்கிறது)

5. பிற செய்திகள்

இச்சுவடி கந்தரனுபூதியில் 43 பாடல்களைக் கொண்டு மேற்காட்டிய 44ஆவது பாடலை நூற்பயனாகக் கொண்டுள்ளது. நூலுக்கு முன்,

"நற்பதம் அருள்செயும் ஞான பண்டிதன்
அற்புதன் அருளிய அங்கை வாரணன்
மற்பொரு திரள்புயன் மயிலோன் முன்வரு
கற்பகம் எனஒரு கவலை இல்லையே"

"கந்தனனு பூதிதன்னைக் கற்றோர்கள் உற்றுணர்வோர்
சிந்தை புறநாளுஞ் சேவிப்போர் - அந்தமுற
மண்ணுலகை யாண்டுபின்னும் வானவர்த.. கொஞ்சி
விண்ணுலகை யாள்வார் விரைந்து"

என்னும் இரண்டு பாடல்கள் உள்ளன.

3188. முருகன் பதிகம்

1. நூலகக் குறிப்பு

அ. 2308-7

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. முருகன் பதிகம்

இ. பிறதோத்திரம்

ஈ. செய்யுள் 12

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 6 பக்கம்

ஆ. நீளம் 17 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. 65ஆவது ஏடு இல்லை
உள்ளவை நல்லநிலை
நூல் ஏட்டெண் 63ல் தொடங்குகிறது

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வேதமுஞ் சகல பூதமுஞ் சமைய
விதங்களும் பொதிந்ததோர் விந்து
நாதமுங் கடந்த ஞானபூ ரணத்தை
நண்ணவோர் புண்ணியஞ் செய்யேன்
போதகங் குவடு வாரணஞ் சிகண்டி
புனந்தருந் தென்கிழங் காத
சீதளம் படைத்த சிறுமியைத் தழுவுந்
தெய்வமே உய்யும்வா றருளே (4)

ஆ. முடிவு

குறியறக் குறுகிக் குறிப்பதோர் குறிப்பைக்
குறிபடக் குறிப்பினாற் குறிக்கும்
அறிவழி .... அறிவை
அறிவினா லறியுமா றறியேன்
மறிகுடிப் பிறந்த பெருந்த ....ச்சே
மன்னவர் வாழ்வினை மதியாச்
சிறுகுடிப் பிறந்த சிறுமியைத் தழுவுந்
தெய்வமே உய்யும்வா றருளே.

(12)

3189. தூத லட்சணம்

1. **நூலகக் குறிப்பு**

   அ. *2308-8*

2. **உள்ளீடு : நூல் விவரம்**

   அ. ....

   ஆ. தூத லட்சணம்

   இ. மருத்துவம்

   ஈ. செய்யுள் 15

3. **தோற்றக் கூறுகள்**

   அ. 6 ஏடு; 12 பக்கம்

   ஆ. நீளம் 17 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

   ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்

   உ. தெளிவான கையெழுத்து

   ஊ. நல்லநிலை
   ஏட்டெண் 67ல் நூல் தொடங்குகிறது

   எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

   அ. தொடக்கம்; ஆ. முடிவு

   காண்க:- தொடர் எண்.2275-5.

3190. வேலாயுதன் தரிசனம் வேண்டு பதிகம்

1. நூலகக் குறிப்பு

அ. *2308-9*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. வேலாயுதன் தரிசனம் வேண்டு பதிகம்

இ. பிறதோத்திரம்

ஈ. செய்யுள் 11

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு; 8 பக்கம்

ஆ. நீளம் 17 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை
ஏட்டெண் 73ல் நூல் தொடங்குகிறது

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆரம் அணிந்த திருமார்பும்
அழகே செறிபன் னிருபுயமும்
காரே செறிந்த திருமுடியுங்
கமல முகமுந் திருக்குழையும்
தாரே பணிந்த வரிக்கழுத்தும்
தண்டைக் காலும் தகுதிஎன
வீர மயில்மேல் எழுந்தருளி
வேலா யுதனே தோன்றாயே.

(1)

ஆ. முடிவு

அவ்வை யுரைத்த படியதுபோல்
அறிவோர் கேட்போர் அகமதுறும்

தெய்வ சிகரம் அருணகிரி
சிறந்தே உரைத்த சொல்பத்தும்
கொவ்வை எனவே ஞாலம்நித்தம்
கொண்டே புகல்வார் அனைவோரும்
செவ்வை எனவே சிவலோகம்
பெறுவார் இதுவே திடமாமே.

(11)

3191. மீனாட்சியம்மை கலிவெண்பா

1. நூலகக் குறிப்பு

அ. 2308-10

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. சிதம்பர சுவாமிகள் - திருப்போரூர்
ஆ. மீனாட்சியம்மை கலிவெண்பா
இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுள் 1
அச்சில் ஏறத்தாழ 10 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 12 ஏடு; 24 பக்கம்
ஆ. நீளம் 17 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. கிறுக்கலான கையெழுத்து; பிழைகள் மிகுதி
ஊ. சுவடியின் பிற்பாதி சிதிலமடைந்துள்ளது
ஏட்டெண் 77 இல்லை
78ல் நூல் தொடங்குகிறது
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

....
அடியவரை ஈடேற்றும் அம்மையே - முடிவில்லா
ஓங்காரத் துட்பொருளே உற்ற நவகோணத்

தீங்கா காசனத் திருப்பவளே- பாங்கான
முக்கோணத் துள்ளிருக்கும் மூர்த்தியே மூவிரண்டாம்
சட்கோணத் துள்ளிருக்கும் சத்தியே - மிக்கபுகழ்
....

ஆ. முடிவு

ஆசுமது ரஞ்சித்ர வித்தாரம் என்றுலகில்
பேசுகின்ற உண்மைப் பெருவாக்கும் - நேசமுடன்
தந்தென்னை யாட்கொண்டு சற்குருவா யென்னிடத்தில்
வந்திருந்து பத்தி மதிவிளைத்துச் - சந்ததமும்
நீயே துணையா... நின்றுரட்சி அங்கயற்கண்
தாயேநின் தாளே சரண்.

5. பிற செய்திகள்

இந்நூல் சில சுவடிகளில் மீனாட்சியம்மை அகவல் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

3192. சிவிந்தை அரன் அடைக்கலப் பத்து

1. நூலகக் குறிப்பு

அ. 2308-11

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. சிவிந்தை அரன் அடைக்கலப் பத்து
இ. பிறதோத்திரம்
ஈ. செய்யுள் 10

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு; 8 பக்கம்
ஆ. நீளம் 17 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
ஏட்டெண் 90ல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. **தொடக்கம்**

. சீரார் பவளச் சடைக்காடுந்
திருமா லறியா மலரடியும்
போர்மாக் கரியின் உரியதளும்
புண்ட ரீகத் திருக்கரமும்
காரார் மிடறும் வெளித்தோன்ற
காட்சி தருவ தெந்நாளோ?
ஆரா வமுதே தென்சிவிந்தை
யரனே யானுன் அடைக்கலமே.

(1)

ஆ. **முடிவு**

இளைக்குங் கொடிய தீவினையால்
இரவும் பகலும் பவக்கடலில்
உளைக்கும் கொடிய பாதகனுக்
குனது மலர்த்தாள் அருளாயோ?
தளைக்கும் பயனான் சிறுத்தொண்டன்
சமைத்த கறியை முன்னுருவாய்
அழைக்கும் பொருளே தென்சிவிந்தை
அரனே யானுன் அடைக்கலமே.

(10)

3193. அருணாசலர் வருகைப் பத்து

1. **நூலகக் குறிப்பு**

அ. 2308-12

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....
ஆ. அருணாசலர் வருகைப் பத்து
இ. பிறதோத்திரம்
ஈ. செய்யுள் 10

3. **தோற்றக் கூறுகள்**

அ. 5 ஏடு; 10 பக்கம்

ஆ. நீளம் 17 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 5,6 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

நினவாக மூல நிலையாக நேசம்
நிசருப மான வடிவே
மனமாயை கயாதி யதிலேயு மூன்று
மதியுங்க லங்கி வெகுவாய்
இனமோடி ருந்து வயதேறி யுள்ள
எனதாவி யேகி விடுமுன்
மனவேக மான அருணாச லீசர்
வரவேணும் எந்த னருகே.

(1)

ஆ. முடிவு

சித்தாடி நின்ற சிவசூத்தி ரங்கள்
சுழியான ஞான சுழியே
பத்தாது கேச விடையால நின்ற
படிகாளி யாடு நடனம்
எத்தாகு மாட மதிலாடு மூவர்
இசையாடி நின்ற ஒளியே
வத்தாடி நின்ற அருணாச லீசர்
வரவேணும் எந்தன் அருகே.

(10)

3194. பகவதி மாலை

1. **நூலகக் குறிப்பு**

அ. 2308-13

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. பகவதி மாலை

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள் 30

3. தோற்றக் கூறுகள்

அ. 9 ஏடு; 18 பக்கம்

ஆ. நீளம் 17 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்

உ. சுமாரான கையெழுத்து
பிழைகளும் விடுபாடுகளும் மிகுதி

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்; ஆ. முடிவு

காண்க:- தொடர் எண்.2275-7.

3195. மருத்துவ நூல்

1. நூலகக் குறிப்பு

அ. 2309

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 773

3. தோற்றக் கூறுகள்

அ. 99 ஏடு; 198 பக்கம்

ஆ. நீளம் 34.5 செ.மீ., அகலம் 4 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7-9 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து; பிழைகள் மிகுதி

ஊ. 1, 13-18 ஆகிய ஏடுகள் இல்லை;
இடையிடையே பாடல்கள் சிலவும் இல்லை;
முதலிரண்டேட்டின் இடதுபுறம் முறிந்துள்ளது;
மற்றவை சுமாரான நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மறந்திருகி மனந்திருகி யுபாய தந்திர
மச்சனெனப் பேரதற்கு முன்பு ...
பிறந்தேன்என் தேசம்மச்ச தேசம் ...
பிராமணற்குத் தொண்டுசெய்த பிறகு தானே
அறந்தழைக்க வோதிவைத்தார் வித்தை யெல்லாம்
.... வரையி லேறி
நிறைந்தசித்த ராட்சிமறந் தனிலே சென்று
நிஷ்ட்டையிலே யிருந்துகுரு நிலைகண் டோமே.
(8)

ஆ. முடிவு

தண்ணிவிட்டு வளர்பயிர்போல் செடியெல் லாந்தான்
தாரணியோர் திருடாமல் பதனம் பார்த்து
எண்ணியிட்டு முத்தெடுக்குங் காலம் வந்தால்
இத்தைவிட்டா றுருமாற்றம் வேறே யுண்டோ
மண்ணையிட்டுத் திண்ணுவயிர் வளர்த்தான் பச்சை
மாறுடனே பச்சோணான் கூடி னாலே
புண்ணைவிட்டு விட்டானென் றெண்ண வேண்டாம்
முத்ததுபேய்ப் பீ(ர்)க்கம்விரை புன்றா மணக்கே.
(773)

5. பிற செய்திகள்

இது மச்சமுனி 800 என்னும் நூலாக இருக்கலாம்.

3196. வர்ம சூத்திரம்

1. நூலகக் குறிப்பு

அ. 2310

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. வர்ம சூத்திரம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 106

3. தோற்றக் கூறுகள்

அ. 36 ஏடு; 72 பக்கம்

ஆ. நீளம் 23.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து; பிழைகள் மிகுதி

ஊ. 4,12,14,22,24,25,28,30,31,40,45 ஆகியனவும் 47க்கு மேல் இருக்க வேண்டிய ஏடுகளும் இல்லை. உள்ளவை சுமாரான நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியென்ற மூலவட்டக் கணபதியே காப்பு
அகன்றபரி பூரணத்தின் அருளி னாலே
சோதியென நின்றிலங்கும் பிராண னாதி
சூட்சமதை யாபேர்க்கும் துலங்க வேண்டி
வாதியென உலகத்தில் மனிதர்க் கப்பா
வகைவிபரம் கைபாகம் வழியைச் சொல்வேன்
பாதிமதி தரித்தசிவன் றன்னைப் போற்றிப்
பராபரத்தின் ஆதாரம் பரமே காப்பு.

(1)

ஆ. முடிவு

ஆலயந்திரி கடுகு..ம் தேவ தாரம்
அழகான முந்திரிகை கொம்பரக்கு சீரகந்தான்
வாலயென்ற கிரிசாத்து கொத்த மல்லி
வகையான ஈருள்ளி திப்பிலியும் சேரு
சேர்வகைக்கு ...... கழஞ்சி மூன்று
சேர்ந்ததொரு குறுந்தொட்டி கொடுப்பை மூலம்
பாளென்ற பணப்புலறு வல்லாரை .....
பாகுபெற யிசங்குதூது வளைகண்டங் கத்தரி.

(106)

3197. அகத்தியர் வாகடப் பிள்ளைத்தமிழ்

1. நூலகக் குறிப்பு

அ. 2311

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் வாகடப் பிள்ளைத்தமிழ்
இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுள் 51

3. தோற்றக் கூறுகள்

அ. 24 ஏடு; 48 பக்கம்
ஆ. நீளம் 19.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7,8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சிவசத்தி கெவுரிஅரி தாரமொடு லிங்கமுஞ்
சீலைவெள்ளை துருசுதுளைஞ்

செய்யபொரி காரமுமிணங்க ளோடுசீன முஞ்சேர்
வகைக்கோர் களஞ்சாய்
தவஞானி யண்டமிரா றெடுத்துட் கருத்தான் கதிக்குக்
கூட்டிலே சரக்கொன்று
வெவ்வேறு பூனாக மேனியின் சாற்றில்
கரைத்துள் விட்டு
நவசீலை மண்செய்து மிப்பிடந் தானிட்டு
நயமஞ்ச ளைருவினால்
நலமாக வொண்ணித் துலத்திப் பொடிசெய்
நல்லோட்டில்வை சீலைசெய்து
அவமிலா மணலினுள் ளெரிப்பை நாளொன்று
மெயாறியெடு செந்தூரமாம்
தனிலொ ....போம்
கதியர்க்கருள் முருகனே.

(1)

ஆ. முடிவு

சூரிய மிளகு திப்பிலிகீழ்க் காய்வேர்
சுக்கு சிறுதேக்கு
கண்டங் காரி யிசங்கு நெல்லி
கழஞ்சு வகையாய்த்
தாமெனடுத்து இருநா ழியதாம் வெள்ளமதில்
இட்டேயெரித்துக் குறுக்கிவடித்
திடுகால் படியே கொளிப்படியே யேழு
நாளுஞ் சரியாகப்
பருவ முடனே பத்திய பாகப்படி
வாக்கா யரசு வாசமஞ்சும்
பறக்கும் தேகம் தெளிவுதரும்
பண்ணிக் குடிக்க வல்லீராய்
அருள்சேர் சொரியும் பொதிகைமலை
அய்யா வருக வருகவே
அடியார் அத்தீ சுரனாம
அரசே வருக வருகவே.

(51)

5. பிற செய்திகள்

பிள்ளைத்தமிழ் வடிவில் முழுக்க முழுக்க மருத்துவச் செய்திகளே இப்பிரபந்தத்துள் கூறப்பட்டுள்ளன.

3198. ஆரூட நூல்

1. நூலகக் குறிப்பு

அ. 2312

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. ஆரூட நூல்

இ. சோதிடம்

ஈ. உரைநடை

அச்சில் ஏறத்தாழ 50 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 105 ஏடு; 210 பக்கம்

ஆ. நீளம் 11 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து; பிழைகள் மிகுதி

ஊ. 31,35,65,72,73,78,86,98,103,104 ஆகிய ஏடுகள் இல்லை. உள்ளவை நல்லநிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

இந்தச் சகாதேவர் நன்னூல் நூற்றெட்டும் சனிவாரந் தோறும் பூசித்துத் தீபங் கொடுத்து, கந்த புஷ்பஞ் சாத்தி, மறுநாள் காலமே மெழுகி, பிள்ளையார் வைத்துத் திருவிளக்கு வைத்துப் பாக்கு, வெற்றிலை, தேங்காய், பழம், சர்க்கரை, பொரி, தட்சணை, நிறைநாழி முதலானதெல்லாம் வைத்து விநாயகனைத் தோத்திரஞ் செய்து ஒரு காரியம் நினைத்துச் சகாதேவர்

நன்னூலுக்குத் தீபங் கொடுத்து, புஷ்பஞ் சாத்தி, நூற்றெட்டுக்குள்ளே மூன்று பேரிடத்தில் லெக்கங் கேட்டு, எட்டுக்கு யீந்து, கழித்து நின்ற லெக்கமானது, ஏடும் வரியும் தள்ளிப் பரல் வந்த வரியிலே பலனைக் கண்டு கொள்ளவும். இந்த ஏடு ஞாயிறு செவ்வாய் வெள்ளி மூன்று கிழமையும் இப்படிப் பார்க்கவும்.

ஆ. முடிவு

கடன் கொடுத்து வாங்க நன்றோ? தீதோ?

கடன் கொடுத்து வாங்க நன்று.
மச்சிட நன்று. மெத்த உத்தமம்.
இந்த ராசாவின் பேரில் தளம் வரும்.
வாய்க்கால் வெட்ட தீர்க்கமுண்டாம்.
இந்த மணியத்தால் லாபமுண்டு.
பிள்ளை காது குத்த வளராது.
தண்டு வாணிபஞ் செய்யப் போனவர் வருவர்.
மழை சுடுதியில் வாராது; விழுந்த யிடத்தில் பெய்யும்

3199. நோய்க்கு மருந்து

1. **நூலகக் குறிப்பு**
   அ. *2313*

2. **உள்ளீடு : நூல் விவரம்**
   அ. ....
   ஆ. நோய்க்கு மருந்து
   இ. மருத்துவம்
   ஈ. உரைநடை
   அச்சில் ஏறத்தாழ 3 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**
   அ. 7 ஏடு; 14 பக்கம்
   ஆ. நீளம் 16.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 4-6 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து; பிழைகள் மிகுதி

ஊ. நல்லநிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தேமலுக்கு மருந்து :- அவுரி வேரைக் காடி நீரிலரைத்து மூன்று நாள் தடவத் தீரும். சுபம்.

ஆ. முடிவு

மழு ஏந்த :- ஆமணக்கம் பருப்பும் அகத்திவேரும் கையில் தடவ மாறும்.

அகத்தி விரையை அகத்தியிலைச் சாற்றிலரைத்து வெண்ணெயில் குழப்பிக் கையில் தடவி மழுவேந்தச் சுடாது.

அகத்தி விதை, வேர், இலை, பட்டை, பழுத்தல் இவை அரைத்துக் கையில் தடவிச் சுட்ட இரும்பு எடுக்கலாம். சுடாது. கைகண்டது.

3200. இராமதேவர் கருக்கடைச் சூத்திரம் 500

1. நூலகக் குறிப்பு

அ. *2314-1*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. இராமதேவர்

ஆ. இராமதேவர் கருக்கடைச் சூத்திரம் 500

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 284

3. தோற்றக் கூறுகள்

அ. 108 ஏடு; 216 பக்கம்

ஆ. நீளம் 23.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

ஏட்டெண் 125ல் நூல் தொடங்குகிறது

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காண்க:- தொடர் எண்.2286-1.

ஆ. முடிவு

படித்திட்ட யின்னமொன்று சொல்லக் கேளு
கருவென்ன காஞ்சூரைப் பணத்தி னுள்ளே
நடந்திட்ட விதுமேலத் தோடுந் தள்ளி
நலமான அதனுடைய நஞ்சை வாங்கி
முடித்திட்ட அரவுநஞ்சு சேவி நஞ்சு
முனையான கருநாவி சேங்கொட்டை யோடு
கடித்திட்ட கெவுரிவெள்ளைப் பாசாணத் தோடு
கருத்தமர வட்டையது கண்டு கொள்ளே.

(284)

3201. கருவூரார் சூத்திரம்

1. நூலகக் குறிப்பு

அ. 2314-2

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. கருவூரார்

ஆ. கருவூரார் சூத்திரம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 13

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம்

ஆ. நீளம் 23.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 5-7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

உரைக்கின்றேன் மறைப்பதனைச் சித்ர மாக
உலகத்தோர் பிழைப்பதற்குக் கருவை யெல்லாம்
திரைக்கின்றேன் சிவஞானந் தங்கித் தானால்
சித்திமுத்தி ரெண்டுமுண்டாம் பாரு பாரு
துரைக்கின்றேன் திரிலோகஞ் செயிக்க லாகுஞ்
சொற்பெரிய அதீதத்தின் வித்தை யெல்லாம்
தரைக்கின்றேன் அடைவுடனே செய்து பாரு
சாத்திரத்தின் கருவையெல்லா மிதனில் பாரே.

(1)

ஆ. முடிவு

சாவான சென்மங்க ளெடுத்தா லென்ன
தாரணியில் தவமென்ன ...ரக மென்ன
ஒவ்வான சிவஞானந் தங்க வேணும்
ஒப்பில்லாக் குருவெல்லா மறிய லாகும்
சீவான சிவலிங்கம் பூசித் தானால்
சிவசித்த ரெல்லாரும் வணங்கி நிற்பார்
மாவான தாமரையின் சமூலம் வாங்கி
....ப்பாய் தேனுடனே சாமம் நாலே.

(13)

3202. கோரக்கர் வைத்தியம் 200

1. நூலகக் குறிப்பு

அ. *2315*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. கோரக்கர்

ஆ. கோரக்கர் வைத்தியம் 200

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 198

3. **தோற்றக் கூறுகள்**

அ. 78 ஏடு; 156 பக்கம்

ஆ. நீளம் 21.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

சிவனொடுபார் வதியுங்கை லாசந் தன்னிற்
சிறந்திருப்பார் கயிலாசம் அஞ்சுமலை யுண்டு
நவரத்னக் கிரியொன்று சொர்ணகிரி யொன்று
நல்லவெள்ளிக் கிரியொன்று தாம்ரகிரி யொன்று
புவனமலைக் கிரியொன்று அஞ்சினிலும் சிவன்தான்
புகழான பார்வதியுங் கூடியிருப் பார்கள்
தவமான ரிஷிமுனிவர் கோடா கோடி
தத்துவமாம் சித்தரதில் பதினெட்டுப் பேரே.

(1)

ஆ. முடிவு

ஆகுமெந்தன் எண்ணூற்றில் முதற்காண்ட மிருநூற்
கரிதான மருத்தினத்தின் நூல்கொடுக்க மாட்டார்
பாகுபேர் நல்லதொழில் பற்பஞ்செந் தூரம்
பரிவான நெய்குழம்பு கிருதம்பொடி லேகியம்
ஏகுமடா நோய்களெல்லா மிறந்து போகும்
இயல்பாக நூலிருக்கு மிடமறிந்து தேடி
வாகுபொருள் கேட்டதெல்லாம் வகையாக ஈந்து
வகையாக யிருநூறு வாங்கினால் நன்றே.

(198)

இ. பிற்குறிப்பு .

1017ஆம் (கொல்லம்) வருடம் ஆடி மாதம் 12ந் தேதி எழுதி முகிந்த ஏடு.

3203. மருந்து செய்முறை

1. நூலகக் குறிப்பு

அ. *2316*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. மருந்து செய்முறை

இ. மருத்துவம்

ஈ. உரைநடை

அச்சில் ஏறத்தாழ 100 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 120 ஏடு; 240 பக்கம்

ஆ. நீளம் 12.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரிகள்

உ. கிறுக்கலான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சாதிலிங்கம் கட்டவும் நீத்தவும்:- சாதிலிங்கம் கழஞ்சு ஒன்றுக்கு உரி 10 சிவந்த நாயுருவிச்சாறு வீதம் சருக்குக் கொடுத்துக் கட்டித் தீயில் போட்டால் புகையாது. அப்புறம் நீத்தவும்.

ஆ. முடிவு

ஒருநாள் விட்டு ஒருநாள் வருகிற குளிர் காய்ச்சலுக்கு மருந்து:- கிராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி சரி கொண்டு, பொடி செய்து தேனில் கொடுக்கவும்.

நாள் காலமே கொடுக்கத் தீரும். பெண் பிள்ளைகளுக்கு இந்தக் காய்ச்சலானால் சுக்கும் தேவதாருவும் பொடி செய்து கூடப் போட்டுத் தேனில் கொடுக்கத் தீரும்.

3204. சௌந்தரியலகரி மூலமும் உரையும்

1. **நூலகக் குறிப்பு**

   அ. *2317-1*

2. **உள்ளீடு : நூல் விவரம்**

   அ. *கவிராச பண்டிதர்*

   ஆ. *சௌந்தரியலகரி மூலமும் உரையும்*

   இ. *சிற்றிலக்கியம்*

   ஈ. *செய்யுளும் உரைநடையும்*
   அச்சில் ஏறத்தாழ 100 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

   அ. *45 ஏடு; 90 பக்கம்*

   ஆ. *நீளம் 12.5 செ.மீ., அகலம் 4 செ.மீ.*

   இ. *இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது*

   ஈ. *ஒரு பக்கத்திற்கு 11 வரிகள்*

   உ. *தெளிவான கையெழுத்து*

   ஊ. *நல்லநிலை*

   எ. *முழுமை*

4. **சிறப்புச் செய்திகள்**

   அ. தொடக்கம்

   பிறைதவழு மெழிற்றோன்றப் பிறங்குகதிர் வெண்கோட்டால்
   செறிகதிர்செய் தடங்குடுமிச் செம்பொன்மால் வரைவாய்ப்ப
   மறைபுகழுஞ் சவுந்தரிய லகிரியினை வகுத்தெழுதும்
   விறல்கழும வேழமுகன் விரைமலர்த்தா ளிணைதொழுவாம்.

   (1)

   ஆ. முடிவு

   வேத நுண்பொரு ளாதி சுந்தரி
   வீற டங்கலு மாயமே

யீத யர்ந்துவி டாதெ ழுங்கவி
ராச பண்டிதன் விரையன்
நாத ரஞ்சகி தாள்பெ ருந்திரு
நாம மொன்பதும் நூறுமே
ஓதில் நன்பல போக முஞ்சிவ
யோக மும்பெறு வார்களே.

(100)

சௌந்தரியலகரி முற்றும்.

5. பிற செய்திகள்

இறுதி இரண்டு ஏடுகளில், 'நித்தரொரு பக்கம்', 'முக்கணிறைவற்கும்', 'சிந்தையுறும் ஞானம்' என்னும் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. சுவடியின் இறுதியில் இடம்பெற்றுள்ள 18 ஏடுகளில் சௌந்தரியலகரியிலுள்ள பாடல்களுக்குரிய வழிபாட்டுச் சக்கரங்கள் வரையப்பட்டு உள்ளன.

3205. அகத்தியர் ஞானம் 100

1. நூலகக் குறிப்பு

அ. 2317-2

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் ஞானம் 100
இ. தத்துவம்
ஈ. செய்யுள்101

3. தோற்றக் கூறுகள்

அ. 49 ஏடு; 98 பக்கம்
ஆ. நீளம் 12.5 செ.மீ., அகலம் 4 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 11 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

ஏட்டெண் 48ல் நூல் தொடங்குகிறது

எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

பூரணமாய் மும்மூர்த்தி வந்த வாறும்
பூமியென்றுந் திகிரியென்றும் படைத்த வாறும்
காரணமாய்த் தேவியெங்கும் நிறைந்த வாறுங்
கற்பமுண்ட ரிசிகள்சா காத வாறும்
வாரணமாய்ப் பறவையொடு நாற்கால் சென்மம்
மானிடர்க ளுருகின்ற குலத்தின் வாறும்
பாரணமாய் விருட்சமாய்ப் புல்ல தாகிப்
பாதாள சாகரமும் படைத்த வாறே.

(1)

ஆ. முடிவு

வெளியோடே வெளிசேரு மீறுந் தண்ணீர்
விதமான அப்புடனே சேர்ந்து போகும்
ஒளியோடே தேயுவதிற் சேர்ந்து போகும்
உத்தமனே மண்ணோடே மண்ணுஞ் சேரும்
அழியாத வாயுவிலே வாய்வு சேரும்
அஞ்சும்ஒன்றா கக்கூடி னாலா றாகும்
வளியோடே யிவ்வண்ண மறிந்து கொண்டால்
மானிடரே காயசித்தி ஞான முற்றே.

(101)

அகத்தீசுரர் ஞானம் முகிந்தது முற்றும்.

3206. திருநீலகண்ட த்ரயாட்சரி யந்த்ரவிதி

1. **நூலகக் குறிப்பு**

அ. 2318-1

2. **உள்ளிடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. திருநீலகண்ட த்ரயாட்சரி யந்த்ரவிதி - கல்பம்
இ. மாந்திரீகம்
ஈ. உரைநடை
அச்சில் ஏறத்தாழ 40 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 29 ஏடு; 58 பக்கம்
ஆ. நீளம் 20.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

திருநீலகண்ட திரயாட்சரி கல்பம்:-
சுரத்துக்கு:- பால்வர்ணமாய், நீலகண்டமாய், சதுர்புயமாய், நூறு தியானம் பண்ணி விபூதி தரிக்கச் சுரம் நிவாரணம்.

சந்திர மண்டலத்தினுள்ளேயிருக்கிற பாவனையாய் ரெண்டு கையுடையவராய், அமுர்த சந்திரனைச் சடையிலே தறித்தவராய்ப் பாவனை பண்ணி நூற்றெட்டுரு செபிக்க விஷத்தையரிக்கும்.

ஆ. முடிவு

நாவடக்கம்:- "கொளுஞ்சியைக் கிழிக்கிறதற்கு நாவைக் கிழிச்சேன். அண்ணாக்கும் பல்லும் அடங்கக் கிழிச்சேன்" என்று சொல்லிக் கிழிக்கவும்.

கல்லுவச்சு மிதிக்கிற போது, "அவனாவெல்லாம் என் காலுக்குள்ளே மிதித்துக் கொண்டேன்" என்று சொல்லவும். சக்கரத்தில் மாற்றான் பேரை அடைத்துக் கொள்ளவும்.

5. **பிற செய்திகள்**

இடையிடையே மாந்திரீக எந்திரங்கள் வரையப்பட்டு உள்ளன. தொடர் எண் 2393-1, 2393-2 பெற்ற சுவடிகள் இதற்குத் தொடர்புடையனவாகும்.

3207. பஞ்சபட்சி சாத்திரம்

1. **நூலகக் குறிப்பு**

   அ. 2318-2

2. **உள்ளீடு : நூல் விவரம்**

   அ. ....

   ஆ. பஞ்சபட்சி சாத்திரம்

   இ. சோதிடம்

   ஈ. செய்யுள்

   அச்சில் ஏறத்தாழ 40 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

   அ. 20 ஏடு; 40 பக்கம்

   ஆ. நீளம் 20.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.

   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

   ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்

   உ. தெளிவான சிறிய கையெழுத்து

   ஊ. நல்லநிலை

   எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

   அ. தொடக்கம்

   உன்னி யொருவன் உரைத்த முதலெழுத்தைப்
   பன்னிப் பறவையதாய்ப் பாவித்து - உன்னி
   உதைய திசைபட்சி ஒன்றாக வேயுரைக்கக்
   கதைகாவி யக்களிறே காப்பு.

   ஆ. முடிவு

   தானநா யறுசேய் அஞ்சில்
   தரித்துணை சீரி தாமே

வான்மதி யூடு சீறி
  வருபுத னூடு போவோம்
ஆனபொன் கேளே பேதாய்
  அரும்புகர் போலோர் தூசு
நீணிற வாரந் தாதா
  இனியென நிகழ்த்த லாமே.

(5)

3208. சட்டைமுனி பூரண சூத்திரம் 16

1. நூலகக் குறிப்பு

அ. 2319-1

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. சட்டைமுனி
ஆ. சட்டைமுனி பூரண சூத்திரம் 16
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 16

3. தோற்றக் கூறுகள்

அ. 9 ஏடு; 18 பக்கம்
ஆ. நீளம் 28 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. முதலேடு இல்லை
இடது ஓரம் முறிந்துள்ளது
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பூரணமே தெய்வமென உரைத்தீ ரய்யா
  பூரணமே இன்னதென்று புகலக் கேளும்
(காரணத்தைச்) சொல்லுகிறேன் நினைவாய்க் கேளும்
  கலையான பதினாறும் பூர.. .....

.... உலகத்தோர் மதிம யங்கி
மதிகெட்டுப் பூரணத்தை இக்ழ்ந்தா ......
.....வைத் துப்பூர ணத்தைப் பார்க்கில்
வாசியென்ற சிவயோகம் வாழ .....

ஆ. முடிவு

பிரித்துரைத்தேன் சூத்திரம்ஈ ரெட்டுக் குள்ளே
பித்தர்களே ஒன்றாகத் தெளிந்து பார்க்கில்
விரித்துரைத்த நூலினுட் மார்க்கந் தோன்றும்
விள்ளாதே யிந்தநூல் இருக்கு தென்று
கருத்துடனே அறிந்துகொள்ளு கலைமா றாதே
காரியத்தை நினைவினிலே கருதிக் கொள்ளு
சுருதிசொன்ன செய்தியெல்லாம் சுருக்கி .....
சூத்திரம்போல் பதினாறுந் தொகுத்திட் டேனே.
(16)

3209. பூதநாடி சாத்திரம்

1. **நூலகக் குறிப்பு**
   அ. *2319-2*

2. **உள்ளீடு : நூல் விவரம்**
   அ. வால்மீகர்
   ஆ. பூதநாடி சாத்திரம்
   இ. மருத்துவம்
   ஈ. செய்யுள் 16

3. **தோற்றக் கூறுகள்**
   அ. 6 ஏடு; 12 பக்கம்
   ஆ. நீளம் 28 செ.மீ., அகலம் 2.5செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து
   ஊ. இறுதி இரண்டேடுகள் இடதுபுறம் சிதைந்துள்ளன
   ஏட்டெண் 10ல் நூல் தொடங்குகிறது

எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்; ஆ. முடிவு

காண்க:- தொடர் எண்.2278-13.

3210. சன்னி நிதானம்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2319-3

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. சன்னி நிதானம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 26

3. **தோற்றக் கூறுகள்**

அ. 5 ஏடு; 10 பக்கம்

ஆ. நீளம் 28 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

ஏட்டெண் 13ல் நூல் தொடங்குகிறது

எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்; ஆ. முடிவு

காண்க:- தொடர் எண்.2278-4.

5. **பிற செய்திகள்**

சன்னி நிதானத்தை அடுத்து வலி ஐந்தின் குணம் 15 பாடல்களில் இடம்பெற்றுள்ளன. சன்னி நிதானம் என்ற பெயரில் வேறொரு நூலும் உண்டு.

3211. விக்கல் ஐந்தின் குணம்

1. நூலகக் குறிப்பு

அ. 2319-4

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. விக்கல் ஐந்தின் குணம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 7

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்
ஆ. நீளம் 28 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
ஏட்டெண் 28ல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்; ஆ. முடிவு
காண்க:- தொடர் எண்.2278-6.

3212. வேர்வையின் குணம்

1. நூலகக் குறிப்பு

அ. 2319-5

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. வேர்வையின் குணம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 6

3. தோற்றக் கூறுகள்

அ. *3 ஏடு; 6 பக்கம்*

ஆ. *நீளம் 28 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.*

இ. *இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது*

ஈ. *ஒரு பக்கத்திற்கு 4 வரிகள்*

உ. *தெளிவான கையெழுத்து*

ஊ. *நல்லநிலை*

ஏட்டெண் 32ல் நூல் தொடங்குகிறது

எ. *முழுமை*

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்; ஆ. முடிவு

காண்க:- தொடர் எண்.2278-7.

3213. புருஷ நாடி

1. நூலகக் குறிப்பு

அ. *2319-6*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. புருஷ நாடி

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 4

3. தோற்றக் கூறுகள்

அ. *2 ஏடு; 4 பக்கம்*

ஆ. *நீளம் 28 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.*

இ. *இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது*

ஈ. *ஒரு பக்கத்திற்கு 4 வரிகள்*

உ. *தெளிவான கையெழுத்து*

ஊ. *நல்லநிலை*

ஏட்டெண் 33ல் நூல் தொடங்குகிறது

எ. *குறை*

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அஞ்சாகிப் பத்தான தசநா டிக்குள்
அப்பனே ரவிமதியும் நெரிப்பு மாகி
மிஞ்சாத வாதபித்த சிலேற்ப மாகி
விறமன மூன்றினிலே வியாதி காண
நெஞ்சாரக் காணுதற்கு வகையைக் கேளு
நேர்மையுள்ள தத்துவத்தை நினைவாய்ப் பார்த்துச்
செஞ்சாரை போல்பரந்த நாடி தன்னைத்
திறமாகக் காணுதற்கு வகையைக் கேளே.

(1)

ஆ. முடிவு

பார்க்கவே பெண்களுக்கு இடது பக்கம்
பதிவாகப் பார்த்திடவே பகரக் கேளு
கார்க்கவே வாதமது சர்ப்பம் போலும்
கனமான பித்தமது தவளை போலாம்
சேர்க்கவே அய்யமென்ற நாடி தோணும்
சிறுநடையா யன்னம்போல் செழிப்பாய்க் காணும்
ஆர்க்குமே தோன்றுமிந்த நாடி மூன்றும்
அனுதினமும் நல்லறிவா லறிந்து தேறே.

(4)

3214. அவதி சுர நூல்

1. நூலகக் குறிப்பு

அ. 2319-7

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. அவதி சுர நூல்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 30

3. தோற்றக் கூறுகள்

அ. 16 ஏடு; 32 பக்கம்
ஆ. நீளம் 28 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
ஏட்டெண் 36ல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்; ஆ. முடிவு
காண்க:- தொடர் எண்.2278-1.

3215. வைத்தியத் தருக்க நூல்

1. நூலகக் குறிப்பு

அ. 2319-8

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. வைத்தியத் தருக்க நூல்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 37

3. தோற்றக் கூறுகள்

அ. 16 ஏடு; 32 பக்கம்
ஆ. நீளம் 28 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. பழுதுற்ற நிலை
ஏட்டெண் 52ல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

பார்பூத்த பூங்குழலாள் கமல மாது
 பைந்தொடிதன் நாமங்கள் பணிந்து போற்றிச்
சீர்பூத்த வைத்தியநூல் விருது தர்க்கம்
 செகத்தினிலே பாடுதற்குச் செயலே தென்றால்
கார்சேர்ந்த மலர்க்குழலாள் கவுரி மைந்தன்
 கயிலாசம் ஆளுகின்ற கன்னி மைந்தன்
பார்சேர்ந்த வள்ளியுட பாக(ன்) முன்னோன்
 மருப்புடைய ஐங்கரனும் காப்புத் தானே.

(1)

ஆ. முடிவு

தர்க்கநூல் கற்ற வர்க்குச்
 சார்ந்தநல் குணங்கள் வேணும்
தர்க்கநூல் இயம்பும் போது
 சகலரும் மகீசன் ஆவார்
தர்க்கநூல் உரைத்தோ மானால்
 தடைபடர்க் கேறும் போகும்
தர்க்கநூல் முப்பத் தேழில்
 சகலரும் குணமா வாறே.

(37)

3216. கர்ம காண்டம்

1. **நூலகக் குறிப்பு**

 அ. 2319-9

2. **உள்ளீடு : நூல் விவரம்**

 அ. ....
 ஆ. கர்ம காண்டம்
 இ. மருத்துவம்
 ஈ. செய்யுள் 8

3. **தோற்றக் கூறுகள்**

 அ. 4 ஏடு; 8 பக்கம்

ஆ. நீளம் 28 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
ஏட்டெண் 68ல் நூல் தொடங்குகிறது
70ஆம் ஏட்டின் இடது பக்கம் முறிந்துள்ளது
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சுழலாமல் ஸ்த்ரிகளுக்குக் கர்ப்ப நோய்தான்
குழ்ந்துவந்த கர்மத்தைச் சொல்லக் கேளு
அழலாமல் வித்துவிரை அளித்த பாவம்
அஞ்சாமல் பாலகனை அழித்த பாவம்
குழவியிளம் பிஞ்சுதான் பறித்த பாவம்
கோவினிளங் கன்றுபால் குடித்த பாவம்
விழலான இளம்பயிரை அழித்த பாவம்
மேதினியில் மலடான விந்தை தானே.

(1)

ஆ. முடிவு

பாரப்பா இதுகுணத்தைச் சுருக்கிச் சொன்னேன்;
பலபேர்கள் பலவிதமாய் வெகுவாய்ச்
சொன்னார்;
சீரப்பா வெகுநூலைக் குறுக்கிச் சொல்வேன்;
சித்துவிளை யாடுமடா திருமால் வேதம்;
ஊரப்பா உட்குறியும் புறக்குறியும் சொன்னேன்;
உத்தமனே குணமறிந்து கருதிக் கொண்டு
காரப்பா சிவன்சொன்ன மருந்து தன்னைக்
காசியினில் நித்தியமாய் நிகழ்த்தி னோமே.

(8)

முற்றிற்று.

5. பிற செய்திகள்

இவ்வெட்டுச் செய்யுள்களில் மகளிரின் மலட்டுத் தனத்திற்கான காரணங்களும் சில சிகிச்சைகளும் கூறப்பட்டுள்ளன.

3217. கிரந்தி நிதானம்

1. நூலகக் குறிப்பு

அ. 2319-10

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. கிரந்தி நிதானம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 5

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்
ஆ. நீளம் 28 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. சற்றுச் சிதைந்த நிலை
ஏட்டெண் 72ல் நூல் தொடங்குகிறது
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காண்க:- தொடர் எண்.2373-2.

ஆ. முடிவு

ஓடுமே உதரம் வீங்கி
உலவியே திரியும் கண்டாய்
வாடுமே பின்னை யுள்ளம்
வருமுறை வகையைக் கேளாய்

பாடியே மிடறு குன்றிப்
பரிவுடன் அறிவு குன்றித்
தேடிய வண்ண மாகில்
சில்விஷக் கிரந்தி யென்றே. (5)

3218. பவுந்திரக் குணம்

1. நூலகக் குறிப்பு

அ. *2319-11*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. பவுந்திரக் குணம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 12

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 6 பக்கம்
ஆ. நீளம் 28 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு இரண்டு பத்திகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. முறிந்தநிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

புவிமிசை வாழு கின்ற
புருடர்க்கும் மங்கை யர்க்கும்
சவுகெட வரும்ப வுந்திரந்
தான்செய்யுங் குறிகு ணங்கள்
அவையினிவ்ச் சாத்தி யங்கள்
அசாத்தியம் அதன்பேர் தானும்
குவிமுலை மானே சொல்லக்
கேட்டுநீ குறித்துக் கொள்ளே. (1)

ஆ. முடிவு

செப்பியகுய் யத்தை விட்டுச்
  செறிந்திடும் நாடி யில்கீழ்
கொப்புளம் கொண்டு வீங்கிக்
  கொதித்திடும் நோவும் உண்டாம்;
மைப்படுங் கண்ணி மாதே!
  ஒத்துநீர் சலமு மாறா;
இப்படிக் குணங்கள் கண்டால்
  தண்டிலே பவுந்த்ரம் ஆமே.

(12)

3219. அரையாப்பு ஐந்தின் குணம்

1. **நூலகக் குறிப்பு**

அ. *2319-12*

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. அரையாப்பு ஐந்தின் குணம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 7

3. **தோற்றக் கூறுகள்**

அ. 2 ஏடு; 4 பக்கம்

ஆ. நீளம் 28 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

செய்வினையால் மாதரிடம் சேருகையால் சேர்ந்தநீர்க்
கையிணையால் வாய்க்கால் கடக்கையால் - தொய்யும்

வரையாப் பணைத்தமுலை மானே மனுடர்க்கு
அரையாப்பும் அஞ்சுவித மாம்.

(1)

ஆ. முடிவு

மூளைதனி லொன்று முளைத்திடையைச் சுற்றிவந்து
வாளும்அரை யாப்பின் குணங்கேள் - நீளுலகில்
பணம்ஆ யிரம்கொடுத்துப் பாடுபட்டுப் பார்த்தாலும்
குணமாகா தென்றே குறி.

(7)

3220. சன்னியின் குணம்

1. நூலகக் குறிப்பு

அ. *2319-13*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. சன்னியின் குணம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 16

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம்
ஆ. நீளம் 28 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

உத்த வெயிலில் மிகநடந்து
உடனே குளித்து முழுகிடினும்
மெத்த எண்ணெய் தான்முழுகி
மீறித் திரியை மருவிடினும்

உத்த மந்தம் மீறிடினும்
உயரப் பனிநீர் நனைந்திடினும்
சத்தே சுறுமுந் தலைகுத்தும்
சன்னி வாதம் தப்பாதே.

(1)

ஆ. முடிவு

அரைத்தமருந் தெடுக்கையிலே தீபங் காட்டி
அந்தந்த வியாதிக்கும் அனுபானங் கண்டு
படைத்தகுரு பரனைநீ தியானஞ் செய்து
பார்மகனே கொடுப்பதிஞ்சிச் சாற்றி லீவாய்;
விடைத்தமறு வாராது வியாதி யேது?
வெகுசனங்கள் கூட்டத்தில் விள்ளாதே நீயும்
சடைத்துமன திளையாதே சனத்தில் செய்நீ
சாத்திரந்தான் பதினாறு சூத்திரமும் முற்றே.

(16)

முற்றிற்று.

5. பிற செய்திகள்

இதனுள் சன்னிவாத சுரம், சுர சன்னியின் குணம், வாத சன்னியின் குணம், பித்த சன்னியின் குணம், பஞ்ச பூதங்களின் இருப்பிடம் ஆகிய செய்திகள் இடம்பெற்று உள்ளன.

3221. அகத்தியர் சாத்திரம் 16

1. நூலகக் குறிப்பு

அ. 2319-14

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் சாத்திரம் 16
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 14

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு; 8 பக்கம்

ஆ. நீளம் 28 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காண்க:- தொடர் எண்.2278-2.

ஆ. முடிவு

அமிந்த மருந்துக்கு நேர்தான் வாளும்
அந்தவகை யில்லாமல் இன்னங் கேளு
தாமிந்த நற்சீரம் அக்கரா காரம்
சரக்கிலைதான் கோட்டமொடு சங்குமுட் சோறு
வாமிந்த கல்வத்தி லிட்டு நன்றாய்
மயிணம்போல் ஆட்டிரவி தன்னில் வையே.

3222. ஊழிக்காற்று

1. நூலகக் குறிப்பு

அ. 2319-15

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. ஊழிக்காற்று
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 9

3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு; 10 பக்கம்
ஆ. நீளம் 28 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

கேளப்பா ஊழியென்ற காற்றுச் சொல்வேன்
 கெடியான சாமளமா காளி யாலே
காளப்பா மைபோலே கறுத்து நிற்கும்
 கண்ணுக்குத் தெரியாது ...கடன் மெத்த
மாளப்பா காற்றினுட விபரங் கேளு
 மைந்தனே சொல்லுகிறேன் வகையாய்க் கேளு
பாளப்பா பண்ணிவரும் உலக மெல்லாம்
 பரிசுத்த மாயிருந்தால் பறக்கும் பாரே.
(1)

ஆ. முடிவு

வையப்பா வாலையுட மூன்றெ ழுத்தை
 வலுவாகும் சதாகாலம் நினை(வு) வேணும்;
செய்யப்பா தன்பூசை விட்டா யானால்
 செணத்திலே அழியுமடா தேகந் தானும்;
மையப்பா மையமென்ற தலைமேல் நில்லு
 மாறாத வியாதியெல்லாம் மாண்டு போகும்;
கையப்பா அறிந்தகுரு தன்னைக் காரு
 கடாச்சம்வைத்துச் சொன்னதொரு மருந்தி தாமே.
(9)

ஊழிக்காற்று முற்றிற்று.

3223. சர்ப்ப நூல்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2320-1

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. சர்ப்ப நூல்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 63

3. தோற்றக் கூறுகள்

அ. 12 ஏடு; 24 பக்கம்

ஆ. நீளம் 28 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. -நல்லநிலை

முதலேடு இல்லை

பாடலெண் 7ல் சுவடி தொடங்குகிறது

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வேதியன் ரத்த மேனி
    வேந்தனி லரசன் பொன்னாம்
நீதிசேர் வணிக னாகில்
    நிகரிலா மதியின் மேனி
சோதிமென் நகையாய் கேளாய்
    சூத்திரன் கரிய னாகும்
பூதலத் தரவின் நாமம்
    பொருந்திடப் புகலப் பெற்றேன்.

(7)

ஆ. முடிவு

ஆயில்யம் பரணி கார்த்திகை
    யாதி ரையோ டோணம்மூலம்
பாயும் புலியும் பகைநாளாம்
    பதினெட் டாம்நாள் வைகாசி
பேயும் பக்கம் அட்டமிநவமி
    மிகுத்த குளியன் விஷ்டியினும்

மாயும் இடமாங் கடிகையிலை
மாண்டார் இதனிற் கடியுண்டார்.

(69)

5. பிற செய்திகள்

தொடர் எண்.2320-2யும் காண்க.

3224. தூதலட்சணம்

1. நூலகக் குறிப்பு

அ. 2320-2

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. தூதலட்சணம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 243

3. தோற்றக் கூறுகள்

அ. 39 ஏடு; 78 பக்கம்
ஆ. நீளம் 28 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. சற்றே கிறுக்கலான கையெழுத்து
ஊ. ஆங்காங்கு ஏடுகள் சிதைந்துள்ளன
சுமாரான நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கடித்திடும் மீளும் கொல்லும்
காலனும் ஆஆ என்று
மடுத்தவாய் நஞ்சம் உண்டார்
மாநாகம் என்றும் பேராம்
தொடுத்ததோர் வண்ண மஞ்சு
சூத்திரம் அறிந்து மீட்போர்

நடித்திடும் ஈசன் பாத
நல்வழி சேர்வீர் கண்டீர்.

(67)

ஆ. முடிவு

இதுவே அரவக் கடிகொண்டு
எடுத்துப் பிணமும் கொடுவந்தால்
எதுவோ செய்வோம் என்றுசொல்லி
ஏங்கி இளைத்து நில்லாதே
பொதுவே குழம்பைக் காசினெடை
பொருந்திக் கொடுக்க மீண்டிடுமே.

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

5. பிற செய்திகள்

ஏட்டெண் 1 எனத் தொடங்கினாலும் பாட்டெண் 67 என உள்ளது. இதில் உள்ள செய்திகளும் முன் சொல்லப் பெற்ற சர்ப்ப நூலுக்குத் தொடர்புடையனவே.

3225. குருநாடி சாத்திரம்

1. நூலகக் குறிப்பு

அ. 2320-3

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. குருநாடி சாத்திரம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 96

3. தோற்றக் கூறுகள்

அ. 20 ஏடு; 40 பக்கம்
ஆ. நீளம் 28 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. சிதைந்த நிலை
எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

சீர்பெறு முனிவர் வேதம்
தெளிந்துபின் னுலகத் தோர்கள்
பேர்பெறு கருவி லூற்ற
பிணிபல துணர்ந்து தேர்ந்து
ஊர்பல நாடிக் கெல்லாம்
உயர்பெரு நாடி மூன்றில்
சேர்குரு நாடி நேர்மை
செயலுடன் கூற லுற்றார்.

(1)

ஆ. முடிவு

அக்கியே எரிந்த சூடு
ஆதாரம் ஆறும் பற்றிப்
புக்கியே நரம்பு தானும்
பொன்மையும் கெட்டுத் தாது
தொக்கிய கபால முட்டித்
துண்டமும் பரந்து மேவிக்
கக்குமாம் சோகை ரோகம்
கருத்துள்ளே ..... சொல்லே.

(96)

3226. நோய்க்கு மருந்து

1. **நூலகக் குறிப்பு**

அ. 2321

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....
ஆ. நோய்க்கு மருந்து
இ. மருத்துவம்
ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 300 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

அ. 200 ஏடு; 400 பக்கம்

ஆ. நீளம் 17.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரிகள்
உ. கிறுக்கலான கையெழுத்து
ஊ. நல்லநிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

..... வியாதிக்கு:- கழுதை விட்டைச் சாறும் பூலாத்தியிலைச் சாறும் சேர்த்து ஒரு முட்டையின் வெள்ளைக் கருவும் விட்டு உளுந்தப் பருப்பும் கூட இட்டுச் சாதிக்காயும் உரைச்சுப் பஞ்சிலூட்டி வியாதியில் பருக்களில் இடவும்.

ஆ. முடிவு

புகைக்கு மருந்து:- அரிதாரம் பலம் 1, கொம்பரக்கு பலம் 4, வேலிப்பருத்திச் சாறு விட்டரைத்துச் சீலையில் தடவி உலர்த்தித் திரித்து, பத்தியம் உப்பு, புளி தவிர்க்கவும். பால், கஞ்சி குடிக்கவும்.

3227. அகத்தியர் பூரண சூத்திரம்

1. நூலகக் குறிப்பு

அ. 2322-1

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் பூரண சூத்திரம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 215

3. தோற்றக் கூறுகள்

அ. 48 ஏடு; 96 பக்கம்
ஆ. நீளம் 16 செ.மீ., அகலம் 5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 15 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஒன்றான பூரணமு மாறா தாரம்
உரைப்பதற்கு மேலான தொண்ணூற் றாறு
பன்றான தீட்சைபதி னொன்று ரெட்டி
பத்துடனே முப்பத்து ரெண்டு தீட்சை
உன்றான சமாதிகற்பம் வாசி நேர்மை
உரைப்பான சிவயோகம் பிராண சித்தி
நன்றான வாதத்தின் தீட்சை யோடு
நலமான சவுக்காரத் திறவு கோலே.

(1)

ஆ. முடிவு

ஆமிந்த யிருநூற்றுப் பதினா றுக்குள்
அடக்கிவைத்த பொருள்களெல்லாம் வெளியாய்ச் சொன்னேன்;
ஓமிந்த உலகத்தி லென்னூல் கிட்டில்
உலகத்தில் சித்ததிக முண்டாய்ப் போச்சு;
தாமிந்தச் சூத்திரத்தைக் கணியா தீந்தால்
தலைதெறித்துப் போகுமடா சத்தியஞ் சொன்னோம்;
நாமிந்தப் படிசொன்னோம்; யோகிக் கீவாய்;
நலமான பூரணசூத் திரந்தான் முற்றே.

(215)

பூரண சூத்திரம் முற்றும்.

3228. நாடி சாத்திரம்

1. நூலகக் குறிப்பு

அ. 2322-2

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. நாடி சாத்திரம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 21

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு; 8 பக்கம்
ஆ. நீளம் 16 செ.மீ., அகலம் 5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 14 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கரிமுக னடியை வாழ்த்திக்
  கைதனில் நாடி பார்க்கில்
பெருவிர லங்கு லத்தில்
  பிடித்துடன் நடுவே தொட்டால்
ஒருவிர லோடில் வாதம்
  இருவிர லாகும் பித்தந்
தெரிவிரல் மூன்று தன்னில்
  சேற்பன நாடி யாமே.

(1)

ஆ. முடிவு

பார்க்குமா றாம்அ வத்தை
  உடலது குளிரும் பண்பால்
ஏற்குமே ழாம்அ வத்தை
  சோறது தேடு மெட்டில்
கூர்க்குங்கண் பஞ்ச தாக்கும்
  ஒன்பதி லுடல்வெ ளுக்குங்
கூர்க்குமா ருயிர்போம் பத்தாம்
  அவத்தையைச் சொல்லுங் காலே.

(21)

நாடி சாத்திரம் முற்றும்.

3229. குணங்குறி மீட்சி

1. **நூலகக் குறிப்பு**
   அ. 2322-3

2. **உள்ளீடு : நூல் விவரம்**
   அ. ....
   ஆ. குணங்குறி மீட்சி
   இ. மருத்துவம்
   ஈ. செய்யுள் 4

3. **தோற்றக் கூறுகள்**
   அ. 1 ஏடு; 2 பக்கம்
   ஆ. நீளம் 16 செ.மீ., அகலம் 5 செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 14 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து
   ஊ. நல்லநிலை
   எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**
   அ. தொடக்கம்

காலும்இக் குணங்கள் சேரும்
    கருதியே என்றும் காண
மேலுரை தன்னில் .....
    மீட்சியும் அற்ப மேதான்
சாலவே குளிர்தல் வெப்பல்
    சளம்இலாக் குளிர்கொண் டாடல்
ஏலவாய் கைத்தல் உச்சி
    அக்கினி யோடும் எய்தல்.

(1)

ஆ. முடிவு

புரிந்துமெய் சோர்கி டாத்த
    போர்விழி சிவ்வ வெறாதே

வருந்திடும் உடலம் நாறா
    வரிவிழி நீர்பா யாதே
கரிந்துநா வரண்டி டாதே
    கவந்தமும் வாங்கா தாகில்
வருந்தியே பரிகா ரஞ்செய்
    வாமுமை பங்க ரானே.

(4)

குணங்குறி முற்றும்.

3230. நாடி அசாத்யம்

1. நூலகக் குறிப்பு

அ. 2322-4

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. நாடி அசாத்யம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 4

3. தோற்றக் கூறுகள்

அ. 1 ஏடு; 2 பக்கம்
ஆ. நீளம் 16 செ.மீ., அகலம் 5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 14 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

குணங்குறி மிகுந்து தோன்றி
    குற்றமே குறைந்து நின்றால்
இணங்கும்மந் திரம்ம ருந்தால்
    இதுகளால் மீள்வ துண்மை

குணங்களால் குற்றம் மீறி
குறிகுணம் குறைந்து நின்றால்
இணங்கிடா தகன்று சீவன்
பிரிந்ததாய்ப் பேச லாமே.

(1)

ஆ. முடிவு

பாகான மொழியின் மாதே
பறையில்வாய் செவிகே ளாதே
வாகான நெற்றி வேர்வை
மயக்கமி லாதே ஆகில்
தாகமாய் இளைத்து நெற்றி
வேர்வைதான் எள்ளா தாகில்
ஏகநற் பிராணன் உண்டென்
றெய்திநீ மருந்து செய்யே.

(4)

நாடி அசாத்தியம் முற்றும்.

3231. நோய்க்கு மருந்து

1. **நூலகக் குறிப்பு**
   அ. 2322-5

2. **உள்ளீடு : நூல் விவரம்**
   அ. ....
   ஆ. நோய்க்கு மருந்து
   இ. மருத்துவம்
   ஈ. செய்யுள் சுமார் 70

3. **தோற்றக் கூறுகள்**
   அ. 10 ஏடு; 20 பக்கம்
   ஆ. நீளம் 16 செ.மீ., அகலம் 5 செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 14 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

கயரோகம்:-

அய்யம்மோ கித்த போது
அறியவே இருமல் நாசம்
நையுமாம் மாந்தை ஈளை
நற்குளில் விக்கல் சத்தி
செய்யுமா மூச்ச டைப்பன்
அதித்துறு கயநோய் ஆகும்
தொய்யுமேல் இளைப்புக் காசம்
தோன்றுமென் றிருடி சொன்னார்.

(1)

ஆ. முடிவு

தாகம்: மித்துவாதி குளிகை:-

சந்தனம் கோட்டம் அதிமதுரம்
சாத்திர வேலித் தக்கோலம்
இந்துக் கோரோ சனைமுத்தம்
ஏற்றவி ராமிச் சிருவேலி
இந்த வகையே அரைத்துண்டை
இலந்தைக் கொட்டை அளவாக
வந்த யுளலைஇடு இளநீரில்
வருந்து மித்து வாதிஇதே.

முகையித்தீன் ஆண்டவர் முன்நிற்க.

3232. நயனவிதி

1. **நூலகக் குறிப்பு**

அ. 2322-6

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. நயனவிதி
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 98

3. தோற்றக் கூறுகள்

அ. 13 ஏடு; 26 பக்கம்
ஆ. நீளம் 16 செ.மீ., அகலம் 5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 14 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
ஏட்டெண் 7ல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மாதுறு பாகன் சொன்ன
வடமொழி நூலை யாய்ந்து
தீதுகள் வாரா வண்ணம்
திருவுளத் துற்ற போதில்
ஆதிமா முனிவன் சொன்ன
ஆயுரு வேதந் தன்னை
நாதனார் தெறிந்து ரைத்த
நயனத்தின் விரிவு தானே.

(1)

ஆ. முடிவு

பொன்னாங் காணி சிறுகீரை
போற்றுஞ் சாரணை சிறுபீளை
இன்னே யெலுமிச் சம்பழந்தான்
விரைவாய்ச் சாறு தானுழக்குச்
சொன்னோந் துத்தம் துரிசுடனே
துலங்கு மதுரம் ஏலமுடன்
மின்னே சீனக் காரமுடன்
விரைவாய்ச் சுக்கு மரைக்கழஞ்சும்

சேர அரைத்து நெய்யிலிட்டு
வெந்து கண்ணில் ஒழுக்கமீளும்;
படலம் மீளும் மீளுங்கி
வெள்ளைச் சுக்கிலம் வாராதே.

(98)

(இப்பாடலில் யாப்பமைதி இல்லை)

இ. பிற்குறிப்பு

மலுக்கருபிள்ளை எழுதி முகிந்தது. நயனவிதி முற்றும்.

3233. மருந்து செய்துறை

1. நூலகக் குறிப்பு

அ. *2323*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. *மருந்து செய்முறை*

இ. *மருத்துவம்*

ஈ. *செய்யுளும் உரைநடையும்*
அச்சில் ஏறத்தாழ 150 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. *127 ஏடு; 254 பக்கம்*

ஆ. *நீளம் 15.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.*

இ. *இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது*

ஈ. *ஒரு பக்கத்திற்கு 7-9 வரிகள்*

உ. *தெளிவான கையெழுத்து*

ஊ. *சுமாரான நிலை*

எ. *குறை*

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

(நாயுருவியைக்) கொண்டு வந்து தோலைச் சீவிப் போட்டுக் கொத்தி, ஒரு பாண்டத்திலிட்டு நானாழி

தண்ணீர்விட்டு நீர் சுவற அவித்து இறக்கிப் பிதிர்த்து அதிலே நெய் நாழி தேன் நாழி விட்டுச் சர்க்கரை பலம் 4, கற்கண்டு பலம் 4, அதிமதுரம், நற்சீரகம், கருஞ்சீரகம், கன்னார், சாத்திரவேதி, கோட்டம், சிறுதேக்கு, ஏலம், இலவங்கம், பச்சை நாகப்பூ, திப்பிலி, அசமதாகம், வெந்தயம், கடுகு, மஞ்சள், கற்கடக சிங்கி, செந்தூரம், அரைத்த சந்தனம், அதிவிடையம், சிறுமூலம், சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு வகைக்குப் பலம் 3 கொண்டு இடித்துப் பொடியாக்கி வெந்து ஒரு நேரத்துக்கு ஒரு பாக்களவு இரண்டு நேரமும் நாற்பது நாளுக்குக் கொள்ளத் தீரும் வியாதி - பித்தம், இரத்தபித்தம், உதிரமாதி, செங்காமாரி, பிரமேகம், மூத்திரக்கிரிச்சனம், உள்ளுருக்கி; வெள்ளுடைப்பு, காந்தல், எரிவு முதலான.

ஆ. முழுவு

அய்யும் எதிரி ரசாயணம்:-

சீனப்பாவு பலம் 6, கருஞ்சீரகம் பலம் 3, இரண்டு மருந்தும் பசுவின் பால்விட்டு அவித்து உணக்கி இடித்து ஆட்டிறைச்சி பலம் 9 கூட இட்டு வடிகட்டிப் பெருந்தேன் விட்டுக் குழைத்து வலிய நெல்லிக் காயளவு தின்னவும்.

பத்தியம்:- புளியும் மோரும் விலக்கு.

தீரும் வியாதிகள்:- சூலைவாதம், மேகம், குட்டம், கரப்பன், சொறிகரப்பன்.

இவைபோட்டு இரண்டு வேளையும் சோறுண்ணவும்.

3234. வர்மகண்டி சாத்திரம் 60

1. **நூலகக் குறிப்பு**

   அ. 2324-1

2. **உள்ளீடு : நூல் விவரம்**

   அ. அகத்தியர்

ஆ. வர்மகண்டி சாத்திரம் 60
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 61

3. **தோற்றக் கூறுகள்**

அ. 16 ஏடு; 32 பக்கம்
ஆ. நீளம் 28.5 செ.மீ., அகலம் 2 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

காப்பான சடமதிலே மனுவோர்க் கெல்லாம்
கைகண்ட தலங்குறிகள் கருத்தாய்ச் சொல்ல
தாப்பான கிழாயமொடு கிருதம் எண்ணெய்
தயிலம்வற்ற லோடுகுணக் கேடுபிழை குறியும்
ஆப்பான ஆணியைப்போல் அறைவேன் அப்பா
ஆயியுட பாததிரு நீற்றின் காப்பு
பாரப்பா கணபதியும் கந்தன் பாதம்
பரிவாக எந்நாளும் தலைமேல் கொண்டு.

(1)

ஆ. முடிவு

போடப்பா முக்குறுணி புனலில் அப்பா
புதுமையாய் அறுநாழி யாக வற்றி
நாடப்பா முட்டையுட பருவ முள்ள
நல்கோழி முடிகுடல்கால் களைந்து போடு
ஊடாமல் கியாழத்தில் நொறுக்கிப் போட்டு
ஊச்சுரமோ டறுபத்து நாலுங் குத்தும்
நாடின்ன யெம்மோடு விளமும் பிடியும்
நன்மையுடன் தீருமென்று நயந்து பாரு
காட்டுவேன் கைக்கொண்ட முறையாய்ச் சொன்னேன்
காட்டாதே ஒருவருக்குங் கைவி டாதே

ஆட்டுகின்ற வாணியைநீ வைத்துக் கொண்டு
அறைந்துவிட்டேன் அறுபதுமே ஆயி முற்றே.
(61)

(யாப்பமைதி இல்லை)

இ. பிற்குறிப்பு

வர்மகண்டி அறுபதும் குருகடாச்சத்தாலே முள்ளங்கி னாவிளை யாகப்பனாசான் கையெழுத்து முகித்தான்.

3235. மாந்திரீகம்

1. நூலகக் குறிப்பு

அ. 2324-2

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. மாந்திரீகம்
இ. மாந்திரீகம்
ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 10 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 7 ஏடு; 14 பக்கம்
ஆ. நீளம் 28.5 செ.மீ., அகலம் 2 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை. ஏட்டெண் 31ல் நூல் தொடங்குகிறது
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

.... முப்பத்திரண்டு பல்லும்; முன்னூற்றிருபது பலம் சதை, கரையும் மூடலும் இதில் நிணம் ஒரு பலம், வளிம்பு ஒரு பலம், ரெத்தம் மூன்று பலம், அமிர்தம் நூறு பலம், மாங்கிஷம் அஞ்சு பலம், உப்பு அஞ்சு

பலம், மச்சை நாலு பலம், ஈரல் எட்டு பலம், குடல் நாற்பது பலம், அத்தி நூறு பலம், சுக்கிலம் ஆழாக்கு, சுரோணிதம் உழக்கு, பித்தம் உழக்கு, சிலேற்பனம் ஆழாக்கு இதுகொண்டு செற்பம், இப்படி யெடுக்கப்பட்ட திரேகம்...

ஆ. முடிவு

வலியவும் தேயுவென்ற புரவியும் பட்டு, மனோபதி யென்ற ராவுத்தரும் பட்டு. இருதயக் கமலமென்ற தானாபதியும் பட்டு, வாதபித்தமென்ற பரிசைக்காரரும் பட்டு, மகாமந்திரமென்ற உபதேசமும் பட்டு, ரூபரசகந்தமென்ற காவல்காரரும் பட்டு, எல்லாமறுத்த பின்பு சத்திய நாடான பிறவுமானதே திருத்தெருவிலெழுந்தருளின பின்பு அறிந்து நரலோகம் கொண்டருளிய பின்பு காயம்பு பட்டு, உம்....

3236. வர்ம மணிக்கு விவரம்

1. நூலகக் குறிப்பு

அ. 2324-3

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. வர்ம மணிக்கு விவரம்

இ. மருத்துவம்

ஈ. உரைநடை

அச்சில் ஏறத்தாழ 15 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 15 ஏடு; 30 பக்கம்

ஆ. நீளம் 28.5 செ.மீ., அகலம் 2 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 5,6 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

பிழைகள் மிகுதி

ஊ. நல்லநிலை

ஏட்டெண் 38ல் நூல் தொடங்குகிறது

எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

அரிகு(ரு)வே நம. வேதி ஆதரவே நம. என் கு(ரு)வே முன்னி(ரு)க்க. குருபாதம். களறி முற்றிராம என் தலைமேல் கொண்டேன். கர்ம மணிக்கு விபரம். படுவர்மம் பதின்மூன்றுக்கும், தொடு வர்மம் தொண்ணூற்றாறுக்கும், பக்க வர்மம் எட்டுக்கும், தட்டு வர்மம் ஏழுக்கும், வர்மம்தலம் அறிவானும், விவரம் நாடி அறிவானும், கோணம் அறிவானும், விவரம் சரடு நாடி அம்பத்தாறு நரம்பின் விவரம் நாலாயிரத்தி நானூத்தி நாற்பத்தெட்டு நரம்பின் விவரம்....

ஆ. முடிவு

வர்(ம)மணி கொண்டதில் பாதித்தட்டுன்ன முறை:- ஒரு வர்மங் கொண்டால் அந்த வர்மத்தின் நேரே மறுபுறத்தில் பதும்பு கொண்டு அளந்து, அந்த வர்மத்தை ஒரு பாதி வச்சு, ஒரு பங்கில் கைவச்சுத் தட்டி இசைக்கிக் கொள்ளணும். அங்குலக் கணக்கு ரெண்டு நெல் இட ஒரு அங்குலம் இந்தப்படி அறியவும் வேணும். இது வர்மங்கள் கொண்டாலும் நாழிகை அஞ்சால் வினாழிகைக்குத் தட்டி யிறக்கிக் கொள்ளணும். வினாழிகை ஆகப்பட்டது ஒரு நாழிகையில் எட்டுப் பங்கு வச்சால் ஒரு பங்கும் நாழிகை ஒரு வினாழிகை என்றறியவும் வேணும்.

3237. மருந்து செய்முறை

1. **நூலகக் குறிப்பு**

அ. 2324-4

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. மருந்து செய்முறை
இ. மருத்துவம்
ஈ. உரைநடை
அச்சில் ஏறத்தாழ 50 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 40 ஏடு; 80 பக்கம்
ஆ. நீளம் 28.5 செ.மீ., அகலம் 2 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
பிழைகள் மிகுதி
ஊ. நல்லநிலை
ஏட்டெண் 53ல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வர்மங் கொண்டால் கிஷாயம்:- அருவன் வேர், வெள்ளைக்கொடி, பித்தலிப் பருத்தியிலை, விஷ்ணுக்கிரந்தி, சீரகம், அதிமதுரம், திப்பிலி, ஈர்உள்ளி வகைக்குப் பலம் 1, மூணேமுக்கால்படி செந்தெங்கு இளநீர் விட்டு ஆக்கிக் குடிக்கச் சுகம்.

ஆ. முடிவு

அயக்காந்த செந்தூரம்:- அயம் பலம் 5, காந்தம் பலம் 5, சூடம் பலம் 5, கந்தகம் பலம் 10, நவச்சாரம் பலம் 3, நவச்சாரத்தைப் பொடிச்சுச் சட்டியில் போட்டுச் சுண்ணாம்புத் தண்ணீர்விட்டு மற்ற மருந்தை அரைக்கவும். அரைத்துச் சட்டியில் வைத்துக் காய வைத்து எடுக்கவும். தீபத்தும் கிண்டிக் கொடுக்கவும். செந்தூரம் ஆகும்.

தீரும் நோய்:- பெரும்பாடு, சோகை, மேகம் இதுகள் எல்லாம் தீரும்.

3238. நோய்க்கு மருந்து

1. **நூலகக் குறிப்பு**

   அ. 2325

2. **உள்ளீடு : நூல் விவரம்**

   அ. ....

   ஆ. நோய்க்கு மருந்து

   இ. மருத்துவம்

   ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 75 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

   அ. 66 ஏடு; 132 பக்கம்

   ஆ. நீளம் 16 செ.மீ., அகலம் 3 செ.மீ.

   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

   ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

   உ. தெளிவான கையெழுத்து

   ஊ. நல்லநிலை

   எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

   அ. தொடக்கம்

   மூதண்டக் கிசாயம்:- உட்டிணங் கொண்ட பேருக்கு அருகன் வேர் வெட்டிக் கொண்டு வந்து பழுது பார்த்து மூன்றறிவாக அறிந்து சட்டியில் போட்டு இருபத்தொரு மிளகும் போட்டு நாழித் தண்ணீர்விட்டு அரைக்கால் படியாக வற்றக் குறுக்கிக் கஷாயத்தில் பசுவின் வெண்ணெய் எலுமிச்சங்காயளவு போட்டுச் சாப்பிடவும். சகல உட்டிணமுந் தீரும்.

   ஆ. முடிவு

   இருமலுக்கு மருந்து:- ஒருபடி வெள்ளெருக்கம் பூவைக் கொண்டு வந்து சட்டியில் போட்டு ஒருபடி

தண்ணீர்விட்டு வடிகட்டிக் கால்படி குறுவை நெல்லரிசி இடித்து மாவாக்கிக் குழைத்து... மேலே வைத்து மேல் சட்டி மூடி புட்டை ... நன்றாய் அவித்த அந்தப் புட்டை யெடுத்து... இப்படி மூன்றுநாள் சாப்பிடவும்.

3239. சிகிச்சை ஆசாரியம்

1. நூலகக் குறிப்பு

அ. 2326-1

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. மணவை. இராமலிங்க பண்டிதர்

ஆ. சிகிச்சை ஆசாரியம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 102

3. தோற்றக் கூறுகள்

அ. 54 ஏடு; 108 பக்கம்

ஆ. நீளம் 21 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீர்பெருகு மூலவட் டத்தில்அரு ளாதியாய்ச்
சிற்பரைய தாய்மவுனமாய்ச்
சிவசக்தி ரெண்டுமொன் றாய்ச்சிவ சோதியாய்ச்
செகம்மகிழ வருகுகனையும்
பேர்பெருகு குறுமுனிவன் முதலான பதினெண்மர்
பெருகுகண நாதர்தமையும்

பிரபலம தாகவே யீராறு சமயநெறி
பெற்றுவளர் சித்தர்தமையும்
வார்பெருகு மலைமாது திரிசூலி யபிராமி
மால்தங்கை யைப்பணிந்து
வருகணித முறைவயித் தியனாத பூபனையும்
மலரடிவ ணங்கியேத்திப்
பார்பெருகு மணவையம் பதியிலுயி ருபகாரி
பண்டிதன் ராமலிங்கம்
பகரநுவல் வடநூல்தெ ரிந்தேசி கிச்சையா
சாரியம் பகர்ந்தவாறே.

(1)

ஆ. முடிவு

விந்தைசெறி மலர்மாது லட்சிமிம ணாளனாம்
விட்டுணுவின் புயசக்கரம்
விதமான சூதமொடு கெந்தகமு நாவியும்
மிக்கதடி யன்காய்விரை
கொந்துசெறி நிலவேர்அ ரத்தைதிரி கடுகுடன்
கோதையே முசுர்முட்டையுங்
கொடியதொரு நேர்வாள மாகயிவ் வாளமே
கொண்டுநிறை சமபாகமாய்த்
தந்தியுட னேயம்மி தன்னிலிட் டிஞ்சியின்
சாறதனில் அரைசாமமே
தறுகாத சிறுபயறி னளவாக வேகுளிகை
தாணிழலு லர்ந்தபின்பு
மந்திதவழ் பொதிகைமலை வாழுமா முனிவனுரை
மறவாம லிஞ்சிநீரில்
மணிமந்திர அவுஷத மென்றுகொடு சளிதோஷம்
மாறலொடு சுரமகலுமே.

(102)

3240. நோய்க்கு மருந்து

1. நூலகக் குறிப்பு

அ. 2326-2

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. நோய்க்கு மருந்து

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 207

3. தோற்றக் கூறுகள்

அ. 55 ஏடு; 110 பக்கம்

ஆ. நீளம் 21 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8,9 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

ஏட்டெண் 54ல் நூல் தொடங்குகிறது

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கீற்றுக் காலொடு கிந்தி நடக்கிறீர்
வேற்றுக் காலில்லை வேறுமக் குத்தான்
நீற்றுப் பானையில் நேரொடு சேரவே
சேற்றுத் தாமரை செவ்விள தாகுமே. (1)

ஆ. முடிவு

வகையான சீனிஒரு பலமுமதின் மேலிட்டு
மால்மருக னைத்துதித்து
வளர்சிதம் பரமெழுதி யேதரிவி ராகனிடை
வாகான நெய்யேகொடு
துகையான பத்தியமு முப்புளி தவிருசொன்
மாதமஞ் சிதுவிதஞ்
சுகமாக வேநெய்கொடு விழியதனில் மையெழுது
துய்யகணை பதினெட்டுடன்
தகையான வத்திசுரம் அதிசாரம் வயறுளைவு
சத்திலோடு அன்னதுவேசந்

தாகமொடு விக்கல்கா மாலைகணை யால்வந்து
தனுவிழியில் மேவுசுக்கிரன்
பகையாக ரோமமும் வெளுப்புறுப் புத்தள்ளல்
பாலித்த தேரைநோயும்
பண்பினுட னேதவிர்ந் துடல்கள்தெளி வாமெனப்
பாடினன்அ கத்திசனே.

(207)

5. பிற செய்திகள்

பல மருத்துவ நூல்களிலருந்து பாடல்கள் திரட்டப் பெற்றிருப்பதுடன் இதனுள் சில பாடல்களுக்கு உரையும் தரப்பெற்றுள்ளது.

3241. தலைமுழுகத் தயிலம்

1. நூலகக் குறிப்பு

அ. 2326-3

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. தலைமுழுகத் தயிலம்
இ. மருத்துவம்
ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 1 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 1 ஏடு; 2 பக்கம்
ஆ. நீளம் 21 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்; ஆ. முடிவு

அறுகன்வேர் பலம் 25, இசங்கன் வேர் பலம் 25, காத்தப்படி வேர் பலம் 10, குருவிஞ்சி வேர் பலம் 10,

கொடுவேலி வேர் பலம் 10 ஆக இவ்வளவும் குறுகத் தரித்திட்டு 4 மரக்கால் வெள்ளம் விட்டு 4 நாழி ஆக்கிக் கையாந்தகரை, கீழ்க்காய் நெல்லி, சின்னி இலை இவ்வளவுக்குப் படி 2 கடை மருந்து நல்மிளகு, கார்கோலரிசி, சித்தரத்தை வகைக்குப் பலம் 1 இவ்வளவும் பசுவின் பால்விட்டு அரைத்து நல்லெண்ணெய் படி 4இல் சேர்த்து எல்லாம் ஒருமிச்சு மூணுநாள் காலத்தையும் சாயங்காலமும் தீயெரிக்கவும். நாலாம் நாள் கலத்தில் புழுகு சட்டமுமிட்டு இளம் பருவமாய் எண்ணெய் இறக்கவும். முழுகினால் உப்பு புளி தவிர்க்கவும்.

தீரும் வியாதி:- வாதநீர், பித்தநீர், கபாலநீர், சூலை, பதகரி, ஒருதலையிடி, கபால வாய்வு, சொறி, தினவு, பீனிசம், கை அதரல், சய்ப்பு, இளைப்பு.

(இச்சுவடியில் உள்ள மொத்த செய்தி இவ்வளவே.)

3242. மருந்து செய்முறை

1 **நூலகக் குறிப்பு**

அ. 2326-4

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. மருந்து செய்முறை

இ. மருத்துவம்

ஈ. செய்யுளும் உரைநடையும்

அச்சில் ஏறத்தாழ 50 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

அ. 36 ஏடு; 72 பக்கம்

ஆ. நீளம் 21 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7,8 வரிகள்

உ. சுமாரான கையெழுத்து
ஊ. 112,146,147 ஆகிய ஏடுகள் இல்லை
உள்ளவை நல்லநிலை
ஏட்டெண் 111ல் நூல் தொடங்குகிறது
எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

காண்க:- தொடர் எண்.2226-3.

ஆ. முடிவு

புருடருக்கும் மத்துமுள்ள பூவை யர்க்கும்
புணர்ச்சை மூன்று மாதம் .....
திருடருக்கும் செல்லாது இடிம ருந்து
சித்துவிளை யாடுமடா சிவன்மால் வேதம்
குருடருக்கும் இந்தமுறை சித்தி யாகும்
கோதண்ட மிகுந்தராம பாணந் தானே.

3243. ரோமரிஷி வைத்தியம்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2326-5

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ரோமரிஷி
ஆ. ரோமரிஷி வைத்தியம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 19

3. **தோற்றக் கூறுகள்**

அ. 8 ஏடு; 16 பக்கம்
ஆ. நீளம் 21 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

ஏட்டெண் 151ல் நூல் தொடங்குகிறது

எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. **தொடக்கம்**

நீதமுடன் ரோமரிஷி புகலும் மார்க்கம்
நெறிகேட்ட மானிடர்க்கு மருந்து சொல்வேன்
காதலுடன் கணபதியைத் தியானம் செய்து
கார்மேக நிறமுடைய தயிலம் போக்கு
ஆதரவாய் மருந்துனக்கு சொல்லக் கேளு
அப்பனே நிலவாகை சிவனார் வேம்பு
போதமுடன் விரலியுடன் மூலந் தானும்
புகழ்பெறவே கொண்டுவந்து வுலர்த்திக் கொள்ளே. (1)

ஆ. **முடிவு**

சேரப்பா முன்சொன்ன அஞ்சுங் கூட்டித்
திறமாகப் பொடிசெய்து சீலை பரப்பித்
தீரப்பா கதிதயிலம் துவைத்துவளம் பெறவே
திரிகொளுத்திப் பூத்தயிலம் வாங்கிக் (கொண்டு)
காரப்பா சிவகாமி பூசை செய்து
கழஞ்சுவெள்ளி யுருகையிலே தயிலம் தாக்கு
பாரப்பா யேழுமரை மாத்துக் காணும்
அப்பனென்மேல் ஆணையிட்டோம் பசும்பொன் ஆமே. (19)

ரோமரிஷி பாடல் முற்றும்.

5. **பிற செய்திகள்**

இதனை அடுத்து ஓர் ஏட்டில் திருநீற்று மந்திரம் இடம்பெற்றுள்ளது.

3244. மருந்து செய்முறை

1. **நூலகக் குறிப்பு**

அ. 2326-6

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. மருந்து செய்முறை

இ. மருத்துவம்

ஈ. செய்யுளும் உரைநடையும்

அச்சில் ஏறத்தாழ 15 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

அ. 13 ஏடு; 26 பக்கம்

ஆ. நீளம் 21 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8-10 வரிகள்

உ. சுமாரான கையெழுத்து

ஊ. நல்லநிலை

ஏட்டெண் 159ல் நூல் தொடங்குகிறது

எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

திரிபலாதி சூரணம்:-

சீர்புகழு மாமுனிவர் தானுரைத்த சூரணத்தைப்
பார்புகழு மானிடர்க்கே பாகாக்கேள் - பேர்பெறவே
திப்பிலி ரெண்டுபலம் சீனி யதனெடை

....

....

பேர்பெரிய சாதிபத்ரி ஓமமுடன் உர்ப்பனமாய்
இந்துப் புடன்கடுகு ஏற்றசித்ர மூலமுடன்
வந்தவெடி யுப்புடனே வாய்விளங்கம் - நந்து

....

ஆ. முடிவு

அடங்காத கிராணிக்குச் சூரணம்:- சுக்கு, மிளகு, திப்பிலி, சித்தரத்தை, வாய்விளங்கம், ஓமம், சீரகம், அதிவிடையம், அதிமதுரம், குறுசாணி ஓமம், இலவங்கப்

பட்டை, சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு வகைக்குப் பலம் 1, நாகப்பட்டை பலம் 2, கருகப்பிலை சருக்கு, குளத்தூச்சிப் பூ 2, அவித்து உலர்த்திக் கொள்ளவும். இந்த மருந்தெல்லாம் நெய்விட்டுக் கிண்டி வெதுப்பி மருந்துகூட ஊச்சியைப் போட்டு வடிகட்டித் தேனில் குழப்பிக் கொடுக்கவும்.

3245. சிகிச்சை ஆசாரியம்

1. **நூலகக் குறிப்பு**

   அ. 2327

2. **உள்ளீடு : நூல் விவரம்**

   அ. மணவை. இராமலிங்க பண்டிதர்

   ஆ. சிகிச்சை ஆசாரியம்

   இ. மருத்துவம்

   ஈ. செய்யுள் 100

3. **தோற்றக் கூறுகள்**

   அ. 47 ஏடு; 94 பக்கம்

   ஆ. நீளம் 19 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.

   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

   ஈ. ஒரு பக்கத்திற்கு 8,9 வரிகள்

   உ. தெளிவான கையெழுத்து

   ஊ. நல்லநிலை.

   சில ஏடுகள் செல்லரித்துள்ளன

   109ஆம் பாடலின் பிற்பாதியும் ஈற்றுப் பாடலும் (102) சிதைந்துவிட்டன

   எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

   அ. தொடக்கம்

   காண்க:- தொடர் எண்.2326-1.

ஆ. முடிவு

திறமான ஆனந்த வயிரவன் குளிகையது
சேர்க்கும்வகை செப்பிடக்கேள்
செய்கைபெறு சாதிலிங் கஞ்சூத மரிமனைவி
சிலைகெந்தி நாவிவாளம்
உறவான யிருவிவெண் காரமுட னக்கிரா
உயர்சுத்தி செய்தோர்ரசம்
ஓங்கிவளர் நிம்பக்க ளிச்சார்மு லைப்பாலில்
ஒவ்வொன்று தினமரைத்துக்
குறையாம லேபயறி ....

3246. சூதமுனி வைத்தியம் 50

1. நூலகக் குறிப்பு

அ. 2328-1

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. சூதமுனி
ஆ. சூதமுனி வைத்தியம் 50
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 34

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம்
ஆ. நீளம் 36 செ.மீ., அகலம் 5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து
ஊ. சுமாரான நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நந்தீசர் வேதமுனி சூதமுனி யிவர்கள்
நாதனடி போற்றிசெய்து மகிழ்ந்திருக்குங் காலை

இந்திரஓ லக்கமென்ன வாதவித்தை செய்ய
ஏதுவகை யென்றருளி வேதமுனி கேட்கத்
தந்திமுக னைப்பணிந்து யுரைத்திடுவார் நந்தி
தாரணியி லுள்ளவர்கள் சாதகமாய் வாழ
மந்திரத்தால் சுத்திசித்தி யாகும்வர லாறும்
மாற்றதிகம் வருத்துமாதி வளமாதி பகவான்.

(1)

ஆ. முடிவு

செந்தூரந் தனையெடுத்து முன்னாக வைத்துச்
சிவகாமி பூசனையும் அர்ச்சனையுஞ் செய்தே
அந்தரங்க மாகஒன்றில் அடைத்துவைத்துக் கொண்டு
அறவைத்த வெள்ளியேழு பணவெடையுங் கூட்டிச்
சிந்தனையாய்ச் சுத்திசெய்த செம்பதிலே மூன்று
சேர்த்தொன்றாய் யுருக்கிமுன்பே எடுத்து
வந்தசுத்தி வினையாப்ப் பின்புமதை யுருக்கி
நிறந்தெளிந்தால் வைத்திருக்கும் செந்தூரம் சாடிசேரே.

(34)

(யாப்பமைதி இல்லை)

5. பிற செய்திகள்

இதனை அடுத்து நான்கு ஏடுகளில் மாந்திரீகச் செய்திகள் இடம்பெற்றுள்ளன.

3247. நோய்க்கு மருந்து

1. நூலகக் குறிப்பு

அ. 2328-2

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. நோய்க்கு மருந்து

இ. மருத்துவம்

ஈ. உரைநடை

அச்சில் ஏறத்தாழ 12 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

அ. 8 ஏடு; 16 பக்கம்

ஆ. நீளம் 36 செ.மீ., அகலம் 5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்

உ. சுமாரான கையெழுத்து

ஊ. சுமாரான நிலை

எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

மண்டைச் சூலைக்கும் பீனிசத்திற்கும் நாசியில் நிறுத்த ஆமணக்கெண்ணெய்:- அவித்துக் குத்தின ஆமணக்கெண்ணெய் படி கால்; அதிமதுரம் பலம் ஒன்று நன்றாய்ப் பொடித்துப் போட்டுச் சூரியபுடம் வைத்து நாசியில் நிறுத்த நாசியில் புண்பட்டிருந்தாலும் தீரும்.

ஆ. முடிவு

பிள்ளைக் கழிச்சலுக்கு:- உள்ளி, வசம்பு, சித்திரப் பாலாழி ஒரு பிடி இதை அரைத்து எருமை வெண்ணெயில் காய்ச்சி வடித்து ஒரு காசளவு கொள்ளத் தீரும்.

3248. அகத்தியர் சூத்திரம் 40

1. **நூலகக் குறிப்பு**

அ. 2328-3

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் சூத்திரம் 40

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 40

3. **தோற்றக் கூறுகள்**

அ. *1 ஏடு; 2 பக்கம்*

ஆ. *நீளம் 36 செ.மீ., அகலம் 5 செ.மீ.*

இ. *இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது*

ஈ. *ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்*

உ. *சுமாரான கையெழுத்து*

ஊ. *சிதைந்தநிலை*
ஏழு பாடல்களே எழுதப்பட்டுள்ளன

எ. *குறை*

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

தெட்சிணத்தி லிருந்துநா... பொதிகையிலே இருந்து
தினமும்தான் பாடினநூல் தொகையோ இல்லை
பட்சம்வைத்து நாற்பதும்தான் பாடினதைக் கேளு
பரிவாக மருந்துவைக்கும் தொழிலேது ....
....
சுத்திசெய்து ஏமத்தைத் தகடாய்த் தட்டி
மச்சமப்பா கொச்சிவீரம் வங்கபற்பம் நாக
பற்பம்வளர் சங்குமுடி மிறுதார் சிங்கி

ஆ. முடிவு

அரைத்துவில்லை போல்பிடித்து ரவியுலர்த்தி ஓட்டி
அழகாகக் காய்ச்சீலை செய்துகச புடத்தில் (நீறும்)
வரைத்தவங்க பற்பத்தைச் சொல்லக் கேளு
வளமாக நெற்கனமாய்த் தகடு தட்டி
விதைத்தாடு தொடாப்பாளை பலந்தான் ஒன்று
வெண்தோன்றி கிழங்குவேர் பலந்தான் ஒன்று
நிறைத்தரைத்துப் பொழிந்துவங்கம் பலந்தான் ஒன்று
கனமான ஓட்டில்வைத்துப் புடந்தான் போடே.
(7)

3249. மருத்துவ நூல்

1. **நூலகக் குறிப்பு**

அ. *2328-4*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 62

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம்

ஆ. நீளம் 36 செ.மீ., அகலம் 5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 10,11 வரிகள்

உ. சுமாரான கையெழுத்து

ஊ. சுமாரான நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தள்ளினால் குருதி சீதம்
 தறுகியே குதவாய் நின்று
கிள்ளியே யெடுக்கு மாகில்
 சீதமாய் வயிறு நொந்து
மெள்ளவே தீர்க்கும் அண்ணம்
 விளங்கிய முனிவர் தாமும்
உள்ளநல் மேதி நெய்யில்
 உறுமருந் ததனைச் சொல்வார். (57

ஆ. முடிவு

வெள்ளை உள்ளி வேர்க்கொம்பு
 வேண்டும் கிராம்பு சீரகமும்
எள்ள உலுவாய் அசுமமுடன்
 மேவு வசம்பு திப்பிலியும்
கள்ள மேதி நெய்யில்வெந்து
 கனமா யருந்த வயிறுளைவு
உள்ள துட்டுக் கிராணியிவை
 ஊது மாந்தம் ஒழிந்திடுமே. (119)

3250. அகத்தியர் பூரண சூத்திரம்

1. நூலகக் குறிப்பு

அ. 2329

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் பூரண சூத்திரம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 215

3. தோற்றக் கூறுகள்

அ. 32 ஏடு; 64 பக்கம்

ஆ. நீளம் 28 செ.மீ., அகலம் 4 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 11,12 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்; ஆ. முடிவு

காண்க:- தொடர் எண்.2322-1.

3251. மச்சமுனி தீட்சைவிதி

1. நூலகக் குறிப்பு

அ. 2330-1

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. மச்சமுனி

ஆ. மச்சமுனி தீட்சைவிதி

இ. தத்துவம்

ஈ. செய்யுள் 9

3. தோற்றக் கூறுகள்

அ. 1 ஏடு; 2 பக்கம்

ஆ. நீளம் 23 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. சிறிய தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. **தொடக்கம்**

மூலத் துதித்தெழுந்த முக்கோணச் சக்கரத்துள்
காலச் சிகாரக் கடவுளே - வாலைக்
குணபதியே நந்தியுறு குண்டலிக்குள் ளான
கணபதியே தீட்சைவிதி காப்பு.

(1)

ஆ. **முடிவு**

சிகார வகாரம் சிவநந்தி காரணம்
நகார மதின்மேல் நரரக்கோன் வீட்டுள்ளே
இகார மிருந்த இயல்பிது கண்டபின்
தகாரந் துரியஞ் சொல்லலும் பிரமமே.

(9)

3252. கொங்கணர் பிண்ட உற்பத்தி

1. **நூலகக் குறிப்பு**

அ. 2330-2

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. கொங்கணர்
ஆ. கொங்கணர் பிண்ட உற்பத்தி
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 21

3. **தோற்றக் கூறுகள்**

அ. 5 ஏடு; 10 பக்கம்
ஆ. நீளம் 23 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8-10 வரிகள்
உ. சிறிய தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஒன்றான கைலாச பரம்பரையாய் வந்த
உற்றசிவ மூலகுரு பதத்தைப் போற்றி
நன்றான மாலாங்கர் யெழுவர்பதம் போற்றி
நலம்பெரிய பேர்களுட பதத்தைப் போற்றிக்
கன்றான செனித்தஉற் பனத்தைச் சொல்வேன்
கருதிக்கேள் கருதிக்கேள் கார ணந்தான்
பன்றான பிருதிவியென்ற நாதத் துள்ளே
பரிவான சுக்கிலந்தான் செலந்தான் கேளே. (1)

ஆ. முடிவு

தானென்ற சற்குருவாம் போக நாயன்
சாதகமாய்ப் பொருளுக்கு உப்பே யென்றான்
கோனென்று அதைத்தொட்டு மூன்றுகண்டஞ் சொன்னேன்
கூடுகின்ற மெஞ்ஞான மவுனமென்று சொன்னார்
வானென்ற தநுகடந்து சிலம்பொலியைப் புக்கி
மயங்கியங்கே மாறிவந்தேன் மக்காள் மக்காள்
பானென்ற ரவிகோடி காந்தி யான
பரமகுரு மூலர்பதம் பணிந்தேன் முற்றே. (21)

3253. கோரக்கர் பாடல் சூத்திரம்

1. நூலகக் குறிப்பு

அ. 2330-3

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. கோரக்கர்

ஆ. கோரக்கர் பாடல் சூத்திரம்
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள் 98

3. தோற்றக் கூறுகள்

அ. 10 ஏடு; 20 பக்கம்
ஆ. நீளம் 23 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9,10 வரிகள்
உ. சிறிய தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கார்கொண்ட குருவின் போக்குங்
  கரியுப்புக் குறியின் போக்கும்
வீரத்தின் சுண்ணப் போக்கும்
  விளங்குகுரு வண்டின் போக்கும்
வார்கொண்ட சத்திப் போக்கும்
  வளர்நில உப்புப் போக்கும்
சீருடன் நந்தி சொல்லத்
  திறஞ்செய்ஐங் கரனே செப்பாம். (1)

ஆ. முடிவு

நீருள்ள சுண்ணங் கண்டால்
  நிலைகறி யுப்பைக் கூட்ட
நீருள்ள சுண்ணங் காண்பான்
  நீதியின் னடியைக் கூட்ட
நீருள்ள சுண்ணங் காண்பான்
  நீதியின் முடியண் டந்தான்
நீருள்ள சுண்ணங் காண்(பான்)
  .... (99)

3254. போகர் இரணவாகடச் சூத்திரம்

1. நூலகக் குறிப்பு

அ. *2331-1*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. போகர்

ஆ. போகர் இரணவாகடச் சூத்திரம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 94

3. தோற்றக் கூறுகள்

அ. *15 ஏடு; 30 பக்கம்*

ஆ. நீளம் 31.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சாம்பி றாண துருசுதுத்தஞ்
சாற்றுங் கறுத்த குங்கிலியம்
அவித்து வகைக்குத் தான்கழஞ்சு
விளங்கும் பட்சை வெட்டெடனே
அழித்த வலமுந் தானொன்று
அறிவாய்க் கல்வ மீதிட்டுத்
திருந்தக் காய்ச்சி யெள்ளெண்ணெய்
திறமாய் அரைத்துத் தண்ணிவிடே.

(1)

ஆ. முடிவு

சதுரக் கள்ளி கொடுவேலிச்
சாறு எருக்கு கொடிக்கள்ளி
வகுற்றும் வேலி யமுக்குறாவும்
வகையாய் வேறு வகையொன்று

சூதக் கெந்தகம் செந்தூரம்
சுகமாய் யெள்ளின் எண்ணெயுடன்
போத யெரித்து ஊர்க்கொளவே
போகா ரணங்கள் போய்விடுமே. (94)

3255. சென்ம நிதானம்

1. **நூலகக் குறிப்பு**
   அ. 2331-2

2. **உள்ளீடு : நூல் விவரம்**
   அ. ....
   ஆ. சென்ம நிதானம்
   இ. மருத்துவம்
   ஈ. செய்யுள் 62

3. **தோற்றக் கூறுகள்**
   அ. 16 ஏடு; 32 பக்கம்
   ஆ. நீளம் 31.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து
   ஊ. நல்லநிலை
   எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**
   அ. தொடக்கம்

திருவடி வான மாதர்
செய்தவப் பயனாங் கருப்பம்
உருவடி வாகுஞ் செய்கை
யுடம்பினில் வியாதி யன்றி
வருமிடி பசிநோ யன்றி
வளர்புழு வாய்வு வன்றி
எரிகலை யியக்க மன்றி
யிருதுவாங் காலந் தன்னில். (1)

ஆ. முடிவு

அபத்திய மன்றித் தோஷ விகார மணையாதே
அபத்திய மன்றி அவுசத யீன மணுகாதே
கபத்ினை யன்றிக் காயா கவசங் கவ்வாதே
கவத்தினை யன்றி வேர்வை குளிர்ச்சிகள் காணாதே.
(62)

வியாதிக்கரு முற்றும்.

இ. முற்குறிப்பு

இந்த ஏட்டில் முதல் ஏடு 9ம் மாத்தாலை மலையப்பனுக்கு (கொல்லம்) 1045ஆம் வருடம் வைகாசி மாதம் 14ந் தேதி கொடுத்து இருக்கிறது.

3256. அகத்தியர் குணபாடம்

1. நூலகக் குறிப்பு

அ. 2332

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் குணபாடம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 167

3. தோற்றக் கூறுகள்

அ. 82 ஏடு; 164 பக்கம்
ஆ. நீளம் 27 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரிகள்
பக்கத்திற்கு ஒரு பாட்டாக எழுதப்பட்டுள்ளது
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

காண்க:- தொடர் எண்.2277.

ஆ. முடிவு

கூறிடக் கண்டந் தன்னில்
குமுறிடுஞ் சிலேற்ப னத்தை
வீரிட வலித்துக் கைகால்
தன்வய நூற்றி யங்கம்
மீறிட யிலுத்து வேர்வை
நெடுங்கெடுங் கண்டம் வேர்வை
சொரிகிடும் பக்கம் அண்ணம்
செருத்திடுஞ் சுவாசந் தானே.

(167)

இ. பிற்குறிப்பு

(கொல்லம்) 1070ஆம் வருடம் சித்திரை மாதம் 6ந் தேதி சனிக்கிழமையும் பூருவ பட்சத்துப் பௌர்ணமியும் சித்திரை நட்சத்திரமும் வச்சிரநாம யோகமும் சிங்க கரணமும் ராட்சத வேளையும் கூடிய சுபயோக சுபதினத்திலன்று பகல் விடிந்து 9 நாழிகை சமயத்தில் சித்திரபுத்திரன் வயித்திய சாத்திர குணவாகடம் எழுதி முகிந்தது. முற்றும்.

5. **பிற செய்திகள்**

இந்நூல் 'குணவாகடம்' எனவும் வழங்கப்பெறுகிறது.

3257. இராமதேவர் சூத்திரம்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2333

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. இராமதேவர்
ஆ. இராமதேவர் சூத்திரம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 103

3. தோற்றக் கூறுகள்

அ. *42 ஏடு; 84 பக்கம்*

ஆ. *நீளம் 28 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.*

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காண்க:- தொடர் எண்.2286-1.

ஆ. முடிவு

வையப்பா சகலகலைச் செய்தி யெல்லாம்
வளமாக அடக்கிவெகு தொழில்கள்
சொன்னேன்
அய்யப்பா நினையாதே பிழைபே சாதே
ஆத்தாளை யனுதினமு மறவா தேநீ
செய்யாதே தீவினைகள் கொடிது பாவஞ்
சேர்ந்தெல்லா மீசனென்று தெளிந்து காணு
மெய்யான குருபதத்தைப் பணிந்து போற்றி
விளம்பினேன் பலதிரட்டுச் சூத்திரந்தான் முற்றே.
(103)

3258. மாட்டு வாகடம்

1. நூலகக் குறிப்பு

அ. *2334*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. மாட்டு வாகடம்

இ. மருத்துவம்

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 12 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 12 ஏடு; 24 பக்கம்

ஆ. நீளம் 35 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரிகள்;
3,4 பத்திகளாகப் பிரித்து எழுதப்பட்டுள்ளது

உ. தெளிவான கையெழுத்து

ஊ. 1-37. 40. 44-48. 50-52. 54 ஆகிய ஏடுகளும்
59க்குமேல் இருக்க வேண்டியனவும் இல்லை
உள்ளவை நல்லநிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பாண்டவர்கள் வாட புரத்திலே மறைந்திருக்கின்ற நாளில் கோபால வேடமாய்ச் சகாதேவன் முன்னாளிலே மாடு மேய்க்கச் சென்றானென்று விசாரித்துக் கொண்டு குலைந்து நடுங்கிச் சென்று கேட்டமை. இது மாட்டுக்கு நோவு தீரும் பரிகார வண்ணமாய்ச் சாத்திரத்தின்படி இவை இதுக்குப் பரிகாரம் தமிழால் ஒரு நூல் செய்ய வேணுமென்று சகாதேவர் தான் செய்த நூல் இவை.

ஆ. முடிவு

குதிரை வலி குணம்:- நாலு காலும் திருகத் திருக வலிக்கும்; வயிறூதும்; மூச்சு அடங்கிப் பறியும்; இந்த வகைக்கு மருந்து:- எருக்கலம்பூ அரைத்துப் பசுவின் கோமயத்தில் கொடுக்கக் குணம் வரும். இடது விலாவில் சூடு.

5. பிற செய்திகள்

இறுதி மூன்றேடுகளில் மனிதர்களுக்கு வரும் கிரந்தி, பித்தம், சோகை ஆகிய நோய்களுக்கு மருந்து கூறப்பட்டு உள்ளது.

3259. சித்தராரூடச் சுருக்கம்

1. நூலகக் குறிப்பு

அ. 2335-1

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. சித்தராரூடச் சுருக்கம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 36

3. தோற்றக் கூறுகள்

அ. 11 ஏடு; 22 பக்கம்

ஆ. நீளம் 28 செ.மீ., அகலம் 2.5 செ.மீ

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6,7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆறுமுகக் கடவுளிரு பதமே போற்றி
அகத்தியமுனி உரைத்தசித்த ராரூடத்தில்
கூறுகிற தூதன்வரு வடிவும் வகையும்
கொண்டுவரு வதும்குறியும் குணமும் வந்தே
ஏறுகிற திசையுமவன் வந்து சொன்ன
எழுத்தெண்ணிப் பார்த்துவிரல் எண்ணும் வாறும்
தேறுகிற தாண்பெண்வலம் இடங்கீழ் மேலும்
சேர்ந்தஇடம் இன்னதென்று தெளியும் வாறே.
(1)

ஆ. முடிவு

உப்பாகும் அமுரிநங்கை லிங்கச் சரத்தால்
உத்தமதா ளியும்வேளை மேனி யாகும்

கொப்பாகு முருவகைபா தண்டை யாகுங்
குழிமிட்டான் சாறதிலுங் குணமாம் பூச
இப்பாரில் விசத்தீர்த்தால் வேறோர் சென்மம்
எடுக்காது வைகுண்ட மெய்த லாகும்
தப்பாது செந்தூர்வாழ் சுப்ர மண்ய
சாமிசொன்ன முப்பதோ டாறும் முற்றே.

(36)

3260. விசகராதி குளிகை

1. நூலகக் குறிப்பு

அ. 2335-2

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. விசகராதி குளிகை

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 1 கலிவெண்பா
அச்சில் ஏறத்தாழ 3 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்

ஆ. நீளம் 28 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வன்னப் பொதிகை மலைவாழ் அகத்தியனார்
சொன்னவிச கராதிச் சுகங்கேளீர் - மின்ன
....வேர் நொச்சியொளிஞ்சு மாவிலங்கு
சுணங்கனெனும் நஞ்சறுத்தான் தூதளைவேர் - பிணங்காமல்

அய்விரலி கொன்றை அமுக்கிரா வெள்ளறுகு
தைவேளை வேர்சீந்தில் தண்டுடனே - மெய்யேகேள்
....
(சில இடங்களில் வெண்டளை சிதைகிறது)

ஆ. முடிவு

....
சர்ப்பவிஷம் என்றக்கால் தண்ணீரில் ஓர்குளிகை
உர்ப்பளமாய் நன்றாயுட் செலுத்தென - இத்தனையும்
மாமுனிவன் நன்றாய் மனமகிழ்ந்து மேதினியில்
ஆம்எனவே சொன்னார் அறிந்து.

5. பிற செய்திகள்

இதனை அடுத்து ஓர் ஏட்டில் சன்னிக்குரிய மருந்தைக் கூறும் இரு பாடல்கள் உள.

3261. வாத நிதானம்

1. நூலகக் குறிப்பு

அ. *2335-3*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. வாத நிதானம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 60

3. தோற்றக் கூறுகள்

அ. 15 ஏடு; 30 பக்கம்
ஆ. நீளம் 28 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. சுமாரான மற்றும் கிறுக்கல் கையெழுத்து
ஊ. நல்லநிலை
ஏட்டெண் 42ல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

ஆதி யரனும் உமைமாதும் ஆயுள்மறை
வாத ரோக வகையுங் குணங்களுந்
தீதில் சாத்ய அசாத்தியச் செய்கையும்
பேத முஞ்சி கிச்சையும் ....

(1)

ஆ. முடிவு

காண்க:- தொடர் எண்.2273-9.

3262. வாதத்திரட்டு

1. **நூலகக் குறிப்பு**

அ. 2335-4

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....
ஆ. வாதத்திரட்டு
இ. மருத்துவம்
ஈ. செய்யுளும் உரைநடையும்;
அச்சில் ஏறத்தாழ 25 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

அ. 14 ஏடு; 28 பக்கம்
ஆ. நீளம் 28 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6-8 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து
ஊ. நல்லநிலை
ஏட்டெண் 56ல் நூல் தொடங்குகிறது
எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

கபால வாதத்துக்குப் பூதிகா தைலம்:- ஆயில் பட்டை, திரிகடுகு, அமுக்குரா வேர், இன்பத்தோல், வாயில்

பட்டை, திப்பிலி, நன்னாரி வேர், வேங்கை, சாய்க்காத வில்வம், எட்டி தக்க கொட்டையிடு. குறட்டை நீ சிற்றரத்தை யிவை தறித்து நிறுப்பாய். ஒரொன்று பலமாயுந் தண்ணீர் விட்டுப் பத்தாகக் காய்ச்சி நாலொன்றாய் தூய வெள்ளாட்டின் பால் நாலுபடி....

ஆ. முடிவு

இதழ் கடி வாதத்துக்கு ரட்சை:-
முக்கணான் வகுத்துச் சொன்ன
 முப்புரிக் கவர்க்கால் அதனால்
பக்கமே மாற்றிக் கொண்டு
 பலவுற அலகு கட்டில்
புக்கவே யறிவு செய்து
 அழுந்திடப் புண்ண தாக்கில்
மிக்கதோர் இதழைப் பற்றி
 இசித்திடும் வாதம் ஏகும்.

3263. வாத நிதானம்

1. நூலகக் குறிப்பு

அ. 2335-5

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. வாத நிதானம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 132

3. தோற்றக் கூறுகள்

அ. 21 ஏடு; 42 பக்கம்
ஆ. நீளம் 28 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
 ஏடுகள் முறிந்த நிலையில் உள்ளன
எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

காண்க:- தொடர் எண்.2335-2.

ஆ. முடிவு

பஞ்சபத் திரித்தயிலம் நொச்சிநொச் சான
பகர்வாத மடக்கிகள்ளி யெருக்கோர் சாறு
மிஞ்சோறுடன் ஒன்றுரியா மென்னை நாழி
யியன்றகற்கம் விளாலாத்தைகுக்கில் குப்பை யோடு
தஞ்சமுறுங் குந்திருக்கந் தேவ தாரந்
தானொன்று முக்களஞ்சு சரியாய் சேர்த்து
வஞ்சமற வடித்தயெண்ணெய் யுடம்பில் போட
வாத மெண்பது மடநல் லாளே.

(132)

(இதற்கு மேல் ஏடுகள் இல்லை)

5. **பிற செய்திகள்**

இச்சுவடியின் தொடக்கத்தில் வாதம் எண்பதுக்கும் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது.

3264. நோய்க்கு மருந்து

1. **நூலகக் குறிப்பு**

அ. *2335-6*

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. நோய்க்கு மருந்து

இ. மருத்துவம்

ஈ. உரைநடை

அச்சில் ஏறத்தாழ 20 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

அ. *18 ஏடு; 36 பக்கம்*

ஆ. *நீளம் 28 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.*

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
ஏட்டெண் 123ல் நூல் தொடங்குகிறது
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சங்கார வயிரவன்:- துத்தம் 8, நாவி 7, கந்தகம் 6, அரிதாரம் 5, நேர்வாளம் 2, வெங்காரம் 3, சுக்கு 2, மிளகு 2, ஊமத்தைவிதை 2, கொடுவேலிச் சாற்றிலரைத்து இளநீரிலிட எல்லாச் சுரமும் போக்கும்.

ஆ. முடிவு

சாதிலிங்கம், நாவி, வெங்காரம், அரிதாரம், திப்பிலி மூலம், சுக்கு, மிளகு, இந்துப்பு, நிருவிஷம், திரிபாலை, ஏலம், கொடுவேலி, கோரைக்கிழங்கு, நேர்வாளம் ஓர் ஒன்று ஒரு பலம் இஞ்சிச்சாறு வார்த்தரைத்து ......

3265. நோய்க்கு மருந்து

1. நூலகக் குறிப்பு

அ. 2335-7

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. நோய்க்கு மருந்து
இ. மருத்துவம்
ஈ. உரைநடை
அச்சில் ஏறத்தாழ 150 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 134 ஏடு; 268 பக்கம்
ஆ. நீளம் 28 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 5,6 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து; பிழைகள் மிகுதி
ஊ. இடையிடையே சில ஏடுகள் இல்லை
சில முறிந்துள்ளன
ஏட்டெண் 48ல் நூல் தொடங்குகிறது
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

.... காட்டெருமை விதையைக் கீழே விழாமல் வெடிக்கும் போது பிடித்து நான்கு மூன்றுவிதை யரைத்துக் கையில் தடவி லங்கியில் பிடிக்க முறியும். ஆணி தெறிக்கும். தேங்காயில் பிடிக்கத் தெறிக்கும்.

ஆ. முடிவு

வெள்ளை உள்ளி, ரோகணி, சுக்கு, தேவதாரம், நொச்சி, குருந்து, கடைச்சரக்கு வகைக்கு 1 பலம் உடனேயிட்டு உடனே யிஞ்சிச் சாறு ஒரு கிண்ணி குடிநீரில் விட்டு குடிக்க. இப்படி 2 நேரம் .....

3266. அகத்தியர் சால நிகண்டு

1. நூலகக் குறிப்பு

அ. 2336

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் சால நிகண்டு
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 200

3. தோற்றக் கூறுகள்

அ. 21 ஏடு; 42 பக்கம்
ஆ. நீளம் 27 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

உன்னிய பொதி வாழும்
ஒருமுனி ....
எண்ணிய நிகண்டு பாட
இந்திர சால நூலிற்
பன்னிய பாசை தோன்றப்
பண்டித வேத நாவுக்
கன்னியு முமையு மீசன்
கந்தனுங் காப்புத் தானே (1)

ஆ. முடிவு

பாரினில் இந்த முறைப்படிப் பார்த்துத்
தேருநீ பாவம் செய்யவும் வேண்டாம்
ஆறிநீ பாருஅறு பத்து நாலும்
நேரிரு நூறு நிகண்டிது முற்றே. (200)

3267. நோய்க்கு மருந்து

1. நூலகக் குறிப்பு

அ. 2337-1

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. நோய்க்கு மருந்து
இ. மருத்துவம்
ஈ. உரைநடை
அச்சில் ஏறத்தாழ 25 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

அ. 22 ஏடு; 44 பக்கம்

ஆ. நீளம் 14 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

முதல் நான்கு ஏடுகள் இல்லை

எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

திப்பிலி, சுக்கு, அசமோதகம், மிளகு,கருஞ்சீரகம், நற்சீரகம், அதிமதுரம், கடுக்காய், தான்றிக்காய், அகில், சாதிக்காய், ஏலம், மஞ்சள், சிறுதேக்கு, நொச்சித் தோல், முருங்கைத்தோல், வெள்ளைச் சாரணத்தின் வேர் இவைகள் வகையொன்றுக்குப் பலம் 2, நாயுருவி வேர் பலம் 4 இதுவெல்லாம் நன்றாய்ப் பொடி செய்து தேனும் நெய்யும் சரிகொண்டு பொடியெல்லாம் ஒன்றாய்க் குழப்பி நெய்யுந் தேனும் விட்டு எட்டு நாள் ஒரு கலசத்தில் வைத்து ஒன்பதாம் நாள் எடுத்து ஒரு பாக்களவு குழம்புதின்று வெந்நீர் குடிக்கவும்.

இதுக்குத் தீரும்வியாதி:- வாயுத்திரட்சி, தாது கெட்டது, உள்மூலம், பிறமூலம், குன்மமெட்டும், பொருமுதல், கவுசி, செரியாமை, காமாலை, சோகை, புளித்தேக்கு, எரித்தல், மந்தவாயு, மூலவியாதியுடன் கூடின வியாதி எல்லாம் தீரும்.

ஆ. முழுவு

தலை மண்டை நோதலுக்கு:- நவச்சாரமும் சுண்ணாம்பும் ஒன்றாகக் கட்டி ரேகிச்சு உறிஞ்சவும். இப்படி ஆறு நாள் கொடுக்கவும் -வேறு- சமுத்திராப் பழம் உணுக்கி உறிஞ்சக் கொடுக்கவும்.

3268. மாந்திரீகம்

1. நூலகக் குறிப்பு

அ. 2337-2

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. மாந்திரீகம்

இ. மாந்திரீகம்

ஈ. உரைநடை

அச்சில் ஏறத்தாழ 30 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 49 ஏடு; 98 பக்கம்

ஆ. நீளம் 14 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 5-7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. சுமாரான நிலை

முதல் இரண்டு ஏடுகள் இல்லை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆ என்று ஏத்தி அங் என்று பிடித்து ஆ என்று இறக்கவும். உகாரத்தின் மேலே பஞ்ச நிறமாகத் தெரிசிக்கவும்.

ஆ. முடிவு

நாவடக்கம்:- நாவொடுங்க நமசிவாய, நமனொடுங்க நமசிவாய, கோபமொடுங்க நமசிவாய, குருவொடுங்க நமசிவாய, அத்திக் கையிருத்தித் திருநீறணிந்தேன் மன்னா மதிக்கத் திருநீறணிந்தேன். ஒருநீறு யிருநீறு செங்கை ஒகாளி ஒபிடாரி நமோ நமசிவாய.

3269. பஞ்சபட்சி சாத்திரம்

1. நூலகக் குறிப்பு

அ. 2338

2. உள்வீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. பஞ்சபட்சி சாத்திரம் - அட்டவணை

இ. சோதிடம்

ஈ. செய்யுளும் உரைநடையும்

அச்சில் ஏறத்தாழ 20 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 18 ஏடு; 36 பக்கம்

ஆ. நீளம் 14.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு நான்கு பத்திகள்; நான்கு வரிகள்

உ. சுமாரான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. **தொடக்கம்**

பூர்வபட்சம் ஞாயிற்றுக்கிழமை பகல்

1. வ(ல்லூறு)ஸ்ரீ - ஊண்

ஆ(ந்தை) - நடை

கா(கம்) - அரசு

கோழி - தூக்கம்

மயி(ல்) - சாவு

2. ம(யில்) - ஊண்

வ(ல்லூறு) - நடை

ஆ(ந்தை) - அரசு

கா(கம்) - தூக்கம்

கோழி - சாவு

ஆ. முடிவு

செவ்வாய் ஞாயிறு வல்லூறு
　　சிறந்த திங்கள் புதன்ஆந்தை
கவ்வா வியாழன் காரண்டம்
　　கருதும் வெள்ளி கோழியதாம்
மவ்வாய் சனியின் மயிலுள்ள
　　வளரும் பகலுக் காராய்ந்தும்
இவ்வா றறிந்து குறுமுனியும்
　　இயம்பும் கடலார் உலகுக்கே.

3270. எழுவகைத் தோற்றம்

1. நூலகக் குறிப்பு

அ. 2339-1

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. எழுவகைத் தோற்றம்
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 6 பக்கம்
ஆ. நீளம் 27 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 5,6 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து;
　　பிழைகளும் விடுபாடுகளும் மிகுதி
ஊ. நல்லநிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஊர்வ பதினாலு ஒன்பது மானிடமாம்
நீர்பறவை விலங்குநேர் பத்து

தேவர் பதினொன்று செவ்வே அரன்படைத்த
தாவர் மிருவதெனச் சாற்று.

ஆ. முடிவு

முத்தியில்லாக் குடிபிறந்து முனையும் கெட்டு
முடிதனிலே கல்லெடுத்து மோதிக் கொள்வர்
குத்திகொள்வர் உடம்பெல்லாம் குருதி பாயக்
கூசாமல் மழுங்கலென்று கூறக் கேட்பாய்
பத்தியில்லா விடந்தோறும் பதிந்தே செல்வர்
இவன்சின்னம் ஊர்வையென்று சாதியென்றும் நிகழும் நூலே.

3271. தர்க்க சாத்திரம்

1. **நூலகக் குறிப்பு**
   அ. 2339-2

2. **உள்ளீடு : நூல் விவரம்**
   அ. ....
   ஆ. தர்க்க சாத்திரம்
   இ. பல்வகை நூல்கள்
   ஈ. செய்யுள் 3

3. **தோற்றக் கூறுகள்**
   அ. 1 ஏடு; 2 பக்கம்
   ஆ. நீளம் 27 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து
   பிழைகள் ஏராளம்
   ஊ. நல்லநிலை
   எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**
   அ. தொடக்கம்

   ஆதிரு சமய மல்ல
   அன்பத்தோர் எழுத்து மல்ல

தூதுள்ள சமணர் முன்னூல்
துலுக்கர்தன் மதமு மல்ல
வீறுள்ள ஒளிவு மல்ல
விண்ணொடு மண்ணு மல்ல
மாறிலான் பரம சோதி
மதிஒளி கடந்த வாறே. (1)

ஆ. முடிவு

மோகினி வேஷமெடுத் துலகு ளித்து
முத்திவழி யீதெனவே கற்ப ழித்து
சேகினிய மடவாரைத் துகிலு ரித்துச்
செகதலத்தில் மனையாளைப் பறிகொ டுத்தோர்
வாகினியை வாயிலேயும் மார்பி லேயும்
மடந்தைசுமந் தவர்கள்(பர) வத்து வாமோ. (3)

3272. மருத்துவ நூல்

1. நூலகக் குறிப்பு

அ. 2339-3

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 39

3. தோற்றக் கூறுகள்

அ. 10 ஏடு; 20 பக்கம்
ஆ. நீளம் 27 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
பிழைகள் மிகுதி
ஊ. நல்லநிலை
எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. **தொடக்கம்**

திருவளர் கயிலை நாதன்
செய்யபொற் பதங்கள் போற்றி
மருமலர்க் குழலாள் ஆதி
மாதுமை வணங்கிக் கேட்கக்
கருவளர் உலகை யீன்ற
காரண பூர ணாயென்
றொருவளர் மனிதர் செய்திக்
கொருமொழி புகல வென்றான்.

(1)

ஆ. **முடிவு**

ஆனப் பூமுத் துச்சூர்ய
முத்துச் சம்பா நேர்சம்பா
ஞானப் புழுகு சம்பாவும்
நல்ல சீரப் பால்சம்பா
வேளைக் கினிது மிளகுசம்பா
வேண்டும் அமுது தான்சமைத்து
மானே வெண்ணெ யுருகவைத்து
வருந்திப் புசிப்பீ ராமாகில்
கோனே பிணிகள் தொடராது
கொள்வீர் முத்தும் இதுவாமே.

(39)

3273. நாடி நூல்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2339-4

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. நாடி நூல்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 19

3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு; 10 பக்கம்
ஆ. நீளம் 27 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. சுமாரான நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பேசுவேன் சிலேற்ப னத்துப்
 பிறந்தெழும் கோபங் கேளீர்
தேயுமே யுடம்பு தானும்
 சீவனு மயங்கிக் காட்டும்
மாயுமே ரண்டாம் வெப்பு
 மயங்கிடும் வெளுக்கும் கண்ணே. (1)

(இப்பாடலில் மூன்றடிகள் மட்டுமே உள்ளன)

ஆ. முடிவு

பார்முனி தவத்தி யன்று
 புதுமுக னளித்த போது
வார்முகில் கோபங் கொண்டு
 வல்லகுத் தென்று ......
கார்வுடன் பழுவூ டோடி
 கலங்துகை யடியில் குத்தி
ஆர்விடம் போல நின்று
 அவனுயிர் .... மாறே. (19)

3274. கடுக்காய்ச் சாத்திரம்

1. நூலகக் குறிப்பு

அ. 2339-5

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. கடுக்காய்ச் சாத்திரம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 27

3. தோற்றக் கூறுகள்

அ. 7 ஏடு; 14 பக்கம்

ஆ. நீளம் 27 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மருவிய பிணிக ளாலே
   மானிடர் மாளா வண்ணம்
கரியமா லமுத மூட்டக்
   கையிடைத் தப்பிப் போந்து
பெருநிலந் தன்னில் ஏழு
   கடுக்காய்என் பேரு பெற்ற
துருவிழி மடநல் மாதே
   உரைத்திட உற்றுக் கேளே.

(1)

ஆ. முடிவு

வறுத்த திப்பிலி வாசம்தான்
   வளரும் இருமல் இளைப்பறுக்கும்;
கறுத்த ..... கண்டமதில்
   கனப்பு நெஞ்சில் கட்டறுக்கும்;
செறுத்த உழலை தவனமிமை
   தீரும்; அக்கினி ருசிஉண்டாம்;

நிறுத்து மந்தம் அதிசாரம்
நீக்கும் கஷாயம் மென்கொடியே.

(27)

3275. நோய்க்கு மருந்து

1. நூலகக் குறிப்பு

அ. 2340

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. நோய்க்கு மருந்து

இ. மருத்துவம்

ஈ. உரைநடை

அச்சில் ஏறத்தாழ 50 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 54 ஏடு; 108 பக்கம்

ஆ. நீளம் 15.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7-9 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. சுமாரான நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

முகமாற்றத்துக்கு மருந்து:- பச்சையிஞ்சி இரண்டு கழஞ்சு கொண்டு வந்து கடைவாயில் ஒதுக்கவும். ஒரு தேங்காய் துருவி பால் பிழிந்து புளியங்கொட்டைத் தோலைப் பொடி செய்து தேங்காய்ப் பாலில் கலக்கி முகத்தில் தடவத் தீரும்.

ஆ. முடிவு

மறுதீட்டுக்கு:- வெள்ளக்காக்கல் வேர் எலுமிச்சங் காயளவரைத்துச் சூரிய புடமிட்டு, மறுநாள் பசுவின்

பாலில் குடிக்கவும். கடும் பித்தக் காரருக்குக் கரியுரைத்துக் கொடுக்கவும். ...... உண்டானால் மருந்தெல்லாம் விழும். மத்தா நாள் கையாந்தகரை சமூலம் அரைத்து வெள்ளாட்டுப் பாலில் கொடுக்கவும். பத்தியம் மோரும் சோறும் கொடுக்கவும்.

இதுக்கு எண்ணெய் மருந்து:- வெள்வெங்காயம் இரண்டு, சீரகம் பலம் 1, சாதிக்காய் பலம் 1, அதிமதுரம் பலம் 2, திப்பிலி பலம் 2, ...

3276. சுர நிதானம்

1. **நூலகக் குறிப்பு**
   அ. 2341-1
2. **உள்ளீடு : நூல் விவரம்**
   அ. ....
   ஆ. சுர நிதானம்
   இ. மருத்துவம்
   ஈ. செய்யுள் 80
3. **தோற்றக் கூறுகள்**
   அ. 14 ஏடு; 28 பக்கம்
   ஆ. நீளம் 32 செ.மீ., அகலம் 3 செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து
   ஊ. நல்லநிலை
   ஐந்தாம் ஏடு இல்லை
   எ. குறை
4. **சிறப்புச் செய்திகள்**
   அ. தொடக்கம்
   வாத சுரத்தின் குணம்:-
   கூறும் வாத சுரந்தனக்குக்
   குணமே சொல்லில் முகங்கறுக்கும்;

ஈறு முதடு முலர்ந்திருக்கும்
உட்டிண மிகுந்து யுழன்றுவரும்;
மாறு மயிர்க்குச் சிடுகையுண்டா
மலமே பெந்தந் தாகிக்கை
சீறு மிருமல் குளிர்நடுக்கல்
செய்யுங் குணங்க ளிதுதானே.

(1)

ஆ. முடிவு

வாதமே நோக்கி நின்று
வகைபட வாந்தி செய்யும்
சேதவே செய்யும் வாந்தி
மயக்கமே புலப்ப மல்லாம்
கோதையே யிருமல் வேர்வை
குளிர்ந்திடும் இருமல் வீக்கம்
போதவே வுறுமீ தென்று
பொருந்தமா முனிவர் சொன்னார்

(80)

3277. பட்சி தோடம்

1. நூலகக் குறிப்பு

அ. 2341-2

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. பட்சி தோடம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 6

3. தோற்றக் கூறுகள்

அ. 1 ஏடு; 2 பக்கம்

ஆ. நீளம் 32 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து
பிழைகள் மிகுதி

ஊ. நல்லநிலை

எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

அத்த மருகன் கணபதியை
அருமைப் பொருளைத் தான்வணங்கிச்
சித்தம் மகிழ்ந்த மடவார்கள்
சிவனைத் துணையென் றடுத்து...
உற்ற குழவி உறுபிணியும்
உடனே புள்ளின் குழிதோஷம்
மற்றுங் குணங்க ளானதெலாம்
வகுக்குங் கிரிகை தனைக்கேளீர். (1)

ஆ. முடிவு

பறவையின் குணம்:-
குஞ்சியார் உடம்பு லர்ந்து
குடலினில் பாலுந் தங்கா;
நெஞ்சையும் குழிய வாங்கும்;
நிறம்பல பேத மாகும்
துஞ்சுமே க...... .....
....
....
.... (7)

3278. நோய்க்கு மருந்து

1. **நூலகக் குறிப்பு**

அ. 2341-3

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. நோய்க்கு மருந்து
இ. மருத்துவம்
ஈ. உரைநடை
அச்சில் ஏறத்தாழ 15 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 15 ஏடு; 30 பக்கம்
ஆ. நீளம் 32 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7,8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. ஏட்டெண்கள் இல்லை
ஏடுகள் முறைமாறியிருக்கலாம்
நல்லநிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கிராணிக்கு மருந்து:- சாதிக்காய், சாதிபத்திரி, சாதிலிங்கம், கிராம்பு, அவின், ஓமம், குராசாணி, கஞ்சா, மாயக்காய், கருஞ்சீரகம், நற்சீரகம், அதிவிடையம், இலவங்கம், பிசின், வேலன் பிசின், நற்சீரகம், அதிவிடையம், இலவங்கப் பிசின், அக்கிரா, அதிமதுரம், திப்பிலி, மிளகு, சுக்கு, வெந்தயம், பெருமாபட்டை இதுவெல்லாம் இளவறுப்பாய் வறுத்துப் பொடி பண்ணிப் பிறகு மாதுளங்காயை நறுக்கி விதையும் சோறும் எடுத்துப் போட்டு இந்த மருந்துப் பொடியை அதுக்குள் வைத்துப் பாதிக்காய் கொண்டு மூடி, சீலைமண் செய்து, உமிக்காந்தலிற் புதைத்து, வெந்ததும் பிறகு சீலைமண் எடுத்துப் போட்டு எருமைத் தயிரில் அரைத்து நெல்லிக்காயளவு உருண்டை பண்ணித் தேனில் கொடுக்கவும். இப்படிப் பத்து நாள் கொடுக்கவும்.

ஆ. முடிவு

சோகைக்கு மருந்து:- திரிகடுகு, திரிபலை, ஏலம், இலவங்கம், கருஞ்சீரகம், சதகுப்பை, மகிழம்பூ, கச்சோலம், கொத்தமல்லி, வெப்பாலரிசி, வாய்விளங்கம், அசமதாகம், வெந்தயம், கடுகு, வெள்ளை உள்ளி, இந்துப்பு, காயம், பொரிகாரம், கையாந்தகரைச் சரகம், எலுமிச்சம்பழச் சரகம், வெற்றிலைச் சரகம், மஞ்சள் ஆகப் பொடிக்குப் பலம் 6 சரகம் 1க்குப் படி 2, அரப்பொடியை நாகல பட்டைத் தண்ணீர் விட்டரைச்சுப் புடமிட்டுக் கூட்டிக் கொள்ளவும்.

3279. தாது நடனம்

1. நூலகக் குறிப்பு

அ. 2342

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. தாது நடனம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 23

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு; 8 பக்கம்

ஆ. நீளம் 37 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

திருவொடு வெழுந்(த) தாது
சிலேற்பனம் நெடிய பித்தம்

மருவிய தனஞ்சேர் வாதம்
மற்றிவை மூன்றிற் றோன்றும்
உருவியல் குணத்து மாறாங்
கதனிடை யுதித்த நோயின்
வெருவிய வழியு முன்னால்
வினவழிப் பாடு சொல்வோம். (1)

ஆ. முடிவு

வாடையில் காலும் பித்தம்
மருவுசெந் தழலில் காலுங்
கூடவே நிற்க காலுங்
குணங்கெழு துரக்கக் கால்போல்
சாடையாய் நடக்கு மாகில்
சதித்திடு மீளை யங்கி
பீடுசெய் யணத்தி ....
.... (23)

3280. உதர கிரிகை

1 நூலகக் குறிப்பு

அ. 2343-1

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. உதர கிரிகை
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 40

3. தோற்றக் கூறுகள்

அ. 21 ஏடு; 42 பக்கம்
ஆ. நீளம் 21.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

ஆதியே சிவமே யுன்னி
அருள்செய்யும் கடவுள் பாதம்
வேதியர் குலத்தின் முன்னோன்
வேதத்தின் பொருளைத் தேர்ந்து
ஓதிய முனிவன் சொன்ன
உதரரோ கத்தின் செய்கை
நீதியாய் உலகின் மீதே
நெறியுட னுரைக்கக் காப்பாம்.

ஆ. முடிவு

கோதுசேர் வயறு தன்னில்
குழிப்பிற சுழியு முண்டாம்
வாதயாம் உதரம் நொந்து
வலித்திடும் மந்த முண்டாம்
தாதுசேர் குழலின் மாதே
தரணியி லாயுள் நூலோர்
ஓதிய குணங்க ளாகி
உதரத்தில் சூல மென்னே.

(40)

3281. வைத்தியத் தர்க்க நூல்

1. **நூலகக் குறிப்பு**

அ. *2343-2*

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. வைத்தியத் தர்க்க நூல்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 25

3. **தோற்றக் கூறுகள்**

அ. *15 ஏடு; 30 பக்கம்*

ஆ. நீளம் 21.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 4,5 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து
ஊ. இடது ஓரம் தீயில் கருகியுள்ளது
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காண்க:- தொடர் எண்.2319-8.

ஆ. முடிவு

திடமான கஞ்சத்தின் வீட்டைச் சொல்லு
சிறப்பான தாமிரத்தின் ரேகை யென்ன
இடமான அய்யத்து வீட்டைச் சொல்லு
இதமான பித்தாளை ரேகை சொல்லு
திடமான திராவுக்கு வீட்டைச் சொல்லு
தருவான அஞ்சினுட வீட்டைச் சொல்லு
துடம்பெரிய வைத்தியரே இந்த நூலே
சூட்சமாய் இன்னதென்று தொகுத்தி டேரே.

(25)

3282. மாந்திரீகம்

1. நூலகக் குறிப்பு

அ. 2344-1

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. குழையடி மந்திரம்
இ. மாந்திரீகம்
ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 15 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 14 ஏடு; 28 பக்கம்

ஆ. நீளம் 27 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. சுமாரான நிலை
எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

அரி ஓம். ஒருகடல் இருகடல் முக்கடல் நாற்கடல் ஐந்துகடல் அறுகடல் ஏழு கடல் கக்கத்து ஒரு ஆலாவிருட்சந் தோன்றி அந்த ஆலாவிருட்சத்தின் பெருமை எவ்வணம் எழுந்ததோ என்று கேட்டுக் கீழேழு புவனமும் கீழற வேரோடு மேலேழு புவனமும் மேலறக் கொழுந்தோடி இந்திரன் தங்கை, எமன் தங்கை சங்கரனே சான்றதாக எத்திசைக் கொழுந்து மத்திசை நடவும் அடங்கப் பரந்து வெள்ளியும் பொன்னும் விரவி....

ஆ. முடிவு

..... அரி ஓம். அரகரா கணபதி திரக்கண் பொறுத்தாப் போலே பொறுத்துப் போக; சிவ ஆதி கெருடனாணை பொறுத்துப் போக; சிவ ஆதி பரமேசுரனாணை பொறுத்துப் போக; சிவா ஆதி நாராயண சுவாமி ஆணை பொறுத்துப் போக; சிவா தணிதணி; சீக்கிரந் தணி; சுவாமியாணை தணிதணி; ஓம் சிவா தணி தணி; ஆதிகுருவினாணை தணி; தணிந்து போக சிவா...

3283. சிவவாக்கியம்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2344-2

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. சிவவாக்கியர்

ஆ. சிவவாக்கியம்
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 15

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு; 8 பக்கம்
ஆ. நீளம் 27 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. சுமாரான நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆடு காட்டி வேங்கையை
அகப்ப டுத்தும் வாறுபோல்
மாடை காட்டி என்னைநீ
மயக்கு விக்க லாகுமோ?
கோடு காட்டி யானையைக்
கொன்று டுத்த கொற்றவா!
வீடு காட்டி என்னைநீ
வெளிப்ப டுத்த லாகுமே.

(1)

ஆ. முடிவு

வானி ருந்து கலைகள் பொங்கி
மதிசி றந்த வெளியிலே
தானி ருந்து மூல வங்கி
தனைஎ ழுப்பி ஊதியே
தேனி ருந்த அருள்சு ரந்து
தித்தி யென்று பெற்றபின்
ஊனி ருந்த உறவு செய்த
யோகி நல்ல யோகியே.

3284. மருத்துவ நூல்

1. நூலகக் குறிப்பு

அ. *2344-3*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 29

3. தோற்றக் கூறுகள்

அ. 7 ஏடு; 14 பக்கம்

ஆ. நீளம் 27 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 5-7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

முல்லைப் பூப்போல் பல்வெளுத்து
முட..ளந்த வசனம் குயில்தொனியாய்
அல்லி மலரும் நெய்தலும்போல்
அரிய கண்ணும் தெளிவுற்றுச்
சொல்லும் தும்மல் தலைதினவுந்
துவண்ட உடலும் அலைவேர்த்து
நல்ல நாரும் மிதிருஅண்டாய்
நயந்த தாகம் நன்றாகும். (1)

ஆ. முடிவு

செப்பும் மருந்திது சேர்கழஞ் சீராறு
அப்பும்அத னோடள வெட்டொன்றாய் - ஒப்புடனே

தப்பா தருந்திடத் தாரணியோர் நோய்வலிவை
மெய்ப்பாய் அறிந்துகுறை மேல்.

(29)

3285. கவுளி காதல்

1. நூலகக் குறிப்பு

அ. *2344-4*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. கவுளி காதல்

இ. சோதிடம்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 6 பக்கம்

ஆ. நீளம் 27 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. சுமாரான நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அருக்கன்மேல் அகமுண் டென்னும்
அழியவே மழையும் பெய்யும்
உருக்கவே சிறைவி டாது
உகந்தமண் விண்ண தெல்லாம்
நருக்கவே மாற்றான் கொள்வான்
நாடிய பல்லி சொல்லில்
பெருக்கவே கேளீ ரிந்தப்
பெருமணி கவுளி சொல்லே.

ஆ. முடிவு

அருக்கனிலை:-

அருக்கன்முல் அறுபதுந்தான் தெற்க தாகும்
அருந்திங்கள் தொண்ணூறுங் கன்னி மூலை
உருக்கமுறுஞ் செவ்வாய்மேல் நாற்ப தாகும்
உடன்புதனும் ஐம்பத்தும் வன்னி மூலை
அடக்கமிது பொன்வடக்கே எழுப தாகும்
அதிகவெள்ளி யெண்பத்து மீசன் மூலை
மடக்கொடியீர் சனிகிழக்கு முப்ப தாகும்
மாநிலத்தில் அருக்கனியை மகிழ்ந்து சொல்லே.

3286. சரஸ்வதி ஒருபா ஒருபத்தந்தாதி

1. **நூலகக் குறிப்பு**

 அ. *2345-1*

2. **உள்ளீடு : நூல் விவரம்**

 அ. ஞானவரோதயர்

 ஆ. சரஸ்வதி ஒருபா ஒருபத்தந்தாதி

 இ. சிற்றிலக்கியம்

 ஈ. செய்யுள் 11

3. **தோற்றக் கூறுகள்**

 அ. 6 ஏடு; 12 பக்கம்

 ஆ. நீளம் 9 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

 இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

 ஈ. ஒரு பக்கத்திற்கு 7,8 வரிகள்

 உ. தெளிவான கையெழுத்து

 ஊ. நல்லநிலை

 எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

 அ. தொடக்கம்

வெண்டா மரையில் இருப்பாள்;
அளகம் விழிகருமை

கொண்டாள்;கை கால்தான் சிவந்தாள்;
......பல் குரம்பைஉகிர்
தண்டாத வெண்மைப் பளிங்கனை
யாள்;அயன் தையல்;ஒரு
வண்டாக என்மனம் பூவாகக்
கல்வி மணம்தருமே.

(1)

ஆ. முடிவு

பொருட்படு நாமகள்; பூமகள்;
போர்மகள்; பூமிக்கெலாம்
அருட்படுஞ் செல்வி மருமகள்;
ஞானவ ரோதயன்சொல்
தெருட்படு தீயான ஒருபா
வொருபுது சிந்தைசெய்வார்க்
கருட்படு சார சுகம்தரு
மேமெய் அறிவென்னவே.

(11)

5. **பிற செய்திகள்**

இதனையடுத்துக் கம்பர் இயற்றிய சரஸ்வதி யந்தாதியின் 5 பாடல்கள் எழுதப்பட்டுள்ளன.

3287. மாந்திரீகம்

1. **நூலகக் குறிப்பு**

அ. *2345-2+*

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....
ஆ. மாந்திரீகம்
இ. மாந்திரீகம்
ஈ. உரைநடை
அச்சில் ஏறத்தாழ 35 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

அ. 47 ஏடு; 94 பக்கம்

ஆ. நீளம் 8 செ.மீ., அகலம் 2 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

ஏட்டெண் 11ல் நூல் தொடங்குகிறது

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அக்கினிக் கட்டுக்கு மருந்து:-

சீதாதேவியார் செங்கழுநீர் என்கிறது நெய்ச்சட்டிச் சுண்டி வேரும், வெள்ளை நீர்முள்ளி வேரும் இரண்டும் குலிசமாடி அடக்கம் பண்ணிக் கொள்ளவும்.

ஆ. முடிவு

கண்ணுக்கு உருண்டை:-

சூதத்தில் இரட்டி காரீயம்; சொரிபோல் துத்தம்; அதுக்கு ரெட்டி சாதிச்சங்கும் அதுக்கு ரெட்டி செம்பாங்கும் எதுவிட்டரைப்போம் என்று எண்ணாதே. எலுமிச்சம்பழச் சாற்றில் அரைத்துக் கையால் உருட்டவும். கண்ணோவு சர்வமும் தீரும்.

5. பிற செய்திகள்

இந்நூலின் முதலிலும் இறுதியிலும் சில மருத்துவச் செய்திகள் இருந்தாலும் மாந்திரீகச் செய்திகளே நிறைய உள்ளன. யந்திரங்களும் வரையப்பட்டுள்ளன.

3288. தாது நடனம்

1. நூலகக் குறிப்பு

அ. 2346

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. தாது நடனம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 150

3. தோற்றக் கூறுகள்

அ. 23 ஏடு; 46 பக்கம்
ஆ. நீளம் 31 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை; 5ம் ஏடு இல்லை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காண்க:- தொடர் எண்.2342.

ஆ. முடிவு

கடைவிழி யுபயந் தன்னில்
கவின்கொள்செவ் வரியுந் தோன்றி
நடையுமே வண்மை தூய்தாய்
மிக்கநுண் மணியின் பாவைத்
தடையறச் சமநின் றாற்பின்
றரித்தநோய் மிகுத்திட் டாலும்
புவியினின் மருத்து வோரால்
போக்கலாம் புகழி தம்மா.

(150)

3289. அகத்தியர் ஞானம் 100

1. நூலகக் குறிப்பு

அ. 2347

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் ஞானம் 100

இ. தத்துவம்
ஈ. செய்யுள்101

3. **தோற்றக் கூறுகள்**
அ. 27 ஏடு; 54 பக்கம்
ஆ. நீளம் 24.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை. 23ஆம் ஏடு இல்லை
எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**
அ. தொடக்கம்; ஆ. முடிவு
காண்க:- தொடர் எண்.2317-2.

3290. சரீர வினாவிடை

1. **நூலகக் குறிப்பு**
அ. 2348

2. **உள்ளீடு நூல் விவரம்**
அ. ....
ஆ. சரீர வினாவிடை
இ. மருத்துவம்
ஈ. உரைநடை
அச்சில் ஏறத்தாழ 25 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**
அ. 29 ஏடு; 58 பக்கம்
ஆ. நீளம் 26 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 5,6 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து
ஊ. நல்லநிலை. 9ஆம் ஏடு இல்லை
எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

வினா : இங்கிலீஷ் அநாடமி என்பதென்ன?

விடை : சரீரத்திலுள்ள எலும்பு, மாமிசம் , சருமம், இருதம், நுரையீரல், கல்லீரல், யகுர்திகண்டம், மண்ணீரல், பீனிசம், இரைப்பை, அன்னாசயம், மூத்திரப் பிண்டம், குண்டி, மூத்திரப்பை, கோசம், பீசம், கருப்பாசயம், கண், வாய், மூக்கு, செவி இவை முதலிய உறுப்புகளைக் குறித்து விபரிக்கிற நூலுக்கு....

ஆ. முடிவு

7. வெற்றிலை பாக்குடன் போட்டுக் கொள்கிற சுண்ணாம்பு பல்லில் கரையை உண்டாக்குவதற்குக் காரணம். கறை மிகுதியாகச் சேர்ந்திருந்தால் பல்லில் .... பெருத்துப் பல்லுக்கு ஆட்டங் கொடுக்கும். தாம்பூலம் தரிக்காத தேகங்களில் பற்கள் இவ்விதமாய் ஆடி விழுவது அரிது.

3291. உடலறி விளக்கம்

1. **நூலகக் குறிப்பு**
   அ. 2349

2. **உள்ளீடு : நூல் விவரம்**
   அ. சங்கராசாரியார்
   ஆ. உடலறி விளக்கம்
   இ. தத்துவம்
   ஈ. செய்யுள் 102

3. **தோற்றக் கூறுகள்**
   அ. 35 ஏடு; 70 பக்கம்
   ஆ. நீளம் 16.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கந்திற்கு 7-9 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

அத்தனா ரருளாலே யாதி யாலே
அனுக்கிரக முள்ளசித்த ரன்பி னாலே
எத்தனையோ கோடியுக மிருந்தா ளாலே
என்கலியைத் தீர்த்தருளு மீச னாலே
சொல்தமிழாள் சர்வகலை நூலி னாலே
சுகமாக யெனையீன்ற யன்னைபிதா வாலே
உத்தமியாள் தேவிசிறு பிள்ளை யாலே
உலகான தையல்பத முள்கொண் டேனே.

(1)

ஆ. முடிவு

காண்க:- தொடர் எண்.2275-2.

3292. சுர நூல்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2350

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. புலிப்பாணி

ஆ. சுர நூல்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 27

3. **தோற்றக் கூறுகள்**

அ. 7 ஏடு; 14 பக்கம்

ஆ. நீளம் 24 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வரத்தினால் முனிவர் தேவர்
வாகடத் தியம்பக் கண்டு
வரத்தினால் அசுப தியிற்
சுரமது வுரைக்கக் கேளாய்
தரத்தினால் ஏழாம் நாளில்
தானது விடாத போது
விரத்தினா லொன்ப தாம்நாள்
விடுமெனச் செப்ப லாமே.

(1)

ஆ. முடிவு

பாங்காய்ச் சுரமும் ரேவதியில்
பதறி வந்த தென்றறிந்தால்
நீங்கா வகையாய் நெடுநாளாய்
நில்லா தென்று சாத்திரங்கள்
தூங்கா திவைக்கு மருந்துசெய்து
சுருதிப் படவே பாராளும்
தீங்காச் சொல்லு முனிநாதர்
தெளிந்தே சுரநூல் செப்பினரே.

(27)

5. பிற செய்திகள்

தொடர் எண்.2278-17ஆக இதே பெயரில் அமைந்துள்ள நூல் வேறொன்றாகும். எனினும் நூல் நுதலிய பொருள் ஏறக்குறைய ஒன்றே.

3293. உதர கிரிகை

1 நூலகக் குறிப்பு

அ. 2351

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. உதர கிரிகை

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 95

3. **தோற்றக் கூறுகள்**

அ. 18 ஏடு; 36 பக்கம்

ஆ. நீளம் 30 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 5-7 வரிகள்

உ. தெளிவான பலவித கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

காண்க:- தொடர் எண்.2270-6.

ஆ. முடிவு

வாதக் கழிச்சல் குணம்கேளாய்
வயிறே பொருமி மந்திக்கும்
சேதப் படவெண் சாணுடலும்
திமிர வகுத்தி கறாத்துளையும்
பேதப் படவே யுரைசோரும்
விழுமே குடலும் மிகஇரையும்
தாது சயம்மன் னஞ்சொல்ல
சாறுங் குள... சாதியாம்.

(95)

3294. சௌந்தர்யலகரி

1. **நூலகக் குறிப்பு**

அ. 2352

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. *கவிராச பண்டிதர்*

ஆ. *சௌந்தர்யலகரி*

இ. *சிற்றிலக்கியம்*

ஈ. *செய்யுள் 108*

3. தோற்றக் கூறுகள்

அ. *48 ஏடு; 96 பக்கம்*

ஆ. *நீளம் 25.5 செ.மீ., அகலம் 3.5செ.மீ.*

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. 6, 13, 15, 50ஆகிய ஏடுகள் இல்லை
உள்ளவை நல்லநிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மொழிந்தமறை நூலியற்று முகபடா
மணிந்துமுது ஞான தானம்
மொழிந்துதன திணைமணியென் றிருசுடரும்
புனைகளிற்றைப் போற்றல் செய்வாம்
வழிந்துபெரும் புனல்பரந்து வடவரையி
லற்றுலகே ழுமேழு மொக்க
வழித்திடினு மழியாத வபிராமை
பாடல்வள மளிக்க வென்றே.

(1)

ஆ. முடிவு

சேமநிதி யேயமுதே தேனேநற் குணக்கடலே
யாமளையே யன்பருளத் திருந்துமுரைக் கடங்காத
கோமளமே யம்மேநின் கோகனகத் தாள்வழுத்தும்
மாமறைபோ லென்பாடல் வண்டமிழுங் கொள்வாயால்.

(102)

5. பிற செய்திகள்

ஒவ்வொரு பாட்டிற்கும் வழிபாட்டு முறையும் யந்திரமும் எழுதப்பட்டுள்ளன.

3295. நோய்க்கு மருந்து

1. நூலகக் குறிப்பு

அ. 2353

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. நோய்க்கு மருந்து

இ. மருத்துவம்

ஈ. உரைநடை

அச்சில் ஏறத்தாழ 10 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 19 ஏடு; 38 பக்கம்

ஆ. நீளம் 11.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 5-7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. சுமாரான நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அக்கினி வாய்வுக்கு:-

வேப்பங் கொழுந்தும் கையாந்தகரையும் வகைக்குப் பலம் 2; சுக்கு, காயம், அதிமதுரம், ஏலம் வகைக்குப் பலம் ¼; இத்தனையும் வெயிலிலே காயவைத்துப் பொடித்துச் சர்க்கரை கூட்டிச் சாப்பிடவும். வயிற்றுப் பொருமல் தீரும்.

ஆ. முடிவு

வேப்பம் பட்டையும் வேப்பம் (பூவும்) ஒரு பாண்டத்தில் விட்டுத் தண்ணீர் .... மேலே சீலை வண்டு கட்டி,

அதின்மேலே மருந்து வெள்ளுள்ளி ஒரு கிரங்கை, சுக்கு அரைச்சிரங்கை, பிரண்டைக் கொழுந்து பலம் 3, தட்டி ஒரு முடி தேங்காய் திருகி அந்தப் பூவை வண்டில் பரத்தி அதின் மேலே வெள்ளுள்ளி பரத்தி அதின்மேலே பிரண்டை கொழுந்தும், சுக்கும் வைத்து மூடியவித்து இறக்கி அந்தச் சாரத்தைப் பிழிந்து கொடுக்கவும். கோரை, வாய்வு, இடுப்வு வாய்வு, குறுக்கு நோவு, வயிற்றுவலி தீரும். இப்படி மூன்று நாள் குடிக்கவும்.

3296. ஆனந்தக்களிப்பு மூலமும் உரையும்

1. நூலகக் குறிப்பு

அ. *2354-1*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. சங்கராசாரியார்

ஆ. ஆனந்தக்களிப்பு மூலமும் உரையும்

இ. தத்துவம்

ஈ. செய்யுளும் உரைநடையும்;
அச்சில் ஏறத்தாழ 40 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 34 ஏடு; 68 பக்கம்

ஆ. நீளம் 13 செ.மீ., அகலம் 3/5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பற்பல யோனி சுழன்றே
பரிணாம ரூபம் பெறுமிச் செகத்தைச்

சொற்பன மாக வறிந்து
துணையாம் பரத்தை யுணர்ந்திட வேண்டி
தற்கலை யாகமங் கூறும்
நவையற்ற சொல்லைக் களிப்பெனப் பாடக்
கற்பக வாரண முன்னோன்
கணபதி யேயெனைக் காத்தருள் வாயே.

ஆ. முடிவு
கேட்டிருந்த புதல்வன்எழுந் தடியில் வீழ்ந்து
கிரிகைஎனும் சரிதைசிவ யோகம் மூன்றும்
காட்டிஉரைத் தனைஅடியேன் அறிந்து கொண்டேன்
கருத்தழிந்தேன் முன்பும்ஒரு செய்தி கேட்க
நாட்டமுடன் நினைந்துகொண்டேன் என்உ டம்பும்
நாதம்ச ரா..எண் கலையாம் என்று
கூட்டிஉரைத் தனைஅதற்கு(ள்) உயிரும் எங்கே?
சொல்லமறந் ....

3297. உடலறி விளக்கம்

1. நூலகக் குறிப்பு
அ. 2354-2

2. உள்ளீடு : நூல் விவரம்
அ. சங்கராசாரியார்
ஆ. உடலறி விளக்கம்
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 63

3. தோற்றக் கூறுகள்
அ. 33 ஏடு; 66 பக்கம்
ஆ. நீளம் 13 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்நிலை
எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

காண்க:- தொடர் எண்.2275-2.

ஆ. முடிவு

வானிலெழு கதிர்மதியி லுடம்பி ரண்டாய்
　வளர்ந்தபிர காசமிரு வோர்க்கும் வேறு
கானிலுயிர் பரமென்று காண லாகுங்
　கருத்தறியா மாந்தர்பிரித் துரைப்பார் கண்டாய்
ஊனிலெழு சீவனுள வறிந்த போதில்
　ஒப்பரிய பரமதுவாய்க் காண லாகுந்
தேனிலெழு மின்பமறி வாருண் டாகில்
　செப்பரிய சீவனிலை ஒப்பிடலு மாமே.

(63)

3298. சல்லியம்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2355-1

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. சல்லியம்

இ. மாந்திரீகம்

ஈ. செய்யுள் 100

3. **தோற்றக் கூறுகள்**

அ. 20 ஏடு; 40 பக்கம்

ஆ. நீளம் 21 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. 10ஆம் ஏடு இல்லை
உள்ளவை நல்லநிலை
ஏட்டெண் 6ல் நூல் தொடங்குகிறது

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சல்லியம் நூறுஞ் சாற்றிய மந்திரம்
சொல்லிய கருவுஞ் சூட்சம தாக
அல்லும் பகலும் ஆனை முகவனைக்
கொல்லிய வாளும் குமரனே காப்பு.

ஆ. முடிவு

குருவரு ளாலே சல்யன்
  கூறிய தொழில்க ளெல்லாம்
குருவரு ளாலே கண்டு
  குறிப்புட னறிய வேணும்
குருவருள் தானே தெய்வங்
  குருதானே முத்தி யாகும்
குருவிரு பாதந் தன்னைக்
  கொண்டேன்என் சென்னி மீதே.

(100)

சல்லியம் முற்றும்.

3299. மருந்து செய்முறை

1. நூலகக் குறிப்பு

அ. 2355-2

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. மருந்து செய்முறை
இ. மருத்துவம்
ஈ. உரைநடை
அச்சில் ஏறத்தாழ 25 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 21 ஏடு; 42 பக்கம்
ஆ. நீளம் 21 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 5-7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. 51ஆம் ஏடு இல்லை

உள்ளவை நல்லநிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

முடி கருக்க எண்ணெய்:-

தாணிக்காய், அரப்பொடி இவை ஆட்டு மூத்திரத்தில் அரைத்து தலையில் தேய்ச்சு முழுகத் தலைமயிர் நெருக்கமாய்க் கருத்து வளரும்.

ஆ. முடிவு

செவ்வரளி வேர்ப் பட்டையும் மருதம் வேர்ப் பட்டையும் சரியாகக் கொண்டு கால் பலம் கன்னாரமும் கூட்டிப் பொடி செய்து சீலை வடிகொண்டு போகும் போது சிறுநீரை வார்த்துப் பூசிப் புணரவும். அப்படி வேணுமென்ற நேரம்புணரவும்.

3300. மருத்துவ நூல்

1. நூலகக் குறிப்பு

அ. 2356

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 55

3. தோற்றக் கூறுகள்

அ. 35 ஏடு; 70 பக்கம்

ஆ. நீளம் 24 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 5,6 வரிகள்

உ. கிறுக்கலான கையெழுத்து; பிழைகள் மிகுதி

ஊ. பல ஏடுகள் முனையில் சிதைந்துள்ளன.
முதல் இரண்டு ஏடுகளும் 37க்கு மேல் இருக்க வேண்டியனவும் காணப்படவில்லை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

விருதுநற் கனிஐம் பதுபிசைந் துச்சாற
விடுபுதுக் கரகமதனில்
வெட்டியின் பால்அத்திப் பட்டைபலம் ஒன்றுவேர்க்
கொம்புசுத் திக்குக்கிலத்
திரள்மிளகு தான்றிவேர் வகைபலம்இ ரண்டுநற்
சீரகம் பலமொன்றதாகச்
சேர்ந்திடி பொடிஎன்று; பலஞ்சீனி சூரணம்
சேருநெய் படிபாதி(யே)
சிறுதேனின் பரிசோடு கலந்தின்ன மும்பகர்
ரசாயனப தந்தனில்எடுத்
தடைத்துபத் தியமுடன் கடுக்காய்அ லகுமண்டலம்
பருகரத் தப்பிரமியம்
மருளான காலடைப் புத்தசைஅ டைப்புத்தன்
மாங்கிஷச சூலைவாதம்
வளர்மூலம் பவுந்திரம் முதல்அகன் றிட(என்று)
வகுத்தனர் அகத்தீசரே.

(2)

ஆ. முடிவு

ஆயிலத் தருதோல்சித் திரமூல மதுவேர்வகை
ஐம்பதுப லம்தறித்து
அதனை இடி;நீ... படிவிடு கடுக்காய்
நா...விதை யோடதில்இடு;
காயும்அறல் நாலில்ஒரு கவடிகொள் ....
கடுக்காய் தணைவேறதாக்

கவர்ந்தெடுத் திடுபிரமி தத்துவளை புங்குகற்
றாளையோடு இசங்குதோட
சாயும்பி ரண்டைபசு மஞ்சள்இஞ் சிச்சாறு
தான்வகைக் கோர்படியதாய்த்
தரும... நாலுபடி கிழாயத் தினோடும்
சர்க்கரைஅ ரைத்துலாமும்
மாயஅதி லேகரைத் திடு;கரக மொன்றினில்
வார்த்தடுப் பேற்றிஅனலில்
மங்காமல் ஓர்படிக்குப் பதமான போதினில்
வகுத்திடு மருந்துதானே.

(55)

3301. சன்னி நிதானம்

1. **நூலகக் குறிப்பு**

அ. *2357-1*

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. சன்னி நிதானம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 62

3. **தோற்றக் கூறுகள்**

அ. 22 ஏடு; 44 பக்கம்

ஆ. நீளம் 21 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7-9 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. 2ஆம் ஏடு இல்லை
உள்ளவை நல்லநிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அத்தி முகனடி போற்றிசன்னி
பதிமூன் றுக்குப் பெயரடைசொல்
பத்திப் படுமங் குணங்குறியுஞ்
சாற்று நீலி பகர்ந்தங்கு
நித்தஞ் செய்யுங் குடிநீரும்
அஞ்சனந் தயிலம் நிறைந்ததாம்
ஒத்துக் கண்டு சமமறிவித்த
அவிழ்த மேது உரைக்கலுற்றாம்.

(1)

ஆ. முடிவு

கொளுத்தி யெரித்திடு மளவில்வேப் பெண்ணெயுங்
கோதி விலுப்பை எண்ணெய்மூன்று படிகொண்டு
அழுத்தி யெரித்திடு தீயில் மூட்டையிலே
கோதி யவியாமல் விட்டுவைத்த தயிலம்அந்
துளித்துளிக் கீழ்ச்சட்டி தனிலே விழுமந்த
உரிசத்த வெந்திட்ட கலத்தயிலம் வாங்கிக்
கழுத்துச்சி நெற்றிகன்னம் பிடரி கைகால்
கண்டுசம செய்திடில் மரணசன்னி விட்டுக்கழலும்.

(62)

3302. வாதத்தின் குணம்

1. நூலகக் குறிப்பு

அ. 2357-2

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. வாதத்தின் குணம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 44

3. தோற்றக் கூறுகள்

அ. 9 ஏடு; 18 பக்கம்

ஆ. நீளம் 21 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

ஏட்டெண் 24ல் நூல் தொடங்குகிறது

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காண்க:- தொடர் எண்.2341-1.

ஆ. முடிவு

நீர்வாத சுரம்:-

நீரா லெடுத்த வாதசுரம்
நித்தங் காயும் ஒருபக்கம்;
வாராப் பக்கங் காயாது
மறுபடி காயு மதுகுளிரும்
பாயு முதரம் பசியறுப்பப்
பருகுங் குருதி தனைச்சூழ்ந்து
நேராய்க் கெண்டை யுரிக்கொள்ள
நித்திரை யதிக முண்டாமே.

(44)

3303. மருந்து செய்முறை

1. நூலகக் குறிப்பு

அ. 2357-3

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. மருந்து செய்முறை

இ. மருத்துவம்

ஈ. செய்யுள்

அச்சில் ஏறத்தாழ 25 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

அ. 14 ஏடு; 28 பக்கம்

ஆ. நீளம் 21 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

பிழைகள் ஏராளம்

ஊ. சுமாரான நிலை

எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

....

...ஒக்க வேவடித் திந்நீரில் மேலுமொரு
பற்பமொன்று கூட்டிப் பருகுதற்குத் தான்மருந்து
திப்பிலி சாத்திரவே திக்காயம் - நற்கருடப்
பச்சைகல் நார்விடையம் பாரக்கி ராகாரம்
மெச்சுகுரோ சானிஅவின் மேல்காந்தம் - வைச்சாரி

ஆ. முடிவு

.... கையர்ஞ்சாற்றில் அரைத்தேழு நாளும் அடுத்துக்
கொட்டாங் கரந்தையின் நீரில் ஏழுநாளும்
நொச்சிநீரில்
ஏழுநாளும் அரைத்து அரைப்பு முகிந்தால் சிறுபயற்றின்தரம்
உண்டை செய்து மென்னிழலில் உலர்த்தி

(இதற்குமேல் ஏடுகள் இல்லை. இது கோடாசூரிக் குளிகையின் செய்முறை)

3304. வீர வசந்தராயர் பத்திரிகை

1. நூலகக் குறிப்பு

அ. 2358-1

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. வீர வசந்தராயர் பத்திரிகை - 4

இ. பல்வகை நூல்கள்

ஈ. உரைநடை

அச்சில் ஏறத்தாழ 3 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்

ஆ. நீளம் 18.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரிகள்

உ. கிறுக்கலான கையெழுத்து

ஊ. நல்லநிலை. ஏட்டெண் 13ல் நூல் தொடங்குகிறது

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நரசிங்க... யள் பூலோகத்தின் பேரிலே எழுதியனுப்பிச்ச சவுசன்ய பத்திரிகை என்னவென்றால், வடகயிலாயத்திலே இருந்து தென்கயிலாயமான அருணாசலத்துக்கு அனுப்பின பத்திரிகை என்னவென்றால், விபரம். பதரிகாச்சிரமத்திலே எழுந்தருளியிருக்கிற மகாமுனீஸ்பரர்கள் ஆக்ஞாபிச்சது பதிவிரதர சிகாமணியான புண்ணிய புருஷர் வருகிறார் என்றும் பூமி பாரந் தாங்கி துஷ்டசங்கார, சிஷ்ட பரிபாலனம் பண்ணிப் புண்ணிய புருஷர்களை....

ஆ. முடிவு

..... பூசை பண்ணின பேர்களுக்கு... மகாதானம் பண்ணின பலத்தை அடைவார்கள். இப்படியென்று

மகாமுனீஸ்வரர்கள் மகாசித்தர்கள் சிலருக்குக் கொடுத்தார்கள். புத்திமதியாயிருக்கிற பேர் தெரிந்து கொண்டு சுகத்துடனே இருக்க வேணுமென்று எழுதி அனுப்பிச்சோம். இதுநீ தப்பாமல் நடக்கவேணும். இந்தப் பிரகாரம் நடக்கத்தக்க பேர்கள்.....

3305. வீர வசந்தராயர் பத்திரிகை

1. **நூலகக் குறிப்பு**

   அ. *2358-2*

2. **உள்ளீடு : நூல் விவரம்**

   அ. ....

   ஆ. வீர வசந்தராயர் பத்திரிகை - 2

   இ. பல்வகை நூல்கள்

   ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ ஒரு பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

   அ. *1 ஏடு; 2 பக்கம்*

   ஆ. *நீளம் 18.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.*

   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

   ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரிகள்

   உ. கிறுக்கலான கையெழுத்து

   ஊ. நல்லநிலை. ஏட்டெண் 17ல் நூல் தொடங்குகிறது

   எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

   அ. தொடக்கம்

   இந்தப் பத்திரிகை வசனம் என்னவென்றால், பத்திரி கேதாரம் விட்டு மேரு கிரியிலே அங்கவாசமாய் இருக்கிற மகாமுனீஸ்வரர்கள், மகாசித்தர்கள் அனுமதியால் நாங்கள் பூலோகத்திலே யிருக்கிறவர்களுக்குத் தெரியவேணுமென்று எழுதியனுப்பிச்ச புண்ணியப் பத்திரிகை என்ன வென்றால்....

ஆ. முடிவு

.... வசந்தராயரவர்கள் அகோர தபசு பண்ணுகிறார். அந்தத் தபசுக்கு ஸ்ரீசாம்ப சதாசிவன் பிரத்யட்ச மாகிறார். அவர்களிடத்திலே மூன்று வரம் கேட்டுக் கொண்டு அதினாலே அவர்களுக்கு ஐசுவரியமும் உண்டாகப் போகிறது.

3306. தத்துவ நூல்

1. நூலகக் குறிப்பு

அ. *2358-3*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. பெயர் தெரியாத ஒரு தத்துவ நூல்

இ. தத்துவம்

ஈ. செய்யுள் *1+11=12*

3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு; 10 பக்கம்

ஆ. நீளம் 18.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7,8 வரிகள்

உ. கிறுக்கலான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தெளிவுதனில் தெளிவுதரும் அருளும் காணும்
...ணத்திலே சிவமயஞ் சேரத் தோணும்
வழியதனில் நல்லவழி ஞானம் கூடும்
மகத்தான வேதாந்தம் சித்தி கூடும்
ஒளிவுதனில் ஒளிவுதரும் உறுதி சொல்ல
உற்பனத்தில் உற்பனமாய் உறுதி தோணும்

வெளியதனில் வெளியாகி நாதத் துள்ளே
விளங்கிநின்ற வாலைப்பெண் ஆதி காப்பாம்.

ஆ. முடிவு

ஆமெனவும் ஊமெனவும் இரண்டுங் கூடி
அப்பனே ஓமென்ற மூன்றும் ஒன்றாய்
நாமெனவும் தாமெனவும் ஒன்றே யாகும்;
நல்லவர்கள் அறிவார்கள்; காமி காணார்;
வாமம்வைத்துப் பூசைபண்ண இந்த மார்க்கம்
வந்தவர்க்குச் சத்திசிறு பிள்ளை; வாலை
சோமநதி அமிர்தம்உண்ண வாவா என்பாள்;
சுகம்உண்டாம்; பரமசுகம் அருள்செய் வாளே.

(11)

3307. மாந்திரீகம்

1. நூலகக் குறிப்பு

அ. 2359

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. மாந்திரீக நூல்

இ. மாந்திரீகம்

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 20 பக்கம் வரும்

3 தோற்றக் கூறுகள்

அ. 11 ஏடு; 22 பக்கம்

ஆ. நீளம் 25 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. சிதைந்த நிலை

எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

பாலைக்காட்டுச் சக்கிலிச்சி மந்திரம்:- .... குருவே நம. அரிஓம். கோர அம்மா, சர்வமால் சக்கதேவி பொம்ம வாச்சு பொம்மலேது. வாலக்கா குல்லி பந்து - பந்து துஞ்சி - துஞ்சி - யீரலைப் பிடுங்கிப் போடு. அயக்க - மயக்கம் - வயித்தைப் பிடுங்கிடாய் சக்கிலியாச்சி. நசிநசி யகோர உம்மனாக்கா அட்டக்கார் - பாலைக்காட்டுத் தேவி ஆ-யீ-பந்து-பந்தேது-நான் சொன்ன சத்துருவை ஓடிப்பிடி....

ஆ. முடிவு

வெத்திலை, பாக்கு, சர்க்கரை, பஞ்சாமிர்தம், சூடன், சாம்பிராணி, யிரும்பட சம்பனுப் பிச்சிப்பூ, அரளிப்பூ, தேங்காய், தூபதீப நைவேத்தியஞ் செய்து வாழைக்காய், கத்தரிக்காய், தடியன் பூசணிக்காய் அர்த்தமுக்கிப் பலியிட்டுப் பூசை முகித்துத் திரும்பத் தேங்காய் வெட்டிவிடவும்.

மூலமந்திரம்:- அரிஓம். கிருங்கிரியு மய்யுங் கலியுஞ் சவ்வுஞ் சவ்வுங் கிலியுமய்யும் பரிபுரபவ பவனொழி பவ சரவண பவ சண்முக பவ திரிபுர பவ திகழொளி பவ சிவசிவ சுப்பிரமணிய சுவாமி. சுவாகா.

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

3308. மூலிகைப் பிரயோகம்

1. **நூலகக் குறிப்பு**

   அ. *2360-1*

2. **உள்ளீடு : நூல் விவரம்**

   அ. ....

   ஆ. அறுபத்துநான்கு மூலிகைகளின் பிரயோகம்

   இ. மாந்திரிகம்

ஈ. உரைநடை

அச்சில் ஏறத்தாழ 15 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

அ. 29 ஏடு; 58 பக்கம்

ஆ. நீளம் 14 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. சுமாரான நிலை

எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

வசீகர மூலிகை:-
சீதேவியார், செங்கழுநீர் - இராச வசியம்;
நீலமதமத்தம் - ஸ்த்ரீகள் வசியம்;
வெள்ளெருக்கம் வேர் - லோக வசியம்;
வெள்ளைவிட்டுணுகிரந்தி - சென வசியம்.....

ஆ. முடிவு

சங்கங்குப்பி வேர் வடக்கே போற வேரைப் பிடுங்கிக் குளிசமாடித் தூப தீபம் கொடுத்துப் பலியிட்டு முன்னே கிடத்தத் தம்பிக்கும்.

அறுபத்து நான்கு மூலிகைப் ப்ரயோகம் முற்றும்.

இ. பிற்குறிப்பு

சிதம்பரக்குத்தாலம் வயித்தியன் ஏடு. தாணு வயித்தியன் ஏடு.

3309. சோதிடச் செய்திகள்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2360-2

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. சோதிடச் செய்திகள்

இ. சோதிடம்

ஈ. உரைநடை

அச்சில் ஏறத்தாழ 15 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 21 ஏடு; 42 பக்கம்

ஆ. நீளம் 14 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரிகள்

உ. சுமாரான கையெழுத்து

ஊ. முதலேடு இல்லை

உள்ளவை ஓரங்கள் முறிந்த நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

.... அட்டமியாகில் .... நவமியாகில் சம்பத்துடனே இருப்பாள்; தசமியாகில் பாக்கியவதியாய் இருப்பாள் ஏகாதசியாகில் பலவீட்டுக்குந் திரிவாள்; துவாதசியாகில் பலரையும் தூசணிப்பாள்; திரயோதசியாகில் நனவையுண்டா யிருப்பாள்; சதுர்த்தசியாகில் நடக்கையில்லாத நடத்தை நடப்பாள்; பவுர்ணமியாகில் சந்தோசமில்லை; கிலேசமாயிருப்பால்; அமாவாசையாகில் தரித்திர முண்டாயிருப்பா ளென்றவாறு.

ஆ. முடிவு

அசுபதி, பரணி, கார்த்திகை, ரோகணி, மிருக சீரிஷம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயில்யம், மகம், பூரம், உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம்,

திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, (உத்திரட்டாதி), ரேவதி ஆக நட்சத்திரம் 27.

3310. அட்ட கர்மம்

1. **நூலகக் குறிப்பு**

அ. *2360-3*

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. அட்ட கர்மம்

இ. மாந்திரீகம்

ஈ. செய்யுளும் உரைநடையும்;
அச்சில் ஏறத்தாழ 4 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

அ. 9 ஏடு; 18 பக்கம்

ஆ. நீளம் 14 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

பாரு அட்ட கருமம் பகருகிறோம் கேளு
பரிவான வசிகரம் மோகனம் சிறப்பு
தம்பனம் ஆகர்ஷணம் அஞ்சும் பாரு
உச்சாடனம் மாரணம் பேதனம் மூன்றும்
வகையாக அட்டகர்மம் எட்டும் இதுதான்பாரு.

ஆ. முடிவு

உய்யவே பேதனமாம் மநயவசி என்ன
மெய்யடா நயவசிம மோகனமும் ஆகும்

நய்யவே வயநமசி வித்துவே சிக்கும்
நாடடா மா(ர)ணத்தில் மசிவயந என்னே.

3311. மச்சமுனி நிகண்டு 105

1. நூலகக் குறிப்பு

அ. *2361-1*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. *மச்சமுனி*

ஆ. *மச்சமுனி நயினார் நிகண்டு 105*

இ. *தத்துவம்*

ஈ. *செய்யுள் 105*

3. தோற்றக் கூறுகள்

அ. *18 ஏடு; 36 பக்கம்*

ஆ. *நீளம் 18.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.*

இ. *இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது*

ஈ. *ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்*

உ. *தெளிவான கையெழுத்து*

ஊ. *நல்லநிலை*

எ. *முழுமை*

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

முப்பாலுக் கப்பால் முடிந்தமுடி வெந்நாளுந்
தப்பாமல் பூரணத்தே சாருவர் - எப்போதும்
வேகாச் சடலமுத்தி வேண்டுங்கோ முக்கோணச்
சாகாக் கணேசனருள் தான்.

ஆ. முடிவு

ஓதிட வருவாளே உள்ளஞ் செழுத்தையும்
ஆதியு மந்தமு மாம்நடு பூரணம்
சோதியில் நாதன் துரிய மிறந்திடம்
நீதியாய் இன்பம் நிலைத்திடு முத்தியே.

(105)

மச்சமுனி நயினார்நிகண்டு முற்றும்.

5. பிற செய்திகள்

இதனை அடுத்துக் கைவல்ய நவநீதப் பாடல்கள் மூன்றும்; மாந்திரீகப் பாடல்கள் இரண்டும் இடம்பெற்றுள்ளன. இவற்றை அடுத்து அகத்தியர் பாடல் சுருக்கம் என மூன்று பாடல்கள் உள்ளன.

3312. அகத்தியர் சுருக்கம் 6

1. நூலகக் குறிப்பு

அ. 2361-2

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் சுருக்கம் 6

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள் 6

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்

ஆ. நீளம் 18.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சித்தாதி ஆதியிலே பதினெண் பேர்தான்
சிவனறியத் தேவியுட வாதத்தி னாலே
சுத்தாகிச் சிவனுடைய திருக்கூத் தப்பா
காரணமாய்ச் சிவமூலர் பாரு பாரு
வித்தாதிச் சாத்திரங்கள் கோடா கோடி
விளம்பினே னிந்நூலில் விரைந்து பாரு

அத்தாதி யானவர்க்கே எய்துமிது எய்தும்
அல்லாட்டால் எய்தாதே அறிந்துபாரே.

(1)

ஆ. முடிவு

வகாரமடா ஆறுக்குள் ஒளிக்க வில்லை
மைந்தனே சமுத்திரத்து உப்பு ஆதி
சிகாரமடா வேதைகேள் கோடா கோடி
செகத்திலே இதைவிட்டால் சாப மாகும்
பகாரமடா யிந்நூலை யண்ட பிண்டம்
பரமகுரு தானறிய வெளியில் வைத்தேன்
நகாரமடா சுந்தரமே இந்நூல் போலே
நாட்டார்கள் வாதத்தின் செய்கை முற்றே.

அகத்தியர் அருளிச்செய்த ஆறும் முற்றும்.

3313. கொங்கணர் அதீதம்

1. **நூலகக் குறிப்பு**
   அ. *2361-3*

2. **உள்ளீடு : நூல் விவரம்**
   அ. கொங்கணர்
   ஆ. கொங்கணர் அதீதம்
   இ. தத்துவம்
   ஈ. செய்யுள் *31*

3. **தோற்றக் கூறுகள்**
   அ. *8* ஏடு; *16* பக்கம்
   ஆ. நீளம் *18.5* செ.மீ., அகலம் *3* செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு *3* வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து
   ஊ. நல்லநிலை
   எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அஞ்சென்ற மனதுக் கப்பால்
அகம்புற மிரண்ட துண்டு
நஞ்சென்ற அகந்தான் காது
நயனந்தான் புறம தாச்சு
அஞ்சென்ற ரெண்டு மங்கே
அடைபட்டால் நாதங் காணும்
தஞ்சென்றே னாத்தாள் சொன்னாள்
தான்தேடிப் பார்த்த வாறே.

(1)

ஆ. முடிவு

தாக்கியுள் நோக்கி னாக்கால்
தான்மாய்ந்து வேறே தோன்றும்
சாக்கிரங் கண்ட தெல்லாம்
தயாநிதி நிர்ம லம்மாய்த்
தூக்கியுள் ளோடும் பாரு
சொர்ணங்க ளழுத்தி னாற்போல்
தேக்கியுள் ளழுத்தி னாக்கால்
தெளியநாள் செல்லும் பாரே.

(31)

3314. அகத்தியர் சூத்திரம் 16

1. நூலகக் குறிப்பு

அ. 2361-4

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் சூத்திரம் 16
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 16

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம்

ஆ. நீளம் 18.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

பூரணமே தெய்வமென்று உரைத்தீ ரய்யா
பூரணத்தை யின்னதென்று புகல வேண்டிக்
காரணத்தைச் சொல்லுகிறேன் நினைவாய்க் கேளு
கலையான பதினாறும் பூரணமே யாகும்
மாரணமாய் உலகத்தோர் மதிம யங்கி
மதிகெட்டுப் பூரணத்தை யிகழ்ந்தா ரய்யா
வாரணத்தில் மனம்வைத்துப் பூரணத்தைப் பார்க்கில்
வாசியென்ற சிவயோகம் வாழ்க்கை யாச்சே.

(1)

ஆ. முடிவு

பிரித்துரைத்தேன் சூத்திரப்பி ரட்டுக் குள்ளே
பித்தர்களே ஒன்றாகத் தெளிந்து பார்க்கில்
விரித்துரைத்த நூலினுட் மார்க்கந் தோன்றும்;
விள்ளாதே யிந்தநூல் இருக்கு தென்று;
கருத்துடனே அறிந்துகொள்ளு கலைமா றாதே;
காரியத்தே நின்றாலே கருதிக் கொள்ளு;
சுருதிசொன்ன செய்தியெல்லாம் சுருக்கிச் சொன்னேன்
சூத்திரம்போல் பதினாறும் தொகுத்தேன் கூறே.

(16)

3315. மருந்து செய்முறை

1. **நூலகக் குறிப்பு**

அ. 2362

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. மருந்து செய்முறை

இ. மருத்துவம்

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 70 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

அ. 66 ஏடு; 132 பக்கம்

ஆ. நீளம் 19.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்குப் பல வரிகள்; இரண்டு பத்திகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை
ஏட்டெண் 48 முல் 66 வரையுள்ள ஏடுகளின் நீளம் 17.5 செ.மீ. கொண்டுள்ளது

எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

பச்சை கற்பூர வைப்பு:- சூடன் பலம் 10, உவருப்பு பலம் 5, வெடியுப்பு பலம் 5, சீனம் பலம் 5, கல்லுப்பு பலம் 5, கறுவாப்பட்டை பலம் 2, இலவங்கப்பட்டை பலம் 2, பூலாங்கிழங்கு பலம் 2, சாம்பிராணி பலம் 2, வால் மிளகு பலம் 2, கோரைக்கிழங்கு பலம் 2 கூடக் கூட்டி நன்றாய் இடித்துக் கரம்பை யில்லாமல் இடித்துப் பீங்கானில் வைத்துக் கொண்டு புழுகு மஞ்சாடி 2 கூடச் சேர்த்துச் செண்பகமொட்டு பலம் 1, கோட்டம் பலம் 2, பசுவின் நெய் படி 4, சாராயம் படி 4 இது ரெண்டு மருந்துடனே விட்டு விரவிப் பிசைந்து....

ஆ. முடிவு

சாம்பிராணி பலம் 2, தேவதாரம் பலம் 1, கோட்டம் பலம் 1, சந்தம் பலம் 1, எலுமிச்சம் வேர் பலம் 1 ஆக

இவையெல்லாம் நன்றாய் இடித்துக் கொண்டு ஒரு கலசத்தில் குழல் வைத்துச் சிறுகச் சிறுகப் போட்டுத் தயிலம் வடிக்கவும். இந்தத் தயிலம் போட்டால் சூலைபுண், புரைவாதம், கடுப்பு, உளைவு, குத்து இவை தீரும். அந்திதோறும் வெந்நீர் விடவும்.

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

3316. மருந்து செய்முறை

1. நூலகக் குறிப்பு

அ. 2363

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. மருந்து செய்முறை

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 80

3. தோற்றக் கூறுகள்

அ. 55 ஏடு; 110 பக்கம்

ஆ. நீளம் 24.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. சுமாரான கையெழுத்து

ஊ. சிதைவுற்ற நிலை
ஏட்டெண் 5ல் நூல் தொடங்குகிறது

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

எவ்வினையும் தீர்க்கின்ற ஏலாதிக் கியாழத்தை
இயம்பக் கேளீர்...
ஏலம்அதி மதுரமொடு இருவேலி திப்பிலி
இயல்சுக்கு முத்தமுடனே

அவ்வினையைத் தீர்க்கின்ற ஆடாதோ டைநிம்பம்
அமுதுதிசை மூலமதுவும்
அழகான கியாழத்தில் அதிமதுரம் முந்திரிகை
அலர்சீர கம்சீனி...
மெய்விளை கலிதீர்க்க நலமெனப் பொடிகளிட்
டிடமேவா துகாச...
மெல்லவிட் டோடுமே சுரமேவு காசமும்
மெலிகின்ற சயகாசமும்
செய்வினை யாய்வந்த தொருரா ....
தீரும்ஏ வல்பிணிகளும்
தென்பொதிகை மாமுனிவர் இப்புவியில் நற்றமிழைத்
தெரிந்துரை பகர்ந்த.....

ஆ. முடிவு

செப்பிடும ருள்வாதிபெரு மாபட்டை யொடுசேர
முத்தம்வேர்க் கொம்பு....
வெப்பாலை அரிசியும் திறமான அதிவிடையம்
ஓமமொடு சமனதாய்ச்சேர்
எட்டொன்று வைத்துநீ அருந்திடத் தீரும்அதி
சாரசுர மோடுபித்தமு...
சத்தில்விக் கலொடுதீங்கு செய்அக்கினி மந்தமொடு
பரதாகம் தீருமென்றருள்
முனிவர்உரை செய்தசெந் தமிழ்சிறந் திடும்
கவிதை யிதுவே.

3317. நோய்க்கு மருந்து

1. நூலகக் குறிப்பு

அ. 2364

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. நோய்க்கு மருந்து
இ. மருத்துவம்
ஈ. உரைநடை... அச்சில் ஏறத்தாழ 150 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 157 ஏடு; 314 பக்கம்

ஆ. நீளம் 13 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

பல ஏடுகள் வெற்றிடமாக உள்ளன

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பவளப்புற்று பற்பம்:- பவளப்புற்று வேண்டியது எடுத்து ஓரிதழ்த்தாமரை இலை இடித்துப் பிழிஞ்சுவிட்டு அரைச்சு மேற்படி இலையரைச்சுக் குகைபிடிச்சுச் சீலைமண் செய்து கனபுடம் போட வெளுக்கும். வெண்ணெயில் ஒரு பணவிடை கொடுக்க மேகம், நீர்த்தரிப்பு மாறும்.

ஆ. முடிவு

போறலை, கையாந்தகரை, மருதோன்றியிலை, தெற்றிப்பூ வகைக்கு நாலஞ்சு வீதம் எலுமிச்சம் பழச்சாறு விட்டு அரைச்சு வரும்போது அதின் கூடத் தலைமண்டையோடு ரெண்டு கழஞ்சு கூட வச்சு அரைச்சுக் குகைபோலே பிடிச்சு அதில் நாலு கழஞ்சு அரப்பொடியுடனே ரவி வச்சு உருட்டி உலையிலிட்டு அஞ்சா நாழிகை ஊதிப் பின்பு எடுத்து ஆறவிட்டுத் தட்டி எடுத்து, தண்ணீரில் அமுக்கி, கஞ்சமாக அடித்துக் கத்திரிகொண்டு பொடியாக வெட்டி மறுபடி மண் குகைக்குள் வச்சு அதில் கிட்டமும் பொடிச்சிட்டு மேலே மண்ணுப்பூசி உலையில் வச்சு அரை நாழிகை நாவது போலே நரிச்சப் பதனிச்சாறாக உளறாப் போலே பிழிஞ்சு வச்சு அதில் ஊத்திக் கொள்ளவும்.

3318. மாந்திரீகம்

1. நூலகக் குறிப்பு

அ. 2365

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. மாந்திரீகச் செய்திகள்

இ. மாந்திரீகம்

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 25 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 22 ஏடு; 44 பக்கம்

ஆ. நீளம் 20 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

ஏட்டெண் 3ல் நூல் தொடங்குகிறது

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பாசாணக் கட்டு:- பாசாணக் கட்டிக்குத் துவாலைச் சுருக்குக் கொடுத்து வைத்துக் கொண்டு முன்மூளை பொதிஞ்சு ரெண்டா மதுமாவுங் கொடியும் அரைத்துப் பொதிஞ்சு சீலைமண் செய்து புடம் போடவும். நன்றாய்க் கட்டிப் போகும்.

ஆ. முடிவு

பச்சைக் கர்ப்பூரம், வெடியுப்பு, உவருப்ப, சீனம், கூடன் பலம் 1, கோரங்கிழங்கு, சாம்பிராணி, கச்சோளம், வால்மிளகு வகைக்குப் பலம் 3....

5. பிற செய்திகள்

பலதெய்வங்களுக்குரிய யந்திரங்களும் மந்திரங்களும் உள்ளன.

3319. வராகிமாலைத் திரட்டு

1. நூலகக் குறிப்பு

அ. 2366

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. வராகிமாலைத் திரட்டு

இ. மாந்திரீகம்

ஈ. செய்யுளும் உரைநடையும்;
அச்சில் ஏறத்தாழ 40 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 35 ஏடு; 70 பக்கம்

ஆ. நீளம் 11 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை
எழுதப்பெறாத ஏடுகள் சில உள்ளன

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

இருகுழைக் கோமளந் தாள்பற்ப
ராகம் இரண்டுகண்ணும்
குருமணி நீலம்கை கோமே
தகம்நகம் கூர்வயிரம்
திருநகை முத்து கனிவாய்
பவளம் சிறந்தவல்லி
மரகத நாமம் திருமேனி
யும்பச்சை மாணிக்கமே.

ஆ. முடிவு

மாரண வராகி சக்கரங்களுக்கு ஏகாட்சரம்.
ஓம் வராகி சம் வராகி அனுவராகி யஹுப்பிரமாண

மாகி யடங்கி ஒடுங்கிப் போகச் சிவா. ஆவரும்ஊம் மாரய மாரய.

5. பிற செய்திகள்

வராகிமாலையின் சில பாடல்கள் மட்டுமே தொகுக்கப் பெற்றுள்ளன. ஒவ்வொரு மந்திரத்திற்கும் சக்கரம் வரையப்பட்டு உள்ளது.

3320. சகதேவர் நூல்

1. நூலகக் குறிப்பு

அ. 2367

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. சகதேவர்

ஆ. சகதேவர் நூல்

இ. சோதிடம்

ஈ. செய்யுளும் உரையும்;
அச்சில் ஏறத்தாழ 70 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 69 ஏடு; 138 பக்கம்

ஆ. நீளம் 7.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 5-8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

செந்தமிழ் நூலோர் முன்னே
தெரியவே செப்ப வேண்டிச்
சந்தன மரத்தி னாலே
தாழ்வறக் கயறு சேர்த்து

முந்திய லெக்கம் நூறு
பத்துடன் ஒன்றும் இரண்டும்
சிந்தையில்த் தெளிந்த தெல்லாம்
தெளிவுறச் செப்பு வாறே.

ஆ. முடிவு

இந்நிமித்தம் நன்று. அவ்வையார் அருளினாலே வியாபாரம் பண்ண நன்றாம். செடி, வெள்ளாமை பலிக்கும். நோவு பொறுக்கும். மாடு கொள்ளவும் நன்று. உத்தமம்.

5. பிற செய்திகள்

இந்நூல் சந்தனக் குறடு, சந்தனக் கயிறு எனவும் வழங்கும். ஆரூட நூல்களும் இதன் தொடர்புடையனவே.

3321. மருந்து செய்முறை

1. நூலகக் குறிப்பு

அ. 2368

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. மருந்து செய்முறை
இ. மருத்துவம்
ஈ. உரைநடை
அச்சில் ஏறத்தாழ 10 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 10 ஏடு; 20 பக்கம்
ஆ. நீளம் 18.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரிகள்
உ. சுமாரான கையெழுத்து
ஊ. 21,23,24 ஆகிய ஏடுகள் இல்லை. உள்ளவை நல்லநிலை. ஏட்டெண் 20ல் நூல் தொடங்குகிறது
எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

துரிசு, சங்குப்பொடி, தலையோடு, பூலாவேர், ஓரிலைத் தாமரைவேர் இவைகள் வகைக்கு விராகனிடை 2 ... எலுமிச்சம் பழச்சாற்றில் மூன்று நாளரைத்து வில்லை தட்டிக் காய வைத்து ஓட்டிலே வைத்துச் சீலை செய்து முன்போல் புடமிட்டு அதை யிருகூறு செய்து ஒரு கூறுக்கு நாலிலொன்று பீதரோகணியும் ஒரு பணவிடை பச்சை கற்பூரமுங் கூட்டிப் பொடித்து எள் பிரமாணம்....

ஆ. முடிவு

சவ்வீரம், புளியிலைச் சாறு விட்டரைத்து அந்த இலையைத் தானே காவசமும் கட்டிச் சட்டியில் வைத்து மேல் சட்டி கொண்டு மூடிச் சீலைமண் செய்து இரண்டு சாமம் தீ எரிக்கவும். பஸ்பம் ஆகும். சகல வாயு (நோய்களுக்கும்) கருப்புக் கட்டியில் பொதிந்து கொடுக்கவும்.

3322. ஆரூட நூல்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2369-1

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. ஆரூட நூல்

இ. சோதிடம்

ஈ. செய்யுளும் உரைநடையும்;
அச்சில் ஏறத்தாழ 15 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

அ. 12 ஏடு; 24 பக்கம்

ஆ. நீளம் 17.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6,7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. 1,5,13-15 ஆகிய ஏடுகள் இல்லை;
உள்ளவை நல்லநிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அந்தத் தெய்வத்துக்குச் செய்ய நன்று.
நினைத்த காரியங் கைகூடும்.
கனவில் நல்ல வசனங் காணும்.
அந்தத் தெய்வத்துக்கு ஏதாகிலும் ஒருபொருள் மறந்ததுண்டு.
அந்தத் தெய்வத்துக்குப் பிரார்த்தனை நினைத்தபடி
செய்யச் சகல காரியமும் நன்று.
மழையுண்டு.
கலியாணங் கைகூடும்.
....

ஆ. முடிவு

ஒன்றினில் தனங்கள் பேராம்
உருபிணிக் கேடு இரண்டாம்
மூன்றினில் நன்மை யாகும்
நாலிலே நன்மை யில்லை
அஞ்சிலே அனுமார் தானும்
வாலிகொண் டடிக்க வாரார்
ஆறிலே அசாத்தி யம்மாம்
ஏழிலே பெருத்த வில்லி
எட்டினில் தொடுவா னாகில்
திட்டமாய்ச் சாவான் தானே
ஒன்பதில் தொடுவா னாகில்
உள்ளிபோ டுலகம் ஆள்வான்.

இந்தச் சக்கரம் 9க்குச் சரி.

3323. நட்சத்திர ஆரூடம்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2369-2

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. நட்சத்திர ஆரூடம்

இ. சோதிடம்

ஈ. செய்யுளும் உரைநடையும்;
அச்சில் ஏறத்தாழ 5 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

அ. 7 ஏடு; 14 பக்கம்

ஆ. நீளம் 17.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 4,5 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை
ஏட்டெண் 17ல் நூல் தொடங்குகிறது

எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

அன்றவன் சொன்ன நாள்தொட்டு
ஆதிரை வரையில் எண்ணி
நின்றதோர் நாலில் பெருக்கி
யிசைந்ததோர் ஏழுக் கீய
சென்றவன் பிறந்தான் வந்தான்
சிறைப்பட்டான் விடுத லானான்
மன்றினில்ப் பாதம் வைத்தான்
வழிப்பட்டான் வருவான் தானே.

ஆ. முடிவு

காண்க:- தொடர் எண்.2338.

5. பிற செய்திகள்

இறுதியில் பஞ்சபட்சி பற்றிய குறிப்பும் உள்ளது.

3324. வராகி மாலை

1. நூலகக் குறிப்பு

அ. 2369-3

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. வராகி மாலை

இ. மாந்திரீகம்

ஈ. செய்யுள் 27

3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு; 10 பக்கம்

ஆ. நீளம் 17.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6-8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காண்க:- தொடர் எண்.2366.

ஆ. முடிவு

சிந்தை தெளிந்துணை வாழ்த்திப்
பணிந்து தினந்துதித்தே
அந்தி பகலுன்னை யர்ச்சித்த
பேரை யசங்கிதமாய்
நிந்தனை பண்ணி மதியாத
லுத்தர் நிணமருந்திப்
புந்தி மகிழ்ந்து வருவாய்
வளர்கின்ற பொற்கொடியே. (27)

3325. வைத்திய நிகண்டு

1. நூலகக் குறிப்பு

அ. 2370.

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. வைத்திய நிகண்டு

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 51

3. தோற்றக் கூறுகள்

அ. 20 ஏடு; 40 பக்கம்

ஆ. நீளம் 17.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தருமலி பொதிகை வெற்பின்
செய்யமா தவனைப் போற்றி
இருநில மிசையே முன்னூல்
இயம்பிய மொழியிற் றேர்ந்து
பெரியநற் கார சாரப்
பேரினைத் தமிழால் சொல்லக்
கரிமுக னுபய செம்பொற்
கழலிணை காப்ப தாமே. (1)

ஆ. முடிவு

இப்படி உதர நோய்கள்
என்பது நூற்றெட் டாகச்

செப்பிய அதனிற் றானே
 தீருநோய் எழுப தென்க;
முப்பத்தெட் டென்னும் பேர்நோய்
 முற்றுமே அசாத்திய ரோகந்
துப்புறழ் கனிவாய் நல்ல
 ....

(51)

3326. தாது நடனம்

1. நூலகக் குறிப்பு

அ. *2371*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. தாது நடனம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 152

3. தோற்றக் கூறுகள்

அ. 24 ஏடு; 48 பக்கம்
ஆ. நீளம் 27 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. 5ம் ஏடு இல்லை
 உள்ளவை நல்லநிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காண்க:- தொடர் எண்.2342.

ஆ. முடிவு

காண்க:- தொடர் எண்.2346.

3327. தாது நடனம்

1. நூலகக் குறிப்பு

அ. 2372-1

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. தாது நடனம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 23

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு; 8 பக்கம்

ஆ. நீளம் 29 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்; ஆ. முடிவு

காண்க:- தொடர் எண்.2342.

3328. கருவிஷ சாத்திரம்

1. நூலகக் குறிப்பு

அ. 2372-2

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. கருவிஷ சாத்திரம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 14

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 6 பக்கம்

ஆ. நீளம் 29 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.
இ. இரண்டு ஏடுகளில் ஒவ்வொரு பக்கமும், ஓர் ஏட்டில் இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து
ஊ. நல்லநிலை
எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

காண்க:- தொடர் எண்.2381-2.

ஆ. முடிவு

வரண்டுடல் மேகக் காலில்
  வன்னியும் கூடச் சேரில்
கரண்டுநல் மேனி எல்லாம்
  காந்தலும் நீரும் வாய்வு
மருண்டிடும் விஷநீர் பொங்கி
  மற்றநீர் சுரந்த பித்தம்
குருண்டிடும் ரத்த சூலை
  கொட்டிய வாத மாமே.

(14)

3329. அகத்தியர் நீலகண்ட வாலை

1. **நூலகக் குறிப்பு**

அ. 2373

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. அகத்தியர்
ஆ. அகத்தீசர் நீலகண்ட வாலை
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 18

3. **தோற்றக் கூறுகள்**

அ. 8 ஏடு; 16 பக்கம்

ஆ. நீளம் 28 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காண்க:- தொடர் எண்.2328-1.

ஆ. முடிவு

மதனன்போ லாகவென்றால் சமாதியிலே யிருந்து
வளமான யிரதபறப்பம் பணவிடைகால்
கொள்ளே
அதனம்போல் புளிப்புடனே சுசப்பெல்லாம் நீக்கி
ஆவின்பால் உடன்குறுவை அரிசிச்சோ றுண்டு
நிதம்பெறவே வெளுத்தநரை திரையதுவும் மாறி
நீநிலமேல் நூறுகற்ப காலம் இருப்பாய்
சுதனன்போல் இருநூறு யானைவலு உண்டாம்
சோதிதிரு வாணைநந்தி சொன்னபடி செய்யே.
(18)

இ. பிற்குறிப்பு

வீரவாகு சுப்பிரமணியன் கையேடு. பகறத்தின் மயிலேறும் பெருமாள் வைத்தியன் முத்துக்குமார வைத்தியன். (கொல்லம்) 1076ஆம் வருடம் ஆடி மாதம் 13ந் தேதி.

5. பிற செய்திகள்

இந்நூலின் முதற் பாடலும் 'சூதமுனி வைத்தியம் 50' (சு.எண்.2328-1) என்னும் நூலின் முதற் பாடலும் ஒன்றாக உள்ளது.

3330. நோய்க்கு மருந்து

1. நூலகக் குறிப்பு

அ. 2374-1

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. நோய்க்கு மருந்து

இ. மருத்துவம்

ஈ. உரைநடை

அச்சில் ஏறத்தாழ 20 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 18 ஏடு; 36 பக்கம்

ஆ. நீளம் 23.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 5,6 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நீரிழிவுக்குக் குளிகை:- இரசம் பலம் 1, காரீயம் பலம் 1, தொந்திச்சு, காந்தம், சாதிக்காய், கெந்தகம், கர்க்கடசிங்கி, வேலம்பிசின், ஆவரை, ... அம்மான் பச்சரிசி, தேற்றான் விதை, வெள்ளைக்குண்டுமணி, நீர் பூலாவேர், புளியங்கொட்டைத்தோடு, கொத்தமல்லி இது சமன் கூட்டிக் கீழ்வாய் நெல்லிச் சாறு விட்டு இரண்டு நாழிகை அரைக்கவும். பசுவின் தயிரில் வடிகட்டி அந்நீரில் ஒருநாள் அரைத்துத் தேற்றான் கொட்டைப் பிரமாணம் உருட்டிக் கொள்ளவும். .... பசுவின் பால், நெல்லி, தேன், சர்க்கரையில் சாப்பிடவும். வெள்ளைக் கல்லுப் பொடியும் வெள்ளாட்டுப் பாலில் கொடுக்கவும். வாதமேகம் தீரும்.

ஆ. முடிவு

பிள்ளைபெற்ற உடம்பில் சுரோணிதக்கட்டு கிராணிக் கழிச்சலுக்குப் புடிகாய் குழம்பு:- *குடமஞ்சள் பலம் 2, சுக்கு பலம் ¼, சீரகம் பலம் ¼, நல்லமிளகு பலம் 1, குரோசணி பலம் 2, திப்பிலி பலம் 2, கருஞ்சீரகம் பலம் 2, காயம் பலம் 2, அக்கறா பலம் 2 இத்தனையும் வெவ்வேறே சிவக்க வறுத்து இடிச்சு வடிகட்டிக் கொள்ளவும். வெள்ளை உள்ளி அரிசி பலம் 4, சிவந்த உள்ளி அரிசி பலம் 4, இது ரெண்டும் உரி நல்லெண்ணெயில் போட்டுக் கருக வறுத்து இறக்கி நல்லதின் மண்ணம் அரைச்சுக் கொள்ளவும். கற்பூரவல்லியிலை பலம் 10 வறுத்து வெந்தவுடனே முக்கால்படி சாறு பிழிஞ்சு அதில் ஆறு பலம் பழங்கருப்புக்கட்டி பொடிச்சயிட்டு அரைப்படி சாராயமிட்டு கொதிப்பிச்சு மறுசட்டியில் வடிகட்டிப் பாகு பதமாக்கி, இறக்கி வச்சுக்கொண்டு முன் பொடியும் அரைச்ச மருந்தும் அதிலுள்ள எண்ணெயும் ஒன்றிச்சுப் பிசைந்து பாலில் பொடியிட்டுக் கிண்டி, குழம்பாக்கி, புன்னைக் காயளவு சேவிச்சு வரவும்.*

தீரும் வியாதி:- *பிள்ளை பெற்ற உடம்பில் சுரோணிதக் கட்டும், கிராணிக் கழிச்சலும், அன்னத்ததிசாரமும், அரோசியமுந் தீரும்.*

3331. பிள்ளைப்பிணி சாத்திரம்

1. **நூலகக் குறிப்பு**

   அ. 2374-2

2. **உள்ளீடு : நூல் விவரம்**

   அ. ....

   ஆ. *பிள்ளைப்பிணி சாத்திரம்*

   இ. *மருத்துவம்*

   ஈ. *செய்யுள் 10*

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்
ஆ. நீளம் 23.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. சுமாரான நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காண்க:- தொடர் எண்.2270-9.

ஆ. முடிவு

அலைவுறும் ஒன்பான் திங்கள்
அத்தியென் புள்ளும் சேரும்
முலையுணாது உச்சி தாழும்
நித்தமும் பிழைக்கும் கண்டாய்
சிலைநுதல் விழையும் நாளை
சேர்திரி பணங்கள் தன்னை
தகமையாய் மகவைச் சுற்றி
தருமாதின் கிழவைத் தீரும்.

(10)

இ. பிற்குறிப்பு

(கொல்லம்) 1079ஆம் வருடம் கார்த்திகை மாதம் 3ந் தேதி பாக்கியதேவர் தலவிலைக்குக் கொடுக்கவும். விலை வைச்சுக் கொடுத்தபடி 14 வராகன்.

3332. கிரிகை நிதானம்

1. நூலகக் குறிப்பு

அ. 2375

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. கிரிகை நிதானம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 40

3. **தோற்றக் கூறுகள்**

அ. 6 ஏடு; 12 பக்கம்

ஆ. நீளம் 33.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. ஓரங்கள் முறிந்த நிலை

எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

கவனமொன் றில்லா யேகன்
  கடவுளி னருளி னாலே
நவமென அகத்தி யர்க்கு
  நவின்றிடும் ரகசி யத்தை
அவமிகு மீன வஞ்சர்
  அறிவிலா ரறிய வென்னக்
குயில்மொழி மின்னே வெம்பேய்க்
  குணங்களைக் கூறி னாரே.

(1)

ஆ. முடிவு

ஆடுமுறை நால்வழியி லாகுமுறங் காது
நீடரிய இக்குணங்கள் நின்றிடில்முன் சொன்ன
சூடுள்ள கலிக்கனுந் துராலையுள மருந்தும்
ஊடல்புரிந் தால்அலகை ஓடிவிட லாமே.

(40)

3333. நோய்க்கு மருந்து

1. **நூலகக் குறிப்பு**

அ. 2376

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. நோய்க்கு மருந்து

இ. மருத்துவம்

ஈ. செய்யுளும் உரைநடையும்;
அச்சில் ஏறத்தாழ 20 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 14 ஏடு; 28 பக்கம்

ஆ. நீளம் 24 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 4,5 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. 1-7, 9-11, 13, 14, 18-30, 32-35, 40-53, 57-60 ஆகிய ஏடுகள் இல்லை. உள்ளவை நல்லநிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

இருக்கும் படுக்கு மெழுந்திருக்கும்
　இளைத்தே சுவாச மிகவுண்டாம்
விரிசாண் ஒத்த விழிகள்ரெண்டும்
　மலர விழித்து வெளிபார்க்கும்
தொடுத்த சிலேற்பன் முன்னடக்கும்
　தொண்டை தனக்குப் பின்னடக்கும்
அடுத்துக் குதித்து வந்துதென்றால்
　அறிவாய் மரண மாய்விடுமே.

ஆ. முடிவு

தண்ணீர் பகைத்தால் வெல்லப் பானகங் குடிக்கவும். புளித்தேப்பமிட்டால்ச் சுண்டைக்காய்ச் சுட்டரைத்து இளவெந்நீரில் குடிக்கவும். எலுமிச்சம் பழச்சாறு குடிக்கவும். கற்பூரமும் வெண்ணெயுங் குடித்தால், சாரணைவேர்த் துவைத்துக் கொடுக்கவும்.

3334. மாந்திரீகம்

1. நூலகக் குறிப்பு

அ. 2377

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. மாந்திரீகம் - வசியம்

இ. மாந்திரீகம்

ஈ. உரைநடை

அச்சில் ஏறத்தாழ 3 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 6 பக்கம்

ஆ. நீளம் 31 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நரம்பு பிரிக்கப்படாத ஏடு

நல்லநிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீதேவிசெங்கழுநீரை, "ஓம் லெக்ஷிமி தேவி குருகுரு மூலி" என்று இந்த மந்திரஞ் சொல்லி ஆணிவேர் அறாமல் பிடுங்கித் தாமரை நூலும் வேருந் திரியாகத் திரித்துக் கமலைப் பசுவின் நெய்யில் மை பற்ற வச்சுத் திலதமிட ராச வசியம்.

ஆ. முடிவு

கிராம்பை வெள்ளிய சீலையில் ஊட்டி நல்லெண்ணெய் விட்டு விளக்கேற்றி மை பற்றித் திலதமிட மந்திரம் "கில்லே பெந்திகிவால் பெந்தி" என்று ....

3335. அட்டகர்மம்

1. நூலகக் குறிப்பு

அ. 2378

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. அட்டகர்மம்
இ. மாந்திரீகம்
ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 9 ஏடு; 18 பக்கம்
ஆ. நீளம் 27 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்; ஆ. முடிவு
காண்க:- தொடர் எண்.2360-3.

3336. வைத்தியத் தருக்க நூல்

1. நூலகக் குறிப்பு

அ. 2379

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. வைத்தியத் தருக்க நூல்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 37

3. தோற்றக் கூறுகள்

அ. 16 ஏடு; 32 பக்கம்

ஆ. நீளம் 14.5 செ.மீ., அகலம் 2 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6,7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்; ஆ. முடிவு

காண்க:- தொடர் எண்.2319-8.

3337. பல்லி சாத்திரம்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2380-1

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....
ஆ. பல்லி சாத்திரம்
இ. சோதிடம்
ஈ. உரைநடை
அச்சில் ஏறத்தாழ 5 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

அ. 7 ஏடு; 14 பக்கம்
ஆ. நீளம் 11.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 5,6 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

ஞாயிற்றுக் கிழமைக்குப் பல்லி சூத்திர குலம்:- அதன் நிறங் கருப்பாய் இருக்கும்; வடகிழக்கு முகமாயிருந்து

சொல்லும்; கிழக்கு ராச விரோதம்; தென்கிழக்கு நோயுண்டு.

ஆ. முடிவு

சனிக்குப் பல்லி பறைக்குலம்:- நிறங்கருப்பு, அக்கினி முகமாயிருந்து சொல்லும்; கிழக்கு ஓலை வரத்து; நல்ல விசேஷம்; தென்கிழக்கு அதிக சுகம்; தெற்கு அர்த்த லாபம்; தென்மேற்கு தூரத்து நல்விசேஷம்; மேற்கு ஸ்த்ரீ போகம்; வடமேற்கு வேட்டை யாடப் பயணம்; வெள்ளாண்மை பார்க்கப் போக வேணும்; வடக்குச் சுகம்; வடகிழக்குச் சாவு.

விசேஷம் பல்லி மாரணம் முற்றிற்று. முற்றும்.

3338. மருந்து செய்முறை

1. **நூலகக் குறிப்பு**

   அ. 2380-2

2. **உள்ளீடு : நூல் விவரம்**

   அ. ....

   ஆ. மருந்து செய்முறை

   இ. மருத்துவம்

   ஈ. உரைநடை

   அச்சில் ஏறத்தாழ 15 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

   அ. 14 ஏடு; 28 பக்கம்

   ஆ. நீளம் 11.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.

   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

   ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரிகள்

   உ. தெளிவான கையெழுத்து

   ஊ. பல ஏடுகளில் குறைச் செய்திகளே உள்ளன; நல்லநிலை

   எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

நல்லெண்ணெய் படி ¼; ஈருள்ளிச் சார் படி ¼; நண்டுச் சார் படி ¼; மிளகு, சீரகம், சுக்கு பலம் 1....

ஆ. முடிவு

பித்த அசாத்தியத்துக்கு:- இஞ்சி பலம் 3, மல்லி பலம் 3, மிளகு பலம் 1, சுக்கு பலம் 1, பர்ப்படாகம் பலம் 3, கோரங்கிழங்கு பலம் 3, வில்லைவேர் பலம் 3, சர்க்கரை, குருந்தட்டி வேர் பலம் 3, வேப்பிலைக் குச்சி பலம் 6.....

3339. பித்தத்தின் குணம்

1. **நூலகக் குறிப்பு**

அ. *2381-1*

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. *பித்தம் 40க்கும் குணம்*

இ. *மருத்துவம்*

ஈ. *செய்யுள் 36*

3. **தோற்றக் கூறுகள்**

அ. *3 ஏடு; 6 பக்கம்*

ஆ. *நீளம் 21 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.*

இ. *இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது*

ஈ. *ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்*

உ. *தெளிவான கையெழுத்து*

ஊ. *சிதைந்த நிலை*

பல ஏடுகள் இல்லை

ஏட்டெண் இல்லை

எ. *குறை*

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

நல்லிளமை தனில்நரைத்தல் நாளும் வேர்த்தல்
நயனங்கள் கடைசிவத்தல் உடல்வெ ளுத்தல்
சொல்லுமுன் னேதோன்றல் மனம்சிக் கென்றல்
துடியிடையார் மேலின்பந் தோன்றல் கண்டால்
நெல்லையனு தினம்நெருடல் நீரை வேண்டல்
நெடுவழிபோய் சிக்கிநிற்கும் நேரந் தோறும்
பல்லதனைக் கடிக்குமிந்தக் குணமே கண்டால்
பயித்தியத்தி னுடலிதென்னப் பகர லாமே.

(1)

ஆ. முடிவு

சாருந் தலையுங் கிறுகிறுக்கும்
தளரு முடம்பு வாயுவினால்
பாரு முதிரஞ் சரத்தில்வரும்
பகரும் வார்த்தை மருளதுபோல்
காரு மிளைப்புக் கால்கடுக்கும்
கனக்கு முடம்பும் வெளுத்துவரும்
ஆருஞ் சொல்வார் ரெத்தபித்தம்
அறிந்து பேணி மருந்துசெய்யே.

(36)

3340. நோய்க்கு மருந்து

1. **நூலகக் குறிப்பு**

அ. 2381-2

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....
ஆ. நோய்க்கு மருந்து
இ. மருத்துவம்
ஈ. செய்யுளும் உரைநடையும்
அச்சில் ஏறத்தாழ 15 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

அ. *12 ஏடு; 24 பக்கம்*

ஆ. *நீளம் 21 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.*

இ. *இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது*

ஈ. *ஒரு பக்கத்திற்கு 8,9 வரிகள்*

உ. *தெளிவான கையெழுத்து*

ஊ. *மிகச்சிதைந்த நிலை*
ஏட்டெண் இல்லை

எ. *குறை*

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

கிராணிக்கும் கடுப்புக்கும் பொடி:- மாதுளந்தோடு, புளிங்குருத்தோடு, மாம்பருப்பு, மேதினி வெயிலை, கருகப்பிலையிலை, வில்லையிலை, சாதி, கிராம்பு, உலுவாய், நல்லோமமுஞ் சாதிப் பத்திரி, சீதளை, சுண்டைக்காய், மாயக்காய், நெல்லி, சோமுத்தமே சேர வகைக்குச் சமன் கூட்டிச் சிவக்க வறுத்து யிடித்து வடிகட்டித் தேனில் அருந்திடுகில் தீரும் கடுப்பு, அதிசாரம், வெப்புக்கிராணியறும். பாரில் சிறுமுனி பண்டிதர்க்காக பகர்ந்தனனே.

ஆ. முடிவு

கொட்ட மதுரஞ் சிறுதேக்கு திரிப்பிலி கொத்தமல்லி
திட்டம தாக அரத்தை கைச்சொல் நற்சீரகம்
இட்டம தான கடுரோ கணியில் ....

(77)

3341. அருணாசலர் வருகைப் பத்து

1. **நூலகக் குறிப்பு**

அ. *2382*

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. அருணாசலர் வருகைப் பத்து
இ. பிற தோத்திரமகள்
ஈ. செய்யுள் 10

3. **தோற்றக் கூறுகள்**
அ. 5 ஏடு; 10 பக்கம்
ஆ. நீளம் 14 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
பிழைகள் மிகுதி
ஊ. நல்லநிலை
எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**
அ. தொடக்கம்
காண்க:- தொடர் எண்.2308-12.

ஆ. முடிவு

அடிமூல வட்ட மதிலாறு திட்டம்
அரிதான வெள்ளை விடைமேல்
வடிவான சோதி சிவரூப மாக
வடிவங் கலந்த முடிவே
அடியார்க ளுள்ளந் தெளிவாய்வி ளங்கு
மரனேஉன் னாம மறவேன்
வடிவான சோதி யருணா சலீசர்
வரவேணு மென்க ணருகே.

(10)

அருணாசலப் பத்து முற்றும்.

3342. நோய்க்கு மருந்து

1. **நூலகக் குறிப்பு**
அ. 2383

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. நோய்க்கு மருந்து

இ. மருத்துவம்

ஈ. உரைநடை

அச்சில் ஏறத்தாழ 100 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 96 ஏடு; 192 பக்கம்

ஆ. நீளம் 17.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வாய்வுக்கும் தாது பலத்துக்கும் மருந்து:- கறுப்பு பணவிடை 1, கஞ்சா பணவிடை 5, சாதிலிங்கம், மனோசிலை, அதிமதுரம் அரிவக ஆறு, சாதிக்காய், பத்திரி வகைக்குப் பலம் 2 இதுவெல்லாம் பொடிச்சுக் கொண்டு ஒரு தேங்காய் கண் திறந்து வெள்ளம் விட்டுப் போட்டு, மருந்தை அகத்திட்டு, முருங்கை வடக்கே போன வேரை வெட்டி, அதில் தேங்காய் மருந்தும் வச்சு கொசுவின் மெழுகு கொண்டு அடைச்சு, அறுபது நாழிகை கழிச்சு எடுத்து, புத்துமண் கொண்டு தேங்காயைப் பொதிஞ்சு, காஞ்சி எடுத்துக் கொண்டு, தீயிட்டு, தேங்காய் வெந்ததும் மருந்தையெடுத்துச் சேவிக்கவும். சுபம்.

ஆ. முடிவு

சுரம் கபத்துக்குத் தாளக சுண்ணம்:- கல்லுச் சுண்ணாம்புக்கல்லைக் கவசத்தில் இட்டு, நடுவில்

தாளகம் வச்சு மேலும் கல்லையிட்டு, குதிரை மூத்திரம் விட்டு நீத்தவும். இந்தப்படி ஏழு தரம் நீத்தியெடுத்துப் பின்பு சுருள்ளிச் சாறு ஊறவிட்டுச் சுருக்குக் கொடுக்கவும். பின்பு க...ஞ்சாறு கொடுக்கவும். பின்பு கரந்தைச் சாறு சுருக்குக் கொடுக்கவும். பின்பு பூநீறு, சவ்வீரம், மாசம், சூடன், முட்டைத்தோடு, சரியாய்க் கூட்டி, எருக்கம் பால் விட்டு அரைச்சு, தாளகத்துக்குக் கவசம் கட்டி, மேலேர சுண்ணாம்புச் சீலை செய்து, புரசம்பட்டை ..... பல்சட்டியில் விட்டு நடுவில் தாளகம் வச்சு மேலும் சாம்பல் இட்டு மேல்சட்டி மூடி, சீலைமண் செய்து, கமலாக்கினியாக நாலு சாமம் கொதும்பு கொண்டு எரித்து நல்லது போலே ஆறவிட்டு எடுத்தால் பற்பமாம்.

பணவிடை இஞ்சி நீரில் கொடுக்கச் சுரம் தீரும்; தேனில் கொடுக்கக் கற்பம் தீரும்; வாதம், சூலை வாய்வு இவைக்குக் கருப்புக் கட்டியில் கொடுக்கவும்.

3343. மருந்து செய்முறை

1. நூலகக் குறிப்பு

அ. 2384-1

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. மருந்து செய்முறை

இ. மருத்துவம்

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 5 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 7 ஏடு; 14 பக்கம்

ஆ. நீளம் 15.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 5,6 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

தாளக பற்பம்:- தாளகத்தைச் சுண்ணாம்பில் சுத்தி செய்து குப்பைமேனியில் அரைத்து அந்த எடை கல் சுண்ணாம்பு சேர்த்துக் குகை பிடித்து, குகைக்குள் தாளகத்தை வைத்துச் சீலைமண் வலுவாகச் செய்து, கோழிபுடத்தில் போடவும்.

ஆ. முடிவு

கவுரி பலம் 1, முலைப்பாலில் நான்கு சாமம் ஊறப் போடு. தாளகம் பலம் 1 முலைப்பாலில் நான்கு சாமம் அரைக்கவும். உளுந்துப் பிரமாணம் உருட்டி ஒரு உருண்டை சுரத்துக்குக் கொடுக்கத் தீரும்.

-வேறு-

பேதி குளிகை, சுத்தி செய்த நேர்வாளம், அமரநாகன் வேரையும் காசுக்கட்டி இது மூன்றும் அரைத்துக் கொடுக்கவும்.

3344. மருத்துவ நூல்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2384-2

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்

இ. மருத்துவம்

ஈ. செய்யுளும் உரைநடையும்;
அச்சில் ஏறத்தாழ 4 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

அ. 4 ஏடு; 8 பக்கம்

ஆ. நீளம் 18.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 5,6 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதி முனியுரைத்த ஆயுள்வே தப்படிக்கு
நீதி வயித்தியரே நீர்கேளும் - சாதிரெண்டு
மாணிடர்க்குச் செய்ய மருந்து பலவாகும்
தாணிடர்வா ராமல்தற்காக் க.

ஆ. முடிவு

போமே பிணியகற்றும்; அழகுண் டாகும்;
புத்தியுண் டாம்;தாது விருத்தி உண்டாம்;
ஆமேதான் விந்தூறும்; அநேகம் பெண்கள்
அறுபது பேர்களுடன் மருவ லாமே;
மயக்கிடும் அதிசாரம் அன்னத் துவேசம்
வாய்வு,குடல் வாதம்,குன்மம், அக்கினி கிராணி
பயங்கொள்ளும் பித்தகாசம் இந்தப் பிணிகள்
பறக்கும் நிசம்குகனைப் பணிவா யா(னால்).

3345. அகத்தியர் 16

1. நூலகக் குறிப்பு

அ. 2385-1

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் 16
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 16

3. **தோற்றக் கூறுகள்**

அ. 4 ஏடு; 8 பக்கம்

ஆ. நீளம் 18.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8,11 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. சிதைந்த நிலை

எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

ஆதிமறை சாத்திரங்கள் பிறந்த வாறும்
அடி.... ..... பொருள்மூன் றாகி
வேதியனும் மால்சிவனும் நிறைந்த வாறும்
வேதமுட னாகமங்க ளெழுந்த வாறும்
சாதிபல தொழில்முறைக ளான வாறுந்
தன்னுள்ளே அஷ்டாங்கஞ் செய்யும் வாறும்
ஓதியநூல் அவரவர்கள் செய்த வாறும்
ஓம்ராச கணபதியே காப்ப தாமே.

(1)

ஆ. முடிவு

காணப்பா காவியத்துக் காதி யிந்தக்
கருப்பொருளைப் பதினாறில் கருதிச் சொன்னேன்;
வீணப்பா யென்றுசொல்லி யிந்த நூலை
வெளியில்விட் டாலுங்களுக்கு என்மே லாணை
ஆணப்பா முக்காலு மாணை யாணை
அறிந்துணர்ந்த ஞானிகளை அழைத்துச் சேரு
பாணப்பா வுண்டிருந்த பதத்தைப் போற்றிப்
பதினாறுஞ் சூட்சுமமாம் பொருள்தா னொன்றே.

(16)

3346. ரோமரிஷி வாக்கியம் 16

1. **நூலகக் குறிப்பு**

அ. 2385-2

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ரோமரிஷி
ஆ. ரோமரிஷி வாக்கியம் 16
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 16

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு; 8 பக்கம்
ஆ. நீளம் 18.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தந்திமுகத் தோன்சதங்கைத் தாளே காப்பு
சகலபொரு ளாய்நிறைந்த தாயார் காப்பு
முந்தியுரைத் தேன்முதல்நூல் ஐம்ப துக்குள்
மூலமுதல் திரிகோணம் வாசி யாகுஞ்
சுந்தரம்போ லறிவுடைய மக்க ளுக்குத்
தொடுகுறியும் விடுநிலவுந் தோன்றுந் தோன்றும்
இந்தவுரை பதினாறுஞ் சொன்னேன் ரோம
ரிஷிநூலுக் கெதிரொன்று மில்லை தானே.

(1)

ஆ. முடிவு

ஆகாதோ வேலையிலே கண்டால் சிப்பி
ஆகாச விந்துவல்லோ முத்தாய்ப் போச்சு
சாகாத யின்னீரில் ஆணைக் கலனும்
சத்தியுவர் சூடனங்கே சற்றே யிட்டால்
வேகாத யினமினமு மாண்டுரு சேர்ந்தால்
வெங்கழஞ்சுக் கோர்பனிநீர் விதமாய்ச் சேரு

போகாது குருமுடித்த பாக மெல்லாங்
கூட்டறிந்து பார்த்தவர்க்குப் பொருள்தான் முற்றே. (16)

இ. பிற்குறிப்பு

ரோமரிஷி சுவாமியின் வாக்கியம் பதினாறும் எழுதினேன் அலையானந்த சுவாமியின் குழந்தை அய்யம்பெருமாள். பரமகுரு துணை.

3347. அருளானந்தக் கும்மி

1. நூலகக் குறிப்பு

அ. 2385-3

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. அருளானந்தக் கும்மி
இ. பிற தோத்திரங்கள்
ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 12 ஏடு; 24 பக்கம்
ஆ. நீளம் 18 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு ப்க்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீர்மேவு ஞானவ்டி வான - பர
தேசிகன் சற்குரு தன்னருளால்
பார்மீது ஞானக் கும்மிபாடச்
சிவபாலன் கணபதி காப்பாமே.

அம்பிகை வாணிபதம் போற்றி
அருளானந்தக் கும்மித் தமிழ்பாடத்
தும்பி முகனுக் கிளையோனாம்
சிவசுப்பிர மணியனுங் காப்பாமே.

ஆ. முடிவு

சோம்பலுந் தூக்கமு மாகாதே - அன்னச்
சொகுசும் மோகமும் கொள்ளாதே
சாம்ப சதாசிவன் நாட்டதிலே - நின்று
சார்ந்து கும்மி யடியுங்கடி.

சார்ந்து கொள்ளடி கேசரத்தே - முதலத்
தன்னை யறியலாம் தானாக
கூர்ந்து மூல கணபதி - பாதத்தே
கும்பிட்டுக் கொள்ளடி ஞானப்பெண்ணே.

3348. இரத்தினச் சுருக்கம் மூலமும் உரையும்

1. நூலகக் குறிப்பு

அ. *2385-4*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. இரத்தினச் சுருக்கம் மூலமும் உரையும்
இ. பலவகை நூல்கள்
ஈ. செய்யுளும் உரைநடையும்;
அச்சில் ஏறத்தாழ 30 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 19 ஏடு; 38 பக்கம்
ஆ. நீளம் 18 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. **தொடக்கம்**

ஆரணந் தொழுது போற்றும்
அரன்திரு வம்ப லத்துட்
சீரணி உமையாள் காணத்
திருநடஞ் செய்வோன் றந்த
வாரண முகவன் பின்னோன்
வள்ளிதன் மணாளன் பாதம்
ஏரணி மலரா லேத்திக்
கணக்கினை இயம்ப லுற்றேன்.

(1)

ஆ. **முடிவு**

என்பது, வட்டம் 32, விட்டம் 10 இதில் வட்டத்தில் பாதி 16ம் விட்டத்தில் பாதி 5ம் மாற 80. ' ஆதலால் 80 குழி யென்பது; முச்சதுரத்துக்கு 'ஒரு கை 10ம் ஒரு கை 12ம் பாதி 6ம் மாற 60. ஆதலால் 60 குழியென்பது; வில்லுக்கு நாண் 10 அம்பு 5 ஆக 15இல் பாதி 7½உம் அம்பு 5ம் மாற 37½ ஆதலால் குழி 37½ என்பது....

5. **பிற செய்திகள்**

இந்நூல் கணக்கியல் தொடர்பானது.

3349. அனுமார் மந்திரம்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2386

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....
ஆ. அனுமார் மந்திரம்
இ. மாந்திரீகம்
ஈ. உரைநடை
அச்சில் ஏறத்தாழ 1 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

அ. 2 ஏடு; 4 பக்கம்

ஆ. நீளம் 18.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 5,6 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஒன்றா யிருந்தது உலகம்; இரண்டாயிருந்தது சிவம்; மூன்றாயிருந்தது சிங்காசனம் நாலாயிருந்தது வெள்ளிக் கொடி; ஐந்தாயிருந்தது அனுமன்சிவம்; ஆறாயிருந்தது அரிவிஷ்ணு.

ஆ. முடிவு

ஏறின கடலைக் கடந்தாய்; இந்திரசித்தையும் இராவணேசுரனையும் செயித்தாற்போல் என் முன்னே வந்து என் மனக் கவலை மாற்ற வாராய்; ஒரு ஒரு; பேசு பேசு; ஆவேசு ஆவேசு; அரமறு அரமறு; இக்கெட்டு ஈயாக் கெட்டு; ஈம்மட்டு ஓம்பட்டு; நசியாமசி; ஸ்ரீராம ஜெயம்; அனுமன்! உனைத் தொழுதேன் அடியன் அடியே யன்றாரோ யடியயன் றாரே.

3350. மருத்துவ நூல்

1. நூலகக் குறிப்பு

அ. 2387

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 195

3. **தோற்றக் கூறுகள்**

அ. 44 ஏடு; 88 பக்கம்

ஆ. நீளம் 24 செ.மீ., அகலம் 4 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

பாட்டெண் 542ல் நூல் தொடங்குகிறது

எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

(பாரான) ராசரிஷி நீயே யாவாய்
பதிவான முச்சுடரின் மார்க்கத்தி னாலே
நேரான புருவநடு உச்சி ஓரம்
நிலையான புடதியிலே செந்தீ பத்தி
தூறான அக்கினி... கொண்டுசரம் ஏறித்
துவாதசாந் தத்தில்சிவ சோதி யாச்சு
பேரான சோதியடா அண்ட தீபம்
பேசாத தீபம்... என்பார் காணே.

(542)

ஆ. முடிவு

காணவே சாரமித் துருவைக் கேளு
களிம்பான செம்புடனே ராசா வர்த்தம்
பூணவே நிமிளையொடு கவுரி நாகம்
பொருந்திநின்ற லிங்கமொடு களியங் கல்நார்
பேணவே வீரம்வெடி யுப்பு காரம்
பெலமான கெந்திசிலை தாளகமித் துருவாம்
தோணவே சத்துருவால் சாரங் கட்டிச்
சுகமான மித்துருவால் குருவைப் பாரே.

(737)

3351. மச்சமுனி 800

1. **நூலகக் குறிப்பு**

   அ. 2388

2. **உள்ளீடு : நூல் விவரம்**

   அ. மச்சமுனி
   ஆ. மச்சமுனி 800
   இ. மருத்துவம்
   ஈ. செய்யுள் 798

3. **தோற்றக் கூறுகள்**

   அ. 171 ஏடு; 342 பக்கம்
   ஆ. நீளம் 32.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து
   ஊ. 1-2 ஏடுகள் இல்லை
   உள்ளவை சுமாரான நிலை
   எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

   அ. தொடக்கம்

   கொடுப்பதுதான் சிவன்வந்து கோலங் கொண்டு
   கொடுபத்தா வென்றாலுங் கொடுக்கொண் ணாது;
   விடுப்பதுதான் உயிரைவிட்டுக் கொடுக்க லாம்பார்
   விழலான உயிர்வாழ்க்கை யான தாலே;
   அடுப்பதுதான் வேதாந்தங் கற்க வென்றால்
   அரனாட்டும் யரியாட்டு மயனா ராட்டுந்
   தொடுப்பதுதான் சாகாம லிருக்கச் சொன்னால்
   தொண்டனென்று ஒருவித்தை சொல்ல லாமே.
   (9)

   ஆ. முடிவு

   வித்தகத்தோன் பதத்தாணை வெளிவி டாதே
   வேதாந்த மனோன்மணித்தாய் பாதத் தாணை

சித்தருக்கா மிந்தயெண்ணூற் பெருநூ லப்பா
சிவஞானந் தாங்குகின்ற பெரியோர்க் காகும்
மத்தொருத்தர் இந்நூலைப் பதனம் பண்ணி
வைத்தாலு மவர்க்குடுத்தி வாய்க்கும் வாய்க்கும்
பத்தருக்குப் பாடிவைத்த சதமெட் டான
பதிவாகும் பெருநூல்மெஞ் ஞான முற்றே.
(798)

மச்சமுனி பாடல் யெண்ணூறுமெழுதி முகிந்தது முற்றும்.

இ. பிற்குறிப்பு

பவ வருடம் ஐப்பசி மாதம் 19ந் தேதி சுக்கிர வாரமும் பூர்வ பட்சமுஞ் சதுர்த்தெசியும் மூல நட்செத்திரமுங் கூடின சுபயோக சுப தினத்தில் எழுதினது. குருசாமி முன்னிற்க. மச்சமுனியார் பாடல் யெண்ணூறும் நீடூழி காலம் வாழ்கத்தானே.

3352. சல்லியம் மூலமும் உரையும்

1. நூலகக் குறிப்பு

அ. 2389

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. சல்லியம் மூலமும் உரையும்
இ. மாந்திரீகம்
ஈ. செய்யுளும் உரைநடையும்
அச்சில் ஏறத்தாழ 30 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 56 ஏடு; 112 பக்கம்
ஆ. நீளம் 16 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6,7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து

ஊ. இறுதி பத்து ஏட்டின் இடது கீழ்ப்புறம் சிதைந்துள்ளது; உள்ளவை நல்லநிலை

எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

ஆதியா மாந்தி ரீகம்
   ஆய்ந்துரை முனிவர் தம்மில்
நீதிசேர் சல்லிய னென்போர்
   நிலத்தினில் செய்த நூலைத்
தீதறு தமிழி னாலே
   செப்பவே புழைக்கை யான்தன்
சோதிசேர் பரம பாதம்
   சூட்டினேன் சென்னி மீதே.

(1)

ஆ. முடிவு

41இன் உரை:- கோழி முட்டையில் சுடலை மையினால் காளி உருவெழுதிச் சத்துரு பேரெழுதி, கழுவின் விலாயெலும்பு, கழுவின் குதிநரம்பு எடுத்து...

3353. மாந்திரீகம்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2390

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. பெயர் தெரியாத ஒரு மாந்திரீக நூல்

இ. மாந்திரீகம்

ஈ. உரைநடை; அச்சில் ஏறத்தாழ 20 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

அ. 35 ஏடு; 70 பக்கம்

ஆ. நீளம் 19 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. சுமாரான நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தூமாபதி அனுஷ்டிப்பு மந்திரம்:-

மந்திரப் பிரயோகம்:- ஏதொரு காரியத்துக்குந் தான் நிர்வாணத்துடனே யிருந்து விதிப்படி நடத்துறது. சாத்தியனுடைய அட்டம ராசி நாள், 27ஆம் நாள் பிறந்த நாளிது கழியச் செய்யுந் தொழிலுக்கெல்லாம் பூசையும் பலியுங் கொடுத்து நடக்கவும். கடினப் பிரயோகத்துக்கு 28 மிளகு கள்ளிப் பாலில் நனையப் போட்டு வெள்ளெருக்கிலை நாராக கயத்தில்க் கோர்த்துச் சேவிக்கவும்.

ஆ. முடிவு

படியெலுமிச்சம் பழமும் சர்க்கரையும் கூட்டிச் சாந்த மந்திரத்தை யோதிக் கொடுக்க வாசியாமிந்தச் சூரணும் கூட்டுகிறபோது பத்திரகாளி கோவிலாவது ஒத்தைப்பனை யிடியிலாவது நிர்வாணமாயிருந்து கூட்டவும். இப்படியே அசுபதி முதல் ரேபதி வரைக்கும் பிரயோகஞ் செய்யும் போதும் முதல் அவுஷதம் பண்ணும் போதும் முதல் மந்திரஞ் சபிக்கிற போதும் நிர்வாணமாகச் செய்யவும் நன்று. தூமாதேவி சக்கர மந்திர கருவும் முதலாவது முற்றும்.

இரண்டாவது சக்கர மந்திரம் கருமூலமாக முன்பு சொன்னாப் போலே சொல்லுமென்றவாறு. அதுவறிய வேணும்.

இ. பிற்குறிப்பு

(கொல்லம்) **999**ஆம் வருடம் வைகாசி மாதம் **29**ஆம் தேதி முகிந்தது.

3354. திருமுருகாற்றுப்படை

1. நூலகக் குறிப்பு

அ. *2391*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. *நக்கிரர்*

ஆ. *திருமுருகாற்றுப்படை*

இ. பாட்டும் தொகையும்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. *10 ஏடு; 20 பக்கம்*

ஆ. *நீளம் 14.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.*

இ. *இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது*

ஈ. *ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்*

உ. *தெளிவான அழகிய கையெழுத்து*

ஊ. *நல்லநிலை*

எ. *குறை*

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஒருமுரு காவென்றெ னுள்ளம் குளிர உவந்துடனே
வருமுரு காவென்று வாய்வெரு வாநிற்பக் கையிங்ஙனே
தருமுரு காவென்று தான்புலம் பாநிற்பத் தையன்முன்னே
திருமுரு காற்றுப் படையுட னேவரும் சேவகனே.

ஆ. முடிவு

....

அறுவர் பயந்த வாறமர் செல்வ
வாழ்கெழு கடவுட் புதல்வ மால்வரை
மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ
விழையணி சிறப்பிற் பிழையோள் குழவி
வானோர் வணங்குவிற் றானைத் தலைவ

மாலை மார்ப நூலறி புலவ
செருவி லொருவ பொருவிறன் மள்ள
அந்தணர் வெறுக்கை யறிந்தோர் சொன்மலை.

3355. சோதிட நூல்

1. நூலகக் குறிப்பு

அ. *2392-1*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. பெயர் தெரியாத ஒரு சோதிட நூல்

இ. சோதிடம்

ஈ. செய்யுளும் உரைநடையும்;

அச்சில் ஏறத்தாழ 100 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. *72* ஏடு; *144* பக்கம்

ஆ. நீளம் *16.5* செ.மீ., அகலம் *3* செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு *6-8* வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆண்பெண் கிரகம் தெரியும்படி
ஆண்கிரகமாவது சூரியன், செவ்வாய், வியாழன், சனி ஆகக் கிரகம் 4; பெண்கிரகம் சந்திரன், சுக்கிரன் ஆகக் கிரகம் 2; அலிக்கிரகம் புதன்.

ஆ. முடிவு

மாலவன் வீட தாகில்
வளர்தனஞ் செல்வ முள்ளான்

பாலினை மதியன் வீட்டில்
பாக்கியம் அற்பம் பானு
கோலியல் வீட்டில் பாவ
குணமுளன் தந்தை பீடன்
வேலுயர் கண்ணாய் வெள்ளி
வீடெனில் விநய சீலன்.

3356. அட்டக வர்க்கப் பலன்

1. **நூலகக் குறிப்பு**
   அ. *2392-2*

2. **உள்ளீடு : நூல் விவரம்**
   அ. ....
   ஆ. *அட்டக வர்க்கப் பலன்*
   இ. *சோதிடம்*
   ஈ. *உரைநடை*
   அச்சில் ஏறத்தாழ 10 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**
   அ. *8 ஏடு; 16 பக்கம்*
   ஆ. *நீளம் 16.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.*
   இ. *இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது*
   ஈ. *ஒரு பக்கத்திற்கு 6-8 வரிகள்*
   உ. *தெளிவான கையெழுத்து*
   ஊ. *நல்லநிலை*
   எ. *குறை*

4. **சிறப்புச் செய்திகள்**
   அ. தொடக்கம்
   சூரியன் அட்டவர்க்கம்:- ஆதித்தனுக்கு 1,2,4,7,8,9, 10,11 ஆக 8; மதிக்கு 3,6,10,11 ஆக 4; செவ்வாய்க்கு 1,2,4,7,8,9,10,11 ஆக 8; புதன் 3,5,6,9,10,11,12 ஆக 7; குரு 5,6,9,11 ஆக 4; வெள்ளி 6,7,12 ஆக 3; சனி 1,2,4,7,8,9,10,11 ஆக 8; லக்கினத்துக்கு 3,4,6,10,11,12 ஆக 6. ஆக ரவி வர்க்கப் பரல் 48.

ஆ. முடிவு

இராசி குணகாரகம் கிரக குணகாரகம் பெருக்கின இருவகைத் தொகையும் ஒன்றாய்க் கூட்டியது சோத்திய பிண்டமென்று பேராமென்றறிவது.

3357. சாதக சந்திரிகை

1. நூலகக் குறிப்பு

அ. *2392-3*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. *சாதக சந்திரிகை*

இ. *சோதிடம்*

ஈ. *செய்யுள் 47*

3. தோற்றக் கூறுகள்

அ. *10 ஏடு; 20 பக்கம்*

ஆ. *நீளம் 16.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.*

இ. *இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது*

ஈ. *ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்*

உ. *தெளிவான கையெழுத்து*

ஊ. *நல்லநிலை*

எ. *குறை*

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அஞ்சொன் பதுக்கதிபர் பாவி சுபர்நாலு
மிஞ்சு பலன்றருவர் எண்மூன்றா - றெஞ்சுபதி
னொன்றுக் கதிபதி யும்படியே யொன்றிவரில்
பொன்றசுப மேகொடுப்பார் பூண்டு.

(1)

ஆ. முடிவு

இன்னவகை யெல்லா மிசையு மிலக்கனங்கள்
பன்னிரண்டி னுள்ளும் பரவியே - மன்னியிடும்

மாரகரைப் பாவிகளை மாயோக காரகரைச்
சேரவெலாஞ் சொல்வேன் தெரிந்து.

(47)

3358. நீலகண்ட கவசம்

1. நூலகக் குறிப்பு

அ. *2393-1*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. *நீலகண்ட கவசம்*
இ. *மாந்திரீகம்*
ஈ. *உரைநடை. அச்சில் ஏறத்தாழ 50 பக்கம் வரும்*

3. தோற்றக் கூறுகள்

அ. *26 ஏடு; 52 பக்கம்*
ஆ. *நீளம் 15 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.*
இ. *இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது*
ஈ. *ஒரு பக்கத்திற்கு 10-12 வரிகள்*
உ. *தெளிவான கையெழுத்து*
ஊ. *நல்லநிலை*
எ. *குறை*

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நீலகண்டப் பொருளாவது மூன்று அச்சரம். குரு உபதேசம் பெற்றுக் கொண்டு புண்ணிய புருஷாளுக்கும் யோகியள். ரிசியீசுபராள் இவர்களுக்காகச் சொல்லுகிறோம். அதேதென்னில், இந்த மூன்று அச்சரத்தையுஞ் செவிக்கிற பாவனையானது விஷத்துக்கு நீலகண்ட சதிர்ப்புசமாய் மான்மழு தரித்தவராய்ப் பாவனை பண்ணி நூறு உருத்தியானம் பண்ணவும். விஷம் அரமாம்.

தேவதா என்று வலது துடைமேல் இடது கையை வைத்து வலது கை கொண்டு மூக்கைத் தொட்டு துடைமேலிருக்கிற இடது கையை மூடிக் கொண்டு சங்கல்பித்து .....

ஆ. முடிவு

காண்க:- தொடர் எண்.2393-1.

3360. நீலகண்ட கல்பம்

1. நூலகக் குறிப்பு

அ. 2393-3

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. நீலகண்ட கல்பம் - அனுட்டான விதி

இ. மாந்திரீகம்

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 10 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 9 ஏடு; 18 பக்கம்

ஆ. நீளம் 15 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 13,14 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை. ஏட்டெண் 32ல் நூல் தொடங்குகிறது

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நீலகண்டப் பொருளாவது சகலவித்தை யாரம்பங் களுக்குந் திரியாட்சரமாவதுக்கு வகை:- புரோம, கிறீம், டம். இந்த மூன்றட்சரத்தினாலே செய்யப்பட்ட கருமத்துக்கு நித்திய கருமமாக அனுஷ்ட்டானவிதி செய்கிறது. தேகசுத்தி பண்ணிக் கொண்டு செம்பிலே

ஜலங் கொண்டு வந்து இருக்கிற இடத்திலே ஓமென்று தெளித்து அதின் மேலிருந்து கொண்டு செம்பு ஜலத்தை முன்னே வைத்துக் கொண்டு ஐம் கங்கா பரமேசுபரி ஓம் என்று செம்பு வாயை மூடிக்கொண்டு பதினாறுருச் செபித்துப் பின்பு தேனு முத்திரை கொடுத்து வட்டமிட்டுப் பதினாறு இதழிட்டு, நடுவே முக்கோணமிட்டு, ...

ஆ. முடிவு

.... குருப் பிரீதி நீலகண்டப் பிரீதி என்று போசனம் செய்து தாம்பூலந் தரிக்கிற போதுங் குருப்பிரீதி நீலகண்டப் பிரீதி என்று தாம்பூலந் தரித்துக்கொள்ளவும். இப்படிச் செய்கிற காலத்தில் நித்திய கர்மம் வழுவாமல் செய்து ஒரு வருஷத்துக்கொருதரம் பிராமண போசனமுஞ் செய்து ஒன்பதத்தியாயத்திலுள்ள வித்தையினைச் செய்கிற காலத்தில் நீலகண்ட ஒன்பதத்தியாயத்திலுள்ள தொழிலுக்கு நீலகண்ட சக்கரத்தை இந்த விதிமுறைப் பிரகாரம் பூசை பண்ணி வந்தால் எந்தத் தொழிலுக்குஞ் செய்த காரியமெல்லாஞ் செயமாம்.

நீலகண்டம் முற்றும்.

5. பிற செய்திகள்

இதனை அடுத்து ஓர் ஏட்டில் நீலகண்டச் சக்கரம் இடம்பெற்றுள்ளது.

3361. சுப்பிரமணியர் மந்திரம்

1. நூலகக் குறிப்பு

அ. 2393-4

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. சுப்பிரமணியர் மந்திரம்

இ. மாந்திரீகம்

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 12 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

அ. 12 ஏடு; 24 பக்கம்

ஆ. நீளம் 15 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 12,13 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

சுப்ரமண்ய கல்பம்:- அஸ்யஸ்ரீ சுப்ரம்மண்ய சடாக்ஷர மஹாமந்த்ரஸ்ய அகஸ்த்யபகவான் ரிஷி:, காயத்ரீஸ் சந்த:, ஸ்ரீசுப்ரம்மண்யோ தேவதா, ஓம் ஸம் பீஜம் ஹ்ரீம், தம் சக்தி; ஹ்ரீம் கீலகம் மம சர்வாபீஷ்ட சித்யர்த்தே பூதப்ரேத பிஸாசாதி நிக்ரஹார்த்தே ஜபே விநியோக:

ஆ. முடிவு

ஆறு வகைக்கும் இப்படியே தனக்கு இயன்ற மாத்திரம் பூ சாத்திச் செபிக்கவும். இதுக்குப் பிராணன் மூலம்:- ஓம்ஹ்ரீம் ஐம் ஸம் ரம் ஹ்ரீம் ந.ள. சரவணபவ.

5. **பிற செய்திகள்**

இச்சுவடியில் யந்திரமும், மாலா மந்திரமும் உள்ளன.

3362. வீரபத்திர சுவாமி கல்பம்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2393-5

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. வீரபத்திர சுவாமி கல்பம்

இ. மாந்திரீகம்

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 6 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

அ. 6 ஏடு; 12 பக்கம்

ஆ. நீளம் 15 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

அஸ்யஹீ அகோர வீரபத்ர ஸ்தோத்ர மஹாமந்த்ரஸ்ய ஆனந்த பைரவ ரிஷி: ஜகதீஸ் சந்த: அகோர வீரபத்ரோ தேவதா டம் பீஜம், டம் சக்தி; டம் கீலகம் அகோர வீரபத்ர ப்ரஸாத சித்யர்த்தே ஜபே வினியோக:

ஆ. முடிவு

...... மம பரிவாரம் ரக்ஷ ரக்ஷ, சர்வ துஷ்டக்ரஹான் ஹூம் பட் ஸ்வாகா. இதுக்குச் சக்கரம் முன்னே எழுதியிருக்கிற பதினாறு வீட்டுச் சக்கரம் என்று அறியவும்.

5. **பிற செய்திகள்**

வீரபத்ர யந்திரத்துடன் 3361க்குரிய சுப்பிரமணிய யந்திரமும் இச்சுவடியில் உள்ளது.

3363. மாந்திரீகம்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2394

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. பெயர் தெரியாத ஒரு மாந்திரீக நூல்

இ. மாந்திரீகம்

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 22 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 22 ஏடு; 44 பக்கம்

ஆ. நீளம் 19.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. சற்றுச் சிதைந்த நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சிரீமத் இன்னான் இன்னானுக்கு எழுதிய தாக்கீது என்னவென்றால் இன்னான் வீட்டில் இன்ன நியாயமாயிருப்பத னாலே தானாயிருந்தாலும் மற்றப் பேரா யிருந்தாலும் சாக்கிரதைக்கு அந்த வேலையைப் பார்த்துப் போட்டு மறுகாரியம் பார்க்கவும்.

ஆ. முடிவு

சுடலைமாடனடியில் தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு, புகையிலை, சாராயம், புண்ணாக்கு, கருப்புக்கட்டி .... பச்சரிசியும் அவள் பேரும் அவன் பேரும் ஒரு சீட்டில், இன்னாளுடன் இன்னான் கூடியிருக்க வேணுமென்று சுடலை மாடனுக்கு .... உடனே அரிசியும் கோழியும் வெற்றிலை பாக்கும் தேங்காயும் மஞ்சளையும் சாராயம் ...

(இதற்கு மேல் ஏடுகள் இல்லை)

5. பிற செய்திகள்

இடையிடை சில மருத்துவச் செய்திகளும் உள்ளன.

3364. அகத்தியர் வைத்திய காவியம் 1500

1. நூலகக் குறிப்பு

அ. 2395

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் வைத்திய காவியம் 1500

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 1504

3. தோற்றக் கூறுகள்

அ. 247 ஏடு; 494 பக்கம்

ஆ. நீளம் 26 செ.மீ., அகலம் 4 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 12 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காண்க:- தொடர் எண்.2264-1.

ஆ. முடிவு

காண்க:- தொடர் எண்.2262-1.

5. பிற செய்திகள்

இந்நூல் தட்சிணாமூர்த்தி வைத்தியம் 1500, அகத்தியர் வைத்தியம் 1500 எனவும் வழங்கப்படுகிறது. இச் சுவடியில் இந்நூலுக்குரிய ஓர் அட்டவணையும் இடம்பெற்றுள்ளது.

3365. அகத்தியர் வல்லாதி 600

1. நூலகக் குறிப்பு

அ. 2396-1

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் வல்லாதி 600

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 621

3. தோற்றக் கூறுகள்

அ. 199 ஏடு; 398 பக்கம்

ஆ. நீளம் 29.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 5,6 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியாம் அகண்டபரி பூரணமாய் நின்ற
அகண்டபரா பரத்திருந்த ஐங்கரனே காப்பு
சோதியாம் அறுமுகவன் பாதங் காப்பு
துரியவெளி தன்னில்நின்ற சுந்தரியே காப்பு
வாதியாம் என்குருவின் பாதங் காப்பு
மகத்தான பெரியோர்கள் சரணங் காப்பு
பேதியா வயித்தியந்தான் அறுநூ றாகப்
பேசுகிறேன் வாணிபதம் பேருங் காப்பே.

(1)

ஆ. முடிவு

கூறினசொல் மறவாதே தாயைப் போற்று;
குணமான வயித்தியத்தைக் கூர்ந்து பாரு;
வேறுமொரு பொருளில்லை யடிமுடிதா னப்பா
விளங்கிநின்ற காவியத்தில் விளங்கும் பாரு
மாறிநின்று திருடாதே மதம்பே சாதே
மற்றநூல் பொய்யென்று வசனிக் காதே

ஆறுமுகன் பதம்போற்றிக் கையில் நெல்லி
அருங்கனிபோல் சொன்னதிந்த அருநூல் முற்றே.
(621)

இ. பிற்குறிப்பு

நள வருஷம் சித்திரை மாதம் 18ந் தேதி சோம வார நாளும் நவமியும் திருவோண நட்சத்திரமுங் கூடின சுப தினத்தில் குருபாத வயித்தியர் வயித்திய சாத்திரம் எழுதி நிறைவேறினது.

3366. அகத்தியர் 16

1. **நூலகக் குறிப்பு**
   அ. 2396-2

2. **உள்ளீடு : நூல் விவரம்**
   அ. அகத்தியர்
   ஆ. அகத்தியர் 16
   இ. மருத்துவம்
   ஈ. செய்யுள் 16

3. **தோற்றக் கூறுகள்**
   அ. 5 ஏடு; 10 பக்கம்
   ஆ. நீளம் 29.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து
   ஊ. நல்லநிலை
   எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

   அ. தொடக்கம்

விதியால் மருந்து இதுவல்லால்
வேறே தேட வேண்டாங்காண்
பதியாம் நாலா யிரத்துடனே
பகரும் வியாதி யதற்கெல்லா

மதியா லதற்குக் குறிப்பறிந்து
அனுபா னத்தில்ச் செய்யவல்லோர்
மதியால்த் தீரு மெனப்பொதிகை
மலைமுனி சொன்ன வாறிதுவே.

ஆ. முடிவு

யேரிடில் சன்னி தோஷம்
எடுபடும் குட்ட ரோகம்
பார்த்திடில் பரங்கி சூலை
பல்க்கடி முதலா யுள்ள
போகடில்த் தீரு மென்று
பொருப்புமே லிருந்து சொன்னார்.

(16)

(இப்பாடல் மூன்றடிகளே கொண்டுள்ளது)

3367. கொங்கணர் காயசித்தி கற்பம் 100

1. நூலகக் குறிப்பு

அ. 2396-3

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. கொங்கணர்
ஆ. கொங்கணர் காயசித்தி கற்பம் 100
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 101

3. தோற்றக் கூறுகள்

அ. 37 ஏடு; 74 பக்கம்
ஆ. நீளம் 29.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

முத்திகொண்ட வேதாந்த நந்தி ஆசான்
மூலாதா ரத்திருந்த கணேசன் பாதம்
பத்திகொண்ட சித்தாந்த நாதாந் தத்துள்
பாவியே விந்துவரும் போக நாதர்
சத்திகொண்ட தத்துவங்கள் எல்லாம் பாழாய்ச்
சச்சிதா னந்தவழி ஒளிமே லான
சித்திகொண்ட காயசித்தி கற்ப சூத்திரம்
செப்புகிறேன் வெளியாகச் செப்பு நேனே.

(1)

ஆ. முடிவு

பாரப்பா கும்பமுனி ஞான திட்சை
பண்பான பூரணசூத் திரத்தை யன்பாய்ப்
பாரப்பா நான்சொன்ன கற்பம் நூறும்
பகர்ந்திட்டேன் கடைக்காண்டம் ஐந்நூ றுந்தான்
பாரப்பா வெட்டவெளி யாகச் சொன்னேன்
பரமோட்சம் கெதியுண்டாம் பத்தும் முத்தே.

(101)

கொங்கண சுவாமியார் கற்ப சூத்திரம் எழுதி நிறைந்தது முற்றும்.

இ. பிற்குறிப்பு

ராட்சத வருஷம் மார்கழி மாதம் 6ந் தேதி நோதன் கிழமை நாழிகை 17½ ஏகாதசியில் முடிந்தது. முற்றும்.

3368. நாடி சாத்திரம்

1. நூலகக் குறிப்பு

அ. 2397-1

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. நாடி சாத்திரம்

இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 57

3. **தோற்றக் கூறுகள்**

அ. 12 ஏடு; 24 பக்கம்
ஆ. நீளம் 23 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 5,6 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. 10ஆம் ஏடு இல்லை
உள்ளவை சுமாரான நிலை
எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

காண்க:- தொடர் எண்.2322-2.

ஆ. முடிவு

செய்தியாய் வாத நாடி
சிக்கென நிற்கு மாகில்
உய்வதே திண்ண மாகு
முற்றது சுரத்தின் வேகம்
கையுளே துடிக்கும் நாடி
...... தாது வாகும்
மெய்யுள்ளே நோவும் வெப்பும்
வேர்வைதன் குணத்தைக் கேளே.

(57)

5. **பிற செய்திகள்**

இதனை அடுத்து நான்கு ஏடுகளில் நாடித் தொந்திப்பும் அவத்தைக் குறியும் நட்சத்திரப் பலனும் இடம்பெற்றுள்ளன.

3369. மருத்துவ நூல்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2397-2

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 136

3. தோற்றக் கூறுகள்

அ. 29 ஏடு; 58 பக்கம்

ஆ. நீளம் 23 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 5-7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. 29ஆம் ஏடு இல்லை
உள்ளவை சுமாரான நிலை
ஏட்டெண் 17ல் நூல் தொடங்குகிறது

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தாபத் தாலு மிகவுடலஞ்
சாய வறண்ட படியாலுங்
கோபத் தாலும் விகாரத்தால்
கொள்ளுங் காமக் குணத்தாலுஞ்
சாபத் தாந்த மதனாலுந்
தள்ளும் வருச காலத்துள்
ஆபத் தாலே வாயுவினால்
அனேகம் வியாதி யுண்டாகும்.

(1)

ஆ. முடிவு

மண்டை வியாதி வருங்குணம்:-
காது தினவாய்க் கண்தினவாய்க்
கண்டந் தினவாய்க் கரகரத்து
ஓதுங் கண்ணில் நீரொழுகி
உலறும் தினமே நீர்பாயும்

ஓதும் ஒருக்கால் நலம்பெறநா
    லொன்றைக் குறைத்து நாம்வாழும்
சேத மிகவே தலையிடித்துச்
    சேருங் கபாலக் கரப்பனிதே.

(136)

3370. தாது லட்சணம்

1. **நூலகக் குறிப்பு**
   அ. 2397-3

2. **உள்ளீடு : நூல் விவரம்**
   அ. ....
   ஆ. தாது லட்சணம்
   இ. மருத்துவம்
   ஈ. செய்யுள் 100

3. **தோற்றக் கூறுகள்**
   அ. 24 ஏடு; 48 பக்கம்
   ஆ. நீளம் 23 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து
   ஊ. 48,49ஆகிய இரு ஏடுகள் இல்லை
   உள்ளவை சுமாரான நிலை
   ஏட்டெண் 46ல் நூல் தொடங்குகிறது
   எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**
   அ. தொடக்கம்
   காண்க:- தொடர் எண்.2277.

   ஆ. முடிவு
   குக்கில்தனை .... மூட்டை கட்டிக்
       கொடுவேப்பம் பட்டைதனைப் பாண்டத் திட்டுத்
   தக்கபுனல் விட்டுமுக்கால் பானை .....
       தன்மேலு மோவிட்ட மாது தூக்கி

மிக்கதொரு சட்டிகொண்டு மூடிப் பின்னும்
மேலுமோர இடைவிலாமல் பொருந்த மூடிப்
பக்கம்விடை வரச்சீலை மண்செய்து .....
பண்பாக வோர்சாமம் வேகச் சுத்தி.

(100)

3371. மருத்துவ நூல்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2397-4

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 81

3. **தோற்றக் கூறுகள்**

அ. 15 ஏடு; 30 பக்கம்

ஆ. நீளம் 23 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை
ஏட்டெண் 70ல் நூல் தொடங்குகிறது

எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

புங்கினின் மூலந் தன்னில்
புறத்தொழில்ச் சாறே யாதல்
பங்கறி பெருமாப் பாலப்
பரவட்டைப் பாலே யாதல்
எங்குமுள் ளிசலை நெல்லி
யிலுப்பையின் பாலே யாதல்
இங்குவெண் சீலை யூட்டி
யேற்றபுண் ணொடுவிற் போடே. (275)

ஆ. முடிவு

வெப்புப் பாவை பீலிகையும்
 மிகுந்த கவுசி நீராம்பல்
உப்பும் வாயு குடல்வாதம்
 உதரத் தோச முள்ளதெல்லாம்
கைப்பு புளிப்புத் தான்தவிரக்
 காசத் தனைநெய் உண்டுவரத்
தப்பா தேகு முண்மையிது
 சதுரா யறிந்து செய்வீரே.

(355)

3372. மருந்து செய்முறை

1. நூலகக் குறிப்பு

அ. 2397-5

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. மருந்து செய்முறை
இ. மருத்துவம்
ஈ. செய்யுளும் உரைநடையும்;
அச்சில் ஏறத்தாழ 30 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 25 ஏடு; 50 பக்கம்
ஆ. நீளம் 23 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. 90ஆம் ஏடு இல்லை. உள்ளவை நல்லநிலை.
ஏட்டெண் 85ல் நூல் தொடங்குகிறது
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

குக்குட லேகியம்:- கொடிவேலி வேல், பிரண்டை. சமூலம், மாள்கிழங்கு, காட்டுக் கருணைக் கிழங்கு, சாரணைக் கிழங்கு, மூக்குரெட்டை வேர், சிவதைவேர், வெள்ளைக் காக்கணம் வேர், வேலிப்பருத்தி வேர், ஓரொன்று துவைத்துப் பதக்கு நீர் வார்த்து நானாழியாகக் காய்ச்சிப் பிசைந்து வடித்து, இந்தக் கிஷாயத்தில் கருங்கோழிச் சதை, நத்தைச் சதை, கிளிஞ்சிச்சதை, சமுத்திரமட்டிச் சதை இவை சமன் கூட்டி வேகவைத்து இதில் கரகம், இந்துப்பு, வளையலுப்பு, பொட்டிலுப்பு, கல்லுப்பு சத்தி சாரம், யவச்சாரம், வெண்காரம், திரிகடுகு, திப்பிலி மூலம், பெருங்காயம், வெந்தயம், ஓமம், கொடிவேலி வேர், சிவதைவேர் ஓரொன்று இரண்டு கழஞ்சு வேகிற மருந்துடனே கூடப்போட்டு நல்லெண்ணெய் நாழிவிட்டுக் கூட்டிக் காய்ச்சிப் பதத்தில் இறக்கி எடுத்துக் கொள்ளவும்.

இதுக்குத் தீரும் வியாதி:- வாய்வுச் சூலை, மூலம், மூலவாயு இவை தீரும்.

ஆ. முடிவு

பரங்கிப் பட்டைப் புடம்:- பரங்கிப்பட்டை சிறுகச் சிறுகச் சீவி பொடுதலைச் சாறு, கையாந்தகரைச் சாறு, சிறுசெருப்படிச் சாறு, தனித்தனியே சாறு கொண்டு மூன்றும் ஒரு படி சாறுகொண்டு இதிலே அந்தப் பட்டையை நனையப் போட்டு உலர விட்டுப் பிறகு சாம்பிராணி பலம் 1, சாதிலிங்கம் பலம் 2, கெந்தகம் பலம் 2 இந்த மூன்று விதமும் பொடி பண்ணி ஒரு சட்டியில் போட்டு அந்தச் சட்டியில் வாயில் மூன்று விரல் போகத் துவாரமிட்டு அந்தச் சட்டியின் மேலே ஒரு சட்டி கருது இல்லியாக அஞ்சாறு தமரிட்டு அந்தச் சட்டியை அடுக்கி அதிலே வடிகட்டி சாறுவிட்டு

உலர்ந்த பட்டையைப் பரப்பி மேல்ச்சட்டி குப்புற மூடிச் சீலைமண் செய்து அடுப்பில் வைத்துக் கீழ்ச்சட்டி விலாவினால் கரிப்போட்டுத் தீ யுண்டு பண்ணிப் பொடியைப் போட்டுப் புகை போகாமல் சாணியுருட்டி அடைத்து இப்படி நாலஞ்சு முறை போட்டுப் பிறகு எடுத்துப் பட்டையைப் பொடி பண்ணித் தின்னவும்.

3373. மருத்துவ நூல்

1. **நூலகக் குறிப்பு**

   அ. 2397-6

2. **உள்ளீடு : நூல் விவரம்**

   அ. ....

   ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்

   இ. மருத்துவம்

   ஈ. செய்யுள் 45

3. **தோற்றக் கூறுகள்**

   அ. 10 ஏடு; 20 பக்கம்

   ஆ. நீளம் 23 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

   ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

   உ. தெளிவான கையெழுத்து

   ஊ. நல்லநிலை

   ஏட்டெண் 110ல் நூல் தொடங்குகிறது

   எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

   அ. தொடக்கம்

   துத்தமரை நாவியரை சீரகமு மரையாந்
   துலங்குகின்ற துருசொன்று கெந்தகமு மொன்று
   வெத்துமரி தாரமொன்று பாகலிலைச் சாற்றில்
   விரைவாக வரைத்துண்டை பயறளவு செய்தே

வொத்தலஃனு பாலமதி லுரைத்துள்ளே கொள்ள
உடலிலுள்ள கரவகைக ளெல்லாமுந் தீரும்
அத்தர்சொன்ன மிருத்திராதி யிதென்றே நாளும்
அறிவறிந்தோர் சொன்னபடி அடைவாகச் செய்யே.

(1)

ஆ. முடிவு

நல்ல சூதம் கந்தகமும்
நவின்ற நாவி காரமுடன்
சொல்லும் திரிகடு திரிபாலை
தோரோ ரிதழ்த்தா மரைசமனாய்
எல்லப் ... .

(46)

3374. மருந்து செய்முறை

1. நூலகக் குறிப்பு

அ. 2397-7

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. மருந்து செய்முறை

இ. மருத்துவம்

ஈ. செய்யுளும் உரைநடையும்
அச்சில் ஏறத்தாழ 85 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 85 ஏடு; 170 பக்கம்

ஆ. நீளம் 23 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 5-7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. 176,179,181,183,188,200 ஆகிய ஏடுகள் இல்லை;
உள்ளவை சுமாரான நிலை;
ஏட்டெண் 122ல் நூல் தொடங்குகிறது

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காந்தமொடு அப்பிரகம் நாவி கெந்தகம்
கனமிளகு திப்பிலிதாம் பூர கற்பம்
போந்தபா சாணமொரு பங்காகக் கூட்டிப்
பொன்னிறையாய் ஒரொருவி ராகனிடை நிறுத்து
ஆய்ந்தசா ரணைசீந்தி ஊமத்தை இஞ்சி
...... ரசமேவிட் டரைத்துச்
சேர்ந்தஉட னேகுண்டு மணியளவு உருட்டித்
தெளிந்துஅனு பானவகை செப்பக் கேளே.

ஆ. முடிவு

காலம் அறிந்து கடுகவே ஊதிடு
கோலம் அறிந்து கூட்டிடு திராவகம்
ஆலம் அறிந்த டங்கச்செந் தூரமாம்
சேலம் அறிந்து சிறந்தகுரு வாமே.

3375. தன்வந்திரி சிமிட்டு ரத்தினச் சுருக்கம் 361

1. நூலகக் குறிப்பு

அ. *2398-1*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. *தன்வந்திரி*
ஆ. *தந்வந்திரி சிமிட்டு ரத்தினச் சுருக்கம் 361*
இ. *மருத்துவம்*
ஈ. *செய்யுள் 361*

3. தோற்றக் கூறுகள்

அ. *68 ஏடு; 136 பக்கம்*
ஆ. *நீளம் 29 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.*
இ. *இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது*
ஈ. *ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்*
உ. *தெளிவான கையெழுத்து*

ஊ. 1-7 ஏடுகள் சிதைந்துள்ளன
மற்றவை நல்லநிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

செசமுக னடிவ வணங்கிக்
கேசரப் பொருளைக் கண்டு
வசமென வறிவிற் பூண்டு
வகையுறச் சிசுவின் ரோகம்
கசைவரக் கனிவ தாகக்
கண்டுநா னுரைக்க வேண்டி
(திசை)முகப் பொருளை நோக்கித்
திகழ்மலர் போற்றி னேனே.

(1)

ஆ. முடிவு

சத்திய மாகநான் சாற்றிய முன்னூற்
சத்திய மென்னச் சஞ்சல மற்றிடும்
சத்திய மிந்நூல் சமுசய மில்லைதான்
சத்திய வைத்திய ரத்தின முற்றே.

(361)

3376. வால கிரிகை

1. நூலகக் குறிப்பு

அ. 2398-2

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. வால கிரிகை
இ. மருத்துவம்
ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 50 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 37 ஏடு; 74 பக்கம்

ஆ. நீளம் 29 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்; 2 பத்திகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. சற்றுச் சிதைந்தநிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மயேந்திர மூர்த்தியார் வால கிரிகைக்குத் திருவுளம் பற்றி அருளின உபதேசம்; வால கிரிகை உபதேசம், சொல்லுகிற உபதேசம்; சொல்லுகிறார்; மலடியென்று பிள்ளையில்லாமல் இருக்கிறதேதென்றால் அறியும்படி:-

பிள்ளையுண்டாகும்படித் திருவுளம்பற்றி யருளும்படி யினாலே வாலகிரிகை என்றும் பேராச்சுது.

மலடிகளுக்குத் தேவதைக் குற்றமாய்ச் சனித்து நிற்கிற தொப்புளுக்குக் கீழ் நோக்கி வலித்து விலக்கமாவார்கள்.

ஆ. முடிவு

இளைப்புக்கு:- வில்வ வேர் வெட்டி, சட்டியைக் காய வைத்து, வெந்தயம் பொரித்து, அதில் நாழித் தண்ணீர் விட்டு, வில்வ வேர் தட்டிப் போட்டு படியாக வற்றவிட்டு மூன்று நேரங் கொடுக்கவும்.

5. பிற செய்திகள்

இந்நூலில் பிள்ளைப் பேற்றிற்கு வழி, குழந்தைகளுக்கு வரும் நோய்கட்குரிய மருத்துவம், மாந்திரீகம் ஆகியன உள்ளன. வாலை கிரியை, வால கிரியை, பால கிரிகை, பால கிரியை என்றெல்லாம் இப்பிள்ளைப்பிணி மருத்துவம் வழங்குகிறது.

3377. சித்தராரூடம்

1. நூலகக் குறிப்பு

அ. 2398-3

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. சித்தராரூடம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 92

3. தோற்றக் கூறுகள்

அ. 15 ஏடு; 30 பக்கம்

ஆ. நீளம் 29 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்

உ. சுமாரான கையெழுத்து

ஊ. இடது ஓரம் முறிந்தநிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வேதியன் முதலாஞ் சாதி
விடத்தினா லஞ்சு வோரை
யோதிய மந்தி ரத்தால்
..... உணர்த்து வார்கள்
சாதியில் நாலு வேதத்
தலைவராய்ப் பிறந்து பின்னும்
ஆதியில் பிறந்து .....
அமந்துவீற் றிருப்ப தாமே.

(1)

ஆ. முடிவு

பாம்பு கடித்த தெனமொழிந்தால்
பழைய கையே யாமாகில்ப்
பாம்பின் விடமோ சற்றில்லை;
பறிந்து தூதன் றான்வந்து

பாம்பின் பேரை முன்சொல்லிப்
பகைவர் தன்பேர் பின்(சொல்லிப்)
..... தாலவர் சாவாரென்
றுரைத்தார் அவரைப் பழியென்றே.

(92)

3378. இராமதேவர் பூசாவிதி 200

1. நூலகக் குறிப்பு

அ. 2399-1

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. இராமதேவர்
ஆ. இராமதேவர் பூசாவிதி - சிவயோகம் 200
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள் 201

3. தோற்றக் கூறுகள்

அ. 52 ஏடு; 104 பக்கம்
ஆ. நீளம் 24 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7-9 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. சுமாரான நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மூலமெனு முதற்பொருளாய் முத்திநடு வணையில்
மூதண்ட மானதொரு பிரமத் தப்பால்
ஞாலமெனுந் தவமுடைய சத்திபதி மேலே
நாதாந்தப் பெருவெளியில் நடுவொளியின் கீழே
நீலமிகும் நெருப்பாலும் இரப்பால்நீ தப்பால்
நிறைந்தபரி பூரணமாய் நிட்களம தாகிச்

சீலமிகுந் தவமுடையோர் இருதயம தாகுஞ்
சிவந்துநின்ற பரமாகுஞ் சிவபாதந் துணையே.
(1)

ஆ. முடிவு

முத்தான சிவயோகம் இருநூறு தன்னை
முறையான கருக்குருவென் றெடுத்துப் பார்த்துச்
சித்தான சித்துவிளை யாடு மைந்தா
சிவயோக மார்க்கமடா திறந்தான் மெத்த
பத்தாசை கொண்டுமன மவுன மாகப்
பதிவாகச் சிவயோக மிருநூ றும்பார்
வித்தான பிறவியதும் அற்றுப் போகும்
மேலான சிவயோகம் விளங்கு மூற்றே.
(201)

3379. இராமதேவர் சூத்திரம் 30

1. நூலகக் குறிப்பு
அ. 2399-2

2. உள்ளீடு : நூல் விவரம்
அ. இராமதேவர்
ஆ. இராமதேவர் சூத்திரம் 30
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 30

3. தோற்றக் கூறுகள்
அ. 8 ஏடு; 16 பக்கம்
ஆ. நீளம் 24 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. இடது ஓரம் முறிந்தநிலை
ஏட்டெண் 53ல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதிகுரு வானதொரு பிரமன் பாதம்
அனுதினமும் நெஞ்சில்வைத்து அவனை நோக்கிச்
சோதிவெளிக் கப்பாலே துலங்குஞ் சத்தி
துணையெனவே கருமானச் சுருக்கஞ்
சொல்வேன்
நீதியுள்ள வாலைமனோன் மணிதான் வந்து
நிலைத்தபொருள் கருமறப்பை நிலத்தி லார்க்கும்
சோதினையாய்ச் சொல்லிவைத்தேன் ராமா வென்று
சொல்லிமனக் கசடகற்றித் துதித்தாள் வாரே.

(1)

ஆ. முடிவு

வரிசையுடன் இந்நூலும் ஐம்பத் (தொன்று)
வகையுடனே துகைபார்க்க எண்பத் (தொன்று)
உரிசையுள்ள .... உன்னிப் பார்த்தால்
உண்மையுள்ள அஷ்டகர்மஞ் சித்து ....
பரிசையுள்ள பூரணத்தை வணங்கிப் போற்றிப்
பலகாலுங் கேசரத்தி ....
அருமையுடன் அமிர்தநிலை தன்னைப் பெற்று
அருளா... ...... மன்பா முற்றே.

(30)

இராமதேவர் சூத்திரம் முப்பதும் முற்றும்.

3380. மருத்துவ நூல்

1. நூலகக் குறிப்பு

அ. 2400

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. *பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்*
இ. *மருத்துவம்*
ஈ. *செய்யுள் 101*

3. **தோற்றக் கூறுகள்.**

அ. *51 ஏடு; 102 பக்கம்*

ஆ. நீளம் 18 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. சில ஏடுகள் செல்லரித்த நிலை

எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

களங்கமாம் வெள்ளிக்கு வெள்ளைப்பா ஷாணம்
  கட்டுதற்குச் சூட்சமாய்க் கருதிக் கேளு
கனகமாம் பாஷாணக் கட்டி வாங்கிக்
  கருதியே வெள்ளிரவி வேகும் போது
வளங்கமா வெள்ளாவிச் சீலைக்குள் வைத்து
  வா....கி யெண்ணெய்க்குச் சுத்தி யாகும்;
சுணங்காதே பிராம்பட்டைத் தயிலம் வாங்கிச்
  சுருக்கிடவே கட்டி... சுத்தி யாமே.

(1)

ஆ. முடிவு

..... இந்நூல்கற் றுரைத்த வர்க்கும்
  பொறுமையுடன் .... முண்டாய் மேலும்
தன்னுடம்பு தானறிந்து கொண்டோர் கேட்டோர்
  தயவுபெற வாழ்வர்மறு பிறவி தன்னில்
பின்னும்நலம் பெறுவர்பொரு ளாய்ந்திட் டோர்கள்
  பிறப்பறுத்து மெஞ்ஞானத் தலைவ ரானும்
பின்னுமறை காணாத பரத்தோ டொத்துப்
  பதம்பெறுவா ரெனக்குருவும் பகர்ந்திட் டாரே.

(101)

3381. நோய்க்கு மருந்து

1 **நூலகக் குறிப்பு**

அ. *2401*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. நோய்க்கு மருந்து

இ. மருத்துவம்

ஈ. உரைநடை

அச்சில் ஏறத்தாழ 150 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 151 ஏடு; 302 பக்கம்

ஆ. நீளம் 14 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. 133,134,149ஆகிய ஏடுகள் இல்லை;
உள்ளவை நல்லநிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தேங்காய்க் கீற்று, வேப்பங்கொட்டை இரண்டையும் வறுத்து அரைத்துப் பூசவும். அசுகுணி மாறும்.

காஞ்சிரங் கொழுந்து சிறுநீரில் அவித்துக் கட்டவும்; அசுகுணி மாறும்.

ஆ. முடிவு

குருத்துப் புழுவுக்கு:- நின்றவிட .... சாணக் காப்புக் கட்டித் தூபங் கொடுத்துப் பிடுங்கி முற்பிரகாசம் அரைத்துக் கலக்கி நாளொன்று 108 முறை உருச் செபிக்கவும்.

3382. சல்லியம்

1. நூலகக் குறிப்பு

அ. 2402-1

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. சல்லியம்

இ. மாந்திரீகம்

ஈ. செய்யுளும் உரைநடையும்;

அச்சில் ஏறத்தாழ 100 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 83 ஏடு; 166 பக்கம்

ஆ. நீளம் 16 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 5,6 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. செல்லரித்த நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காண்க:- தொடர் எண்.2389.

ஆ. முடிவு

காண்க:- தொடர் எண்.2355-1.

3383. ஒட்டியம்

1. நூலகக் குறிப்பு

அ. 2402-2

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. ஒட்டியம்

இ. மாந்திரீகம்

ஈ. செய்யுள் 30

3. தோற்றக் கூறுகள்

அ. 13 ஏடு; 26 பக்கம்

ஆ. நீளம் 16 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து;
பிழைகளும் விடுபாடுகளும் மிகுதி
ஊ. நல்லநிலை
ஏட்டெண் 89ன் பின் பக்கம் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீரணி கொன்றை சூடும்
செஞ்சடை யுடையான் பங்கில்
நாரணி கவு(ரி) முக்கண்
நாயகி புவனம் போற்றும்
காரணி உமையாள் சோதி
கருமங்கள் தானாய் நிற்கும்
பூரணி பெற்ற வானை
(முகத்தனைப்) போற்றி செய்வாம்.

(1)

ஆ. முடிவு

இல்லமும் புறமு மாகி
எங்குமாய் நின்று தேவி
சொல்லிய கருமம் ஆறுஞ்
சூத்திர மாட்டுந் தேவி
எல்லம்மை யான தேவி
இகத்தில்கை கண்ட வித்தை
புல்லிய கட்டை யொன்றில்
புதுவுருச் செய்ய (வேண்டும்).

(30)

ஓட்டியம் முற்றும்.

3384. கேசரி வித்தை

1. நூலகக் குறிப்பு

அ. 2402-ட

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. அகத்தியர்

ஆ. கேசரி வித்தை

இ. மாந்திரீகம்

ஈ. செய்யுள் 15

3. **தோற்றக் கூறுகள்**

அ. 6 ஏடு; 12 பக்கம்

ஆ. நீளம் 16 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

ஏட்டெண் 108ல் நூல் தொடங்குகிறது

எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

திருவருள் ஒற்றைக் கொம்பன்
சீரடி வணங்கிப் போற்றிக்
கருவுரு வான மோன
கந்தற்கு மூத்த சித்தி
சருவமு மதுவாய்த் தோன்றிச்
சாத்திர மறிந்த மூலம்
கிரிசன முதலா யெட்டும்
கேசரி வித்தை தானே.

(1)

ஆ. முடிவு

சோதித்துப் பார்த்துபார்த்து நவசுருக் குத்தாஞ்
சொல்லிவிட்ட குறையறியக் குறுக்குத் தானம்
சோதித்துப் பாராமல் சொல்ல வில்லை
சோதனையைப் பார்த்துநீ மனதில் கொள்ளு
காத்திலேன் நூறுவழி யாங்கா தவகை
நொடியில்ப்போய் மீள்க கருத்தாஞ் சொன்னோம்

போதித்துப் பாரென்றே சொன்ன பேச்சைப்
புத்தியுள்ள பிள்ளாய்நீ பேணிப் பாரே.

(15)

(இப்பாடலின் யாப்பமைதி சரியாக இல்லை. இதற்குமேல் எழுதப்படவில்லை)

3385. பால வாகடம்

1. நூலகக் குறிப்பு

அ. 2403-1

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. பால வாகடம்

இ. மருத்துவம்

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 15 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 8 ஏடு; 16 பக்கம்

ஆ. நீளம் 32 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6-8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

குழந்தைகட்கு வரும் நோயின் விபரம்:- கிரந்தி, செங்கிரந்தி, கருங்கிரந்தி, பட்சிதோஷம், மாந்தம், கணம், பிரளி கரப்பான், செவ்வாப்பு, தொண்டைக் கட்டு, அக்கரம், வசூரி முதலான அனேக ரோகங்கள் சம்பவிக்கிறது. மாந்தம் தாய்முலைப் பாலாலும், கணம் கர்ப்பச் சூட்டினாலும், மற்ற பிணிகள் தாய் தந்தையின் புணர்ச்சியினாலெழுந்த சூட்டினாலும் உண்டாகிறது.

ஆ. முடிவு

குழித்தோசக் குணம்:- உச்சியுங் கண்ணுங் குழியும், வாந்தி வியர்வை மிகும். பல வண்ணமாய்க் கழியும். தேகந் தணல்போற் காய்ந்து வற்றும். நெஞ்சுலரும், தாகிக்கும், கண்ணில் நீர் சொரியும், கால் வீங்கும், குய்யம் புண்ணாகும்.

நிவர்த்தி:- குட்டிவிளா, வேம்பு, சோம்பு, மஞ்சள், வசம்பு, சுக்கு, அரைத்து தாய்க்கும் பிள்ளைக்கும் உடம்பில் தேய்த்து நீரில் வாகையிலையைப் போட்டுக் காய்ச்சி நீராட்டி அப்பால் ஆட்டு நெய் படி ¼ , நல்லெண்ணெய் படி ½ , நன்னாரி, தண்ணீர்விட்டான், கரந்தை, பொன்னாங் கண்ணி வகைக்குப் பலம் 1, ஏலரிசி, சீரகம் வகைக்குக் கழஞ்சு 3 இவையெல்லாம் பால்விட்டரைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சிச் சிறுகரண்டி வீதம் கொடுக்கச் சகல தோசமுந் தீரும்.

3386. மருத்துவ நூல்

1. **நூலகக் குறிப்பு**

   அ. 2403-2

2. **உள்ளீடு : நூல் விவரம்**

   அ. ....

   ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்

   இ. மருத்துவம்

   ஈ. செய்யுள் 104

3. **தோற்றக் கூறுகள்**

   அ. 8 ஏடு; 16 பக்கம்

   ஆ. நீளம் 29 செ.மீ., அகலம் 3 செ.மீ.

   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

   ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

ஏட்டெண் 14ல் நூல் தொடங்குகிறது

எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

கேளப்பா மகரகண் டாத்ரி லேகியம்
கெடியான லேகியந்தான் சொல்லக் கேளு
நாளப்பா ஆத்துமுள்ளிப் பலந்தான் நூறு
நலமான கறிமுள்ளி அதற்குப் பாதி
தாளப்பா சித்தாமுட்டி பேரா முட்டி
தளமான கரணைகொடி வேலி கிளாவும்
ஆளப்பா ஆதண்ட சிறுகாஞ் சோரி
அப்பனெலு மிச்சைமுக்கா வேளை யாமே.

(69)

ஆ. முடிவு

போமடா அத்திசுரம் அத்தி வெட்டை
பொறுக்காத நீர்த்தாகம் புண்ணாம் நெஞ்சில்
நாமடா பித்தவெட்டை பித்த பாண்டு
நாடாது கிராணிவகை எல்லாந் தீரும்
தாமடா அரோசியங்க ளன்னத் தோசம்
தளராத விம்மலொடு விக்கல் கக்கல்
சாமடா கைகாலில் எரிவு காந்தல்
சாந்தமாம் புளியொடு புகையுந் தள்ளே.

(104)

3387. மருத்துவ நூல்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2403-3

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்

இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 101

3. **தோற்றக் கூறுகள்**

அ. 17 ஏடு; 34 பக்கம்
ஆ. நீளம் 30 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
முதல் நான்கு ஏடுகள் இல்லை
எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

புகழாக அட்டகர்மப் போக்கை வென்றார்
பரிந்துநின்ற குணரத்தை மோகஞ் செய்வார்
பகல்போலே பூரணத்தை நோக்கஞ் செய்வார்
....
ஒரிந்துநின்ற வொருவரையுச்சா டனமும் செய்வார்
ஒகோகோ பிரவையென்று மிரிக்கச் செய்வார்
பிரிந்தெழுந்த கோபமென்ற முளையை நீயும்
பேதனத்தா லட்சித்துப் பிடுங்கிப் போ(டே).
(25)

(இப்பாடலின் வடிவம் தெளிவாக இல்லை)

ஆ. முடிவு

ஆமப்பா இந்நூல்தான் நீல கண்டம்
அதிசூட்சம் சூட்சாதி சூட்சம் கண்டு
ஓமப்பா பொறிவாகி மூலங் கண்டு
ஒருமாவில் மாத்திரைப்பேர் தூணிப் பாரு
தாமப்பா மும்மூல வர்த்தத் தோடே
தானொருவன் பலகோடி சித்து மாடா
நாமப்பா நந்திகுரு வாலே மூலம்
நான்காட்டத் தண்டக(நூல்) நலமா முற்றே.(101)

5. **பிற செய்திகள்**

இதனை அடுத்து 10 ஏடுகளில் மாந்திரீகச் செய்திகள் உள்ளன.

3388. மருந்து செய்முறை

1. **நூலகக் குறிப்பு**

அ. 2404-1

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. மருந்து செய்முறை

இ. மருத்துவம்

ஈ. உரைநடை

அச்சில் ஏறத்தாழ 25 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

அ. 23 ஏடு; 46 பக்கம்

ஆ. நீளம் 19.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 5-7 வரிகள்

உ. தெளிவான பலவித கையெழுத்து

ஊ. சுமாரான நிலை

எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

போகர் வல்லாதி:- இரசம் பலம் 1, கெந்தி பலம் 1, இரசகல்ப்பூரம் பலம் 1, அரிதாரம் பலம் 1, ஊசிக்காந்தம் 1, துருசு 1, துத்தம் 1, மிருதாருசிங்கு 1 ஆகப் பலம் 8. கடைச்சரக்கு, ஓமம், மஞ்சள், சுக்கு, திப்பிலி, அரத்தை, கோஷ்டம், வாலுலுவேர், சோம்பு, ஏலம், மாசிக்காய், தானிக்காய், கடுக்காய், திப்பிலி மூலம், ஆனைத்திப்பிலி, சாதிக்காய், வாய்விளங்கம்,

கடுகுரோகிணி, கார்போக அரிசி, தாநக்கோ அரிசி, பனைவெல்லம் பலம் 8, எட்டிக் கொட்டை, தேத்தாங் கொட்டை, நீரடி முத்து, போளம், சோளம், உளுந்து வகைக்குப் பலம் 1, கோழிமுட்டை 2, கொடி வேலி பலம் 1, வெள்ளறுகு, சிவனார் வேம்பு, சங்கவேர், சங்கங்குப்பி வேர், கருடன் கிழங்கு, அமுக்கிராக் கிழங்கு, வெள்ளெருக்கு, வெளாவேர், ... வேர், பரங்கிக் கொட்டை வகைக்குப் பலம் 1, கொசங்கொட்டை 100, தேங்காய் 1 எல்லாம் ஒன்றாய்ப் பொடி யிடித்துக் கொள்ளவும். கருபேசம் போகும்.

ஆ. **முறை**

நஞ்சது போக்கி நல்லின வறுப்பாய் அஞ்சாமல் சூரணம் அதுபொடி செய்து வஞ்சிபொற் றலைசாற்றில் ஒருநாள் அரைத்துக் கொஞ்சிய தெங்கங்காய் தண்ணீர் பாலொரு நாளரைத்து, இசவு பதத்தில் யெடுத்து நீ சிமிழில் வைத்துக் கொண்டு அரும்பாகத்துடன் விஷத்துக்கு எருக்கிலைச் சாற்றில் கொடுக்கவும். நல்ல விஷத்துக்கு வேலிப்பருத்திச் சாற்றில் கொடுக்கவும்.

3389. இராமதேவர் சூத்திரம்

1 **நூலகக் குறிப்பு**

அ. 2404-2

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. இராமதேவர்

ஆ. இராமதேவர் சூத்திரம் 10

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 10

3. **தோற்றக் கூறுகள்**

அ. 6 ஏடு; 12 பக்கம்

ஆ. நீளம் 19.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
ஏட்டெண் 24ல் நூல் தொடங்குகிறது
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காணப்பா ஏரியிலே விளைந்த பிண்டம்
கடிதான மாங்கிஷத்தோ டெடுத்து வந்து
பூணப்பா பொரிகாரம் பொரித்துக் கொண்டு
பிண்டத்தின் வாய்திறந்து அதனுள் போடு
ஆணப்பா பெண்ணோடே கூடி னாற்போல்
அப்பனே நாதமங்கே இறங்கும் பாரு
தோணப்பா லோகத்தால் சட்டி யொன்றில்
சுகமாக யினங்களையும் அதனில் போடே.

(1)

ஆ. முடிவு

ஆடலா மிதனாலே கோடா கோடி
அளவற்ற வித்தையெல்லாம் இதற்குள் ளாச்சு
ஓடலா மிதினாலே குளிகை செய்து
உசத்தியுள்ள மலைகளெல்லாம் ஏறிப் பார்க்க
நாடெல்லாம் திரிந்தாலும் இந்தப் போக்கு
....

(10)

3390. மருந்து செய்முறை

1. நூலகக் குறிப்பு

அ. 2404-3

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. மருந்து செய்முறை
இ. மருத்துவம்
ஈ. உரைநடை
அச்சில் ஏறத்தாழ 10 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**
அ. 10 ஏடு; 20 பக்கம்
ஆ. நீளம் 19.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**
அ. தொடக்கம்
பேதி மருந்து:- காட்டு எருமைப்பால் விராகனெடை 1, வெடியுப்பு விராகனெடை 1, இரசம் விராகனெடை 1, காந்தம் விராகனெடை 1, கெந்தகம் விராகனெடை 1, உள்ளி விராகனெடை 1, கடுக்காய் விராகனெடை 1, வசம்பு விராகனெடை 1, திப்பிலி விராகனெடை 1, திப்பிலி மூலம் விராகனெடை 1, ஓமம் விராகனெடை 1, மிளகு விராகனெடை 1 ஆக எல்லாம் ஒண்ணாய்த் தேங்காயினுள்ளே போட்டுப் புடம் போட்டு அரைக்கவும்.

ஆ. முடிவு
வீர மெழுகு:- வீரம் விராகனெடை 1, முருங்கைப் பூச்சாறு, கழுதைப்பால், முலைப்பால் கரண்டியில் விட்டு எரிக்கவும். மெழுகாகும்.

3391. இந்திர சாலம்

1. **நூலகக் குறிப்பு**
அ. 2405-1

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. இந்திர சாலம் - மூன்றாங் காண்டம்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள் 298

3. தோற்றக் கூறுகள்

அ. 53 ஏடு; 106 பக்கம்

ஆ. நீளம் 27.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. பழுதுற்ற நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மானொருகை மழுவொருகை தரித்த நாதன்
 வாதமது வழியுரைத்த ..... யந்தம்
நானொருகை இந்திரமாஞ் சால வித்தை
 நவிலுகிறேன் ....க்கள் காண
தானொருகைக் கருக்குருவா மூலி வேர்கள்
 தப்பாமல் வழலை.. ..... திரகள்
வானொருகை பூவொருகை வேதத் தந்தி
 மாமுகத்தோன் ...... வருத்து றானே.

(1)

ஆ. முடிவு

கொள்ளவே வாதவித்தை நோக்கு வித்தை
 கூறினது ரெண்டாங்காண் டத்தைப் போலே
விள்ளவே யில்லையாம் ஆன தாலே
 வேறொருத்தர் காணவே ஈய வேண்டாம்
துள்ளவே குலைதெரிக்குஞ் சொன்னே னப்பா
 சுகமுண்டு சொன்னபடி நடந்தா யானால்

தள்ளவே மாட்டார்கள் ரெண்டாங் காண்டம்
தபோதனங் கருமானந் தங்க முற்றே.

(298)

3392. அகத்தியர் முதற்காண்டம் 300

1. **நூலகக் குறிப்பு**

அ. 2405-2

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் முதற்காண்டம் 300

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 300

3. **தோற்றக் கூறுகள்**

அ. 61 ஏடு; 122 பக்கம்

ஆ. நீளம் 27.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. முதலேடு இல்லை
உள்ளவை சிதைந்த நிலை

எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

காணவே சொல்லிவிட்டே னிந்நூ லப்பா
கருணையுள்ள பெரியோர்கள் சித்தர்க் காகும்
தோணவே யிந்நூலை வெளியில் போட்டால்
தொலையாத பாவம்வந்து நரகில் வீழ்வாய்
பூணவே யிந்நூல்தா னுலகில் கிட்டா
பொன்கோடி ஈந்தாலும் வெளியில் சொல்லார்
ஆணவத்தால் சொல்லிவிட்டேன் இந்த நூலை
யாருக்குந் தெரியாம லடக்கிப் போடே,

(6)

ஆ. முடிவு

காண்டமுடன் கர்மசூத்தி ரம்முந் நூறு
கட்டினேன் கர்மகாண்டந் தான்முந் நூறு
தூண்டுவயித் தியசெந்தூ ரம்முந் நூறு
துலங்குமிந்த முதற்காண்ட முந்நூற் றோடே
ஆண்டதொகை ஆயிரத்திரு நூறும் பாரு
அரசனாணை யார்க்குமிதை அறைந்தி டாதே
தாண்டவங்க ளாடுமடா இதுமுந் நூறு
சத்தியமா முதற்காண்டந் தாமுத் தாமே.

(300)

முற்றும்.

3393. இந்திர சாலம் - இரண்டாம் காண்டம்

1. நூலகக் குறிப்பு

அ. 2405-3

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. இந்திர சாலம் - இரண்டாங் காண்டம்
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள் 150

3. தோற்றக் கூறுகள்

அ. 29 ஏடு; 58 பக்கம்
ஆ. நீளம் 27.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. சிதைந்த நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தானமுத்தி வைத்தியகாண் டத்தி லுள்ள
சகலமருந் துள்ளதெல்லாந் தகுதி யாக

வானமுத்தி (சித்தி)பெற்ற பெரியோ ரப்பா
  மகத்தான வாதவித்தை இனிமேல் சொல்வோம்
மானமுத்தி குமரகுரு பரனார் பாத
  மனுடாமுத் தினியுரைப்பே னாதி யந்தம்
ஞானமுத்தி யருந்தவத்தோர் துரியா தீதம்
  நாதவிந்து ஒன்றான பூரணமே கேளே.

(1)

ஆ. முடிவு

பயன்சொல்வார் .... மென்று கேட்பார்
  பண்புடனே நம்முடைய வர்க்கே மென்று
நிசஞ்சொல்வா யப்போது நீதான் வந்த
  நினைவென்ன வென்றுமவர் கேட்டா ரானால்
சுயங்கிருத மார்புனக்கு வேண்டிய செய்தி
  சொல்லியே யடிவணங்கித் தொழுதா யாகில்
நயம்பெறவே கேட்டதெல்லாந் தருவா ரப்பா
  நவலோகப் பதியொன்றும் நவிலு வாரே.

(150)

3394. நோய்க்கு மருந்து

1. நூலகக் குறிப்பு

அ. 2406

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. நோய்க்கு மருந்து

இ. மருத்துவம்

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 10 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 12 ஏடு; 24 பக்கம்

ஆ. நீளம் 27 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. ஒரு பெரிய நூலிலிருந்து சிதறிய சில ஏடுகள். சுமாரான நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சுரங்களுக்குச் சூரணராசன்:- சித்திரமூலம், முக்காவேளை வேர், சாரனை வேர், கறிமுள்ளி வேர், கண்டங்கத்திரி வேர், பெருமருந்து வேர், வட்டத்திருப்பிலி வேர், நன்னாரி வேர், மூக்குறட்டை வேர், காட்டுமல்லிகை வேர், நொச்சில் வேர், புங்கம்பட்டை, கறிப்பாலை வேர், தையாந்தகரை, கோரைக்கிழங்கு ஆக மொத்தம் 15. திரிகடுகு, திரிபாலை, திப்பிலி மூலம், செவ்வியம், பெருங்காயம், கோஷ்டம், வெண்வசம்பு, ஓமம், பெருந்திப்பிலி, கடுகுரோகணி, ஆயில்பட்டை, வாய்விளங்கம், மஞ்சள், கஸ்தூரி மஞ்சள், சிறுதேக்கு, வெட்பாலை அரிசி, அக்கிறாகாரம், சீனக்காரம், வெண்காரம், எவட்சாரம், சத்திச் சாரம், வளையலுப்பு, பொட்டிலுப்பு, இந்துப்பு, கல்லுப்பு, மிதிஉப்பு, ஒட்டடை, சுத்தி பண்ணின சேபாலம் பருப்பு ஆக மருந்து 52ம் கொண்டு வந்து ஒக்கப் போட்டுச் சூரணம் பண்ணின இந்தச் சூரணத்துக்கு மூணத்தனை சுத்தி பண்ணின அவிபத்திரிவேர் சூரணங் கூட்டிக் கலந்து வெருகடிப் பிரமாணம் வெந்நீரில் கொள்ள சுரம், நடுக்கல், குளிர் காய்ச்சல், பழங்கய்ச்சல், அத்திசுரம், வாத சுரம், பித்த சுரம், சேத்துமசுரம், உள்மாந்தம், வாதம் எண்பது, உதரரோகம், உதிரவாயு, குன்மம், அகிலிகை, பீலிகை, பெருவயிறு, நீராமை, விஷப் பாகம், பாண்டுரோகம், சோகை, தலை சுற்றல், அசீரணம் நாலுவகை, அக்கினி மந்தம், பக்கச்சூலை, கிருமிசத்தி, விக்கல், நெரிகுரல், காச்சுவாசம், கிரந்தி எல்லாம் தீரும்.

ஆ. முடிவு

நாக செந்தூரம்:- துத்தநாகம் சட்டியிலிட்டு நெரிஞ்சல் சமூலமும் போட்டு உலையில் கரிபோட்டு ஊதி நாயுருவிக் கட்டில் துழாவப் பஸ்பமாம். கல்வத்தில் விட்டு அரைத்து அரிச்சுக் கொண்டு குப்பைமேனிச் சாற்றில் சாமம் அரைத்துப் புடம். குமரிச்சாற்றில் 3 புடம் மடக்கிலே வைத்து மேல் மூடி சீலைமண் செய்து கெசபுடமிடவும். திப்பிலி, இலவங்கப்பொடியும் செந்தூரமும் பசுவின் நெய்யில் கொடுக்க மேகம் இருபத்து நாலுங் குணமாம். கைகண்டது.

3395. சோதிடச் செய்திகள்

1. **நூலகக் குறிப்பு**

   அ. 2407

2. **உள்ளீடு : நூல் விவரம்**

   அ. ....
   ஆ. சோதிடச் செய்திகள்
   இ. சோதிடம்
   ஈ. செய்யுளும் உரைநடையும்;
   அச்சில் ஏறத்தாழ 30 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

   அ. 32 ஏடு; 64 பக்கம்
   ஆ. நீளம் 16.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 7,8 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து
   ஊ. சுமாரான நிலை
   எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

   அ. தொடக்கம்

   மேஷம் - வெள்ளாளன், துலாம் - கோமுட்டி, ரிஷபம் இடையன், விருச்சிகம் - வேடன், மிதுனம்

கண்ணான், தனுசு - தட்டான், கடகம் - சக்கிலியன், மகரம் - வண்ணான், சிங்கம் - இராசன், கும்பம் - குயவன், கன்னி - நாதன், மீனம் வள்ளுவன் ஆக இராசி 12க்குச் சாதி 12.

ஆ. முடிவு

தெய்வப் பலன்:- பரமசிவன், பார்வதியும்; பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், பூணூல்காரன், தவசி அப்பன், சங்குசேங்கண்டி, ஓட்டியான், அக்காரன், பேச்சி அம்மன் இப்படி பல தேவதைகளுமுண்டு. அதுக்கு முன்னோடினவன் கறுப்பன்; ஒண்டிக்காரன்; அவன் நிலை குத்துக்கல்லு, முச்சந்தி வட்டியாட அரவான் தோழன்; பள்ளம் சுள்ளை அரசமரம், தோப்பு இப்படிக் கொத்த தலத்தில் உச்சாடித்திரியறவன். இந்தத் தெய்வங்களை வெகுநாள் மறந்து இருப்பதுமுண்டு. பின்னும் ஒரு தாயாதிக்காரன் பொழுதே தாட்டு வந்த பிசுகினாலே குற்றமுண்டு. பின்னும் ஒரு பெண் பிழை தெய்வத்துமேல் நொந்து போயிருக்கிறாள். பின்னும் ஒரு பெண் தெய்வத்தைக் கும்பிடப் பிணி தீரும்.

3396. அறிவானந்த சித்தியார்

1. நூலகக் குறிப்பு

அ. 2408-1

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. வலங்கை மீகாமன்

ஆ. அறிவானந்த சித்தியார்

இ. தத்துவம்

ஈ. செய்யுள் 317

3. தோற்றக் கூறுகள்

அ. 38 ஏடு; 76 பக்கம்

ஆ. நீளம் 25.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. சில ஏடுகளின் இடதுஓரம் முறிந்துள்ளது. பொதுவாக நல்லநிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

உற்ற முறைமை யொருநூலாற் செய்பவர்க்குக்
கற்பகத்தின் றாளிணையே (காப்பெ)ன்றிங் - குற்றவர்கள்
பாதமலர் மேற்கொண்டு பாடவொருப் பாடுகுரு
நாத(னிரு) தாளெனது நா.

(1)

ஆ. முடிவு

வெளியாகி வேதாந்த மெய்ப்பொருளு மாகி
யொளியாகி நின்றமுத லொன்றைத் - தெளிவாக
வந்துபர மானந்த வாழ்வெல்லா மின்றெனக்குத்
தந்தபிரான் றாளே சரண்.

(317)

இ. பிற்குறிப்பு

பிரபவ வருடம் தை மாதம் 25ந் தேதி வெள்ளிக் கிழமை அசுபதி சுப நட்சத்திரத்தில் சுப வாரத்தில் எழுதி முகித்தேன். அஞ்சல் வெங்கிடாசலம் பிள்ளையவர்கள் பிரதம குமாரன் அறிவானந்த சித்தியாரெழுதி நிறைந்தது. முற்றும்.

3397. தத்துவக் கட்டளை

1. நூலகக் குறிப்பு

அ. 2408-2

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. தத்துவக் கட்டளை

இ. தத்துவம்
ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 15 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 11 ஏடு; 22 பக்கம்
ஆ. நீளம் 25.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. சிதைந்தநிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பராபரமாகிய பரமசிவனார் தராதலம் படைக்கத் தானிணைந்தருளிப் பராபரத் ... பரந்தோன்றி, அப்பரத்தில் சிவந்தோன்றி, சிவத்தில் சத்தி தோன்றி, சத்தியில் நாதந் தோன்றி, நாதத்தில் விந்து தோன்றி, விந்துவில் சதாசிவன் தோன்றி, சதாசிவத்தில் மயேசுரன் தோன்றி, மயேசுரத்தில் ருத்திரன் தோன்றி, ருத்திரனில் விஷ்ணு தோன்றி, விஷ்ணுவில் பிரம்மா தோன்றி, பிரம்மாவில் ஆன்மா தோன்றி, ஆன்மாவில் ஆகாசந் தோன்றி, ஆகாசத்தில் வாயு தோன்றி, வாயுவில் அக்கினி தோன்றி, அக்கினியில் அப்புத் தோன்றி, அப்புவில் பிரிதிவி தோன்றி, பிரிதிவியில் அன்னந் தோன்றுமென்றவாறு.

ஆ. முடிவு

நாடியாவன:- இடை, பிங்கலை, சுழிமுனை, காந்தாரி, அத்தி, அசுவனி, அலம்புருடை, புருடன், குதம், சங்கினி ஆகப் 10.

இது நிற்கும்படி:- சுழிமுனை மூலாதாரத்திலே தோன்றி ஆதாரமாறும் மண்டல மூன்று முருவிக் கபாலத்தை முட்டி நிற்கும். இடை, பிங்கலை இரண்டும்

சுழிமுனையிலே தோன்றிக் கத்தரிக்கைக் கால்போலப் பாகமாறிக் கபாலத்தை முட்டிக் குதிரை முகமாய் நாசியினிடமாய் இடை இடது நாசியிலேயும் பிங்கலை வலது நாசியிலுமாக இயங்குமென்றறிவது. காந்தாரி மூலாதாரத்திலே தோன்றி ஏழு நாடியாய் இச்சைக்குச் சொரூபமாய்க் கண்டத்தைப் பற்றி.....

3398. திருமந்திரம்

1. **நூலகக் குறிப்பு**

 அ. *2409-1*

2. **உள்ளீடு : நூல் விவரம்**

 அ. *திருமூலர்?*

 ஆ. *திருமந்திரம்*

 இ. *தத்துவம்*

 ஈ. *செய்யுள் 400*

3. **தோற்றக் கூறுகள்**

 அ. *71 ஏடு; 142 பக்கம்*

 ஆ. *நீளம் 24 செ.மீ., அகலம் 3 செ.மீ.*

 இ. *இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது*

 ஈ. *ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்*

 உ. *தெளிவான கையெழுத்து*

 ஊ. *பழுதுற்ற நிலை*

 எ. *குறை*

4. **சிறப்புச் செய்திகள்**

 அ. தொடக்கம்

மாயை யறுக்கும் ....தக் கழித்திடும்
வேகமாய் ஞான வீடிதெனக் காட்டும்
யோகம் பலிக்கு முறுதியாங் காயந்தான்
போகம் பலிக்கும் புகழ்ச்சியிது பாரே.

(1)

ஆ. முடிவு

தூவியே அப்பிரகந் தொந்தித் திரிவங்கம்
காவிய செம்பஞ்சு கலந்துபொடி தூவி
ஓவிய மாக யுருகிநலச் சத்தாகும்
ஆவிய அப்பிரக பீசமிது பாரே.

(400)

5. பிற செய்திகள்

இது பத்தாம் திருமுறையாகிய திருமந்திரமாலை அன்று.

3399. அகத்தியர் பரிபூரணம் 200

1. நூலகக் குறிப்பு

அ. 2409-2

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் பரிபூரணம் 200
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 70

3. தோற்றக் கூறுகள்

அ. 25 ஏடு; 50 பக்கம்
ஆ. நீளம் 24 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. மிகவும் சிதைந்த நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதார மாறும் அகண்ட குருபாதம்
வேதாக மத்தின் விதிமார்க்கம் - மந்தமுறும்

விந்துவே மூலம் விளங்கும்பூ சாவிதியால்த்
தந்திமுகத் தோன்கருணை தான்.

(1)

ஆ. முடிவு

காணப்பா மவுனத்தில் வாசி மூலங்
கருத்துரைத்துக் குருசொன்னால் சாபம் நீக்கிப்
பூணப்பா வென்றுசொன்ன ஆசா னுக்குப்
பொன்கோடி தனமீந்தும் பொருளொப் பல்ல
வீணப்பா லோகத்தி லாசான் என்று
வினைபேசி உபதேசம் வைப்போ மென்பார்
....
....

(70)

3400. மாந்திரீகம்

1. நூலகக் குறிப்பு

அ. 2410

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. மாந்திரீகம்
இ. மாந்திரீகம்
ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 60 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 66 ஏடு; 132 பக்கம்
ஆ. நீளம் 19 செ.மீ., அகலம் 2 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. பல ஏடுகள் இல்லை
உள்ளவை மிகவும் செல்லரித்த நிலை
எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

கண்ணைக் கட்ட:- ஓம் என்னுட மேனி ஈஸ்பரன் காவல்; இருதயம், மார்பு, பரமேஸ்பரி காவல்; உன்னதமான உடல் முப்பத்திரண்டங்குலமும் ஓமென்ற அட்சரங் காவல்; சென்னியில் வீரபத்திரன் சிறப்புடனிருந்து, சித்தமே கிளந்து, பொன்னிறமான வயிரவநாதர் என்னைச் சுற்றிலும் நின்று காக்கச் சுவாகா.

ஆ. முடிவு

ஓம் அரகரா முத்துப் பாவாடராயா அகோர வண்ணிய கோலாகலா, வீராதிவீரா, ஆங்காளி வரத்தால் வந்து...த்த அழகுபரவாடைராயா, வாவா மேக வாகனப் புரவியும், ஆயிரந் துலாங்கத்தியும் அண்டரும் நடுநடுங்க வாவா என் பாவாடையுங் கிழித்து வாவா. அங்காளி பரமேஸ்வரி பரந்தாமன் வாவா. என் வாக்கு பரமேஸ்வரி வா கா. எண்ணி..... பாவாடராயா. அவ்வும் சவ்வும் நசி மசி கட்டு கட்டு முட்டு முட்டு அரி அரி எறி எறி ஐயும் கிலியும் சவ்வும் சிவாய நமா.

3401. மருந்து செய்முறை

1. **நூலகக் குறிப்பு**

அ. *2411*

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. மருந்து செய்முறை

இ. மருத்துவம்

ஈ. உரைநடை

அச்சில் ஏறத்தாழ 60 பக்கம் வரும்

3 **தோற்றக் கூறுகள்**

அ. 82 ஏடு; 164 பக்கம்

ஆ. நீளம் 26 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. பல தனி ஏடுகள் ஒன்றாகச் சேர்க்கப்பெற்ற சுவடி. சுமாரான நிலை

எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

பெரும்பாட்டுக்கு மருந்து:- வேலம் பிசின் அரைச்சுப் பசுவின் பாலில் குழப்பிக் கொடுக்கவும். இது ஒரு முறை.

நாகல் கொழுந்து பட்டை, எருமை மோர் விட்டு இடித்துச் சார் பிழிந்து சந்தனம் 5 விராகனெடை போட்டுக் காய்ச்சிக் கொடுக்கவும். பத்தியம் இல்லை.

ஆ. முடிவு

வெள்ளைப் பாஷாணம்:- வெள்ளைப் பாஷாணம் கட்டியாக எடுத்துக் கலசத்தில் மூலபுளி போட்டு அதுக்குள் கட்டியை வைத்துச் சில்லுபோட்டுச் சீலைசெய்து கொக்குப் புடம் போட்டு எடுத்துப் பனைமட்டைச் சாற்றில் சுருக்குக் கொடுக்கவும். கொண்டு 10க்கு ஒன்று கொடுக்கவும். தாம்பூரத்தில் கொடுக்கவும்.

ஆத்துக்குமட்டிக்காய் கொண்டு வந்து அதுக்குள் நத்தை மாமிசத்தைக் கொண்டு வந்து சேரு. ஒன்றும் ஒன்றும் வைத்துக் கீழதுமேலதுவாய் வைத்துக் கிண்டி கையை மூடிச் சீலைசெய்து முழப்புடம். மணி இறங்கும். அதை எடுத்துத் தாம்பூரத்தில் கொடுக்கவும். வயது 6.

3402. அகத்தியர் பரிபூரணம் 200

1. நூலகக் குறிப்பு

அ. 2412

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் பரிபூரணம் 200
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 200

3. தோற்றக் கூறுகள்

அ. 37 ஏடு; 74 பக்கம்
ஆ. நீளம் 20.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 10-12 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. முறிந்த நிலை. 100ஆம் ஏடு இல்லை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியான மணக்கோலஞ் செய்யும் நாழி
.... மாச்சு
வேதியனு மாயவனுந் தானாய் ......
விமலனார் .... வரத்தை யீந்தார்
நீதிபெறச் சாருதியாய்த் தெட்ச ணாய
நிலையான சார்பொதிய ....
யாதியொரு காரணத்தால்ப் பரைதா னீன்ற
வாகடந்தான் பராபரமா மருளைப் பாரே

(1,

ஆ. முடிவு

வருத்துவேன் சாகாமல் இருக்கச் சொல்லி
வளமான கற்பத்தைக் கொண்டு ஏறு

இருத்துவேன் சமாதியிலே தீட்சை எல்லாம்
இறையளவுந் தப்பாமல் என்னைப் போலாய் (200)

(இப்பாடலில் இரண்டு அடிகள் குறைவாக உள்ளது)

3403. அகத்தியர் வைத்திய பூரணம் 400

1. **நூலகக் குறிப்பு**
   அ. 2413

2. **உள்ளீடு : நூல் விவரம்**
   அ. அகத்தியர்
   ஆ. அகத்தியர் வைத்திய பூரணம் 400
   இ. மருத்துவம்
   ஈ. செய்யுள் 401

3. **தோற்றக் கூறுகள்**
   அ. 66 ஏடு; 132 பக்கம்
   ஆ. நீளம் 34.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 7,8 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து
   ஊ. 1-2 ஏடுகள் இல்லை. உள்ளவை சுமாரான நிலை
   எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**
   அ. தொடக்கம்

வெளிவிட்டேன் ஐம்பதிலே மூன்றுஞ் சொன்னேன்;
விபரமாய் முந்நூற்றில் செந்தூரஞ் சொன்னேன்;
வழியாக யெண்பதிலே முப்பூச் சொன்னேன்;
வயித்தியந்தான் ஆயிரத்தஞ் ஞூறில் சொன்னேன்;
அழியாத முந்நூற்றில் கர்ம தர்மம்
அன்பாகச் சொன்னதைநீ யறிந்து பாரு;
முழியாதே நாலுறு ரெண்டுஞ் சொன்னேன்
மூடினதோர் ரத்தினமாம் நாலு நூறே. (9)

ஆ. முடிவு

முத்தான புலத்தியமா ரிஷியே அய்யா
முச்சூடு மாதியந்தம் நன்றாய்ப் பாரு;
சித்தான வைத்தியபூ ரணமீ தப்பா
தேசத்தில் கிட்டாது திறமாய்க் கேளு
பத்தான பதிதனிலே வைத்துப் பூசி
பதிவான வாசியது சித்தி யாகும்
வித்தான பிறவியாம் ஞானஞ் சித்தி
வேதாந்த பூரணத்தின் வெளிசேர் முற்றே.

அகத்தியமாமுனி அருளிச் செய்த வயித்திய பூரணம் நானூறு எழுதி முகிந்தது. சச்சிதானந்த குருவே துணை.

5. பிற செய்திகள்

இந்நூல், 'தட்சிணாமூர்த்தி வைத்திய பூரணம் 400' எனவும் வழங்கப்படுகிறது. தமிழ்ப் பல்கலைக்கழகச் சுவடி விளக்க அட்டவணை 1033 (தொகுதி 3, பக்கம் 44)இல் காண்க.

3404. சித்தராரூட நொண்டி

1. நூலகக் குறிப்பு

அ. *2414*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. *சித்தராரூட நொண்டி*
இ. *மருத்துவம்*
ஈ. *செய்யுள்*

3. தோற்றக் கூறுகள்

அ. *31 ஏடு; 62 பக்கம்*
ஆ. *நீளம் 32.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.*
இ. *இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது*
ஈ. *ஒரு பக்கத்திற்கு 7,8 வரிகள்*
உ. *தெளிவான கையெழுத்து*

ஊ. சிதைந்த நிலை

எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

அத்திமா முகவன் செய்ய
அடியிணைக் ....
சித்தரா ரூடந் தன்னில்
சிறந்திடும் பொருளை யோர்ந்து
சுத்தமா யெவர்க்கும் தோன்றச்
சுருக்கமாய் நொண்டிச் சிந்தாய்
வித்தக ரருளி னாலே
தமியனும் விளம்ப லுற்றேன்.

ஆ. முடிவு

தரைமிசை யொருநூறு பருவமுஞ்
சரிவரவே யிருந்துதான் வாழ்ந்து
திருமகள் விளங்கப் பெற்றுப்
பதினாறு சிறுவரைப் பெற்று
முத்தி சேர்ந்து வாழி.
சித்தராரூடம் நொண்டி நாடகச் சிந்து எழுதி நிறைந்தது.
சம்பூரணம்.

இ. பிற்குறிப்பு

ஆனந்த வருடம் ஐப்பசி மாதம் 8ந் தேதி மங்கள வாரமும் சதுர்த்தசியும் உத்திர நட்சத்திரமும் கூடிய சுப தினத்தில் தத்தமங்கலத்திலிருக்கும் கிஷ்ட்டிணய்யன் அவர்களுக்குச் சித்தராரூடம் நொண்டி நாடகச் சிந்து குழந்தைவேல் வாத்தியார் எழுதி நிறைந்து. சம்பூரணம்.

3405. திருமந்திரக் கட்டளை

1. **நூலகக் குறிப்பு**

அ. 2415-1

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. திருமந்திரக் கட்டளை
இ. தத்துவம்
ஈ. உரைநடை
அச்சில் ஏறத்தாழ 25 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 27 ஏடு; 54 பக்கம்
ஆ. நீளம் 22 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. 1-3 ஏடுகள் இல்லை
உள்ளவை செல்லரித்த நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

இரண்டாவது தத்துவம்:- நாடி 10க்கு விபரம் - இடகலை, பிங்கலை, சுழிமுனை, சிங்குவை, அத்தி, காந்தாரி, அசுவன்னி, அலம்புருடை, புருடாரி, சங்குனி, குதம் ஆகப் 10.

ஆ. முடிவு

.....ஆக இந்தப் பதின்மூன்றும் நரகத்துக்கு ஏதுவாய், சென்ம மரணத்துக்கும் ஏதுவாய், சகல சமுசாரத்துக்கும் ஏதுவாய், சகல பாவத்துக்கும் ஏதுவாய் இருக்கும். இது தீரும் வகை யெப்படியென்றால் தன்னுட விவேகத்தினாலும் சித்த விசுவாசத்தினாலும் பெரியவாளிடத்தில் புத்தியுடனே கேட்கிற கேள்வியினாலேயும் குருகடாட்சமென்கிறதினாலே வெட்டி சின்னபின்னப் படுத்தி மோட்சத்தை அறிய வேணுமென்று அதிகபரமாகிய மனத்தோடே கூடியிருக்கவும்.

3406. நாதாந்தச் சக்கரம்

1. நூலகக் குறிப்பு

அ. 2415-2

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. நாதாந்தச் சக்கரம்

இ. தத்துவம்

ஈ. செய்யுள் 12

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு; 8 பக்கம்

ஆ. நீளம் 22 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

ஏட்டெண் 28ல் நூல் தொடங்குகிறது

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அண்டத்தி லோடி யோடி
அலைகின்ற மனித னேகேள்
பிண்டத்தைக் கண்டா லல்லால்
பெரியவ ராக மாட்டார்;
கண்டத்தின் வழியே சென்று
கருணையாம் பதத்தை நோக்கில்
தொண்டர்க்குத் தொண்ட னாவான்
சுருதியும் வெளிய தாமே.

(1)

ஆ. முடிவு

சாதிகுரு சமயகுரு வென்று சொல்லித்
தானுரைத்துத் திரிவார்க்குத் தவமங் கேது

வாதுசெய்து நூல்கள்கற்றுத் திரிவ தல்லால்
வன்பிறவி யறிவதற்கு வகையங் கேது
நீதியெனுந் தவமறியார் நிலையுங் காணார்
நிலையில்லாக் குருக்களுக்கு நிலையங் கேது
சோதியெனுங் குருநாதன் தன்னை யன்றித்
தொல்புவியில் குருக்களென்று சொல்லொண் ணாதே.
(12)

நாதாந்தச் சக்கரம் முற்றிற்று.

3407. அண்ட தரிசனம்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2415-3

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....
ஆ. அண்ட தரிசனம்
இ. தத்துவம்
ஈ. உரைநடை
அச்சில் ஏறத்தாழ 8 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

அ. 8 ஏடு; 16 பக்கம்
ஆ. நீளம் 22 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. செல்லரித்த நிலை
ஏட்டெண் 32ல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

பராபரமாகிய நாதாந்த சோதி, நிராதாரமாகிய ஓரண்டம் படைக்க வேண்டித் தனது பதியானிடத்

தெய்த ஓர் புறவட்டத்திற் தருபாகிற மாதா ...ண்டு வடிவாகிய தறாபத்திலே சிற்பரந் தோன்றி, பரத்தில் சிவந்தோன்றி, சிவத்தில் சத்தி தோன்றி, சத்தியில் பூதாதி தோன்றி, பூதாதியில் நாதந் தோன்றி, நாதத்தில் விந்து தோன்றி, ...

ஆ. முடிவு

கீழ் ஏழு லோகமாகவும் அதுக்கு மேலெல்லாம் மேலெழு லோகமாகவும் இப்படிக் கண்டு கொண்டு அப்படித் தானவனாய்க் கண்டு தன்னையறிந்து தான்அவன் என்றதும் அறிந்து சோதியோடே நிற்க என்றவாறு. சத்தி உடலும் சிவன் உயிரும் சத்தி விந்து நாதம்; சிவம் பரம் என்றவாறு. இப்படி அண்டத்தின் உண்மையுங் கண்டு பிண்டமெல்லாம் தான் அவனாகக் கண்டு கொள்ளவும்.

அண்ட தரிசனம் முற்றும்.

5. பிற செய்திகள்

இதே பெயரில் அமைந்ததும் 31 செய்யுள்களால் ஆனதுமாகிய ஒரு சுவடி (தமிழ்ப் பல்கலைக்கழக நூல் எண்.2162, தொகுதி 5. பக்.227)யில் உள்ளது.

3408. பரமஞான விளக்கம்

1 நூலகக் குறிப்பு

அ. 2415-4

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. பரமஞான விளக்கம்

இ. தத்துவம்

ஈ. உரைநடை

அச்சில் ஏறத்தாழ 10 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 10 ஏடு; 20 பக்கம்

ஆ. நீளம் 22 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. செல்லரித்த நிலை
ஏட்டெண் 43ல் நூல் தொடங்குகிறது
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பரமஞானமாவது, பரமாகிய மூலாதி பாதத்திலே பரனென்றும், பரையென்றும், பரைகுடிலை யென்றும், பரநாத மென்றும், பரவிந்துவென்றும் ஆதாரமாயிருக்கும். இதன் விரிவு பராபரமாகிய நாதாந்த சோதி பராபரமாகிய பெரும்பாழ் வெளியில் ஆண் பெண் அலி மூன்றும் அல்லாதவனாய் இருள் ஒளி வெளி மூன்றுக்கும் அப்பாலே விசுவப்பிரகாசனாய் விரையில்லாத வித்தாய் சருவானந்த மயமாய், சர்வலோக கர்த்தனாய், சர்வமூல தன்மயமாய்த் தானே தானாய்.....

ஆ. முடிவு

திருமூலர் அறிவு சிவானந்தருக்கு அருளிச் செய்தார். அறிவு சிவானந்தர் நாதாந்த நமசிவாயருக்கு அருளிச் செய்தார். நாதாந்த நமசிவாயன் அறிவு சிவானந்தருட பிள்ளை அறிவு சிவசத்தி, நாதாந்த நமசிவாயன் தான் அறிவு சிவானந்தரும், அறிவு சத்தியும், இந்த நான்கு பேருடைய கூட்டமே பிண்டரண்டம் எல்லாம். இப்படிச் சத்தியும் சிவனும் என்று பட்டஇடம் பேரொளிக் கொழுந்தே கடவுள் நாடியாய் நிற்கும். கடவுள் நாடியாவது சுழிமுனை.

3409. மருந்து செய்முறை

1. நூலகக் குறிப்பு

அ. *2416*

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. மருந்து செய்முறை

இ. மருத்துவம்

ஈ. உரைநடை

அச்சில் ஏறத்தாழ 25 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

அ. 20 ஏடு; 40 பக்கம்

ஆ. நீளம் 38 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. சிதறிய சில ஏடுகளின் தொகுப்பே இச்சுவடி. சிதைவுற்ற நிலை

எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

மேகத்துக்கு எண்ணெய்:- சின்னிச்சாறு படி ¼, விளக்கெண்ணெய் படி ¼, வெங்காயம் பலம் 1, பனங்கருப்பு கட்டி பலம் 1 சேர்த்துச் சாப்பிட்டு பத்தியம் பிடிக்கவும்.

ஆ. முடிவு

..... சாரப்பருப்பு, அதிமதுரம், கோஷ்டம், வால்மிளகு, மாசிக்காய், குங்குமப்பூ, கோரோசனை, கஸ்தூரி, இலவங்கப் பத்திரி, அதிவிடையம், மஞ்திஸ்ட்டி, சித்தரத்தை, சிறுதேக்கு, செவ்வியம், திப்பிலி ஆக வகைக்கு விராகனெடை 3; சூடன் விராகனெடை 2; வெல்லம் பலம் 8, கஞ்சா பலம் 4, தேன் படி ¼, நெய் படி ¼, பெருங்காலம் பலம் ¼, பூண்டு பலம் 4, கரும்புச்சாறு படி ¼, பனங்கள்ளு படி ¾, பால் படி ¾, எள் படி ¼, தேங்காய் 2, வட்டு

பலம் 10 ஒரு வேளைக்கு தேற்றான் விரைப் பிரமாணம் சாப்பிடுகிறது.

3410. அகத்தியர் சாலத்திரட்டு

1. நூலகக் குறிப்பு

அ. 2417-1

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் சாலத்திரட்டு
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 41

3. தோற்றக் கூறுகள்

அ. 7 ஏடு; 14 பக்கம்
ஆ. நீளம் 33.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7,8 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து
ஊ. நல்லநிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காரணமாய் மூலவட்டந் தன்னில் நிற்கும்
கணபதியும் வல்லபையும் தேவர் காப்பு
பூரணமாய்ப் பராபரையும் சிவனும் நந்தி
பொருந்திநின்ற பஞ்சகர்த்தாக் கணங்கள் காப்பு
வாரணத்தி லேறிவிளை யாடுங் கந்தன்
மன்னுகுரு அருள்சிறந்த குமரன் காப்பு
நாரணனும் நான்முகனும் அருள்சி றந்த
நல்லவே தாந்தம்காப்பு காப்புத் தானே.

(1)

ஆ. முடிவு

தானாக யிருந்திருந்து சடைவுண் டாகித்
தானிருந்து போவென்று சொன்னால் போவார்;
வீணாக மற்றதெல்லாம் காணத்தா னென்ன?
விபரமாய்ச் செகச்சாலம் ஆயிரந்தான் பாரு
தோணாத பேர்களுக்குத் தோணச் சொன்னேன்
துவங்குதடா போல்விளங்கு மக்கித்தா னப்பா
காணார்கள் கண்டறிந்தோம் இந்த வாதிக்
காறாட்டக் கழுதையென்ற சென்மந் தானே.

(41)

3411. ரோமரிஷி சூத்திரம் 100

1. **நூலகக் குறிப்பு**
   அ. 2417-2

2. **உள்ளீடு : நூல் விவரம்**
   அ. ரோமரிஷி
   ஆ. ரோமரிஷி சூத்திரம் 100
   இ. மருத்துவம்
   ஈ. செய்யுள் 100

3. **தோற்றக் கூறுகள்**
   அ. 18 ஏடு; 36 பக்கம்
   ஆ. நீளம் 33.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து
   ஊ. நல்லநிலை
   எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**
   அ. தொடக்கம்; ஆ. முடிவு
   காண்க:- தொடர் எண்.2297-1.

5. **பிற செய்திகள்**

இதனையடுத்துச் 'சுந்தரமூர்த்தி 36' என்னும் நூலின் ஏழு பாடல்கள் எழுதப்பெற்றுள்ளன.

3412. இராமதேவர் வைத்திய சூத்திரம் 80

1. **நூலகக் குறிப்பு**
   அ. *2417-3*

2. **உள்ளீடு : நூல் விவரம்**
   அ. *இராமதேவர்*
   ஆ. *இராமதேவர் வைத்திய சூத்திரம் 80*
   இ. *மருத்துவம்*
   ஈ. *செய்யுள் 83*

3. **தோற்றக் கூறுகள்**
   அ. *13 ஏடு; 26 பக்கம்*
   ஆ. *நீளம் 33.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.*
   இ. *இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது*
   ஈ. *ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்*
   உ. *சுமாரான கையெழுத்து*
   ஊ. *நல்லநிலை*
   எ. *முழுமை*

4. **சிறப்புச் செய்திகள்**
   அ. தொடக்கம்

ஆதியிலே அமைந்தவிதி யெழுத்தைக் காண
அருளான நந்திபத மன்பாய்க் கொண்டு
சோதியென நின்றிலங்கும் நாத ரூபி
சுருதியுள்ள வாலைமனோன் மணியைப் போற்றி
நீதியுடன் சஞ்சலிச மாதி செய்து
நின்றனடா ஆதியந்தம் நிலைக்க வேதான்
வாதியென வந்தோர்க்குக் குருவா மிந்நூல்
வசனித்தேன் எண்பதுமே லொன்று மாச்சே.

(1)

ஆ. முடிவு

வணக்கமுள்ள இந்நூலை வெளிவி டாதே
 வஞ்சருடன் பேசாதே வாதா டாதே
இணக்கமிலா மாந்தருட னிணங்க வேண்டாம்
 இன்பமுள்ள வயித்தியரே நுழைய வேண்டா
மணக்குமணை வாரமதில் மனத்தை வைத்து
 வயித்தியநூல் எண்பதுவும் வகையாய்ப் பார்த்துத்
தனக்குமிது பொருளெனவே வணங்கிப் போற்றிச்
 சதாகாலங் குருபதத்தில் சார்வாய் முற்றே.

(83)

இராமதேவர் எண்பது முற்றும். சொக்கலிங்கம் எழுத்து.

3413. மச்சமுனி 800

1. **நூலகக் குறிப்பு**
 அ. 2418

2. **உள்ளீடு : நூல் விவரம்**
 அ. மச்சமுனி
 ஆ. மச்சமுனி 800
 இ. மருத்துவம்
 ஈ. செய்யுள் 661

3. **தோற்றக் கூறுகள்**
 அ. 121 ஏடு; 242 பக்கம்
 ஆ. நீளம் 33.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.
 இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
 ஈ. ஒரு பக்கத்திற்கு 7,8 வரிகள்
 உ. தெளிவான கையெழுத்து
 ஊ. 1-7, 97-113 ஆகிய ஏடுகள் இல்லை
 உள்ளவை பழுதுற்ற நிலை
 எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**
 அ. தொடக்கம்

பேதஞ்செய் (கட்சிக்கு) மூல மொன்று
 பிறகுவ... வேர்பிடிங்கி யாடும் பிள்ளாய்

வேதஞ்செய் மசியநவ வமசியந (என்று)
விருதிட்டு நவமசிய யநவமசி யென்று
வாதஞ்செய் சியமவந வென்று மூட்டும்
காடுகாடு மைசொல்லி விட்டேன் நாவால்
போதஞ்செய் வேஷணத்தைப் புகலப் போறோம்
பூமியிலே விடந்தீஞ்சான் பூர முச்சம்.

(34)

ஆ. முடிவு

தெரியவே பெருஞ்சுட்டை வேரைத் தானும்
திங்களிலே காப்பணிந்து செவ்வாய் வாங்கி
அரியவே வெள்ளிசெம்பிற் குளிச மாக்கி
ஆடுகிற கோமாங்க ளாடும் போது
மீறியே பெருவிரலி லிட்டமுக்கிக் கொண்டு
மிதிக்கையிலே நங்குநங் நங்கென் றூணு
ஓரியே கூப்பிட்டாப் போலே கூறும்
ஒருவருக்குங் கோமாமலந் தாடார் பாரே.

(661)

3414. அகத்தியர் பூரண சூத்திரம்

1. **நூலகக் குறிப்பு**

   அ. 2419

2. **உள்ளீடு : நூல் விவரம்**

   அ. அகத்தியர்
   ஆ. அகத்தியர் பூரண சூத்திரம்
   இ. மருத்துவம்
   ஈ. செய்யுள் 215

3. **தோற்றக் கூறுகள்**

   அ. 72 ஏடு; 144 பக்கம்
   ஆ. நீளம் 18 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 6-8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து
ஊ. ஓரங்கள் முறிந்தநிலை
எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

காண்க:- தொடர் எண்.2322-1.

ஆ. முடிவு

மாளாமல் மாண்டிருந்தால் யோக மாச்சி
மார்க்கமிந்தப் படிதானே மெஞ்ஞா விக்கு
மூளாமல் ஆண்டிருப்பார் அரனுந் தாயும்
ஆதிவஸ்து அனாதிவஸ்து ரெண்டுந் தானாய்க்
கேளாமல் கேட்டிருப்பார் நட்ட வோசை;
கிருபையென்ற மனமங்கே புக்கிப் போகும்
வாழ்வான வாழ்வுசிவ யோக வாழ்க்கை;
மற்றதெல்லாம் மாயையென்ற வாழ்க்கை யாமே.
(215)

3415. ஒட்டியம்

1. **நூலகக் குறிப்பு**
   அ. 2420-1

2. **உள்ளீடு : நூல் விவரம்**
   அ. ....
   ஆ. ஒட்டியம்
   இ. மாந்திரீகம்
   ஈ. செய்யுள் 70

3. **தோற்றக் கூறுகள்**
   அ. 20 ஏடு; 40 பக்கம்
   ஆ. நீளம் 31 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு இரண்டு பத்திகள்

உ. தெளிவான கையெழுத்து
ஊ. செல்லரித்த நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காண்க:- தொடர் எண்.2402-2.

ஆ. முடிவு

தண்ணீர் தேத்தி கவுதும்பை
தாளும் குப்பை கீரைவிரை
தண்ணீர் பச்சைக் குளவிந்தம்
காக்கைக் கண்ணும் மிவையெல்லாம்
வெண்ணீர் வேரும் சிறுதேனில்
விதமாய்ப் பார்க்கில் வெவ்வேறே
கண்ணீர்த் தோத்தும் பூதகெணம்
க...யாய் அஞ்சன மிதுவாமே.

(70,

இ. பிற்குறிப்பு

இன்னம் அனேக அஞ்சனம் இருக்கிறது. அகத்தியர் சால காண்டத்திலும், தெட்சணாமூர்த்தி சால காண்டத்திலும் பார்த்துக் கொள்ளவும். இந்த முறைகளெல்லாம் தெரிந்த புண்ணியவான்களால் பார்த்துத் தெரிந்து கொள்ளவும். தெரிந்த போதிலும்தன் உயிர்போல் எல்லாரையும் எண்ண வேண்டியது. பிறருக்குத் தெரியக் கூடாது. சிவமயம்.

3416. வசிய மூலிகை விவரம்

1. நூலகக் குறிப்பு

அ. 2420-2

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. வசிய மூலிகை விபரம்
இ. மாந்திரீகம்
ஈ. உரைநடை

3. **தோற்றக் கூறுகள்**

அ. *18 ஏடு; 36 பக்கம்*

ஆ. நீளம் 31 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு இரண்டு பத்திகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. செல்லரித்த நிலை

ஏட்டெண் 23ல் நூல் தொடங்குகிறது

எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

சீதாசெங்கழுநீர் வேரை 'ஓம் ஸ்ரீம் வசவாபம் தேவி கல்சீ - கறி - குறுகுறு - மூலி சுவாகா' வென்று சொல்லி வேர் அறாமல் வெட்டிப் பிடுங்கித் தாமரை நூலும் கூட்டிக் காராம் பசுவின் நெய்யில் திலதமிடவும். திரிலோகம் வசியமாகும்.

ஆ. முடிவு

எதிரிகளுக்கு மாரணவேலை விபரம்:- செய்தால் மகாப்பாவம். ஞாயிறு வாரத்தில் பல்லியை உயிரோடே பிடித்து, கன்னி நூல் அஞ்சு சாண் நீளம் எடுத்து, அதைப் பல்லி வாயில் திணித்து, தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு, சூடம், சாம்பிராணி இதுகள் நிவேத்தியம் வைத்து; இதை முன் வைத்து ....

5. **பிற செய்திகள்**

இந்நூலுக்கு முன் இரண்டு ஏடுகளில் 64 வசிய மூலிகைகளின் பெயரும் மூலிகைகள் பயன்படுத்தப்படும் வசிய முறைகளின் பெயரும் அட்டவணைப்படுத்தப்பட்டு உள்ளன.

3417. மருத்துவ நூல்

1. **நூலகக் குறிப்பு**

அ. *2421*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 472

3. தோற்றக் கூறுகள்

அ. 27 ஏடு; 54 பக்கம்

ஆ. நீளம் 42.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 12 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. 1,5,6,9,10,20,22,23,31,32 ஆகிய ஏடுகள் இல்லை
உள்ளவை சிதைந்த நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நூல்பார்த்தால் பூரணநூல் தன்னைப் பாரு
நுண்மையு(ள்ள) தீட்சையதில் நுணுக்கம் பாரு
கால்பார்த்து ஏறுதற்குக் கருவைப் பாரு
கருத்துவைத்து இந்நூலைக் கருவாய்ப் பாரு
சேல்பார்த்துக் கொள்வதற்கு ஆயிரத்தைப் பாரு
சிவசிவா யெந்தனுட பக்கம் பாரு
நாள்பார்த்துக் கொள்வதற்குச் சோசியத்தைப் பாரு
நன்மைபெற வேணுமென்றால் குருவைக் காரே.
(14)

ஆ. முடிவு

துடைத்தவுடன் மருள்நீங்கிப் பேசு வான்கேள்
சுகமாகப் பேசியவ னிருப்பான் கேளு
மடைத்தனமாய்க் கருவெளியில்ச் சொன்னா லய்யா
மகத்தான குற்றம்வரும் மனதைக் காரு
அடைத்துவைத்த பொருள்களெல்லா மிதனில் சொன்னேன்
ஆயிரத்தி யிருநூறும் ஆர்தான் காண்பார்

இடத்தில்வெகு கருவறிந்து இடத்தைப் பாரு
இன்பமுள்ள நூலிதனைப் பதனம் பண்ணே.

(472)

3418. மணிக்கிடைக்கயிறு சூத்திரம்

1. நூலகக் குறிப்பு

அ. *2422-1*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. மணிக்கிடைக்கயிறு சூத்திரம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 70

3. தோற்றக் கூறுகள்

அ. 9 ஏடு; 18 பக்கம்
ஆ. நீளம் 24 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காண்க:- தொடர் எண்.2270-2.

ஆ. முடிவு

பிடமது வப்பா பிசகாமல் சொன்னேன்
தடைபட வேண்டாந் தப்பா யிருநூறு
படபட வேண்டாம் பவளம்போ லாய்விடும்
அடவுடன் சொன்னேன் அப்பனே நீயெடே.

(70)

5. பிற செய்திகள்

இந்நூலினை மணிக்கயிறு சூத்திரம் என்றும் வழங்குவர்.

3419. சட்டைமுனி காயகற்பம் 100

1. நூலகக் குறிப்பு

அ. 2422-2

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. சட்டைமுனி

ஆ. சட்டைமுனி காயகற்பம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 33

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு; 8 பக்கம்

ஆ. நீளம் 24 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பாடுகிறேன் காயகற்ப மையங்கரனே காப்பு
பரிவான சின்மயத்தின் பாதங் காப்பு
நாடுகிறேன் சித்தருட பாதங் காப்பு
நலமான மனோன்மணியத்தாய் பாதங் காப்பு
தேடுகிறேன் தனக்குநூல் என்னூல் போலச்
செப்பார்கள் காயசித்தி சித்த ரய்யா
சூடுகிறேன் காயசித்திக் காதி யங்கஞ்
சொல்லுகிறேன் நன்றாகக் கேளு கேளே.

(1)

ஆ. முடிவு

தானே ஆவரை தான்பஞ்ச மூலத்தை
மானே இடித்து மகத்தாம் பொடிதனைத்

தேனில் குழைத்துத் திகட்டாத பற்பமும்
ஊனே கொடுக்க உகாந்தங்கள் தானே.

(33)

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

3420. திருவள்ளுவமாலை

1. நூலகக் குறிப்பு

அ. *2422-3*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. *நாமகள் முதலியோர்*
ஆ. *திருவள்ளுவமாலை*
இ. *பல்வகை நூல்கள்*
ஈ. *செய்யுள்*

3. தோற்றக் கூறுகள்

அ. *7 ஏடு; 14 பக்கம்*
ஆ. *நீளம் 24 செ.மீ., அகலம் 3 செ.மீ.*
இ. *இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது*
ஈ. *ஒரு பக்கத்திற்கு 8-10 வரிகள்*
உ. *தெளிவான கையெழுத்து*
ஊ. *பழுதுற்ற நிலை*
எ. *குறை*

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அசரீரி- திருத்தகு தெய்வத் திருவள் ளுவரோ
டுருத்தகு நற்பலகை யொக்க - இருக்க
உருத்திர சன்மர் எனவுரைத்து வானி
லொருக்கவோ வென்றதோர் சொல்.

(1)

ஆ. முடிவு

நப்பாலத்தனார்:-
அறம்தகளி; ஆன்ற பொருள்திரி; இன்பு

சிறந்தநெய்; செஞ்சொல்தீ; தண்டு - குறும்பாவா
வள்ளுவனார் ஏற்றினார் வையகத்து வாழ்வார்கள்
உள்ளிருள் நீக்கும் விளக்கு.

(47)

3421. நோய்க்கு மருந்து

1. நூலகக் குறிப்பு

அ. *2422-4*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. நோய்க்கு மருந்து

இ. மருத்துவம்

ஈ. செய்யுளும் உரைநடையும்
அச்சில் ஏறத்தாழ 15 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 15 ஏடு; 30 பக்கம்

ஆ. நீளம் 24 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6-9 வரிகள்

உ. பலவிதமான கையெழுத்து

ஊ. பல நூல்களில் இருந்து திரட்டப்பட்டுள்ளது
ஏட்டெண் முறையாக இல்லை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நரம்புச் சிலந்திக்கு மருந்து:- ஒரு விராகனெடை இரசம் வாங்கி வெற்றிலைச் சாற்றில் முறித்து நன்னாரி வேர் ஒரு பலம் அரைத்துக் கலந்து கொண்டு நரம்புச் சிலந்தி புறப்பட்ட காலில் பூசி அனலில் காய்ச்சவும். வியாதி தீரும்.

எருமை மோரும் வெங்காயமும் சாப்பிடவும். மூன்று நாளைக்குத் தாளிச்சட்டியிலே வெந்நீர் வச்சுக் காலை உருவி வெந்நீர் விட்டுப் பிடிக்கவும். நரம்பு வேருடனே விழும்.

ஆ. முடிவு

பேருநல் லெண்ணெய்உரி பின்வெள்ளைச் சாறுரியும்
கூறுமாவி னாள்மூன்றும் கொண்டுலர்த்திச் - சீருடனே
இட்டுத் தலைமுழுக இதமாவெந் நீர்விடத்
தெட்டமண்டைப் பீனிசம்போம் செப்பு.

(மூன்றாமடியில் தளை தட்டுகிறது)

3422. சுந்தரானந்தர் ஞானம் 51

1. **நூலகக் குறிப்பு**
   அ. 2423

2. **உள்ளீடு : நூல் விவரம்**
   அ. சுந்தரானந்தர்
   ஆ. சுந்தரானந்தர் ஞானம் 51
   இ. தத்துவம்
   ஈ. செய்யுள் 51

3. **தோற்றக் கூறுகள்**
   அ. 23 ஏடு; 46 பக்கம்
   ஆ. நீளம் 19.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 5,6 வரிகள்
   உ. தெளிவான சிறிய கையெழுத்து
   ஊ. முதலேட்டின் இடதுபுறம் முறிந்துள்ளது
   மற்றவை நல்லநிலை
   எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

பூரணமு மாதாரம் புலனுஞ் சூட்சம்
பொறியறிந்து ...நின்ற அய்யர் பாதம்

காரணமாய்ப் போற்றிசெய்து அசைபை நீக்கிக்
கண்ணொளியால் விண்ணொளியைக் காண வேண்டி
வாரணமா முகத்தோன்றன் பாதந் தன்னை
மனதில்வைத்து நிராமயத்தின் பாதம் போற்றி
ஆரணமா மகத்தீசர் பாதம் போற்றி
அறைகிறேன் ஞானானந்த மறைகி றேனே.

(1)

ஆ. முடிவு

அரிதப்பா எனைப்போலே பட்ட பாடு
ஆர்படுவார்? அற்புதா னந்தன் வந்து,
அரிதப்பா வென்றுசொல்லி மவுனஞ் சொன்னார்;
அவரைப்போ லுலகத்தில் சித்தன் காணேன்;
அரிதப்பா கவனம்வரை ஓடி மீள்வார்;
ஆச்சரியம் போதகத்தைப் பானஞ் செய்வார்;
அரிதப்பா ஆறுவரை கண்டு மீண்டார்;
அற்புதா னந்தனுட பதந்தான் முற்றே.

(51)

சுந்தரானந்தரருளிச் செய்த ஞானமெழுதி முகிந்தது முற்றும்.

3423. சட்டைமுனி வாதம் 1000

1. நூலகக் குறிப்பு

அ. 2424

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. சட்டைமுனி

ஆ. சட்டைமுனி வாதம் 1000

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 148

3. தோற்றக் கூறுகள்

அ. 39 ஏடு; 78 பக்கம்

ஆ. நீளம் 22 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. சுமாரான நிலை

ஏட்டெண் 108ல் நூல் தொடங்குகிறது

எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

அகண்டபரி பூரணமா முமையாள் பாதம்
அப்புறத்தே நின்றதொரு அய்யர் பாதம்
புகண்டுநின்ற கணேசனொடு நாதாக்கள் பாதம்
புகழான வாக்குடைய வாணி பாதம்
நிகண்டினவே யெனையாண்ட குருவின் பாதம்
நிரைநிரையாய்ச் சொரூபத்தில் நின்றோர் பாத
முகண்டுயெனை யீன்றெடுத்த சின்மயத்தைப் போற்றி
மூவுலகு மெச்சுதற்குக் காப்புத் தானே.

(1)

ஆ. முடிவு

கூடயிந்தச் சாரமென்ற கருவி னோடே
கூட்டப்பா சவ்வீரம் பூரந் தானும்
நாடயிந்த நலமாக மத்திச்சு வைத்து
....
ஓடயிந்தக் கல்லுப்பு வெடியுப்பு சீனம்
உத்தமனே வெண்சாரந் துரிசு சாரம்
மூடயிந்தச் சூட்டொடு மேழுக் குத்தான்
....

(148)

இ. பிற்குறிப்பு

சினேந்திரமாலை முதலேடு முதல் 42 ஏடு வரைக்கும் உரை தவிர பாடல் 101; 43 ஏடு முதல் 47 ஏடு வரைக்கும் கொங்கணர் வாத சூத்திரம் 53; 58 ஏடு முதல 67 ஏடு வரைக்கும் போகர் சூத்திரம் 51; 68 ஏடு முதல் 84 ஏடு வரைக்கும் கொங்கணர் கடைக்காண்டம் 61; 85 ஏடு முதல் 95 ஏடு வரைக்கும் கொங்கண நயினார் பாடல் 41; 96 ஏடு முதல் 107

ஏடு வரைக்கும் மச்சமுனி பாடல் 100க்கு அறுவானது 91 ஆகத் தொகைப்பாடல் 398.

108 ஏடு முதல் 150 ஏடு வரைக்கும் சட்டைமுனி நயினார் வேதாந்த வாத காவியம் பாடல் 165; 151 ஏடு முதல் 160 ஏடு வரைக்கும் புவனை கலைக்கியானம் பாடல் 50; 161 ஏடு முதல் 173 ஏடு வரைக்கும் சொரூபானந்தர் அருளிச் செய்த ஆனந்தக் களிப்பு பாடல் 49; 174 ஏடு முதல் 182 ஏடு வரைக்கும் திருமூல நயினார் அருளிச் செய்த நாற்பது முக்கோண மந்திரம் பாடல் 80; 183 ஏடு முதல் 186 ஏடு வரைக்கும்.... ஆகப் பாடல் 692.

5. பிற செய்திகள்

இச்சுவடி முற்குறிப்பால் இதை எழுதியவர் சித்தர் இலக்கியப் பகுதிகள் பலவற்றைத் தொகுத்து எழுதி வைத்தார் எனப் புலனாகிறது. இச்சுவடியில் முதல் 107 ஏடுகளும் 146க்கு மேல் இருக்கவேண்டிய ஏடுகளும் காணப்படவில்லை.

3424. நவலோக சத்து

1. நூலகக் குறிப்பு

அ. *2425*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. நவலோக சத்து குணம்

இ. பல்வகை நூல்கள்

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 5 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 9 ஏடு; 18 பக்கம்

ஆ. நீளம் 29.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 5,6 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. **தொடக்கம்**

தங்கத்தின் சத்தினால் காய சித்தியாகும். ஈயம் சித்தியாகும்; தாரத்தின் சத்தினால் சகலமும் கட்டும் தாரமாகும் மாகும்; செம்புனுட சத்தினாலே செகத்குரு நாயனென்று செப்பலாகும்; வெள்ளீய சத்தினாலே சாரமது கட்டியே தந்தம் போலாம்; கருவங்கச் சத்தினாலே தாளகம் குருவாகும்; பித்தளையின் சத்தால் அடங்க நவலோகமெல்லாம் ஈயமாகும்.

ஆ. **முடிவு**

அஞ்சன பாஷாணத்துக்கு அயந்தானும் காரியம் ஆகும்பாரு; கச்சால் பாஷாணத்துக்கு சுக்கான்கல் செம்பாகும்; சீதாங்க பாஷாணத்துக்கு துருசு அது சுத்த வெளுப்பாகும்; கார்முகில் பாஷாணத்துக்கு தாரமது கருப்பாகும்; சிலாமதப் பாஷாணத்துக்குக் காந்தம் ஈயமாகும்; உல்லறகப் பாஷாணத்துக்கு ஆதியாம் சூதமது கட்டிப் போமே.

5. **பிற செய்திகள்**

இதனுள், உபரசம், மலை, நவலோக அட்டவணை, பாஷாண வகை, நவரத்தின சத்தின் குணம், நவலோக மணல் சத்து ஆகியன இடம்பெற்றுள்ளன.

3425. அகத்தியர் வைத்திய பூரணம் 600

1. **நூலகக் குறிப்பு**

அ. 2426-1

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் வைத்திய பூரணம் 600

இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 625

3. தோற்றக் கூறுகள்

அ. 99 ஏடு; 198 பக்கம்
ஆ. நீளம் 31 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கருணைதரு மைங்கரனே காப்பு வாணி
கலந்திந்தச் சூத்திரந்தான் கருவாய்ப் பாடத்
திருவுமையாள் மனோன்மணித்தாய் செப்பக் கேட்டுத்
தெளிந்தகுரு நூலாகத் திரட்டிப் பாடிக்
குருமகிமைச் சித்தியுண்டாம் ஞானம் வாய்க்கும்
குபேரனென்ற நிதிமருந்து கூடுங் கூடும்
பெருமைமெய்க் கீர்த்தியுண்டாஞ் சித்தர்க் கெல்லாம்
பெருநூலைக் குறுக்கியீந்த அறுநூற் தானே.

(1)

ஆ. முடிவு

உண்டாம் ஏழு நூறவற்றில்
ஒடுக்கஞ் சூத்திரம் யெண்பதுண்டு
பண்டாங் குருவோ னூற்றைம்பதில்
பாரும் வழலை கைம்பதுண்டு
வேண்டாம் நூல்க ளிதுபோதும்
விடாதே நூல்கள் ஒருத்தருக்குங்
கண்டாய் அறுநூற் வெளிவிடாதே
கடாசி யெழுதி முகிந்ததுவே.

(625)

பின்காண்டம் அறுநூறும் முற்றும்.

3426. அகத்தியர் செந்தூரம் 300

1. **நூலகக் குறிப்பு**

   அ. *2426-2*

2. **உள்ளீடு : நூல் விவரம்**

   அ. *அகத்தியர்*

   ஆ. *அகத்தியர் செந்தூரம் 300*

   இ. *மருத்துவம்*

   ஈ. *செய்யுள் 301*

3. **தோற்றக் கூறுகள்**

   அ. *44 ஏடு; 88 பக்கம்*

   ஆ. *நீளம் 31 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.*

   இ. *இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது*

   ஈ. *ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்*

   உ. *தெளிவான கையெழுத்து*

   ஊ. *நல்லநிலை*

   ஏட்டெண் 104ல் நூல் தொடங்குகிறது

   எ. *முழுமை*

4. **சிறப்புச் செய்திகள்**

   அ. தொடக்கம்

பூதலத்தில் தென்பொதிகை தன்னில் வாழும்
பூரணமே யென்குருவே சிவமே அய்யா
மாதலத்தில் அட்டசித்தி யெட்டும் பெற்ற
வரிசையினால் வயித்தியநூல் வகையாச் சொல்வேன்
போதகத்தின் முகத்தானைக் கடைக்கோட் டானைப்
புழுக்குழியில் விழுந்தான்றன் புதல்வன் றன்னைச்
சாதகமாய் மனமடங்கி யறிவில் கூடித்
தற்பரனாய் நின்றகண பதியே காப்பாம்.

(1)

   ஆ. முடிவு

காண்க:- தொடர் எண்.2286-2.

3427. பிரமமுனி வைத்திய சூத்திரம்

1. நூலகக் குறிப்பு

அ. 2427-1

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. பிரமமுனி

ஆ. பிரமமுனி வைத்திய சூத்திரம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 390

3. தோற்றக் கூறுகள்

அ. 128 ஏடு; 256 பக்கம்

ஆ. நீளம் 32 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 5-7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. சுமாரான நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீரரு ளான சோதி
சின்மய மான சோதி
ஆரணி கொன்றை சூடி
யாரணிந் தவனைப் போற்றி
வாரணி ரிஷிகள் பாதம்
வணங்கியே வைத்திய நூலைக்
காரண மாகப் பாடக்
கணபதி காப்புத் தானே.

(1)

ஆ. முடிவு

வாரான கருவெல்லாம் வெளியாய்ச் சொன்னேன்
வாதமொடு வயித்தியமும் வகையாய்ச் சொன்னேன்

கூரான செந்தூர பஸ்பம் செயநீர்
குருமுடிக்கும் வகையெல்லாம் குறிப்பாய்ச் சொன்னேன்
வாரான அஞ்சனமும் திலதமுஞ் சொன்னேன்
வசியமொடு அழைப்புவித்தை மாரணமுஞ் சொன்னேன்
ஆரான வசியமுதல் யோகம் ஞானம்
அடங்கிநின்ற கருக்கிடைச்சூத் திரந்தான் முற்றே.
(390)

3428. ஊழிக்காற்றுப் படலம்

1. நூலகக் குறிப்பு

அ. 2427-2

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. ஊழிக்காற்றுப் படலம்

இ. மருத்துவம்

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 5 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம்

ஆ. நீளம் 32 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அதாவது, துர்கந்தங்களினால் புலால், கவுச்சி நாசி வழிகளால் பிரவேசித்துச் சிரோபாரத்தின் மயிர்க் கூச்சலினால் இரத்தங் கெட்டு, விஷக் காற்றுப் படலமென வகுக்கப்படும். இது தொற்றுப் பிணி எனப்படும். விஷக் காற்றினால் இரத்தம் முறிந்து

நீராகிக் கொம்பனென்றும், குடர்படுவனென்றும், அக்கரமென்றும் சொல்லப்பட்ட மூன்று வித பேதியுண்டாகின்றன.

ஆ. முடிவு

.... மேற்காட்டிய அவுழ்தங்களிலொன்றைக் கொடுத்து இதனடியிற் கண்டிருக்கிற கியாழத்தை அடிக்கடி கொடுக்க வேணும். நாயுருவி, புளியம்பட்டை, முருங்கைப் பட்டை, மாவிலிங்கம் பட்டை, கொடிவேலி வேர், வேம்பின் வேர், எருக்கம் பூ, தென்னம் பிஞ்சு, வகைக்குப் பலம் 1 இடித்து நாலுபடி தண்ணீர் போட்டு ஒரு படியாய் வற்றவைத்து அடிக்கடி கொடுத்துக் கொண்டிருக்கச் சன்னி, ரூட்சைதாகம், வயித்துப் பொருமல் அணுகாது. தேகத்தில் குளிர்ச்சி கண்டால் கர்ப்பூரத் தயிலத்தைத் தேகமெங்கும் அடிக்கடி பூசி, கடுகு வெள்ளைப்.....

3429. பிரமமுனி வைத்திய சூத்திரம்

1. நூலகக் குறிப்பு

அ. 2428-1

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. பிரமமுனி
ஆ. பிரமமுனி வைத்திய சூத்திரம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 384

3. தோற்றக் கூறுகள்

அ. 74 ஏடு; 148 பக்கம்
ஆ. நீளம் 40 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்; ஆ. முடிவு

காண்க:- தொடர் எண்.2427-1.

இ. பிற்குறிப்பு

பிலவங்க வருடம் ஐப்பசி மாதம் 21ந் தேதி மங்கள வார நாள் எழுதி முகிந்தது முற்றும்.

3430. இரசவர்க்கம்

1. **நூலகக் குறிப்பு**

அ. *2428-2*

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....
ஆ. இரசவர்க்கம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 167

3. **தோற்றக் கூறுகள்**

அ. 17 ஏடு; 34 பக்கம்
ஆ. நீளம் 40 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

ஆற்றுநீர் வாத மகற்றி விடும்பொழுதே
சோற்றுமேல் தாகமறுஞ் சொல்லக்கேள்-போற்றுங்கால்
பேதிக்கும் நோற்பமென்றே பின்பு பெருகியநீர்
சாதிக்கும் வேல்விழியாய் தான்.

(1)

ஆ. முடிவு

பஞ்சபா ணக்குணத்தைக் கேளாய்நீ பைந்தொடியே
மிஞ்சகைக ளாணிபுத்து வீடுமே - வஞ்சியே
கண்ணுக்காம் புண்ணுக்காம் காய்ச்சல் குளிருக்காம்
பெண்ணுக் கிடுமருந்தாம் பேசு.

(167)

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

3431. அகத்தியர் சாலத்திரட்டு

1. நூலகக் குறிப்பு

அ. 2428-3

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் சாலத்திரட்டு - முதற்காண்டம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 299

3. தோற்றக் கூறுகள்

அ. 45 ஏடு; 90 பக்கம்
ஆ. நீளம் 40 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காண்க:- தொடர் எண்.2417-1.

ஆ. முடிவு

காண்க:- தொடர் எண்.2405-2.

இ. பிற்குறிப்பு

பிலவங்க வருடம் தை மாதம் 11ஆம் தேதி மந்த வார நாள் எழுதி முகிந்தது முற்றும்.

5. பிற செய்திகள்

இந்நூல் அகத்தியர் முதற்காண்டம் எனவும் சில சுவடிகளில் வழங்கப்பெறுகிறது (தமிழ்ப் பல்கலைக்கழகச் சுவடி, தொடர் எண்.2405-2).

3432. வைத்திய இரத்தினச் சுருக்கம்

1. நூலகக் குறிப்பு

அ. 2428-4

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. தட்சிணாமூர்த்தி
ஆ. வைத்திய இரத்தினச் சுருக்கம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 214

3. தோற்றக் கூறுகள்

அ. 33 ஏடு; 66 பக்கம்
ஆ. நீளம் 40 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. 3-16 வரையுள்ள ஏடுகள் இல்லை
உள்ளவை நல்லநிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பூரணமாய் நிறைந்தகுரு பரைதாள் போற்றிப்
புகலுகிறேன் வைத்யரத்னச் சுருக்கம் தன்னை
வாரணமா முகத்தோனைப் பணிந்து வாழ்த்தி
வயித்தியந்தான் முந்நூற்றி யறுப துக்குள்

காரணமாஞ் செந்தூரம் பற்பம் லேகியங்
கருவான தயிலமொடு கிருதம் எண்ணெய்
சூரணமாக் கிராணமொடு கலிக்கம் மாத்ரை
சுளுகுடனே நாடிமுதல் சொன்னேன் பாரே.

(1)

ஆ. முடிவு

தானென்ற பழத்தெண்ணெய் சொல்லக் கேளு
தவறாமல் பழச்சாறு படிதா னொன்று
நானென்ற முத்தெண்ணெய் படிதா னொன்று
நலமாகக் குமரிச்சார் படிதா னொன்று
வேனென்ற கடுக்காய்தான் பலமும் ரெண்டு
விருதாக அரைத்தெண்ணெய் தன்னில் போட்டுக்
கானென்ற அடுப்பேற்றி மெழுகுபத மானால்
கண்டப்பா வடித்துநீ கலசம் வாரே.

(214)

5. பிற செய்திகள்

இந்நூல் அகத்தியர் இரத்தினச் சுருக்கம் எனவும் வழங்கப்படுகிறது.

3433. நோய்க்கு மருந்து

1. நூலகக் குறிப்பு

அ. *2428-5*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. நோய்க்கு மருந்து
இ. மருத்துவம்
ஈ. உரைநடை
அச்சில் ஏறத்தாழ 50 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 47 ஏடு; 94 பக்கம்
ஆ. நீளம் 40 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

கழற்சிச் சாறு, குண்டுமணிச் சாறு, சங்கங்குப்பிச் சாறு, கருநொச்சிச் சாறு, வெண்ணொச்சிச் சாறு, தழுதாளைச் சாறு, ஆவாகின் சாறும் பட்டையும், முருங்கின் சாறும் பட்டையும், அவுரிச் சாறும் பட்டையும், கருப்பன் சாறு, வெள்ளைவிகாய்ச் சாறு, நிலவாகைச் சாறு, ஆடாதோடைச் சாறு, கண்டங்கத்தரி வேர், சிறுசிமிட்டி வேர், செங்கத்தாரி வேர், சிவனார் வேம்பு, வெள்ளறுகு, சங்கின் வேர், வெள்ளைக் காக்கணம் வேர் இந்த முப்பது வகையும் இடித்துச் சாறு 1க்கு ¼படி; அத்துடன் கடைமருந்து;......

ஆ. முடிவு

பட்டை, உப்பை, சாதிலிங்கந்தின்று விளக்குப் பார்வை. இந்த வகையில் முறிந்து முடங்கினதும், வாத குன்மம், பித்த குன்மம், சேத்தும குன்மம், சத்தி குன்மம், பக்கக் குன்மம், வலி குன்மம், கால்கடுப்பு, மேல்கடுப்பு, கருங்கிரந்தி, செங்கிரந்தி, வீங்கு கரப்பன், ஒடுகரப்பன், ஆறுமாசம் நாலுமாசம் ஏழுமாசம் எட்டாம் மாசம் பிள்ளை விழுந்து போறதும், பிள்ளை பிறந்து 5ந் நாள் 6ம் நாள் 11ம் நாள் செத்துப்போறதும் இந்த வகையெல்லாந் தீரும். இது ஆயிரம் பேருக்குக் கொடுத்து கைகண்டது.

3434. மருத்துவ நூல்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2428-6

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 59

3. தோற்றக் கூறுகள்

அ. 7 ஏடு; 14 பக்கம்

ஆ. நீளம் 40 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

ஏட்டெண் 47ல் நூல் தொடங்குகிறது

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சுக்குடன் மிளகு வாய்விளங்குஞ்
    சொல்லுஞ் செவ்வியம் சிறுதேக்கு
ஒக்க அரைப்பல நிறைகூட்டி
    உகந்த திப்பிலி பலமிரண்டாகுஞ்
சிக்கேதுந் திறிபலையுஞ் சீரகம்
    லோகம் பலங்கா லரைக்கால்
யிக்கடு கரிச்சான் காரமேல்
    வங்கப் பட்டை சர்க்கரையே.

(1)

ஆ. முடிவு

அடிதனில் வேப்பம் பட்டை
    ஆனசங் குமிரி வேரும்
கொடிபடா துப்பிலி வேரு
    கொடுவேலி பற்ப டாகஞ்
சடிவளர் சுக்கு நல்ல
    சப்பாட்சி சமனாய்க் கூட்டி

இடிபடு மருக்கி .....
யிந்தநீ ருண்ட போதே.

(59)

3435. சட்டைமுனி நிகண்டு

1. **நூலகக் குறிப்பு**
   அ. 2429-1

2. **உள்ளீடு : நூல் விவரம்**
   அ. சட்டைமுனி
   ஆ. சட்டைமுனி நிகண்டு
   இ. மருத்துவம்
   ஈ. செய்யுள் 1281

3. **தோற்றக் கூறுகள்**
   அ. 100 ஏடு; 200 பக்கம்
   ஆ. நீளம் 33.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து
   ஊ. நல்லநிலை
   எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

காண்க:- தொடர் எண்.2267.

ஆ. முடிவு

ஆதியென்ற உப்பெடுத்தால் வாத மாச்சு
அப்பனே மனமுரைத்தால் ஞான மாச்சு
பேதியென்ற ரசமெடுத்தால் கெவுன மாச்சு
பேசாதே கற்பமுன்றால்ச் சாவு போச்சு
ஓதிஒன்றைக் கட்டிவைத்தால் அறிவு போச்சு
உள்ப்புகுந்து பாராட்டால் மூலம் போச்சு

சாதியென்று சொன்னாக்கால்த் தவசு போச்சுச்
சஞ்சரித்தால்ப் பெண்ணோடே சடமும் போச்சே.
(1281)

இ. முற்குறிப்பு

வழலை விருத்தம் 17, சரக்கு வகை விருத்தம் 224, நவலோக விருத்தம் 82, செம்புக்கட்டு முதல் செந்தூரம் வரைக்கும் விருத்தம் 489, மூலிகை நிகண்டு விருத்தம் 113, சலசரிமயணம் 3, மெழுகுவகை விருத்தம் 276, மகாசவ்வீர வைப்பு விருத்தம் 91 ஆக நிகண்டு விருத்தம் 1295. இந்தப் படியறிய பக்கிவாவா றாவுத்தர் குமாரன் மீறாகனி கையட்சரம்.

ஈ. பிற்குறிப்பு

பரிதாவி வருடம் தை மாதம் 23ஆம் தேதி வியாழக் கிழமை தினம் எழுதி முகித்தேன். படமாத்தூர் பெரிய பக்கிரிவாவா றாவுத்தர் கமாரன் மீறாகனி தனக்காகக் கல்லேந்திரியில் இருக்கும் சொக்கலிங்கம் இடத்தில் வாங்கிச் சட்டைமுனி நாயனாரவர்கள் நிகண்டு எழுதி முகிந்தது. முற்றும்.

3436. அகத்தியர் வைத்திய பூரணம் 400

1. நூலகக் குறிப்பு

அ. 2429-2

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் வைத்திய பூரணம் 400
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 401

3. தோற்றக் கூறுகள்

அ. 63 ஏடு; 126 பக்கம்
ஆ. நீளம் 33.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. 12,14,27,55 ஆகிய ஏடுகள் இல்லை
உள்ளவை நல்லநிலை
எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

பூரணமாய் நிறைந்தபூ ரணத்தைப் போற்றிப்
புகழ்பெரிய வைத்தியபூ ரணத்தைப் பாடக்
காரணமாய்க் கருவுருவாய் எங்குந் தானாய்க்
கண்மணியின் நடுவான கருணை தன்னை
ஆரணமாய் முக்கோண நடுவில் நின்ற
அம்பரத்தை அனுதினமு மறிவால் போற்றி
வாரணமா முகத்தோனை அனுதினமும் போற்றி
மகத்தான வேதியனை வணங்கி னேனே. (1)

ஆ. முடிவு

காண்க:- தொடர் எண்.2413.

இ. பிற்குறிப்பு

அகத்திய மாமுனி யருளிச் செய்த வைத்திய பூரணம் 400. பரிதாவி வருடம் தை மாதம் 27ந் தேதி துவக்கி மாசி மாதம் 11ந் தேதி எழுதி முகித்தேன். படமாத்தூர் பெரிய பக்கிரிவாவா றாவுத்தர் குமாரர் மீறாகனி தனதுக்காக எழுதி முகித்தேன். மேற்படி மீறாகனி கையட்சரம்.

அல்லா உதவி செய்ய வேண்டியது. இந்தச் சாஸ்திரப் பிரகாரம் மருந்து செய்பாகங் குறையாமல் செய்து கொடுத்தால் வியாதிகள் சவுக்கியமாகும். ஆண்டவனும் உதவியாயிருந்து தீர்ப்பார்களறிந்து செய்து கொள்ளவும்.

3437. அகத்தியர் வைத்திய பூரணம் 600

1. **நூலகக் குறிப்பு**

அ. 2429-3

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. *அகத்தியர்*

ஆ. *அகத்தியர் வைத்திய பூரணம் 600*

இ. மருத்துவம்

ஈ. *செய்யுள் 627*

3. **தோற்றக் கூறுகள்**

அ. *91 ஏடு; 182 பக்கம்*

ஆ. *நீளம் 33.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.*

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. *ஒரு பக்கத்திற்கு 10,11 வரிகள்*

உ. தெளிவான கையெழுத்து

ஊ. *78,102,110,127 ஆகிய ஏடுகள் இல்லை*
உள்ளவை நல்லநிலை
ஏட்டெண் 64ல் நூல் தொடங்குகிறது

எ. *குறை*

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்; ஆ. முடிவு

காண்க:- தொடர் எண்.2426-1.

இ. பிற்குறிப்பு

பிரமதீச வருடம் கார்த்திகை மாதம் 5ந் தேதி சுக்கிர வாரத் தினம் படமாத்தூரிலிருக்கும் பெரிய பக்கிரிவாவா றாவுத்தர் மகன் மீறாகனி தனதுக்காக கல்லந்திரியிலிருக்கும் சொக்கலிங்க வாத்தியாரிடம் வாங்கி மேலையூர் முத்துமாடப் பணிக்கர் எழுதின பிரதி; வாங்கி யெழுதி முகித்தேன். மேற்படி மீறாகனி கையெழுத்து. அல்லா உதவி செய்ய வேண்டியது.

3438. புலிப்பாணி வைத்தியம் 500

1. **நூலகக் குறிப்பு**

அ. *2430-1*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. புலிப்பாணி

ஆ. புலிப்பாணி வைத்தியம் 500

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 501

3. தோற்றக் கூறுகள்

அ. 79 ஏடு; 158 பக்கம்

ஆ. நீளம் 34.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8,9 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அண்டரண்ட மாகிநின்ற வரனே காப்பு
ஆனந்த மாகிநின்ற உமையாள் காப்பு
குண்டமெனுங் குண்டலியின் குறியே காப்பு
குமரகுரு வேல்முருகர் பாதங் காப்பு
புண்டரிக மானதிரு மாலுங் காப்பு
புகழ்பிரமன் முதற்குலிச ரைவர் காப்பு
சண்டமெனு மாருதம்போல் வைத்தி யத்தில்
சாற்றுகிறேன் போகருட பாதங் காப்பே. (1)

ஆ. முடிவு

நவின்றிட்டோம் புவிதனிலே வைத்திய மார்க்கம்
நன்றாகச் சொல்லிவைத்தேன் இந்நூல் வேண்டும்
பவின்றிட்ட நோயாளர் வைத்தி யர்க்குப்
பண்பாக தொழுதேத்தித் தாம்பூல மீந்து
இவின்றிட்ட மவையெல்லாம் அவர்க்குச் சொல்லி
இதம்பெறவே செய்தபின்பு அவிழ்தங் கொள்வாய்

கவின்றிட்ட போகருட கடாட்சத் தாலே
காசினியில் புலிப்பாணி ஐந்நூறு முற்றே.

(501)

புலிப்பாணி மகாமுனிவர் அருளிச் செய்த வைத்தியம் ஐந்நூறும் முற்றும்.

3439. தேரையர் வைத்தியம் 1001

1. நூலகக் குறிப்பு

அ. 2430-2

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. தேரையர்

ஆ. தேரையர் வைத்தியம் 1001

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 519

3. தோற்றக் கூறுகள்

அ. 51 ஏடு; 102 பக்கம்

ஆ. நீளம் 34.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7,8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதி சத்தியருள் புதல்வன் சரணம்
மீதி லுத்த பிணிய கலும்பபடி
வாதி யுத்தமர் சித்தர் பதம்பணிந்
தோதி வைத்ததோ ராயிரத் தொன்றுமே.

(1)

ஆ. முடிவு

இருந்திட்ட கையான் எலுமிச்
சம்பழச் சாறுஞ் (சேர்த்துச்)

சொரிந்திட்டங் கதிலே நல்ல
துய்யதோர் சீனி கூட்டி
யிருந்திட்ட அன்றே பித்த
மகலுமென முன்னோர் சொன்னார்
மருந்திட்ட மங்கை யர்க்கு
வாயையுங் கிழிக்குந் தானே.

(519)

3440. தேரையர் வைத்தியம் 500

1. **நூலகக் குறிப்பு**
   அ. *2430-3*

2. **உள்ளீடு : நூல் விவரம்**
   அ. தேரையர்
   ஆ. தேரையர் வைத்தியம் 500
   இ. மருத்துவம்
   ஈ. செய்யுள் 435

3. **தோற்றக் கூறுகள்**
   அ. 67 ஏடு; 134 பக்கம்
   ஆ. நீளம் 34.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து
   ஊ. நல்லநிலை
   எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**
   அ. தொடக்கம்

ஆதியாஞ் சிவசத்தி புதல்வா போற்றி
அரியயன் தேடறியாப் பரனே போற்றி
சோதியாஞ் சரசுபதிதன் பாதம் போற்றி
சொற்பெரிய பொதிகைமுனி பாதம் போற்றி

வாதியாஞ் சித்தரது பாதம் போற்றி
மகத்தான நாதாக்கள் பாதம் போற்றி
ஓதியான் வைத்தநூ லஞ்சு நூறு
உத்தமனே தேரையன்சொல் லுறுதி தானே.

(1)

ஆ. முடிவு

ஆமப்பா சயபாண்டு கிராணி குன்மம்
அடிவயித்தில் நீராம்ப லுதிரச் சூலை
சாமப்பா கெண்டையொடு கிரந்தி குட்டஞ்
சளமான மூலமெல்லாந் தவறுண் டேபோம்
வேமப்பா சூசிகர வாய்வு போகும்
விளைகின்ற வாதபித்தஞ் சிலேட்டு மம்போம்
காமப்பா புளகிதமா மூர லாச்சுக்
கந்தாதிச் செந்தூரம் கொண்டால் பாரே.

(435)

3441. கல்நண்டு சாத்திரம்

1. நூலகக் குறிப்பு

அ. 2430-4

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. கல்நண்டு சாத்திரம்
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம்
ஆ. நீளம் 34.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

உற்றதொரு சமுத்திரமாந் தனில்பி றந்த
உசிதமென்ற கல்தண்டா மதுவின் செய்கை
கற்றவர்கள் அறிவார்கள் அல்லால் வேறே
கசடர்க்குத் தெரியாது தெரியா தய்யா
குற்றமற்றோர் தெரிந்தெடுத்துச் செய்து கொள்வார்
கூறுகிறோம் நன்றாகக் கூர்ந்து கேளு
குற்றமதாம் பொறிகாரம் விராகன்மோ ரெண்டில்
சூட்சமுடன் நல்லசிலும் ஓர்படியும் வாரே.

ஆ. முடிவு

ஆச்சென்ற சகலரையும் வசியம் பண்ணும்
அழகான சீதேவி யான சாற்றில்
நீச்சென்றே நினையாம லறிந்து நீயும்
நினையமாய் முதலெழுத்தை யுச்சரித்து நூருருவும்
ஆச்சேதா னென்றுசொல்லி திலதமுமே வைக்க
வகையாகச் செகமுழுதும் வசிய மாமே.

3442. தட்சிணாமூர்த்தி பின்னூல் 80

1. நூலகக் குறிப்பு

அ. 2430-5

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. தட்சிணாமூர்த்தி
ஆ. தட்சிணாமூர்த்தி பின்னூல் 80
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 83

3. தோற்றக் கூறுகள்

அ. 16 ஏடு; 32 பக்கம்
ஆ. நீளம் 34.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8,9 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

முன்னூலெண் பதுஞ்சொன்னேன் முதலே காப்பு
மூலத்தி லெழுந்துநின்ற கணபதியைப் போற்றிப்
பின்னூலெண் பதுஞ்சொல்ல ஆயி காப்பு
பேரான என்குமரன் முருகன் காப்பு
அன்னாளி லீசனுப தேசத் தாலே
அகத்தியனா மென்றனக்குப் பேரு மாச்சுப்
பொன்னான வாதத்தி லெட்சங் காப்புப்
பூட்டினது பூரணசூத் திரத்தைக் கேளே.
(1)

ஆ. முடிவு

ஞானமென்ன யோகம்விட்டால் அதுவும் ஞானம்
நாலைவிட்ட யோகமென்ன மரண யோகம்
பானமென்ன சத்தைவிட்டால் சுராபா னந்தான்
பரிகாரம் நூலைவிட்டால்ப் பலகா ரந்தான்
கோனமென்ன வழலைவிட்டால் ரசவா தந்தான்
குடல்வாத பேதமல்லால் குணமா காது
கானமென்ன இந்தநூல்எண் பதையுந் தொட்டால்
காசினியில் இவன்யோகி கடைதான் முற்றே.
(83)

5. பிற செய்திகள்

இந்நூல் 'அகத்தியர் பின்னூல் 80' எனவும் வழங்கப் படுகிறது.

3443. இடைக்காடர் சூத்திரம்

1. நூலகக் குறிப்பு

அ. *2431-1*

2. உள்வீடு : நூல் விவரம்

அ. இடைக்காடர்

ஆ. இடைக்காடர் சூத்திரம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 32

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 6 பக்கம்

ஆ. நீளம் 35 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. சுமாரான கையெழுத்து

ஊ. முறிந்தநிலை; பிழைகள் ஏராளம்

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காரு லாவு மேக மேநற்
கங்கை சத்தி யேசிவம்
பாரில் வளர்வீட் டுப்புச் சத்தி
பண்பு வற்பு வாகநீர்
சீரு லாவு ....
....ள்ளை யுப்பிலே
நீர்க லந்த போதழல் .....
நீடு லாவு சுன்னமே.

ஆ. முடிவு

சுன்னமொரு வீரனும் சூடனும் சரியதாய்
யென்னமா மறுவகை நீரைவிட்டு ஆட்டியே
வர்ணமா முளப்பிடம் வாங்கவே நற்சுன்னமாம்
யென்னசரக் கையெல்லா மிதுலே சுன்னமானதே.
(32)

இடைக்காடர் சூத்திரம் முற்றும்.

3444. இராமதேவர் கருக்கடைச் சூத்திரம் 500

1. நூலகக் குறிப்பு

அ. *2431-2*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. *இராமதேவர்*

ஆ. *இராமதேவர் கருக்கடைச் சூத்திரம் 500*

இ. *மருத்துவம்*

ஈ. *செய்யுள் 522*

3. தோற்றக் கூறுகள்

அ. *75 ஏடு; 150 பக்கம்*

ஆ. *நீளம் 38 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.*

இ. *இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது*

ஈ. *ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்*

உ. *தெளிவான கையெழுத்து*

ஊ. *முதல் 16 ஏடுகள் வலதுபுறம் முறிந்துள்ளன மற்றவை நல்லநிலை*

எ. *முழுமை*

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காண்க:- தொடர் எண்.2286-1.

ஆ. முடிவு

காண்க:- தொடர் எண்.2286-2.

3445. அகத்தியர் 1200

1. நூலகக் குறிப்பு

அ. *2431-3*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. *அகத்தியர்*

ஆ. *அகத்தியர் 1200 - இரண்டாம் காண்டம்*

இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 300

3. தோற்றக் கூறுகள்
அ. 43 ஏடு; 86 பக்கம்
ஆ. நீளம் 38 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்
அ. தொடக்கம்

காண்டமென்ன நாகாசஞ் சொல்லக் கேளு
கடியகோ டகசாலை கொடுப்பை வீழி
ஆண்டகொடு வேலிசா ரணையின் சாறும்
அப்பனே செருப்படிச்சா றோடுங் கூட்டி
மீண்டசட்டி யில்வார்த்து நாகம் வாங்கி
விளம்பியசா றுடன்கலந்து எரிப்பாய் சாமம்
மாண்டுவிடும் வலியுமடா கட்டி போச்சு
வாதமென்ன இம்மருந்தை மாட்டு மாறி.

(1)

ஆ. முடிவு

காப்பேது வாதங் கடந்த குறைபாடத்
தாப்பேது சாலத்தைச் சாற்றவே - மாப்பேது
வாதநூல் முந்நூறும் வகாரத் துரைசரிதான்
வேதமே சொல்லி விளம்பு.

(300)

வாத காண்டம் முகிந்தது. முற்றும்.

3446. அகத்தியர் 1200

1. நூலகக் குறிப்பு
அ. 2431-4

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் 1200 - முதல் காண்டம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 160

3. தோற்றக் கூறுகள்

அ. 29 ஏடு; 58 பக்கம்

ஆ. நீளம் 38 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆயிரத் திருநூற் முன்னூ
லாய்ந்துமுற் காண்ட சூத்திரம்
பாயிரத் தொகுதி யொன்று
பாடிய வயித்ய பாகம்
ஓயிரக் கவிமுன் னூறும்
உழைக்கர னுரைக்க ஈன்ற
தாயெனக் குரைக்க யானுஞ்
சாற்றிய விதிநூல் தானே.

(1)

ஆ. முடிவு

உத்துப்பார் புற..கஞ் சேர்த்துப் பாரு
ஒருகோடி பிணிகளுக்கு மூணிப் பாரு
சித்துப்பார் சூதமிட்டுச் சேர்த்துப் பாரு
சிவகாமி கந்தகத்திற் சேர்த்துப் பாரு
வைத்துப்பார் சாதிலிங்கம் மனோசி லைக்கும்
வங்கத்துக் கேத்திப்பார் அரிதா ரத்தை

வித்துப்பார் காந்தத்தைத் துருசுக் கேத்தி
விசையான சைவீரப் போக்கு வீரே.

(160)

3447. அகத்தியர் வகூரி

1. **நூலகக் குறிப்பு**
   அ. 2431-5

2. **உள்ளீடு : நூல் விவரம்**
   அ. அகத்தியர்
   ஆ. அகத்தயர் வகூரி
   இ. மருத்துவம்
   ஈ. செய்யுள் 100

3. **தோற்றக் கூறுகள்**
   அ. 17 ஏடு; 34 பக்கம்
   ஆ. நீளம் 38 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 7,8 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து
   ஊ. நல்லநிலை
   எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**
   அ. தொடக்கம்

பூரணமாய் (நிறைந்து)நின்ற சோதி பாதம்
போற்றிசெய்து தினந்தினமும் புகழ்ந்தங் கேத்திக்
காரணமாய் மாலயனுந் தேடிக் காணாக்
கடவுள்பாற் பத்திசெய்து கருணை பெற்ற
ஆரணமால் மருகனெனு முருகன் கந்தன்
அடியிணையைப் போற்றிசெய்து அன்பி னாலே
வாரணமும் மதம்பொழியும் ஐங்கரனை நித்தம்
மனோகரமா யனுதினமும் வணங்கி யேத்தே.

(1)

ஆ. முடிவு

தானென்ற வசூரிவந்த வகையே சொன்னேன்
தீர்வான லெட்சணமும் ... சொன்னேன்
தேனென்ற சாத்தியமும் பவித்திரமுஞ் சொன்னேன்
திரமான பத்தியமும் பாகஞ் சொன்னேன்
வானென்ற விழிநோய்க்கு மருந்து சொன்னேன்
வசூரிவரும் நோய்க்குமொரு .... சொன்னேன்
கானென்ற சித்தருக்கும் உலகத் தோர்க்கும்
கருத்தாகச் சொல்லிவிட்டேன் வசூரி முற்றே.

(100)

5. பிற செய்திகள்

இந்நூல் 80 பாடல்களை மட்டும் கொண்டு 'அகத்தியர் வசூரி சூத்திரம் 80' எனவும் வழங்கப்படுகிறது.

3448. நளன் கதை

1. நூலகக் குறிப்பு

அ. 2432

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. நளன் கதை
இ. உரைநடை இலக்கியம்
ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 150 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 144 ஏடு; 288 பக்கம்
ஆ. நீளம் 33 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. ஓரங்கள் முறிந்தநிலை
ஏட்டெண் 15ல் நூல் தொடங்குகிறது
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

...... தவறாமல் நடந்து வருகிறதில் ஒருத்தரை ஒருத்தர் அகத்தியமாய் அடித்து வைதாலும் துர்மார்க்கமான வார்த்தைகள் சொன்னாலும் தெருவிலே போற ஸ்த்ரீகளைப் பக்கத்திலே போறவன் கண்ணாலே ஏறிட்டுப் பார்த்தாலும் ஸ்த்ரீகள் புருசாளைப் பார்த்தாலும் இவர்களையெல்லாம் சக்கரம் தண்டிக்கும். இந்தப்படி அதிகம் நடவாமல் சக்கரம் தண்டனை பண்ணும்.

ஆ. முடிவு

..... தானும் தன் பெஞ்சாதியும் பிள்ளைகளுமாய் அந்தப்புறத்துக்குப் போய் கிருதகுள பாயசத்துடனே போசனம் பண்ணி, கந்தம், கத்தூரி, பரிமளங்களுந் தீர்த்துத் தாம்பூல மருந்தித் தமயந்தியுடனே, தான் காட்டிலே பிரிந்து போறபோது அக்கினி தேவர் உபத்திரவம் பண்ணினதும், அப்பால் கார்க்கோடனாலே தன்னுடம்பு வேறே மேனியானதும், அழகாபுரிப்பட்டணம் போய்ச் சேர்ந்ததும் ருதுமன்ன ராசா வண்டையிலே பாகனாக இருந்ததும் சொன்னார்....

3449. கொங்கணர் கடைக்காண்டம் 1000

1. நூலகக் குறிப்பு

அ. 2433

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. கொங்கணர்

ஆ. கொங்கணர் கடைக்காண்டம் 1000

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 999

3. தோற்றக் கூறுகள்

அ. *80 ஏடு; 160 பக்கம்*

ஆ. *நீளம் 37 செ.மீ., அகலம் 3 செ.மீ.*

இ. *இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது*

ஈ. *ஒரு பக்கத்திற்கு 6-8 வரிகள்*

உ. *தெளிவான கையெழுத்து*

ஊ. *8-16,25-47,59,67,83,103-123 ஆகிய ஏடுகள் இல்லை உள்ளவை சுமாரான நிலை*

எ. *குறை*

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பின்னான ஆயிரத்தை விரித்துச் சொல்வேன்
பேரான தொழில்கோடி வழக்கங் கோடி
மன்னான குருகோடி களங்கு கோடி
மருவியதோர் மெழுகுமுதல் குளிகை கோடி
தன்னான உதாரணச்சொல் லிதிலே கோடி
தயங்காத சத்துவகைத் தொழிலோர் கோடி
அன்னான பிற்காண்டம் பாத மென்றேன்
அதுவிட்டால் நடப்பேது அசடா பாரே.

(1)

ஆ. முடிவு

ஓங்கினதோர் சிங்கியின்மேல் சிங்கி யில்லை
ஓகோகோ வயித்துவின்மேல் வைத்து யில்லை
வாங்கினதோர் வசையின்மேல் சுன்ன மில்லை
மகத்தான ரசம்விட்டால் வர்ண மில்லை
தேங்கினதோர் ஞானம்விட்டால் ...து மில்லை
சேர்ந்துண்ணுங் கற்பம்விட்டால் தேக மில்லை
பாங்கினதோர் பரியைவிட்டால் புடமு மில்லை
பலகமார் சாரம்விட்டால் கட்டும் போச்சே.

(999)

3450. கொக்கோகம் மூலமும் உரையும்

1. நூலகக் குறிப்பு

அ. 2434

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அதிவீரராம பாண்டியன்

ஆ. கொக்கோகம் மூலமும் உரையும்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுளும் உரைநடையும்
அச்சில் ஏறத்தாழ 15 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 26 ஏடு; 52 பக்கம்

ஆ. நீளம் 24.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6-8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. சுமாரான நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கன்னலன்றி வேம்புநுகர் காமத் துரோகிகள்போல்
பின்னையொரு தெய்வத்தைப் பேசேனே - யெந்நாளுஞ்
சாற்றுவதுங் காமகலை சாதிப்ப துங்கரணம்
போற்றுவதுங் காமனடிப் போது.

ஆ. முடிவு

ஆறங்குலமாகிய குறியினையுடைய பெண் பெட்டைக் குதிரை மானிடமும் கூட பனிரெண்டங்குல மாகிய குறியுடைய பெண் பிடியானையுமாக குண்டுக் குதிரையுங் கூட வொத்திருக்கும் என்றவாறு.

(4)

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

3451. மருந்து செய்முறை

1. நூலகக் குறிப்பு

அ. *2435*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. மருந்து செய்முறை

இ. மருத்துவம்

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 25 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 23 ஏடு; 46 பக்கம்

ஆ. நீளம் 26 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6-8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. சுமாரான நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வெடியுப்புக் கட்டு:- ஒரு புதுச்சட்டியில் இரண்டு சேர் அன்னபேதியைப் பரப்பி அதின்மேல் 7 வெடியுப்புக் கம்பிகளைப் பரப்பிப் போடவும். அதின்மேல் இரண்டு சேர் அன்னபேதியைப் பரப்பி மேல் சட்டி கொண்டு மூடி சீலை செய்து கெஜ குழிவெட்டி அதில் சட்டியை வைத்து மண்போட்டு மூடிப் போடவும். 46ம் நாள் எடுக்க நெருப்புச குச்சயித்திருக்கும். மேற்படி வெடியுப்புக் கட்டும் தாளகமும் எடைக்கெடை சேர்த்து உமிழ்நீர் விட்டரைத்து ரவியில் நல்லாய்க் காயவைத்துக் கொள்ளவும். ஒரு சட்டியில் கரிநெருப்பு உண்டு பண்ணி அப்பிறகத் தகட்டில் மேற்படி வில்லையை வைத்து நெருப்பு மேல் வைக்கச் செந்தூரம்.

ஆ. முடிவு

தாளக ஈயம்:- காட்டாமணக்கு ரசம் எடுத்து ஒரு நெடு மூஞ்சிக் கலயத்தில் விட்டு அதுக்குள் ஒரு பலம் தாளகக் கட்டியைப் போட்டுத் துணியில் வடிகட்டி. மேற்படி மூலிகையை அரைத்து வில்லையாக வைத்து வாய்க்கு ஒரு மூடி சீலை செய்து ஒரு முழப்புடம் போட்டு எடுத்துப் பார்க்க ஈயம் போல இறுகும். இதுபோல 3 புடம் போட்டு எடுத்துப் பார்க்க ஈயமாயிறுகும். மேற்படி ஈயத்தை யெடுத்துக்கொண்டு வெள்ளியிலயர்க்கு வயது 7, யென்பதாகக் கேள்வி பார்க்க வேணும்.

3452. மாந்திரீகம்

1. **நூலகக் குறிப்பு**

   அ. 2436-1

2. **உள்ளீடு : நூல் விவரம்**

   அ. ....

   ஆ. பெயர் தெரியாத ஒரு மாந்திரீக நூல்

   இ. மாந்திரீகம்

   ஈ. செய்யுள் 10

3. **தோற்றக் கூறுகள்**

   அ. 10 ஏடு; 20 பக்கம்

   ஆ. நீளம் 15 செ.மீ., அகலம் 2 செ.மீ.

   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

   ஈ. ஒரு பக்கத்திற்கு 3-5 வரிகள்

   உ. தெளிவான கையெழுத்து

   ஊ. செல்லரித்த நிலை, பிழைகள் ஏராளம்

   எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

   அ. தொடக்கம்

   காணப்பா நகாரமுதல் அஞ்செழுத்து மாறிக்
   கைகண்ட தம்பனமாம் காணும் காணும்

பூணப்பா மகாரமுத லஞ்செழுத்து மாறிப்
புகழான மோகனமாம் பூலோ கத்தில்
தோணப்பா சிகாரமுத லஞ்செழுத்து மாறி
சொற்பெரிய மாரணமாம் சொல்லக் கேளு
ஊணப்பா வகாரமுதல் அஞ்செழுத்து மாறி
உச்சாடன் கிரிகையது எட்டும் பாரே.

(1)

ஆ. முடிவு

பாரப்பா சிதம்பரத்துள் அஷ்ட கருமம்
பாடினேன் சூத்திரத்தில் பாக மாகும்
நேரப்பா தேவியுட சக்கர வேகம்
நிமிஷத்தில் அண்டமெல்லாம் நீறாய்ப் பண்ணும்
கூரப்பா யிக்கருவைக் கூறொண் ணாது
கூறவென்றால் சிஷ்யருட குணங்கள் கூறு
சாரப்பா தசதீட்சை பெற்றோ ரென்றால்
சாதகமாய் நினைத்துடனே யெட்டு மெட்டும்.

(10)

3453. மாந்திரீகம்

1. நூலகக் குறிப்பு

அ. 2436-2

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. மாந்திரீகம்
இ. மாந்திரீகம்
ஈ. செய்யுளும் உரைநடையும்
அச்சில் ஏறத்தாழ 30 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 52 ஏடு; 104 பக்கம்
ஆ. நீளம் 15 செ.மீ., அகலம் 2 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 2,3 பத்திகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. சுமாரான நிலை

ஏட்டெண் 11ல் நூல் தொடங்குகிறது

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தம்பனம்: நமசிவய யநமசிவ வயநமசி சிவயநம மசிவயந.

மோகனம்:- மசிவயந நமசிவய யநமசிவ வயநமசி சிவயநம.

மாரணம்:- சிவயநம மசிவயந நமசிவய யநமசிவ வயநமசி.

உச்சாடனம்:- வசியநம மசிவயந நமசிவய யநமசிவ சிவயநம.

ஆ. முடிவு

.... வயிரவர்கள் காவலாக, பிடாரி பந்தம் பிடிக்க, துர்க்கை ஆலவட்டம் பிடிக்க, பேச்சி பாவாடை போட, இருளன் தண்ணீர் கொண்டோட, முப்பத்து முக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் வந்து பாதம் பணிய எண்ணாயிரம் சமணர்களை வெட்டிக் கழுவிலேற்றின சத்தி பகவதி (யம்)மாளையும் கன்னிகளும் அய்யன் பிடாரிகளும் வடுகு துலுக்குக் கொடுத்த பிசாசுகளை யெட்டுத் திக்கும் சக்கரமெரிய இருதலையும் வந்து பாதம் பணியச் சுவாகா.

5. பிற செய்திகள்

இதனிடையிடையே சில மருத்துவச் செய்திகளும் இடம்பெற்றுள்ளன.

3454. குருமுனி நூல் 50

1. நூலகக் குறிப்பு

அ. 2436-3

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. குருமுனி

ஆ. குருமுனி நூல் 50
இ. மாந்திரீகம்
ஈ. செய்யுள்

3. **தோற்றக் கூறுகள்**

அ. 12 ஏடு; 24 பக்கம்
ஆ. நீளம் 15 செ.மீ., அகலம் 2 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரிகள்
உ. கிறுக்கலான கையெழுத்து
ஊ. நல்லநிலை
பிழைகள் ஏராளம்
எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

பத்தியுடன் பார்வதியைப் போற்றி செய்து
பரிவாகக் குருமுனிதான் பாரி லுள்ளோர்
சத்தியமாய் முறைப்பாடு ஏவல் பில்லி
சயித்தியநோய் தெய்வகுற்றம் சரிக்கில் துன்பம்
முத்தியெழும் முக்குறிகு ணங்கள் நீங்க
.... சொல்லென்று முனிதான் கேட்க
வத்துவென்ற உமையாட்கு மனம்ம கிழ்ந்து
வண்மையுடன் வையகத்தில் வகைசொன் னாளே. (1)

ஆ. முடிவு

தெளிவான சூனியந்தான் வைத்த வீட்டில்
தெருவுயர துக்கேப்பம் அழிந்து போகும்;
வலுவான மாடுகன்று ஆடு சாகும்
வைத்திருந்த தென்னைமரம் முருங்கை சாகும்;
எளிதான செருகுபூந்தை அரசன் சாவான்
நிலம்இழந்து நஞ்சைபுஞ்சை யெல்லாம் போகும்
எளிதான கர்மமெல்லாம் சூனி யத்தால்
எடுக்கவே மையொன்றை இயம்பு வாயே.

3455. மரணக் குறிப்பு

1. நூலகக் குறிப்பு

அ. 2436-4

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. மரணக் குறிப்பு

இ. சோதிடம்

ஈ. செய்யுள் 13

3. தோற்றக் கூறுகள்

அ. 9 ஏடு; 18 பக்கம்

ஆ. நீளம் 15 செ.மீ., அகலம் 2 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

உ(ல)கமதில் மானிடராய்ப் பிறந்த பேர்கள்
உண்டுபசி யாறிநித்ரை செய்யும் போது
பலவிதமாய்ச் சொப்பனங்கள் கண்டு பின்னை
பலனறிய மாட்டாமல் விழிப்ப தாலே
சலமதனைத் திருமுடியில் தரித்த ஈசன்
தானீன்ற கணபதியின் தாளைப் போற்றிக்
கலக்கமது நேராமல் பலனைக் கூறக்
கலையளித்த குறுமுனியும் காப்புத் தானே.

(1)

ஆ. முடிவு

தர்மமென்ற ஒருவாக்கை மறந்தி டாதே
தன்னைத்தா னேபுகழ்ந்து வெறிகொள் ளாதே

கருமிகளே யின்னமொரு கனவு கேளு
கறுத்தபெண்ணுந் தலைவிரித்துச் சிரித்துக் கொண்டு
சரசமாய்ப் பேசிஉந்தன் அருகே வந்து
சடுக்கென்று தோளின்மே லேறிக் கொண்டே
எருமைபோல் கூச்சலிடக் கண்டு விட்டால்
இரண்டாம்நாள் நீயிருந்தால் ஈசன் தானே.

(13)

மரணக் குறிப்பு முற்றும்.

5. பிற செய்திகள்

ஒருவர் காணும் கனவுகளில் எவை எவை சாவை முன்னறிவிப்பதாகும் என இந்நூல் கூறுகிறது.

3456. கனவுகளின் பயன்

1. நூலகக் குறிப்பு

அ. 2436-5

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. கனவுகளின் பயன்
இ. சோதிடம்
ஈ. செய்யுள் 7

3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு; 10 பக்கம்
ஆ. நீளம் 15 செ.மீ., அகலம் 2 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 4-6 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்லநிலை
ஏட்டெண் 10ல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

தானென்ற ஆனையுடன் குதிரைக் கூட்டம்
தர்மகதை பூஞ்சோலை சங்கு தீபம்
பானமுடன் சந்திரனைக் கனவில் கண்டால்
பருத்திதனைக் கண்டாலு மான்கண் டாலும்
கோனென்ற தேவர்முதல் மலைகண் டாலும்
குறைவில்லை கடைந்தமோர் தனைக்கண் டாலும்
வீணல்ல பன்னிரெண்டும் உத்த மம்நான்
விபரமாய்ச் சொல்லுகிறே னின்னங் கேளு.

(1)

ஆ. முடிவு

தானிருக்கும் வீடுபற்றி யெரியக் கண்டால்
தங்கமது உன்கையில் சிக்கு மப்பா
கானகத்தில் வேட்டையது ஆடக் கண்டால்
கண்மணியே வாகனங்கள் வந்து சேரும்
வானமது இடிந்துவிழக் கண்டா யானால்
வல்விசனத் தாலமுகை வந்து மாறும்
ஊனமடா விபாகமது செய்யக் கண்டால்
உன்மனது சந்தேகம் வந்து தீரும்.

(7)

3457. மேக நோய்க்கு எண்ணெய்

1. **நூலகக் குறிப்பு**

அ. *2436-6*

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....
ஆ. மேக நோய்க்கு எண்ணெய்
இ. மருத்துவம்
ஈ. *செய்யுள் 1*

3. **தோற்றக் கூறுகள்**

அ. 6 ஏடு; 12 பக்கம்

ஆ. நீளம் 15 செ.மீ., அகலம் 2 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 5,6 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

ஏலேலோ ஏலேலோ தத்தையா
ஏலேலோ ஏலேலோ.

வேலவற்கு முன்பிறந்த விநாயகனை அடிபணிந்து
நேயமுடன் மேகமது இருபத் தொன்றுந்
தீருதற்கு விளம்புகிறேன் எண்ணெய் ஒன்று.

ஆ. முடிவு

பத்தியந்தான் புளியுப்புத் தள்ளுபக் குவமாய்
மூன்றுநாள்தான் சங்கெலையால் உப்பைநீ வறுத்துச்
சதிராகச் சேர்த்துவிடு ஏழாநாள் ஓமம்
அரையரைத்து இளம்சூடாய் வெந்நீர் வைத்துச்
சடசடென்று தேய்த்துநீவெந் நீரை விட்டுச்
சமையலது புளிகூட்டிப் பத்தியம் போடு
முருங்கையுடன் அரைக்கீரை துவரம் பருப்பு
முக்கியமாய்ப் பத்துநாள்யா தொன்றும் தள்ளு
அதுக்குமேல் பால்மோரு நெய்யுமே கூட்டு
பண்பான வெள்ளாடு குறவைபிலாச் சேரு
இப்படிநீ கண்டித்துப் பாரப்பா தீரும்
பதறாமல் முன்னோரைப் பணிந்துநீ செய்யே.

5. **பிற செய்திகள்**

21 வகையான மேக நோய்களுக்குரிய மருந்தாக ஓர் எண்ணெயின் செய்முறையையும், பத்தியம் முதலிய பிற செய்திகளையும் கப்பற்பாட்டு வடிவில் கூறப்பட்டுள்ளது.

3458. மருந்து செய்முறை

1. **நூலகக் குறிப்பு**

   அ. 2436-7

2. **உள்ளீடு : நூல் விவரம்**

   அ. ....

   ஆ. மருந்து செய்முறை

   இ. மருத்துவம்

   ஈ. செய்யுளும் உரைநடையும்
   அச்சில் ஏறத்தாழ 15 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

   அ. 20 ஏடு; 40 பக்கம்

   ஆ. நீளம் 15 செ.மீ., அகலம் 2 செ.மீ.

   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

   ஈ. ஒரு பக்கத்திற்கு 3-5 வரிகள்

   உ. மிகக் கிறுக்கலான கையெழுத்து
   பிழைகள் ஏராளம்

   ஊ. நல்லநிலை

   எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

   அ. தொடக்கம்

   கந்தகத் தயிலம்:-

   அந்தமுள்ள கந்தகத் தயிலம் நல்ல
   அறைகிறேன் ......
   மச்சகந்திதான் மாசிலை யாக நல்ல
   கெடியான பலமஞ்சு கல்வத் திட்டு
   சாரமொடு வீரமொடு காசு நல்ல
   சமஸ்தான வெடியுப்புத் தான்பலம் ஐந்து
   அரிதாரம் காசும்ஒன்று கூட்டி நல்ல
   அபிநெயில் நாழிகையும் அஞ்சு
   வெள்..மொழிச் சீலைமண் ஊட்டி நல்ல
   தணலுக்குள் வெதுப்பவே தயிலம் ஆகும்.

ஆ. முடிவு

பூரம். இது சுன்னம்.

பூரத்தை வாங்கி முலைப்பால் விட்டு அரைத்து மேற்படி காட்டாமணிபால் விட்டு அரைத்து மேற்படி உலர்த்திக் கொண்டால் சுன்னம் போல் இருக்கும்.

இதுக்கு அபானம்:- வெண்ணெயிலாவது, விளக்கெண்ணெயிலாவது கொடுக்கவும்.

பத்தியம்:- இச்சாபத்தியம்.

3459. ரோமரிஷி வகாரம் 100

1. **நூலகக் குறிப்பு**
   அ. 2437

2. **உள்ளீடு : நூல் விவரம்**
   அ. ரோமரிஷி
   ஆ. ரோமரிஷி வகாரம் 100
   இ. மருத்துவம்
   ஈ. செய்யுள் 102

3. **தோற்றக் கூறுகள்**
   அ. 19 ஏடு; 38 பக்கம்
   ஆ. நீளம் 32.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து
   ஊ. நல்லநிலை
   எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

   அ. தொடக்கம்

   சீருலவு பொதிகைரிஷி பாதம் போற்றிச்
   சிவகாமித் தாய்பொற் பாதம் போற்றி

ஏருலவு தந்தைசிவன் பாதம் போற்றி
இன்பமுற்ற சித்தருட பாதம் போற்றிப்
பேருலவு சரஸ்பதியாள் நடனத் தாலே
பெருமையுள்ள சதனூலைப் பாடு தற்குக்
காருலவு திருமேனி துதிக்கை யானைக்
கணபதிசெந் தாமரைத்தாள் காப்புத் தானே.

(1)

ஆ. முடிவு

ஏனென்று பேசுமப்பா இந்த நூல்தான்
இகத்திலே கிடையாது கிடைத்த பேர்கள்
வானென்ற சிலவித்தை துருசு வித்தை
வகையான வாசிவித்தை வெளியாய்ப் பாடி
ஊனென்ற காயத்தைச் சித்தி செய்ய
உண்மைசொல்லி யிருக்குதென்று கொடுக்க மாட்டார்
தானென்று தெண்டனிட்டால் இரங்கி யீவார்
சதநூலால் சொன்னதிந்த சாயுட்சிய முற்றே.

(102)

ரோமரிஷி வகார சதநூல் சூத்திரம் எழுதி முற்றிற்று.

3460. இராமதேவர் பட்சணி

1. நூலகக் குறிப்பு

அ. 2438

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. இராமதேவர்
ஆ. இராமதேவர் பட்சணி
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 109

3. தோற்றக் கூறுகள் .

அ. 37 ஏடு; 74 பக்கம்
ஆ. நீளம் 21 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. சுமாரான நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியந்தம் நடுவிருந்த சோதி காப்பு
அகண்டபரி பூரணமே அறிவே காப்பு
நீதிகலை வாணிகுரு கந்தன் காப்பு
நிரஞ்சனமாம் நிர்க்குணமாம் அதீதங் காப்பு
பாதியாந் தளிர்கனலும் காலொன் றான
பட்சணியே நிச்சயமே பாகங் காப்பு
வீதியாம் பட்சணியாய் விளங்குஞ் சித்தி
விக்கினேசப் பிள்ளையார் காப்புத் தானே. (1)

ஆ. முடிவு

சொல்லடா யினமறிந்து வாசி யோகம்
சூட்டடா சகலகலைச் செய்தி யெல்லாம்
கல்லடா காயசித்தி யோக சித்தி
கருவென்ன சவுக்காரம் மாதி யாதி
அல்லடா பசகளுக்கிந் நூலை யீந்தால்
அதிரயிடி விழுந்துதலை தெறிக்கு மாசை
வெல்லடா நவகோடி சித்து மாகும்
வேதாந்த பட்சணிய தீத முற்றே. (109)

பட்சணி எழுதி நிறைந்தது முற்றும்.

5. பிற செய்திகள்

இந்நூலகத்தில் இதே பெயரில் மற்றொரு சுவடி (எண்.530) உள்ளது. 51 பாடல்களை உடைய அது முற்றிலும் வேறு நூலாகத் தெரிகிறது.

3461. அகத்தியர் வைத்திய காவியம் 1500

1. **நூலகக் குறிப்பு**

அ. 2439

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் வைத்திய காவியம் 1500

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 358

3. **தோற்றக் கூறுகள்**

அ. 74 ஏடு; 148 பக்கம்

ஆ. நீளம் 33 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7,8 வரிகள்

உ. தெளிவான பல கையெழுத்து

ஊ. முதலேடு இல்லை. ஓரங்கள் முறிந்த நிலை

எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

பித்தத்தில் பித்த மாகில்
பிகந்திடும் கிறுகி றுக்குஞ்
சத்தியு மதிக மாகும்
சரீரத்தி லிளைப்புண் டாகும்
அசத்தியா மூன்று மேனி
அகமுமே வேற தாகும்
வத்தியே வெளுத்துக் காயம்
வறண்டுபின் வீக்க முண்டாம்.

(8)

ஆ. முடிவு

மூழ்கவே வியாதியெல்லாங் கடலே புக்கும்
முக்கியமாய் அகத்தியர்க்குச் சிவன்தான் பண்ணு

நிகழவே தியானமது யென்னோம் பண்ணு
நேரான தேவியைத்தான் தியானம் பண்ணு
திகழவே சிவன்தன்னைப் பூசை பண்ணு
தவழுதே வியாதியெல்லாந் தவறுண் டேபோம்
மகிழவே யிந்தடவே வைத்யஞ் செய்தால்
...தியத்திலே யிருப்பார் யீசன் தானே.

(358)

3462. அகத்தியர் வைத்திய காவியம் 1500

1. நூலகக் குறிப்பு

அ. 2440

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் வைத்திய காவியம் 1500
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 358

3. தோற்றக் கூறுகள்

அ. 24 ஏடு; 48 பக்கம்
ஆ. நீளம் 40 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7,8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. 1,2,5,12,17-33,35,36,38,47,48,49,50ஆகிய ஏடுகள் இல்லை உள்ளவை நல்லநிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

....
....
நாடவே சீரகமும் விடையங் கிராம்பு
நலமான அவிகைடை வன்னி கர்ப்பம்

தேடவே வெந்தயமுங் கழற்சி வித்து
திறமான குருசாணி பதினொன் றுந்தான்
ஆடவே சமன்தூக்கிக் கல்வத் திட்டு
ஆனந்த மானகஞ்சா மூலிச் சாறே.

(12)

ஆ. முடிவு

காண்க:- தொடர் எண்.2439.

3463. மாந்திரீகம்

1. **நூலகக் குறிப்பு**

அ. *2441-1*

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. பெயர் தெரியாத ஒரு மாந்திரீக நூல்

இ. மாந்திரிகம்

ஈ. செய்யுள் 13

3. **தோற்றக் கூறுகள்**

அ. 5 ஏடு; 10 பக்கம்

ஆ. நீளம் 17 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

அஞ்செழுத்து மஞ்சுமுக மாண்பிற் றன்ன
அம்பலத்தில் நெஞ்செழுத்தை நேரே நிறுத்தவே
அஞ்செழுத்தும் ஈறெழுத்தாய் மூவெ ழுத்து
இசைந்தசுழி யூடேஓ ரெழுத்தாங் கணேசன்.

(1)

(இப்பாடல் முழுமையாக எழுதப்பெறவில்லை)

ஆ. முடிவு

திருந்துபோ மின்னமொரு மையைக் கேளு
  திறமாக பேய்ப்பீர்க்கு சமூலம் வாங்கிப்
பறந்துதான் போகாமல் பொடித்துக் கொண்டு
  பாங்காய்ப்புல் லாமணக்கு நெய்யி லூட்டிச்
சிறந்துபோம் வில்லையாத் தயிலம் வாங்கிச்
  சிறப்பாக வேகவைத்துக் கண்ணில் போடு
மறைந்துபோம் உன்தேகம் தெரியா தப்பா
  மாதலத்தி லுள்ளதெல்லாம் வசத்தி லாமே.

(13)

3464. சல்லியம்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2441-2

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. சல்லியம்

இ. மாந்திரீகம்

ஈ. செய்யுளும் உரைநடையும்
அச்சில் ஏறத்தாழ 30 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

அ. 28 ஏடு; 56 பக்கம்

ஆ. நீளம் 17 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. சுமாரான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

காண்க:- தொடர் எண்.2389.

ஆ. முடிவு

உச்சாடனம்:- கூகை அடித்து ஊமன் கையிலே எடுத்து வலமூலம் நீறாக்கி ஆயிரம் உருச் செபித்து நீறு நெற்றியிலிடச் சபை மலைக்கும் ...... எரிக்கிறது...... விறகு இட்டு நீறு பண்ணவும்.

தேவி சகாயம். சல்லியம் முற்றும்.

3465. ஒட்டியம்

1. **நூலகக் குறிப்பு**

   அ. 2441-3

2. **உள்ளீடு : நூல் விவரம்**

   அ. ....

   ஆ. ஒட்டியம்

   இ. மாந்திரீகம்

   ஈ. செய்யுள் 30

3. **தோற்றக் கூறுகள்**

   அ. 11 ஏடு; 22 பக்கம்

   ஆ. நீளம் 17 செ.மீ., அகலம் 3 செ.மீ.

   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

   ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

   உ. தெளிவான கையெழுத்து

   ஊ. நல்லநிலை

   ஏட்டெண் 29ல் நூல் தொடங்குகிறது

   எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

   அ. தொடக்கம்; ஆ. முடிவு

   காண்க:- தொடர் எண்.2402-2.

5. **பிற செய்திகள்**

   நூல் முற்றும் முடியாமலேயே இச்சுவடியில் முடிக்கப் பட்டுள்ளது.

குருசிக்கு இப்பேர்ப்பட்ட பேய், பிசாசு மந்திரந் தந்திரங்கள் எல்லாம் பேயிலா நாதருடைய வல்லமையி னாலேயும் சகல அர்ச்சிய சீட்டவர்களுடைய மன்றாட்டுனாலேயும் சகல பிசாசுகளையெல்லாங் கட்டினேன். அகலப்போ பிசாசே. ஆமன் சேசு.

கட்டுமந்திரம் முற்றும்.

3467. நோய்க்கு மருந்து

1. நூலகக் குறிப்பு

அ. *2442-1*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. நோய்க்கு மருந்து

இ. மருத்துவம்

ஈ. உரைநடை

அச்சில் ஏறத்தாழ 20 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 13 ஏடு; 26 பக்கம்

ஆ. நீளம் 24 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்குப் பல பத்திகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. செல்லரித்த நிலை

ஏட்டெண் 12ல் நூல் தொடங்குகிறது

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

உள்மூலம், புறமூலம், கிராணிக்கு மருந்து:- காட்டுக்கருணை, கரிக்கருணை, வெருகு, பிரண்டை, பிளியறணை, மருள் ஆகக் கிழங்கு வகைக்குப் பலம்

3 கூட்டி நறுக்கிக் காயப்போட்டுப் பிறகு பசுவின் மோரில் போட்டு வேக வைத்து, அந்தச் சுண்டினால் எடுத்துக் காயப்போட்டு, பரங்கிப்பட்டை பலம் 3, ஏலம், மிளகு தூள் பண்ணி கருங்கோழிக்காலும் தலையும் இறகும் குடலுந் தள்ளி அதின் வயிற்றிலிட்டுத் தைச்சு, பின்பு ஆறுபடி பிரண்டை சாறு விட்டு வேக வைத்து, தண்ணீர் வற்றின பிறகு இறக்கி எலும்பெல்லாம் போக்கி அதையும் மருந்து வெயிலிலே காய வைத்துப் பிறகு எடுத்துக் கொண்டு, கொடிவேலிப்பட்டை பலம் 2 கூடப் போட்டு கடைச்சரக்கு, சுக்கு பலம் 1, திப்பிலி பலம் 1, நற்சீரகம் பலம் 10, வாய்விளங்கம் பலம் 5, குரோசாணி ஓமம் பலம் ¼ ஆக ஐந்து மருந்தும் இளவறையாய் வறுத்துக்கொண்டு மருந்தெல்லாங் கூடப்போட்டு யிடித்து வஸ்த்திரகாயம் பண்ணி வைத்துக்கொண்டு வெருகடிப் பிரமாணம்... கொள்ளவும். இளைத்த உடம்பானால் பசு நெய்யில் கொள்ளவும். முப்பது நாள் சாப்பிடவும். கழிப்பு:- புளி, தயிர், முள்ளங்கிக் கிழங்கு, கருணைக் கிழங்கு, துவரம் பருப்பு, இளங்கீரைத்தண்டு, பசுவின் நெய் கூட்டவும்; கைகண்டது.

ஆ. முழவு

உண்மையதின் மருந்தோடே மூவாள் மட்டும்
  உதயவன்பால் விட்டரைத்து ஊர்வேப் பெண்ணெய்
புண்படியில் ரெண்டதனில் விட்டுக் காய்ச்சிப்
  பந்தமுருக்கி வடித்துயிடப் பலிப்பைக் கேளு
எண்பதுதான் வாய்வுகளுஞ் சன்னி சீதம்
  இசுவுகளும் வலிதிமிரும் இடம்விட் டேகும்
திண்மையிதின் வலுமைசொல்ல வடங்கா தோடுஞ்
  செயதயிலஞ் சூட்சமிது சித்தி யாமே.

(இது விசைய வயிரவத் தயிலம்)

3468. சத்துரு சங்கார அகவல்

1. **நூலகக் குறிப்பு**

   அ. 2442-2

2. **உள்ளீடு : நூல் விவரம்**

   அ. ....

   ஆ. சத்துரு சங்கார அகவல்

   இ. சிற்றிலக்கியம்

   ஈ. செய்யுள்

3. **தோற்றக் கூறுகள்**

   அ. 3 ஏடு; 6 பக்கம்

   ஆ. நீளம் 24 செ.மீ., அகலம் 3 செ.மீ.

   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

   ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்

   உ. தெளிவான கையெழுத்து

   ஊ. செல்லரித்த நிலை

   ஏட்டெண் 25ல் நூல் தொடங்குகிறது

   எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

   அ. தொடக்கம்

   மூலத் தெழுந்த மூர்த்தி யாளே
   ஞாலம் படைத்த ஞானக் கொழுந்தே
   நான்முகன் வடிவாய் ஞாலமுந் தந்து
   வானுல கேத்தும் வகைவ கையாய
   கரியமா லென்னுங் காட்சி யானாய்
   உரியதோ ருத்ரனா யுகந்தாய் நீயே
   மகேஸ்வர னென்னும் வடிவ மாகினாய்
   தயாநிதி யான சதாசிவம் நீயே
   ....

   ஆ. முடிவு

   ....
   அதறப் பறிக்கும் ஆனந் தாயி

ஊனு முயிரு நீயா யிருக்க
இந்தப் பிணிகளி டருகள் வருமோ
இந்திர னக்கினி யெமனுட நிருதி
அய்ந்து வருணன் வாய்வு குபேரன்
யீசா னியனு மிருக்கக் காவலாய்
கூசா மலேதான் வருமோ பிணிகள்
தாக்கு தாக்கு ....

3469. மருந்து செய்முறை

1. நூலகக் குறிப்பு

அ. 2442-3

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. மருந்து செய்முறை

இ. மருத்துவம்

ஈ. செய்யுளும் உரைநடையும்
அச்சில் ஏறத்தாழ 2 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்

ஆ. நீளம் 24 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. செல்லரித்த நிலை
ஏட்டெண் 31ல் நூல் தொடங்குகிறது

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சேங்கொட்டை வல்லாதி:- சேங்கொட்டை பலம் 10, சாணிப்பாலில் சுத்தி கரித்துக் கொண்டு .... லேற்றிச் கொண்டு, கொடுவேலி, பரங்கிப்பட்டை, சங்கம்

வேர், அமுக்கிராக்கிழங்கு, சிவனார் வேம்பு, மாவிலிங்கம் பட்டை வகைக்குப் பலம் 1, கருஞ்சீரகம், கஸ்தூரி மஞ்சள், திப்பிலி, ஆனைத்திப்பிலி, கடுக்காய், வாலுளுவை, கோஷ்டம், வகைக்குப் பலம் 1 சூரணம் பண்ணிக் கொண்டு சேங்கொட்டையும் ரெண்டு கொப்பரைத் தேங்காயும் எள்ளு ஒருபடி போட்டு மெழுகுப் பதமாக இடித்துப் பனைவெல்லம் பலம் 5, இரசகற்பூரம் விராகனெடை சேர்த்திடித்து செய்து கொண்டு ரெண்டு வேளையும் புன்னைக்காயளவு கொள்ளத் தீரும் நோய் குட்டம், அரையாப்பு, சூலை, குன்மம், வயிற்றுவலி, வாத சூலை, வாய்வு, மேகம் இவை தீரும். கைப்பு, புளிப்பு, புகை, பெண்தள்ளுபடி, பால், நெய் இச்சாபத்தியம்.

ஆ. **முடிவு**

எலி கடிக்கு:-

விளக்கெண்ணெய் பருத்திச்சார் வகைக்கு நாழி
விதமான காட்டெருமைப் பாலா ழாக்கு
குளிகிமஞ்சள் திப்பிலியும் பூனைக் கஷ்டம்
குறையாமல் வகைக்கிஅரைப் பலம தாக
இளைத்திட்டுப் போகாமல் பதத்தில் காய்ச்சி
இறக்கிவடித் தொருகரண்டி கொண்டா யானால்
உளைக்கும்எலி கடிகள்பதி னெட்டுந் தீரும்
உண்மையிது பத்தியமாய் உண்ணத் தீரும்.

3470. மாந்திரீகம்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2442-4

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. மாந்திரீகம்

இ. மாந்திரீகம்

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 20 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

அ. 15 ஏடு; 30 பக்கம்

ஆ. நீளம் 24 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரிகள்

உ. சுமாரான கையெழுத்து

ஊ. சிதைவுற்ற நிலை

எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

பச்சொடுக்க மந்திரம்:-
மகா கணபதயே நமஹ. சுகமாயி சத்தி ஓம்.
அரிஅரி சக்கரம் அரவரி சக்கரம்
எரிஎரி சக்கரம் எதிரேறு சக்கரம்
ஓம் செயம்.....

ஆ. முடிவு

..... புதுச்சட்டியில் விட்டுச் சரக்குப் பொடி பண்ணிப் போட்டு மூன்று நாள் வைத்து, மறுபடி கையாந்தகரைச் சாறுவிட்டு இரண்டு சாமம் அரைத்து, களிப்பாக்கைப் போல வில்லை தட்டி, அரைப்படி நல்லெண்ணெயில் போட்டுச் சூரிய புடமாய் வைத்துக் கொள். அந்தி சந்தி இரண்டு வேளையும் சாப்பிடவும்.

இதுக்குப் பத்தியம்:- புளி, புகை தள்ளவும்; வாய்வுப் பதார்த்தம் தள்ளவும்.

இதுக்குத் தீரும் வியாதி:- பித்த வெட்டை, பாண்டு, சோகை, வீக்கம்.

5. **பிற செய்திகள்**

இச்சுவடியில் பல மருத்துவச் செய்திகளும் உள்ளன.

3471. குருநாடி

1. நூலகக் குறிப்பு

அ. 2442-5

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. குருநாடி

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 25

3. தோற்றக் கூறுகள்

அ. 8 ஏடு; 16 பக்கம்

ஆ. நீளம் 24 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. சுமாரான நிலை
ஏட்டெண் 47ல் நூல் தொடங்குகிறது

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மூலத்தி லெழுபத்தி ராயிர நாடி
முளைத்தெழுந்து வலைபோலே முடிந்த தோடே
கோலமாம் பதின்மூன்று வாய்வு நரம்பு
கோர்வையாய்ச் சூழ்ந்திருக்குங் கூட்டுக் குள்ளே
காலபத்து நாடிபத்து வாய்வு பத்து
கதிப்பதெல்லா முற்கோர்வை கையி னாலே
நாலாயி ரத்துநா னூற்றிநாற்பத் தெட்டு
நயஞ்சுபேர் பிறக்குமென்று நாட்ட லாமே.

(1)

ஆ. முடிவு

கூறுமே உரைப்பான் கலிக்கம் போட்டால்
குறைந்துநின்ற சுரம்பாதி யொடுங்கிப் போச்சு

காருமே ஆக்கிறாணப் பொடியைப் போட்டால்
கடிந்துநின்ற சுரம்பாதி யொடுங்கிப் போச்சு
தீருமே கருமஞ்சுற்றி யிவை மூன்றுந்
திரும்பினால் செடத்திலுள்ள நோயையெல்லாம் திருப்புவோமே.
(25)

5. பிற செய்திகள்

இதனையடுத்து இரண்டு ஏடுகளில் மச்சமுனியின் ஆறு பாடல்கள் எழுதப்பெற்றுள்ளன.

3472. மாந்திரீகம்

1. நூலகக் குறிப்பு

அ. 2442-6

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. பெயர் தெரியாத ஒரு மாந்திரீக நூல்
இ. மாந்திரீகம்
ஈ. செய்யுள் 8

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 6 பக்கம்
ஆ. நீளம் 24 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. சுமாரான நிலை
ஏட்டெண் 58ல் நூல் தொடங்குகிறது
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தானென்ற அஷ்டகர்ம மெடுத்தே ஆடச்
சாற்றுகிறேன் தொழில்களெல்லாஞ் சார்ந்து கேளு

வானென்ற ஆறுவரை நேரே கீறி
வழக்கமாய் ஆறுவரை குறுக்கேக் கீறித்
தேனென்ற இருவத்தஞ் சறையி னுள்ளே
சேர்த்திடுநீ அட்சரத்தைத் திறம தாக
ஊனென்ற வயநமசி யென்று மாறி
உறுதிபெற மறுவீட்டில் சொல்லக் கேளே.

(1)

ஆ. முடிவு

போடுநீ உரீமென்று போட்டு நீயும்
புகழ்பெறவும் சிதம்பரமுதல் தேவி பூசை
ஆட்டுவா யொன்றாகச் சொல்லி வைத்தேன்
ஆத்தாளு மப்பனுமே அமர்ந்த பூசை
தேடுவார் கோடியிலே ஒருவ னுண்டு
தேசத்தில் மானிடரோ செய்யப் போறார்
வாடுவார் தேவரெல்லாம் பூசை செய்ய
மாட்டாமல் மதிமயங்கி நின்றார் பாரே.

(8)

3473. மரணக்குறி

1. **நூலகக் குறிப்பு**
   அ. 2442-7

2. **உள்ளீடு : நூல் விவரம்**
   அ. ....
   ஆ. மரணக்குறி
   இ. மருத்துவம்
   ஈ. செய்யுள் 5

3. **தோற்றக் கூறுகள்**
   அ. 2 ஏடு; 4 பக்கம்
   ஆ. நீளம் 24 செ.மீ., அகலம் 3 செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 6,7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து
ஊ. சுமாரான நிலை
ஏட்டெண் 60ல் நூல் தொடங்குகிறது
எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

மந்தமாம் வாத நாடி
மயிலது போலே ஓடில்
விந்தமா ணிடர்க்கி ரண்டு
நாழிகை யிருப்பு மில்லை
வந்தவன் முகமும் வேர்த்து
மஞ்சளித் திருக்கு மாகில்
முந்தவோர் நாழி கையில்
முடிவது திண்ணந் தானே.

(1)

ஆ. முடிவு

காயு முடம்புந் தானாகில்
கண்கள் சிவக்கும் நாவறளும்
வாயுங் கருக்குங் குளிரெடுக்கு
மறியா திகைக்கு மதுவில்லை
பாயில் கிடவா ருளத்திவரும்
பக்க வலிக்க மொருமித்தே
பேயும் பித்த மென்னவுமாம்
பித்த வாத சிலேட்டுமமே.

(5)

3474. அகத்தியர் பூசாவிதி

1. **நூலகக் குறிப்பு**

அ. 2442-8

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் பூசாவிதி
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள் 12

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம்
ஆ. நீளம் 24 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. சுமாரான நிலை
ஏட்டெண் 64ல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பாரப்பா வாலைதனைப் பூசை பண்ணு
பரிவாக நவகோணை மிட்டு நன்றாய்ச்
சேரப்பா இருவளையம் வாசல் நாலு
சிறப்பாறி .... மீட்டு நன்றாய்
காரப்பா கீழ்வாசல் கணபதியுங் கந்தன்
கருணையுள்ள சீவிற்ற வாசு தேவர்
ஆரப்பா அறைகளிலே கிழக்குத் தொட்டு
அகாரமுடன் உகாரஞ் சவ்வும் போடே. (1)

ஆ. முடிவு

கூடியங்கே யவரவரைக் கண்டு பேசில்
கூசாம லனவரதங் குமுறி யாடுந்
தேடியெங்கு மிந்தமுறை கிட்டா தப்பா
தேவியுடன் சிவனுமங்கே திருநடனஞ் செய்வார்
வாடிதின்று வாடாதே யென்தாய்ப் பூசை
நல்லவர்க்கே எய்துமடா கருமிக் கில்லை
பாதியிந்தப் பதிமூணு பாட்டுக் குள்ளே
பரைபூசை சிவபூசை பணிந்தி டாயே. (12)

5. பிற செய்திகள்

இதற்கு முன் இரண்டு ஏடுகளில் தேவியின் பஞ்ச நமஸ்கார மந்திரம் இடம்பெற்றுள்ளது.

3475. சுப்பிரமணியர் தியானம்

1. நூலகக் குறிப்பு

அ. *2442-9*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. சுப்பிரமணியர் தியானம்
இ. மாந்திரீகம்
ஈ. செய்யுள் 6

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 6 பக்கம்
ஆ. நீளம் 24 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. சுமாரான நிலை
ஏட்டெண் 67ல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சரஅண பவனென சங்கரி யீன்ற
சண்முக ரீங்காரம் ஓங்காரம்
சமைய காருணிய புதல்வனே - முருகா
தந்தியுஞ் சுழித்திருக் கோணம்
சரஅண பவனருள் சனங்களுந் துதிக்க
சருகையுங் கிருகையும் ஞான
சதங்கைகள் காலினில்க் கொஞ்சிடமயில்
தாண்டியே சத்திவே லெடுத்து

சரஅண பவனென சமையமே வந்து
சவ்வு றவ்வு அவ்வென
நவஷ்சகல பவ்வுங் கிலியென ஐயும்
சாத்தவே பில்லிக ளனைத்தும்
சரஅண பவனென் றலைதனை விடுத்து
தரித்திடக் கால்தெரி யாமல்
சங்ரங் அங்கென் சடுதியில் வருவாய்
சண்முக சரஅண பவனே. (1)

ஆ. முடிவு

வசர அணப வென்றிட அறியேன்
வள்ளி தெய்வானையு மறியேன்
வரந்தரும் றன்கைக் கனியதுக் காய
வலம்வந் ததுமறியேன்
வசர அணப வென்றுரைத் திடுமுன்னோர்
வகுத்திடுங் கவிகளு மறியேன்
வாயினி லுதித்து தாவிநான் துதித்தேன்
வரந்தருஞ் சரஅண குகனே.
வசர அணப வென்றோதிட வருமை
வல்வினை வஞ்சினை யகத்தும்
வந்துநீர் சத்தி பதமெனத் தொழுது
வணங்கியே தஞ்சமென் றெடுத்தேன்
வசர அணப னென்றோதிட கிலியும்
வகுத்திட ஐயும் மேறிய்யும்
வடிவது சவ்வும் வகுத்தது நவ்வும்
வந்திடுஞ் சரஅண பவனே.

(6)

முற்றிற்று.

5. பிற செய்திகள்

இதனை அடுத்து மூன்று ஏடுகளில் வடமொழித் தோத்திரச் சுலோகங்கள் எழுதப்பெற்றுள்ளன.

3476. மருந்து செய்முறை

1. நூலகக் குறிப்பு

அ. 2442-10

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. மருந்து செய்முறை

இ. மருத்துவம்

ஈ. செய்யுளும் உரைநடையும்
அச்சில் ஏறத்தாழ 5 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு; 10 பக்கம்

ஆ. நீளம் 24 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. சுமாரான நிலை
ஏட்டெண் 72ல் நூல் தொடங்குகிறது

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நொண்டி

காசினி புகழ்படைத்த தேவர்
கடவுளை வலஞ்செய்து போற்றிக்கொண்டு
போசன சஞ்சீவி யாய்மருந்து
புகலுகிறே னிந்தச் செகந்தனிலே
மிஞ்சினம் பொறிகாரம் சவுட்டுமண்
மிகுத்திடு மஞ்சள் வளமுடன்
கொஞ்சிய திரிபாலை காயங்
கோஷ்ட்டங் கஞ்சாவும் நவச்சாரம்

ஆ. முடிவு

சோகைவந்த வரலாறு சொல்லக் கேளு
சுரத்தினால் வாய்வெழும்பி யீரல் வெந்து
ஆகமெல்லாம் வெளுப்பேறி ரத்தம் வற்றி
அடிவயிற்றிற் கனத்துமெள்ளக் கும்பி மீதே
மோகமுடன் தூதுகெட்டு ஆந்தை போலே
முட்டிவருங் கும்பியதில் வேர்வை கண்டு
தாகமுடன் பசித்துமிகக் கைகா லோயுஞ்
சண்டாளச் சோகைசெய்யுந் தன்மை யாமே.

5. பிற செய்திகள்

இதன் இறுதியில் 'தூதுலெட்சணம்' ஒரு பாடல் இடம்பெற்றுள்ளது.

3477. நஞ்சு நூல்

1. நூலகக் குறிப்பு

அ. *2443-1*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. நஞ்சு நூல்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 420

3. தோற்றக் கூறுகள்

அ. 52 ஏடு; 104 பக்கம்
ஆ. நீளம் 30 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. 1-15 ஏடுகள் இல்லை
உள்ளவை சுமாரான நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

திண்ணிய வாய்வு சென்று
திகழும்நல் யோகம் எய்தும்
எண்ணமி லங்கி தானே
வோதருங் கரும மெய்தும்
வண்ணமில் வருணன் றானே
வாய்ப்புடைத் திசைமேற் சென்று
நண்ணுமா மிக்க யோகம்
நவின்றுபா ருரைத்த வாறே.

(94)

ஆ. முடிவு

கூர்மை யாற்றிக் கொளுவிய பிஞ்சுடன்
நேர்செய் பன்னொலி நேரிய பிஞ்சுமாய்ச்
சீர்செய் மேதியின் வெண்ணெயிற் கூட்டியே
வீர மண்டெலிக் குண்ணில் மிகநன்றே. *(420)*

3478. சத்தியாரூடம்

1. நூலகக் குறிப்பு

அ. *2443-2*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. சத்தியாரூடம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 103

3. தோற்றக் கூறுகள்

அ. 20 ஏடு; 40 பக்கம்
ஆ. நீளம் 30 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து

ஊ. 2-4 ஆகிய ஏடுகள் இல்லை
உள்ளவை சுமாரான நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வெத்திமா தவத்தோன் கும்ப
மெய்முனி பதத்தைப் போற்றிச்
சத்தியா ரூடந் தன்னில்
தரும்பொருள் தன்னை யாய்ந்து
முத்தியாம் விருத்தம் நூறும்
மொழிந்திட என்று நாவில்
அத்திமா முகத்தோன் மிக்க
அடியிணை யகத்தில் வைப்பாம்.

(1)

ஆ. முடிவு

விரித்திட்டேன் சத்தியா ரூட மான
விருத்தமது ஒருநூறும் வேத மாகும்
வருத்தமாய் மனம்பற்றிப் பார்ப்பார் கோடி
மாநிதியம் பெற்றுமண்மேல் வாழ்வார் வாழ்வார்
தரித்திரங்கள் அணுகாது தர்ம முண்டாந்
தாரணியில் சித்தர்வந்து தருவார் புத்தி
கருத்துடனே ஆத்தாளு மய்யா வுந்தான்
காட்சிதரு வார்களொரு நூறும் முற்றே.

(103)

3479. மருத்துவ நூல்

1. நூலகக் குறிப்பு

அ. 2444-1

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்

இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 41

3. **தோற்றக் கூறுகள்**

அ. 6 ஏடு; 12 பக்கம்
ஆ. நீளம் 36 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. முதலேடும் ஏழாம் ஏட்டிற்குமேல் இருக்க வேண்டியனவும் காணப்படவில்லை. உள்ளவை நல்லநிலை
எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

பழக்கமல்லோ முந்தமுந்தி மூலா தாரம்
பழகினபின் மேல்மூலம் பார்க்க வேணும்
பிழைக்கவென்றால் சுழிமுனையே நடுத்தான் வன்னி
பிங்கலைதா னாதித்தன் காந்தி யாச்சு
துளைக்கருகே இடகலையே சந்திர பீசஞ்
சூரியனும் அக்கினியுஞ் சோமன் மூன்று
மழைக்கிடை பிங் கலையிரண்டுஞ் சுழியிற் கூடு
மத்திசத்தில் நிற்குமொரு மச்சந் தானே

(7)

ஆ. முடிவு

சகடமில்லை மூன்றுதிரஞ் சார னையைத்
தீர்ந்தால்தான் கெவ்னமென்ற குளிகை யாச்சு
விகடமில்லை யஞ்சானால் யோகி யாச்சு
மிஞ்சாதே ஒன்பதில்சந் தான மென்பார்
தகடமில்லை பதினோரு திரமே யானால்
அட்டமா சித்தியென்று அறைய லாகும்
துகடமில்லைப் பதிமூன்றி லமிர்த மென்று
சொல்லுவா ரின்னமொன்று சொல்லு வாரே.(41)

3480. திருமூலர் 500

1. நூலகக் குறிப்பு

அ. *2444-2*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. *திருமூலர்*

ஆ. *திருமூலர் 500*

இ. *மருத்துவம்*

ஈ. *செய்யுள் 473*

3. தோற்றக் கூறுகள்

அ. *19 ஏடு; 38 பக்கம்*

ஆ. *நீளம் 38.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.*

இ. *இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது*

ஈ. *ஒரு பக்கத்திற்கு 8,9 வரிகள்*

உ. *தெளிவான கையெழுத்து*

ஊ. *2,4,6-8,12-14,16-29 ஆகிய ஏடுகள் இல்லை*
உள்ளவை நல்லநிலை

எ. *குறை*

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நந்தி யருளில் நாட்டினே னஞ்நூறு
பந்தி யறிந்து பகையாமல் மூலத்தில்
அந்தி யறிந்து அடவுட னோதினால்
நந்திக்கு முன்வந்த நாயகன் காப்பே.

(1)

ஆ. முடிவு

போட்டிடப் பச்சை போகுமிகக் கழன்றோடி
நீட்டிடக் கண்டால் நிலைத்திடும் வெண்ணெய்போல்
ஆட்டிடக் கண்டா கண்டநவ நீதம்
கூட்டிட மார்க்கம் கொள்கின்ற சித்தரே.

(473)

3481. மருத்துவ நூல்

1. நூலகக் குறிப்பு

அ. *2444-3*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 73

3. தோற்றக் கூறுகள்

அ. 15 ஏடு; 30 பக்கம்

ஆ. நீளம் 38 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7-9 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. முதல் 15 ஏடுகளும், 30 ஏடுகளுக்கு மேல் இருக்க வேண்டியனவும் காணப்படவில்லை
உள்ளவையும் சற்று முறிந்துள்ளன

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சிந்தை தாகந் தப்பறையும்
தீபுற மாக தாகமுடன்
வஞ்சப் பிரமை வாந்திவிக்கல்
மருவுந் தாகந் தலைசுழற்றல்
மிஞ்சியிது விதமாய்க் கொள்ளும்
விதமாகத் தான்விண் ணேத்தும்
அஞ்சப் பத்து நாள்சன்னி
அந்தக னென்றே யறிந்தாரே.

(2)

ஆ. முடிவு

...செந் சேத்துமங் கோபித்தா
 தயங்கி மனமு முள்கலங்கி
மிகவே குளிர்ந்து கொதிப்பெய்தி
 வீக்கம் பலவா ராகி....
முகம்வேர் கைகா லுங்குளிர்ந்து
 மூக்கு நீர்ப்பாய்க் காசமுமாய்த்
தொகுத்தோ தனம்பா ரிக்கும்....
 தூங்கு முறக்கந் துணு...ம்.

(73)

5. பிற செய்திகள்

இதனையடுத்து மூன்றேடுகளில் பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூற் பகுதியும் (பாடல் 76-112), பதின்மூன்று உதிரி ஏடுகளில் பல்வேறு மருத்துவச் செய்திகளும் உள்ளன.

3482. அகத்தியர் பரிபாஷை

1. நூலகக் குறிப்பு

அ. *2445-1*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் பரிபாஷை - முதற்காண்டம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 100

3. தோற்றக் கூறுகள்

அ. 20 ஏடு; 40 பக்கம்
ஆ. நீளம் 22.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து

ஊ. *1-4 ஆகிய ஏடுகள் இல்லை*

உள்ளவை நல்லநிலை

எ. *குறை*

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கோடியென்றா லெத்தனையென் றுரைப்பே னய்யா
கூர்ந்துபார் நாலுவித யோனிக் கூத்து
ஆடிநீண்ட மகாபூதம் அண்ட வித்தால்
அப்பனே பிறந்திதுகாண் பிண்ட வித்து
தேடிநின்று அலைவானேன் உண்ணா பிள்ளை
சுக்கிலமங் குதித்துப்பன் னிர்போல்செயநீ ராச்சு
ஓடியதோர் பிரமகர்ப்பம் கற்சுண் ணாம்புக்
குய்ந்தசிவ தீட்சையிந்தச் செயநீ ராமே.

(19)

ஆ. முடிவு

தாக்கிப்பா ரிந்தநூ லஞ்சுக் காண்டம்
தான்பார்க்கில் சமுசயங்கள் தட்டுண் டேபோம்
நோக்கிப்பார் இந்தநூல் தனக்குச் சாட்சி
ரோமரிஷி அஞ்ஞூறும் நந்தி நூலும்
தேக்கிப்பார் இதனாலே தெரியா துண்டோ
சிவசிவா குருதேடித் திரிய வேண்டாம்
பாக்கியமாம் நூலிலே ரெண்டாம் காண்டம்
பாடுகிறேன் முதற்காண்டம் யாவு முற்றே.

(100)

பரிபாஷைத்திரட்டு முதற்காண்டம் முற்றும்.

3483. அகத்தியர் பரிபாஷை

1. நூலகக் குறிப்பு

அ. *2445-2*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. *அகத்தியர்*

ஆ. அகத்தியர் பரிபாஷை - இரண்டாம் காண்டம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 100

3. **தோற்றக் கூறுகள்**

அ. 23 ஏடு; 46 பக்கம்

ஆ. நீளம் 22.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8,9 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. முழுமை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

முத்தணி நகையாள் வேத
முதல்வியைப் பாகம் வைத்த
சுத்தமெஞ் ஞான தீபச்
சுடரெனும் சோதி பாதம்
நித்தமும் தொழுது போற்றி
நீதிசேர் பாஷை நூலின்
புத்தமும் ரெண்டாங் காண்டம்
பொருளினைப் புகலு வோமே.

(1)

ஆ. முடிவு

வாரான யிக்காண்ட மிரண்டுக் குள்ளே
வழலைகுருச் செய்கின்ற மார்க்கம் சொன்னேன்
கூரான மூன்றினிலே கர்ப்ப மூலம்
குணமான இடைபஞ்சீ கரணம் சொல்லும்
வீரான நாலினிலே யோகம் சொல்வேன்
சுத்தஉப்பை யெடுக்கும்வகை அஞ்சு சொல்லும்
சீரான உப்பெடுக்கும் வகையைப் பாராய்
தெளிவான கண்டம்ரெண்டும் சிவநூல் முற்றே.

(100)

இரண்டாங்காண்டம் முற்றும்.

3484. வீட்டுநெறிப்பால்

1. நூலகக் குறிப்பு

அ. 2446-1

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ஔவையார்
ஆ. வீட்டுநெறிப்பால்
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 316

3. தோற்றக் கூறுகள்

அ. 9 ஏடு; 18 பக்கம்
ஆ. நீளம் 33.5 செ.மீ., அகலம் 4.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 12 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. 9,10ஆகிய ஏடுகள் இல்லை
உள்ளவை நல்லநிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியாய் நின்ற அறிவே முதலெழுத்
தோதிய நூலின் பயன். (1)

பரமாய சத்தியுட் பஞ்சமா பூதந்
திரமாகத் தோன்றும் பிறப்பு. (2)

ஆ. முடிவு

ஆதேச மொன்று முடம்புயிர் கண்டார்க்கு
மாதேசி யாகு மறிவு. (315)

முயல முடியாத தொன்றுண்டோ சொல்வீர்
கயவரே கற்றறியாக் கரை. (316)

வீட்டுநெறிப்பால் அவ்வையார் பாடல் முற்றும்.

5. பிற செய்திகள்

ஞானக்குறள், ஔவைக்குறள் என வழங்குவது இதுவே.

3485. வீட்டுநெறிப்பால்

1. நூலகக் குறிப்பு

அ. 2446-2

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ஔவையார்

ஆ. வீட்டுநெறிப்பால்

இ. தத்துவம்

ஈ. செய்யுள் 257

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு; 8 பக்கம்

ஆ. நீளம் 33.5 செ.மீ., அகலம் 4.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 13,14 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. 1-5 ஆகிய ஏடுகள் இல்லை
உள்ளவை நல்லநிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

உண்டில்லை யென்று முணர்வை யறிந்தக்காற்
கண்டில்லை யெண்ணாஞ் சிவம்.

(121)

ஒருவர்க் கொருவனே யாகு முயிர்க்கெல்லா
மொருவனே பல்குணமு மாம்.

(122)

ஆ. முடிவு

முன்னமி ரேசி முயலுபின் பூரகம்
பின்னது கும்பம் பிடி.

(256)

ஈரைந் தெழுபத்தீ ராயிர நாடியும்
சேருமின் வாயுச் செயல்.

(257)

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

3486. அகத்தியர் வைத்தியம் 300

1. நூலகக் குறிப்பு
அ. 2447

2. உள்ளீடு : நூல் விவரம்
அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் வைத்தியம் 300
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 299

3. தோற்றக் கூறுகள்
அ. 56 ஏடு; 112 பக்கம்
ஆ. நீளம் 30 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. 1,2,4,6,45,47,48,53,54 ஆகிய ஏடுகள் இல்லை
உள்ளவை சுமாரான நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்
அ. தொடக்கம்

கூட்டுவாய் காரமொடு சாரந் தன்னைக்
குறிப்பாக வகைக்கொரு பலமுங் கூட்டி
மூட்டுவாய் பூநீறு கழஞ்சி யொன்று
முந்தியதோர் வெண்கருவில் நீராட்டி .....
மாட்டுவா யிருசாம மரைத்த பின்பு
வளமாக வில்லைசெய்து ரவியிற் போடு

நாட்டுவா யுலர்ந்தபின்பு மூசைக் குள்ளாய்
நலமாக வைத்ததனைக் குகைவாய் மூடே (12)

ஆ. முடிவு

காண்க:- தொடர் எண்.2288-2.

3487. எண்சுவடி

1. நூலகக் குறிப்பு

அ. *2448*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. எண்சுவடி

இ. பல்வகை நூல்கள்

ஈ. உரைநடை

அச்சில் ஏறத்தாழ 3 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம்

ஆ. நீளம் 36 செ.மீ., அகலம் 2 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்குப் பல பத்திகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. பிரித்து வாரிப் பதப்படுத்தப்படாத ஓலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

முக்கால்வாய் முதல்வாய் முந்திரிவாய் கீழ்வாய்
....
தம்பிக்கு நல்லானை சாதிக்கு ஏற்றானை
தும்பிக்கை யானைத் தொழு.

ஆ. முடிவு

பின்ன வாய்பாடு கொடுக்கப்பட்டுள்ளது.

3488. மருத்துவ நூல்

1. நூலகக் குறிப்பு

அ. *2449*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் *336*

3. தோற்றக் கூறுகள்

அ. *57* ஏடு; *114* பக்கம்

ஆ. நீளம் *24* செ.மீ., அகலம் *2.5* செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு *5,6* வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. *1-6,14,15,18-28,30-38,46-64,76,78-81,84-93,97-103,*
118,120,121,129,130 ஆகிய ஏடுகள் இல்லை
உள்ளவை சுமாரான நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

....

மகத்தான ஏமத்தின் வன்ன மாகும்
ஏக்கான யிதையிடித்துச் சூரணமே செய்து
ஏத்தமாம் அமுரிதன்னை முன்பின் தள்ளி
வாக்கான மண்டலந்தான் கொண்டு வந்தால்
மகத்தான மூலமது வெளியாய்த் தோன்றும்
நீக்கான வியாதியெல்லாம் நீறாய்ப் போகும்
நிலவரமாய்ச் சடந்தானும் நீங்குந் தானே.

(20)

ஆ. முடிவு

கருத்தாகக் காயசித்தி பண்ணி னாக்கால்
கருதியே வாதசித்தி யாகும் ......
வருத்தாக வாதசித்தி கைக்குள் ளாக
மகத்தான யோகத்தில் மனதைப் பூட்டு
உருத்தாக யோகசித்தி உறைந்து காண
உற்பனமாய் ....

(337)

3489. பஞ்சபட்சி சாத்திரம்

1. நூலகக் குறிப்பு

அ. 2450

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. பஞ்சபட்சி சாத்திரம்
இ. சோதிடம்
ஈ. செய்யுளும் உரைநடையும்
அச்சில் ஏறத்தாழ 40 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 52 ஏடு; 104 பக்கம்
ஆ. நீளம் 21.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. இரு ஓரங்களும் முறிந்தும் ஒடிந்தும் உள்ள நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பூர்வபக்ஷசம் பகலுக்கு வாக்கிய பட்சி ஊண் அறியவும்:-
செவ்வாய் ஞாயிறு வல்லூறு
சிறந்த திங்கள் புதனாந்தை

கவ்வாய் வியாழம் காரண்டம்
கருதும் வெள்ளி கோழியதாம்
மவ்வார் சனியும் மயிலுன்னும்
வளரும் பக்கம் தடமிதுவே
துவ்வார் ...ன்னூன் நடைஅரசு
தூக்கம் மரண மெனச்சொல்லே.

(1)

ஆ. முடிவு

முறையோடே நா...ட்டும் .... போது
மூட்டாசி காரத்தை தலைகீ ழாக
விரையோடே பிறைகோண மூட்டும் போது
.... காரத்தை மூட்டிப் பாரு
உரையோடே முன்சொன்ன வகையே தப்பா
உரைப்படியே பின்சொ... ..... போது
துரையோடே வெளியிட்டு சொல்லக் கேளு
சுகமேது ....

3490. தங்க பற்பம் 40

1. நூலகக் குறிப்பு

அ. 2451

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. தங்க பற்பம் 40
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 33

3. தோற்றக் கூறுகள்

அ. 15 ஏடு; 30 பக்கம்
ஆ. நீளம் 20.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து

ஊ. 2 & 16க்குமேல் இருக்கவேண்டியனவும் இல்லை
உள்ளவை நல்லநிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தெட்சணத்தில் வந்துநாம் பொதிகையிலே யிருந்து
தினமுந்தான் பாடியநூல்த் தொகையே யில்லை
பட்சம்வைத்து நாற்பதுந்தான் பாடினதைக் கேளு
பரிவாக மருந்துவைக்குந் தொழிலதுதான் பாரு
சொச்சமாய்த் தங்கபற்பம் சொல்லக் கேளு
சுத்திசெய்த ஏமத்தைத் தகடாய்த் தட்டி
பச்சமப்பா கொச்சிவீரம் வங்கம் நாகம்
பற்பம்வளர் சங்குமிரு தார சிங்கி.

(1)

ஆ. முடிவு

மூடிச்சுண்ணச் சீலைமேல்மண் சீலை செய்து
முதிராக உலர்த்திப்பின் கசபுடந்தான் போடு
ஆடித்தீ ஆறினதை யெடுத்துப் பாரு
அருணநிறச் செந்தூர மாகுங் காண
பாடிக்கல் வத்திட்டு நன்றாய்த் தூள்போல்
பரப்பிவைத்துச் செந்தூரங் கழஞ்சியஞ்சு மிட்டு
நாடித்தே சிக்கனிச்சாத் தாலரைத்து ருட்டி
....

(33)

3491. தன்வந்திரி நாடி

1. நூலகக் குறிப்பு

அ. 2452-1

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. தன்வந்திரி

ஆ. தன்வந்திரி நாடி 71

இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 73

3. **தோற்றக் கூறுகள்**

அ. 10 ஏடு; 20 பக்கம்
ஆ. நீளம் 23.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. தெளிவான கைபெழுத்து
ஊ. 2-6,8-12,15,16,18,20,22,24-33,35 ஆகிய ஏடுகள் இல்லை
உள்ளவை நல்லநிலை
எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

ஆதியாங் கணேசன் காப்பு
ஆதிமறை வேதங் காப்பு
சோதியாய் முனிவர் காப்பு
சோதித்த பெரியோர் காப்பு
நீதிசேர் செம்பொற் காப்பு
நிலைத்திடும் ஞானி காப்பு
ஆதியாய் நின்ற சத்தி
அமர்ந்திடும் தேவி காப்பே.

(1)

ஆ. முடிவு

பாரான உத்திரத்தில் மூவா யிரம்பேர்
பிரபல்ய மாக்கண்டு தேர்ந்நா ரப்பா
ஆரான யென்மொழிதான் மூன்று லட்சம்
அப்பனே அதிலிருக்கும் வாத மெல்லாம்
வாரான முந்நூற்றில் அறிந்து சொன்னேன்
வளமான முந்நூற்றைப் பாரு பாரு
நாரான என்மொழியே கண்ட பேர்க்கு
நலமான சிவயோகப் பதவி முற்றே.

தன்மந்திரி பகவான் அருளிச்செய்த வைத்தியம் யெழுவத்தி
மூணு முடிந்தது முத்தும்.

இ. பிற்குறிப்பு

சவுமிய வருடம் புரட்டாசி மாதம் 13ந் தேதி வீரப்பப்
பிள்ளை மகன் புல்லாணி யெழுதி முகிந்தது முத்தும்.

3492. மருத்துவ நூல்

1. நூலகக் குறிப்பு

அ. 2452-2

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 264

3. தோற்றக் கூறுகள்

அ. 16 ஏடு; 32 பக்கம்

ஆ. நீளம் 23.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. 1-75,77,81-88,94-96 ஆகிய ஏடுகள் இல்லை.
உள்ளவை நல்லநிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

போமென்ற இலைதானும் பொன்னிறமு மாகும்
  புகழ்காம்பு கொடுக்கைநிறம் தழல்போல் காணும்
வேமென்ற வெந்துவி சிகப்பு மாகும்
  மிக்கான காய்பழமும் வெளுப்பு மாகும்
காமென்ற காம்பதுவும் பச்சை யாகும்
  கனமென்ற குழலாயா தண்டை யாகும்

சாவென்ற திதைக்கண்டால் ஒருநாளு மில்லை
சமத்தான பேரென்றால் கிட்டும் பாரே.

(177)

ஆ. முடிவு

மத்தாக அப்பிரகக் கிண்ணி தன்னை
வரிசையாய் நெருக்கியே குகையில் வைத்து
ஊத்தான துருத்திவைத்து உருக்கிக் கொண்டு
ஊட்டிடுநீ தங்கத்தை நாலுக் கொன்று
நாத்தான நாகத்தை ரசத்தில் தானும்
நலமாகத் தொந்திச்சு ரெட்டி லூட்டு
காத்தான லிங்கமொடு காரந் தானும்
கால்வாசி ஊட்டிடவே களங்க மாமே.

(264)

5. பிற செய்திகள்

இதனை அடுத்து ஓர் ஏட்டில் வேறு சில மருத்துவப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

3493. நோய்க்கு மருந்து

1. நூலகக் குறிப்பு

அ. 2453

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....
ஆ. நோய்க்கு மருந்து
இ. மருத்துவம்
ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 15 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 15 ஏடு; 30 பக்கம்
ஆ. நீளம் 30.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரிகள்
உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்லநிலை

எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

அ. **தொடக்கம்**

முதலை, எலி கடிச்சதுக்கு மருந்து:-
பாருசி வேரை அரைச்சுப் பூசவும்.
முதலை கடிச்சதன்பின் மருந்து:-
குப்பைக்கீரை வேர் அரைச்சுப் பூசவும்.

ஆ. **முடிவு**

பொரிகாரக் குழம்பு:- ..... பெருங்காயம், மனோசிலை, அரிதாரம், கடுகு, ரசம், இந்துப்பு, திப்பிலி, கருஞ்சீரகம் இது சமன் .... நஞ்சு போக்கி இதுவெல்லாம் அரைத்து வண்டப் பருவத்தில் வழித்துக் கொள்ளவும்; இதுக்கு அனுபானம்:- வாதத்துக்குப் பணவெடை தண்ணீரில் கொடுக்கவும்; பித்தத்துக்கு கடுக்காய்க் கிஷாயத்தில் கொடுக்கவும்; சிலேற்பனத்துக்குத் திப்பிலிக் கிஷாயத்தில் கொடுக்கவும், சன்னிக்குத் தண்ணீரில் கொடுக்கவும்.

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

5. **பிற செய்திகள்**

இதில் இடையிடையே சில மாந்திரீகச் செய்திகளும் உள்ளன.

3494. மருத்துவ நூல்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2454

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. ....

ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 113

3. தோற்றக் கூறுகள்

அ. *15 ஏடு; 30 பக்கம்*

ஆ. நீளம் 37 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. *106,110-112* ஆகிய ஏடுகள் இல்லை
உள்ளவை செல்லரித்த நிலை
ஏட்டெண் 104ல் நூல் தொடங்குகிறது

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

செப்பினேன் ஒவ்வொன்றை விரித்துச் சொல்லச்
  செகமெல்லாம் போதாது சிவனுங் காணார்
ஒப்புநேர் சொல்லவென்றால் ஒன்றுங் காணேன்
  ஒட்டியதொரு பாதத்தில் உயர்ந்த தெட்டு
அப்புநேர் சடையா... ...... காணார்
  ஆகாகா ஆச்சரிய மறிந்தோன் வாதி
கொப்புநே ராறுமுத லுரைத்துப் பாரு
  கொள்ளுமுன்னே வாதசித்தி ..... காணே.

(814)

ஆ. முடிவு

கைக்குள்ளாம் நாலுகுரு முன்னே சொன்னேன்
  கடந்தாடக் குருசொல்வேன் கருத்தாய்க் கேளு
மைக்குள்ளாய்ச் சூதகுரு ஒன்றுந் தூக்கி
  வளமான துரிசுகுரு பாதி போட்டு
மெய்க்குள்ளாய்ச் சுக்கிலத்தை விட்டே ஆட்டி
  மேவியதோர் பறித்தகடு பத்தில் பூசி
வைக்குளொருநாள் .... வியில் வைத்துப் பின்பு
  வளமான அண்டேட்டுப் பொடிகீழ் மேலே.

(926)

5. பிற செய்திகள்

இதனையடுத்து 'அகத்தியர் பூரணம் 400'இன ஆறு பாடல்கள் எழுதப்பட்டுள்ளன.

3495. மருத்துவ நூல்

1. நூலகக் குறிப்பு

அ. 2455

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 295

3. தோற்றக் கூறுகள்

அ. 42 ஏடு; 84 பக்கம்

ஆ. நீளம் 47.5செ.மீ., அகலம் 2 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. 1-3 ஏடுகள் இல்லை

ஓரங்கள் முறிந்தும் உடைந்த நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆயிரத்தெண் மாத்துத் தங்கமாக

இருக்கின்ற தோரெடையும் சவ்வீர மோரெடையும் - அவன்

தானாபதியுஞ் சரியெடையாய் ரசமுஞ் சரியெடையாய்

....

ஆ. முடிவு

கேளப்பா தாளகங் கிருபை யுடனே

நாளப்பா ரவிஎனில் நல்லதோர் அண்ணமாம்

வாழும் மனோசிலையை ஒன்பதுநாள்

..... கெந்தகம் வெளுக்கும் பதினேழே.

(295)

3496. பிரபுலிங்கலீலை

1. நூலகக் குறிப்பு

அ. 2456

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. சிவப்பிரகாசர் - துறைமங்கலம்

ஆ. பிரபுலிங்கலீலை

இ. காப்பியம்

ஈ. செய்யுள் 1159

3. தோற்றக் கூறுகள்

அ. 182 ஏடு; 364 பக்கம்

ஆ. நீளம் 35 செ.மீ., அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. சுமாரான நிலை

ஏட்டெண் 159க்குமேல் ஏட்டெண் மாறுகிறது

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சுரர்கு லாதிபன் தூய்மலர் நந்தனம்
பெருக வார்கடற் பெய்த வயிற்றினோன்
கரக நீரைக் கவிழ்த்த மதகரி
சரணம் நாளும் தலைக்கணி யாக்குவாம்.

ஆ. முடிவு

குருவடி வாயுருக் கொண்டு மாநிலத்
தருவுரு வருவதெற் காகு மாகுமால்
மருவரு மல்லமன் மாயை நீக்கிய
பொருவரு கதிதனைப் புனைந்த வரத்தினால்.

ஆகச் செய்யும் 1159.

பிரபுலிங்கலீலை முற்றும்.

இ. பிற்குறிப்பு

விகாரி வருஷம் பங்குனி மாதம் 25ந் தேதி புதன் கிழமை துவாதசியும் சதைய நட்சத்திரமும் இந்தச் சுப தினத்தில் எழுதி முடிந்தது. அம்பலவாணர் கையெழுத்து.

5. பிற செய்திகள்

சுவடியை நோக்கும் போது இதன் உரிமையாளர் ஏகாம்பரம் என்ற பெயரினராக இருக்கலாம் எனவும், நூல் முழுவதும் எழுதி மைக்காப்புச் செய்த பிறகு வசவலிங்கம் என்பவர் ஆங்காங்கு காணப்படும் பிழைகளைத் திருத்தியவர் ஆகலாம் எனவும் தோன்றுகிறது. ஏனெனில் காப்புச் செய்யுள் உள்ள ஏட்டில் ஏகாம்பரம் என்ற பெயர் மட்டும் காணப்படுவதோடு ஈற்றேட்டில் மைக்காப்பில்லாமல் வசவலிங்கம் என்னும் பெயர் உள்ளது. சுவடியில் திருத்தங்கள் உள்ள இடங்களிலும் மைக்காப்பில்லை. மற்ற சுவடிகளையும் அச்சுப் பதிப்பையும் விட இச்சுவடியில் ஈற்றுப் பகுதியான மான்மிய கதியில் சில பாடல்கள் அதிகமாக உள்ளன.

3497. வில்லிபாரதம் மூலமும் உரையும்

1. **நூலகக் குறிப்பு**

அ. 2457

2. **உள்ளீடு : நூல் விவரம்**

அ. வில்லிபுத்தூராழ்வார்
ஆ. வில்லிபாரதம் - கண்ணன்தூது மூலமும் உரையும்
இ. காப்பியம்
ஈ. செய்யுளும் உரைநடையும்
அச்சில் ஏறத்தாழ 150 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**

அ. 140 ஏடு; 280 பக்கம்
ஆ. நீளம் 35 செ.மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து
ஊ. சுமாரான நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நீடாழி யுலகத்து மறைநாலொ
    டைந்தென்று நிலைநிற்கவே
வாடாத தவவாய்மை மிகுவேத
    முனிராசன் மகாபார தஞ்சொன்னநாள்
ஏடாக வடமேரு வெற்பாக
    வெங்கூர்எ ழுத்தாணிதன்
கோடாக எழுதும்பி ரானைப்ப
    ணிந்தன்பு கூர்வாமரோ.

(இரண்டாமடியில் மிகுவேத என்னும் ஒரு சீர் மிகை)

ஆ. முடிவு

தர்ம ராசாவும் தம்பிமார்களும் இருக்கிற மாளிகை வந்து சேர்ந்த உடனே அவர்கள் வந்து அடி பணிய, சிரஞ்சீவி ஆக வாக்குத் தந்து அவர் அருகிலிருந்து சொல்லுவார். அது ஏதென்றால் விதுரராசனே திரியோதனன் வசையானது சொல்லக் கோபித்துத் தன் வில்லை முறித்ததும், தம்மை இராத்திரிக் காலம் வரவழைத்து நிலவறை செய்து அதற் சிம்மாசனமிட்டுத் தம்மைக் கொல்ல வேணுமென்று நினைத்ததும், கர்ணராசன் தேவேந்திரனுக்குக் கவச குண்டலமும் கொடுத்ததும், தங்களைப் பெற்ற தாயான குந்தியம்மன் கர்ணராசனிடம் போய்வந்து வரம் வாங்கினதும் சொல்லவில்லை. திரியோதனனிடத்தில் ராச்சியம் கேட்க அனுப்பின பிரகாரம் தான் போய்ச் சர்ப்பக் கொடியவனிடத்திலே கேட்டதும் அவன் சம்மதியாமல் போருக்குக் கையறைந்ததும் தர்ம புத்திரரானவர்கள் தன்னுடைய மச்சினன்மாரிடத்தில் சொன்னர் என்றவாறு.

கிருஷ்ணன் தூதுச் சருக்கம் முற்றும்.

இ. பிற்குறிப்பு

சுபகிருது வருஷம் ஆனி மாதம் 17ஆம் தேதி பஞ்சமி புதவார தினத்தில் சிந்தாத்திரிப்பேட்டை சின்னைய முதலியார் குமாரன் சிந்தாத்திரிப்பேட்டை முத்துச்சாமி படிக்கின்ற கிருஷ்ணன் தூது எழுதிப் படித்து முடிந்தது. முற்றும்.

3498. திருவேங்கடமாலை

1. **நூலகக் குறிப்பு**
   அ. 2458

2. **உள்ளீடு : நூல் விவரம்**
   அ. பிள்ளைப்பெருமாளையங்கார்
   ஆ. திருவேங்கடமாலை
   இ. சிற்றிலக்கியம்
   ஈ. செய்யுள் 102

3. **தோற்றக் கூறுகள்**
   அ. 13 ஏடு; 26 பக்கம்
   ஆ. நீளம் 35 செ.மீ., அகலம் 3 செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு இரண்டு பத்திகள்; 4 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து
   ஊ. 1,3,6,8-11,15-17,21 ஆகிய ஏடுகள் இல்லை
   உள்ளவை சுமாரான நிலை
   எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**

   அ. தொடக்கம்

   சோதிமதி வந்துதவழ் சோலைமலை யோடிரண்டாய்
   மேதினியாள் கொங்கைநிகர் வேங்கடமே - போதி
   லிருப்பாற் கடலா... மூர்ந்தார்க் கெட்டாத்
   திருப்பாற் கடலான் சிலம்பு.

   (2)

   ஆ. முடிவு

   போதா விருசுடரும் போதுதற்கு மோதுதற்கும்
   வேதாவி னான்முடியா வேங்கடமே - மாதாவின்

வீங்குதனத் துக்கினியான் விம்மிய..ா தாட்கொண்டான்
தாங்குதனத் துக்கினியான் சார்பு.

(89)

3499. நன்னூல் - மயிலைநாதர் உரை

1. நூலகக் குறிப்பு

அ. *2459*

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. பவணந்தி முனிவர்

ஆ. நன்னூல் - மயிலைநாதர் உரை

இ. இலக்கணம்

ஈ. செய்யுளும் உரைநடையும்
அச்சில் ஏறத்தாழ 200 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 158 ஏடு; 316 பக்கம்

ஆ. நீளம் 40 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 5,6 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. ஆங்காங்குச் சிதைந்த நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மலர்தலை உலகின் மல்கிருள் அகல
இலகொளி பரப்பி யாவையும் வி......
.... னொருதா னாகி முதலீறு
ஒப்பள வாசை முனிவிகந் துயர்ந்த
அற்புத மூர்த்திதன் அலர்தரு தன்மையின்
மனஇருள் இரிய மாண்பொருள் முழுவதும்
....

ஆ. முடிவு
"நீர்வார் கண்ணை நீ இவன் ஒழிய", "வெல்வேல் வலத்திற் பொருள்தரல் வேட்கையின் உள்ளினிர்" எனவும் ஐம்பான் மூவிடத்தும் வினை .....

(இதற்குமேல் ஏடுகள் இல்லை. இது வினையியலின் ஈற்றுச் சூத்திர வரலாற்றுப் பகுதி.)

3500. சிவானந்தத் திரட்டு

1. **நூலகக் குறிப்பு**
   அ. 2460

2. **உள்ளீடு : நூல் விவரம்**
   அ. ....
   ஆ. சிவானந்தத் திரட்டு
   இ. தத்துவம்
   ஈ. செய்யுள். அச்சில் ஏறத்தாழ 25 பக்கம் வரும்

3. **தோற்றக் கூறுகள்**
   அ. 25 ஏடு; 50 பக்கம்
   ஆ. நீளம் 28 செ.மீ., அகலம் 2.75 செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 8-10 வரிகள்
   உ. தெளிவான அழகிய கையெழுத்து
   ஊ. மிகச்சிதைவுற்ற நிலை
   படிப்பதே கடினம்
   எ. குறை

4. **சிறப்புச் செய்திகள்**
   அ. தொடக்கம்
   சத்தியநிர் வாணத்தால் தற்போதத் தாக்கறுத்து
   ....
   .... சீகாழிச் சம்பந்தன் என்பான்
   எடுக்கருளிச் செய்த திது.

(1)

ஆ. முடிவு

விளங்குகலைக் காரியங்கள் அத்தனையும் இன்றாம்
வியோமரூ பிணிஅனந்தை அனாதைய சரிதை
வளங்குலவு வடிவுவிந்து நான்கினுக்கு மொக்கும்
வழுத்தியஞா னாகாசம் வளர்ஞான வாரி
துளங்கியசின் மயவரடி தூயமதி கோடி
சோதியிவை யானமென உன்மனைக்குச் சொல்வர்
களங்கசம னாந்தமுதற் றுவாத சாந்தம்
கருதுநிரா தாரமாம்உன் மனையுங் கடந்தே.

(12)

திருச்சிற்றம்பலம்.

5. பிற செய்திகள்

இதனை அடுத்துத் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளின் இஷ்டலிங்கமாலை முழுவதும் மூன்று ஏடுகளில் எழுதப்பட்டுள்ளது.

பின்னிணைப்பு 1.

நூலாசிரியர் அகர வரிசை

(எண்: நூல் வரிசை எண்)

அகத்தியர்	*3004, 3006, 3008, 3009, 3011, 3012, 3013, 3014, 3016, 3017, 3018, 3021, 3022, 3023, 3024, 3028, 3054, 3080, 3087, 3089, 3098, 3105, 3123, 3127, 3128, 3143, 3145, 3147, 3149, 3157, 3158, 3173, 3185, 3186, 3197, 3205, 3221, 3227, 3234, 3248, 3250, 3256, 3266, 3289, 3312, 3314, 3329, 3345, 3364, 3365, 3366, 3384, 3391, 3392, 3393, 3399, 3402, 3403, 3410, 3414, 3425, 3426, 3431, 3436, 3437, 3445, 3446 3447, 3461, 3462, 3474, 3482, 3483, 3486, 3490*
அதிவீரராம பாண்டியன்	*3126, 3450*

அருணகிரிநாதர்	*3084, 3085, 3187*
இடைக்காடர்	*3443*
இராமதேவர்	*3138, 3139, 3200, 3257, 3378, 3379, 3389, 3412, 3444, 3460*
இராமலிங்க பண்டிதர், மணவை	*3239, 3245*
ஔவையார்	*3484, 3485*
கபிலர்	*3133*
கருவூரார்	*3201*
கவிராச பண்டிதர்	*3204, 3294*
காங்கேயன்	*3150*
குருமுனி	*3454*
கொங்கணர்	*3003, 3005, 3078, 3182, 3252, 3313, 3367, 3449*
கொற்கை குணராச சூரியன்	*3109*
கோரக்கர்	*3202, 3253*
சகதேவர்	*3320*
சகாதேவர்	*3172*
சங்கராசாரியார்	*3076, 3160, 3296, 3297, 3291*
சட்டைமுனி	*3001, 3026, 3107, 3208, 3419, 3423, 3435*
சிதம்பரசுவாமிகள்-திருப்போரூர்	*3191*
சிவப்பிரகாசர்-துறைமங்கலம்	*3496*
சிவவாக்கியர்	*3283*
சுந்தரானந்தர்	*3051, 3052, 3422*
சூதமுனி	*3246*
ஞானவரோதயர்	*3286*
தட்சிணாமூர்த்தி	*3007, 3050, 3432, 3442*

தன்வந்திரி 3056, 3375, 3491
திருமூலர் 3049, 3480, 3398
தேரையர் 3094, 3439, 3440
நக்கீரர் 3354
நாக முனிவர் 3058, 3169, 3170, 3171
நாமகள் முதலியோர் 3420
பவணந்தி முனிவர் 3499
பிரமமுனி 3427, 3429
பிள்ளைப்பெருமாளையங்கார் 3498
புலிப்பாணி 3104, 3292, 3438
போகர் 3002, 3010, 3053, 3254
மச்சமுனி 3055, 3251, 3311, 3351, 3413
ரோமரிஷி 3163, 3243, 3346, 3411, 3459
வலங்கை மீகாமன் 3396
வாலை சுவாமிகள் 3083
வால்மீகர் 3046, 3095, 3100, 3125, 3209
வில்லிபுத்தூராழ்வார் 3497
ஆசிரியர் பெயர் தெரியாதன
3015, 3019, 3020, 3025, 3027, 3029, 3030, 3031, 3032, 3033, 3034, 3035, 3036, 3037, 3038, 3039, 3040, 3041, 3042, 3043, 3044, 3045, 3047, 3048, 3057, 3059, 3060, 3061, 3062, 3063, 3064, 3065, 3066, 3067, 3068, 3069, 3070, 3071, 3072, 3073, 3074, 3075, 3077, 3079, 3081, 3082, 3086, 3088, 3090, 3091, 3092, 3093, 3096, 3097, 3099, 3101, 3102, 3103, 3106, 3108, 3110, 3111, 3112, 3113, 3114, 3115, 3116, 3117, 3118, 3119, 3120, 3121, 3122, 3124, 3129, 3130, 3131, 3132, 3134, 3135,

3136, 3137, 3140; 3141, 3142, 3144, 3146, 3148, 3151, 3152, 3153, 3154, 3155, 3156, 3159, 3161, 3162, 3164, 3165, 3166, 3167, 3168, 3174, 3175, 3176, 3177, 3178, 3179, 3180, 3181, 3183, 3184, 3188, 3189, 3190, 3192, 3193, 3194, 3195, 3196, 3198, 3199, 3203, 3206, 3207, 3210, 3211, 3212, 3213, 3214, 3215, 3216, 3217, 3218, 3219, 3220, 3222, 3223, 3224, 3225, 3226, 3228, 3229, 3230, 3231, 3232, 3233, 3235, 3236, 3237, 3238, 3240, 3241, 3242, 3244, 3247, 3249, 3255, 3258, 3259, 3260, 3261, 3262, 3263, 3264, 3265, 3267, 3268, 3269, 3270, 3271, 3272, 3273, 3274, 3275, 3276, 3277, 3278, 3279, 3280, 3281, 3282, 3284, 3285, 3287, 3288, 3290, 3293, 3295, 3298, 3299, 3300, 3301, 3302, 3303, 3304, 3305, 3306, 3307, 3308, 3309, 3310, 3315, 3316, 3317, 3318, 3319, 3321, 3322, 3323, 3324, 3325, 3326, 3327, 3328, 3330, 3331, 3332, 3333, 3334, 3335, 3336, 3337, 3338, 3339, 3340, 3341, 3342, 3343, 3344, 3347, 3348, 3349, 3350, 3352, 3353, 3355, 3356, 3357, 3358, 3359, 3360, 3361, 3362, 3363, 3368, 3369, 3370, 3371, 3372, 3373, 3374, 3376, 3377, 3380, 3381, 3382, 3383, 3385, 3386, 3387, 3388, 3390, 3394, 3395, 3397, 3400, 3401, 3404, 3405, 3406, 3407, 3408, 3409, 3415, 3416, 3417, 3418, 3421, 3424, 3428, 3430, 3433, 3434, 3441, 3448, 3451, 3452, 3453, 3455, 3456, 3457, 3458, 3463, 3464, 3465, 3466, 3467, 3468, 3469, 3470, 3471, 3472, 3473, 3475, 3476, 3477, 3478, 3479, 3481, 3487, 3488, 3489, 3492, 3493, 3494, 3495, 3500.

பின்னிணைப்பு 2.

நூற்பெயர் அகர வரிசை

(எண்: நூல் வரிசை எண்)

அகத்தியர் 16	3008, 3345, 3366
அகத்தியர் 35	3023
அகத்தியர் 205	3012, 3021, 3098 3157
அகத்தியர் 205க்குச் சூத்திரம்	3105
அகத்தியர் 1200 - 1ம் காண்டம்	3446
அகத்தியர் 1200 - 2ம் காண்டம்	3445
அகத்தியர் கர்ம சூத்திரம்	3013, 3018
அகத்தியர் கர்ம சூத்திரம் 300	3024
அகத்தியர் குணபாடம்	3087, 3256
அகத்தியர் குழம்பு	3158
அகத்தியர் சரக்கு வைப்பு	3054
அகத்தியர் சாத்திரம் 16	3089, 3221
அகத்தியர் சாலத்திரட்டு	3410, 3431
அகத்தியர் சால நிகண்டு	3266
அகத்தியர் சுருக்கம் 6	3312
அகத்தியர் சூத்திரம் 6	3143
அகத்தியர் சூத்திரம் 8	3006
அகத்தியர் சூத்திரம் 11	3186
அகத்தியர் சூத்திரம் 16	3314
அகத்தியர் சூத்திரம் 40	3248
அகத்தியர் சூத்திரம் 110	3128
அகத்தியர் செந்தூரம் 300	3426
அகத்தியர் ஞானம் 16	3080, 3185
அகத்தியர் ஞானம் 100	3205, 3289
அகத்தியர் திராவக சூத்திரம் 16	3009

அகத்தியர் திருநடன சூத்திரம் 3127
அகத்தியர் நிகண்டு 116 3004, 3028
அகத்தியர் பரிபாஷை 1ம் காண்டம் 3482
அகத்தியர் பரிபாஷை 2ம் காண்டம் 3483
அகத்தியர் பரிபூரணம் 200 3399, 3402
அகத்தியர் பூசாவிதி 3474
அகத்தியர் பூரண சூத்திரம் 3250, 3227
அகத்தியர் முதற்காண்டம் 300 3392
அகத்தியர் முப்பு 50 3014, 3022, 3123
அகத்தியர் லோகமாரணம் 150 3017
அகத்தியர் வசூரி 3447
அகத்தியர் வல்லாதி 600 3365
அகத்தியர் வாகடப் பிள்ளைத்தமிழ் 3149, 3197
அகத்தியர் வைத்திய காவியம் 1500 3011, 3016, 3364, 3461, 3462
அகத்தியர் வைத்திய சூத்திரம் 300 3145
அகத்தியர் வைத்திய நிகண்டு ூஉ 3147
அகத்தியர் வைத்திய பூரணம் 400 3403, 3436
அகத்தியர் வைத்திய பூரணம் 600 3425, 3437
அகத்தியர் வைத்தியம் 300 3486
அகத்தீசர் நீலகண்ட வாலை 3329
அடித்தலை அளவு சூத்திரம் 3102
அட்டகர்மம் 3310, 3335
அட்டக வர்க்கப்பலன் 3356
அண்ட தரிசனம் 3407
அருணாசலர் வருகைப்பத்து 3193, 3341
அருளானந்தக் கும்மி 3347
அரையாப்பு ஐந்தின் குணம் 3219
அவதி சுர நூல் 3088, 3214
அறிவானந்த சித்தியார் 3396
அனுமார் மந்திரம் 3349
ஆண்டு தோஷத்தின் குணம் 3073
ஆரூட நூல் 3198, 3322

ஆனந்தக்களிப்பு மூலமும் உரையும்	3296
இடைக்காடர் சூத்திரம்	3443
இந்திரசாலம் 2ம் காண்டம்	3393
இந்திரசாலம் 3ம் காண்டம்	3391
இரசவர்க்கம்	3430
இரத்தினச்சுருக்கம் மூலமும் உரையும்	3348
இராமதேவர் கருக்கடைச்சூத்திரம் 500	3139, 3200, 3444
இராமதேவர் சூத்திரம்	3257
இராமதேவர் சூத்திரம் 10	3389
இராமதேவர் சூத்திரம் 30	3379
இராமதேவர் சூத்திரம் பலதிரட்டு	3138
இராமதேவர் பட்சணி	3460
இராமதேவர் பூசாவிதி-சிவயோகம்200	3378
இராமதேவர் வைத்திய சூத்திரம் 80	3412
உடலறி விளக்கம்	3076, 3160, 3291, 3297
உதர கிரிகை	3035, 3181, 3280, 3293
உரிச்சொல் நிகண்டு 6-10 தொகுதிகள்	3150
ஊழிக் காற்று	3222
ஊழிக் காற்றுப் படலம்	3428
எண் சுவடி	3487
எழுவகைத் தோற்றம்	3270
ஒட்டியம்	3383, 3415, 3465
கடுக்காய்ச் சாத்திரம்	3274
கணையின் குணம்	3141
கந்தரநுபூதி	3084, 3187
கந்தரலங்காரம்	3085
கபிலர் அகவல்	3133
கருவிச் சாத்திரம்	3041
கருவிஷ சாத்திரம்	3328
கருவூரார் சூத்திரம்	3201
கர்ணிக சாத்திரம்	3116

கர்ப்ப நோய்கள்	3131
கர்ம காண்டம்	3216
கல்நண்டு சாத்திரம்	3441
கவுளி காதல்	3285
கனவுகளின் பயன்	3456
கஷாயங்களின் செய்முறை	3117
காசிகாண்டம்-காலமறியும் அத்தியாயம்	3126
காயசித்தி கற்பம் 100	3367
கிரிகை நிதானம்	3332
கிரந்தி - குணமும் மருந்தும்	3129
கிரந்தி நிதானம்	3057, 3217
குட்ட நிதானம்	3032
குணங்குறி மீட்சி	3229
குதிரை மருத்துவம்	3110
குதிரை வாகடம் மூலமும் உரையும்	3109
குருநாடி	3471
குருநாடி சாத்திரம்	3225
குருநாடி சாத்திரம் 255	3146
குருமுனி நூல் 50	3454
குழையடி மந்திரம்	3282
குறுமுனி 100	3173
கேசரி வித்தை	3384
கொக்கோகம் மூலமும் உரையும்	3450
கொங்கணர் அதிசய சூத்திரம் 27	3005
கொங்கணர் அதீதம்	3313
கொங்கணர் கடைக்காண்டம் 1000	3449
கொங்கணர் - தேவி தோத்திரம்	3182
கொங்கணர் - தேவி தோத்திரம் 30	3078
கொங்கணர் நிகண்டு சொச்சம் 50	3003
கொங்கணர் பிண்ட உற்பத்தி	3252
கொடுமூர்முருகன் திருப்பள்ளியெழுச்சி	3183
கோரக்கர் பாடல் சூத்திரம்	3253
கோரக்கர் வைத்தியம் 200	3202

சகதேவர் நூல்	3320
சட்டைமுனி காயகற்பம் 100	3419
சட்டைமுனி நிகண்டு	3026, 3107, 3435
சட்டைமுனி நிகண்டு சொச்சம் 50	3001
சட்டைமுனி பூரண சூத்திரம் 16	3208
சட்டைமுனி வாதம் 1000	3423
சதச்சலோப சாத்திரம்	3115
சதுஷ்கோண மாலை	3077
சத்தியாரூடம்	3478
சத்துரு சங்கார அகவல்	3468
சந்தனக் கயறு	3172
சரஸ்வதி ஒருபா ஒருபத்தந்தாதி	3286
சரீர வினாவிடை	3290
சர்ப்ப நூல்	3223
சல்லியம்	3298, 3382, 3464
சல்லியம் மூலமும் உரையும்	3352
சன்னி நிதானம்	3063, 3091, 3210, 3301
சன்னியின் குணம்	3220
சாக்கிர அவத்தை	3039
சாதக சந்திரிகை	3357
சிகிச்சை ஆசாரியம்	3239, 3245
சித்தராரூட நொண்டி	3404
சித்தராரூடச் சுருக்கம்	3259
சித்தராரூடம்	3111, 3377
சிரரோக விதி	3122
சிலேற்பன குணம்	3067
சிவவாக்கியம்	3283
சிவானந்தத் திரட்டு	3500
சிவிந்தை அரன் அடைக்கலப்பத்து	3192
சுந்தரானந்தர் அதிசய நூல் 36	3052
சுந்தரானந்தர் கேசரி 56	3051
சுந்தரானந்தர் ஞானம் 51	3422

சுப்பிரமணியர் தியானம் 3475
சுப்பிரமணியர் மந்திரம் 3361
சுர நூல் 3104, 3292
சுர நிதானம் 3047, 3062, 3276
சூதமுனி வைத்தியம் 50 3246
சூரணச் செய்முறை 3118
சூலை நிதானம் 3043, 3044, 3068
சென்ம நிதானம் 3255
சொர்ண வயிரவ மாலை 3168
சோதிடச் செய்திகள் 3148, 3309, 3395
சோதிட நூல் 3355
சௌந்தர்ய லகரி 3294
சௌந்தரிய லகரி - மூலமும் உரையும் 3204
ஞானக்கும்மி 3083
ஞான சரநூல் 3132
தங்கபற்பம் 40 3490
தட்சிணாமூர்த்தி 10 3007
தட்சிணாமூர்த்தி பின்னூல் 80 3442
தட்சிணாமூர்த்தி வகார சூத்திரம் 100 3050
தத்துவக் கட்டளை 3397
தத்துவ நூல் 3306
தர்க்க சாத்திரம் 3271
தலைமுழுகத் தயிலம் 3241
தன்வந்திரி சிமிட்டுரத்னச்சுருக்கம்361 3375
தன்வந்திரி நாடி 71 3491
தன்வந்திரி நாடி சாத்திரம் 3056
தாது நடனம் 3279, 3288, 3326, 3327
தாது லட்சணம் 3370
திருநீலகண்ட த்ரயாட்சரி யந்த்ரவிதி 3206
திருமந்திரக் கட்டளை 3405
திருமந்திரத் திரட்டு 3049

திருமந்திரம்	3398
திருமுருகாற்றுப்படை	3354
திருமூலர் 500	3480
திருவள்ளுவமாலை	3420
திருவேங்கட மாலை	3498
தூத லட்சணம்	3079, 3189, 3224
தேரையர் வைத்தியம் 500	3440
தேரையர் வைத்தியம் 1001	3439
தோசம் ஏழின் குணம்	3030
நஞ்சு நூல்	3477
நட்சத்திர ஆரூடம்	3323
நயன விதி	3019, 3048, 3154, 3232
நயனவிதி 200	3058, 3169, 3170, 3171
நவலோக சத்து குணம்	3424
நளன் கதை	3448
நன்னூல் - மயிலைநாதர் உரை	3499
நாடி அசாத்யம்	3230
நாடி சாத்திரம்	3228, 3368
நாடி சூத்திரம் 12ல் வாதநடை	3090
நாடித்தொகை	3060
நாடி நூல்	3096, 3273
நாதாந்தச் சக்கரம்	3406
நீலகண்ட கல்பம்	3360
நீலகண்ட கவசம்	3358
நீலகண்ட பூசாவிதி	3359
நெய்ச்சீலைச் சூத்திரம்	3101
நோய்க்கு மருந்து	3042, 3074, 3086, 3119, 3121, 3137, 3162, 3175, 3177, 3179, 3199, 3226,

	3231, 3238, 3240, 3247, 3264, 3265, 3267, 3275, 3278, 3295, 3317, 3330, 3333, 3340, 3342, 3381, 3394, 3421, 3433, 3467, 3493
நோய்ச்சாரம்	*3094*
நோயறி கருவிச் சாத்திரம்	*3114*
பகவதி மாலை	*3081, 3194*
பஞ்சபட்சி சாத்திரம்	*3207, 3489*
பஞ்சபட்சி சாத்திரம் - அட்டவணை	*3269*
பட்சி தோஷம்	*3277*
பரமஞான விளக்கம்	*3408*
பல்லி சாத்திரம்	*3337*
பலவிரல் சூத்திரம்	*3103*
பவுந்திரக் குணம்	*3218*
பால வாகடம்	*3385*
பித்தத்தின் குணம்	*3065*
பித்த நிதானம்	*3066*
பித்தம் 40க்கும் குணம்	*3339*
பிரபுலிங்கலீலை	*3496*
பிரமமுனி வைத்திய சூத்திரம்	*3427, 3429*
பிள்ளை தோஷம்	*3038*
பிள்ளைப்பிணி சாத்திரம்	*3331*
பிள்ளைப்பிணி நிதானம்	*3142*
புருஷ நாடி	*3213*
புலிப்பாணி வைத்தியம் 500	*3438*
பூதநாடி சாத்திரம்	*3130, 3209*
பூதநாடி சூத்திரம்	*3099*
பூரண சூத்திரம்	*3414*
போகர் 40	*3010*
போகர் இரணவாகடச் சூத்திரம்	*3254*

போகர் சூத்திரம் *3002*

போகர் வாலை பூசாவிதி *3053*

மகோதரத்தின் குணம் *3059*

மச்சமுனி 800 *3055, 3351, 3413*

மச்சமுனி தீட்சைவிதி *3251*

மச்சமுனி நயினார் நிகண்டு 105 *3311*

மணவை மகாதேவர் கப்பல் *3136*

மணிக்கிடைக் கயறு சாத்திரம் *3097*

மணிக்கிடை கயறு சூத்திரம் *3031, 3418*

மரணக்குறி *3040, 3473*

மரணக் குறிப்பு *3455*

மருத்துவக் குறியீடுகள் *3135*

மருத்துவ சதகம் *3113, 3178*

மருத்துவ நூல் *3020, 3072, 3108, 3140, 3144, 3165, 3174, 3176, 3195, 3249, 3272, 3284, 3300, 3344, 3350, 3369, 3371, 3373, 3380, 3386, 3387, 3417, 3434, 3479, 3481, 3488, 3492, 3494, 3495*

மருத்துவ நூல் திரட்டு *3025*

மருந்து செய்முறை *3015, 3027, 3029, 3036, 3069, 3071, 3106, 3120, 3152, 3155, 3161, 3167, 3180, 3203, 3233, 3237, 3242, 3244, 3299, 3303, 3315, 3316, 3321, 3338, 3343, 3372, 3374,*

	3388, 3390, 3401, 3409, 3451, 3458, 3469, 3476
மலை வாகடம்	3164
மாட்டு வாகடம்	3258
மாந்திரீகச் செய்திகள்	3318
மாந்திரீக நூல்	3307, 3353, 3363, 3400, 3452, 3453, 3463, 3466, 3470, 3472
மாந்திரீக நூல் - வசியம்	3334
மாந்திரீகம்	3070, 3151, 3153, 3166, 3235, 3268, 3287
மீனாட்சியம்மை கலிவெண்பா	3191
முருகன் பதிகம்	3188
மூலிகைப் பிரயோகம்	3308
மூலிகை வண்ணம்	3159
மேக நோய்க்கு எண்ணெய்	3457
மோட்ச வித்தை	3075
ரோமரிஷி சூத்திரம் 100	3163, 3411
ரோமரிஷி வகாரம் 100	3459
ரோமரிஷி வாக்கியம் 16	3346
ரோமரிஷி வைத்தியம்	3243
வசிய மூலிகை விபரம்	3416
வர்ம கண்டி சாத்திரம் 60	3234
வர்ம சூத்திரம்	3196
வர்ம மணிக்கு விவரம்	3236
வராகி மாலை	3082, 3324
வராகிமாலைத் திரட்டு	3319
வலி ஐந்தின் குணம்	3033
வாகட தத்துவம்	3037
வாகட நூல்	3156

வாதத்திரட்டு	3262
வாதத்தின் குணம்	3302
வாத நிதானம்	3034, 3045, 3064, 3261, 3263
வாதம் - குணமும் மருந்தும்	3124
வால கிரிகை	3376
வால்மீகர் உறுப்புச் சூத்திரம்	3095, 3125
வால்மீகர் தீப சூத்திரம்	3046
வால்மீகர் நாடி சூத்திரம்	3100
விக்கல் அஞ்சின் குணம்	3092, 3211
விசகராதி குளிகை	3260
வில்லிபாரதம் கண்ணன்தூது மூ.உ.	3497
விஷ பாகத்தின் குணம்	3061
விஷ மருத்துவம்	3112
வீட்டுநெறிப்பால்	3484, 3485
வீரபத்திரசுவாமி கல்பம்	3362
வீரவசந்தராயர் பத்திரிகை 4	3304, 3305
வேர்வையின் குணம்	3093, 3212
வேலாயுதன் தரிசனம் வேண்டு பதிகம்	3190
வேள்விமலை வேலவர் மாலை	3184
வைத்திய இரத்தினச் சுருக்கம்	3432
வைத்திய தருக்க நூல்	3215, 3281, 3336
வைத்திய நிகண்டு	3325
வைத்தியன் வாதம்	3134

பின்னிணைப்பு 3.

பொருட்பகுப்பு வரிசை

(எண்: நூல் வரிசை எண்)

இலக்கணம்

3150, 3499

உரைநடை

3448

காப்பியம்

3496, 3497

சிற்றிலக்கியம்

3081, 3082, 3084, 3085, 3168, 3183, 3184, 3187, 3191, 3194, 3197, 3204, 3286, 3294, 3468, 3498

சோதிடம்

3046, 3148, 3172, 3198, 3207, 3269, 3285, 3309, 3320, 3322, 3323, 3337, 3355, 3356, 3357, 3395, 3455, 3456, 3489

தத்துவம்

3049, 3052, 3075, 3076, 3080, 3083, 3160, 3185, 3205, 3251, 3252, 3283, 3289, 3291, 3296, 3297, 3306, 3311, 3313, 3396, 3397, 3398, 3405, 3406, 3407, 3408, 3422, 3484, 3485, 3500

தலபுராணம்

3126

தோத்திரம்

3078

பல்வகை நூல்கள்

3006, 3007, 3053, 3133, 3136, 3143, 3253, 3270, 3271, 3304, 3305, 3312, 3348, 3378, 3391, 3393, 3420, 3424, 3441, 3450, 3474, 3487

பாட்டும் தொகையும்

3354

பிறதோத்திரங்கள்

3077, 3182, 3188, 3190, 3192, 3193, 3341, 3347

மருத்துவம்

3001, 3002, 3003, 3004, 3005, 3008, 3009, 3010,
3011, 3012, 3013, 3014, 3015, 3016, 3017, 3018,
3019, 3020, 3021, 3022, 3023, 3024, 3025, 3026,
3027, 3028, 3029, 3030, 3031, 3032, 3033, 3034,
3035, 3036, 3037, 3038, 3039, 3040, 3041, 3042,
3043, 3044, 3045, 3047, 3048, 3050, 3051, 3054,
3055, 3056, 3057, 3058, 3059, 3060, 3061, 3062,
3063, 3064, 3065, 3066, 3067, 3068, 3069, 3071,
3072, 3073, 3074, 3079, 3086, 3087, 3088, 3089,
3090, 3091, 3092, 3093, 3094, 3095, 3096, 3097,
3098, 3099, 3100, 3101, 3102, 3103, 3104, 3105,
3106, 3107, 3108, 3109, 3110, 3111, 3112, 3113,
3114, 3115, 3116, 3117, 3118, 3119, 3120, 3121,
3122, 3123, 3124, 3125, 3127, 3128, 3129, 3130,
3131, 3132, 3134, 3135, 3137, 3138, 3139, 3140,
3141, 3142, 3144, 3145, 3146, 3147, 3149, 3152,
3154, 3155, 3156, 3157, 3158, 3159, 3161, 3162,
3163, 3164, 3165, 3167, 3169, 3170, 3171,, 3173,
3174, 3175, 3176, 3177, 3178, 3179, 3180, 3181,
3186, 3189, 3195, 3196, 3199, 3200, 3201, 3202,
3203, 3208, 3209, 3210, 3211, 3212, 3213, 3214,
3215, 3216, 3217, 3218, 3219, 3220, 3221, 3222,
3223, 3224, 3225, 3226, 3227, 3228, 3229, 3230,
3231, 3232, 3233, 3234, 3236, 3237, 3238, 3239,
3240, 3241, 3242, 3243. 3244, 3245, 3246, 3247,
3248, 3249, 3250, 3254, 3255, 3256, 3257, 3258,
3259, 3260, 3261, 3262, 3263, 3264, 3265, 3266,

3267, 3272, 3273, 3274, 3275, 3276, 3277, 3278, 3279, 3280, 3281, 3284, 3288, 3290, 3292, 3293, 3295, 3299, 3300, 3301, 3302, 3303, 3314, 3315, 3316, 3317, 3321, 3325, 3326, 3327, 3328, 3329, 3330, 3331, 3332, 3333, 3336, 3338, 3339, 3340, 3342, 3343, 3344, 3345, 3346, 3350, 3351, 3364, 3365, 3366, 3367, 3368, 3369, 3370, 3371 3372, 3373, 3374, 3375, 3376, 3377, 3379, 3380, 3381, 3385, 3386, 3387, 3388, 3389, 3390, 3392, 3394, 3399, 3401, 3402, 3403, 3404, 3409, 3410, 3411, 3412, 3413, 3414, 3417, 3418, 3419, 3421, 3423, 3425, 3426, 3427, 3428, 3429, 3430, 3431, 3432, 3433, 3434, 3435, 3436, 3437, 3438, 3439, 3440, 3442, 3443, 3444, 3445, 3446, 3447, 3449, 3451, 3457, 3458, 3459, 3460, 3467, 3469, 3471, 3473, 3476, 3477, 3478, 3479, 3480, 3481, 3482, 3483, 3486, 3488, 3490, 3491, 3492, 3493, 3494, 3495, 3461, 3462

மாந்திரிகம்

3070, 3151, 3153, 3166, 3206, 3235, 3268, 3282, 3287, 3298, 3307, 3308, 3310, 3318, 3319, 3324, 3334, 3335, 3349, 3352, 3353, 3358, 3359, 3360, 3361, 3362, 3363, 3382, 3383, 3384, 3400, 3415, 3416, 3452, 3453, 3454, 3463, 3464, 3465, 3466, 3470, 3472, 3475,